அங்ககீனன் - உறுப்புக் குறைந்தவன்.

அங்கக்கிரகம் - ஒருவகைச் சீரவலி, கெண்டை வாங்கல்.

அங்கக்கிரியை - சரீரத்தினதுறுப்பிலுற்செய்யுஞ்செயல், சரீரத்திலுல் டனுரத்தமாகச்செய்யுஞ் செயல், அச்செயல் சரிகை, கிரிகை, சமகலி, திரிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அர்த்தபிருட்டகம், சுபத்திகம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானபதப்பிராயவிருத்தம், உட்சேபணம், அவச்சேபணம், நிகுஞ்சனம் எனப் பதினுறுவகைப்படும்.

அங்கசங்கம் - புணர்ச்சி, பகட்டு.

அங்கசம் - உதிரம், உரோமம், காமம், நோய்.

அங்கசலனவாதரோகம் - ஒருகைவாதரோகம், வாதத்தைப் பிறப்பிக்கின்ற வஸ்துவையும் வாதகோபவஸ்துவையும் புசித்தலினுல் சர்வாங்கத்திலும் பிறந்து வாதஞரம் புத்துவாரங்களிலும் வியாபித்து உடம்பெங்கும் பரவி வேதனையைச் செய்யும், அப்போது ஊர்த்துவாங்கத்திலாவது அதோங்கத்திலாவது தடுக்க முண்டாகும்.

அங்கசவேள் - மன்மதன்.

அங்கசன் - மகன், மன்மதன்.

அங்கசா - சோதிட வுறுப்புக்களில் ஒன்று.

அங்கசாதனம் - ஒருகுறி, அடையாளம்.

அங்கசாரி - சிவன்.

அங்கசாலைக்காரன் - ஊரதிபதியின் கட்டளைப்படி கிராமப்பணி செய்வோன்.

அங்கசிவயோகம் - அஷ்டாங்கசிவயோகம்.

அங்கசுபாதி - சிறுபுள்ளடி என்னும் ஒருபூண்டு.

அங்கசேட்டை - கோரணி, உடம்பினது சலனம், கைமெய்க்காட்டு, அங்கசேஷ்டை, குறும்பு.

அங்கசை - மகள்.

அங்கச்சனி - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் சனி.

அங்கச்செவ்வாய் - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் செவ்வாய்.

அங்கச்சோமன் - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேகவுறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படுஞ் சந்திரன்.

அங்கணம் - நாலுதாண்களுக்கிடைப்பட்ட இடம், இரண்டு தாண்களுக்கு நடுவிலுள்ள இடம், உள்ளறை, கடுமரம், சலதாரை, சேறு, பத்து முழத்தளவு, பரப்பு, பொரிகாரம், முற்றம், வெண்காரம், மதகு, கட்டடப் பிரிவு.

அங்கணர் - சிவன்.

அங்கணபாஷாணம் - அங்கணன்.

அங்கணன் - அருகன், சிவன், மிருதபாஷாணம், விஷ்ணு.

அங்கணாளன் - கண்ணேட்டமுடையவன்.

அங்கணாளர் - சிவன்.

அங்கணி - கற்றாழை, காளி, பார்ப்பதி, பார்வதி.

அங்கண் - அவ்விடம், அழகிய இடம், அங்கு.

அங்கதச்செய்யுள் - வசைக்கவி.

அங்கதப்பாட்டு - அங்கதச்செய்யுள்.

அங்கதம் - வசை, தோளணி, பழிச்சொல், பாம்பு, பொய், மார்பு, யானையுணவு, வாகுவலயம்.

அங்கதர் - வசைச்செய்யுள் சொல்வோர்.

அங்கதன் - இலட்சுமணனுடைய மகன், வாலிமகன்.

அங்கதாரி - சிவன், சீவன், தேகம்.

அங்கதானம் - பரதசாத்திரத்திற் சொல்லப்பட்ட தானப்பிரமாணங்கள் பத்தினுள் ஒன்று. அது அனுதரிதம், துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என ஆறு வகைப்படும்.

அங்கதி - கொடை, தீ, நோய், பார்ப்பான், பிரமா, வாயு, விட்டுணு.

அங்கதை - தென்றிசை யானைக்குப் பெண் யானை.

அங்கத்தவர் - சபைக்குறுப்பானவர்.

அங்கத்தி - பண்டாரங்களை மரியாதையாகக் கூப்பிடுந் தாங்கனென்னும் அர்த்தத்தையுடைய ஒரு சொல்.

அங்கத்தீ - உதராக்கினி, அது சமாக்கினி, விஷமாக்கினி, தீட்சணக்கினி, மந்தாக்கினி என நான்கு வகைப்படும்.

அங்கத்தை - அவ்விடத்திருக்கும் பெரியவர்.

அங்கநட்சத்திரம் - ஒருவன் பிறக்கும்போது அவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் காணப்படும் நட்சத்திரம்.

அங்கநாசம் - அசைதல், அரசர் மனையின் முற்றம், போதல், முற்றம்.

அங்கநாகனம் - மாதர் கூட்டம்.

அங்கநாடு - ஒருநாடு.

அங்கந்யாசம் - அங்கந்யாசம், அநுஷ்டான முறைமைகளில் ஒன்று, அது இருதயம் முதலிய இடங்களிலே மந்திரத்தோடு கையாற் றொடுதல்.

அங்கநூல் - அங்கனூல்.

அங்கனூல் - வேதாங்க நூல், அங்காகமம்.

அங்கபங்கம் - உடம்பினுறுப்புக்களின் சோர்வு, சரீரவுறுப்பின் சேதம், சோர்வாதம்.

அங்கபடி - அங்கவடி, கவணை, குதிரை யங்கபடி.

அங்கபாலி - கட்டித் தழுவுதல், வளர்த்த தாய்.

அங்கபாலிகை - கட்டித் தழுவுதல்.

அங்கபுதன் - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் புதனென்னுங் கிரகம்.

அங்கபூ - மகன்.

அங்கப்பதக்கணம் - அங்கப் பிரதட்சிணம்.

அங்கப்பிரதக்கிணம்
அங்கப்பிரதக்ஷிணம்
அங்கப்பிரதட்சிணம்
} சரீரத்தால் உருண்டு வலம் வருதல்.

அங்கப்பிரதக்கணம் - அங்கப் பிரதட்சிணம்.

அங்கப் பிரத்தியங்கம் - அங்கமும் பிரத்தியங்கமுமான உறுப்புகள், சிரம், முகம், இருதயம் ஆகிய இவைகள் அங்க மெனப்படும். மார்பு, கழுத்து, தனம், தோள், கொப்பூழ், வயிறு, குய்யம், கண், மூக்கு, காது, நெற்றி, கால், விரல், தொடை, முழங்கால், கணைக்கால், ஆகிய இவைகள் பிரத்தியங்க மெனப்படும்.

அங்கப்பிராயச்சித்தம் - தேக வியோகத்தைக் குறித்த புலம்பற் காலத்தில் வரலாய ஆசௌசம் நிவிர்த்தியாதற்பொருட்டுத் தேக சுத்தி பண்ணிச் செய்யும் பிராயச்சித்தம்.

அங்கமந்திரம் - இருதய முதலிய அங்கங்களைத் தொட்டு செபிக்கப்படும் மந்திரம்.

அங்கமணி - சீதனம்.

அங்கமாலை - ஒரு பிரபந்தம், இது ஸ்த்ரீகளின் முகம், கண் ஸ்தன முதலியவற்றையும், புருஷரின் தோள், மார்பு முதலியவற்றையும் வர்ணிக்கும் நூல், எலும்பு மாலை.

அங்கமைந்து - வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் ஆகிய பஞ்சாங்க பத்திரம்.

அங்கம் - பாவனை, சரீரம், ஆயுள் வேதம், அரசர்க்குரிய அங்கங்கள், (யானை, தேர், பரி, காலாள்) சிவன்; அப்பிரதானம், அங்காகமம், அடையாளம், அபராதம், அறையின் மேலுள்ள உடம்பின் பாகம், உடல், அழகு, இடம், அலங்காரம், அவயவம், உடம்பு, உபகரணம், உபாயம், எலும்பு, எலும்புக் கோவை. ஒரு தேயம், [இஃதிப்போது பாகல்பூர் எனப்படுகின்றது] ஒரு பாடை, ஒரு நடன வினோயாட்டு, கட்டில், களங்கம், கொன்றை, கோளக பாஷாணம், சமீபம், சற்குருசேவை, நான்கனுள் ஒன்று. அது குருவுக்குக் குற்றேவல் செய்தல், சாயல், சைனத்துள்ள ஆகம மூன்றனுள் ஒன்று, தங்குமிடம், தாளப்பிரமாணம் பத்தில் ஒன்று, தூலினுறுப்பு, மூன்றுமங்கம், பத்தெனும் எண், பாத உறுப்புக்களில் ஒன்று, பாகுபாடு, பிரதானம், மனம், வரி, வேதாங்கம், வைத்திய சாத்திரம், உறுப்பு, போர்.

அங்கம்பயந்தோன் - அருகக் கடவுள்.

அங்கம்மா - அங்காளம்மை.

அங்கயற்கண்ணி - மதுரையிற் கோயில் கொண்ட மீனாட்சியம்மை.

அங்கயாகம் - யாகத்திலோ ரப்பிரதானமான கிரியை.

அங்கயோகம் - இயமாதிகளால் சாதிக்கப்படும் யோகம் எட்டில் ஒன்று, யோக வகை.

அங்கரக்கா - மெய்ச்சட்டை, நீண்ட சட்டை, அங்கரகூ.

அங்கரங்கம் - உலகவின்பம்.

அங்கரட்சகர் - மெய்காப்பாளர்.

அங்கரட்சணி - யுத்தகவசம், அங்கரட்சினி.

அங்கரட்சா - அங்கரக்கா.

அங்கராமாதி - கௌரிபாஷாணம்.

அங்கரவல்லி - குறிஞ்சா.

அங்கராகம் - பூசும்பரிமளம்.

அங்கராசன், அங்கராயன் } அங்கதேசத்தரசன், குந்தியின் மூத்த மகனுகிய கன்னன்.

அங்கரூகம் - உரோமம்.

அங்கர் - அங்கதேசத்தார்.

அங்கர்கோமான், அங்கர்பிரான் } அங்கதேசத்தரசன் கன்னன்.

அங்கர்யாரி - நங்கூரம் தூக்கியெடுக்கும் கப்பிக் கயிறு.

அங்கலக்கணம் - சரீர அழகு, சாமுத்திரிகாலக்கணம்.

அங்கலாய்த்தல் - இச்சித்தல், துக்கித்தல், பொருமை கொள்ளுதல்.

அங்கலாய்ப்பு - அருவருப்புக்கொள்கை, துக்கம், பேராசை, கலக்கம்.

அங்கவகை - படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அங்கவடி - அங்கபடி, குதிரை யங்கவடி, குதிரை யேறும்படி.

அங்கவஸ்திரம் - மேலாடை.

அங்கவம் - பழத்தின் வற்றல்.

அங்கவன் - மிருதபாஷாணம்.

அங்கவிட்சேபம் - அபிநயம்.

அங்கவித்தியை - கணித சாத்திரம், உடம்பிலுள்ள குறிகளினால் ஒருவனுடைய நன்மை தீமைகளை அறிவிக்கும் நூல், வேதத்துக்கங்கமாகிய சாத்திரம்.

அங்கவியல் - இராசரீக முறைமை.

அங்கவியாழன் - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேக வுறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் வியாழன் என்னுங் கிரகம்.

அங்கவீனன் - குரூபி, உறுப்புக் குறைந்தவன்.

அங்கவெள்ளி - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் வெள்ளி என்னுங் கிரகம்.

அங்கனி - கற்றழை, கற்றளை.
அங்கனம் - கடுக்காய் மரம்.
அங்களுகணம் - மாதர் கூட்டம்.
அங்கனை - ஒரிராசி, பெண், வட திசை யானைக்குப் பெண் யானை.
அங்கனையர் - அழகுள்ள பெண்கள்.
அங்கன் - புதல்வன், சுவாயம்பு மனுவின் சந்ததியிலே தோன்றிய உரு என்பவனுடைய பத்துப் புத்திரருள் ஒருவன், யயாதியினது நான்காம் புத்திரனுகிய அணுவமிசத்துப் பலி புத்திரன்.
அங்கா - வாய் திறத்தல், வாய்திறப்பு.
அங்காகமம் - ஆருகத ஆகமங்கள் மூன்றனுள் ஒன்று, உபாகமத்துள் ஒன்று, மதன நூல், கொக்கோகம், சைனாகம பேதங்களுள் ஒன்று.
அங்காங்கம் - உபாங்கம்.
அங்காங்கிபாவசங்காரா லங்காரம் - உறுப்புறுப்பிக்கலவையணி.
அங்காங்கிபாவம் - அவயவங்களினது சம்பந்தம், உபகாரிய உபகாரக சம்பந்தம், கௌணப் பொருளுக்கும் முக்கிய பொருளுக்கும் உண்டான சம்பந்தம், தேகமுக் தேகியும் போலப் பிரிவின்றி நிற்குந் தன்மை.
அங்காங்கிலக்கணை - இலக்கணை வகைகளுள் ஒன்று, அது அங்கத்தின் டெயர், அங்கியை உணர்த்தி நிற்பது.
அங்காடி - கடைவீதி, ஆவணம், கூலம், பீடிகை, ஞள்ளல்.
அங்காடிக்கூலி - ஒருவகை வரி.
அங்காடிக்கூடை - கடைவீதியில் பண்டங்கள் வைக்கப்பட்டிருக்குங் கூடை.
அங்காதித்தன் - ஒருவன் பிறக்கும் போது அவனுடைய தேக உறுப்பில் நிற்பதாகக் கணிக்கப்படும் ஆதித்தன்.
அங்காதிபன் - கன்னன்.
அங்காதிபாதம் - ஒரு வைத்திய நூல், முழுவுடம்பு.
அங்காத்தல் - கொட்டாவி விடல், வாய் திறத்தல்.
அங்காப்பு - அண்ணுத்தல், வாய் திறத்தல், வாய் திறக்கை, நீர் வேட்கை.
அங்காமி - அநித்தியம், மிச்சம், காயமல்லாத.
அங்காமிப்பட்டா - பட்டாவகை.
அங்காரகமணி - பவளரத்தினம்.
அங்காரகம் - கரி, சிறுகெருப்பு, தழற் கரி, பிருங்கராசமென்னும் ஒரு படர் கொடி, மஞ்சளாதியவற்றினி' ருந்து வடிக்கும் ஒரு தைலம்.
அங்காரகன் - செவ்வாய், நெருப்பு, வடவாக்கினி, செந்நீர் முத்து.
அங்காரகை } ஓராக்கி.
அங்காரதாரை }
அங்காரதானிகை - சூட்டடுப்பு, தீச் சட்டி.
அங்காரபரிபாசிதம் - பொரிக்கறி.
அங்காரம் - கரி, தீ, சிவப்புநிறம், மாத்துவர் நெற்றியிலணியுங் கரிக்கோடு.
அங்காரவல்லி-குறிஞ்சா, சிறுதேக்கு.
அங்காரன் - அங்காரகன்.
அங்காரி - சிறு நெருப்புச் சட்டி, வெங்காரம்.
அங்காரிகை - கருப்பந்தண்டு, நன்னாரி, கரும்பு.
அங்காலே - அங்கே.
அங்காவணம் - பஞ்சதருவின்பந்தர்.
அங்காளம்மை - ஒரு கிராமதேவதை.
அங்காளி - அங்காளம்மை, காளி.
அங்கி - அக்கினிதேவன், அங்கத்தையுடையது, அத்தகாள், கார்த்திகை நட்சத்திரம், சாடாரக்கினி, பிரதானம், சட்டை, தீ, ஈண்ட சட்டை, சூரியன், அக்கி.
அங்கிகரித்தல் - ஏற்றுக்கொள்ளுதல், தழுவிக்கொள்ளுதல், அங்கீகரித்தல்.

அங்கிகரு - சாதிலிங்கம்.
அங்கிகாரம் - அங்கிகரித்தல், அங்கீகாரம்.
அங்கிகை - இரவிக்கை, கஞ்சுகம்.
அங்கிசகம் - ஹரம்ஸம்.
அங்கிசகன் - சுற்றத்தவன்.
அங்கிசம் - அகூபாகை, உபநிடத மூப்பத்திரண்டில் ஒன்று, ஒருவகைச் சந்நியாசம், தாயபாகம், தோட்பட்டை, தோள், பின்னம், கூறு, பங்கு, வமிசம், அம்சம்.
அங்கிஷபாதி - சிறுபுள்ளடி.
அங்கிஷம் - வமிசம், வாழை.
அங்கிசயன் - பதினெண் யாகங்களுள் ஒன்று, யாக விசேஷம்.
அங்கிசன் - அதிதி பிள்ளைகளில் ஒருவன்.
அங்கிசிவயோகம் - அஷ்டாங்க முடைய சிவயோகம்.
அங்கிசு - அணு, அலங்காரம், கிரணம், சூரியகிரணம், சூரியன், தும்பு, வேகம்.
அங்கிசுமாலி - துவாதசாதித்தருள் ஒருவன்.
அங்கிசை - அமிசை.
அங்கிஞானம் - அவயவியறிவு.
அங்கிடுதத்தி - நாடோடி, நிலைகெட்டவன்.
அங்கிடுதொடுப்பி-குறளைகூறுவோன்.
அங்கிடுதுடுப்பன் - நாடோடி.
அங்கிட்டு - அவ்விடத்தில்.
அங்கிட்டோமம் - கோமேதகம், அக்கினிட்டோமம்.
அங்கிதம் - உடற்றழும்பு, அடையாளம், கணக்கிடப்பட்டது, பாட்டுடைத்தலைவன், தழும்பு.
அங்கிதாரணை - அங்கினிதாரணம்.
அங்கிதிசை - தென்கிழக்கு.
அங்கிதீரன் - அக்கினித்தீரன், சம்புத்தீபம், புரந்தவன் பெயர்.
அங்கித்தம்பனை - அக்கினித்தம்பனம்.
அங்கிநாள் - அத்தநாள், கார்த்திகைநாள், அத்தம்.
அங்கியங்கடவுள் - அக்கினிதேவன்.
அங்கியற்பொருள் - ஐந்துநிலக் கருப்பொருள்.
அங்கியெதிர்க் கொடைப்பொருள் - விவாக சமயத்திலே அக்கினி முன்னிலையிலே பெண்பொருட்டுத் தந்தை முதலானவராலே கொடுக்கப்படும் பூமி முதலான பொருள்.
அங்கிரகம் - சரீரகோ.
அங்கிரசு - அக்கினி, பிரமாவிடம் பிறந்த ஏழு முனிவருள் ஒருவர்.
அங்கிரம் - ஓர் உப புராணம்.
அங்கிரன் - ஆங்கீரசன், சப்தரிஷிகளில் ஒருவன், அங்கிரசு, ஒரு வேடன்.
அங்கிரா - சப்தரிஷிகளில் ஒருவன், அங்கிரசு.
அங்கிரி - கால், மரமூலம், மூன்றுகாலிருடி, செய்யுளினடி, பாதம், மரம்.
அங்கிரிகாமகம் - மரமூலம்.
அங்கிரிபம் - மரம்.
அங்கிலேசன் - ஒரு முனிவன்.
அங்கிலேயர் - ஆங்கிலபாஷை பேசுபவர்கள்.
அங்கிளி - கற்றுழை.
அங்கினி - ஒருவித கற்றுழை.
அங்கிகரணம் - உடன்பாடு, உடன்படுகை.
அங்கீகரித்தல் - சம்மதித்தல், ஏற்றுக்கொள்ளுதல்.
அங்கீகாரம் - சம்மதி, வாக்குத்தத்தம், உடன்பாடு.
அங்கீகாரியம் - அங்கீகரிக்கத்தக்கது.
அங்கீகிருதம் - அங்கீகரிக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது.
அங்கீசம் - கூறு, பங்கு, வமிசம்.
அங்கீயம் - அங்கத்திற்குரியது.
அங்கு - அவ்விடமெனப் பொருள் படும் ஓரிடைச்சொல்.
அங்குசக்கிரகன் - யானைப்பாகன்.
அங்குசதாரி - தானகம், யானைப்பாகன், விநாயகக்கடவுள், அகப்தாரம்.

அங்குசபாசகரன் } விநாயகக்
அங்குசபாசதரன் } கடவுள்.
அங்குசபாசமேந்தி }

அங்குசபாணி - காளி, விநாயகன், வீரபத்திரன், தூர்க்கை.

அங்குசபாதி - சிறுபுள்ளடி.

அங்குசபிசாரி - கொள்ளுப் பூண்டு, கொள்.

அங்குசம் - தேதாட்டி, யானைத் தோட்டி, வாழை.

அங்குசரோசனம் - கூகைநீறு.

அங்குசலி - கொள்ளு, கொள்.

அங்குசன் - காந்தம், சரகாண்ட பாஷாணம்.

அங்குசோலி - அறுகம்புல்லு.

அங்குடம் - திறவுகோல்.

அங்குட்டமாத்திரம் - பெருவிரலளவு.

அங்குட்டமாத்திரன் - வித்தியாதத்துவத்திலிருக்கும் ஒரு சூத்திரன்.

அங்குஷ்டம் - அங்குட்டம், பாண்டுவியாதி.

அங்குட்டம் - இருநூற் றிருபத்து நான்கு புவனங்களுள் ஒன்று, காற் பெருவிரல், கைப்பெருவிரல், குறளுரு.

அங்குட்டருத்திரம் - மாயாதத்துவத்திலிருக்கும் எட்டுப் புவனங்களுள் ஒன்று.

அங்குட்டரூபி - பெருவிரலளவு வடிவ முடையோர்.

அங்குஷ்டான் } விரலுறை.
அங்குட்டான் }

அங்குணம் - வெங்காரம்.

அங்குஸ்தான் - பெருந்தாரா, தையற் காரர் விரலிலே அணியும் கூடு, அங்குஷ்டான்.

அங்குத்தை - அவ்விடம், தேவரீர்.

அங்குரகம் - பறவை முதலியவைகளின் கூடு.

அங்குரம் - இரத்தம், சலம், உரோமம், குப்பைமேனி, தளிர், நங்கூரம், தீர்ப்பூண்டின் முளை, மூளை.

அங்குரார்ப்பணம் - முளையிடுதல், மங்களகாரியங்களின் ஆரம்பத்தே சந்திரனே அதிதெய்வமாகக் கொண்டு கும்பத்தினருகிற் பாலிகையிடத்துப் பாலிற்கலந்த நவதானியங்களே மந்திரத்தோடு பெய்து மண்ணிட்டு வளர்த்தல்.

அங்குரி - விரல்.

அங்குரிதம் - தளிர்த்தது, முளைத்தது.

அங்குரித்தல் - முளைத்தல், உற்பவித்தல், வெளிப்படுதல்.

அங்குரீயகம் } மோதிரம்.
அங்குரீயம் }

அங்குலம் - பெருவிரல், விரல், விரற்கடை, கைவிரல், ஒரு விரலகலம், 1/12 அடி.

அங்குலி - ஐவிரலிச்செடி, துதிக்கை, நுனி, மோதிரம், யானைக்குக் கட்டுமணி, விரல், யானைக்கை நுனி.

அங்குலிகம் - மோதிரம்.

அங்குலிசந்தேகம் - விரனெடித்தல்.

அங்குலிதோரணம் - திரிபுண்டரம்.

அங்குலித்திரம் } விரற்புட்டில்.
அங்குலித்திராணம் }

அங்குலிபஞ்சகம் - ஐந்துவிரல்.

அங்குலிமுகம் - விரனுனி.

அங்குலிமுத்திரிகை } முத்திரை
அங்குலிமுத்திரை } மோதிரம்.

அங்குலிமோடனம் - விரலாற்றெளித்தல், விரனெடித்தல்.

அங்குலியம் - மோதிரம்.

அங்குலீ - விரல், யானைக்கைத்துனி.

அங்குலீகம் - மோதிரம்.

அங்குலீபஞ்சகம் - விரல்கள் ஐந்தின் கூட்டம்.

அங்குலீயகம் } மோதிரம்.
அங்குலீயம் }

அங்கூசம் - அங்குசம்.

அங்கூடம் - அம்பு, கீரி.

அங்கூரம் - தளிர், முளை.

அங்கே - அங்கு.

அங்கை - அழகிய கை, உள்ளங்கை.

அங்கோடம் } அழிஞ்சின்
அங்கோலம் } மரம், அழிஞ்
அங்கோலவைரவன் } சில்.

அங்கோடிங்கோடு - அங்குமிங்கும்.

அங்கோலே - அழிஞ்சிற்பட்டை.

அங்ஙனம் } அவ்விடம், அத்தன்மை,
அங்ஙன் } அவ்விதம்.

அச - நிலவிர்த்திகலேயிலிருக்கும உருத் திர புவனங்கள் நூற்றெட்டினுள் ஒன்று, அது அண்டகடாகத்திற் குப் புறம்பே கிழக்குத்திக்கில் இருப்பதென்பர்.

அசகசாந்தரியாயம - மீமாஞ்சையில் கூறப்பட்ட நீயாயங்களுள் ஒன்று, அது ஆட்டுக்கும் யானைக்குமுள்ள பேதம்போலும நியாயம.

அசகசாந்தரம் - ஆட்டுக்கும யானைக் கும் உள்ள பேதம், அஜகஜாந்தரம்.

அசகண்டர் - வேளை, கைவேளை.

அசகத்து - விடாதது.

அசகந்தை - கைவேளைப்பூண்டு.

அசகம் - மலையாடு, வரையாடு.

அசகரம் - பெரும்பாம்பு.

அசகரோகம் - எண்வகை மகூரிகை ரோகங்களுள் ஒன்று, அது பருத் துந் தடித்தும் ரணத்தைத் தருவ தாய் அநேக கொப்புளங்கள் எழும் புவதும் கீல்களிலும் முகத்திலும் வீக்கமும் தாகமும் பிசுபிசுப்பான சலக்கிவும் உண்டாவதுமாயிருக் கும்.

அசகலக்கணை - விடாதலக்கணை, அது தன் பொருளைவிடாது அதனோடு சம்பந்தமுள்ள வேறு பொருளைத் தருவது.

அசகல்லி - குழந்தைகளுக்கு வரும் நோய் வகை.

அசகவம் - சிவனுண்டய வில், அஃது இருதலே திருமாலும் பிரமனுமா யிருப்பது.

அசகளன் - சைனசம்மதத்திற் சொல் லப்பட்ட இருபத்துநான்கு தீர்த் தங்கரருள் ஒருவன்.

அசகளிகாரோகம் - ஒருவகைச் சுத் திரவிரணரோகம். இது சிலேட் டும வாதங்களினுல் பயற்றினைக் கயிற்றிற் கோத்தாலபோல நீளமாக மினுமினுப்புடன் நோயில்லாத கொப்புளங்களை உண்டாக்குவது.

அசகாயசூரன் - வெருவரு சகாயமில்லாமற் பகைவரைவெல் லும் பலமுள்ளவன்.

அசகாயம் - சிநுகாயம், சகாய மின்மை.

அசகி - பகைவன்.

அசகியம் - அருவருப்பு, தாங்கக்கூடா கது.

அசகோத்திரம்-வேற்றுக் கோத்திரம்.

அசகோத்திரன்-வேற்றுக் கோத்திரத் தான்.

அசக்கல் - கட்டல்.

அசக்கியம - செய்யக்கூடாதது, தித்த நாகமணல், நாகமணல், இயலாமை.

அசக்கியன் - தகுதியற்றவன்.

அசக்கீரம் - ஆட்டுப்பால்.

அசக்குதல் - அசைத்தல்.

அசங்ககசித்தன் - அஞ்ஞானமனத் தன்.

அசங்கதம் - வியூகவகை, இகழ்ச்சி, அலங்கதம், அவமதிக்கப்பட்டது, சமமற்றது, சிதறினது, தனிமை யானது, நெகிழ்ந்தது, பற்றில்லா தது, ஒழுங்கின்மை, பொருத்தமில் லாதது, பொய், வெறுப்பு.

அசங்கதி - பொருத்தமின்மை, இணக் கமின்மை, ஒவ்வாமை.

அசங்கதியலங்காரம் - தொடர்பின்மை யணி.

அசங்கதியாடுதல் - பரிகசித்தல்.

அசங்கமம் - அசட்டை, இகழ்ச்சி, ஒவ் வாமை, கூடுதலின்மை, சமமின் மை, சூரியனுக்கெதிரேகிரகங்கள் நிற்றல், பவித்திரமின்மை, புலவி.

அசங்கம் - ஆசையின்மை, பற்றின்மை, தடுக்கப்படாதது, தனிமை, நிச்ச யம், விரோதம்.

அசங்கற்பம்மாசம் - சங்கிரமத்தின் ஆதி அந்தங்களிலே அமாவாசை வரநிகழுமாதம்.
அசங்கற்பம - உண்மை, முன்னிதானிப்பின்மை.
அசங்கன் - அஞ்ஞானன், ஒட்டாதவன்.
அசங்கிதம் - அச்சமில்லாதது, சந்தேகமில்லாதது.
அசங்கியம - எண்ணிறந்தது, அசங்கமம், அருவருப்பு, அசிங்கம், அசுங்கியம்.
அசங்கியா - எண்ணிறந்தது.
அசங்கியேயம - எண்ணக்கூடாதது.
அசங்கியை - அசங்கியா.
அசங்கிரகம் - இரவாமை, பின்னுக்கு வேண்டும் பொருளைத் தேடிவைத்துக்கொள்ளாமை.
அசங்கிலபதம - கொடுத்தவிடத் துண்ணுதல்.
அசங்கு - அசை.
அசங்குதல் - அசைதல்.
அசங்கை - சந்தேகமின்மை, மதிப்பின்மை, பயமின்மை.
அசங்கையன் - சந்தேகமில்லாதவன்.
அசங்கோசம - அடக்கமின்மை.
அசசரணம் - பூரட்டாதி நக்ஷத்திரத்துக்கதிதெய்வம்.
அசசீவிகன் - ஆடுமேய்த்துச்சீவிப்பவன்.
அச்சுரம் - ஒருசிற்பூண்டு, ஒருவகைமுருங்கைமரம்.
அசசுவிதி - நாடிகள் பதினொன்றினுள் ஒன்று.
அசச்சனன் - துர்ச்சனன்.
அசஞ்சத்தம் - பற்றில்லாதது.
அசஞ்சத்தி - சங்கற்பமறல், பற்றின்மை.
அசஞ்சயம் - ஐயமின்மை.
அசஞ்சலம் - அசைவின்மை, ஐயம், திடாரிக்கம், சலிப்பின்மை.
அசஞ்சலர் - அசைவற்றவர்.
அசஞ்சலன் - சலியாதவன்.
அசஞ்சிதன் - சஞ்சிதமில்லாதவன்.
அசடம் - உடலமில்லாதவஸ்து, சடமல்லாதது.
அசடரூபம் - சைதன்யரூபம்.
அசடர் - கீழ்மக்கள்.
அசடன் - களங்கமுள்ளவன், கீழ்மகன், சடமில்லாதவன், சோம்பேறி, மூடன்.
அசடி - குற்றமுள்ளவள்.
அசடு - இசடு, இருப்பு முதலியவற்றிற் பெயரும் பொருக்கு, கீழ்மை, குற்றம், மௌட்டியம், மூடம், பழுது, பேதைமை.
அசடுதட்டுதல் - அறிவாமைபுலப்படுதல், பொலிவழிதல்.
அசட்சுதரிசனம் - தீக்குணமாகிய தரிசனவருணீயத்தின் ஒருவகை.
அசட்டன் - கீழ்மகன்.
அசட்டர் - களங்கமுடையவர்.
அசட்டாளம் - ஒழுங்கீனம்.
அசட்டி - அசமஞ்சகம்.
அசட்டை - பராமுகம், மதியாமை, அசிரத்தை, அலட்சியம்.
அசண்டை - சாதுவானதன்மை.
அசதாகமம் - நாஸ்திக மூதலிய சாஸ்திரம்.
அசதாசாரம் - துராசாரம்.
அசதி - கற்பில்லாதவள், பரிகாசம், அயர்ச்சி, ஔவையாரால் கோவை பாடப்பெற்ற ஓரிடையன், சடிதி சிரித்துப்பேசல், மறதி, வசவு, அயர்தி.
அசதிசன்னி - ஒருநோய்.
அசதிசுதன் - சோரபுத்திரன்.
அசதியாடல் - நகையாடல், மிக்குச் சிரித்து விளம்பல், நகல்.
அசதியாடுதலே - பரிகசித்தல்
அசதியாட்டல் - நகையாடச்செய்தல்.
அசதீசுதன் - சோரபுத்திரன்.
அசத்தம் - சத்தமின்மை.
அசத்தர் - அஞ்ஞானிகள், வலிமையில்லாதவர்.
அசத்தல் - அசந்துபோதல்.

அசத்தன் - அச்சத்தன், உலகப்பற்றற்றவன், முருகக்கடவுள், வலியில்லாதவன், வலியற்றவன்.

அசத்தி - அசக்தி, பலவீனம், வலியின்மை.

அசத்தியம் - பொய், அஸத்யம்.

அசத்தியோபாயநிருவாணம் - நிருவாண தீட்சைவகை இரண்டனுள் ஒன்று; அது, தேகாத்மாபிமானத்தின் முத்தியைப் பயப்பதும் காலீசர் முதலிய மந்த பக்குவர்களுக்குச் செய்யப்படுவதுமாம்.

அசத்திலட்சணம் - அசம்பவம்.

அசத்து - தீயன், இல்லாத பொருள், உள்ளதல்லாதது, பொய்ந் நெறி, தீயது, அஸத், மாயை, இல்லாதது.

அசத்துக்கள் - கீழோர், சிறியோர், அற்பர்.

அசத்துரு - சந்திரன், மித்துரு.

அசத்துவம் - அபாவம், தீமை, வெளிப்படாமை, வலியின்மை.

அசத்துவாபாதகம - வஸ்து இல்லை என்று தோன்றும்படி செய்யுஞ் சத்தி.

அசத்தை - சூனியம், பிரபஞ்சம், தீமை, வெளிப்படாமை, பொய்.

அசநபன்னி - சிற்றகத்திப்பூண்டு, அசகம், சிரிப்பு, சோறு, போசனம், வெள்ளுள்ளி, வேங்கைமரம்.

அசநவம் - பிருதுமன்னனுடைய வில்.

அசநவேதி - சீரகம்.

அசநாமிர்த்தைதலம் - ஒருவகைத்தயிலம். இதுவேங்கைப்பட்டை, சீந்தில் முதலியவற்றிலிருந்து வடிப்பது.

அசநியேறு - இடியேறு.

அசநோற்பவவிக்கல் - ஐவகை விக்கல்களிலொன்று, அது: காரவஸ்து, மிகுதீக்ஷணவஸ்து, சீரணமாகாதவஸ்து, கடினவஸ்து முதலியவைகளாற் பிறந்து நோயில்லாமற் கண்டத்திலே அற்பதொனி, அற்பவிருமல் என்னும் குணங்களையுண்டாக்குவது.

அசந்ததி - மக்களில்லாமை.

அசந்தம் - உயிரெழுத்திலே முடியுஞ் சொல், சந்தமின்மை.

அசந்தர்ப்பணம் - திருப்திகொடாமை, விருப்பங்கொள்ளாமை.

அசந்தர்ப்பம் - அசமயம், சமயமின்மை, சௌகரியமின்மை, பொருத்தமின்மை, அஸந்தர்ப்பம், சரிப்படாமை.

அசந்தானம் - சந்தானமின்மை, சமாதானமின்மை.

அசந்தி - சந்தியின்மை.

அசந்தித்தம் - ஐயப்படாதது.

அசந்துட்டம் - விருப்பமின்மை.

அசந்துட்டன் - மகிழ்ச்சியற்றவன்.

அசந்துட்டி } சந்தோஷமின்மை,
அசந்துஷ்டி } திருப்தியின்மை,
மகிழ்ச்சியற்றவள்.

அசந்தோஷம் } வெறுப்பு.
அசந்தோடம் }

அசந்நத்தன் - இறுமாப்புடையவன், யுத்தத்திற்காயத்தமில்லாதவன்.

அசந்நிகருடம் - சேய்மை, பிரத்தியக்ஷப்படாமை.

அசந்நிகிதம் - தூரமுள்ளது.

அசந்நிகிருட்டம் - சமீபமாகாதது, பிரத்தியக்ஷப்படாமை.

அசந்நிதி - சமீபமாகாமை, நம்பிக்கை.

அசந்நியம் - தூர்க்குறியான தோற்றம், பிறப்பற்றது.

அசபம் - அசபாமந்திரம், அஜபா.

அசபன் - ஆடுமேய்ப்போன், செபஞ் செய்யாதவன், பரமபத நூல்களைப் படிப்போன், பிரதிவாதி.

அசபா - ஒருமந்திரம். அது அவன் நான் எனப்படுஞ் சோகம், அஜபை.

அசபாகாயத்திரி - ஆத்துமப் பிரசாத மந்திரம்.

அசபாஸ்வரம் - காதகளுக்குக்கேளா தமந்திரித்தல்.
அசபாநலம் - அசபையாகிய அக்கினி.
அசபாலித்தை - அசபாமந்திரம்.
அசபிண்டன் - சபிண்டனல்லாதவன்.
அசபிண்டா - சபிண்ட சம்பந்தமில்லாத கன்னி.
அசபிண்டி - சபிண்டியல்லாதவள்.
அசபுத்தன் - சதருத்திரருள்ளே இந்திரதிக்கிலிருக்குந் தசருத்திரருள் ஒருவன்.
அசபேசத்திசிவாத்மகம் - அசபாமந்திரத்திற் சத்திவடிவான சகரமும் சிவவடிவான அகரமும்.
அசபை - அசபா என்னும் மந்திரம்.
அசப்பியம் - அதப்பியம், அஸப்யம், சபைக்கடாத சொல்.
அசப்பு - பராக்கு.
அசமஞ்சசம் - சமமில்லாதது, தெளிவுறவிளங்காதது, பொருந்தாதது, ஒவ்வாதது, வித்தியாசம்.
அசமஞ்சசன் - சகராசாவின் மூத்தமகன், அசமஞ்சன், தீயவன்.
அசமதாகம் - ஓமம்.
அசமந்தம் - அசமந்திபம், சம்பந்தமின்மை, மந்தகுணம், மலேயத்தி, மலேயாமை.
அசமந்தன் - சோம்பேறி, மந்தகுணமுடையவன்.
அசமந்திபம் - மலேயத்தி.
அசமபாணன் - மன்மதன்.
அசமபாஷை - சேனை நடக்கும் வழி.
அசமம்-ஒற்றை இரட்டை அல்லாதது.
அசமயம் - அஸமயம், ஒவ்வாச்சமயம், கெட்ட காலம், பொருத்தமற்ற வேலே.
அசமருதம் - அத்தி.
அசமர்த்தம் - சாமர்த்தியமற்றது.
அசமர்த்தன்-சாமர்த்தியமில்லாதவன்.
அசமர்த்தவிசேடணசித்தம் - சொரூபாசித்த ஏதுப்போலி வகையுளொன்று. அது சாத்தியத்தைச் சிறிதுஞ் சாதிக்க வலியில்லாத விசேடனத்தை யுடையது.
அசயர்த்தவிசேடியாசித்தம் - சொரூபாசித்த ஏதுப்போலி வகையுளொன்று. அது சாத்தியத்தைச் சிறிதுஞ் சாதிக்க வலியில்லாத விசேடியத்தை யுடையது.
அசமவாயி - அசமவாயிகாரணம், சமவாயமல்லாதது, அஸமவாயி.
அசமவாயிகாரணம் - சமவாயி காரணமல்லாதது. அது சமவாயி காரணத் தணுகியிருப்பதுந் துணிந்த காரணத் தன்மையுடையதுமாயிருப்பது.
அசமன் - சமனின்மை.
அசமானம் - சமானமின்மை, உவமையின்மை.
அசமுகன் - அசமுகாசூரன், ஆட்டுமுகத்தையுடையவன், தக்கன்.
அசமுகி - ஆட்டுமுகமுடையவள், சூரனுக்குத் தங்கையாகிய ஓரசுரப் பெண்.
அசமுசாரி - சுத்த சைதன்னியன், பிரமசாரி.
அசமோதகம், அசமோதம் } ஓமம்.
அசம் - வெள்ளாட்டேறு, அஜம், வெங்காயம், அவமதிச்சிரிப்பு, சிரிப்பு, பிறப்பில்லாதது, ஆடு, ஆட்டுக்கடா, ஆன்மா, ஈரவுள்ளி, உள்ளி, சந்தனம், நெல், மூவருடை நெல், வெண்காயம்.
அசம்பந்தம் - தொடர்பின்மை.
அசம்பந்தாதி சயோத்தியலங்காரம் தொடர்பிலுயர்வு, ஈவிற்சியணி.
அசம்பவம் - அதிசயம், சூனியம், மாறுகொள்ளக்கூறல்; அது நூற்குற்றம் பத்திலொன்று, உற்பத்தியின்மை, நேரக்கூடாமை, ஒவ்வாமை, அஸம்பவம்.
அசம்பவாலங்காரம் - கூடாமையணி.
அசம்பாடிதர் - சம்பாவஷணை செய்தற்குத் தகுதியில்லாதவர்.

அசம்பாதை - அடைக்கப்படாமல் வெளியாயிருப்பது, ஒடுக்க மில்லாதது, விசாலமுள்ளது.

அசம்பாவனை - கிரகித்தற்கருமை, கிரகித்தர்கேலாமை.

அசம்பாவனைவத்து - தியானித்தறியப்படாத பொருள்.

அசம்பாவனை - அறியக்கூடாமை.

அசம்பாவிதம்-சம்பவிக்கக் கூடாதது.

அசம்பி - தோட்பை, பொருத்தமில்லாதது, அசம்பை.

அசம்பிரக்ஞாசமாதி - நிராலம்ப சிவயோகசமாதி.

அசம்பிரேட்சியகாரித்துவம் - ஆராயாதுசெய்தல். அது பஞ்சதந்திரத்துள் ஒன்று.

அசம்பிரேட்சியம் - ஆராய்வின்மை.

அசம்பை - அசம்பி, பிரயாணிகளின் தோட்பை.

அசம்போகம்- அனுபவமின்மை, புணர்ச்சியின்மை, மகிழ்ச்சியின்மை.

அசம்மதம - சம்மதமின்மை, அஸம்மதம்.

அசம்மதி - உடன்பாடின்மை, அசம்மதம்.

அசம்மானம் - அவமரியாதை.

அசம்வேதனம் - உணர்வின்மை.

அசராசீவன் - தாளுயிர்ங்குந்தன்மையில்லாத உயிர்ப்பொருள்.

அசரம் - அசைவில்லாதது, இருவகைத் தோற்றத்தில் ஒன்று, அது நடையில்லது, நிலைத்திணை.

அசராது - கொன்றைமரம்.

அசரியம் - அழிவின்மை, சினேகம்.

அசரீரத்துவம் - சரீரத்தன்மையின்மை.

அசரீரமுத்தி - விதேகமுத்தி.

அசரீரம் - சரீரமின்மை.

அசரீரன் - காமன், சரீரமில்லாதவன்.

அசரீரி - அரூபி, ஆகாயவாணி, சரீரமற்றது, ஆகாசவாணி.

அசரு - அகிர், பண்ணினசடு, பொடுகு.

அசருதல் - அயருதல்.

அசரை - ஒரு சிறிய மீன், அழிவின்மை, நரைதிரையின்மை, அயிரைமீன்.

அசர் - அசறு, அகிர், தலைச்சுண்டு, பொடுகு.

அசர்தல் - அயர்தல், அயருதல்.

அசர்த்துதல் - அயர்த்துதல்.

அசர்வகர்த்திருத்துவம் - சர்வகர்த்திருத்துவமின்மை.

அசர்வஞ்ஞதை } சர்வஞ்ஞத்து
அசர்வஞ்ஞத்துவம் } வம் இல்லாமை.

அசலகம் - அயலகம்.

அசலகன்னிகை - உமாதேவி.

அசலக்கால் - தென்றல்.

அசலசலம - நால்வகைச் சிவலிங்கங்களுள் ஒன்று. அது அசலசலலிங்கம்.

அசலசலலிங்கம - நால்வகைச் சிவலிங்கங்களில் ஒன்று, அது தீட்சைக்குச் சொல்லியபடி வேதிகையிலிட்டுப் பூசித்தற்கும் இட்டலிங்கமாக நாடோறு மிட்டுப் பூசித்தற்கும் உபயோகமான மண்டலலிங்கம்.

அசலபதி - இமயமலை, மலையரசன்.

அசலமூர்த்தி - அசைவின்றி நிலையாயிருக்கும் மூர்த்தி, அது சிவலிங்கம்.

அசலம்-அசையாநிலை, அம்பு, இரும்பு, கற்பாஷாணம், படைக்கலம், பூமி, மலை, அசையாதது, அசலை.

அசலர் - அயலார்.

அசலலிங்கம் - இடப் பெயர்ச்சியின்றித் தாபிக்கப்பட்ட இடத்திலேயிருக்கும் இலிங்கம்.

அசலனம் - அசைவின்மை.

அசலன் - அசைவற்றிருப்பவன், கடவுள், சிவன், அருகக் கடவுள்.

அசலாதிபன்-இமயமலை, மலையரசன்.

அசலாவதி - அசைவில்லாத எல்லைப் பொருள்பற்றி வினை கொண்டு முடிவது.

அசலான் - அசலகத்தான்.

அசலேசன் - கிரீசன்.

அசலை - பூமி, மலை, சிற்சத்தமூர்த்தி, பார்வதி.

அசலைமூர்த்தி - ஞானக் கிரியா சிற்சத்தி மூர்த்தி, அது தனது சங்கற்பத்தால் தானசைவின்றி அசைவி னுற் சட காரியம் நிகழப்பண் ணும்.

அசல் - அன்னியம், கொதுகு, மூல மானது, முதல், அருகாமை, அரு காண்மை, உயர்ந்தது, கொசுகு, சீலை, பூமி, முதற்பிரதி, அருகு, அயல்.

அசல் குறிப்பு - தினசரிக்குறிப்பு.

அசல்ஜெபீஜ் - ஆதிவரி.

அசல் - அசறு, கொதுகு, சேறு.

அசவாகனம - அன்னப் பறவை.

அசவாகனன் - அக்கினி தேவன், பிர மன், முருகக் கடவுள்.

அசவை - அசபாமந்திரம், பெருவிர லடி, அஜபை.

அசறு - சிறுபூச்சி, சேறு, சொறி, தலைச் சுண்டு, புண்ணிலசடு, புழு, தலைப்பொடுகு.

அசறுக்கம் - கருமைகலந்த சிவப்பு, தாம்பிரவர்ணம்.

அசறை - அசரை.

அசற்காரியம் - தகாத காரியம், உள் ளதல்லாத காரியம.

அசற்காரியவாதம்-உள்ளதல்லாத காரி யம் தோன்றுமென்று வாதித்தல்.

அசற்கியாதி - அசத்தான ஒன்று உள் ளதாக விளங்குதல்.

அசற்குரு - சற்குரு அல்லாதவன்.

அசற்சரக்கு - முதற்றர மான பண் டம், கலப்பற்ற பண்டம், இயற்கை மருந்துச் சரக்கு.

அசற்சீடன் - சற்சீடனல்லாதவன்.

அசற்சூத்திரன் - ஒழுக்கமும் நீக்கை யும் இல்லாத சூத்திரன்.

அசற்பதம் - ஆகாதவழி, தின்னடை.

அசற்பாத்திரம-சற்பாத்திரமல்லாதது.

அசற்பாவம் - இல்லாதது, கெட்ட கருத்து, தீயக்குணம்.

அசற்பிரதி - சுத்தமான பிரதி, மூலப் பிரதி.

அசற்பிரதிபக்கம் - அன்னுவய வியதி ரேகி யேதுவின் பஞ்ச ரூபங்களில் ஒன்று. அது சாத்தியத்திற்கு விப ரீத சாதகமாயிருக்கிற வேறோர் ஏதுவில்லாதிருக்கை.

அசற்புத்திரன் - சற்புத்திரனல்லாத வன், புத்திரனில்லாதவன்.

அசனபன்னி - சிற்றகத்தி.

அசனம் - பருதி, அளவு, சிரிப்பு, சோறு, போசனம், பசி, கொழுப்பு, வெள்ளருள்ளி, வேங்கை மரம்.

அசனவேதி - சீரகம், போசனகுடாரி.

அசனத் - அதிகாரப் பத்திரிகை, ஆதாரம், உத்தரவு.

அசனி - அனிச்சமரம், இடி, சாம்பி ராணியிலை, உயிர் வேதனை யெனறு, வச்சிராயுதம்.

அசனிபாதம் - இடிவீழ்ச்சி.

அசனியேறு - இடியேறு.

அசன் - சிவன், அஜன், தசரதன் தந்தை, பிரமன், பிரமனுடைய ஒருமகன், பிறப்பில்லாதவன், மன் மதன், விட்டுணு, அயன்.

அசன்மானம் - நன்குமதியாமை.

அசன்றிகா - வேலை, தைவேளை.

அசன்னிதி - தூரம், நம்பிக்கை.

அசன்னியம் - அபசகுணம், பிறப்பற் றது.

அசா - தளர்ச்சி, பிரகிருதி, மறியாடு.

அசாகசம் - அமைதி, பொய்.

அசாகளத்தனம் - ஆட்டின் கழுத்திற் றொங்கும் சதை.

அஜாகனம் - ஆட்டின் அதர்.

அசாகை - களி, சாகையின்மை, புற்கை.

அசாக்கிரதை - சோம்பல், மறவி, விழிப்பின்மை.

அசாசருமம் - ஆட்டுத்தோல்.

அசாசனம் - அரசாட்சியின்மை, ஆளு கையின்மை.

அசாசி - கருஞ்சீரகம், சித்தில்.

அசாசீவி - ஆட்டுவாணிகன்.
அசாட்சியம் - சாட்சியமல்லாதது.
அசாணிமூலி - உத்தமதாளி, வேலிப் பருத்தி.
அசாதகன் — இல்லறஞ்செய்வோர் இருதிறத்தருள் ஒருவன்.
அசாதசத்துரு - தருமபுத்திரன், தனக்குச் சத்துருவில்லாதவன், தான் பிறர்க்குச் சத்துருவாகாதவன்.
அசாதம் - பிறவாதது.
அசாதவியவகாரன் - பிராயமற்றவன்.
அசாதமேதநீயம் - வேதநீயம் துவித பேதத்துள் ஒன்று.
அசாதனம் - நிலைநிறுத்தாமை.
அசாதாரணகுணம் - விசேடகுணம்.
அசாதாரணசவ்வியபிசாரம் - ஏதுப் போலிகள் ஐவகையிலொன்றாகிய சவ்வியபிசாரத்தின் ஒருவகை. அது சிறப்பினைகாந்திகம், ஏது சபக்கவி பக்கங்களில் இல்லாதது.
அசாதாரண தருமம் - சிறப்பிலக்கணம். அஃதாவது அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவமென்னும் மூன்று தோஷங்களும் நீங்கிய தருமம்.
அசாதாரணபூதம் - சாதாரணபூதமல்லாதது.
அசாதாரணம் - பொதுவின்மை, சிறப்பானது, அபூர்வம்.
அசாதாரணலக்கணம் - சிறப்பிலக்கணம்.
அசாதி - உயிரெழுத்தினை முதலாகவுடையது, மேடாதிபஞ்சிய செவ்வாயென்னுங் கிரகம்.
அசாது-கற்புநீங்கிய மனைவி தீயவன்.
அசாதுரியம் - சொற்றிறமின்மை.
அசாத்தியசாதகம் - செய்துமுடிக்கக் கூடாததைச் செய்து முடிப்பது.
அசாத்தியம் - அசாத்தியரோகம், அருமை, சந்தேகம், பெருவழக்கற்றது, முடிக்கக்கூடாதது, சாதிக்க முடியாதது, இயலாமை, குணமாகாமை,
அசாத்தியரோகம் - தீரக்கூடாத நோய்.
அசாத்திரப்பிரபஞ்சம் - சாத்திரநெறி தவறிச் சிற்றின்பத்தைத் தழுவுகலாகிய மாயை. அது தீவிரம், மந்தமென இருவகைப்படும்.
அசாத்திரம் - சாத்திரத்துக் கிசையாதது, சாத்திரமல்லாதது.
அசாத்திரீயம் - சாத்திரத்திற் சொல்லப்படாதது.
அசாந்தன் - அமைதியில்லாதவன்.
அசாந்தர் - சாந்தமில்லாதவர்.
அசாபலம் - அசைவின்மை.
அசாபல்லியம் - உறுதி, திடம்.
அசாபாலகன் - ஆட்டுவாணிகன்.
அசாமர்த்தியம் - சாமர்த்தியமின்மை.
அசாமி - ஆசாமி.
அசாரதை - சாரமில்லாமை.
அசாயசூரன் - அசகாயசூரன்.
அசாரம் - ஆஸ்தானமண்டபம், ஆமணக்கமரம், முக்கியமல்லாதபங்கு, பிரயோசனமின்மை, பயனற்றது, சாரமற்றது.
அசாரவாசி - அரசன் வாயில்காவலன்.
அசாவதானம் - அவதானமின்மை.
அசாவாமை - தளராமை.
அசாவிடல் - இளைப்பாறுதல்.
அசாவிடுதல் - அசாவிடல்.
அசாவேரி - வசந்தகால இராகத்துள் ஒன்று.
அசாவுதல் - தளர்தல்.
அசாஸ்திரீயம் - சாஸ்திரவிரோதமானது.
அசானதேவதைகள் - சிருட்டியாரம்பத்திலே தேவபாவமடைந்து தேவலோகத்திலே இந்திரனோடு கூடி ஓலக்கத்திலிருக்குந் தேவதைகள்.
அசானித்தியம் - அண்மையின்மை, சந்நிதிப்படாமை.
அசி - ஒருநதி (காசிக்கருகிலுள்ளது) அவமதிச்சிரிப்பு, ஆயுதப்பொது,

யுத்தம், வாள், படைக்கலம், சிரித்தல்.

அசிகுவன் - அசத்தியவார்த்தையும் அதிகவார்த்தையும் இல்லாதவன், நாக்கில்லாதவன்.

அசிகை - நகைத்துப்பேசும் பேச்சு.

அசிக்கல் - அரும்பொருள் சிக்கலின்மை.

அசிக்கினி - அந்தப்புரத்திலே ஏவல் செய்யும் இளம் பெண், தக்கன் மனைவி, பஞ்சாப்புத் தேசத்தி லுள்ள ஓர் நதி.

அசிங்கம் - அசுத்தம், அவலட்சணம், அசகியம்.

அசிட்டர் - சிட்டரல்லாதவர்.

அசிதம் - அமரபக்கம், அவமதிச்சிரிப்பு, காமன்வில்லு, அறிவின்மை, கருமை, சனி, சிவாகமமிருபத்தெட்டில் ஒன்று.

அசிதம்சம் - அசித்தின்கூறு.

அசிதன் - சிவன், திருமால், சனி, புத்தன்.

அசிதர் - தீர்த்தங்கரருள் ஒருவர்.

அசிதாங்கபயிரவன் - வயிரவ ரெண்மருள் ஒருவன்.

அசிதாசுமம் - இந்திரநீலமணி, மரகதமணி.

அசிதாம்புருகம் } நீலோற்பலம்.
அசிதாம்புரூகம் }

அசிதாரு - அசிபத்திரவனம், நரகவிசேஷம்.

அசிதாலவனம் - நரகவிசேஷம்.

அசிதாவனம் - நூற்றுநாற்பது நரகங்களுள் ஒன்று. அது வாள்போலிருக்கும் மட்டைகளையுடைய பனங்காடு.

அசிதேகு - கத்தி, வாள்.

அசிதை - அவுரி, அவுரிப்பூண்டு, பரை என்னும் சிவசத்தியின் நால்வகைப் பிரிவுகளில் ஒன்று, பராசக்திபேதம்.

அசிதோதம் - மேருமலையின் சாரலிலுள்ள ஒரு வாவி.

அசிதோபலம் - இந்திரநீலமணி.

அசிதோற்பலம் - நீலோற்பலம்.

அசித்தசாத்தியம் - முடியாத சாத்தியம்.

அசித்தம் - ஒரேதுப்போலி, ஏது பக்ஷத்திலிருக்கையில்லாத ஏது அது பக்ஷாசித்தம், சொரூபாசித்தம, வியாப்பியாசித்துவாசித்தம் என மூன்று வகைப்படும். முடிக்கப்படாதது.

அசித்தல் - அழித்தல், நகைத்தல்; உண்டல்.

அசித்தவா - அழிகைப்படாதவன், கண்டிக்கப்படாதவன்.

அசித்தி - அத்தாட்சியற்றது, சித்தியின்மை, தவறு, கைகூடாமை.

அசித்திரம - சித்திரமின்மை.

அசித்திரன் - கள்வன்.

அசித்து - சடம், சடப்பொருள்.

அசித்துத் தத்துவம் - சட வடிவமாகிய இருபத்துநான்கு தத்துவங்கள் அது ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரியமைந்து, பிராணாதியைந்து, சத்தாதியைந்து, அந்தக்கரணம் நான்கென்பன.

அசித்துப்பொருள் - சடப்பொருள்.

அசிந்தம் - கோடாகோடி, பத்திலட்சங்கோடி, மரணம.

அசிந்தன் - சிந்திக்கப்படாதவன்.

அசிந்திதன் - மனதிற்கெட்டாதவன், அமமதிகப்பட்டவன், கடவுள், நினைக்கப்படாதவன்.

அசிந்தியம் - ஒரெண், சிந்தைக்கெட்டாமை, சிந்தைக்கெட்டாதது.

அசிந்தை - நிர்ச்சிந்தை, புலனின்மை.

அசிபதசொரூபம - கூடஸ்தனே பிரமம பிரமமே கூடஸ்தன் என ஐக்கியார்த்தமாயறிவது.

அசிபதம் - தத்துவமசி என்னும் மகாவாக்கியத்தின் மூன்றும் பதம். அது சிவசிவர்களுடைய ஐக்கியத்தைக் குறிப்பது.

அசிபத்திரகம் - கரும்பு.

அசிபத்திரம் - கரும்பு, படையுறை, வாளலகு.
அசிபத்திரவனம் - ஒருநரகம்.
அசியவாமீயசூக்கம் - பொன்னைத் திருடிய பாதகம் தீர்க்குமாறு செபிக்கப்படும் ஓர் இருக்குவேத வாக்கிய மந்திரம்.
அசிரத்தை - சிரத்தையின்மை.
அசிரஸ்நானம் - கண்டஸ்நானம்.
அசிரப்பிரபை - மின்னல்.
அசிரம் - உடல், அற்பகாலம், காற்று, தவளை, முன்றில், விடயம், வெள்ளை வெட்டிவேர்.
அசிரவணம் - செவிடு.
அசிரன் - சூரியன், காற்று, பிசாசு, தீ.
அசிராசை - மின்னல்.
அசிரி - ஆபாசமானவன்.
அசிருபாடம் - கண்ணீர்சொரிதல்.
அசிர்க்கு - இரத்தம்.
அசிர்த்தல் - சந்தேகித்தல்.
அசிவம் - அதிட்டவீனம், அஞ்ஞானம், தீங்கு.
அசிவயோகி - சிவயோகியல்லாதவன்.
அசிற்பிரபஞ்சம் - அசித்துப் பொருளான பிரபஞ்சம்.
அசினபத்திரி, அசினபத்திரிகை, அசினபத்திரை } வெளவால்.
அசினம் - தோலாசனம், தோல்.
அசினயோனி - மான்.
அசீதகரன் - சூரியன்.
அசீதம் - எண்பதாவது, உட்டணம்.
அசீதளம் - கருப்பூரம்.
அசீதி - எண்பது, சடசீதிமுகம், அதுஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் மாதங்களின் பிறப்பு.
அசீதிகம் - எண்பதென்னும் அளவுடையது.
அசீதிகன் - எண்பது வயதுடையவன்.
அசீரணபேதி - ஒருபேதி.
அசீரணம் - செரியாமை, பசியின்மை, யெளவனம், அழிவுபடாதது, சமியாமை.
அசீரணரோகம் - செரியாமையாலுண்டாகும் ஒரு நோய்.
அசீரணவாயு - ஒருவாயு.
அசீரியம் - அழியாதது.
அசீர் - ஆயத்தம், தளபாடம்.
அசீர்ணம் - செரியாமை, யெளவனம்.
அசீர்த்தி - அசீரணம்.
அசீலன் - நல்லொழுக்கமில்லாதவன்.
அசீவம் - நவபதார்த்தங்களுள் ஒன்று, சூனியம், சீவனில்லாமை.
அசீவனி - மரணம்.
அசீவன் - சீவனில்லாப்பொருள்.
அசு - சுவாசம், துக்கம், பிராணவாயு.
அசுகம்-காற்று, துக்கம், அசௌக்கியம்.
அசுகிருத்து - பகைவன்.
அசுகுசு - அருவரு, சந்தேகி.
அசுகுசுத்தல் - அருவருத்தல், சமுசயித்தல், சந்தேகித்தல்.
அசுகுசுப்பு - அருவருப்பு, சந்தேகம்.
அசுகுணி - ஒருபூச்சி, ஒருவகைக்கரப்பன், காதிற் படருமொரு நோய்.
அசுகை-எழில், ஐயம், அசூயை, அசுவை
அசுக்காட்டுதல் - பரிகசித்தல்.
அசுசமன் - அன்பன், கணவன்.
அசுசி - அபகீர்த்தி, அருவருப்பு, சுசியின்மை, அசுத்தம், அவகீர்த்தி.
அசுசித்தல் - அருவருத்தல்.
அசுசிப்படல் - அழுக்கடைதல்.
அசுசிப்படுத்தல் - அழுக்காகுதல்.
அசுட்கம் - உலராதது, பச்சையானது.
அசுணமா, அசுணம் } கேகயப்புள், இசையறியுந்தோர் விலங்கு.
அசுணன் - வெள்வெங்காயம்.
அசுண்டவாயு - பூமிக்குமேல் ஐம்பது யோசனைக்கப்பாலிருக்கும் ஒருவாயு. இது சமஸ்தஜீவன்களுக்குந் தீவனம், பிறப்பித்திராட்சதர் கவனத்துக்கும் பட்சிகள் கவனத்துக்கும் ஆகாரமாயிருப்பது.
அசுதந்தரம் - சுதந்தரமில்லாமை.

அசுதாரணன் - சிவன்.

அசுதை - விஷம்.

அசுத்ததத்துவங்கடொகுமுதல் - அசுத்த மாயை.

அசுத்ததத்துவம் - ஆன்மதத்துவம்.

அசுத்தப்படல் - அழுக்காதல்.

அசுத்தப்படுத்தல் - அழுக்காக்குதல்.

அசுத்தமாயாக்கோபகர் - அனந்தேசுவரர்.

அசுத்தமாயாதத்துவம் - அசுத்தமாயையிலே அனந்ததேவராற் கலக்குண்டபாசம். அது தத்துவங்களினிடைவைத் தெண்ணப்படும்.

அசுத்தமாயை - நித்தியமாய் ஏகமாய் எங்கும் வியாபகமாய் அரூபமாய்ச் சடமாய்ப் பிரளயகாலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய் ஆன்மாக்களுக்குச் சுத்தா சுத்தமும் அசுத்தமுமாகிய தனுகரணபுவன போகங்கள் தோன்றுதற்கு முதற்காரணமாய்த் தன் காரியமுகத்தான் ஞானக்கிரியைகளை விளக்குமாயினும் மயக்கஞ் செய்வதாயுள்ள ஒரு பதார்த்தம்.

அசுத்தம் - சுத்தமின்மை, ஆசௌசம், வேசிமார்க்கம், தீட்டு, திருத்தமின்மை, மலம், அசுசி, அருவருப்பு, குர்ச்சிதம், சூதகம், தூயதின்மை, பயிர்ப்பு, வாலாமை, அழுக்கு.

அசுத்தன் - சுத்தமில்லாதவன்.

அசுத்தாத்துவா - பிருதிவிமுதல் பிரகிருதிவரையுள்ள இருபத்தைந்து தத்துவங்களின் சமூகம்.

அசுத்தாவி - சுத்தமில்லாவரூபி, பசாசு, பிசாசு.

அசுத்தி - அழுக்கு, ஆணவமலம், சுத்தமின்மை, வழுக்கலையப்படாமை, அசுத்தம்.

அசுத்தை - குற்றமுடையவள், ஒழுக்கமற்றவள்.

அசுந்தரம் - அடாமை, அவலட்சணம்.

அசுபகாரி - தீங்கினை விளைவிப்பவன்.

அசுபக்கிரகம் - தீயகிரகங்கள், அவை: ஆதித்தன், செவ்வாய், சனி, அபரபக்கசந்திரன், இராகு, கேது, ஆதித்தனுடன் கூடிநின்ற புதன் என்பன, தீக்கோள்.

அசுபக்கிரியை - அமங்கலக்கிரியை.

அசுபதம்பவாதம் - ஒருநோய்.

அசுபதி - ஒருநாள், அசுவினி.

அசுபபாவனை - பாவனை ஐந்தனுள் ஒன்று. அது உடம்பினை அனித்தியம், துக்கம், அநான்மா, அசுசி என்று பாவித்தல்.

அசுபம் - இழவு, அமங்கலம், அழுக்கிரா, பாவம், சாவு, அசுபக்கிரியை.

அசுபயோகம் - சுபமல்லாதயோகம். அது சாதகனுக் கிலக்கினத்திற்குப் பனிரண்டாமிடத்திலே சந்திர சூரியரல்லாத மற்ற கிரகங்கள் கூடி நிற்கும் நிலை.

அசுபராசி - குரூராராசி.

அசுபவாதனை - தீயவிடயவாதனை.

அசுப்பு - உளவு, சடுதி, உளவறிகை.

அசுமக்குட்டன் - வானப்பிரத்தருள் ஒருவன்.

அசுமந்தகம் - நாணற்பூண்டு.

அசுமந்தம் - அடுப்பு, அதிட்டவீனமானது, எல்லையில்லாதது, மரணம், வயல்.

அசுமம் - இடியேறு, கல், தீத்தட்டிக்கல், மேகம்.

அசுமரி - கல்லடைப்பு.

அசுமலோட்டிரஞாயம் - மீமாஞ்சையிற் கூறப்பட்ட நியாயங்களுள் ஒன்று.

அசுமாந்தகம் } நாணற்பூண்டு.
அசுமாந்தம் }

அசுமாரோபணம் - அம்மி மிதிக்கை.

அசுமாற்றம் - அசுகை, ஐயம், சயிக்கினை சிலமன், சமூசயம்.

அசுமானகிரி - மேற்கட்டி.

அசுமேதம் - அசுவமேதயாகம்.
அசும்பல் - இடையறுதொழுகல்.
அசும்பு - ஊற்று, நீர்ப்பொசிவு, சேறு, சிறுதிவலை, பற்று, குற்றம், கிணறு, பொல்லாநிலம், வழுக்கு நிலம்.
அசும்புசெய்தல் - வழுக்குதல்.
அசும்புதல் - பரவுதல், அசும்பல், வழுக்குதல், ஒழுகுதல்.
அசுயை - அசூயை.
அசுரகன் - அக்கினி, இந்திரன், விஷ்ணு.
அசுரகிருத்தியம் - அசுரர் செய்தற்குரிய அருஞ்செயல்.
அசுரகுரு - சுக்கிரன்.
அசுரசந்தி - இரணியவேளை, அந்தி நேரம், சாயங்காலம்.
அசுரநாள் - மூலநாள்.
அசுரபி - தூக்கந்தம்.
அசுரமணம் - எண்வகை மணத்தொன்று. அது பெண்ணுக்குப் பொன்பூட்டிப் பெண்ணின் சுற்றத்திற்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வது.
அசுரமந்திரி - சுக்கிரன்.
அசுரம் - அசுரமணம்.
அசுரவைத்தியம் - ரணவைத்தியம்.
அசுரரிபு - விட்டுணு.
அசுரர் - சுக்கிரசீடர், தகுவர், தனுசர், தானவர், திதிசுதர், திதிமைந்தர், தைதேயர், தைத்தியர், நிசாசரர், நிசிசரர், பூர்வதேவர், வாதேனர் மாற்றலர், கண்டலே மேனிகரப்போர், கார்வண்ணர், மாயை மைந்தர், அவுணர், இராக்கதர்.
அசுரன் - அவுணன், இராகு, கேது.
அசுராதிபன் - மாவலியென்னுமசுரன்.
அசுரேசன் - அசுரர்களுக்குத் தலைவன்.
அசுரேந்திரன் - தாரகாசுரனுடைய ஒரு மகன்.

அசுரை - இராசி, இருள், வேசி.
அசுர் - அசுரர்.
அசுலபம் - அடைதற்கருமை.
அசுவகதி - குதிரை நடை.
அசுவகந்தி } அமுக்குரவு, அமுக்
அசுவகந்திகா } கிரா.
அசுவகந்திச்சூரணம் - அமுக்கிராக் கிழங்காற் செய்யப்பட்ட சூரணம்.
அசுவகந்திபலாலட்சாதைலம் - ஒரு வகைத் தைலம்.
அசுவகந்தை - அமுக்கிராப்பூண்டு.
அசுவகிரந்தம் - ஒரு பறவை.
அசுவகினி - அச்சுவினி.
அசுவகெந்தி - அமுக்குரவு.
அசுவகோட்டம் - குதிரைச்சாலை.
அசுவசட்டிரம் - நெருஞ்சில்.
அசுவசாத்திரம் - அசுவபரீட்சைநூல்.
அசுவசாந்தி - ஒரு யாகம்.
அசுவசாரத்தியம் - குதிரைச்சாரதித்துவம்.
அசுவசாலை - குதிரைப்பந்தி.
அசுவசாவம் - குதிரைக் குட்டி.
அசுவசிகிச்சை - குதிரைவைத்தியம்.
அசுவணி - சொறி.
அசுவதந்திரபாவம் - பரதந்திரத்தன்மை.
அசுவதட்டிரம் - நெருஞ்சி.
அசுவதந்திரம் - சுவதந்திரமின்மை.
அசுவதரம் - ஆண்கோவேறுகழுதை.
அசுவதரன் - ஒரு நாகசிரேட்டன்.
அசுவதரி - பெண் கோவேறு கழுதை.
அசுவதாட்டி - குதிரையின்வேகம்.
அசுவதாமன் - அச்சுவத்தாமன்.
அசுவதி - அச்சுவினி, முதலுள்.
அசுவத்தம் - அத்திமரம், அரசமரம், அரசு.
அசுவத்தாமன் - சிரஞ்சீவியர் எழுவரில் ஒருவன், அவன் துரோணாசாரியன் மகன்.
அசுவத்தாமா - அசுவத்தாமன்.
அசுவத்தை - நெட்டிலிங்கம், நெடுநாரை.

அசுவநதி - குந்தி கர்ணனைப்பெட்ட கத்து வைத்து விட்டநதி.
அசுவநாயகன் - குதிரைகாப்போன்.
அசுவந்தம் - அடுப்பு, மரணம், முடிவு, வயல்.
அசுவபரி - அலரி.
அசுவபரிட்சை } கலைஞானம் அறு
அசுவபரீட்சை } பத்து நான்கி னுள் ஒன்று. அது குதிரையைப் பற்றியது.
அசுவபாலன் - குதிரைப்பாகன்.
அசுவப்பிரதானம் - சுபப்பிரதானமல் லாதது.
அசுவமியம் - குதிரைப்பாஷாணம்.
அசுவமுகன் - குதிரைமுகமுள்ள கிந் நரன்.
அசுவமேதபருவம் - பாரதம் பதி னெண் பருவங்களுள் ஒரு பரு வம்.
அசுவமேதம் - ஒருவகை யாகம்.
அசுவமேதிகம் } அசுவமேதயாகத்
அசுவமேதீயம் } திற்குப் பக்குவ மான குதிரை.
அசுவம்-அமுக்கிராக்கிழங்கு, குதிரை, குதிரைப்பற்பாஷாணம், அச்சுவம்.
அசுவவாரியர் - குதிரை செலுத்து வோர்.
அசுவரம் - கீழ்க்குரல், மெய்யெழு த்து.
அசுவலக்கணம் - குதிரையின் குணங் களையுங் குற்றங்களையும் ஆராய்தற் குள்ள குறி.
அசுவாகன் - குதிரைப்பாகன்.
அசுவவாதரோகம் - ஒருவகை வாத ரோகம்.
அசுவவாதியர் - குதிரைபயிற்றுவோர்.
அசுவவித்து - அசுவசாத்திரமறிந்த வன், நளமகாராசன்.
அசுவவைத்தியம் - குதிரை வைத்தி யம்.
அசுவாபரி - அலரி.
அசுவாமணக்கு - சிறுபூளை.
அசுவாமி - உடையவனல்லாதவன்.
அசுவாமிவிக்கிரயம் - உடையவனல் லாதவன், விற்றல்.
அசுவாரசியம் - பிரியமில்லாமை, இனி மையற்றது.
அசுவாரி - எருமை.
அசுவாரூடமூர்த்தி - மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கி அரிமர்த்தன பாண் டியனுக்குக் கொண்டுவந்த சிவன்.
அசுவினி - அச்சுவினிநாள், ஒரு நட் சத்திரம்.
அசுவினிதேவர் - அச்சுவினிதேவர், தேவமருத்துவர், நாதன், தத்தியன்.
அசுவீகாரம் - அங்கீகரியாமை.
அசுவீயம் - குதிரைக்கூட்டம், குதி ரைச் சம்பந்தமுடையது.
அசுவு - அசுவுணி.
அசுவுணி - செடிப்பூச்சிவகை.
அசுவை - அச்சுவினிநாள், அத்தாட்சி யற்றது, பெட்டைக்குதிரை.
அசுழம் - நாய்.
அசூசம் } ஆசூசம், சூதகம், அசுசி.
அசூசி }
அசூதி - பிறப்பின்மை, மலடு.
அசூயனம் } அவதூறு, பொறாமை,
அசூயை } அசூசை.
அசூயாபரன்-பொறாமைகொண்டவன்
அசூரி - பாமரன், வீரமில்லாதவன், வைசூரி.
அசூர் - சமூகம்.
அசேசரி - புவர்லோகத்திலிருக்கும் ஒருவாயு.
அசேசன் - சுத்தவித்தியாதத்துவத் தில் இருக்கின்ற ஐம்பத்தோருருத் திரருள் ஒருவன்.
அசேஷம் - முழுதும், எல்லாம்.
அசேடம் - சேடமின்மை, அசேஷம்.
அசேட்டை - சேட்டையின்மை.
அசேதனம் - அறிவின்மை, அறிவில் லாதது.
அசேதனன் - அறிவில்லாதவன்.
அசேவனம் - அசட்டைபண்ணல், கீழ்ப்படியாமை, விலகுதல்.

அசேவை - அவமதித்தல், அசங்கை, விலகல்.

அசேனன் - சூரியசமுகத்தாறிருதுக் களிலு நின்று பாட்டயர்வோரில் ஒருவன்.

அசை - மாடுகள் மீட்டு மெல்லுமிரை, சுவடித்தூக்கு, அசைநிலை, அசை யென்னேவல், அலகொன்றேனும் இரண்டேனுங்கொண்டு சீர்க்குறு ப்பாய் வருவது, ஆட்டுமறி, இசை ப்பிரிவு, இரை மீட்பு, சீரகம், செய்யுளுறுப்பிலொன்று, சொல்லு ருபு, பிரகிருதி, பெண்ணுடு, மாயை, அசைச்சொல், ஆட்டு, ஆடு, உலாவு, சோம்பு, கலங்கு.

அசையி - இருந்து, இளைத்து, இளைப் பாறி, வருந்தி.

அசைஇய - மெலிந்த, ஒய்ந்த.

அசைஇயது - கிடந்தது.

அசைகபாதம் - இரவி னிகழு மிரண் டா முகூர்த்தமாகிய பூரட்டாதி.

அசைகபாதன் - பதினேழு ருருத்திர ருள் ஒருவன்.

அசைகம்பு - பறவர்மணக்கோல்.

அசைகொம்பு - கடுகொம்பு.

அசைசை - அசைவு, ஐயம்.

அசைச்சீர் - தளைகொளற்குடனுகி யோரசையே சீராய் நிற்பது.

அசைச்சொல் - அசைநிறைக்குஞ் சொல்.

அசைதல் - மெல்லச்செல்லுதல், விட் டுப்போதல், நடுங்குதல், ஒய்தல், குறைதல், இளைப்பாறுதல், தங்கு தல், கிடத்தல், சோம்புதல், கூத் தாடுதல், கிளைத்தல், தளர்தல், ஆடல், துயல்வரல், திவளல், தள் ளாடல், தளம்பல், தயங்கல், சாய் தல், ததும்பல், ஒசிதல், சலித்தல், அலங்கல், உளசல், கசடல், தாளு தல், கம்பிதம் செய்தல், சஞ்சலித் தல், ஆடுதல், இருத்தல், உலாவல். கலங்குதல், சோம்பல், தங்கல், துவ னல், பயப்படுதல், இயங்குதல்.

அசைதன்னியம் - அசைதந்யம், அறியாமை, சடத்துவம், ஞாவிக் குருடு, அறிவில்லாதது.

அசைதன்னியரூபம் - சடரூபம்.

அசைத்த - கட்டிய.

அசைத்தல் - கட்டுதல், தூக்குதல், வருத்துதல், தட்டுதல், சொல்லு தல், ஆட்டல், ஓசையெடுத்தல், கட் டல், ஆட்டுதல், சார்த்துதல்.

அசைத்தொழில் - தாக்கியெழுதல்.

அசைநிலை - அசைச்சொல்.

அசைநிலையளபெடை - அசைகோடற் பொருட்டுக்கொண்ட அளபெடை.

அசைநிலையோகாரம் - ஈற்றசையோ காரம். (உ-ம்) கேண்மியோ.

அசைபோடல் - இரைமீட்டல்.

அசைப்பருங்கல் - மலை.

அசைப்பு - அசைதல், இறுமாப்பு, சொல், சொல்லுதல்.

அசைமீட்டல் - மிருகங்கள் தாம் உண்ட வுணவை மீட்டுமென்றிரை ப்பையினுட் செலுத்தல்.

அசையடி - அம்போதரங்கம்.

அசையந்தாதி - அடியீற்றசைவருமடி முதலசையாகத் தொடுத்திருப்பது.

அசையாப்பொருள் - தாவரம்.

அசையாநிலை - அசையாது நிற்கும் நிலைமை, அகலம், சலியாமை, சாசு வதம், துருவம், தூவம், தம்பநிலை.

அசையாமணி - ஆராய்ச்சிமணி. விசேஷ சமயங்களில் அசைக்கு மணி.

அசையாமை - சலனமின்மை.

அசையிடல் - அசைபோடல்.

அசையிடுதல் - அசைபோடுதல்.

அசையியல் - நடுங்கிய இயல்புடைய பெண்.

அசையு - அழுக்கிரா.

அசையும்பொருள் - ஜங்கமம்.

அசைவாடுதல் - அசைதல், உலாவுதல், மேலுலாவிச்செல்லுதல்.

அசைவிடுதல் - அசைபோடுதல், இளைப்பாறுதல்.

அசைவின்மை - முயற்சி.

அசைவு - இளைப்பு, ஆட்டம், சலனம், சோர்வு, நிலைதவறுகை, புடை பெயர்ச்சி, மடிதல், மனக்கலக்கம், வருத்தம், தளர்வு, சோம்பு, தோல்வி, உலோகம், கம்பகம், கம்பம், கம்பிதம், சஞ்சலம், சலம், சலனம், தாளம், துவிதம், மடிவு, ஓர்வகைத் தூக்கு, அசைகை.

அசைவு செய்தல் - உண்ணுதல்.

அசைவுதீர்தல் - இளைப்பாறுதல்.

அசைவிவட்டுதல் - இரையை மீட்டு மெல்லுதல்.

அசோகத்தளிர்மணி - செளகந்திகப் பதுமராகமணி.

அசோகம் - பிண்டி, நெட்டிலிங்கம், ஒருமரம், சோகமின்மை, மன்மதன் கணை, மருது, வரிலோத்திரம், வாழை, துக்கமின்மை, அசோகு.

அசோகமரம் - காகோளி, சிஞ்சுபம், செயலை, சேந்து.

அசோகரோகிணி - ஒரு மருந்துப் பூண்டு.

அசோகவனம் - வாழைவனம்.

அசோகவனிகாநியாயம் -இராவணன். சீதையை வசைத்தற்கு மற்றயிடங்களை விட்டுப்பிரதானகாரணம் ஒன்றுமின்றி அசோகமரச்சோலையைத் தெரிந்துகொண்டதுபோல ஒரு காரியத்தைச் செய்தற்குப் பல வழியிருக்கவும் பிரதான காரணமின்றி ஒருவழியைத் தெரிந்து கொள்ளுதல்.

அசோகவனிகை - அசோகவனம், அசோகமரச்சோலை.

அசோகன் - அருகன், சோகமற்றவன், மன்மதன், மௌரிய (மயூரிய) சக்கரவர்த்திகளிலொருவன், தசரதன் மந்திரிகளில் ஒருவன், பீமசேன தேர்ப்பாகன்.

அசோகாரி - கடம்பமரம்.

அசோகாஷ்டமி - ஒரு விரதகாள்.

அசோகு - அசோகம், அசோகமரம், மருது, வரிலோத்திரம், வாழை, பிண்டி, நெட்டிலிங்கம்.

அசோகை - சவரிப்பூண்டு.

அசோசம் - அமைதி, கவலையின்மை.

அசோணம் } குறட்டை, சவரி,
அசோண்டி } சவரிலோத்திரம்.

அசோதனம் - அசுத்தம், திருத்தமின்மை.

அசோதரம் - இரவிவன்மன் நகரம்.

அசோதிதம்-சுத்திபண்ணப்படாதது, திருத்தப்படாமை.

அசோதை - நந்தகோபன் மனைவி.

அசோவதி - மேருவிற் வடகிழக்கிலுள்ள ஒரு நகரம்.

அசௌக்கியம் - சேகசுகமின்மை.

அசௌகரியம் - சமயமில்லாமை, சுகமின்மை.

அசௌசம் - ஆசூசம், சுத்தமின்மை, சூதகம்.

அசௌனக்ரியம் - அலக்ஷணம்.

அசௌரியம் - வீரமின்மை.

அச்சகம் - நீர்முள்ளி.

அச்சகாரம் - மூன்பணம், அச்சாரம்.

அச்சக்குறிப்பு - பயப்பாட்டுக்குறி.

அச்சச்சுவை - சுவையலங்காரவகைகளுள் ஒன்று. அது அச்சம் என்னும் மெய்ப்பாட்டால் நெஞ்சினிகழுந் தன்மை புறத்துப்புலனுய் விளங்க நடப்பது.

அச்சடிச்சீலை - சித்திரவர்ணம் பதிப்பிக்கப்பட்ட சீலை.

அச்சஞ்செய்தல் - பயமுறுத்தல்.

அச்சடித்தல் - பதிப்பித்தல்.

அச்சடியன் - ஒருவகை சாயப்புடவை.

அச்சடியோலை - முத்திரையிட்ட ஓலைப்பத்திரம்.

அச்சடை - கீழ்காய்நெல்லிப்பூண்டு.

அச்சடையாளம் - அங்கவப்புமை, அடிமையென்பதைக் காட்டச்சூடுங் குறி.

அச்சணம் - அந்தநிமிஷம், அக்கணம், அந்தக்ஷணம்.

அச்சத்தி - கத்தரிப்பூண்டு.
அச்சநீலம் - சுத்தநீலம்.
அச்சந்தசு - சந்தம்பெறுதது, வேதாத்தியயனம், செய்தற்குறியனல்லாதவன், வேதாத்தியயனம் பண்ணுதவன்.
அச்சபறம் - நாணற்புல்.
அச்சபல்லம் - கரடி.
அச்சப்படுத்தல் - பயங்காமுறச் செய்தல்.
அச்சமம் - அளத்துப்புல், முயிற்றுப்பல், முசுறுப்புல்.
அச்சமாடல் - அச்சமுண்டாகப் பேசுகை.
அச்சமின்மை - அபயம், நிர்ப்பயம், வெருவாமை, தருகண்மை, அஞ்சாமை.
அச்சமுள்ளோன் - பயமுடையோன், காதன், காதரன், சிதன், பீதன், பீரு, பீருகன், பீலுகன், சகிதன்.
அச்சம் - அடுப்பு, அணங்கு, அற்றம், உட்கு, உரும், உருகு, உறுகண், கடி, கம்பலை, கலக்கம், கவலை, கொன், கோரம், சூரம், சூர், தரம், நாம், பனி, பனிப்பு, பீதி, பீர், புலம்பு, பயிரவம், பேம், பிறப்பு, வெடி, வெரு, வந்தம், வெருவு, வெறி, வெறுப்பு, கொன், அதிர்ப்பு, பயானகம், அகத்தி, இலேசு, ஈசுரப்புல், ஓரலங்காரம், கடைப்படுதானம் ஏழினென்று. அஃது அச்சத்தானீதல், கரடி, காய்ச்சற்பாஷாணம், கோரைப்புல், சரியொப்பு, தகடு, பயம்பளிங்கு, மகடூஉக்குணம் நான்கில் ஒன்று முன்புறம், பயம், சரியாய்.
அச்சயன் - கடவுள், அழிவில்லாத கடவுள்.
அச்சரசு - அப்சரஸ்திரீ.
அச்சரம் - நாக்கில் உண்டாகும் ஒரு நோய், அட்சரம், எழுத்து, அக்கரம்.
அச்சல் - ஆச்சல், தரம்.
அச்சவபிநயம் - அச்சச்சுவையபிநயம்.
அச்சவாரம் - உறுதிப்பணம்.
அச்சவுபதை - உபதை நான்கனுள் ஒன்று.
அச்சறுக்கை - எச்சரிக்கை, பத்திரம்.
அச்சனூர் - கடவுள்.
அச்சன் - தந்தை, கடவுள்.
அச்சா - மிக்க நன்று.
அச்சாணி-அச்சுருவாணி, கடையாணி.
அச்சாணிமூலி - வேலிப்பருத்தி.
அச்சாரம் - அச்சுகாரம, ஆயத்தபணம, முன்பணம, அச்சகாரம்.
அச்சாப்பொங்கா - பெண்கள் ஆட்டவகை.
அச்சாவாகன் - யாகத்தில் ஹோதாவுக்குத் துணையாயிருப்பவன், அசடன்.
அச்சாறு - ஊறுகாய்.
அச்சானம - அச்சானியம், அஞ்ஞானம்.
அச்சான் - அச்சிலுண்டாம் உருவம்.
அச்சானியம் - தீக்குறி முதலியவற்றால் நேரும மனவிகற்பம்.
அசசி - ஒருதேயம், அகத்திமரம், தாசி, நாயர் சாதிப்பெண், வேசி.
அச்சிக்கை - அஞ்சிக்கை, பயம்.
அச்சித்தினை - ஒருபுல், தினை.
அச்சிறுபிலி - நறுவிலிமரம், இம்மரத்துப் பட்டையிலிருந் தூரித்த நாரால் மைசூர் தேசத்தில் கயிறு திரிக்கப்படுகிறது.
அச்சிமட்டம் - அச்சிதேசத்துச் சிறு குதிரை.
அச்சியந்திரசாலை - அச்சுக்கூடம்.
அச்சியந்திரம் - எழுதாவெழுத்து, எழுத்துப்பதி கருவி.
அச்சியர் - ஆர்யாங்கனைகள்.
அச்சிரக்காலை - முன்பனிக்காலம்.
அச்சிரநாள் - கூதிருமுன்பனியும.
அச்சிரம் - முன்பனிக்காலம்.
அச்சிரவக்காலம் - முன்பனிக்காலம்.
அச்சு - கமபியச்சு, சரியொப்பு, உயிர், உருள் கோத்த மரம், பாரணை, அஞ்சுருவாணி, ஆளத்தி, எந்திர

வச்சு, ஆதாரம், வலிமை, மூல ரூபம், செய்வரம்பு, தென்னுதென்னு வென்று பாடல், அடையாளம், உடல், உயிரெழுத்து, எழுத்து, கட்டளைக்கருவி, தேகம், நெய் வோர் கருவியினொன்று, பண்டி யச்சு, யுகம், அச்சம், புகழ்.

அச்சுக்கட்டி - ஆடையில் அச்சுவேலை செய்வோன், நாட்டுரணவைத்தியன்.

அச்சுக்கட்டு - நெற்பயிரிடும்படியான நிலம், நெய்வார் கருவி வகை.

அச்சுக்கம்பி } துப்பாக்கியில் மருந்து
அச்சுக்கம்பு } கெட்டிக்குங்கோல்.

அச்சுக்கூடம் - அச்சயந்திரசாலை.

அச்சுக்கோக்க - அச்செழுத்துக்களைச் சேர்க்க.

அச்சுதம் - அறுகும் வெள்ளரிசியுங் கூட்டி அணிவது, கெடுதலின்மை, அழிவில்லாதது, அக்கதை, அச்சுதன்.

அச்சுதன், அச்யுதன் - சிவன், அழியாமையுள்ளோன், கடவுள், மூத்தோன், விட்டுணு, விஷ்ணு, கிருமால்.

அச்சுதன்முன்வந்தோன் - பலபத்திரன்

அச்சுதாலி - வாணியருள் ஒரு பகுதியர்.

அச்சுதை - அழிவில்லாதவள், உமாதேவி, பார்வதி.

அச்சுத்தாலி - காசுமாலை.

அச்சுப்பலகை - நெய்வோர் கருவியில் ஒன்று.

அச்சுமாறுதவாதி - அந்தந்தச் சீவனினச்சு, வேறொரு சீவனின் அச்சாகாமல் அந்த அந்த அச்சாகப் பிறந்திறக்கும் என்னும் மதஸ்தன்.

அச்சுரம் - நெருஞ்சில், நெருஞ்சி, முருங்கை.

அச்சுருவாணி - தேரகத்திற் செறிகதிர், அச்சாணி, அச்சு.

அச்சுலக்கை - தூலாவினடுவச்சுமரம்.

அச்சுவகண்டன் - ஒருவிஞ்ஞையன்.

அச்சுவசாத்திரம், அச்சுவசாஸ்திரம் - அசுவசாஸ்திரம், அஸ்வசாஸ்திரம்.

அச்சுவசேனன் - தக்கனென்னும் பாமபின்மகனுகிய ஒருவன்.

அச்சுவதி - அசுவினி, அச்சுவினிகாள், அசுவதி.

அச்சுவத்தம் - அரசமரம, அரசு, அசுவத்தம்.

அச்சுவத்தன் - எட்டா மனுவின்காலத்திலுள்ள எழு முனிவரில் ஒருவன்.

அச்சுவத்தாமன் - அசுவத்தாமா, அசுவத்தாமன்.

அச்சுவத்தாமா - ஒருயானை, ஒருயுத்தவீரன், அசுவத்தாமன்.

அச்சுவ முகாதனம் - கால்மடித்து இரண்டு முழத்தாளினும்முழங்கைகளையூன்றி இரண்டுள்ளங் கைகளையுங்கன்னத்திலே வைத்திருப்பது.

அச்சுவமேதம - அசுவமேதயாகம், அசுவமேதம்.

அச்சுவம் - குதிரை, அசுவம்.

அச்சுவரதன் - சூரியன் தேர் பரிக்குநாகருள் ஒருவன்.

அச்சுவாரி - பழையவரிவகை.

அச்சுவல் - குதிரைச்சாதியாடவன்.

அச்சுவினி - அசுபதி, ஒரு நட்சத்திரம், அசுவினி.

அச்சுவினிகள்
அச்சுவினிகுமாரர்
அச்சுவினிதேவதைகள் } தேவமருத்துவர்.
அச்சுவினிதேவர்

அச்சுவினிநாள் - சென்னி, பரி, புரவி, மருத்துளன், முதலன், யாழ், வாசி, அசுபதி, இரலை, ஏறு, ஐப்பசி.

அச்சுவினிபுத்திரர் - தேவமருத்துவர்.

அச்சுறல் - பயப்படுதல்.

அச்சுறவு - அச்சமடைதல்.

அச்சுறுகொழுந்தெடார் - மாங்களிலிரும்பைத்தைத்து விசையாதபடி கழுத்தில் மாலைபோ லிடுவதொன்று.

அச்சுறுதல் - பயமடைதல்.

அச்சுறுத்தல் - பயமுறுத்தல், பயப்படுதல்.
அச்சுறுத்துதல் - பயப்படுத்துதல்.
அச்சுறை - உடம்பு, உடல்.
அச்சுனிகள் - அச்சுவினிதேவர்.
அச்செண - விரைவாக.
அச்செனல் - விரைவுக்குறிப்பு.
அச்சேறுதல் - அச்சடிக்கப்படுதல்.
அச்சை - பீதிரோகம், பைத்தியம்.
அச்சொடுபுரிதல் - சரி யொப்பாகச் செய்தல், மூலரூபமாகச் செய்தல்.
அச்சோ - அதிசயச்சொல், இரக்கச் சொல்.
அச்சோப்பருவம் - தாய் குழந்தையை அணைக்க அழைக்கும் பருவம்..
அச்சோதம் - காள்மீரத்தி லுள்ள தோர் நதி, ஒரு பொய்கை.
அச்சோதை - ஒரு புண்ணிய நதி.
அச்மர் - ஒரு ஆருடி.
அஸ்தமனம் - அத்தமனம்.
அஸ்தாந்தரம் - பொக்கிஷம்.
அஸ்திசாரபேதி - அதிசாரபேதி.
அஸ்திசூரம் - எலும்புருக்கிசூரம்.
அஸ்திபாரம் - அத்திவாரம்.
அஸ்திரி - உள்வஸ்திரம்.
அஞராட்டி - நோயுள்ளவள்.
அஞர் - அறிவிலார், துன்பம், வருத்தம், நோய், அச்சம், வழுக்குநிலம்.
அஞர்தல் - சோம்புதல்.
அஞலம் அஞல் } கொசுகு, நுளம்பு.
அஞன் - அறிவிலான்.
அஞ்சணங்கம் - பஞ்சவிலக்கணம்.
அஞ்சணங்கியம் - பஞ்சவிலக்கியம்.
அஞ்சகன் - சகுனி புத்திரன்.
அஞ்சதி - காற்று.
அஞ்சத்தான் - பிரமா.
அஞ்சபாதம் - ஒருபுள்ளடி.
அஞ்சப்படுதல் - மதிக்கப்படுதல்.
அஞ்சம் - அம்சம், அன்னப்புள், அஜபாமந்திரம், அமிசம்.
அஞ்சமந்தன் - சூரியன்.
அஞ்சரதன் - பிரமன்.
அஞ்சலப்பெட்டி - அஞ்சறைப்பெட்டி.
அஞ்சலம் - சீலைத்தொங்கல், வாளுறை.
அஞ்சலர் - பகைவர்.
அஞ்சலளித்தல் - அபயங்கொடுத்தல்.
அஞ்சலி, அஞ்ஜலி - அரியெடுப்பு, கைகூப்புகை, இணைக்கை வகை, ஒருவகையம்பு ,ஆடுதின்னுப்பாளை, கும்பிடல், சங்கங்குப்பி, நான்கு பலம், பேதை, மாவிலிங்கை, வண்டுகொல்லி, வந்தனை, வறட்சுண்டி, வெளவால், வாவல், காட்டுப்பலா, கும்பிடு, கும்பிடல்.
அஞ்சலிகாரிகை - ஒருபூடு, சித்திரப்பாவை.
அஞ்சலிகை - வெளவால்.
அஞ்சலிக்கை - கைமுகிழ்த்தல், அஞ்சலி.
அஞ்சலித்தல் - அஞ்சலிசெய்தல், கும்பிடுதல், கைகூப்பல், கைம்முகிழ்த்தல், கைகூப்பித்தொழுதல்.
அஞ்சலிபத்தன் - கூப்பியகையினன்.
அஞ்சலிபந்தனம் - கைகூப்பித்தொழுகை.
அஞ்சலிவந்தனம் - கும்பிட்டு வணங்கல்.
அஞ்சலினவர் - பாஞ்சராத்ரமதத்தோர்.
அஞ்சலோமசம் - அன்னபேதி.
அஞ்சல் - மருளல், வெருவுதல், வெருளல், தபால், சோம்பு, கடியில் மாற்றப்படுவது, கடிதத்தபால், தரங்கல், தரப்பி னெல்லை, தோல்வி, பயப்படுதல், வியங்கோண் முற்று, உட்கல், கலங்கல், பயப்படல், தங்கல்.
அஞ்சவத்தை - ஐந்துநிலை, அவை ஆண்மாவுக்குரிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன.
அஞ்சவாச்சிரமம் - நால்வகைச் சன்னியாசங்களில் ஒன்று.

அஞ்சறைப்பெட்டி - கடுகுமிளகு முதலியனவைக்கும் ஐந்தறை யுள்ள பேழை.

அஞ்சற்காரன் - தபாற்காரன்.

அஞ்சற்குளச்சி - குங்குமபாஷாணம்.

அஞ்சனகிரி - சேடமலை.

அஞ்சனக்கலிக்கம் - அஞ்சனம்பார்க்கக்கண்ணுக்கிடும் ஒருமருந்து.

அஞ்சனக்கல் - கருநிமிளை.

அஞ்சனக்காரன் - மந்திரக்காரன்.

அஞ்சனக்கிரி - நீலமலை.

அஞ்சனக்கோல் - அஞ்சனந் தீட்டுங் கோல்.

அஞ்சனசலாகை - மைதீட்டுங்கோல்.

அஞ்சனசேவோத்தேசனம் - அஞ்சனப்பிரயோகத்திலுல் விளங்குதல்.

அஞ்சனத்திரயம் - மூவிதாஞ்சனம், அவை சோராஞ்சனம், பாதாளாஞ்சனம், பூகாஞ்சனம் என்பன.

அஞ்சனபாஷாணம் - கல்லீயம்,விளவுப்பாஷாணம் முப்பத்திரண்டில் ஒன்று.

அஞ்சனப்பெட்டி - அஞ்சறைப்பெட்டி.

அஞ்சனம், அஞ்ஜநம்- இருள், கறுப்பு, மேற்றிசையானை, ஆணவம், மை, மறை பொருளைக்காட்டும் மை, அஞ்சனவித்தை, கலிக்கம், கருநிறம, நீலக்கல், குற்றம, பாவம், மரவகை.

அஞ்சனவண்ணம் - கருநிறம்.

அஞ்சனவண்ணன் - திருமால், கருநிறத்தையுடையவன்.

அஞ்சனவித்தை - அறுபத்துநான்கு கலைஞானங்களில் ஒன்று, அது மறைந்த பொருளைக் காண்பிப்பது.

அஞ்சனவெற்பு - திருவேங்கடமலை.

அஞ்சனன் - இந்திரன், சனி, விட்டுணு.

அஞ்சனை - சாகுபடி மதிப்பு.

அஞ்சனட்சி - மை தீட்டிய கண்ணுடையாள்.

அஞ்சனைதார் - சாகுபடி மதிப்பிடுபவன்.

அஞ்சனட்சியம்மை - திருக்கற்குடியிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.

அஞ்சனைதேவி - அனுமன்றாய்.

அஞ்சனைலா - கருங்காக்கணம், நீலோற்பலம்.

அஞ்சனைவதி - வடகீழ்த்திசை யானைக்குப் பெண்யானை, வாயுதேவன் மனைவி.

அஞ்சனி - காயா, காணற்புல்.

அஞ்சனேயன் - அனுமான்.

அஞ்சனை, அஞ்ஜநை - அனுமன்றாய், வடதிசை யானைக்குப் பெண்யானை, ஒரு கந்தருவமாது.

அஞ்சனைஜாபிதா - புள்ளிக்கணக்கு.

அஞ்சனைநாமிகாவர்த்தமரோகம் - இமையைப்பற்றிய ரோகபேதங்களுள் ஒன்று.

அஞ்சன் - துவாதசாதித்தருள்ளொருவன்.

அஞ்சாச்சிறப்பு - வாகைத்திணைவிகர்பங்களில் ஒன்று. அதுபகைவர்கண்ணுந் தன்பாலார்கண்ணும் ஒப்புமையாகப் பாசறையுள்ளாச் சால்புடைமை கூறல்.

அஞ்சாணிமூலி - அச்சாணிமூலி.

அஞ்சாப்பட்டயம் - இரட்சண்ணிய பத்திரிகை, எடுத்த உரிமைகளைத் திரும்ப அளித்தற்குரிய சாசனம், அபயநிருபம்.

அஞ்சாமை - திண்மை, பயப்படாமை.

அஞ்சாரப்பெட்டி - அஞ்சறைப்பெட்டி.

அஞ்சாரவிடையர் - ஒருவகையிடையர். இவர்கள் ஸ்திரீகள் கலியாணத்தில் ஐந்தாலியென்னும் கழுத்தணியணிவது வழக்கம்.

அஞ்சாலியிடையர் - இடைச்சாதிப் பிரிவார், அஞ்சாரவிடையர்.

அஞ்சாவிரா - பெருங்குமிழ்.

அஞ்சானனம் - சிங்கம், சிங்கவிராசி, ஐந்துமுகம்.
அஞ்சானனன் - சிவன், ஐந்துமுக முள்ளவன்.
அஞ்சி-எசமானன், அதியமான், தபால்.
அஞ்சிகம் - கண்.
அஞ்சிக்கை - அச்சம், பயம்.
அஞ்சிட்டன் - சூரியன்.
அஞ்சிதமுகம் - வருத்தமாற்றுது இரு தோண்மேல் தலைசாய்த்தல்.
அஞ்சிதம் - உண்டாதல், தலைசாய்த்தல், நல்லறிவு, பூசித்தல், பொருந்தல், வணக்கம்.
அஞ்சிதவணி - தற்குறிப்பலங்காரம்.
அஞ்சித்தல் - பூசித்தல்.
அஞ்சீரம் - அத்தி, அத்திப்பழம்.
அஞ்சு - ஐந்து, ஒளி, பயப்படு.
அஞ்சுகம் - கிளி.
அஞ்சுதல் - பயப்படுதல், அஞ்சல்.
அஞ்சுதகுதல் - அச்சமுண்டாதல்.
அஞ்சுபயம் - குடிகெடுக்க நேரிடுமைந்துவகைப்பட்ட பயங்கள். அவை அரசனாலும், பரிசனராலும், பகைவராலும், கள்வராலும் விலங்குமுதலியஉயிர்களாலும்வருவன.
அஞ்சுமாலி - சூரியன்.
அஞ்சுமான் - சிவாகமமிருபத்தெட்டில் ஒன்று, துவாதசாதித்தரில் ஒருவன், சகரன் பௌத்திரன்.
அஞ்சுருவாணி - அச்சுருவாணி, அச்சாணி.
அஞ்சுவரத்தகுனை - அஞ்சத்தகுவன.
அஞ்சுவர்ணத்தோன் - துத்தநாகம், நெய்த்துக்காரன்.
அஞ்சுவனத்தார் - நெய்வோரின் ஒரு பேதம்.
அஞ்சுவனம் - பஞ்சாகூரம்.
அஞ்சுறல் - பயப்படுதல்.
அஞ்செடுப்பு - ருது ஸ்நானத்தன்று செய்யும் ஓர் சடங்கு.
அஞ்செவி - செவியகம், உட்செவி.
அஞ்செழுத்து - பஞ்சாக்கரம்.
அஞ்ஞ - பள்ளரில் ஒரு வகையர்.

அஞ்ஞதை - அறியாமை.
அஞ்ஞத்துவம் - அஞ்ஞானம்.
அஞ்ஞர் - அறிவிலார். [வன்.
அஞ்ஞன் - அறிவிலான், அறிவில்லாத
அஞ்ஞாதம் - அக்கியாதம், அறியப்படாதது, அஜ்ஞாதம், பிறர் அறியாவண்ணம், மறைவு.
அஞ்ஞாதவாசம் - அக்கியாதவாசம், கரந்துறைதல்.
அஞ்ஞாதவாசி - பிறரால்அறியப்படாதவாசமுடையவன்.
அஞ்ஞாயம் - அநியாயம், அநீதி.
அஞ்ஞானபூமி - பொல்லாத வாசனையாகிய ஏழு பூமி. அவை விந்துசாக்கிரம், மேற்சாக்கிரம, மகாசாக்கிரம், சாக்கிரசொப்பனம், சொப்பனம், சொப்பனசாக்கிரம், சுழுத்தி என்பன.
அஞ்ஞானப்பாறை - கருங்கற்பாறை.
அஞ்ஞானம் - ஞானமின்மை, செய்வதறிவின்மை, அறியாமை, புறச்சமயம், ஞானம் இன்மை, அவிச்சை, அவித்தை, அவிவேகம், அஜ்ஞாநம், மிச்சை, பொய், அறிவு, அக்கியானம், கொய்யறிவு, தெய்வ அறிவின்மை.
அஞ்ஞானவிருத்தி - அஞ்ஞானச்செயல்கள். அவை தமம், மோகம், மகாமோகம், தாமிச்சிரம், அந்ததாமிச்சிரம் என ஐந்துவகைப்படும்.
அஞ்ஞானி - அறிவிலான், புறச்சமயி, அக்கியானி, அறிவீனன்.
அஞ்ஞை - அஞ்ஞானம், அறிவிலான், இலாடத்தானம், தாய், அஞ்ஞானி.
அடகாம்பரி - பதினெட்டாவது மேளகர்த்தா.
அடகு - இலக்கறி, கடன்கோடற்கீடுவைத்தல், அடைவு, கொதுவை, அடைமானம்.
அடக்கம் - அடங்கிய காரியம், அடங்கிய பொருள், உயிரொடுங்கியிருத்தல், ஒடுக்கம், ஒருவகைத் தேன், கருத்து, கருவி, மனவமைதி, மன

அமைதி, அடங்கல், ஒருங்கல், குத்தி, சங்கோசம், நொறில், முணங்கு, முடக்கம், மடங்கு, கீழ்ப்படிவு, பிரேதமடக்குகை, அமைதி, பணி வொழுக்கம், இச்சை யடக்கம், பொறுமை, செறிந்திருக்கை, வாங் கின வீலை, சுருக்குகை, மூர்ச்சை, புதை பொருள், பிரேதச் சேமம், இரகசியம், வாணலகை, பறை வகை.

அடக்கம்பண்ணுதல் - சேமஞ் செய் தல், பி ரே த முதலியவற்றைப் புதைத்தல், மறைத்துவைத்தல்.

அடக்கல் - ஒடுக்கல், கீழ்ப்படியப்பண் ணல்.

அடக்கி - அடக்கமுள்ள ஆள்.

அடக்கியல் - அடக்கியல்வாரம்.

அடக்கியல்வாரம் - அரிதகம்.

அடக்கு - கீழ்ப்படுத்து, குறை.

அடக்குதல் - அடங்கச்செய்தல், கீழ்ப் படுத்துதல், சுருக்குதல், உள்ளடக் குதல், மறைத்தல், புதைத்தல்.

அடக்குமுறை - கண்டித்தடக்குகை.

அடக்குமுறைச்சட்டம் - ஒரு சட்டம்.

அடங்க - முழுவதும்.

அடங்கம் - கடுதீராகிணி.

அடங்கலர் - பகைவர்.

அடங்கலன் - கீழ்ப்படியாதவன், பகை வன், மனமடங்காதவன்.

அடங்கலார் - பகைவர்.

அடங்கலும் - அனைவரும், முழுதும், எல்லாம்.

அடங்கல் - தங்குமிடம், அ டங் க ல் வேலை, சாகுபடிச் சோதனை, சாகு படிக்கணக்கு, செய்யத்தக்கது, ஒரு ங்கு, அமைவு, அடங்குதல், அடக்கம், அமைதல், முழுதும், எல்லாம், குத் தகை, சுருங்கல், சுற்றுவட்டம், லியங்கோண்முற்று, அடங்குகை.

அடங்கவும் - முழுவதும், முழுதும், அடங்கலும்.

அடங்கன்முறை - தேவாரத் திரு முறை ஏழும் அடங்கிய ஒரு புத் தகம். இதனுள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் செய்தருளிய தேவாரத் திருப்பதிகம் 384-ம், திருநாவுக்கரசு நாயனார் செய் தருளிய தேவாரத்திற்குப் பதிகம் 312-ம், சுந்தரமூர்த்தி நாயனார் செய்தருளிய தேவாரத் திருப் பதிகம் 101-ம் அடங்கும் தேவா ரம்.

அடங்காதோர் - பகைவர்.

அடங்காப் பற்று - அரசனுடனையை மீறுவோரிருக்கும் ஊர்.

அடங்காப்பிடாரி - எவர்க்குமடங்காத வள்.

அடங்காமாரி - அடங்காப்பிடாரி, ஒருவருக்குங் கீழ்ப்படியா து முரணி நடப்பவள், விடாமழை.

அடங்காமை - கீழ்ப்படியாமை, மனோ வாக்குக் காயங்களடங்காது தீ நெறிக்கட்செல்லுதல்.

அடங்கார் - பகைவர்.

அடங்காவாரிதி - ஓலிமாறாச் சமுத் திரம், கடலுப்பு, மூத்திரம்.

அடங்கிடம் - அழிந்தொடுங்குமிடம்.

அடங்கு - அடங்குதல்.

அடங்குதல் - நின்றுபோதல், படிதல், மறைதல், அமைதல், ஒடுங்குதல், உள்ளாகுதல், உறங்குதல், சினை யாதல், சுருங்குதல், அடங்கல், வெளிப்படாது மனத்தினுள்ளே அடங்குதல், கீழ்ப்படிதல்.

அடசல் அடசுதல் } அடையப்பண்ணுதல், செறிதல், சிறிது விலகுதல்.

அடஞ்சாத்தித்தல் - எதிரிடை பண் ணுதல், வன்மங் கொள்ளுதல்.

அடடா - ஓரதிசயக் குறிப்பு, தனக் குக் கீழ்ப்பட்ட ஒருவனை விளிக் கும் ஒரு சொல், இகழ்ச்சிக் குறிப்பு. இரக்கக் குறிப்பு.

அடதாளம்-சத்த தாளங்களில் ஒன்று.

அடத்தி - கரகு, வாசி, மொத்த வியா பாரம்.

அடகம் - அலைந்து திரிதல், போதல்.
அடகு - வில்நுனி.
அடக்காளம் - அடகாளம்.
அடக்கை - ஒரு தாளம்.
அடப்பங்கொடி - அடம்பங்கொடி.
அடப்பம் - ஈரவிதன் கருவிப்பை, வெற்றிலைப்பை, சாமான்பை, அடைப்பம்.
அடப்பம்விதை - வாதுமைப் பருப்பு.
அடப்பனூர் - நெய்தற்றலைவனது பட்டப் பெயர்.
அடப்பன் - கடம்பு, பரதர், பட்டப் பெயர், அடப்பனூர், கடப்பமரம்.
அடப்பிரதீபிகை - அடயோகத்தை விளக்கும் ஒரு வடநூல்.
அடமானம் - அடகு, ஈடு, கடன், அடைமானம், பிணை.
அடம் - கொட்டைப்பாசி, ஈனம், சஞ்சாரம், ஹடம், பிடிவாதம், பொல்லாங்கு, போகுதல், மர்மம்.
அடம்பங்கொடி - ஒருபூக்கொடி.
அடம்பண்ணல் - தீங்கு செய்தல்.
அடம்பாரம் - இடமபம், பரப்பம், பிரபல்லியம், முழுதும்.
அடம்பு - அடம்பங்கொடி, அடம்பம்பூ, அடப்பமரம், ஆட்டுக்காலடம்பு, மானகுளம்படம்பு, பாலிகை.
அடயோகம் - நால்வகை யோகங்களில் ஒன்று, அது ஒற்றைக்காலினிற்றல், தலைகீழாகத் தூங்கிப் புகை சுவாசித்தல், கையுயர்த்தி நிற்றல், முதலிய பிரயாசைச்செயல்களோடு செய்யப்படுவது, யோகவகை.
அடரடிபடரடி - முற்றும் மழிக்கை, பெருங்குழப்பம்.
அடரார் - பகைவர்.
அடரொலி - அதட்டல், அதிர்த்தல், தெழித்தல், உறைத்தல், உரப்பல்.
அடர் - அடரென்னேவல், செறிவு, தகடு, நெருக்குகை, நெருங்கு, வருத்துகை, பூவிதழ், பொருந்தென்னுமேவல், பொருதென்னுமேவல்.
அடர்சோளம் - ஒருவித சோளம்.
அடர்ச்சி - நெருக்கம்.
அடர்தல் - நெருங்கல், புடைத்தல், போர் புரிதல், தட்டியுருவாக்குதல், நெருங்கல், பொருதல், செறிதல்.
அடர்த்தல் - தாக்குதல், கொல்லுதல், கெடுத்தல், நெருக்கல், வருத்துதல், பொருதல், போர்புரிதல், அமுக்குதல்.
அடர்த்தி - நெருக்கம்.
அடர்ந்தேற்றம் - கொடுமை, நெருக்கிடை.
அடர்ந்தேற்றி - இட்டேற்றம், நெருக்கம், அடர்ந்தேற்றம்.
அடர்பு - செறிவு, நெருக்கம், வினையெச்சம்.
அடர்ப்பம் - நெருக்கம்.
அடர்ப்பு - நெருக்கம், போர்.
அடர்வு - அடர்பு.
அடலம் - மாறுமை, விசாரமடையாமை.
அடலார் - பகைவர், போர்வீரர்.
அடலி - வெள்ளாட்டி.
அடலை - சாம்பல், பற்பம், போர், வியூகி, போர்க்களம், மாறுமை, துன்பம்.
அடலைமுடலை - வீண்வார்த்தை.
அடல் - கொல்லுதல், போர், சமைத்தல், பொருதல், வலி, வியங்கோண்முற்று, வெற்றி, கொல்லுகை, வலிமை, மீன்வகை, அடுதல்.
அடவாதி - பிடிவாதக்காரன்.
அடவி - காடு, கூட்டம், சோலை, மிகுதி, நந்தவனம்.
அடவிகன் - வனவாசி.
அடவிக்கச்சோலம் - ஒரு சரக்கு.
அடவிசரர் - வேடர்.
அடவிச்சொல் - கோரோசனை.
அடவியன் - பனையோலைக்கண்ணாடி, ஈர்க்கு, துடைப்பம், வாரணை.
அடவியில்திருடி - சதுரக்கள்ளி.
அடலை - கடல்மீன்வகை.
அடவியீ - ஒருவகைக்கீடம்.

அடனம் - அலைந்துதிரிதல், போகுதல்.
அடா - ஓரதிசயக்கிளவி, கீழ்மகளே விளிக்கும் ஒரு சொல்.
அடாசனி - ஆரை, புளியாரை.
அடாசு - மட்கிச் செத்தது, மட்கின பொருள்.
அடாசுதல் - திணித்தல், விலக்குதல்.
அடாஞை - ஓரிராகம்.
அடாதது - தகாதது.
அடாது - அடாதது.
அடாதுடி - சீம்பு.
அடாத்தியம் - அடாதது, பொருந்தாதது, முறைகேடானது.
அடாத்து - தகாதது, பொருந்தாதது, முறைகேடானது, வலாற்காரம், அகாரணம்.
அடாப்பழி - தகாத நிந்தை.
அடாபிடி - அடாவடி.
அடார் - புலிமுதலியவைகளை அகப்படுத்தும் பொறியாகிய கல்லடார்.
அடாவடி - கொடுஞ்செயல்.
அடாவத்தி - அதியாயம், இட்டேற்றம், துன்பம்.
அடாற்காரம் - வலாற்காரம்.
அடி - சாக்கு, பாதம், அடியளவு, காற்றடம், அடிப்பீடம், கொல்லுதல், மூலம், பழைமை, இடம், வையாளி வீதி, சூதாடுவோர் குழு உக்குறியிலொன்று, மதுபானம், ஐசுவரியம், சமீபம், உபாயம், முன், வம்சவழி, கீழ், அடியென்னேவல், அடியோர், ஆதி, ஓரளவு, கடவுள், கால், கற்சுவடு, கீழ்மகளை விளிக்குஞ்சொல், செய்யுளுறுப்பிலொன்று, தாது, மோது, வமிசமூலம், வீசு.
அடிகனமார் - சமணருள் ஆசிரியராய் நின்றவர்களைக் குறிக்கும் ஒரு சிறப்புப்பெயர், சமணசாரியர்.
அடிகள் - குருக்கள், கடவுள், குரு, தலைவன், தலைவி, முனிவர், மூத்தோன், பெரியோர், மூத்தோர், பெருமாட்டி.
அடிகாசு - பழைய வரிவகை.
அடிகாற்று - பெருங்காற்று.
அடிகொள்ளல் - தொடங்கல்.
அடிகோலல் - அஸ்திவாரம்போடல், முபலல்.
அடிகோலுதல் - அஸ்திவாரமிடுதல்.
அடிக்கடி - திரும்பத் திரும்ப, பல முறை, அடிபெயர்க்குந்தோறும்.
அடிக்கணை - கணைக்கால்.
அடிக்கயில் - தேங்காயின் அடிப்பாகம்.
அடிக்கழிவு - முறைக்கேடு.
அடிக்கனம் - களத்திற் சிதறிக்கிடக்கும் தானியம.
அடிக்காயம் - அடியால் உண்டான ரணம்.
அடிக்கீழ்ப்படுத்தல் - அடக்கி நடத்தல், ஆண்டுகொள்ளல்.
அடிக்குச்சி - அளவுகோல்.
அடிக்குடி - அடிச்சேரி, அடிக்குழல்.
அடிக்குடில் - அடிச்சேரி, வேடரிருக்குமூர், அடிமைக்குலம், நகர்ப்புறம், வைகுந்தம், சமீபகிராமம்.
அடிக்குள் - உடனே, அருகில், மிகுவிரைவில்.
அடிக்கொருக்க - அடிக்கொருக்கால்.
அடிக்கொருக்கால் - அடிக்கடி.
அடிக்கொள்ளுதல் - தொடக்கம்பண்ணுதல், உற்பவித்தல்.
அடிக்கோல் - அளவுகோல்.
அடிக்கோலுதல் - ஆரம்பித்தல், இடம்பிடித்தல், அஸ்திவாரமிடுதல்.
அடிசாய்தல் - அடியின் நிழல் சாய்தல்.
அடிசில் - சோறு, உணவு, உண்டி, அடப்படுவது, போனகம், மூரல், அமலை, அயினி, பொம்மல், மடை, மிசை, உணு, புழுக்கல், வல்சி, பாளிதம், அன்னம், பதம், மிதவை, பாத்து, தற்று, சருசொன்றி, புண்கம், அசனம், ஊண், கூழ்,

ஓதனம், புகா, அவி, பவி, அமிழ்து, புற்கை, நிமிரல், கவளம்.

அடிசிற்சாலே - அன்னசத்திரம்.

அடிசிற்றளி - மடைப்பள்ளி.

அடிச்சால் - உழவின் முதற்சால்.

அடிச்சி - அடியாள், அடியவள்.

அடிச்சியர் - குற்றேவல் செய்யும் பெண்கள்.

அடிச்சிரட்டை - தேங்காயின் அடிக் கொட்டாங்கச்சி.

அடிச்சீப்பு - முதற்சீப்பு.

அடிச்சுவடு - காற்சுவடு, அடித்தடம்.

அடிச்சூடு - காலடியிற்சுடுதல்.

அடிச்சேரி - அடிக்குடில், கிராமம், அடிக்குதல்.

அடிச்சேரியாள்-குச்சுக்காரி, பரத்தை.

அடிஞானம் - சிவஞானம்.

அடிதடி - சண்டை.

அடிதண்டம் - தலையெடுக்கவொட்டாத அடி, அடிதண்டனை.

அடிதண்டா - மண்வெட்டி.

அடிதலை - அடிமுடி, ஆதியந்தம், வரலாறு, கீழ்மேல்.

அடிதலைதடுமாற்றம் ஆதியந்தந் தெரியாது தடுமாறுதல்.

அடிதல் - அடிபடுதல்.

அடிதொறும் - அடிதோறும்.

அடிதோறும் - அடிக்கடி.

அடித்தலம் - அத்திவாரம், அஸ்திவாரம், பாதம், கால், கீழிடம்.

அடித்தல் - அகைத்தல், எறிதல், எற்றல், குத்தல், கொட்டல், மொத்தல், மோதல், வழுக்கல், மொக்கல், தாக்கல், துவைத்தல், வண்டியிற் கொண்டுவருதல், நீக்கிவிடுதல், செயித்துப்பெறுதல், எந்திரத்தால் தைத்தல், அடிக்குதல், வீசுதல், சிறகடித்தல், துடித்தல், விளையாடுதல், பெருகுதல், புடைத்தல், தாக்குதல், ஆணி அறைதல், கட்டுதல், முத்திரை முதலியன பதித்தல், தண்டித்தல், தோற்கடித்தல், கொல்லுதல், அதுக்கல், அறைதல்.

அடித்தழும்பு - காற்சுவடு, அடிபட்ட தழும்பு.

அடித்தளம் - அத்திவாரம், வீட்டினிற் பரப்பு, பேஸ்துமட்டம். அடிவரிசை.

அடித்தாறு - பாதரேகை.

அடித்தி - அடிச்சி, வியாபாரப் பிரதிநிதி.

அடித்திகம் - அசுவகந்தி, அமுக்கிரா.

அடித்திப்பை - ஆதாரம்.

அடித்தூறு - மரத்தின் அடிக்கட்டை.

அடித்தேறு - அரீதி.

அடித்தொழில் - குற்றேவல்.

அடித்தோழி - தலைமைத்தோழி.

அடிநகர்தல்-இடம்விட்டுப் பெயர்தல்.

அடிநா - நாவினடி.

அடிநாள் - ஆதிகாலம்.

அடிநிலை - மரவடி.

அடிநிலம் - அடிப்பக்கம், அடியிடம்.

அடிநிழலார் - குடிகள்.

அடிநீறு - பாததூளி.

அடிபடல் } எட்டுதல், அழுந்துதல்,
அடிபடுதல் } செலவழித்தல், அடிக்கப்படுதல், நீக்கப்படுதல், தாக்குண்ணுதல், வழங்குதல், தோற்றல்.

அடிபணிதல் - தண்டனிடுதல், நமஸ்காரஞ் செய்தல்.

அடிபார்த்தல் - ஏதுபார்த்தல்.

அடிபாடு மாடுமுதலியவற்றின் உழைப்பு.

அடிபிடி - சண்டை.

அடிபிடித்தல் - ஏதுப்பிடித்தல், கறிமுதலியசுண்டல், முதற்பிடித்தல்.

அடிபெயர்தல் - விலகுதல்.

அடிப்படர்தல் - கீழ்ப்பரவுதல், இசைந்து வருதல்.

அடிப்படல் - கீழ்ப்படிதல், கீழ்ப்படையிலிருத்தல், கீழ்ப்படுதல், அமைதல், பாதத்தின் கீழ்ப்படுதல்.

அடிப்படுதல் - அமைதல், அடிச்சுவடுபடுதல், கீழ்ப்படிதல், பழகுதல், பழமையாக வருதல்.

அடிப்படுத்தல் - கீழ்ப்படுத்தல்.
அடிப்படுத்துதல் - கீழமைத்தல்.
அடிப்படை - ஆதாரம், ஆதாரமாக அடியிற்கிடப்பது, பிரதானசேனை, அடித்தளம்.
அடிப்பட்டகாந்தி - தீமுறுகற் பாஷாணம்.
அடிப்பட்டசாந்தி - மகாசாந்தம்.
அடிப்பட்ட சான்றோர் - பரம்பரைப் பெரியோர், இது சைவபரிபாஷை.
அடிப்பட்டவன் - பழகினவன், தோற்றவன்.
அடிப்பணி - குற்றேவல்.
அடிப்பதறல் - நிலைகுலைதல், கானடுங்கல்.
அடிப்பதறுதல் - நிலைதவறுதல், மனங் கலங்குதல்.
அடிப்பந்தி - முதற்பந்தி.
அடிப்பலம் - முதற்பலன், மூலபலம், ஆதாரவலிமை.
அடிப்பலன் - முதற்பயன்.
அடிப்பற்றல் - அடிப்பற்றுதல்.
அடிப்பற்று - சோறுமுதலிய பாண்டத்திற் பற்றுகை, பாறையுப்பு.
அடிப்பற்றுதல் - கறிமுதலிய பாண்டத்திற் சுண்டுதல்.
அடிப்பாடு - வரலாறு, பழக்கம், வழி, உறுதியான நிலை, அடிச்சுவடு, வழக்கு, பாதை.
அடிப்பாய்தல் - ஒருவிளையாட்டு, தாண்டுதல், தாவிக்குதித்தல்.
அடிப்பாரம் - அஸ்திபாரம், அடியிலுள்ள கனம், சிரங்கின் புடைப்பு.
அடிப்பார்த்தல்- நிழலளந்து பொழுது குறித்தல், யோசித்தல்.
அடிப்பிச்சை - சிறு மூலதனம்.
அடிப்பிடித்தல்-அடிப்பற்றுதல், குறிப்பறிதல், தட்டிமுடைதல், பின்தொடர்தல்.
அடிப்பினை - வங்கமணல், வங்கம்.
அடிப்புக்கூலி - கதிரடிக்குங் கூலி.
அடிப்போடல் } இடம்பண்ணுதல்,
அடிப்போடுதல் } தொடங்குதல்.
அடிமடக்கு - சித்திரக்கவியில் ஒன்று, பாதமடக்கு.
அடிமடி - உள்மடி.
அடிமடை - உள்மடை, முதல்மடை, முதன்மடை.
அடிமண் - கீழ்மண்.
அடிமனை - ஆதாரம்.
அடிமயக்கு - பாதமயக்கு.
அடிமறி - எண்வகைப்பொருள் கோளிலொன்றாகிய அடிமறி மாற்று.
அடிமறிமண்டிலம் - அகவற்பாக்களுள் ஒன்று.
அடிமறிமண்டிலவாசிரியப்பா - அகவற்பாவினுள் ஒன்று, அஃது எல்லாவடியும் அளவொத்து எவ்வடியை முதல் நடு இறுதி ஆகக் கொள்ளினும், ஓசையும் பொருளும் வழுவாது நிற்பது, ஒருவகையாசிரியப்பா.
அடிமறிமண்டிலவாசிரியம் - அடிமறி மண்டிலமென்னும் வகைப்பட்ட ஆசிரியப்பா.
அடிமறிமாற்று - பொருள்கோள் எட்டினுள் ஒன்று.
அடிமறிமாற்றுப்பொருள் கோள் - பொருள்கோள் எட்டினுள் ஒன்று. அது யாதானும் ஓரடியை இறுதி நடுமுதல்களில் வேண்டிய விடத்துக்குக் கூட்டிப் பொருளிசை மாட்சி மாறாது பொருள்கொள்வது (உ-ம்) "அலைப்பான் பிறிதுயிரையாக்கலுங் குற்றம். வினைப்பாலிற்கொண் டீன்மிசைதலுங் குற்றஞ், சொலற்பாலவல்லாத சொல்லலுங்குற்றங், கொலற்பாலுங்குற்றமேயாம்" இதனை மாறிக்காண்க.
அடிமறிமொழிமாற்றுப் பொருள் கோள் - பொருள்கோள் எட்டினுள் ஒன்று. அஃது அடிகளை

யேற்புழிக் கூட்டிப் பொருள் கொள்வது (உ-ம்) "படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார் நடு வன்மை நாணுபவர்" என்பதனுள் நடுவன்மை நாணுபவர் படுபயன் வெஃகிப் பழிபடுவசெய்யார் எனக் கூட்டிக் காண்க.

அடிமனை - சுற்றுச்சுவர்.

அடிமாடு - கொல்லுவதற்குரியமாடு.

அடிமுகனை - துவக்கம்.

அடிமுடி - ஆதியந்தம், காலுந்தலையும், கீழ்மேல், வரலாறு.

அடிமுதல் - எழுவாய், மோனை, ஆதி, பூர்வம், தலைத்தாழ்.

அடிமுதன்மடக்கு - ஆதி மடக்கென்னுஞ் சொல்லலங்காரம்.

அடிமுந்தி - அடிமுன்றானை.

அடிமுரண்டொடை - அடிதோறு முதற்கட் சொல்லேனும் பொருளேனும் மறுதலைப்பட்டு வருவது. (உ-ம்) "இருள்பரந்தன்னமா நீர் மருங்கி னிலவுகுவித்தன்ன வெண் மணலொருசிறை - இரும்பினன் னகருங் கோட்டுப்புன்னை -பொன் னினன்ன நுண்டாதிறைக் குஞ் சிறு குடிப்பரதவர்மடமகள் - பெருமதர் மழைக்கணுமுடையவா லணங்கே."

அடிமுன்றானை - சேலையின் உள்முகப்பு.

அடிமை - சிறை, தொண்டானவன், தொண்டு, தொண்டன், ஆள், கிணகர், சேடர், தாசர், தொத்து, தொழும்பர், தொழும்பு, தொறுவு, பிருத்தியர், விருத்தி, தாதர், தாதி, தாசி.

அடிமைகொள்ளல் - அடிமையாக்கல்.

அடிமைபூணல் - அடிமையாதல்.

அடிமைப்படல் - தொண்டுபூணுதல், அடிமைப்பூணல்.

அடிமைப்படுத்தல்- அடிமையாக்குதல்.

அடிமைப்பத்திரம் - தொண்டுச்சீட்டு, அடிமையோலை.

அடிமையோலை - அடிமைப்பத்திரம், அவணவோலை, முறி.

அடிமோனைத்தொடை -அடிதோறு முதலெழுத்தொன்றி வருவது.

அடிம்பு - சிவதை.

அடியடியாக - தலைமுறை தலைமுறையாக.

அடியநாதி - தொன்றுதொட்டுள்ள காலம்.

அடியந்தாதி - நின்றபாட்டினீற்றடி வரும்பாட்டின் முதலடியாகப் பாடல்.

அடியந்திரம் - கல்யாண முதலிய விசேடம்.

அடியர் - தொண்டுசெய்வோர்.

அடியல் - சொரிதல் (உ-ம்) கதிரடித்தது, தொடர்.

அடியவர் - தொண்டர், அடியார், அடியர்.

அடியவன் - அடிமையானவன், அடிமையாள், பக்தன்.

அடியளவைத்தொடை - அடிதோறுமுதன் மொழிக்கண் அளபெடுத்து வருவது.

அடியறிதல் - மூலகாரணந்தெரிதல்.

அடியறுதல் - மூலமறுதல்.

அடியறுக்கி - மட்கலமறுக்குங் கருவி.

அடியனுதி - தொன்றுதொட்டுள்ளது.

அடியனேன் - அடியேன்.

அடியார் - அடிமைகள், தொண்டர்.

அடியாள் - அடிமைபூண்டவள்.

அடியாறு - தொன்றுதொட்ட வரலாறு.

அடியான் - எவலாளன், வேலைக்காரன், தொண்டன், பண்ணையாள்.

அடியிடுதல் - தொடங்குதல்.

அடியினைபுத்தொடை - அடியிணை முதிதோறுநின்ற எழுத்தேனுஞ் சொல்லேனும் ஒன்றிவருவது.

அடியீடு - ஆரம்பம், தொடக்கம்.

அடியீரல் - மண்ணீரல்.

அடியுணி - அடிபட்டவன்.

அடியுண்ணல் - அடிபடுதல், திரிதல்.
அடியுரம் - அடிப்பலம், அத்திபாரம், பிதுரார்ஜித சொத்து, சக்தி, சேம தானியம், முன்பு இட்ட எரு.
அடியுறை - பாதகாணிக்கை.
அடியெதுகைத்தொடை-அடிதோறும் இரண்டாமெழுத்துஒன்றிவருவது.
அடியேந்திரம் - அடியந்திரம்.
அடியேபிடித்து - ஆதியிலிருந்து.
அடியேன் - தொண்டனுகிய நான்.
அடியொட்டி - நிலத்திலே நட்டுவைக் கப்படுகிற ஒருவகை யூசி.
அடியொற்றுதல் - பின்பற்றுதல்.
அடியோடி - அடிமை.
அடியோடு - முழுவதும்.
அடியோட்டி - யுத்தகருவியில் ஒன்று.
அடியோர் - பிறர்க்குக் குற்றேவல் செய்வோர்.
அடியோன் - அடியான்.
அடிலவோடாகம் - ஒரு செடி.
அடிவட்டம் - பாதவளவு, நாகசுரத் தின் அடிப்பூண்.
அடிவயிறு - கீழ்வயிறு.
அடிவரலாறு - காரணம், தொடக்கம், வமிசவரலாறு, பழைய வரலாறு.
அடிவருடல் - கால்பிடித்தல்.
அடிவரையறை - அடியாறு.
அடிவாரம் - மலைச்சாரல், மலையினடி.
அடிவாறு - அடியாறு.
அடிவானம் - அடைக்கலக்குருவி, திகந்தம், திகாந்தம், கீழ்வானம், அஸ்திவாரம்.
அடிவிடுதல் - பாண்டங்களின் அடிப் பொருத்துவிடுதல், அடி விரிதல்.
அடிவிரிதல்
அடிவிள்ளல்
அடிவிள்ளுதல்
} அடிவிடுதல்.
அடிவீழ்ச்சி - வணங்குதல், தண்டனி டுதல், வணங்கல், வணக்கம், தண்டனிடுதல்.
அடிவீழ்தல் - வணக்கம், வணங்கல்.
அடிவெண்குருத்து - முருந்து, முருத்து.
அடிவைத்தல்-ஆரம்பித்தல்,தொடங்கு தல், தலையிடல்,நடக்கத்தொடங்கல்.
அடு - தீயிற் பாகமாக்கு, சேர், சமை, அழி, கிட்டு, சேர்ந்திரு, சார், உரி யதாகு, சம்பவி.
அடுகலம்-பாகஞ் செய்யும் பாத்திரம்.
அடுகலன் - அடுகலம்.
அடுகளம் - போர்க்களம், யுத்த பூமி.
அடுகனலவன் - சங்காரத் தொழிற் செய்யுங் காலாக்கினி ருத்திரன்.
அடுகிடை - எழும்பாதகிடை, பிரியா தடித்துக்கொள்ளுதல்.
அடுகுறல் - கொல்லுதல். [அடுதல்.
அடுகை-கொல்லுதல், பாகஞ்செய்தல்,
அடுகைமனை - மடைப்பள்ளி.
அடுக்கணி-ஓரலங்காரம். அது சொல் லும் பொருளும் அடக்கி வருவது.
அடுக்கம் - அடுக்கு, வரிசை, மலைச் சாரல், அரைமலை, செரிந்த சோலை, பக்கமலை, மலைப்பக்கம்.
அடுக்கலரி - இரட்டை யலரி.
அடுக்கலிடல் - நெல்லை இரண்டா முறை குற்றல்.
அடுக்கல் - ஒன்றன் மேலொன்று வைத்தல், குவித்தல், தொடுத்தல், மலை, வியங்கோண்முற்று, அடுக்கு.
அடுக்களை - அட்டில், மடைப்பள்ளி, பாகசாலை, சமையலறை.
அடுக்காலாத்தி - அடுக்குத் தீபம்.
அடுக்கானகன்னி - சரியானவன், பவ ளப்புற்றுப் பாஷாணம்.
அடுக்கியல் - வண்ணகவொத்தாழி சைக் கலிப்பாவின் உறுப்புக்களுன் ஒன்றுகிய வராகம், அராகம்.
அடுக்கு - வரிசை, அடுக்கப்பட்டது, அணியம், ஒழுங்கு, சிரேணி, சேர் மானம், பத்ததி, பலவின் கூட்டம், அடுக்குப் பாத்திரம், அடுக்குத் தொடர், செழிப்பு, தூலடுக்கு.
அடுக்குகை - அடுக்குதல்.
அடுக்குச்சட்டி - அடுக்குப்பானை.
அடுக்குச்செவ்வரத்தை - அடுக்காக மலருள்ள செவ்வரத்தை.

அடுக்குதல் - ஒன்றன்மேலொன்று வைத்தல், வரிசைப்பட வைத்தல், அடுக்கல், ஏற்றல்.

அடுக்குத்தீபம்-அடுக்குவிளக்கு, ஆலயதீப வகை.

அடுக்குத் தும்பை - காசித் தும்பை.

அடுக்குத்தொடர்-ஒரு மொழியே பல முறை அடுக்கி வருவது. அஃது அசை நிலையினும், பொருணிலையிலும் இசைநிறையினும், இரண்டு முதல் நான்களவும் அடுக்கி வரும் (உ-ம்) அன்றே யன்றே அசைநிலை, தீதீதீ பொருணிலை, வருகவருக வருக வருக இசைநிறை.

அடுக்குப்பண்ணல் - ஆயத்தஞ் செய்தல்.

அடுக்குப் பருத்தி - பருத்தி வகை.

அடுக்குப்பார்த்தல் - ஒத்திக்கை பார்த்தல்.

அடுக்குப்பானை - அடுக்குச்சட்டி.

அடுக்குமல்லிகை - ஒரு மல்லிகை.

அடுக்குமுள்ளி - ஒருபூண்டு, முள்ளி, பூடுவகை.

அடுக்குமெத்தை - பஞ்சை, ஒன்றன் மேலொன்றான உப்பரிகை.

அடுக்கூமத்தை - ஒருவகை யூமத்தை.

அடுக்குவாகை - வாகை.

அடுக்குள் - அறைக்குள்ளறை, சமையலறை.

அடுங்குன்றம் - யானை.

அடுசில் - அடிசில்.

அடுசிலேக்காரம் - செந்நாயுருவி.

அடுட்டன் - மலைநாட்டு அம்பட்டன்.

அடுதல் - உண்டுபண்ணுதல், கொல்லல், சமைத்தல், மேற்கொள்ளல், காய்ச்சுதல், உருக்குதல், குற்றுதல், வெல்லுதல், வருந்துதல், அழித்தல், கொல்லுதல்.

அடுத்த - சரியான, நெருங்கின.

அடுத்தடுத்து - ஒன்றன்மேலொன்று, அடிக்கடி.

அடுத்தமுறை - நெருங்கின உறவு, மறுதடவை.

அடுத்தல் - கிட்டல், சம்பவித்தல், சார்தல், சேர்த்தல், சமீபமாதல், ஏற்றதாதல், கூத்தாடுதல், கிட்டுதல், ஆதாரமாகப் பற்றுதல், கொடுத்தல், அமுக்குதல், ஒப்புவித்தல், சேர்தல்.

அடுத்தார் - சேர்ந்தார்.

அடுத்தாள் - உதவியாள்.

அடுத்தி - வட்டி, வாசி.

அடுத்து - மென்மேல்.

அடுத்துமுயல்தல் - இடையறாது முயலுதல்.

அடுத்துவரல் - அடிக்கடி வருதல், நெருங்கி வருதல்.

அடுத்தூண்-சீவனத்துக்குவிட்டநிலம்

அடுத்தேறு - மிகை.

அடுதை - கொல்வாய் என்னும் முன்னிலை வினை.

அடுப்பங்கரை - அடுக்களை, அடுப்பின் பக்கம், சமையலறை, அடுப்பங்கடை.

அடுப்பாங்கரை - அடுப்பங்கரை.

அடுப்பு - அச்சம், சேர்க்கை, தீவாய்த்தானம், பரணிநாள், நெருப்பின் இருக்கை, உத்தானம், காமரம், குமுதம், சுபாலிகை, சுல்லி, சோபாலிகை, மணலை, நிறை, ஒற்றையடுப்பு, கூளையடுப்பு, இரட்டையடுப்பு, கரியடுப்பு, இரும்படுப்பு, காளவாயடுப்பு, வெள்ளாவி அடுப்பு எனப் பலவகைப்படும். அடுத்திடல், அடுப்பனல், மனைவி, சேர்கை, நிரை.

அடுப்புக்கரி - அடுப்பிலெரிந்த கரி, மரக்கரி.

அடுப்புக்கும்பி - அடுப்பு நீறு.

அடுப்பு - அடப்பங்கொடி, அடம்பு.

அடுவல் - வரகும் நெல்லுங் கலப்பு.

அடே - அடா!

அடேயப்பா - ஆச்சரியக்குறிப்பு.

அடை - அடுத்தல், பொருந்துகை, சேர்ப்பிக்கை, அடைக்கலம், அடைக்கலப் பொருள், ஒரு பணிகாரம், வெற்றிலை, இலைக்கறி,

அடைகாக்கை, தாங்கி, கரை, வழி, வில, விசேடணம், பண்பு, நிலவரி, காப்புச் செய், அப்பவர்க்கம், அபயம், விசேஷணம், அடுத்தல், அடைகவ்வாயம், அடைகிடத்தல், அடையென்னேவல், அப்பவருக்கம், இலை, உவமை, கனம், கொதுவை, சேரென் னேவல், தோசை, நிலவிறை, மூல, வினை முற்று, அவயம், பெறு, சேரு, ஒதுங்கு, படி, தூரு, சார்த்து, பூட்டு, உள்ளிடு, கா, தூர், தடு, மறி, மறியல் செய்.

அடைகட்டி - அடைமண்.

அடைகலம் - சேமக்கலம்.

அடைகல்-கம்மப்பட்டடை, மதகடைக்குங்கல், பட்டடை, ஆதாரச்சிலை.

அடைகாத்தல் - அடைகிடத்தல்.

அடைகாய் - ஊறுகாய், வெற்றிலைப் பாக்கு.

அடைகிடத்தல் - குஞ்சு பிறப்பிக்க முட்டையைக் காத்தல், நீங்காதிருத்தல், தங்கியிருத்தல், அடைகாத்தல்.

அடைகியாழம் - அடை கிவ்யாயம்.

அடைகுடி - சார்ந்த குடும்பம்.

அடைகுதல் - அடைதல்.

அடைகுளம்- வாய்க்காலில்லாக்குளம்.

அடைகுறடு - கம்மப்பட்டடை, கம்மியர் பட்டடை, பற்றுக்குறடு.

அடைகை - நெருங்குகை, பெறுகை.

அடைகொடுத்தல் - நிலவிளைவில் ஒரு பங்கை அரசனுக்குக் கொடுத்தல்.

அடைகொளி - அடை மொழியைக் கொள்ளுதலுடையது, விசேடியம்.

அடைகோட்டை - வெளிப்போகப் பெறுததடையையுடையகோட்டை.

அடைகோழி - அடை காக்குங் கோழி, அவயக் கோழி.

அடைக்கண் - ஒரு கண்வியாதி.

அடைக்கத்து - அடை கிடக்குங் கோழியிடுஞ் சத்தம்.

அடைக்கலக்குருவி - ஊர்க்குருவி.

அடைக்கலங்காத்தல் - அடைக்கலப் பொருளைக் காத்தல், அடைக்கலம் புகுந்தவனைக் காத்தல்.

அடைக்கலங்குருவி - ஊர்க்குருவி.

அடைக்கலப்பொருள் - அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள்.

அடைக்கலம் - கையடை, இல்லடை, அடைக்கலப்பொருள், மறை, தஞ்சம், சரண், அபயம், சரண்புகல், புகலிடம், சரணம்.

அடைக்கலம்புகுதல் - சரணம், சரண் புகுதல், மறைப்புகல்.

அடைக்கலாங்குருவி - அடைக்கலக் குருவி, ஊர்க்குருவி, அடைக்கலான் குருவி.

அடைக்காய் - தாம்பூலம், வெற்றிலை, பாக்கு.

அடைக்குத்தகை - குத்தகைக்காரனுக்குத் தானியமாகக் கொடுக்கும் அரசிறை.

அடைசல் - பொருள் நெருக்கம், அடைசுதல், நெருக்கம்.

அடைசிலை - காரச்சிலை, பாளச்சிலை, பாழ்ச்சிலை.

அடைசு - அடசு, அடாசு, நெருங்கு, ஒதுங்கு.

அடைசுதல் - ஒதுக்குதல், கதுப்புக்குள் வைத்துக்கொள்ளுதல், செருகுதல், நெருக்குதல், நெருங்குதல், பொருந்துதல், ஒதுங்குதல், நெருங்க விடுதல், இட்டுதல்.

அடைசுபலகை - செருகி வெளிய டைக்கும் பலகை.

அடைசுவலை - ஒருவித வலை.

அடைசொல் - அடைமொழி, விசேடணமொழி.

அடைச்சல் - பொத்துதல்.

அடைச்சி - உடுத்து.

அடைச்சிட்டு - இஸ்திரீது, வரிரீது

அடைச்சுதல் - செருகுதல், சேரச் செய்தல், உடுத்துக்கொள்ளுதல், கொத்துதல், மலர் சூட்டல்.

அடைதல் - பொருந்துதல், அடைகாயடைதல், கூடு முதலியவற்றிற் தங்குதல், அடைகோழி அடைகாத்தல், தீர்தல், முத்தியடைதல், சேர்தல், சரண்புகுதல், அடங்குதல், ஒதுங்குதல், கூடுதல், சேருதல், பெறுதல்.

அடைதடையம் - பொய்யாய் உரிமைப்படுத்திய பொருள்.

அடைதூண் - கடைதறி.

அடைத்தது - இட்டகட்டளை.

அடைதல்- விதிக்கப்படுதல், அமைக்கப்படுதல், உறுப்பின் செயல்கெடுதல், சாத்துதல், துவாரமடைத்தல், புகுத்துதல், மூடுதல், சிறைவைத்தல், ஒளித்துவைத்தல், ஒப்புவித்தல், குத்தகை முதலியவற்றிற்கு விடுதல், கொடுத்தல், பிரித்தல், காப்புச் செய்தல், சேர்த்தல், தடுத்தல், பூட்டல், மழை விடாதுபெய்தல், மறியற் படுத்தல், வெளியை மறைத்தல், வேலியடைத்தல்.

அடைந்தார் - அடைக்கலம் புகுந்தோர், மித்திரர்.

அடைந்தோர் - உறவோர், அடைக்கலம் புகுந்தவர், சுற்றத்தார்.

அடைப்பைக்காரன்-வெற்றிலைப் பையெடுத்து ஊழியஞ் செய்வோன்.

அடைப்பம் - அம்பட்ட ஞயுதவுறை, சாமான்பை, வெற்றிலைப்பை, நாவிதன் கருவிப்பை.

அடைப்பன்-ஒரு வியாதி, மாடுகளுக்குத் தொண்டையில் உண்டாவது.

அடைப்பான் - ஒரு நோய், அடைக்கும் மூடி, அடப்பன், அடைப்பன்.

அடைப்பு - அடைக்கப்பட்டது, அடைதற்றன்மை, அடைதற்றொழில், மறைப்பு, கதவு, சாளி முதலியவற்றின் அடைப்பு, வேலி, மூடுகை, தடை, அடைக்கும் மூடி, படற்கதவு, குத்தகை.

அடைப்பை - வெற்றிலைப்பை, அடப்பம்.

அடைப்பைக்காரன் - பிளவு சுருளெடுத்துக்கொடுப்போன், நாவிதன்.

அடைமண் - கலப்பையில டைந்த மண், வண்டல் மண்.

அடைமழை - விடாமழை.

அடைமாங்காய் - மாங்காயூறுகாய்.

அடைமானம் - உவமை, ஈடு, பிரதி, வழிவகை, கொதுவை, அடமானம்.

அடைமொழி - விசேடண மொழி, விசேடணம், விசேஷணம்.

அடைய - எல்லாம், சேர, முழுவதும், முற்றிலும்.

அடையடிமை-தனம் வாங்குதன் முதலியவற்றுல்அடையப்பட்டஅடிமை.

அடையடுத்தவாகுபெயர்-ஒருபொருள் தன்புறத்துப்பண்பாய்நின்ற அடையோடுகூடி ஆகுபெயராய் வழங்குவது (உம்) புகையிலை நட்டான்.

அடையலர்
அடையலவர்
அடையலார்
} பகைவர்.

அடையல் - சேருதல், அடைகுதல், அடைந்துவருவது, எல்லாம், வியங்கோண்முற்று, அடைகை, செருப்புவகை.

அடையவாளஞ்சான் - கோயிலின் வெளிச்சுற்றுப்பிரகாரம், அடையவாளந்தான்.

அடையவாளந்தான் - தட்டுச்சுற்று வேஷ்டி.

அடையாதவர்
அடையாதார்
அடையார்
} பகைவர்.

அடையாளம் - அங்கம், அச்சு, ஆணை, ஆவணம், இலக்கணம், இலாஞ்சனம், இலிங்கம், களங்கம், குறி, கேது, சாதனம், துவசம், நிமித்தம், பதம், பாளி, முத்திரை, வியஞ்சனம்,அங்கமச்சம், அறிகுறி, குறிப்பு, சின்னம், மாதிரி.

அடையுணி - அடுத்துண்பவன்.

அடையோலை - அடமானப்பத்திரம்.

அடைவிகச்சோலம் - கஸ்தூரிமஞ்சள்.

அடைவு - தகுதி, ஏது, கொதுவை, தூணை, புகலிடம், பறவைகள் தங் குமிடம், வரலாறு, ஆம்பல், ஈடு, உபமானம், எல்லாம், முறை, விதம், வழி, அடவு.

அடைவுகேடு - முறைத்தவறு.

அடைவே - கிரமமாக, நெடுக.

அட்சகன்னம் - நேர் முக்கோணத்தி னெடுவரி.

அட்சசூலை - ஒரு வியாதி.

அட்சதை - மங்கல அரிசி, சிதைவுறு மங்கல அரிசி, அக்கதை, அரிசி, மங் கலவரிசி, பொரியரிசி.

அட்சகைப்பொட்டு - நெற்றியிலிடும் பொட்டுவகை.

அட்சபாகை - நேர் முக்கோணத்தின் அளவு.

அட்சபாடனம் - திரைப்படல்.

அட்சபாதன் - கௌதமமுனி, கௌத மரிஷி, நியாயவழியோன், அக்க பாதன்.

அட்சமணி-அக்கமணி, உருத்திராக்கம்.

அட்சமாலாதரன் - அட்சமாலை தரித் தவன்.

அட்சமாலிகை - இருக்குவேத உபநிட தங்களுளொன்று, உருத்திராக்க மாலை.

அட்சமாலை - அக்கமாலை.

அட்சம் - பூகோளாட்சம், அக்கம், உத்திராக்கம், கண், தான்றிக்காய், வெங்காயம், உருத்திராக்கம்.

அட்சய - அறுபது வருடத்தில் கடை சி வருடம், ஒரு வருடம், அக்ஷய.

அட்சயதிருதியை - அட்சயதிருதீயா.

அட்சயதிருதீயா - வைகாசிமாதத்துச் சுக்கிலபக்கத்தில் வரும் மூன்றாந் திதி.

அட்சயதூணி - அருச்சனனம்புக்கூடு.

அட்சயபாத்திரம் - உணவுவற்றாத பாத்திரம், பிச்சை பாத்திரம், பிட் சாபாத்திரம், பாண்டவர்க்குச் சூரி யன் கொடுத்த பாத்திரம், வைண வர்கள் ஐயமேற்கும் பாத்திரம்.

அட்சயம் - கேடின்மை.

அட்சயன் - கடவுள்.

அட்சயா - சாந்திரமாதத்தில் ஞாயிற்று க்கிழமையில் அல்லது திங்கட்கிழ மையில் வரும் ஏழாம் நாள்.

அட்சரகணிதம் - பீசகணிதம்.

அட்சரகாலம் - ஒரு தாளவளவை.

அட்சரசஞ்சன் }
அட்சரசணன் } எழுத்துக்காரன்.

அட்சரசனனி - இலேகனி.

அட்சரசனன் }
அட்சரசீவகன் } எழுத்துக்காரன்.
அட்சரசீவி }

அட்சரசுதகம் - அக்கரசுதகம்.

அட்சரசுத்தி - உச்சரிப்புத்திருத்தம், எழுத்துத் திருத்தம்.

அட்சரச்சுதகம் - அக்கரச்சுதகம்.

அட்சரதேவி - சரசுவதி.

அட்சரதாபனம் - மந்திர எழுத்துக் களை யந்திரத்திலடைத்தல்.

அட்சரதீபம் - கோயிலிலிடும் ஐம்பத் தொரு தீபம்.

அட்சரதூலிகை - இலேகனி.

அட்சரதோஷம் - எழுத்துப்பிழை.

அட்சரபாவனை - மகேச்சுரியபாவனை.

அட்சரப்புல் - பீனசப்புல்.

அட்சரமுகன் - மாணிக்கன்.

அட்சரம் - அக்கரம், எழுத்து, ஒரு நோய், தர்மம், தவம், பிரகிருதி, பிரணவம், மூத்தி, வேதப்பொருள், இராகலக்ஷணத்தொன்று, ரக்கு வெடிப்பு நோய், அக்ஷரம்.

அட்சரலட்சணம்-அக்கர விலக்கணம்.

அட்சரவினியாசம் - எழுத்து, எழு தப்பட்ட பத்திரிகை, வேதம்.

அட்சரன் - அக்கரன், அத்தியாமி.

அட்சராத்துமகசத்தம் - எழுத்தா லாகிய ஒலி.

அட்சராப்பியாசம் - எழுத்துப்பயில் விக்கும் சடங்கு.

அட்சராரம்பம் - அக்காரம்பம், வித் தை கற்கத்தொடங்கல்.

அட்சன் - அக்கன்.

அட்சாம்சம் - பூகோளரேகையின் பாதம், அட்சபாகை.

அட்சி - கண், அக்ஷி, சேரென்னு மளவை, ஒரு உபநிடதம்.

அட்சிணி - அஷ்டபோகத்துளொன் ருகிய தற்காலத்து அனுபவிக்கும் சுதந்தரம்.

அட்சியம் - யசுர்வேத உபநிடதங்க ளுள் ஒன்று.

அட்சீபம் - ஒருவகைமாமரம், முருங் கை மரம்.

அட்சௌகிணி - அக்குரோணி, அக் கெளகிணி.

அட்டகசம் - வாமனம், குமுதம், அஞ் சனம், புட்பதந்தம், சாருவபூபம், சுப்ரதீபம், அட்டகுலயானை, ஆடா தோடை, ஐராவதம், புண்டரீகம்.

அட்டகணம் - செய்யுட்குரிய எண் கணம். அவை ஆகாயம், இயமா னன், சூரியன், தீ, நிலம், நீர், மதி, வாயு, இவற்றுள் முன்னைய நான் கும் நீக்கி மற்றைய மூன்று.

அட்டகணிதம் - எண்கணிதம், அவை கனமூலம், கனம், குணம், சங்கலி தம், பாகாரம், வருக்கமூலம், வருக் கம், விபகலிதம் என்பன.

அட்டகந்தம் - எண்வகை வாசனைப் பொருள். அவை சந்தனம், அகரு, கஸ்தூரி, கருப்பூரம், பச்சிலை, குங் குமம், இலாமிச்சை, கோட்டம் என்பன.

அட்டகம் - அஷ்டகம், அயமலாதி, எட்டின் கூட்டம், வசம்பு, வட மொழியினோர் பிரபந்தம், எட்டன் தொகுதி.

அட்டகருமம் - ஆகருடணம், உச்சா டனம், தம்பனம், பேதனம், மார ணம், மோகனம், வசியம், வித்து வேடணமாகிய எண் வித்தை, அஷ்ட கருமம்.

அட்டகர்ணன் - பிரமா.

அட்டகவர்க்கம் - அட்டவருக்கம்.

அட்டகவுடலம் - புரியட்டகம்.

அட்டகன் - விச்வாமித்திரன் குமாரர் களில் ஒருவன்.

அட்டகாசம் - அட்டஹாஸம், ஒரு சிவஸ்தலம், பெருநகை, ஆர்ப்பா டம், ஆரவாரம்.

அட்டகாசன் - இருபத்தெண்கலியுகத் தொன்றில் மறைவிரிப்போன்.

அட்டகாசி - சிவன், பெருநகைசெய் வோன்.

அட்டகிரி - அஷ்டகுலபர்வதம், அட்ட குலமலை. அவை இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கைலை, நிடதம், நீல கிரி, மந்தரம், விந்தம், என்பன. (ஏமகுண்டம், நீலம்.)

அட்டகீடம் - எட்டுவகைக்கீடமாகிய பிராணிகள். அவை-ஒணான், தவளை, அடலியீ, வீட்டுப்பல்லி, காட்டுமச கம், மகஷிகா, மலைப்பீலிகை, சில ந்தி என்பன.

அட்டகுட்டம் - எண்வகைக் குட்ட நோய்கள். அவை கருங்குட்டம், இரணகுட்டம், வெண்குட்டம், செங்குட்டம், கிருமிக்குட்டம், நீர்க் குட்டம், விரல்குறை குட்டம், சொறிகுட்டம் என்பன.

அட்டகுணச்செல்வம் - அணிமாதி குணங்களையுடைய அட்ட ஐசுவரி யங்கள்.

அட்டகுணபூதன் - அருகன்.

அட்டகுணம் - கடவுட்குரிய எண் குணம். அவை இயல்பாகவே பாசங் களினீங்குதல், இயற்கையுணர்வின ளுதல், தன்வயத்தளுதல், தூயவு டம்பினளுதல், பேரருளுடைமை, முடிலிலாற்றலுடைமை, முற்றுமு ணர்தல், வரம்பிலின்பமுடைமை என்பன.

அட்டகுரவர் - எட்டுவகையாசிரியர் கள். அவர்கள் போதககுரு, வேதக குரு, நிகிதகுரு, காமியகுரு, சூசக குரு, வாசககுரு, காரககுரு, விகித குரு, என்பவர்கள். இவர்களுள் போதககுரு சாத்திரார்த்தம் போ

திப்பவன். வேதகுரு தத்துவதரிசி கன். நிகிதகுரு வசியாகருஷணதி களால் இகலோகத்தில் சுகமும், பர லோகத்தில் துக்கமும் கொடுப்ப வன். காமியகுரு சுகர்மோபதேசத் தால் இகபரங்களில் சுகமெய்தப் பண்ணுபவன். சூசககுரு விவேக முகத்தால் சமாதி சட்குணங்களை யும் ஒருங்கே வரப் பண்ணுபவன். வாசககுரு விஷயங்கள் பொய்யெ னவெறுத்து ஆன்மலிருப்பமுண் டாகச் செய்பவன். காரக குரு சிவ சிவர் ஐக்கிய ஞானத்தை வரச்செய் பவன். விகிதகுரு சந்தேகம் நீங்கி மோட்சமடையச்செய்பவன்.

அட்டகுலபருவதம் - அட்டகிரி.

அட்டகுலயானை - அட்டதிக்கயம்.

அட்டகுலவெற்பு - அட்டகிரி.

அட்டகுற்றம் - மலசகிதர்க்குரியகுண மெட்டு. அவை-அந்தராயம், ஆயு, கோத்திரம், ஞானுவரணீயம், தரிச னுவரணீயம், நாமம், மோகநீயம், வேதநீயம் என்பன.

அட்டகுன்மம் - எண்வகைக் குன்ம நோய். அவை-எரி, சத்தி, சன்னி, சிலேத்துமம், சூலை, பித்தம், வலி, வாதம் எனப்படும்.

அட்டகை - ஒரு யாகம், அட்டமி, பிதிர்வணக்கம்,யாகமிருபத்தொன் றிலொன்று.

அட்டகைச்சிரார்த்தம் - பிதிரர்களை யுபாசித்தற் குரியனவாய் மார்கழி, தை, மாசி என்னும் மாதங்களின் அபரபக்கங்களில் வரும் சத்தமி, அஷ்டமி, நவமி என்னும் மூன்று திதிகளில் செய்யப்படும் சிரார்த் தம்.

அட்டகோணம் - எட்டுக்கோணம், எட்டுமூலை.

அட்டக்கரி - மிக்க கறுப்பு.

அட்டக்கறுப்பு - மிக்க கறுப்பு.

அட்டங்கால் - அட்டவணைக்கால், குறுக் காக மடக்கிவைக்குங்கால்.

அட்டசத்திகள் - ஆரணி, ஜனனி, உரோதயித்திரி என்னும் மூன்று பரிக்கிரகசத்திகளும், ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்னும் பஞ்ச சத்திகளுமாகிய அட்டசத்திகள். சயை, விசயை, சயந்தி, அபரா சிதை, சித்தை, இரத்தை, அலம் புசை, உற்பலையென்னும் எட்டுச் சத்திகள். சிவனுடைய கிரியாசத்தி யினது உள்ளுருவும் பிறவுருவு மாகிய உருவகளெட்டு. அவை ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி, ஆரணி, உரோதயித்திரி, ஜனனி என்னும் எட்டுச் சத்திகள். வாமை, சேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகரணி, பெலப்பிரதமனி, சர்வ பூததமனி என்னும் எட்டுச்சத்திகள்.

அட்டசித்தி - அஷ்டமாசித்தி, யோக சித்தர்க்குரிய எண்சித்தி. அவை : அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனப்படும்.

அட்டசிரவணன் - பிரமன்.

அட்டசுபம் - எண்வகை மங்கலம். அவை இணைக்கயல், கண்ணுடி, சாமரம், கொடி, தோட்டி, நிறை குடம், முரசு, விளக்கு என்பன.

அட்டணங்கால் - அட்டவணைக்கால்.

அட்டணை-குறுக்கே,குறுக்கு,அட்டம்.

அட்டணைக்கால் - மடித்தக்கால், கால் மேலிடுங்கால்.

அட்டதந்திரவாதம் - வாயுவினால் வரும் ஒருவகைரோகம்.

அட்டதயாவிருத்தி - பிறரைப்பங்கீர்த் தல், தீமைக்கஞ்சல், பிறர்துயர்க் கிரங்கல், நன்மைகடைப் பிடித்தல், பிறர் கருமத்திற்குடன்படல், பிறர் கருமமுடிக்கவிரைதல், பிறர்க்குப் பொருள் வரவை யுவத்தல், பிறர் செல்வம் பொறுத்தல் என்பன வாம்.

அட்டதருமம் - எண்வகைத் தருமம் : அவை யாகம், வேதமோதுதல், தானம், தபம், சத்தியம், திடம், பொறுமை, லோபமின்மை என்பன.

அட்டதளசக்கரம் - எண்வகை யிதழுடைய சக்கரம். அவை சோத்திரத் துவாரம் இரண்டு, நேத்திரத் துவாரம் இரண்டு, ஆக்கிராணத் துவாரம் இரண்டு, முலக்குத் துவாரம் ஒன்று, சிங்குவைத்துவாரம் ஒன்று என்பன.

அட்டதளம் - எட்டிதழ்த்தாமரை.

அட்டதனம் - எட்டுப் பிரயோசனம். அவை குணம், சம்பத்து, தனம், நல்ல குலம், ரூபம், வித்தை, விவேகம், வயது என்பன.

அட்டதா-எட்டுப்பிரிவு, எண்மடங்கு.

அட்டதாது - எண் வகை லோகம். அவை பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தாரா, வங்கம், துத்தநாகம் எனப்படும்.

அட்டதானபரீட்சை - வைத்தியரறி குறியெட்டு. அவை நாடி, முகம், மலம், அமுரி, கண், நா, சரீரம், தொனி என்பனவாம்.

அட்டதிக்கயம் - அஷ்டதிக்கஜம், அட்டகுலயானை : அவை கிழக்காதி முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் எனப்படும்.

அட்டதிக்கரிணி - அட்டதிக் கயங்களின்பிடிகள். அவை அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரகரிணி, சுப்பிரதந்தி, அங்கனை, அஞ்சனவதி என்பன. இவை ஐராவத முதலியவற்றிற்கு முறையே பெண்களாம்.

அட்டதிக்காளர் - எண்டிசை காப்பாளர்.

அட்டதிக்கு - எட்டுத்திசை. அவை கிழக்கு, தென்கீழ், தெற்கு, தென்மேல், மேற்கு, வடமேல், வடக்கு, வடகீழ் என்பன, எண்திசை.

அட்டதிக்குப்பாலகர் - திக்குக்காவலர். அவர் கிழக்காதி முறையே இந்திரன், அக்கினி (அக்நி) இயமன் (யமன்) நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் (ஈசானர்) எனப்படுவர், அஷ்டதிக்குப் பாலகர்.

அட்டதிசம் - எருக்கு.

அட்டதிசையானை - அட்டதிக்கயம்.

அட்டதேறல்-காய்ச்சியமது, சாராயம்.

அட்டநாகபந்தம் - சித்திரகவி வகைகளுளொன்று. அது நான்காமெழுத்து நாற்பத்தோரா மெழுத்தாகவும், ஆறுமெழுத்து நாற்பத்தைந்தா மெழுத்தாகவும், எட்டா மெழுத்து இருபதா மெழுத்தாகவும், பன்னிரண்டா மெழுத்துப் பதினெட்டா மெழுத்தாகவும், இருபத்திரண்டா மெழுத்து நாற்பத்தேழா மெழுத்தாகவும், இருபத்து நான்கா மெழுத்து மூப்பத்தொன்பதா மெழுத்தாகவும், மூப்பத்து மூன்றுமெழுத்தைம்பத்தோரா மெழுத்தாகவும், மூப்பத்தேழா மெழுத்து நாற்பத்தொன்பதா மெழுத்தாகவும் வர ஒரு செய்யுட் செய்து கிரமப்படி எட்டுப் பாம்பு வரைந்து அதன்கண் அடைத்துக் கொள்ளப் படுவது.

அட்டநாகம் - எண்வகை நாகம் : அவை அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பனவாம்.

அட்டநிக்கிரகங்கள் - தர்க்க நூலிற் கூறிய எட்டுத் தோல்வித்தானங்கள். அவை நியூனம், அதிகம், அவசித்தாந்தம், அசித்தம், விருத்தம், அனேகாந்திகம், பிரகரண சமம், காலாத்தியாபதிட்டம் என்பன.

அட்டபந்தனம் - அஷ்டபந்தனம், திக்குக்கட்டு, கருங் குங்கிலியம், வெள்

ஊக்குங்கிலியம், சுக்காங்கல், தேன், மெழுகு, செம்பஞ்சு, மைசாட்சி, கொம்பரக்கு, காவிக்கல், வெண்ணெய், இவ்வெட்டையும் இடைப்படிசேர்த்து முறைப்படி அரைத்துச் செய்வது.

அட்டபரிசம் - எண்வகையூறு: அவை ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல் என்பன.

அட்டபாதம் - எண்காற்புள், சிலந்திப் பூச்சி.

அட்டபாலகர் - அஷ்டதிக்குப்பாலகர், அட்டதிக்குப்பாலகர்.

அட்டபாலகர்குறி - திக்குப் பாலகர் அடையாளம். அவை இந்திராதி முறையே இடி, புகை, சீயம், ஞாளி, இடபம், கழுதை, யானை, காகம் என்பன.

அட்டபுட்பம் - எட்டுவகை பூக்கள். அவை புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்தாமரை என்பன. பூப்போல விரும்பத்தக்க எட்டுக்குணங்கள் - அவை கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன.

அட்டபுயம்-காஞ்சிபுரத்திலுள்ள விட்டுணுவாலயங்கள்எட்டனுள் ஒன்று. அது விட்டுணு எட்டுப் புயங்களோடிருந்திலக்குமியை விவாகஞ் செய்த கோலத்தைக் காட்டுவது.

அட்டபைரவர் - அட்டவைரவர்.

அட்டபோகம் - எண்போகம். அவை அணிகலன், ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசனம் என்பனவாம்.

அட்டப்பல்லக்கு - குறுக்காகக் கொண்டுபோகும்படி யமைத்த சிவிகை.

அட்டப்பிரகரணம் - எட்டுப் பிரகரணங்கள். அவை தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிருணயம், போககாரிகை, மோக்ஷ காரிகை, ஞானகாரிகை, பரமோக்ஷ நிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம்.

அட்டப்பிரணவம் - எட்டுப் பிரணவம்.

அட்டப்பிரமாணம் - அளவையெட்டு. அவை அனுமானம், அபாவம், அருத்தாபத்தி, ஆகமம், உவமானம், ஐதிகம், சம்பவம், பிரத்தியட்சம் என்பன.

அட்டமக - எட்டாவது.

அட்டமகாலீகன் - வானப்பிரஸ்தருள் ஒருவன். இவன் மூன்றுஞானஞானவின்றி யிருந்து நான்காநாட் பிற் பலியுண்போன்.

அட்டமங்கலம் - அட்டசுபம், ஒரு பிரபந்தம், எண்வகை மங்கலப் பொருள்கள், எட்டுறுப்பில் வெண்மையுடைய குதிரை, கவரி, நிறை, குடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் முதலியன.

அட்டமசுத்தி - கொண்ட இலக்கினத்திற்கு எட்டாமிடத்து எந்தக் கிரகமுமில்லாதிருக்கை.

அட்டமச்சனி - உதயலக்கினத்திற்கு எட்டாமிடத்தில் நிற்குஞ் சனி.

அட்டமணம் - எண்வகை மணம். அவை ஆசுரம், ஆரிடம், இராக்கதம், காந்தருவம், தெய்வம், பிரசாபத்தியம், பிரமம், பைசாசம் எனப்படும்.

அட்டமதம் - குலம், ரூபம், யௌவனம், வித்தை, தனம், பிரபுத்துவம், சகாயம், சகசம் என்னும் எட்டினாலும் உண்டாகுஞ் செருக்கு.

அட்டமம் - எட்டாவது, அஷ்டமம்.

அட்டமாசித்தி - எட்டுவித சித்தி, அஷ்டமாசித்தி.

அட்டமாநாகம் - அட்டநாகம், அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோட

கன், பதும்ம், மகாபதுமன், சங்க பாலன், குளிகன்.

அட்டமாந்தம் - கணமாந்தம், சூழி மாந்தம், செரியாமாந்தம், பெரு மாந்தம், போர்மாந்தம், மலடிமாந் தம், வலிமாந்தம், வாதமாந்தம் என எண்வகைப்படும்.

அட்டமி - எட்டாந்திதி, அஷ்டமி.

அட்டமிகை - அரைப்பலம்.

அட்டமூர்த்தம் - ஈசுரன் வடிவம் எட்டு: அவை இயமானன், காற்று, சந்திரன், சூரியன், தீ, நிலம், நீர், வெளி எனப்படும்.

அட்டமூர்த்தி - சிவபெருமான், அஷ்டமூர்த்தி.

அட்டமூர்த்திகள் - எட்டுமூர்த்திகள்: அவர்கள் பவன், சருவன், ஈசா னன், பசுபதி, வீமன், உக்கிரன், மாதேவன், உருத்திரன் என்பவர் கள்.

அட்டமூர்த்திதரன் - பிருதிவி மூத லிய அஷ்டமூர்த்தங்களுக்கும் அதி பர், சிவன்.

அட்டமூலம் - எட்டுவகை வேர்கள், அவை அரத்தை, கண்டுபாரங்கி, காஞ்சொறிவேர், கோரைக் கிழங்கு, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், நன்னாரிவேர் என்பன.

அட்டமெய்ப்பரிசம் - அட்டபரிசம்.

அட்டம் } குறுக்கு, விரோதம்,
அவ்டம் } மாடம், பக்கம், அண் ணம், அருகிடம், எட்டு, சாதிக் காய், மேல் வீடு, வினைமுற்று, நேர் ராசமனை.

அட்டம்பக்கம் - அடுத்த பக்கம்.

அட்டம்பாரித்தல் - பக்கலில் விசா லித்தல், பருத்தல்.

அட்டயோகம் - அஷ்டாங்கயோகம்.

அட்டயோசம் - அரைபொடி.

அட்டாரக்கு - உருகியவரக்கு.

அட்டலக்குமி - அஷ்டலட்சுமி: தன லட்சுமி, தானிய லட்சுமி, தைரிய லட்சுமி, சௌரிய லட்சுமி, வித் தியா லட்சுமி, விசயலட்சுமி, கீர் த்திலட்சுமி, இராச்சிய லட்சுமி என்னும் எட்டு லட்சுமிகள்.

அட்டலட்சணம் - அட்டகுணம்.

அட்டலோகபற்பம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண் கலம், தாரா, வங்கம், துத்தநாகம் என்னும் எட்டு லோகங்களாலுஞ் செய்யப்பட்ட ஒரு மருந்து.

அட்டலோகம் - அட்டதாது.

அட்டல் - அழித்தல், அள்ளுதல், அட்டு தல், கொல்லல், நெருப்பிற் காய்ச்சு தல்.

அட்டவக்கிரன் - ருஷி.

அட்டவசுக்கள் - எண்வகை வசுக் கள். அவர் அனலன், அனிலன், ஆபத்தைவன், ஆபச்சவன், சோமன், தரன், துருவன், பிரத்தி யூசன், பிரபாசன் என்பவராம், அஷ்டவசுக்கள்.

அட்டவணிக்குணம் - வணிகர் குண மெட்டு. அவை இடனறிந்தொழு கல், இறுவஞ்சாமை, ஈட்டல், உறு வது தெரிதல், தனிமையாற்றல், பகுத்தல், பொழுதொடு புணர்தல், முனிவிலனுதல் என்பன.

அட்டவணை - சேர்க்கப்பட்டது, சொல்லப்பட்ட காரியத்தினெழு ங்கு, வரிசைக்குறிப்பு, பொருட் குறிப்பு, ஜாப்தா.

அட்டவருக்கம் } இந்துப்பு, ஓமம்,
அட்டவர்க்கம் } கருஞ்சீரகம், சீர கம், சுக்கு, திப்பிலி, பெருங் காயம், மிளகு கூடிய எட்டு மருந் துச் சரக்குகள், அஷ்டவர்க்கம்.

அட்டவருக்கு - அஷ்டவர்க்கம்.

அட்டவன் - அழித்தவன்.

அட்டவாதம் - எட்டுவகை வாதங் கள். அவை சிவசமவாதம், ஐக்கிய வாதம், சங்கராந்தவாதம், பிரவா கேஸ்வரவாதம், கபாலிகவாதம், அதிகாரவாதம், பேதாபேதவாதம், அநேகேச்சுரவாதம் என்பன.

அட்டவிகாரம் - மனிதர்க்குரிய எட்டு விகாரம். அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அசூயை, இடும்பை என்பன.

அட்டவிஞ்சதி - இருபத்தெட்டு.

அட்டவிஞ்சதி யோகாசாரியர் - அவர் சுவேதர், சதாசிவர், தமனர், சகோத்திரர், கங்கர், லோகாட்சர், ஜனிஷர், ததித்தியவந்தர், விஷயர், உக்கிரர், அத்திரி, சுபாலகர், கௌதமர், வேதசிரர், நோகர்ணர், குகாவாசர், சிகண்டி, சடமாலி, அட்டகாசர், சாருதர், லாங்குலி, மகாகாயர், சூலி, டிண்டி, முண்டி, சயிஷ்ணு, சோமசர்மர், இலகுளீசுவரர் என்னும் இருபத்தெட்டு யோகாசாரியர்.

அட்டவித்தாடனம் - எட்டுவகைத் தாடனம். அவை சங்கோசம், பக்கத்தம், பிரசுரிதம், மூட்டி, கீலம், கர்த்தரிகை, சந்தங்கிசம், வித்தை என்பன.

அட்டவித்தியேசுரர் - எட்டுவகை வித்தியேசுரராகிய விஞ்ஞானகலர். அவர் அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், எகருத்திரர், திரிமூர்த்தர், ஸ்ரீகண்டர், சிகண்டி என்பவர்.

அட்டவூறு - எண்வகை ஊறு. அவை சருச்சரை, சீர்மை, தண்மை, திண்மை, நொய்மை, மென்மை, வண்மை, வெம்மை என்பன.

அட்டவெற்றி - எண்வகை வெற்றி, அவை பகைவரைக் கவர்தல், பகைவர் கவர்நிரை மீட்டல், பகைமேற் செல்லல், பகைமுன்னெதிரூன்றல், தன்னரண்காத்தல், பகைவரண்வளைத்தல், பொருதல், போர் வெல்லல் என்பனவாம். இவற்றிற்கு முறையே மாலை, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை எனப் படும்.

அட்டவைசுவரியம் - எண்வகைச் செல்வம். அவை அடிமை, இராசாங்கம், சுற்றம், நெல், பொன், மக்கள், மணி, வாகனம் என்பன.

அட்டவைரவர் - எட்டு வைரவர்கள், அவர் மகாவைரவர், உக்கிரவைரவர், சண்டாளவைரவர், குரோதவைரவர், உன்மத்தவைரவர், கபாலவைரவர், பீஷ்ணவைரவர், சாகரவைரவர். இவர் சிவலோகத்திற் சோதிமயமான கோட்டையில் எட்டு வாசல்களிலுங் காவல் செய்துகொண்டிருப்பவர்.

அட்டழித்தல் - சமைத்துப் பரிமாறுதல்.

அட்டனம் - சக்கராயுதம்.

அட்டன் - சிவபிரான்.

அட்டாக்கரம் - அட்டாகூரம்.

அட்டாங்கசீலம் - பௌத்த மதத்தின் நல்லொழுக்கமாகிய சீலத்தின் எட்டுறுப்புக்கள். அவை கொல்லாமை, திருடாமை, வியபிசரியாமை, பொய் கூறாமை, கள்ளுண்ணாமை என்னும் பஞ்சசீலத்துடன் இல்லறத்தார்களில் நிட்டாபரர்களைப் போகியாமை, தரையிற்படுத்தல், பாய்மேற் படுத்தல் என்பன.

அட்டாங்கநமஸ்காரம் - மோவாய், செவிகள் இரண்டு, தோள், புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே தோய நமஸ்கரித்தல்.

அட்டாங்கமார்க்கம் - பழுதிலா வாழ்க்கை யெனப்படும் எட்டங்கங்களையுடைய துக்கநிவாரண மார்க்கம். அவை நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல் வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பன.

அட்டாங்கயோகம் - அஷ்டாங்க யோகம், யோகமுறை எட்டு, அவை ஆதனம், இயமம், சமாதி,

தாரணை, தியானம், நியமம், பிரத்தி யாகாரம், பிராணயாமம் என்பன.

அட்டாங்குலசிகாச்சேதம் - சூடுமியை எட்டங்குலம் விட்டறுத்தல்.

அட்டாட்சரம - விட்டுணு மந்திரம்.

அட்டாட்சரி - அட்டாட்சரம்.

அட்டாணி - கோட்டை மதின்மேல் மண்டபம்.

அட்டாதசகணம் - பதினெண் கணங் கள். அக்கணங்களாவார் தேவர், சித்தர், அசுரர், தைத்தியர், கரு டர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூகர், பைசாசர், அந்தரர், முனி வர், உரகர், ஆகாயவாசியர், போக பூமியர் என்பவர்களாம்.

அட்டாதசகுணம் - யாக்கைக் குறு பதினெண்குறறம். அவை அதி சயம், இன்பம், உவகை, உறக்கம், தேகதம், கையறவு, நறை, நினைப்பு, நீர்வேட்டல், நோய், பசி, பயம், பிறப்பு, மதம், மரணம், வியர்த் தல், வெகுளி, வேண்டல் என் பன.

அட்டாதசதருமசாத்திரம் - தரும நூல் பதினெட்டு. அவை மனு, அத்திரி, ஔனிதம், விட்டுணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கிர சம், இயமம், ஆபஸ்தம்பம், சம் வர்த்தம். கார்த்தியாயனம், பிரகஸ் பதி, பராசரம், வியாசம், சங்கலி தம், தர்க்கம், கௌதமம், சாதாதான் மம், லிகிட்டம் என்பனவாம்.

அட்டாதசபாடை - பதினெட்டுப் பாஷை: அவை அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் என்பன.

அட்டாதசபுராணம் - பதினெட்டுப் புராணம். அவை சைவம், பவிடி யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற் சம், கூர்மம், பிரமாண்டம், பிர மம், பதுமம், காருடம், நாரதீயம், விண்டு, பாகவதம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம் என்பன.

அட்டாதசமூலம் - பதினெண் வகை வேர். அவை ஈருக்கு, கண்டங் கத்திரி, கரந்தை, கறிமுள்ளி, குமிழ், கொடிவேலி, சங்கங்குப்பி, சிற்றாமல்லி, தழுதாழை, தாதுளை, நன்னாரி, நொச்சி, பாதிரி, பேரா மல்லி, மாவிலிங்கம், மூருங்கை, வில்வம், வேர்க்கொம்பு என்பன.

அட்டாதகசம் - பதினெட்டு.

அட்டாதசவித்தை - பதினெண்வித் தைகள். அவை ஆறு வேதாங் கங்கள், நான்குவேதங்கள், மீமாஞ் சை, நியாயம், ஸ்மிருதி, புராணம் என்னும் பதினான்கும் ஆயுர்வே தம், தநுர்வேதம், காந்தருவவே தம், அர்த்தவேதம் என்பனவுமாம்.

அட்டாதசவியவகாரபதம் - வழக்குக் குரியபதினெண் விடயங்கள்; அவை கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல் காமை, ஒப்பிப்பணி செய்யாமை, கூலிகொடாமை, உடையானல் லான் விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ள மொப்பாமை, கட் டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாத ராடவர் தருமம், தாயபாகம், வன் செய்கை, சொற்கொடுமை, தண் டக்கொடுமை, சூதென்பனவுமொ ழிந்த பலவுமாம்.

அட்டாதசவிவாதபதம் - அட்டாத சவியவகாரபதம்.

அட்டாதசோபபுராணம் - பதினெட்டு உபபுராணம், அவை நாரசிங்கம், சனற்குமாரம், நாரதீயம், சிவதன் மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மாநவம், வாசிட்டலிங்

கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம் என்பன.

அட்டாதுஷ்டம் - அட்டாதுட்டி.

அட்டாதுட்டம் - அதிகதீங்கு.

அட்டாதுட்டி - அடாவடி, அதிகதுட்டத்தனம், அடாத்தேற்றம், தாறுமாறு.

அட்டாபதபத்திரம் - பொற்றகடு.

அட்டாபதம் - எண்காற்புள், கதவின் ரூள், பொன், வன்னப்புடவை.

அட்டாலகம் - கோபுரம், மேல்வீடு.

அட்டாலம் - மேல்வீடு, அட்டாலை, மேன்மாடம்.

அட்டாலிகாகாரன் - கற்சிற்பன், சிற்பி.

அட்டாலிகை - அரசர்மனை, மேல்வீடு, அட்டாளிகை, அட்டாலம்.

அட்டாலை - காவற்பரன், அட்டாளை, மன்னர்மனை, மேல்மாளிகை, மேல்வீடு, கோட்டை மதில் மேல்மண்டபம்.

அட்டாலைமண்டபம் - மேல் வீடாகக் கட்டப்பட்ட மண்டபம்.

அட்டாலைமரம் - ஒருமரம்.

அட்டாவதானம் - ஒரேசமயத்தில் எட்டுக்காரியத்தைச் சிந்தித்தல், அஷ்டாவதானம்.

அட்டாவதானி - அஷ்டாவதானி.

அட்டாளகம் } மேல்மாடி.
அட்டாளம் }

அட்டாளிகை - மேன்மாடம்.

அட்டாளை - ஒருமரம், சிறும்பி.

அட்டானம் - வீரட்டானம்.

அட்டி - அதிமதுரம், இட்டு, எட்டி, இருப்பை, குதிரைநோய், இலுப்பை, செஞ்சந்தனம், தடை, பருப்பு, மிகவிட்டு, சந்தனம், தமதம்.

அட்டிகம் - சாதிக்காய்.

அட்டிகை - உட்கட்டு, ஓராபரணம், ஒருவகைக் கழுத்தணி, சரடு.

அட்டிப்பேறு - தானசாசனமூலம் கொடுக்கப்பட்ட உரிமை.

அட்டிமதுரம் - அதிமதுரம்.

அட்டிமை - ஓமம், சீரகம்.

அட்டியல் - அட்டிகை.

அட்டில் - அடுக்களை, மடைப்பள்ளி, ஓம சாலை.

அட்டிற்சாலை - மடைப்பள்ளி.

அட்டினம் - சீரகம்.

அட்டு - அணை, சமைக்கப்பட்டது, வெல்லம், செய்தது, பலூட்டு, மதிப்பு, வியங்கோள் விகுதி, வினையெச்சம்.

அட்டுதல் - கொண்டுவருதல், செலுத்துதல், தானசாசன மளித்தல், வார்த்தல், வடிதல், இடுதல், ஒட்டுதல்.

அட்டுப்பு - காய்ச்சியவுப்பு, காய்ச்சல வணம்.

அட்டும் - ஒருவியங்கோள் விகுதி.

அட்டேழியம் - தீம்பு.

அட்டை - சலுகம், சளுகம், காகித அட்டை, புத்தகமேலுறை, திராவி, கனத்தகாகிதம், செருப்பினடி, நீரில்வாழும் ஒரு செந்து, செவ்வட்டை, நீரட்டை, மரவட்டை என மூன்று விதம், உரு, வினை மூற்று, நீர்ச்செந்துவகை.

அட்டைக்குழி - நரகபேதம்.

அட்டோலகம் - ஆடம்பரம், ஒட்டோலகம், உல்லாசம்.

அட்டைப்பூச்சி - வயிற்றுப் பூச்சி வகை.

அட்டோலிக்கம் - ஆரம்பம், ஆரவாரம், மகிழ்ச்சி.

அட்டோலிங்கம் - ஆடம்பரம், ஆரவாரம், மகிழ்ச்சி.

அணகதாரம் - சுத்தநிஷாதம்.

அணங்கம் - இலட்சணம்.

அணங்கயர்தல் - விழாக்கொண்டாடுதல்.

அணங்கல் - அணங்குதல்.

அணங்காடல் } வெறியாடுதல்.
அணங்காடுதல் }

அணங்காட்டு - சன்னதம், வெறியாட்டு.

அணங்கார் - பெண்கள்.
அணங்கிய - அழகிய, பின்னிவளர்ந்த.
அணங்கியோன் - வருத்தியவன்.
அணங்கினர் - தேவப்பெண்கள்.
அணங்கு - அச்சம், அணங்கென்னேவல், அழகு, வடிவு, பராசத்தி, ஆசை, குட்டி, பெண், பேய், கொல்லு, அஞ்சு, விரும்பு, வருந்து, கொலை, சண்டாளன், வெறியாட்டு, தெய்வப்பெண், தெய்வம், தேவர்க் காடுங் கூத்து, நோய், பெண் மகள், பேய்மகள், ரோகம், வருத்தம், வருந்துந்தெய்வம்.
அணங்குசார்ந்தாள் - படிமத்தாள்.
அணங்குதல் - அஞ்சல், கொல்லுதல், வருந்துதல், விரும்புதல், வருத்துதல், இறந்துபடுதல், பொருந்துதல்.
அணங்குதாக்கு - காமநெறியால் உயிர் கொள்ளுந் தெய்வமகள் தீண்டல்.
அணத்தல் தலையெடுத்தல், மேல் நோக்கிநிற்றல், பொருந்துதல்.
அனப்பு - ஒரு நீட்டலளவை, ஒரு சதுர அளவை.
அணந்த - மேலேநோக்கிநின்று வருந்தின.
அணம் } கீழ்வாய்ப்புறம், மேல்வாய்,
அணரி } அண்ணம்.
அணரிடுதல் - கொக்கரித்தல்.
அணர்ச்செவி - எடுத்தசெவி.
அணர் - மேல்வாய்ப்புறம்.
அணர்தல் - மேல்நோக்கிச் செல்லுதல்.
அணல் - மேல்வாய்ப்புறம், உண்மிடறு, அலைதாடி, கீழ்வாய், மிடறு, கழுத்து, தாடி.
அணவல் - கிட்டல், பொருந்தல்.
அணவன் - பொருந்தினவன்.
அணவு - அணவென்னேவல், நடு, பொருந்துதல், இணை.
அணவுதல் - மேல்நோக்கிச் செல்லுதல், கிட்டல், இணைதல், புணர்ச்சி, புல்லுதல், ஒட்டுதல்.
அணன் - பொருந்தியவன்.
அணு - விநோதம், ரூபாயின் பதினாலொருபகுதி, வீச ரூபாய்.
அணுப்பல் - அணுப்புதல்.
அணுப்பி - ஏய்ப்பவள், ஏமாற்றுபவள்.
அணுப்பித்து - ஏய்த்து.
அணுப்பு - ஏய்க்கை, ஏய்.
அணுப்புதல் - ஏய்த்தல், ஏமாற்றுதல்.
அணுர் - கழுத்து.
அணுவல் } அணுவுதல், சார்தல்,
அணுவுதல் } புணர்ச்சி.
அணுவு - நெருங்கு, கிட்டு.
அணி - முகம், படையுறுப்பு, அன்பு, வரிசை, இனிமை, அணியிலக்கணம், கம்மாளர் கருவி, மாலை, சமீபத்தில், அடுக்கு, அணியென்னேவல், கூட்டம், சம்பாரம், சமீபம், அச்சாணி, அலங்காரம், அழகு, ஆபரணம், எல்லை, எச்சீர், ஒழுங்கு, ஓரிலக்கணம், நன்மை, நிரை, பூண், அலங்கரி, பொருந்து, சூழ், படை வகுப்பு, பெருமை, பூமாலை, நுணை.
அணிகம் - அணிகலம், வாகனம், ஆபரணச்செப்பு, சிவிகை.
அணிகலச்செப்பு - கண்டிகை, பீடிகை, காண்டம், கடிப்பம், கோடிகம், ஆபரணப்பெட்டி.
அணிகலம் - ஆபரணம், கம்மாளர் கருவி, பணிமூட்டு, அணிகலன்.
அணிகலன் - ஆபரணம்.
அணிகலன்கள் - மக்கள் பொன் வெள்ளி முதலியவற்றால் அணிந்துகொள்ளும் அணிகளாம். ஆண் அணிகளாவன; மூடி, குண்டலம், வாகுவலயம், வீரகண்டை, அரைஞாண் முதலியன. பெண்களின் அணிகளாவன - கால் விரல் அணிகள், மகரவாய் மோதிரம், பீலி, கான் மோதிரம் முதலியன. காலணிகளாவன - பாத சாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்

சரி, பரியகம் முதலியன. தொடையில் அணி ஆபரணமாவது - குறங்குசெறி என்பது. அல்குலிடத்து அணிவது - விரிசிகை என்னும் அணி. தோளிடத்தணிவது - மாணிக்கவளை, முத்துவளை. கையணியாவது - சூடகமும், பொன்வளையும், நவமணிவளையும், சங்கவளையும், பவழவளையுமாம். கைவிரல் அணியாவது - மெறி, பலரத்தினங்கள் இழைத்த மோதிரங்கள். கழுத்தணிகளாவன - வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, பொன்னூல், சவடி, சரப்பளி. காதில் அணிவன - கடிப்பிணை, வாளி, குழை முதலிய. தற்காலத்தவர் காலத்திற்கு இசைந்தபடி பலவகைப்படச்செய்து அணிவர். தலைக்கு அணிகலன்களாவன - சீதேவியார் எனும் பணி, வலம்புரிச்சங்கும், பூரப்பாளையும், தென் பல்லிவடபல்லியும், புல்லகமும், சூளாமணி, பொன்னரிமாலைமுதலியன. இடைக்கணி முதலிய இக்காலத்து அணிகள் ஒட்டியாணம் முதலியவாம். மூக்கிலும், காதிலும் இக்காலத்து அணியும் அணிகள் பலவுள. அவற்றை அறிந்து தெரிக. பின்னும் ஆடவர் அணிவது— முடி, பதக்கம், தோளணி, குண்டலம், காதணி, குணுக்கு, தோடு, கங்கணம், கைவளை, சுட்டி, பட்டம், பாதகிண்கிணி, சதங்கை, சிலம்பு, காற்சரி, பாதசாலம், பாடகம், ஒசை செய்தளை, கழல். பெண்களணியாவன - காஞ்சி, மேகலை, கலாபம், பருமம், விரிசிகை, அரைப் பட்டிகை, அரைஞாண், செலிமலர்ப்பூ, ஆழி, பூணூல், நுதலணி, தெய்வவுத்தி, தலைக்கோலம், தலைப்பாளை, இம்பூரி, பெருஞ்சூட்டு, சரப்பணி, மதாணி முதலிய.

அணிசு - அணிது.

அணிச்சை - நாகமல்லிகை.

அணிஞ்சில் - கொடிவேலி, அழிஞ்சில், சிற்றாமுட்டி, கொச்சி, முள்ளி.

அணிதல் - ஆர்த்தல், சூடல், தரித்தல், புனைதல், பூணம், மலைதல், மிலைதல், வேய்தல், பிளைச்சல், எய்தல், வரித்தல், பூணுதல், வர்ணித்தல், பொருந்துதல், சூழ்தல், அணிந்துநிற்றல், அலங்கரித்தல், படைவகுத்தல், பூணல்.

அணித்து - சமீபித்தது.

அணிநுணை - அன்னவண்ணை, சீத்தா என்னும் மரம்.

அணிந்தம் - கோபுரவாயிலின் மேடை.

அணிந்தவை திருத்தல் - மெய்ப்பாடுகளுள் ஒன்று. அது ஒரு பெண் தானணிந்திருக்குங் கடி சூத்திர முதலியன திருத்துதல்.

அணிந்து - அழகுபெற்று, தரித்தென்னும் வினையெச்சம்.

அணிந்துரை - பாயிரம்.

அணிபெறுத்தல் - அலங்காரம் பெறச்செய்தல், புனைதல்.

அணிப்படுத்தல் - அணிப்படுத்துதல், சிங்காரித்தல்.

அணிமா - அட்ட சித்தியிலொன்று, அஃது அணுப்போலாதல்.

அணிமுலை - பூசுணைக்கொடி, பூசணி.

அணிமை - சமீபம், நுட்பம், அண்மை, அணுமை.

அணியம் - கப்பலின் முற்பக்கம், படை வகுப்பு, ஆயத்தம், தளபாடம்.

அணியல் - அணிதல், ஆயத்தம், தளபாடம், படலின் முன்பக்கம், மாலை, அழகு செய்கை.

அணியன் - அணியுடையவன், கிட்டினவன், நெருங்கினவன்.

அணியியல் - இது ஓர் அலங்கார நூல்.

அணியிலக்கணம் - பஞ்ச இலக்கணத் தொன்று, அலங்காரலக்ஷணம்.
அணியெண் - முப்பத்தைந்து.
அணிலம் - அணில்.
அணிலன்-அட்டவசுக்களில் ஒருவன்.
அணில் - அணிற்பிள்ளை, அன்றில், இலுதை, வரிப்புரம், இதன் பிள்ளை - குட்டி, வெளில், பறழ், பிள்ளை.
அணில்வரியன் - ஒரு நிறப்பசு, ஒரு வகைப்பட்டு, ஒருவகைப் பலாப் பழம், ஒருவகை வெள்ளரி.
அணில்வாற்றினை - ஒருவகைத் தினை.
அணிவகுத்தல் - படைவகுத்தல், வியூகப்படுக்தல்.
அணிவகுப்பு - படைவகுப்பு.
அணிவடம் - மாதர்கழுத்தணியில் ஒன்று.
அணிவியூகம் - படைவகுப்பு.
அணிவிரல் - மோதிரவிரல்.
அணிவில் - பேரேடு.
அணிவு - அணிதல்.
அணிவேர் - வெட்டிவேர், குருவேர்.
அணிற்பிள்ளை - அணில்.
அணு - இனம, உயிர், சிறுமை, நுண்மை, ஆன்மா, ஒருவகைத் தானியம், சூக்கும சத்தி ரூபம், சூக்குமதேகம, பரமாணு, பொடி, சூக்குமசரீரம்.
அணுக - கிட்ட.
அணுகம் - சிறியது.
அணுகலர் - அயலார், பகைவர்.
அணுகல் - கிட்டல், அணுகுதல்.
அணுகன் - சமர்த்தன்.
அணுகாரணவாதம் - பரமாணுக்க டாமே பிரபஞ்சமாகத் தோன்றி நின்று அழியுமென்று சொல்லுதல்.
அணுகார் - பகைவர், அணுகலர்.
அணுகு - கிட்டு.
அணுகுதல் - அணிகல், கிட்டுதல்.
அணுகுபு - அண்ணிதாகநின்று.
அணுக்கத்தொண்டர் - சமீபமாயுள்ள சேடர்.
அணுக்கம் - சந்தனம், அணிமை.
அணுக்கர் - சிநேகர்.
அணுக்கன-அந்தரங்கன், சமீபஸ்தன், சமீபத்தன், சினேகிதன், தொண்டன், குடை.
அணுக்கன்றிரு வாயில்- தன்னையடைந்தாரைச் சிவன்சமீபமாகச் செய்யும் வாயில், கர்ப்பக்கிரகவாயில்.
அணுக்கி - அணுக்களுக்குப்பெண் பால்.
அணுக்கு - சமீபம், அணிமை.
அணுசதாசிவர் - சதாசிவதத்துவத்தில் சதாசிவமூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண்டிருந்து போகங் களைப்புசிக்கும்பரமுத்தர், இவர்கள் பிராணவர், சதாக்கியர், தீர்த்தர், காரணர், சுசிலர், ஈசர், சூக்குமர், காலர், தேகேசுவரர், அங்குசு எனப் பதின்மராவர்.
அணுசைவம - ஒருவகைச் சைவம். அதுசிவனையுள்ளும் புறமும பஞ்ச கிருத்தியஞ் செய்வனென்றறிந்து திகம்பர வேடங்கள்பூண்டு சன்மார்க்க லகக்ஷணத்தோடுகூடிக் குருலிங்கவேடம் பொருளாய்ச் சிவன் செயுந் தொழில்களை அனுபவத்திற் பார்த்தானந்தம்பொங்கி அதன்கண் மனோலயமாவதே மோக்ஷமென்று சொல்லுவதாம்.
அணுச்சைவம் - சைவம் பதினெறில் ஒன்று.
அணுத்துவம் - அணுத்தன்மை, நுண்மை.
அணுபட்சநவபேதம் - சத்தியலோக முதற்புவனாதிபதிகளாய் வாஸ்தவ பேதபேதங்களாயிருக்கும் பிரமா முதற் சிவமூர்த்தி பரியந்தம் ஒன் பதின்மராகிய பேதமாம்.
அணுபட்சம் - ஆன்மபட்சம்.
அணுபரசிவன் - அணுபட்சத்துப் பர சிவன்.
அணுபேதம் - ஆன்மபட்சபேதம்.
அணுபை - மின்னல்.

அணுப்பிரமன் - ஆன்மபட்சப்பிரமன்.
அணுமூர்த்தி - ஆன்மமூர்த்தி.
அணுமை - அணிமை, சமீபம்.
அணுரூபம் - அணுவகை, மிகச் சிற்றுரு.
அணுரூபி - ஆன்மா,கடவுள்.
அணுரேணு - சிறுதுகள்.
அணுவ்தம் - அணுவிரதம்.
அணுவிரதம் - ஒருசைனவிரதம்.
அணுவங்கபதிகள் - விஞ்ஞானகலரிற் பரிபக்குவம் வந்தவர்களில் தீவிர பக்குவம் வந்துளோர்களாய்ச் சூக்கும சிவாபிமியத்தில் விளங்கிச் சத்திதத்துவத்தும் சிவ தத்துவத்தும் இருப்பவர்கள்.
அணுவலி - ஆன்மசத்தி.
அணுவெழுத்து - இனவெழுத்து.
அணை - அணையென்னேவல், உதவி, நீர்க்கரை, கரைப்பொது, துயிலிடம், ஆசனம், மூட்டு, செய்கரை, படுக்கை, புணர்ச்சி, மெத்தை, வரம்பு, அணைக்கட்டு,அரியணை, சேரு, தணி, சேர் தழுவு, அவி.
அணைகட்டல் - வரம்புகட்டல்.
அணைகயிறு - எணைக்கயிறு, பால்கறக்கக் கட்டுங்கயிறு.
அணைகோல - அணைபோட, அணைகட்ட.
அணைக்கட்டு - வரம்புகட்டு, குறுக்கணை செய்கரை.
அணைக்காரன்-அணைக்கட்டின் காவற்காரன்.
அணைக்கை - அணைத்தல்.
அணைசு - வங்கியத்தின் முகத்திலமைப்பது.
அணைசல் / அணைசுதல் } ஒதுங்கல்,ஒதுக்கல்.
அணைச்சொல்-அசைச்சொல், துணைச்சொல்.
அணைதல் - படுத்தல், பிறத்தல், சார்தல், பொருந்துதல், அடைதல், உண்டாதல், அவிதல், சேர்தல், புணர்தல்.
அணைதறி - யானைகட்டுங்கயிறு.
அணைதுகில் - எணையாடை.
அணைத்தல் / அணைப்பு } கட்டுதல், அடுத்துக் கொள்ளுதல், கூட்டி முடித்தல், உண்டாக்குதல், தழுவல், அவித்தல், சேர்த்தல், தழுவுதல், அணையச்செய்தல், தழுவுகை, அணைக்கை.
அணைமரம் - கன்றிழந்த பசுவை கறக்கத்தற்கு அணைக்குங் கணைமரம்.
அணையாடை-எணைத்துகில், சாணைச்சீலை, பிறந்த குழந்தைக்கு தொப்புள்ளிருக்குஞ்சீலை.
அணையார் - பகைவர்.
அணைவு - அணைக்கப்பட்டது, அணைத்தல்.
அணைக்கம் - அணைக்கம், மரப்பொது, மரம், மேனைக்கம்.
அண் - அண்ணென்னேவல், தடியில் வெட்டியவரை, மேல், வேட்டைநாயின் உருவுகயிறு, கிட்டு.
அண்டகடம் / அண்டாகடகம் / அண்டகபாலம் } அண்டகோளவேடு, குப்பைமேனி.
அண்டகம் - குப்பைமேனி, சிறுமுட்டை, பீசகோசம்.
அண்டகன் - அண்ணகன்.
அண்டகாரம்-முட்டை வடிவமானது.
அண்டகை - அப்பவருக்கம்.
அண்டகோசம் - அண்டசொரூபசாத்திரம், எல்லை, பழத்தோல், பழம், பீசப்பை, முட்டைவடிவான அண்டம்.
அண்டகோளகை - அண்ட கடாகம், கூடம், கடாகம், அண்ட உருண்டை.
அண்டகோளம் - அண்டகோளகை, அண்டவுண்டை.
அண்டங்காகம் / அண்டங்காக்கை } ஒருவகைக்காகம். அதுகழுத்தில் வெண்மையுடைய மற்றைக் காகங்களைப்போலாது உடன்முழுவதும் கருமையையுடையது, கலோலம்.

அண்டசம் - முட்டையிற் பிறப்பன. அவை அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான், தவளை, நண்டு, பல்லி, பறவை, பாம்பு, மீன், முதலை முதலியன, அண்டஜம்.

அண்டசன் - பிரமா.

அண்டசை - கத்தூரி.

அண்டச்சுவர் - பித்திகை, அண்டகடாகம.

அண்டத்தைலம் - கோழிமுட்டைத் தைலம்.

அண்டரதன் - சிவன்.

அண்டநாயகி - உமாதேவி.

அண்டபகிரண்டம் - துருவ சக்கரத்துட்பட்ட உலககோளமும் அதற்குப் புறத்திலுள்ள கோளமும.

அண்டபிண்டம் - பிரமாண்டமுந் தேகமும்.

அண்டப்பரப்பு - உலகப்பரப்பு.

அண்டப்பார்த்தல்-பொருந்தப் பார்த்தல்.

அண்டப்பித்தி - அண்டச்சுவர்.

அண்டப்புத்தேள் - விராட்புருடன்.

அண்டப்புரட்டன் - பெரு மோசக்காரன்.

அண்டப்புளுகன் - பெரும்பொய்யன்.

அண்டமான்-ஒருதீவு.

அண்டமீன்றவன் - பிரமா.

அண்டமுகடு - அண்டத்தினுச்சி, மூதண்டம்.

அண்டமூர்த்தி - அண்டரூபி.

அண்டம - ஆகாயம், உலகம், தலையோடு,மேலுலகம், பீசம, முட்டை, விதை, வாசம்.

அண்டயோனி - முட்டையிற் றோற்றுவது, சூரியன்.

அண்டரசம் - சுத்தரசம்.

அண்டரண்டப்பட்சி- பெரும்பறவை.

அண்டரண்டம் - தேவரண்டம், பகிரண்டம்.

அண்டர் - அண்டார், இடையர், பகைவர், தேவர், வானோர், அண்டலர்.

அண்டர்நிலை - பொன்னுலகாணி.

அண்டர்பிரான் - சிவபெருமான், மகாவிஷ்ணு.

அண்டலர் } பகைவர்.
அண்டலார் }

அண்டல்-அண்டுதல், அழுந்தல், கிட்டுதல், சேர்தல், நெருங்கல், கிட்டல்.

அண்டவாணர் - ஆகாய வாசிகள், தேவர்.

அண்டவாணன் - தேவன்.

அண்டவாசகம் - அந்திரவாயு, வளி, விரைவாதம, குடலிறக்கம், அணடவாயு.

அண்டவாயு-அண்டவாதம,ஒருநோய்.

அண்டன் - கர்த்தா, சிவன், கடவுள்.

அண்டா - பெருஞ்சட்டி, பெரும் பாத்திரம்.

அண்டாகாரம - முட்டைவடிவம்.

அண்டாதவன் - பகைவன்.

அண்டாதிநாதன் - சிவலோகத்திலே சக்கணதிசையோலக்கஞ் சேவிக்கும் பதினெண் முக்கிய கணே சரிலே ஒருவன்.

அண்டார் - பகைவர்.

அண்டிகம் - செங்நாய், நாய்.

அண்டிகா - மட்பானை.

அண்டிக்கொட்டை - முந்திரிக் கொட்டை.

அண்டிமாங்கொட்டை - முந்திரிக் கொட்டை.

அண்டிமாண்டு - நோட்டேபாண்டு.

அண்டிரன் - ஆடவன், ஆ என்னும் வள்ளல், ஆய்.

அண்டினவன் - நம்பிச்சேர்ந்தவன்.

அண்டில் - மாடு முதலிய ஊற்றின் கண்ணிற்பற்றும் ஒருபூச்சி.

அண்டீரன் - ஆடவன், சமர்த்தன்.

அண்டு - மணிவட முதலியவற்றின் உரு, கிட்டு, அடை, எல், தகு.

அண்டுகை } ஒதுங்குதல், பொருந்துதல், கிட்டுதல், நெருங்கல், எற்றல், ஆசிரயித்தல், அண்டல்.
அண்டுதல் }

அண்டுப்புழு - அண்டில்.
அண்டை - சமீபம், பக்கம், நீர்தாவும் கருவி, அயல், அருகிடம், ஒட்டு, பிறலடைக்குந்துண்டு, மூட்டு, விரமபு.
அண்டைபோடல் - ஒட்டுப்போடுதல்.
அண்டையயல் - அக்கம்பக்கம், அண்டை அயல்.
அண்டையர் - அயலார்.
அண்டைவீடு - பக்கத்துமனை.
அண்ணகன் - பீசம் வாங்கப்பட்டவர், கோசா.
அண்ணணி - மிகவும் சமீபத்தில்.
அண்ணணித்து - மிகக்கிட்டியது.
அணணந்தாள் - அண்ணந்தாள்.
அணணம் - உண்ணு, மேல்வாய், உண்ணுக்கு.
அண்ணலார் - சிவபெருமான்.
அண்ணல் - அரசன், அருகன், சார்தல், கடவுள், சிவன், தமையன், தலைமை, புத்தன், இராசா, பெருமை, பெருமையிற் சிறந்தோன், முல்லை நிலத்தலைவன், மேல்வாய், ஆணரி, அணர், அண்ணன்.
அண்ணன் - முன்னோன், தமையன், சேட்டன், முன்னே, மூத்தோன், முன், தம்முன் தோன்றல், முன் பிறந்தான்.
அண்ணன் மனைவி - அண்ணி.
அண்ணு - அண்ணம், அருணைசலம், உண்ணுக்கு, அண்ணுக்கு, அண்ணன், உண்ணு, தகப்பன்.
அண்ணுக்கயிறு - அரைஞாட்கயிறு.
அண்ணுக்கு - உண்ணுக்கு, அண்ணு.
அண்ணுச்சி - அண்ணன்.
அண்ணுடகம் - அன்னுடகம்.
அண்ணுத்தல் - அங்காத்தல், மேனோக்கல், மேல்நோக்குதல், தலைநிமிர்தல், வாய்திறத்தல்.
அண்ணுத்தை - அண்ணன், வெறும் பெரியவர்.
அண்ணுந்தாள் - அண்ணந்தாள், தண்டனைக்கயிறு, தண்டனைவகை.
அண்ணுமலை - அருணைசலம்.
அண்ணுர் - பகைவர், அண்ணன், அண்ணுரு, அண்ணு.
அண்ணுவி - நட்டுவன், உவாத்தி, புலவன், மூத்தோன், உபாத்தியாயர், கூத்துத்தலைவன், அதிகாரி, அண்ணுவியார்.
அண்ணுழ்வி - தமையன்.
அண்ணுளன் - அலி.
அண்ணி - தமையன் மனைவி, தித்தி.
அண்ணிசு - அணுமை.
அண்ணிடல் - பொருந்தல்.
அண்ணிது - அணிமை.
அண்ணித்தல் - தித்தித்தல், பொருந்துதல், மதுரித்தல்.
அண்ணிப்பான் - மதுரிப்பான்.
அண்ணிமை - சமீபம்.
அண்ணியது - கிட்டியது.
அணணியன் - சமீபமானவன்.
அண்ணு - அன்று, அண், சேர்.
அண்ணுதல் - பற்றுதல், சார்தல், அணுகுதல், பொருந்துதல், கிட்டுதல்.
அண்ணைரிஞ்சான் பூண்டு - அன்றெரிந்தான் பூண்டு.
அண்பல் - மேல்வாய்ப்பல், அடிப்பல்.
அண்புதல் - அண்மு.
அண்மல் } கிட்டுதல், அண்டுதல்,
அண்முதல் } அண்ணுதல்.
அண்மு - அன்பு, கிட்டு.
அண்மை - சமீபம், அணிமை, அடையுந்தன்மை, அணுமை.
அண்மைச்சுட்டு - சமீபத்திலிருக்கும் பொருளைச் சுட்டிக்காட்டல்.
அண்மைவிளி - சமீபத்திலிருப்பவரை அழைத்தல்.
அண்வருதல் - சமீபமாயிருத்தல்.
அத - அத்தி.
அதகடி - அதட்டு, அதக்குதல், குதப்புதல்.
அதகணம் - நாசகணம்.
அதகம் - சுக்கு, பெருமருந்துக்கொடி, மருந்து.

அதகன் - வைத்தியன், வலிமையுள்ளவன், வலியோன்.

அதக்கு - கசக்கு, இளக்கு, குதப்பு.

அதக்குதல் - இளக்குதல், கசக்குதல், குதப்புதல், வாயில் அடக்குதல், கீழ்ப்படுத்துதல், கெடுத்தல்.

அதங்கம் - ஈயம்.

அதங்கோட்டாசான் - அகத்தியமுனிவனிடங்கற்ற தொல்காப்பியன் முதலிய பன்னிரு மாணவர்களுள் ஒருவன்.

அதசம் - ஆன்மா, காற்று, மரவுரி, ஆத்மா.

அதசி - சணல்.

அதிரசு - பரிதானம் வாங்குவோர் புகும் நரகம்.

அதிரோதோபவம் - இரு வகைச் சைவாகமங்களுளொன்று.

அதசு - கேள்வி, நாசம்.

அதடம் - மலை முதலியவற்றின் சரிவில்லாத இறக்கம், செங்குத்து.

அதட்டம் - அரவுயிர்ப்பு, அரவினச் சுப்பல், பாம்பின் கீழ்வாய்ப் பல்.

அதட்டல் - உரப்புதல், உறுக்குதல், அதிர்த்தல், உரப்பல், ஒப்பல், உறுக்குதல், சீறல், தெழித்தல், முழங்கல், செழித்தல், தொனித்தல்.

அதட்டு - அதட்டென்னேவல், உறுக்கு, கண்டி, உறுக்குதல், உரப்புதல், உரப்பு.

அதட்டுதல் - அதட்டல், அதட்டுகை.

அதண்டை - தூஷணமான வார்த்தை, அகங்காரம்.

அதத்குணாலங்காரம் - பிறிதின் குணப்பேரின்மையணி.

அதத்தம் - அபலக்கொடை.

அதத்தன் - குபேரன்.

அதத்துவாவிருத்தி - சரீர முதலியவைகளோடியைந்தியால் நேதிகளோந்து எஞ்சி நின்ற ஆன்மாவைத் தெரிவித்தல்.

அதத்துவியாவிருத்தம் - மற்றைப் பொருளிலிருந்து நீங்கி இலக்கியத்திலிருக்கும் இலக்கணம்.

அதபலோகம் - பௌத்தமதத்தின் பிரமலோகம் இருபதனுட் பதின் மூன்றாவது லோகம்.

அதப்பாதாளம் - எட்டாத ஆழம்.

அதப்பியம் - அசப்பியம், சபைக் கடாத சொல்.

அதப்பு - மரியாதை.

அதமசரீரம் - பரலோக இகலோக புத்திகள் இல்லாதிருக்கிற சீவனைக் கொண்ட சரீரம், கற்பகத்தரு, பாரிசாதம் முதலாயின அதமசரீரம்.

அதமசிருட்டி - ஐவகைச் சிருட்டிகளில் ஒன்று. இச்சிருஷ்டி காலத்திலே குணநிலப் பிரமவிட்டுணுக்களும், பிரமாண்ட நிலயப் பிரமவிட்டுணுக்களும் குணதிபிருகியத்த புவனங்களிலே போகக்கியப் பொருள்களையுந், தூல தேகங்களையும், தேவர் முதலிய தேகிகளையும் படைத்துக் காப்பர்.

அதமதமப்பிராரத்தம் - அதமப் பிராரத்தத்திலும் அதிகப்பட்ட பிராரத்தம். அது இட்டப்படி நடத்தல் புசித்தல் முதலிய பிரமாதங்களுக்கேதுவானது.

அதமதரப்பிராரத்தம் - கனிட்டப் பிராரத்தத்திலும் அதிகப்பட்ட அதமமான பிராரத்தம். அது முதலில் நிவர்த்திக்கும் பின் பிரவர்த்திக்குங் காரணமானது.

அதமதானம் - கடைப்படுதானம். அது ஆசை, புகழ், அச்சம், கைம்மாறு, கண்ணோட்டம், கடப்பாடு முதலிய காரணம் பற்றி கொடுக்கப்படும் கொடையாம்.

அதமத்தேற்கருவி - முழவேழு வகையுளொன்று. அது கணப்பறைமுதலான புறமுழவும் நெய்தற்பறை முதலான புறப்புறமுழவுமாம்.

அதமபட்சம் - மிகக் குறைந்தபடி, குறைந்தது.

அதமபிருகதன் - சுமைகாரன்.
அதமம் - கடைத்தரம், நீதிதப்பு.
அதமர் - கடையாயர், கடைத்தரமானவர்.
அதமர்ணிகன் - கடன்வாங்கினவன்.
அதமவாசான் - மூவகைக் குரவருட் கடைத்தரமானவன், இவன் வைசியர்க்குஞ் சூத்திரர்க்குங் குரு.
அதமவிஞ்சதி - பிரபவமுதலிய அறுபது வருடங்களிலே தீதாக விளங்குங்காலமாகிய கடையிருபது வருடம்.
அதமவிமிசதி - அதமவருட மிருபஃது.
அதமன் - கடையானவன், நாணமில்லாக்காமி, தாழ்ந்தவன்.
அதமாக - ஹதமாக.
அதமாகல் - அழிதல்.
அதமாக்கல் - அழித்தல்.
அதமாங்கம் - கால்.
அதமாதமன் - மிசக்கீழ்மையானவன்.
அதம் - அத்தி, சங்காரம், தாழ்வு, கீழ், தொலை, பள்ளம், பின்பு, பாதாளம், பாதலம், நாசம், சங்காரித்தல், ஹதம்.
அதம்பண்ண - அதம் ஆக்க.
அதம்பம் - கற்பரிபாஷாணம்.
அதம்பல் } அதட்டல், கண்டித்தல்.
அதம்புதல் }
அதம்பு - அதட்டு.
அதம்பழம் - அளிந்த பழம்.
அதரபானம் }
அதரமதம் } இதழூறல்.
அதரமது }
அதரம் - உதடு, கீழுதடு, நிதம்பம்.
அதராமிர்தம் - அதரபானநீர்.
அதராவலோபம் - இதழதுக்கல்.
அதரிகொள்ளுதல் - கடாவிடுதல், பகைபழித்தல்.
அதரிசனம் - காணப்படாமை, குருடு, மறைதல்.
அதரிசனன் } கடவுள், குருடன்.
அதரிசி }
அதரிடைச்செலவு - வீரர் நிரைமீட்சிக்கு புறப்படும் புறத்துறை.
அதரிதிரித்தல் - கடாவிடல்.
அதரித்திரன் - கன்னன், தரித்திரமில்லான், செல்வன்.
அதருமம் - அநீதச்சொல், பாவமான செய்கை, நீதிக்கேடு, பாவம், அதர்மம்.
அதருமாத்திகாயம் - யாதனுசரீரம்.
அதருவணம் - அதர்வணவேதம்.
அதர் - ஆட்டின் கழுத்திலே தொங்கும் குழல், முறைமை, நீளக்கிடங்கு, நுண்மணல், புழுதி, வழி, விலங்கு செல்வழி, அஜாகளஸ்தனம், புழுதி.
அதர்கொளல் - வழிப்பறித்தல்.
அதர்கோள் - வழிப்பறி.
அதர்க்கம் - குதர்க்கம்.
அதர்க்கன் - குதர்க்கி.
அதர்ப்படுதல் - தெறிப்படுதல்.
அதர்பறித்தல் - குழிவெட்டல்.
அதர்மசாரி - அதர்மவழியிற் செல்லுவோன்.
அதர்மம் - தருமமல்லாதது, அது வேதத்துள் விதிக்கப்பட்டன செய்யாமையும் விலக்கப்பட்டன செய்தலுமாம், அறமல்லாதது, பாவம், அதன்மம், அதருமம்.
அதர்மன் - சதருத்திரருள்ளே இயமதிசையிலிருக்கும் தச ருத்திரருள் ஒருவன், அதருமன், அதன்மன்.
அதர்மாசாரி - துராசாரி.
அதர்மாத்திகாயம் - காணைகாயத்தொன்று.
அதர்மாஸ்திகாயம் - பஞ்சாஸ்திகாயத்தொன்று.
அதர்வகிகை }
அதர்வசிரசு } அதர்வணவேத உபநிடதத்தொன்று.
அதர்வசிரம் }
அதர்வச்சிரம் - உபநிடதம் முப்பத்திரண்டினுள்ளொன்று.
அதர்வணம் - நான்காம் வேதம், அதர்வம்.

அதர்வணவேதோப நிடதங்கள் - அதர்வணவேதத்துக்குரிய உபநிடதங்கள். அவை காருடம், தத்தாத்திரேயம், அயக்கிரீவம், கிருஷ்ணம், கோபாலதபனம், பிரச்சினம், திரிபாத்வீய மகாநாராயணம், இராமரகசியம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிகை, கணபதி, மகாவாக்கியம், பசுமசாபாலம், பாவனை, தேவி, திரிபுராதபினி, பரப்பிரமம், பாசுபதம், ஆக்மம், சூரியன், அன்னபூரணை, மிருகச்சாபாலம், நரசிம்மதாபனி, நாரதபரிவிராசகம், சீதை, இராமதாபனி, சரபம், சாண்டில்லியம், பரமஹம்ச பரிவிராசகம் என்னு முப்பத்தொன்று.

அதர்வணன் - சிவன்.

அதர்வணி - அதர்வண வேதத்திலே நற்பயிற்சியுடைய பிராமணன்.

அதர்வம் - நான்காம் வேதம், அதர்வணம்.

அதர்வர் - ஒரு இருடி.

அதலகுதலம் - கலகம், குழப்பம்.

அதலமூலி - ஆடுதின்னுப்பாளை.

அதலம் - கீழேழுலகிலொன்று.

அதலர் - நாகர்.

அதலன் - சிவபெருமான்.

அதவம் - அத்திமரம், பள்ளம், பின்பு.

அதவா - அல்லாமல், அல்லது.

அதவாபட்சம் - அல்லாதபட்சம்.

அதவிடம் - அதிவிடயமூலிகை.

அதவு - அத்தி, நெய், பள்ளம், அத்திமரம், கொல்லு, எதிர்த்து நெருக்கு.

அதவுதல் - கொல்லுதல்.

அதவை - கீழ்மகன், கீழோன்.

அதழ் - பூவிதழ், இதழ்.

அதளி - அமளி, குழப்பம்.

அதளை - அடைநிலப்பீர்க்கு, புளியதளை, வயல், வெளியிலிடும் காவற்குடிசை, பெரும்பாத்திரம், நிலப்பீர்க்கு.

அதள் - களகம்பளம், தோல், பட்டை.

அதள்புனையரணம் - தோற்கைத்தளமென்னுங் கருவி.

அதறு - பதறு.

அதறுதல் - உதிர்த்தல், பதறுதல்.

அதனப்பற்று - அதரப்பற்று.

அதனப்பிரசங்கி - அகங்காரி, அதிகப்பிரசங்கி.

அதனம் } மிகுதி, மீதி.
அதனு }

அதன்ம சாதனம் - தருமமல்லாத செயல்.

அதன்மம் - பாவம், நீதிக்கேடு, அதர்மம்.

அதன்மாத்திகாயம் - சமண மதத்திற் சொல்லிய அசீவ பதார்த்தத்தினது நான்குவகையுள் ஒன்றாய்த் தீமை பயப்பதோ ரத்தியாயம்.

அதாங்கி - ஒரு காட்டுமரம்.

அதாசலம் - காட்டுமல்லிகை.

அதாதா - உலோபி.

அதாதிமக்கம் - அதாதிமந்த ரோகம். அது அதிமந்தரோகம் ஐவகைகளுளொன்று.

அதாதிமந்தரோகம் - கண்களில் விரணத்தைப் பிறப்பித்துப் பார்வையைக் கெடுக்கும் ஒருவகை நோய்.

அதாதிரு - உலோபி, கன்னிகையை விவாகம் பண்ணிக் கொடாதவன்.

அதாது - தாதுவல்லாதது.

அதாதுவல்லாமலும்.

அதாயன் - தாயத்துக் குரிமையில்லாதவன்.

அதாரன் - விவாகஞ்செய்யாதவன்.

அதாலத்து - நியாயஸ்தானம்.

அதாவெட்டில் - தற்செயலாய்.

அதி - அதிதி, மிகுதிப்பொருளைக் காட்டு மசைச்சொல்.

அதிகசிதம் - பெருநகை.

அதிகடம் - யானை.

அதிகண்டம் - நித்திய யோகத்தொன்று, மரணவஸ்தை, அது சந்திரனைப்பற்றியது.

அதிகதம் - அடையப்பட்டது, அறியப்பட்டது, சென்றது, படிக்கப்பட்டது.

அதிகதை - பயனில் பேச்சு.

அதிகநாரி - கொடிவேலி.

அதிகந்தம் - ஒருவாசனைப்புல், கெந்தகம், சண்பகப்பூ.

அதிகப்பட - அதிகப்படி.

அதிகப்படி - அளவுக்குமேல்.

அதிகப்படுதல் - மிகுதியாதல்.

அதிகப்பற்று - பெரும்பான்மை, வரவேண்டியதற்கு மேற்பற்றுதல்.

அதிகப்பிரசங்கம் - அதிகப்படப் பேசுதல், தன் மேம்பாட்டுரை.

அதிகப்பிரசங்கி - மட்டுக்குமிஞ்சிப் பேசுவோன்.

அதிகமாதம் - ஆறுவருஷத்துக் கொருதரம் ஒரு வருஷத்தில் அதிகமாகு மாதம். அதிகமாதம் மூன்றுவருஷத்திற் கொருமுறை அதிகப்பட்டுவரும் மாதம்.

அதிகமாதாபவாதம் - அதிகமாச தோஷ நிவிர்த்தி.

அதிகமான் - அதியமான், திருவள்ளுவ நாயனாரது சகோதரருள் ஒருவர்.

அதிகம் - அடையாளம், இலாபம், ஏற்றம், ஓரலங்காரம், குருக்கத்திமரம், சேனை, மேன்மை, உதாரணங்களைப் பலவாறுகப் பிரயோகித்தல், தோல்வித்தான மிருபத்திரண்டிலொன்று, படை, பொலிவு, மிகுதி, மேன்மை.

அதிகரணத்துவம் - அதிகரணமாயிருக்குந் தன்மை.

அதிகரணம் - இடம், உரித்து, எழனுருபு, கேள்வி, மேன்மை, தன்னூற் கூறப்படும் பொருளும், அதன் கீணையப்பாடும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும், அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிவும், இயையுமென்னு மிவற்றினது நிலைக்களம், ஆதாரம்.

அதிகரி - அதிகப்படு, விசேஷி.

அதிகரிக்கை, அதிகரித்தல், அதிகரிப்பு } அதிகப்படுதல், விசேடித்தல், விருத்தியாதல்.

அதிகர் - மேலானவர், பெரியோர்.

அதிகர்த்தம் - இருபத்து நான்குவகை அக்கினிக் கீடங்களுள் ஒன்று.

அதிகல் - காட்டுமல்லிகை.

அதிகவுச்சம் - அத்துச்சம்.

அதிகற்றுதி - கொடிவேலி.

அதிகன் - ஆதிக்கன், மேலானவன், அதிகமான், ஒரு வள்ளல். இவன் தனக்குக்கிடைத்த அமிழ்து விளையுங் கருநெல்லிக்கனியை யுத்தானுண்டு உடம்புபெறுதே ஔவைக்குக் கொடுத்தோன், சிவன், பரம்பொருள், அதிகர்.

அதிகாங்கிஷை - பேராசை.

அதிகாசம் - பெருநகை.

அதிகாந்தம் - ஒரு கல், செவ்வானம், மிகுவழகு.

அதிகாயன் - இராவணன் மக்களில் ஒருவன், மிகப் பெருஞ்சரீர முடை முடையவன்.

அதிகாரசத்தி - சிருட்டியாதி அதிகாரஞ் செய்யுஞ் சாமர்த்தியம், சிவன், இலயம், போகம், அதிகாரம் என்பவைகளுள் அதிகாரவத்தையிலிருக்கும்போது அவரோடு நிற்குஞ்சத்தி.

அதிகாரசத்திகள் - பிரமாவை அதிட்டித்துச் சிருஷ்டிசெய்யும் வாமையும், விட்டுணுவை அதிட்டித்துத் திதிசெய்யுஞ் சேட்டையும், காலருத்திரரை அதிட்டித்துச் சங்காரஞ் செய்யும் ரோதயித்திரியுமாகிய சத்திகள்.

அதிகாரசிவன் - மகேசர். இவர் சுத்தமாயையிலே உற்பன்ன காரியத்தைச் செய்வதனால் அதிகார சிவனெனப்படுவர்.

அதிகாரதத்துவம் - ஈசுரதத்துவம்.

அதிகாரத்தலைவன் - அதிகாரி.

அதிகாரத்திரயம் - கருமகாண்டி, பத்திகாண்டி, ஞானகாண்டி என்னு மூவகை அதிகாரிகள். இவருள் தேககிருத்தியாதிகளிற் கிரமத்தில் யானெனதென்னும் அகந்தையுள்ளவன் கருமகாண்டி, சகல கிரியைகளையு மீசுரார்ப்பணஞ் செய்வோன் பத்திகாண்டி, சகல கருமத்துக்குந் தான் சாட்சிகனென்போன் ஞானகாண்டி.

அதிகாரநந்தி - சிவாலயவிழாக்களில் உபயோகிக்கும் வாகனவகை.

அதிகாரபஞ்சகம் - கருமி, மூமூட்சு, அப்பியாசி, அனுபவி, ஆரூடன் என்னும் அதிகாரிகள். அவருள் மூடத்தனத்தால் தன்சாதி கருமமாத்திரம் பிடித்துச் சதசென்மத்தில் முத்தனுகிறவன் கருமி, சகம் அசத்தென்று தெளிந்தாத்கருமநிட்டனுய் மூன்று சென்மத்தில் முத்தனுகிறவன் மூமூட்சு, சொப்பனம்போலப் பிரபஞ்சம் மித்தையென்றறிந்தப்பியந்தரத்தில் நியானுதிகருமயுக்தனுயிரண்டு சென்மத்தில் முத்தனுகிறவன் அப்பியாசி, விவகாரபேட்சை விட்டு விவேகதற்பரனுகி ஏக சென்மத்தில் முத்தனுகிறவன் அனுபவி, விசுவவிகிருதி தோன்றுமல் ஆத்மஞானத்தாற் சத்தியோமுத்தியடைபவன் ஆரூடன்.

அதிகாரப்புறனடை - அதிகாரத்துள் எஞ்சியதற்கோர் விதியாய் நிற்பது.

அதிகாரமலம் - மல்பரிபாகமாந்தியமுடையரான விஞ்ஞானகலரைச் சுத்தாத்துமாக்களில் அதிகாரமுடையராக நிறுத்தும் பெலமுடையமலம்.

அதிகாரமுத்தி - ஆன்மா சுத்தத்துவத்தில் அதிகாரமலத்தோடு மாத்திரமிருப்பதாகிய முத்தி.

அதிகாரமுறை - நூற்பிரிவின் முறைவைப்பு.

அதிகாரமுறைமை - ஒருத்தி; அது முன்னின்ற சூத்திரப்பொருண்மை பின்வருஞ் சூத்திரத்துக்கும் பெறற்பாலனப் பெறவைத்தல்.

அதிகாரம் - அதிகரித்தல், உத்தியோகம், உரித்து, ஒழுங்கு, சிலாக்கியம், தத்துவம், நூலுரை பதினுன்கின் ஒன்று, நூற்கூறுபாடு, பண்பு, சந்தர்ப்பம், தலைமை, ஆரம்பம், பக்குவம், ஆட்சி, முறைமை, உரிமை, இடம், தகுதி, ஆளுகை, அத்தியாயம், அதிகரிப்பு.

அதிகாரர் - தூலபஞ்சகிருத்தியத்திலே உன்முகமாயிருந்த கிரியாசத்திக்குப் பின் இது இப்படியாகக் கடவதென்று சங்கற்பத்தைப் பண்ணுஞ் சங்கற்ப இச்சாசத்திரூபமாயிருந்த ஈசர்.

அதிகாரவுரை - நூலுரை பதினுன்கினொன்று.

அதிகாரன் - மகேசுரன், மேல்விசாரணை செய்வோன்.

அதிகாரி - அதிபதி, நூல்கேட்டற்குரியோன், நூல்செய்வித்தோன், பாட்டுடைத்தலைவன், பக்குவன், விசாரணை கர்த்தா, உரிமையுள்ளவன், தகுதியுள்ளவன், சம்பந்தமுடையவன், கற்றற்குரியவன், அதிகாரன்.

அதிகாரித்துவம்-உடையனுந்தன்மை.

அதிகாரியர் - அதிகாரமுடையோர்.

அதிகாரை - சாதிகாரதீட்சை.

அதிகாலங்காரம் - பெருமையணி.

அதிகாலமே - அதிகாலையில்.

அதிகாலம் } விடியற்காலம்.
அதிகாலை }

அதிகிரமம் - அசட்டை, அதிகப்படல், எதிர்மீறுதல்.

அதிகிருச்சிரம் - ஒருவிரதம். அது ஆறுநாள் ஒவ்வோர்பிடி அன்னமுண்டு மேன்மூன்றுநாள் உபவாசித்திருப்பதாம். 12 நாள் அனுஷ்டிக்கும் ஒரு விரதம்.

அதிகிருதர் - அதிகரித்தவர்.

அதிகிருதன் - அத்தியட்சன், பிராட்டு விவாகன், வரவுசெலவுக் கணக்கதிகாரி.

அதிகிருதி - ஒரு கவிச்சந்தம். அது அடியொன்றிற்கு இருபத்தைந் தசையுடைய நான்கடிகொண்ட தாய் வருவதாகும்.

அதிகிருதை - அதிகாரமுடையவள்.

அதிகுணம் - நற்குணம்.

அதிகுணன் - கடவுள், அருகன், சிவன், நற்குணன்.

அதிகும்பை - பொற்றலைக் கையாந்தகரை, பொற்றை, கரிசலாங் கண்ணி.

அதிகுய்யாவஷ்டகர் - தேயுதத்துவத்திருக்கும் அரிச்சந்திரன், ஸ்ரீசைலன், கல்பமானன், மாதகேச்சுவரன், மகாகாளன், மத்திமன், கேதாரன், வயிரவன் என்னும் எண்மர்.

அதிகுரு - அதிகபாரம்.

அதிகை - அதிகமானது, நடுகாட்டிலே உள்ள ஒரு சிவஸ்தலம்.

அதிகைவீரட்டனார் - அதிகைவீரட்டமெனுந் தலமுடையோர்.

அதிகோரம் - தொகைநரகங்கள் இருபத்தெட்டுள் மூன்றுநரகம்.

அதிகோலம் - அழிஞ்சின்மரம், அழிஞ்சில்.

அதிகோவம் - அதிகோபம், அழிஞ்சில்.

அதிக்கம் - மேன்மை.

அதிக்கிரமம் - அக்கிரமம், மீறுகை, அநீதி, அதிக்கிரமித்தல், நெறிதவறல், மேற்படுதல், மீறுதல், கடத்தல், தப்பிப்போதல்.

அதிக்கிரமி - மீறு.

அதிக்கிரமித்தல் - அசட்டை செய்தல், இல்லாதுபோதல், கடத்தல், கழித்தல், குறுக்கேபோதல், தப்பிப்போதல், நீக்குதல், போகவிடுதல், மேற்படுதல், விடுதல், விலகுதல், மீறுதல்.

அதிக்கிராந்தபிந்து - ஈசுரன் நவபேதத்தில் ஒன்றாகிய ஆண்தத்துவம், ஒரேரூபமான பெரியோர்.

அதிக்கிராந்தம் - அவமதிக்கப்பட்டது, எல்லைகடந்தது, கடந்தது, சென்றுபோனது, மட்டற்றது, மிகுந்தது, வெறுக்கப்பட்டது.

அதிக்கிராந்தவிந்துக பரசிவம் - அதிக்கிராந்த விந்துகபரசிவன்.

அதிக்கிராந்தவிந்துக பரசிவன் - சிவஞானமாக்களுடைய அறிவிக்குப் புலப்படும் பொருட்டுத் தனது சிற்சத்தி சந்நிதி மாத்திரத்தில் தோற்றுவித்த சிவபேதம் ஒன்பதனுள் முதலாவதாகிய நிட்கள சிவம். இவர் விந்துவைநீங்கிய இலயராதலால் அதிக்கிராந்தவிந்துக பரசிவன் எனப்பட்டார்.

அதிக்கிராந்தவிந்துக பராசத்தி - சுத்த மாயையாகிய விந்துவுக்கு மேற்பட்ட விந்துவை அதிட்டிப்பவளாய் அதிக்கிராந்த விந்துக பரசிவத்துக்குச் சத்தியாக நிற்பவள், இந்தச் சத்தியை அதிக்கிராந்தவிந்துக பரசிவந்தோற்றுவித்தது.

அதிக்கிராமகன் - கிரமந்தவறி நடப்பவன்.

அதிக்குதி - ஒவ்வாத நடை, கொடுமையான நடை, செருக்குநடை.

அதிங்கம் - அதிமதுரம், குன்றி.

அதிசகதி - ஒரு கவிச்சந்தம். அது அடியொன்றிற்குப் பதின்மூன்றசையுடைய நான்கடியாய் வருவது.

அதிசக்கரி - ஒருகவிச்சந்தம். அது அடியொன்றிற்குப் பதினேந்தசையுடைய நாலடிகொண்டதாய் வருவது.

அதிசக்குவரி - அதிசக்கரி.

அதிசத்தி - நெருங்கிய வொற்றுமை, பெரிய வல்லமை.

அதிசங்கலிதம் - சங்கலிதசங்கலிதம்.

அதிசங்கை - வீண் சந்தேகம்.

அதிசஞ்சயம் - திரவியக்குவியல்.

அதிசத்திரகம் } காளான்.
அதிசத்திரம் }

அதிசந்தானம - பொய், ஏய்த்தல்.

அதிசயச்சொல் - வியப்புமொழி. அக்கோ, அச்சோ, அத்தோ, அந்தோ, அன்னே, ஆஅ, எற்றே, என்னே, ஐயோ, ஒஒ, அம்மா, அப்பா, என்னே, என்ன.

அதிசயம் - அதிரேகம், அற்புதம், ஓரலங்காரம், விசித்திரம், விபரீதம், விம்மிதம், வியப்பு, இரும்பு, மிகுதி, மேம்பாடு, தூதனம், புதுமை, மாயை, யாக்கைக்குரிய பதினெண்குற்றத்தொன்று, இறும்பூது, சித்திரம், ஆச்சரியம்.

அதிசயமொழி - ஆச்சரியச் சொல்.

அதிசயவிரக்கச்சொல் - இரக்கத்தோடு கூடிய வியப்புமொழி.

அதிசயவுவமை - உவமையலங்கார வகைகளுள் ஒன்று. அது உபமான உபமேயமென்னுமிரண்டிற்கும் சார்பிடத்தாலின்றி ஒப்புமைக்குரிய குணத்தினால் தம்முள்ளே பேதமில்லையென அதிசயக்தோன்றச் சொல்லப்படுவது.

அதிசயன் - அருகன்.

அதிசயி - அதிசயப்படு.

அதிசயித்தல் - அதிசயங்கொள்ளல்.

அதிசயோக்தி - உயர்வுநவிற்சியணி. அஃது ஒருபொருளானது தன் செல்லால் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விப்பதும் இஃது அஃதன்றென்று தெரிந்தும் தன்னிச்சையாலா மென்று கொள்ளப்படுவதுமாகிய ஆரோபநிச்சயத்திற்கு விடய மாகுதல், மிகப்பேசுதல், அதிசயோத்தி.

அதிசயோத்தி - மிகக்கூறல்.

அதிசரணயோனிரோகம் - பெண்களுடைய யோனியில் வரும் ஒருவகை ரோகம்.

அதிசரம்-நெட்டுயிர்ப்பு, நிலைபெற்றது.

அதிசரன் - அப்பாற்போகிறவன், வழிகாட்டி.

அதிசரித்தல் - தூரமாய்ப்போதல், மிகுகதியாய் நடத்தல், கடந்து போதல்.

அதிசருச்சனம் - கொடுத்தல், கொடை, கொலை.

அதிசனசி - கொடிவேலி.

அதிசாக்கிரதை - மிகுவிழிப்பு.

அதிசாகரம் - ஓர் தமிழ்க் கணிதநூல்.

அதிசாந்திரன் - சந்திரன்.

அதிசாமியை - வெண்குன்றிச்செடி.

அதிசாரசிலேட்டுமரோகம் - சிலேட்டுமரோகங்களுள் ஒருவகை. அது சிவந்தபேதி, வயிற்றிலிரைச்சல், குத்தல், விலாவிற் சூலை, பொருமல், மார்பிலும் நெஞ்சிலும் கோய், வாய்வதளல், இருமல், சுவாசம், தாகம், எரிச்சல் என்னுங்குணங்களையுடையது.

அதிசாரசன்னி - சன்னிவகை.

அதிசாரணம் - மாவிலிங்கு, மாவிலங்கம்.

அதிசாரத்திரவியங்கள் - அதிசாரநோயைத் தீர்க்கும் மருந்துக்குச் சேர்க்கப்படும் சரக்குகள். அவை: அதிவிடயம், ஆவிரை, இருபூலா, இலவம் பிசின், ஓமம், கஞ்சா, கருங்காவிப்பிசின், கருவேல், காட்டாத்திப்பூ, கிராம்பு, கீழ்க்காய் நெல்லி, குங்கிலியம், சாதிக்காய், சிறுகாஞ்சொறி, நீர்முள்ளி விதை, சுக்கு, திப்பிலி, தென்னம்பாளை, தேன், புளியங்கொட்டைத்தோல், புளியம்வேர், மாதுளம் பிஞ்சு, மாவிரை, முத்தக்காசு, வட்டத்திருப்பி, வறட்சுண்டி, வாழை, வெட்பாலையரிசி, வெள்ளிலோத்திரம் என்பனவாம்.

அதிசாரபேதி - பேதிவகை.

அதிசாரம் - ஒருபேதிநோய், சுரத்தோடுகூடிய ஒருவகைப் பேதி. அதுசிலேத்துமம், திரிதோஷம்,

பித்தம், வாதம் என நான்கு கிரக நடை, சீதபேதி, அதிமதுரம்.

அதிசாரவக்கிரம் - கிரகவக்கிரத்தொன்று.

அதிசிகுவை - நாக்கில்வரும் ஒரு வகைரோகம். அது அடிநாவின் கீழ்நுனி நாவைப்போலத்தடித்து வீங்குவது.

அதிசித்திரம் - மார்க்கசடப் பிரமாணத்தொன்று. அது கால்மாத்திரை ஒருகலையாகக்கொண்டது.

அதிசீக்கிரம் - மிகுசுறுக்கு, விரைவில்.

அதிசீதம் - இருபத்தெட்டுத்தொகை நரகங்களுள் முதலாவதாகிய கோரத்துக்குள்ள ஐந்துகாயக நரகங்களுள் ஒன்று.

அதிசீரணம் - மிகுந்தசீரணம்.

அதிசுட்கம் - ஒருநோய். அது சரீரத்தை வரட்டுவது.

அதிசுத்தம் - மிகுசுத்தம்.

அதிசூக்குமசித்து - தூலசித்துப்போலாது மிக நுண்ணியதான சித்துப் பொருள்.

அதிசூக்குமத்துவம் - மிகு நுண்மைத்தன்மை.

அதிசூக்குமம் - மிகநுண்மை, அதிசூட்சுமம்.

அதிசூக்குமவாக்கு - மிகச் சூக்குமமான சொல்.

அதிசூக்குமிப்பித்தல் - மிகநுண்மையாக்கல்.

அதிசூக்குமை - ஒருசத்திகலை.

அதிசூரன் - சிங்கமுகாசூரனுடைய ஒரு மகன், மிக்கவீரன், பெருவீரன்.

அதிசௌபாக்கியை - உமாதேவி.

அதிசௌரபம் - தேமாமரம், பரிமளத்திரவியம்.

அதிச்சத்திரகம் } காளான்.
அதிச்சத்திரம் }

அதிஷ்மணம் - நிலை, காரணம்.

அதிஷ்டி - வசி.

அதிட்சேபம் - அனுப்புதல் நிந்தைப்படுத்தல்.

அதிட்டகன்மம் - அதிருட்டகன்மம்.

அதிட்டக்காரன் - அதிருட்டவான்.

அதிட்டச்செல்வி - இந்திரபாஷாணம்.

அதிட்டம் - நல்லனுபோகம், நல்வினைப்பயன், மிளகு. அதிஷ்டம், அதிருஷ்டம், பாக்கிய வாய்ப்பு, அதிருஷ்டம், யோகம், இன்பதுன்பங்கட்குக் காரணமானது.

அதிட்டவலி - அதிட்டபெலம்.

அதிட்டாகாரர் - அறியக்கூடாத உருவ முடையவர்.

அதிட்டாதா - அதிட்டிக்கிறவன், ஆளுமதிபதி, அதிஷ்டாதா, நிருவகிப்பவன்.

அதிட்டாத்திரி - அதிட்டிக்கிறவள், ஆளுபவள், தலைமை வகிப்பவள்.

அதிட்டாயகன் - அதிட்டிப்பவன்.

அதிட்டானசேதனன் - கூடஸ்தன்.

அதிட்டானசைதன்னியம் - பிரமம்.

அதிட்டானபூதம் - அதிட்டிக்கும் வஸ்து.

அதிட்டானபூதை - அதிட்டிக்குமவன்.

அதிட்டானம் - இடம், காரியத்திற்குக்காரணம், சில்லு, நிலை, பட்டினம், நிலைக்களம், அதிஷ்டானம்.

அதிட்டானன் - பரப்பிரமம்.

அதிட்டானுமானம் - கருதலனுமானம். அது ஒருவன் சொன்ன வார்த்தையைக் கொண்டே அவனுக்கிவ்வளவு ஞான முண்டாயிருந்ததென்றறிதல்.

அதிட்டிதம் - தாபிக்கப்பட்டது, நியமிக்கப்பட்டது, நிலைப்படுத்தப்பட்டது, பிரேரேபிக்கப்பட்டது, மேல்விசாரணை செய்யப்பட்டது.

அதிட்டித்தல் - அதிஷ்டித்தல், ஆவிர்ப்பவித்தல், நிலைப்படுத்தல், விதித்தல்.

அதிட்டேயத்தானம் - அதிட்டித்தற்கு யோக்கியமான பொருள்களின் பேதம்.

அதிட்டேயம் - அதிட்டிக்கப்பட்ட பொருள்.

அதிட்டேயரூபிணி - அதிட்டிக்கப்படுதற்கு யோக்கியமான ரூபமுடையவள்.

அதிதந்தம் - குட்டிப்பல்.

அதிதந்தரோகம் - பல்லில் வருமோர் நோய். அது பற்களின் சந்திற் குட்டிப்பல் முளைப்பதினால் வரும் உபத்திரவம்.

அதிதபனக்கிருச்சிரம் - கிருச்சிரவிவரவகையுளொன்று. அது இருபத்தொருநாளைக்கு மூன்று பலம் பசும்பாலுண்டு செய்யும் விரதம்.

அதிதபனம் - அதிதபனகிருச்சிரம்.

அதிதமம் - முதலாந்தொகை நரகமாகிய கோரமென்பதற்குள்ள ஐந்து நாயகநரகங்களுள் ஒன்று.

அதிதலசிலேட்டுமம் - ஒரு வகை சிலேட்டுமநோய்.

அதிதவளம் - மிகுவெண்மை.

அதிதனசெல்வன் - குபேரன்.

அதிதனு - பொன்.

அதிதாதா - பெருங்கொடையாளன்.

அதிதாதிரு - ஈகையாளன்.

அதிதாபகவாதம் - சரீரத்தைத் தபிக்கப்பண்ணும் ஒருவகைவாதம்.

அதிதாரம் - இலந்தை.

அதிதானம் - கொடை.

அதிதி - காசிபப் பிரம்மாவின் மனைவிகளிலொருத்தி, சத்தபிதிர்களிலொருவர், சிராத்தத்திற் கொவ்வாததிதி, தேவரையீன்றுள், பரதேசி, புதியவன், பூமி, விருந்தன், ஸ்ரீராமபிரான் பேரன், விருந்தாளி.

அதிதிகிரியை - விருந்தோம்பல்.

அதிதிசேவை - விருந்துபசாரம்.

அதிதிநாள் - புதர்பூசநாள்.

அதிதிபூசனம் } பரதேசிக் கன்ன
அதிதிபூசை } மிடல், அதிதிசேவை, விருந்தோம்பல்.

அதிதிப்பம் - பசியின்மை.

அதிதியர் - சூரியர், விருந்தினர், புதியோர்.

அதிதீரன் - அதிகவீரன்.

அதிதீவிரம் - மிகக்கடுமை.

அதிதும்மற்பீனசம் - அதிகதும்மலையுண்டாக்கும் ஒருவகைப் பீனசரோகம்.

அதிதூர்ப்பலம் - மிகுந்ததூர்ப்பலம்.

அதிதூதர் - அதிகப்பிரதான விசேடங்களை அறிவிக்க உலகத்துக் கனுப்பப்படுவோர்.

அதிதூலரோகம் - சரீரத்தைப் பருக்கச்செய்யும் ஒருவகை ரோகம்.

அதிதெய்வம்-அதிட்டிக்குந் தெய்வம், ஆளுந்தெய்வம், மேலானதெய்வம்.

அதிதேசம் - ஒப்புமைகாட்டி யுணர்த்துவது.

அதிதேசவாக்கியம் - ஒரு பொருளை யறியாதவனுக்கு அது போன்ற வேறொரு பொருளைக்காட்டி அறிவிக்கும் வாக்கியம்.

அதிதேவன் - கடவுள்.

அதிதேவதை - அதிட்டானதேவதை, அதிகாரதேவதை, குலதேவதை.

அதிதைவம் - அதிட்டிக்குந் தெய்வம், ஆளுந்தெய்வம்.

அதிநிந்திதம் - அதிகநிந்திக்கப் பட்டது.

அதிநுட்பம் - அதிகநுட்பமுடையது, அதிக நுண்மை, மிக நுண்ணியது.

அதிபசமி - கொன்றை.

அதிபதி - இராசா, சண்பகம், தலைவன், அரசன்.

அதிபதிச்சங்கம் - வாலுழுவையரிசி.

அதிபதுங்கி - கொடிவேலி.

அதிபத்தர் - அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவர்.

அதிபத்தினி - ஆளுகை செய்கிறவள், எசமாட்டி, பெருமாட்டி.

அதிபரமாப்தர் - சதாசிவர், இவர்தம் மின்மேலாகிய ஆப்தர் பிறரின்மையின் இப்பெயர் பெற்றனர்.

அதிபான் - சத்துருவை வென்றவன்.

அதிபர் - முதல்வர்.

அதிபல - நிவிர்த்திகலையிற் பிருதிவி தத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப்புவனங்களுளொன்று.

அதிபலம் - நேர்வாளம், மிகுபெலம்.

அதிபலன் - சதருத்திரருள் வருணதிக்கிலிருக்கும் பதினொரு ருத்திரரில் ஒருவன்.

அதிபலை - பேராமுட்டி, ராமருக்கு விசுவாமித்திரர் உபதேசித்த மந்திரம்.

அதிபறிச்சம் - வாலுழுவையரிசி.

அதிபன் - இராசன், ஈசமானன், எப்பொருட்கு மிறைவன், தலைவன், இராசா, ஞாயாதிபன்.

அதிபாதகம் - மிகுபாதகம். இது சிவபெருமானுக்கும் சிவனடியாருக்கும், சிவனைப் பூசிக்கும் குருவுக்கும் விரோதஞ் செய்வதாம், பெரும்பாவம்.

அதிபாதகர் - மிகுந்த பாதகமுடையவர்.

அதிபாதர் - எதிரிடை, மீறுதல்.

அதிபாரகம் - கோவேறுகழுதை.

அதிபாரகன் - மிகுபுணன்.

அதிபாரம் - மிகுபாரம்.

அதிபாவம் - பெருங்குற்றம்.

அதிபானம் - மதுபானம்.

அதிபீடிதம் - அதிகமாக விறுக்குதல்.

அதிபூச்சியர் - அதிகம் பூசிக்கப்படத்தக்கவர்.

அதிபூதம் - பிரகிருதிமாயை.

அதிபெலம் - அதிபெலம் என்னும் புவனம்.

அதிமதுரம் - ஒருசாக்கு, குன்றிவேர், மிக இனிமையானது, பூடுவகை, குன்றி, அதிங்கம், மதுகம், யட்டிசல்வி, மிகுமதுரம், வெண்குன்றி.

அதிமதுரகவி - ஒருகவி.

அதிமந்தம் - சருவநேத்திர ரோகம் மூன்றுவகையு ளொன்று. அது வாதாதி மந்தம், பித்தாதி மந்தம், சிலேட்டுமாதி மந்தம், இரத்தாதி மந்தம், அதாதிமந்தம் என ஐந்தாக விரியும்.

அதிமலம் - மாவிலிங்கைமரம்.

அதிமாதம் - அதிகமாதம்.

அதிமாத்திரம் - உயர்வு, மிகுதி.

அதிமாமிசகம் - ஒருவகைத் தந்த ரோகம்.

அதிமாமிசம் - கண்ணில் வரும் ஒருவகைத் தசைச்சுரப்பு நோய்.

அதிமாமிசரோகம் - பற்களில்வரும் ஒருவகை நோய், அது பல்லின் வேர் சந்துகளிலே ஆணியையொத்த கட்டிகளைப் பிறப்பித்துக் காதுகளிலுந் தாடைகளிலும் நோயுண்டாகும்.

அதிமாமிசார்மரோகம் - கண்ணில் வரும் ஒரு நோய், அது வெள்ளை விழியாலே அதிகமாமிசம் வளர்வது.

அதிமாயம் - மாயையின்மை.

அதிமார்க்கநூல் - பரசமயங்களுக்கப் பாற்பட்டு உட்சமயமாய்ச்சித்தாந்த மல்லாததாயுள்ள ஞானத்தைப் போதிக்குஞ் சாத்திரம். அது பாசுபதம், கபாலம், மகா விரதம் என மூன்று வகைப்படும்.

அதிமார்க்கம் - பரசமயங்களுக்கப் பாற்பட்ட சமயமாய்ச் சித்தாந்த மல்லாததாயுள்ள சமயம்.

அதிமானம் - மிக்க அபிமானம்.

அதிமானுடம் - தெய்வத்தன்மை, மனுடனுக்கு மேற்பட்டது.

அதிமானுஷம் - மனிதனுடைய சக்திக்கு மேற்பட்டது.

அதிமானுடன் - உத்தம புருடன், சிரஞ்சீவி.

அதிமிதம் - அளவின்மிக்கது, ஈரமில்லாதது, காய்ந்தது.

அதிமிதி - அதிக்குதி, வீம்பனைகண்டை.

அதிமித்திரன் - கணவன், மிகுநேசன்.
அதிமிருத்தியாதிமாத்திரை - கோரோசனை மாத்திரை.
அதிமுத்தகம் - குருக்கத்தி, தேகம் நீங்கியடையும் முத்தி.
அதிமுத்தி - சாயுச்சிய முத்தி.
அதிமூர்க்கம் - கடுங்கோபம்.
அதிமூர்க்கன் - கடுங்கோபி.
அதிமேற்றி ராசனம் - அதிமேற்றி ராணியரின் இருப்பிடம்.
அதிமோகம் - அனேகம், ஒருகலைக் காமம்.
அதிமோட்சம் - அதிமூர்த்தி.
அதியட்சன் - கண்காணி.
அதியட்டி - அடியொன்றிற்குப் பதினேழு அசையுடையதாய் நான்கடியால் வருமொரு கவிச்சந்தம்.
அதியம் - அதிகம், ஒருமருந்து.
அதியரையன் - மீன் வலைஞர் தலைவன்.
அதியன் - மேம்பட்டவன்.
அதியாதரம் - மிகுவிருப்பம்.
அதியாமம் - அழுகம்புல், முயற்புல், அறுகு.
அதியுக்கிரகண்டன் - ஒரு யமதூதன்.
அதியுட்டணம் } மிகு வெப்பம்.
அதியுஷ்ணம் }
அதியோகம் - சென்மலக்கினத்துக் காவது சந்திரலக்கினத்துக்காவது ஆரு மேழா மெட்டாமிடங்களிற் சுபக்கிரகம் இருக்கும் நிலை. இது ஞானம், கீர்த்தி, மன்னர் பிரிய முதலிய சுபகாரியங்களைக் கொடுக்கும் யோகம்.
அதிரசம் - இரசம், உப்பு, ஒரு பண்ணிகாரம், ஒரு பானம், மிகுசுவை, பணிகாரவகை, ஒரு பணிகாரம்.
அதிரடி - அமிதம்.
அதிரடிக்காரன் - அதிரடியாய்ப் பேசுபவன்.
அதிரதம் - ஒரு பண்ணிகாரம், ஒரு பானம், நால்வகைத்தேரிலொன்று.
அதிரதர் - முழுத்தேரரசர்.
அதிரதன் - சத்தியகரு மன்மகன், இவன் கங்கைக்கரையில் வந்தடைந்த குந்தி மகளுகிய கன்னனை எடுத்து வளர்த்தவன், இவன் மனைவி விராதை, முழுத்தேரரசன், இவர் தோளினின் றமர் புரிந்து தனது சேனையையும் தேரையும் காவல் பண்ணிக்கொண்டு சத்துருவைச் செயிக்குமரசன்.
அதிரதி - அதிரதன்.
அதிரத்தம் - மிகுசிவப்பு.
அதிரல் - அதிர்தல், புனலிப்பூ, மோசிமல்லிகை, விரிதூறு, அடித்தூறு, மிகுதூறு.
அதிராகம் - கந்தகம்.
அதிராசன் - அரசனுக்குமேற்பட்டவன், சிரேட்டராசன், பேரரசன்.
அதிராத்திரம் - யாகமிருபத்தொன்றினொன்று, இது சோதிட்டோமயாகத்தொருபகுதி.
அதிராம்பை - பொற்றலைத்தகரை.
அதிராயம் - அதிசயம்.
அதிரிசம் - கடவுள், காணப்படாததன்மை, குருடு, அதிரிசியம், அதரிசனம்.
அதிரிசயம் - கலைஞானம் அறுபத்துநான்கில் ஒன்று.
அதிரிசனம் - அதரிசனம்.
அதிரிசன் - கடவுள், குருடன்.
அதிரிசியம் - அதிரிசம், அதிருசியம், தோன்றுமை, கடவுள், கலைஞானம்.
அதிரித்தம் - மிகுதி, அதிகமானது.
அதிருக்கு - குருடு.
அதிருசம் - அதிருசியம்.
அதிருசன் - குருடன்.
அதிருசியந்தி - அருந்ததி.
அதிருசியம் - அறுபத்துநான்கு கலைஞானங்களுள் ஒன்று. காட்சிக்கு விடயமாகாதது, காணப்படயோக்கியமில்லாதது, காமதகுண சித்திகளில் ஒன்று. அதுகாணப்படும் பொருளைக் காணுமற் போகச்செய்தது.

அதிருசியன் - கடவுள், பரசிவன்.

அதிருச்சியம் - காணப்படும் பொருளைக் காணுமற்போகச்செய்வது.

அதிருட்டகன்மம் - மறுமையிலே சுவர்க்க நரகங்களை அனுபவித்தற்குக் காரணமாயிருக்கும் இம்மையிற் செய்யப்பட்ட கருமம்.

அதிருட்டபோக்கியம் - ஒருவர் செய்த கருமந் தேகாந்தத்திற் சுவர்க்கத்திலாதல் நரகத்திலாதல் மற்றொரு பிறப்பிலாதல் பலிப்பது.

அதிருஷ்டம் - பார்வைக்கெட்டாதது, காணப்படாதது, ஊழ், நல்லூழ், பாக்கியாசம், நல்வினைப்பயன், நல்லனுபோகம், புண்ணியபாவம், அதிர்ஷ்டம், அதிஷ்டம்.

அதிருட்டம் - இந்திரியங்களாற் காணப்படாதது, பார்வைக்கெட்டாதது, பாவபுண்ணியத்தொழிலினாற் புத்திரதத்துவத்திற் சமவாயசம்பந்தியாய் வைக்கப்பட்டுப் பலபரியந்தமிருக்குஞ் சம்ஸ்காரமாகிய சூக்கும கன்மம். இதுசுவர்க்க நரகபூமிகளுக்கு ஆன்மாவுடன் சூக்குமதேகத்திலிருந்து போதலும் வருதலும் உடையதென்பர்.

அதிருட்டாநுமானம் - அதிட்டாநுமானம்.

அதிருட்டிபூதனை - ஒரு குருட்டுப் பெண்பேய், அது குழந்தைகளை வருத்தும் எழு பெண்பேய்களுள் ஒன்றென்று சொல்லுவார்.

அதிருட்டிபூதனைகிரகதோஷம் - அதிருட்டிபூதனை என்னும் பெண்பேயினாற் குழந்தைகளுக்கு வருந்தோஷம். அது அற்பப்பார்வை, வாந்தி, சுரம், இருமல், மலபேதம், தேகநிற மாறுதல், தேகத்திற் றுர்கந்தக்கவிச்சு வீசுதல், அல்லது அசங்கியநாற்றம், இளைத்தல், சொற்ப நித்திரை, உதடு கோவு, தினவு, விக்கல், பயம், மூலைப்பாலிலசங்கியம், ஈனத்தொனி, நடுக்கு முதலிய குணங்களையுண்டாக்கும்.

அதிருத்தி - திருத்தியின்மை, அதிருப்தி.

அதிரூபம் - மிகச்சிறந்தவடிவம்.

அதிரேகமாயை - பெரிதாகிய மயக்கம்.

அதிரேகம் - அதிசயம், மிகுதி, மேற்பட்டது, மேன்மை.

அதிரோகணி - ஏணி.

அதிரோகம் - ஒருகாசம், கூயம்.

அதிரோகிணி - ஏணி.

அதிரோகிதபாவம் - மறைக்கப்படாதிருத்தல்.

அதிரோகிதல் - அடுத்திருத்தல்.

அதிரோபிதம் - மேலாக உயர்த்தப்பட்டது, மேலாக வைக்கப்பட்டது.

அதிர் - அதிரென்னேவல், ஒலி, நடுக்கம், பயம், அதிரு, அதிர்வு, அதிர்த்தி, அதிர்ச்சி. அதிர்தல், அதிரச்செய், அதட்டு, குமுறு, அதிர்ப்பு.

அதிர்ச்சி - அதிகப்படுதல், ஆரவாரம், குமுறல், பயம், நடுங்குகை.

அதிர்ச்சியம் - காணப்பட யோக்கியமாகாதது.

அதிர்தல் - குமுறுதல், நடுங்கல், கம்பித்தல், மனம் நடுங்குதல், முழங்குதல், எதிரொலித்தல்.

அதிர்த்தல் - அதட்டல், குமுறல், சொல்லுதல், நடுங்கச் செய்தல், முழங்குதல், கலங்குதல்.

அதிர்ப்பு - அச்சம், அதிர்வு, ஆரவாரம், நடுக்கம், அதிர்ச்சி, எதிரொலி.

அதிர்வு - யாழ்நரம்பைச் சிதறவுந்தல், அதிர்ச்சி.

அதிர்வெடி } ஒரு வெடி.
அதிர்வேட்டு }

அதிலவோடாகம் - அடிலவோடாகம், ஒரு பூண்டு.

அதிலுத்தன் - பிறர் பொருள்களில் மிக்க ஆசையுடையோன்.

அதிலோகம் - உலகம், இரசகர்ப்பூரம்.
அதிலோபம் - தன் பொருளைப் பிறர்க்குக் கொடுக்க விரும்பாமை, மிக்க பொருளாசை.
அதிவசனம் - பேர்.
அதிவருணர் - அதிவருணச்சிரமத் தோர்.
அதிவர்ணச்சிரமி - வருணச்சிரமங்களைக் கடந்து வேதாந்தமகாவாக்கியக் கேள்வியினால் கடவுளையும் தன்னையும் அறிந்த ஐக்கியாத்மஞானி, அதிவன்னச்சிரமி.
அதிவன்னச்சிரமி - அதிவருணச்சிரமி.
அதிவாசம் - அயல், இடம், உபவாசத்திற்கு முதலுள், கிரியை ஆரம்பச் சடங்கினொன்று, மிகுமணம், வீடு.
அதிவாசனம் - வாசனாபிவேதகம்.
அதிவாதம் - பெருங்காற்று.
அதிவாதி - பிறமதங்களெல்லாவற்றையுங் கண்டித்துத் தன்மதந் தாபிப்பவன்.
அதிவாலகன் - குழந்தை.
அதிவிகடம் - துஷ்டத் தன்மையானது.
அதிவிகடன் - மிக்கசோபி.
அதிவிசித்திரம் - மிகுந்த வாச்சரியம்.
அதிவிடம் - அதிவிடயம்.
அதிவிடயம் - அத்தம், அவிருகம், ஒரு மருந்து.
அதிவிடை - அதிவிடயம், ஒரு மருந்துச் செடி.
அதிவித்தரம் - அதிகவிஸ்தாரம்.
அதிவினயம் - அதிவினயம்.
அதிவியதை - மிகுவேதனை.
அதிவியப்பு - அதிகவாச்சரியம்.
அதிவியயம் - அதிகச்செலவு.
அதிவியயி - பெருஞ்செலவாளி.
அதிவியாத்தி - அருத்தாபத்தி, மிகக்கூறல், மிகவியாபித்தல், மிகைப்படக் கூறல்.
அதிவிரகன் - அதிக உபாயமுள்ளவன்.
அதிவிருட்டி } பெருமழை,
அதிவிருஷ்டி } மிகுபெயல்.
அதிவினயம் - அதிகக்கீழ்ப்படிவு, மாரீசாசாரம், மிகு வணக்கம்.
அதிவின்னை - தன் கணவன் வேறொருத்தியை மணஞ்செய்தற்குக் காரணமாயிருந்த முதன்மனைவி.
அதிவீரன் - ஒரு அசுரன்.
அதிவெப்பம் - இருபத்தெட்டுத் தொகை நரகங்களிலே முதலாவதாகிய கோரத்துக்குள்ள ஐந்து நாயக நரகங்களில் ஒன்று.
அதிவெள்ளோச்சிந்தூரம் - சவ்வீரம், பறங்கிப்பாஷாணம்.
அதிஷ்டாதா - நிருவகிப்பவன்.
அதிவேகம் - மிகுகதி.
அதிவேதனம் - மனவிடைவிட வேறொருத்தியை விவாகம் பண்ணுதல், மிகக்கூலி.
அதீக்கிதர் } தீட்சையில்லா
அதீக்கையோர் } தவர்.
அதீசன் - ஏசமான்.
அதீசாரம் - அதிசாரம்.
அதீச்சன் - மிகவிச்சையையுடையவன்.
அதீச்சுரபதவி - நவவிலாச சபைக்குரிய அதிகாரம்.
அதீச்சுரன் } அரசன், கடவுள்.
அதீச்சுவரன் }
அதீட்சணசை - மழுங்கல்.
அதீட்சணன் - கூர்மையில்லான்.
அதீதகலை - ஐந்து கலைகளுளொன்றாகிய சாந்தியதீதகலை, அது விகற்பஞானஞ் சாந்தமான மென்கிறதினைவுங் கழன்று பரமாகாசரூபமாய் நிற்பது.
அதீதகாலம் - இறந்தகாலம்.
அதீதப்பிரமம் - கடவுள்.
அதீதம் - எட்டாதது, கடந்தது, குரல் முன்னுந் தாளம் பின்னுமாய் வருவது, பொன், மேற்பட்டது, கடவுளதோர் தன்மை, அதீதவெருப்பு, அசோசரம்.

அதீதர் - வானோர், முனிவர், மேலோர்.

அதீதன் - எட்டாதவன், கடந்தவன், பாசத்தினின்று விடுவிக்கப்பட்டவன்.

அதீதாவத்தை - துரியாதீதம்.

அதீதாவஸ்தை - கீழாலவத்தை ஐந்தனுள் ஒன்று. அது கருவிகளெல்லாம் நீங்கி யொன்றும் அறியாமற் கிடக்கும் அவத்தை.

அதீதியம - ஆசையின்மை.

அதீந்திரியம - காணப்படாதது, புலனுக் கெட்டாதது.

அதீபனம் - மந்தாக்கினி.

அதீரம் - கரையில்லை, தைரியமின்மை.

அதீரை - அமையாதவள், மின்னல்.

அதீனதை - அடிமைத்தன்மை, கீழ்ப்படிதல், சார்ந்திருத்தல்.

அதீனத்துவம - இட்டம்.

அதீனம - உரிமை, உரித்து, வசம், சார்பு, ஆதீனம்.

அது - அஃது, சுட்டுச்சொல், ஆறாவதனெழுமையுருபு.

அதுகுபடி - சரிசமநிலத்தைத் தாழ்ந்தவரியில் விவசாயத்துக்கு விடுகை.

அதுக்ககரம் - தூக்கமில்லாமையைச் செய்வது.

அதுக்கம - அடிப்பு, ஒதுக்கம், அதுங்குகை, குழிவு.

அதுக்கல் - அடித்தல், அடைசுதல், கறித்தல்.

அதுக்குதல் - அமுக்குதல், பிசைதல், கடித்தல், மெல்லுதல், வாயிலடக்குதல், அடித்தல்.

அதுக்கு - பாத்திர முதலியவற்றின் அதுங்கல், அமுக்கு, மெல்லு, பிசை.

அதுக்குள் - அகற்குள்.

அதுக்கெடுத்தல் - பாத்திர முதலியவற்றின் அதுங்கலைச் சீர்ப்படுத்துதல்.

அதுக்கென்ன - அதற்கென்ன.

அதுங்கு - ஒடுங்கு, குழி, அமுங்கு, ஒதுங்கு.

அதுங்கல் - ஒதுங்கல், குழிதல்.

அதுங்குதல் - அமுங்குதல்.

அதுட்டி - தூக்கம்.

அதுநா - இப்பொழுது.

அதுநாதனம் - இப்பொழுதைக் குரியது.

அதுநாபாவம் - இப்பொழுதுள்ளது.

அதுமபுதல் - மொய்த்தல்.

அதுலம் - ஒப்பற்றது, உவமையின்மை, ஒரெண், அதுல்லியம்.

அதுலன் - ஒப்பிலி, கடவுள், ஒப்பற்றவன், உவமை யில்லாதவன்.

அதுலிதம - அசைவின்மை.

அதுல்லியம் - ஒப்பின்மை, அதுல்யம்.

அதூரம் - சமீபம்.

அதூவபத்தம் - சமணமதத்திற் கூறிய படி விட்டுவிட்டுப் பந்திக்குஞ் சொரூபத்தது.

அதெந்து - அது என்னவென்று அருளொடு கேட்டற்குறிப்பு, பயப்படாதே எனப் பொருள்படும் ஒரு பொன்மொழி.

அதேகி - தேகமில்லாதவன்.

அதேசயதானம் - கொடுக்கத் தகாததைக் கொடுத்தல்.

அதேயம் - கொடுக்கத்தகாதது.

அதை - தாக்கிமீளு, வீங்கு.

அதைச்தல்-தாக்கிமீளல், வீங்கல், வீங்குதல், செருக்குதல், தாக்கிமீளுதல்.

அதைப்பு - தாக்கியெழுதல், வீக்கம், நீர்க்கோப்பு, தாக்கிமீளல்.

அதைரியம் - தைரியமின்மை.

அதொன்மையம் - நூதனம.

அதோ - சேய்மைச்சுட்டு, கீழ்.

அதோகதிதோஷம் - நவலோக சம்பந்தமான ஐவகைத் தோஷங்களுளொன்று. அது நாபித்தானத்தின் கீழ்வாயுவைச் சஞ்சரிக்கச் செய்து அடிக்கடி மலம் நழுகல், வாயுவர்தலென்னுங் குணங்களை யுண்டாக்கும் ஒருநோய்.

அதோகதி - இறங்குதல், நரகம், பள்ளம், பாதலம், இறங்குகை, தாழ்ந்த நிலை.

அதோதங்கம் - குகம், யோனி, அரையின் கீழ்ப்பட்ட அங்கப்பகுதி.

அதோசாதி } கீழ்சாதி, கீழ்க்குலம்.
அதோஜாதி }

அதோட்சசன் - விட்டுணு.

அதோபாகம் - கீழ்ப்பக்கம், அடிப்பக்கம், பாதம்.

அதோபுடம் - கீழ்ப்புறம்.

அதோபுவனம் - கீழுலகம்.

அதோமாயை - ஒருமாயை, அசுத்தமாயை.

அதோமார்க்கம் - கீழ்மார்க்கமாகிய சரியை முதலியன, தாழ்ந்தநெறி.

அதோமுகக்கட்டு - யோனிமுத்திலேனும் இடுப்பிலேனுங் கருநிறத்துடன் பருமனாக எழும்பி அதில் உபத்திரவத்தையும் வியர்வையையுங் கொடுக்கும் ஒருவகைக்கட்டு.

அதோமுகசிரம்-அதோமுடம்.

அதோமுகம் - ஆற்றுநீர்க் கழிமுகம், கீழ்நோக்கிய முகம், கீழ்முகம், தலைகுனிந்து பார்க்கை, கடற்கழிமுகம்.

அதோமுகரத்தபித்தம் - இரத்தபித்த ரோகத்தில் ஒருவகை. அது சலத்துவாரம், மலத்துவாரம், உரோமத்துவாரம் என்னும் மூவகைத்துவாரங்களினாலும் இரத்தம் போகச் செய்யும் ஒருவகைநோய்.

அதோமுகராசி - ஆதித்திய னின்ற விராசி.

அதோமுகவாதம்-மார்பிலும் வயிற்றிலுங் கீழ்வயிற்றிலுங் கவுட்டியிலுங் கீழேயிறங்கி வேதனைசெய்யும் ஒருவகைநோய்.

அதோமுகா - ஆற்றுநீர்க்கழி முகம்.

அதோமுகி - கவிழ்தும்பை.

அதோமுகியான் - கன்றீன்றுகொண்டிருக்கும் பசு.

அதோரணர் - யானைப்பாகர்.

அதோலம்பம் - செங்குத்து, தூங்குதல், நிறுத்திவிட்டவரி.

அதோலோகம் - கீழுலகம்.

அதோவகனம் - அதோமுகம்.

அதோவாயு - அபானவாயு.

அதோளி - அவிடம், அவ்விடம்.

அதோனியமிகாசத்தி - ஆன்மாக்களுக்குப் போகநுகர்ச்சியை விளைவிக்கும் ஆணவ மலசத்தி.

அத் - ஒன்று, பாதி.

அத்தகடகம் - கைவளை.

அத்தகண்டாதனம் - ஒரு காற்மேல் நீட்டி, ஒருகைகொண்டு நீட்டின காலைக் கட்டி மற்றைக்கையை நிலத்தூன்றி இருப்பது.

அத்திகம் - ஆமணக்கு, கருஞ்சீரகம்.

அத்திகிரி - சூரியன் அத்தமிக்குமிடமாகச் சொல்லப்படும் மேற்குமலை, அஸ்தகிரி.

அத்தகோரம் - நெல்லி.

அத்தகோளம் - கோளத்திற்பாதி.

அத்தகுன்று - சூரியன் அஸ்தமானஞ் செய்யுமலை.

அத்தங்கார் - அத்தைமகள்.

அத்தசகாயம் - பொருளுதவி.

அத்தசதம் - ஐம்பது, நூறுண்டு.

அத்தசந்திரன் - பாதிசந்திரன், பாலசந்திரன்.

அத்தசாமப்பூசை - நடுராத்திரியிற் செய்யும்பூசை.

அத்தசாமம் - நடுச்சாமம், அர்த்தசாமம்.

அத்தசித்திரம் - மார்க்கண்ட பிரமாணத்தினொன்று, அஃது அரைமாத்திரையோர் கலையாகக் கொண்டது.

அத்தடி - அடிக்கெடுதல், அந்தரிப்பு.

அத்தத்தாவெனல் - அத்தா அத்தாவெனக் கூறுதல்.

அத்தநாசம் - பொருளழிவு, பொருட்கேடு.

அத்தநாரீசர் - அத்தநாரீசுரர்.

அத்தநாரீசன் - தனதுடலிற் பாதி பெண்வடிவான சிவன்.

அத்தகாரீசுரன் - சிவன், பாதிஸ்திரீ யாக விருப்பவன், அர்த்தநாரீசுரன்.

அத்தகாரீசுவரன் - அத்தகாரீசன்.

அத்தகாள் - அங்கிகாள், பாதிகாள், ஐவிரல், களிறு, கன்னி, சாமரம், கைம்மீன், கைனி, கௌத்துவம், நவ்வி, கொத்துவம்காமரம், ஐமீன், அத்தம், பதின்மூன்று நட்சத்திர நாள்.

அத்தப்பள்ளம் - ஏழாமிராசி.

அத்தபாதம் - பாதி, பொருட்பாகம்.

அத்தப்பிரசுரம் - நாலேகால் நாழிகை கொண்டது.

அத்தப்பிரசுரன் - கரந்துறை கோள் களி லொன்று.

அத்தப்புனருத்தம் - ஒரு நிக்கிரகத் தானம். அது முன்சொன்ன பொருளைப் பின்னுஞ் சொல்லுதல்.

அத்தப்பொருந்தி - ஒருபூடு.

அத்தமண்டபம் - கருப்பக்கிரக மண்டபம், கோவிலின் நடுமண்டபம்.

அத்தமத்தகரையோகம் - கையான் மத்தகத்திற் றடவுதல்.

அஸ்தமம்
அத்தமம்
அஸ்தம் } அஸ்தமிக்கை, அத்தகிரி, அத்தமயம்.

அத்தமயம்
அத்தமயனம் } சூரியன் முதலியன படுதல், அஸ்தமனம், அழிவு.

அத்தமலை-சூரியன் அத்தமிக்கும் மலை.

அஸ்தமனம்
அத்தமனம் } அத்தமனகாலம், அத்தமித்தல்.

அத்தமானம் - ஆமணக்கு.

அத்தமானியம் - கண்டதிற் பாதி இறைதருதல்.

அத்தமி
அஸ்தமி } மறை, கெடு.

அஸ்தமிக்கை
அத்தமிக்கை } படுகை, அஸ்தமிப்பு.

அத்தமித்தல் - அற்றுப்போதல், உட்சுருதல், படுதல், மறைதல், அஸ்தமித்தல்.

அத்தமிப்பு - படுகை.

அத்தமேற்காலாதனம் - இருகாலுமே லுறமடக்கி அக்கா லிரண்டையுங் கையாற்பற்றிக் கிடப்பது.

அஸ்தம் - அஸ்தமிக்கை, அத்தகிரி, ஒரு நட்சத்திரம், கை.

அத்தம் - அருகெறி, பொருள், அஸ்தகிரி, அஸ்தம், அர்த்தம், குங்கிலியம், அத்தகிரி, ஹஸ்தம், அப்தம், அதிவிடயம், வழி, அருகெறி, ஆண்டு, ஒரு நட்சத்திரம், ஒரு நாள், ஒருமலை, கண்ணழி, காடு, குங்கில், கை, சொற்பொருள், பாதி, பொன், முகில், வழி, கரிசலாங் கண்ணி, வருஷம்,

அத்தயாமம் - ஒரு தினத்திற் பதினைமி லொன்றுகொண்ட நேரம்.

அத்தரசிதம் - மடல்தூக்தம்.

அத்தர் - சிவன், முனிவர், தேவர், வணவாசர், வாசனைப்பண்டம்.

அத்தலைப்பொருந்தி - ஒருபூடு.

அத்தவசனம் - நினைந்த பொருளைச் சொல்லும் சொல்.

அத்தவரை - அஸ்தகிரி.

அத்தவர் - ஆடையுடையோர்.

அத்தவாகனன் - சிவன்.

அத்தவாரணம் - போதுமெனல்.

அத்தவாளம் - உல்லாசம், காடு, போர், வை, வடகம், மேலாடை, முன்னூனை.

அத்தவுதயம் - அருத்தோதயம்.

அத்தவேடனை - பொருளிச்சை.

அத்தனை - அவ்வளவு.

அத்தன் - அருகன், முனிவன், மூத்தவன், வைரவன், விஷ்ணு, கடவுள், கடுக்காய், குரு, உயர்ந்தோன், சிவன், பிதா, மூத்தோன், வெள்ளீயம், தகப்பன்.

அத்தன்மை - அம்மாதிரி.

அத்தா - தமக்கை, தாய், பெண் கொடுத்த மாமி, மெய்யாய், வெளிப்படையாய்.

அத்தாச்சி - தமையன் மனைவி, ணகவன் சகோதரி.

அத்தாட்சி - திருவுஷ்டாந்தம், ஒப்பனை, திட்டாந்தம், ருசு.

அத்தாணி - அரசிருக்கை, சபைகூடும் இடம், ஓலக்க மண்டபம்.

அத்தாணிமண்டபம் - அரசிருக்கை மண்டபம், சபைகூடுமண்டபம்.

அத்தாதிகம் - பாதிக்கதிகப்பட்டது.

அத்தாதிகாரம் - பொக்கிஷாதிகாரியின் அதிகாரத்தனம்.

அத்தாதூரம் - பொருளாசை,

அத்தாந்தரம் - எதிரார்த்தம், புதுக்காரியம், வேதாந்தம், வேதநிமித்தம்.

அத்தாபித்தல் - உரப்பிஞருக்கல்.

அத்தாப்பித்தல் - உறுத்தி வெளிப்படையாய் தட்டிப்பேசல்.

அத்தாயம் - அந்தரம், கடைச்சற்சக்கரத்தின் மிதிகடி.

அத்தாய் - ஆடை.

அத்தார்ச்சனம் - திரவியந்தேடுதல்.

அத்தார்ச்சனை - திரவியசம்பாத்தியம்.

அத்தார்த்தம் - ஆண்டிற்பாதி, பொருணிமித்தம்.

அத்தார்ந்தம் - அரைவருடம், பொருணிமித்தம்.

அத்தாவாம் - அசைவுள்ள பொருள்.

அத்தாளம் - இராச்சாப்பாடு.

அத்தானம் - சரியற்ற இடம், கோயின் முதலியவற்றின் வாயில், மிகுந்த ஆழம்.

அத்தானி } சபை கூடுமி
அத்தானிமண்டபம் } டம்.

அத்தான் மதனி - அத்தான் மதினி.

அத்தான்மதினி - அத்தை மகன் மனைவி.

அத்தான் - முன்னவள் கொழுநன், அக்காள் கணவன், மைத்துனன், அத்தைமகன், அம்மான் மகன், மனைவி தமையன்.

அத்தி - யாசகன், உண்டு, சகநாடியிலொன்று, அஸ்தி, ஹத்தி, அப்தி, அக்கர், அத்திஞபுரி, ஆனவணங்கி, அதவு, அத்தன்மையன், கத்தி, உண்மை, எலும்பு, என்பு, ஒரு மரம், கடல், கண்ணினிற்கு மோர் நரம்பு, கருவிளை, கொலை, திப்பிலி, பாதி, செய்யென்னெவல், பிடியன்யானை, மலை, யானை, வெருகமரம், கல்லத்தி, காட்டத்தி, கொடியத்தி, பேயத்தி, மலையத்தி, விழலத்தி, சந்திரவமிசத்துள்ள பரதன் குலத்திற் பிறந்த ஓரரசன், தேவசேனை, மரவகை.

அத்திகபம் - கடனுரை, கணவாய், மீனெலும்பு,

அத்திகம் - வருடந்தோறும் வருவது.

அத்திகா - அத்திகை.

அத்திகாயம - நன்மாத்திகாயம், அதன் மாத்திகாயம் என அசீவ பதார்த்தங்களோடு கூட்டி வழங்கப்படும் ஒரு வாய்பாடு.

அத்திகிரி - காஞ்சிபுரத்துள்ள விட்டுணுதலங்கள் எட்டனுள் ஒன்று. அது வெள்ளையானை தன்னமிசமொன்றிலேலே விட்டுணு வைத்தாங்கப்பெற்ற காரணத்தாலே வந்த பெயரென்பர். இக்கோயிலைச சுற்றிய மாடவீதி முதலிய சிறிய பாகங்களுக்கு முற்காலத்தில் வழங்கிவந்த பெயர் அத்தியூர் என்பதாம்.

அத்திகூடம் - யானைக்கூடம்.

அத்திகை - அக்காள், அத்தன்மையானது.

அத்திகோசத்தான் - ஒருதமிழுப்பெயர். அது இளந்தூணைமகரந்தம்மிற் கூடிவிளையாடல் குறித்தபொழுதைக்குக் காமே படைத்திட்டுக் கொண்டது, ஒரு குழலின் பெயர்.

அத்திகோபம - ஒரு நயனரோகம்.

அத்திகோலம் - அழிஞ்சில், அழிஞ்சல்.

அத்திக்கண்ணி - கரசிலாங்கண்ணி, வெருகமரம், அத்திக்கனி.

அத்திக்கள் - அத்திவேர்க்கள்.

அத்திக்கர்ணி - சிற்றாமணக்கு.

அத்திசஞ்சயம் - இறந்தவரின் உடம்பைத் தகனஞ் செய்தபின் எலும்புகளைக் கங்கை முதலிய தீர்த்தங்கள் ஒன்றில் இடும்படியெடுத்துத் திரட்டல்.

அத்திசமர்ப்பணம் - இறந்த தேகத்தினெலும்பைக் கங்கை முதலிய தீர்த்தங்களிலெறிதல்.

அத்திசம் - நீர்முள்ளி, சங்கு, சந்திரன்.

அத்திசயனன் } பாற் கடற்றுயிற் றோன், விட்டுணு.
அத்திசயன் }

அத்திசாரம் - எலும்புத் தானங்களில் உள்ள எண்ணெய்ப்பற்றான வுளன்.

அத்திசிங்குவை - தகரவாடியிலொன்று.

அத்திசுரம் - எலும்பைப் பற்றின சுரம், ஒரு நோய், அஸ்திசுரம்.

அத்திதண்டம - முள்ளங்கி, யானைக் கொம்பு.

அத்திதாரணம் - எலும்புமாலை தரித்தல்.

அத்திதி - நிலையின்மை, மரியாதையின்மை.

அத்தித்தல் - பாதிசெய்தல்.

அத்தித்திப்பிலி - யானைத்திப்பிலி.

அத்திநந்தனி - பார்வதி.

அத்திநகநீதகம் - சந்திரன்.

அத்திநாத்தி - உண்டு இல்லை எனவும் உள்ளதும் இல்லதும் எனவுஞ் சந்தேகிக்க நின்றதெனவும் பலவேறு பொருள்களைத் தரும் ஒரு வட மொழி அவ்வியயம்.

அத்திநாத்திவாதம் - உண்டில்லை என்னும் வாதம்.

அத்திபங்கம் - எலும்புமுறிதல்.

அத்திபஞ்சரம் - என்புக்கூடு, முழுவென்பு, அஸ்திபஞ்சரம்.

அத்திபாதிப்பிரியம் - சச்சிதானந்தம்.

அஸ்திபாரம் }
அத்திபாரம் } அடிப்படை.
அஸ்திவாரம் }

அத்திபுரசாதனி - அவுரிப்பூண்டு.

அத்திபெருக்கல் - அத்திசஞ்சயம்.

அத்திபேதம் - ஒருநரகம்.

அத்திபேதி - ஒரு மருந்து.

அத்திப்பதி - அஸ்தினபுரம்.

அத்திப்பிரக்கேபம் - இறந்தவனுடைய எலும்பைக் கங்கை முதலிய தீர்த்தங்களில் இடுதல்.

அத்திமண்டூகி - முத்துச்சிப்பி.

அத்திமரம் - அசுவ, உதும்பரம், கோளி, அதம்.

அத்திமாலி - சிவன்.

அத்திம்பேர் - அத்தை கணவன், சமக்கை கணவன், அத்திமுகத்தோன்.

அத்தியக்கம் - தலைமை, பிரத்தியக்கம், மேல்விசாரணை.

அத்தியக்கன் - தலைவன், மேல்விசாரணைக்காரன்.

அத்தியக்கினி - சீதனம், வடவாமுகாக்கினி.

அத்தியக்கினிட்டோமம் - யாகம் இருபத்தொன்றனுள் ஒன்று.

அத்தியசனம் - ஏகோத்திட்ட வுண்.

அத்தியஸ்தமி - மிகவும் ஐக்கியம்.

அத்தியட்சரம் - பிரணவம்.

அத்தியட்சன் - மேல்விசாரணை செய்வோன், அதிகாரி, அத்தியக்கன், கண்காணி தலைவன்.

அத்தியந்தகோபம் - மிகு கோபம்.

அத்தியந்தகோபனம் - அதிகக் கோபம்.

அத்தியந்தபாவம் - முழுதுமின்மை.

அத்தியந்தப்பிரளயம் - ஐவகைப்பிரளயங்களுள் ஒன்று, அது முத்தி, இந்த அவத்தையில் அஞ்ஞானஞ் சிறிதுமில்லை.

அத்தியந்தம் - ஒரெண், மட்டற்றது, மிகுதி, அனந்தம்.

அத்தியந்தாதிசயோக்தி யலங்காரம் - மிகையுயர்வுநவிற்சியணி.

அத்தியந்தாபாவம் - அபாவப்பிரமாண வகைகளுள் ஒன்று. அஃ தொன்றுமில்லாமை.

அத்தியயநம் - வேதமோதல், படித்தல்.

அத்தியயனபட்டர் - அர்ச்சகன்.

அத்தியயம் - அத்தியாயம், அழிவு, ஆக்கினை, இக்கட்டு, ஒரு பொருளின் பேதத்தை ஐயத்துடனறிதல், குற்றம், சட்டம், பொல்லாங்கு, மரணம், மீறுதல்.

அத்தியயனம்படித்தல் - வேதமோதல், அத்தியானம்.

அத்தியவசம் - மிகவும் அவசமாதல்.

அத்தியவசயித்தல் - ஒரு பொருளின் கண் இயல்பாய் நிகழுந் தன்மையை யொழித்துத் தானெடுத்த பொருண்மேலேற்றிச் சொல்லல், தற்குறிப்புச் செய்தல்.

அத்தியவசாயம் } நிச்சயம், தானெடுத்துக்
அத்தியவசாயிதம் } கொண்டது, முயற்சி, மனப்போக்கு, பொருள், துணிவு.

அத்தியவசாயினி - விஷய நிச்சயஞ் செய்யுமது.

அத்தியற்பம் - மிகவும் அற்பம்.

அதியற்புதம் - மிக்க ஆச்சரியம், பெருவியப்பு.

அத்தியாகரணம் - தொக்குநின்றதை நிரப்புதல், வாதுபேசுகை, வேதமோதல்.

அத்தியாகாரம் - அவமானம், குற்றம், மிகுபோசனம், வருவித்தசொல், தர்க்கம்.

அத்தியாகாரி - மிகப் புசிக்கிறவன்.

அத்தியாகாரியம் - ஒரு வாக்கியத்தில் ஒருசொல் அங்ஙனம் வெளிப்படையாயிராத மற்றொரு சொல்லை அவாவி நிற்றல்.

அத்தியாசசதுட்டயம் - ஒன்றனை மற்றொன்றாகக் கொள்ளுதலாகிய நால்வகை அத்தியாசங்கள், அவை மித்தியாத்தியாசம், இதராத்தியாசம், இதரேதராத்தியாசம், சத்தியாத்தியாசம் என்பன. அவற்றுள் நித்தியாத்தியாசமாவது நித்தியமான ஆன்மா நெருப்பின் சம்பந்தத்தால் நீரினிடத்துச் சூடு வந்ததுபோல் அநித்தியமான தேக சம்பந்தத்தால் தன்னிடத்துவந்த சரித்தன் முதலிய தொழில்களைத் தன்னுடையதாகப் பாவித்தலெனவும் இதராத்தியாசமாவது தனக்கு வேறான இந்திரியங்களின் தொழில்களைத் தன்னுடையனவாகக் காண்டலெனவும், இதரேதராத்தியாசமாவது மனமுதலியன யானெனதெனச் சங்கற்பிப்பதைத் தனதாகப் பாவித்தலெனவும், சத்தியாத்தியாசமாவது தானல்லாததைத் தானாகக் கருதுமகங்காரத்தைத் தானாக வறிதலெனவும் வேதாந்திகள் கூறுவர்.

அத்தியாசநம் - ஏகோத்திட்டம்.

அத்தியாசம் - காட்டுதல், வித்தியாசம், ஆரோகம், வீற்றிருத்தல், விபரீத உணர்ச்சி.

அத்தியாசவாதம் - விபரீதவாதம்.

அத்தியாசனம் - அபரக்கிரியையினேர் பகுதி, ஏகோத்திட்டம்.

அத்தியாசாரம் - விதிக்கப்பட்ட ஆசாரங்களைக் கடந்து நடத்தல்.

அத்தியாசாரி - அத்தியாசாரமாய் நடப்பவன்.

அத்தியாசிரம பாவனை - பிராமிய பாவனை.

அத்தியாசிரம யோகசன்னியாசி - பாரமேசுவரி பாவனையில் நிற்பவன்.

அத்தியாசை - அதிக ஆசை.

அத்தியாசோபாதி - மூன்றுவகைச் சிவ உபாதிகளுள் ஒன்று. அது அந்தக்கரண சம்பந்தமாகிய சுகதுக்கங்கள் முழுவதும் ஆத்துமா அனுபவிப்பதுபோலமுயற்சிப்பது.

அத்தியாச்சியம் - விடப்படக்கூடாதது.

அத்தியாச்சிரமம் - ஆச்சிரமங்களைக் கடந்தநிலை.

அத்தியாச்சிரமயோக சன்னியாசி-பாரமேசுவரி பாவனையில் நிற்பவன்.

அத்தியாச்சிரமயோகி - மூவகை யோகிகளுள் ஒருவன்.

அத்தியாதாரம் - கிராமத்தினின்று மாறுபடுதல்.

அத்தியாத்துமஞானம் - பரமான்மாவை அறியும் அறிவு.

அத்தியாத்துமதத்துவநூல் - அத்தியாத்துமஞான சாத்திரம்.

அத்தியாத்துமம் - யசுர்வேத உபநிடதங்களுள் ஒன்று.

அத்தியாத்துமா - சீவான்மா, பரமான்மா, பரமாத்மா.

அத்தியாத்துமிக நூல் - அத்தியான்மிக நூல்.

அத்தியாத்துமிகம் - கடவுட் கடுத்தது, தன்னுல்வருந் துன்பம்.

அத்தியாபகன் - வேத மோதுவிப்போன், உபாத்தியாயன்.

அத்தியாபகம் } வேதமோதுவிக்கை,
அத்தியாபனம் } ஓதுவித்தல், வேத மோதுவித்தல்.

அத்தியாபி - இப்போதும்.

அத்தியாபிதம் - படிக்கப்பட்டது.

அத்தியாயகம் - அத்தியயகம்.

அத்தியாயம் - இலம்பகம், இலக்கிய செய்யுட்பகுதிகாண்டம், சருக்கம், படலம், பரிச்சேதம், வேதநூலை விரித்த இலக்கியத்தின் கூறுபாடு, வேதம், நூற்பிரிவு, அதிகாரம்.

அத்தியாரூடம் - மிகவும் உயர்ந்த நிலை, மிகுந்த வளர்ச்சி.

அத்தியாரோகணம் } ஏறுதல்.
அத்தியாரோகம் }

அத்தியாரோபணம் } ஒன்றையொன்
அத்தியாரோபம் } றிலேற்றல், விபரீத உணர்ச்சி.

அத்தியாரோபனம் - ஒன்றையொன்றிலேற்றுதல், கயிற்றைச் சர்ப்பமாக விளக்குதல்போல ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக விளக்குதல்.

அத்தியாலியகம் - மிகுந்த அவசியம், இன்றியமையாதது.

அத்தியாவகனிகம் - சீதனம்.

அத்தியாயனம் - தியாஞபாவம், வேத மோதுகை.

அத்தியான்ம ராமாயணம் - விசுவாமித்திரரால் செய்யப்பட்ட ஓர் உபதேச நூல்.

அத்தியான்மர் - அண்டபிண்டம் இரண்டிலும் வியாபாரமாயுள்ள பதின்மூன்று வாயுக்கள்.

அத்தியான்மிகசடாகமம் - பிறன் படிக்கும் ஆகமமாக்குச் செவியிஞற் கேட்கப்பட்டு உணரோசையாகிய மத்தியமாக்குரூபமாயிருசயத்திற் றோன்றி நிற்பது.

அத்தியான்மிகநூல் - பதிநூல், அது சாங்கியம், பதஞ்சலியம், வேதாந்தம் எனப்படும்.

அத்தியான்மிகம் - அத்தியாத்துமிகம்.

அத்தியான்மீகநூல் - மூவகைச் சாத்திரம்.

அத்தியுக்தி - அதியுக்தி அலங்காரம், பெருமைப்படுத்திப் பேசுதல், வர்ணித்துப் பேசுதல்.

அத்தியுக்தி யலங்காரம் - மிகுதிநவிற்சியணி.

அத்தியூடன் - சிவபெருமான்.

அத்தியூர் - காஞ்சியிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம்.

அத்தியேதா - படிக்கிற மாணக்கன்.

அத்திரசத்திரம் - அம்பும் வாளும், அஸ்திரசஸ்திரம்.

அத்திரசந்தானம் - அம்பின் தொடர்ச்சி.

அத்திரசாஸ்திரம் - வில்வித்தை.

அத்திரசிகிற்சகன் - சத்திர வைத்தியஞ் செய்வோன்.

அத்திரசிகிற்சை - சத்திரவைத்தியம்.

அத்திரதர் - காற்றேராசர்.

அத்திரதேவர் - ஆயுததேவர், அஸ்திரதேவர்.

அத்திரத்தாமன் - அசுவத்தாமன்.

அத்திரபரிட்சை - கலைஞானமறு பத்துநான்கினுள் ஒன்று, வில்வித்தை கற்கை, அத்திரபரீட்சை.

அத்திரப்பிரயோகம் - அம்புசெலுத்தல்.

அத்திரம் - அம்பு, இலங்கை, கடுக்காய்ப்பூ, கழுகை, குதிரை, கைவிடுபடை, நிலையின்மை, மலை, முன்விடுமம்பு, புதை, நிலையற்றது, வில், அஸ்திரம், கைவிடுமாயுதப்பொதி.

அத்திரயூகம்-ஒருவகைப்படைவகுப்பு.

அத்திரலாகவம் - அத்திரப்பிரயோகவன்மை.

அத்திரவர் - விசுவாமித்திரவர்களிலொருவர்.

அத்திரா - அரசு.

அத்திராகாரம் - ஆயுதசாலை.

அத்திராசம் - பயமின்மை.

அத்திராகாரம் } அம்புக்கூடு, அம்
அத்திராதாரம் } புறைதூணி.

அத்திரி - உலத்துருத்தி, ஒட்டகம், ஒரிருடி, அவர் அத்திரிமாமுனிவர், கணை, கழுதை, குதிரை, சூரியன், தருமநூல் பதினெட்டிலொன்று, மலை, வின், கோவேறு கழுதை, அத்ரி.

அத்திரிகேலை - பூமி.

அத்திரிகை - ஓரப்சரப்பெண்.

அத்திரிசாதன் - சந்திரன், மூதன் மூன்று வருணத்தாருள் ஒருவன்.

அத்திரிசாரம் - இரும்பு.

அத்திரிசிருங்கம் - சிகரம்.

அத்திரிசை } பார்வதிமேகலி.
அத்திரிநந்தினி }

அத்திரீசன் - இமையம், சிவன்.

அத்திரு - அரசமரம், அரசு.

அத்திரோகம் - மெத்தெனவு.

அத்திலை - செருப்படை.

அத்திவாரம் - ஆடியுகம், அடி, அடிமரம், அஸ்திபாரம், அத்திபாரம்.

அஸ்தினபுரம் } அத்தினபுரம், அஸ்
அத்தினபுரம் } தினபுரி. இது வங்காள வடமேற்கு மாகாணங்களில் மீரட்டு என்னும் ஊர். மகாபாரதத்திற் சிறந்த சந்திரவமிசத்தரசர்களாகிய பாண்டவர்களின் இராஜதானிப் பட்டினம், அஸ்தினபுரம்.

அஸ்தினபுரம் } அத்தினபுரம், அத்தி,
அத்தினபுரி } அத்திப்பதி, குருகேத்திரம்.

அத்தினி - நால்வகைப் பெண்களிலே ஒருத்தி, பெண்யானை, ஹஸ்தினி.

அஸ்து - அப்படியாக, ஆகுக.

அத்து - அழிஞ்சிற்பட்டை, எல்லை, தைத்தல், அசைச்சொல், அரைஞாண், இசைப்பு, அரைப்பட்டிகை, இசை, சாரியை, சிவப்பு, செவ்வை, தைப்பு, தையல், துவர், கடப்பம் பட்டை, அப்பு, சேரு.

அத்து } தெலுங்கில் எல்லை.
ஹத்து }

அத்துகமானி - அரசமரம், அரசு.

அத்துகம் - ஆமணக்கு.

அத்துச்சம் - கிரகங்களின் அதிகவுச்சம்.

அத்துணை - அவ்வளவு, அத்தனை.

அத்துதல் - அடைதல், அப்புதல், அரத்தைப் பூண்டு, இசைத்தல், பொருத்தல், சார்தல், எட்டுதல்.

அத்துமம் - அரத்தை.

அத்துமானி - அரசமரம், அரசு.

அத்துமுறி - அறுத்துமுறி.

அத்துருக்கம் - அகழ் சூழ்ந்த கோட்டை.

அத்துரோகம் - துரோகமின்மை.

அத்துலாக்கி - கருஞ்சீரகம்.

அத்துவகமனம் - பிரயாணம்பண்ணல்.

அத்துவகன் - தீர்த்தயாத்திரைக்கு வெளிப்பட்டு வழிநடப்போனுய் உண்டியின் பொருட்டு வந்த யாசகன்.

அத்துவசுத்தி - ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டிருக்கின்ற போகங்க

சொல்லாவற்றையும் ஏக காலத்திலே புசித்துத் தொலைப்பித்து மோட்சங்கொடுத்தல்.

அத்துவசோதனை - அத்துவசுத்தி, பிரமசோதனை செய்தல்.

அத்துவந்திரயம் - அத்துவாக்கள் மூன்று. அவை சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என்பன.

அத்துவரிட்டம் - வழியிலிருப்பது.

அத்துவம் - இரண்டொன்றுயிருத்தல், ஒன்றிப்பு, சிவப்பு, வழி, அத்துவா.

அத்துவயதாரகம் - யசுர்வேத உபநிடதங்களுளொன்று.

அத்துவயம் - இரண்டன்மை, பிரமமும் பிரபஞ்சமும் ஒருபொருளான தன்மை.

அத்துவயவாதி - பிரமமும் பிரபஞ்சமுமொன்றெனச் சாதிப்போன், பௌத்தன்.

அத்துவயன் - பௌத்தன்.

அத்துவரியு - யசுர்வேதம், யாகபுரோகிதன்.

அத்துவரியுவேதம் - யசுர்வேதம்.

அத்துவர் - பிரமஞானிகள்.

அத்துவர்க்கயம் - கருஞ்சீரகம்.

அத்துவர்க்காயம் - கருஞ்சீரகம், சீரகம்.

அத்துவலிங்கம் - ஆன்மதத்துவம் அடிப்பாகமும் வித்தியாதத்துவம் நடுப்பாக முஞ் சிவதத்துவங் கடைப்பாகமுமாக அமைந்த சிவலிங்கம்.

அத்துவா - ஆன்மாக்களைப் பரகதியடைவிக்கை காரணமாகிய வழி, அது மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்வா, கலாத்துவா எனவாறு வழி.

அத்துவாகாயாரோணம் - ஒரு தீட்சை.

அத்துவாக்காயம், **அத்துவாக்கியம்** } கருஞ்சீரகம்.

அத்துவாசங்கற்பவாதி - அத்துவாவடிவாகச் சிவனைப் பாவிப்போன்.

அத்துவாசுத்தி - ஆத்துமாக்களிலுஞ் சஞ்சிதமாயிருந்த கன்மங்களையெல்லாம் நசிப்பித்தல், அத்துவசுத்தி.

அத்துவாசுத்திபண்ணல் - அத்துவாக்களிற் சனனங்களுக்கு ஏதுவான கன்மங்களை யெல்லாஞ் சுத்திகரித்தல்.

அத்துவாசைவம் - ஒரு சைவம். அது சத்திநிபாதம் வாய்பெற்ற சைவன் சிவனை வழிபடும் நெறி.

அத்துவாந்தம் - காலைமாலை வெளிச்சம்.

அத்துவாமூர்த்தி - பிரபஞ்சத்திற் கலந்து நின்று சேட்டிப்போன்.

அத்துவானம் - கட்டம், செவ்வானம், பாழ்ங்காடு, பாழிடம்.

அத்துவிதநிலை - சிவமுமான்மாவுந் தம்முள் வேறுபடாத ஒற்றுமைப் பட்டு நிற்றல்.

அத்துவிதபாஷியம் - வியாசசூத்திரத்திற்குச் சங்கராச்சாரியார் செய்த பாஷியம். இது பரமான்மா ஐக்கியமான அத்துவித சுவரூபத்தைக் கூறுவது.

அத்துவிதம் - இரண்டல்லாதது, பேதப்பொருளிரண்டு தம்முள் அபேதமாதற்குறிய சம்பந்த விசேடம் அஃதாவது பொருளிரண்டாயிருந்தும் வேறறக்கலந்து நிற்குந்தன்மை, அத்துவைதம், ஒன்றிப்பு.

அத்துவிதர் - சிவத்தோடு இறண்டறக் கலந்தவர்.

அத்துவிதாநந்தம் - எண்வகையாநந்தங்களிலொன்று. அது சீவன் வேறு, பிரமம் வேறெனக்கொள்ளுந் துவித ஞானம் நீங்கியவிடத்துண்டான ஆநந்தம்.

அத்துவிதி - ஏகாத்தமவாதி.

அத்துவிதியம் - ஒன்றிப்பு.

அத்துவிதியன் - ஒன்றானவன்.

அத்துவேஷம் - துவேஷமின்மை.
அத்துவை - கோழையினது மூழையினதுங் கலப்பு, தெரு, நேரம்.
அத்துவைதம் - பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் ஒன்றென்னை, இரண்டன்மை, ஏகாத்மவாதம்.
அத்துவைதவாதி - அத்துவிதமே மெய்யென்று சாதிப்போன். இவன் சிற்சத்தியே சகத்துக்கு உபாதான காரணமென்பன்.
அத்துவைதி - அத்துவிதக்கொள்கையுடையோன், ஏகாத்மவாதி.
அத்தாரம - மரமஞ்சள்.
அத்தேயம்-களவு செய்ய நினையாமை, களவு செய்யாமை, திருடாமை.
அச்சை - அக்காள், குரு, தலைவி, மாதா, மாமி, முன்னிலை அசைச் சொல், குருவின் மனைவி.
அத்தைசார் - அத்தை.
அத்தைபிள்ளை - அத்தான்.
அத்தைப்பாட்டி - பாட்டனுடன் பிறந்தாள்.
அத்தைமகன் - அத்தைபிள்ளை.
அத்தையர் - மாமிமார்.
அத்தோ - ஓர் அதிசய இரக்கச்சொல், இரக்கச்சொல்.
அத்தோதயம் - அருத்தோதயம், ஒரு விசேடநாள். இது அறுபது வருஷத்துக்கொருதரம் தைமாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் சூரியன் மகரத்திலும் சந்திரன் விதிபாத யோகங் கூடின திருவோண நட்சத்திரத்திலும் இருந்தென்றால் உதயமாதல், இந்நாளில் ஸ்நானம் தருமம் முதலியன செய்தால் விசேடமென்பது திண்ணம்.
அத்தோர்யாமம் - ஒரு யாகம், சோம யாக வகை, அது சோதிட்டோமயாகத்தின் இறுவாயாகிய ஏழாம் பகுதி.
அத்வகி - அதோனியென்னும் பட்டணம்.
அத்விதீயம் - இணையற்றது.
அத்யந்தம் - அத்தியந்தம்.
அத்யற்புதம் - அத்தியற்புதம்.
அத்யயகம் - அத்தியயகம்.
அத்யாசை - அத்தியாசை.
அத்யாத்மம் - அத்தியாத்துமம்.
அத்யாத்மிகம் - அத்தியாத்துமிகம்.
அத்யாபகன் - அத்தியாபகன்.
அத்யாபி - இப்போதும்.
அத்யாயம் - அத்தியாயம்.
அத்யாரோபம் - அத்தியாரோபம், விபரீத உணர்ச்சி.
அத்யாவசியகம் - அத்தியாவசியகம், மிகுந்த அவசியம்.
அஸ்திரம் - அத்திரம்.
அத்வம் - அத்துவம், வழி, சிவட்பு.
அத்வயம் - அத்துவயம்.
அத்விதம் - அத்துவிதம்.
அத்வைதம் - அத்துவைதம்.
அநங்காரம் - அநங்காரமின்மை.
அநகம் - பாவமின்மை, மாசின்மை, அனகம்.
அநகர் - அழகுடைய ஆடவர், அழகுள்ளவர், பாவமற்றவர், மறுவற்றவர், மேன்மக்கள்.
அநகன் - அருகன், கடவுள், சிவன், விஷ்ணு, பாவமில்லாதவன்.
அநக்கம் - குருடு.
அநக்கரம்-சொல்லத்தகாதது, நிந்தை.
அநக்கரன் - ஊமை, கல்வியில்லாதவன், சொல்லத்தகாதன சொல்லுவோன்.
அநக்கினி - அக்கினியல்லாத வஸ்து, அக்கினி யில்லாமை, உதராக்கினியின் சேட்டையற்றவன், விவாகம் பண்ணுதவன்.
அநங்கம் - ஆகாயம், வாயு, இருவாட்சி, உடலின்மை, மல்லிகை.
அநங்கர் - மதனெனப்படுவார் பலர்.
அநங்கலீலை - மதனநூல் வழியாடும் விளையாட்டு.
அநங்கன் - உடலிலான், கடவுள், மன்மதன்.
அநங்கு - மன்மதன்.

அநசூயை - அழுக்காறின்மை, அத்திரி முனியின் மனைவி.

அநச்சரசத்தம் - எழுத்தொலியல்லாத வொலி.

அநச்சராத்மகம் - எழுத்தல்லாததனுலாய வோசை.

அநச்சுவம் - குதிரையல்லாதது.

அநதிகதம் - அறியப்படாதது, படிக்காதது.

அநதிகதார்த்தந்திரு - ஒருக்காலு மறியாத வஸ்துவை அறிவிப்பது.

அநதிகதார்த்தம் - அறியப்படாத வஸ்து.

அநதிகாரம் - அதிகாரமின்மை.

அநதிகாரி - அதிகாரமில்லாதது, அதிகாரமில்லாதவன், தகுதியற்றது, தகுதியற்றவன்.

அநதிக்கிரமம் - அதிக்கிரமமின்மை.

அநதிக்கிராந்தம் - கடவாதது.

அநதிக்கிராந்தவித்துகபரசிவம் - வித்துவை நீங்காத நிலையர்-இவர் மகாமாயையின்றி பரநாதப் பிரதேசத்தை அதிட்டிப்பவர்.

அநதிக்கிராந்தவித்துகபராசத்தி - சிவனுடைய நவபேதத்து ளொன்று. அது பரவித்துவை அதிட்டிக்குஞ் சிவசத்தி.

அநதிசயம் - அதிசயமின்மை.

அநதிதேசம் - அதிதேசமின்றி யுணர்த்துவது.

அநதிரோகம் - அதிரோகமின்மை.

அநத்தம் - பயனற்றது.

அநத்தியயனம் - ஒதுத லொழிந்திருக்க வேண்டியகாலம்.

அநத்தியவசாயாத்துமா - பாவம். அது கிராகக வாத்துமாவுடைய சுபாவம்.

அநத்தியாயம் - அதத்தியயனம்.

அநநுபாடனம் - தோல்வித்தானம் இருபத்திரண்டனு ளொன்று. அது பிறன் கூறிய பொருளை அனுவதிக்கமாட்டாமை.

அநந்த - நிவிர்த்திகலையிற்பிரிதிவித்துவத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களுள் ஒன்று, வித்தியாகலையிலை இராகதத்துவத்திலுள்ள ஐந்து புவனங்களுள் ஒன்று.

அநந்தகீர்த்தி - அளவிறந்த கீர்த்தியுடையோர்.

அநந்தகோடி - எண்ணத்தொலையாதன.

அநந்தசதுட்டயம் - ஆருகமதத்திற்கு சொல்லப்பட்ட மோட்சத்திற் பெரும் பயனுகிய அனந்தஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம் என்னும் நான்கு வகை.

அநந்த சதுர்த்தசி - புரட்டாசி மாதத்துச் சுக்கிலபக்கச் சதுர்த்தசி திதி. இது விட்டுணுவைப் பூசிக்கும் ஒரு விசேஷ தினம்.

அநந்தசத்தி - அளவிலாற்ற லுடைமை, இது கடவுளுடைய அறு குணங்களுள் ஒன்று, கடவுள்.

அநந்தசயனம் - சர்ப்பசயனம், மலையாள தேசத்துள்ள ஒரு விட்டுணுதலம்.

அநந்தசயனன் - சேடசயனன், விட்டுணு.

அநந்தசாயி - விட்டுணு.

அநந்தசிரிடை - வாசுகியின் மனைவி.

அநந்தசுகம் - வரம்பிலா இன்பம்.

அநந்தசொரூபி - கடவுள்.

அநந்தஞானம் - வரம்பிலா அறிவு.

அநந்தஞானி - கடவுள், பார்ப்பதி, பிரமன்.

அநந்ததரிசனம் - வரம்பிலாக்காட்சி.

அநந்ததிட்டி - இந்திரன், சிவன்.

அநந்ததிருதியை - புரட்டாசிமார்கழி வைகாசி என்னும் மாதங்களில் வரும் சுக்கிலபக்கத்திருதியை.

அநந்ததீர்த்தகிருத்து - பதினுன்காஞ் சமணதீர்த்தகரன்.

அநந்ததீர்த்தம் - சிதம்பரத்திலே திருக்கோயிலிக்கு மேற்கே திருவனந்தேசுரத்துக்கு முன்னுள்ள ஒரு தீர்த்தம்.

அநந்தசேஷன் - அநந்தசுவரன், ஆதி சேடன், சேடசயனத்திற் றுயில் கொள்ளுகிற விட்டுணு.

அநந்ததை - நித்தியம்.

அநந்தத்துவம் - அனந்தமாயிருக் குந் தன்மை.

அநந்தநாதன் - சருவேசன்.

அநந்தநான்மை - அனந்தசதுட்டயம்.

அநந்தமயன் - அந்தரியாமி.

அநந்தம் - மூடிவில் லாதது, அள வின்மை, ஆகாயம், ஒரெண், கோளக பாஷாணம், குப்பை மேனி, சிறுகாஞ்சோறி, பொன், அனந்தம், நித்தியம்.

அநந்தரம் - மேல், பின்.

அநந்தரூபன்-அளவிறந்த ரூபங்களைக் கொண்டவன், சிவன், விட்டுணு.

அநந்தர் - சுத்ததத்துவங்களுள் ஒன் றாகிய ஈசுரதத்துவத்திலிருக் கும் அட்ட வித்தியேசுரர்களுக்குள்ளே தலைமை பெற்றவராகிய சுத்தாத் துவ கருத்தாவாயிருப்பவர்.

அநந்தலோசனன் - அநந்தலோசனன், கடவுள், புத்தன்.

அநந்தவாதம் - ஒருவகை வாதரோ கம், அது முகமுங் கழுத்துஞ்சோ ரும்படி செய்வது.

அநந்தவிபவை - பார்வதி.

அநந்தவியம் - சுவாயம்புதுவாகம த்திலே சொல்லப்படும் ஒரு மண்ட லம், பஞ்சபாண்டவருள் தலைவ னென தருமனுடைய ஓர் சங்கு.

அநந்தவிரதம் - புரட்டாசி மாதச் சுக் கில சதுர்த்தசியில் விட்டுணு சம யத்தார் அனுஷ்டிக்கும் ஒருவிர தம்.

அநந்தவீரம்
அநந்தவீரியம் } அளவில்லாததவீரம்.

அநந்தவீரியன் - சைனமதத்திற்சொல் லப்பட்ட இருபத்து மூன்றாந் தீர்த் தங்கரன்.

அநந்தன் - அருகன், கடவுள், சிவன், சேடன், சோரபாஷாணம், திரு மால், பலபத்திரன், ஆதிசேஷன், ஒரு தமிழ்ப் புலவன், அனந்தன்.

அநந்தாசனம் - பஞ்சாசனங்களுள் ஒன்று. அது சர்ப்பாசனம்.

அநந்தானந்தம் - வரம்பிலாவானந்தம்.

அநந்தியம் - அளவற்றிருக்கை, எண் கூற்றிருக்கை, நித்தியம்.

அநந்தீச்சுரம் - சிதம்பரத்திலே பதஞ் சலி முனிவராலே தாபிக்கப்பட்ட கோவில்.

அநந்தேசுரர் - அநந்தேசுவரர்.

அநந்தேசுவரர் - ஈசுவரதத்துவத்தி லுள்ள எட்டுப் புவனங்களுள் ஒன்று. சுத்தாசுத்தாத்துமாவிற் குக் கருத்தராகிய அனந்தர். இவர் ஈசுவர தத்துவத்தைத் தமதிருப் பாகக்கொண்டு அத்தத்துவத்திற் கபிமான தேவதையாயிருப்பவர்.

அநந்தை - பார்வதி, அழிவில்லாதவள், ஒரு சத்தி, பூமி.

அநந்நியசன் - மன்மதன்.

அநந்நியம் - அன்னியமல்லாதது, ஒற் றுமை.

அநந்நியை - அபின்னசத்தி.

அநன்வயாலங்காரம் - இயைபின்மை யணி.

அநபக்கிரியை - கடனிறுக்காமை, நோப்படுத்தாமை, பழிக்குப் பழி வாங்காமை.

அநபத்தியம் - பிள்ளையின்மை.

அநபரன் - பிரமன்.

அநபாயம் - அழிவின்மை, குறை வின்மை, தேய்வின்மை.

அநபாயன் - அநபாயனென்னுஞ் சோ ழச்சக்கரவர்த்தி, அழிவில்லாத வன், சிவன், நிலையாயிருப்பவன்.

அநபாயோகம் - சந்திரனுக்குப் பனி ரண்டாம் இடத்திற் சுபக்கிரகங் கள் நிற்குநிலை.

அநபிகிதகருத்தன் - அநபிகித கருத்தா.

அநபிகிதகருத்தா - தன் செயலை யுணர்த்தும் வினைக்கு ஏழுவரயா

காது மூன்றும் வேற்றுமையிலே அல்லது நான்காம் வேற்றுமையிலே நிற்குங் கருத்தா.

அநபிகிதகருமம் - செய்வினைக்கெழுவாயாகாது. 2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம், வேற்றுமைகளுள் ஒன்றனது ரூபமாகவருஞ் செயப்படுபொருள்.

அநபிகிதம்-சொல்லப்படாநிலை, தெரியாநிலை.

அநபிமதகம் - சம்மதமின்மை.

அநபியித்தம் - வெளிப்படையாகாதது.

அநபியித்தி - வெளிப்படையாகாமை.

அநபேட்சன் - ஆசையில்லாதவன்.

அநபை - அநபாயோகம்.

அநப்பியாசம் - அப்பியாசமின்மை.

அநம் - சோறு.

அநம்பு - சாதகப்புள், நீரில்லாதது.

அநயம் - அநிட்டவினம், தீங்கு, வருத்தம்.

அநரண்ணியன் - சூரியவமிசத்திற் பிறந்த பாணனென்பவனுடைய மகன்.

அநரவன் - பஞ்சபட்சி பாஷாணம், வெங்தோன்றி.

அநருகம் - தகுதியற்றதன்மை,

அநருகன் - தகுதியற்றவன்.

அநருகர் - தகுதியற்றவர், அநர்கர்.

அநர்க்களம் - தடையின்மை.

அநர்த்தகம் - பிரயோசனமின்மை.

அநர்த்தம் - பயனிலாச்சொல், பயனின்மை, ஆபத்து, அழிவு.

அநலக்கிரி - அண்ணுமலை.

அநலசனபட்சி - தழல்விழுங்கிப் பறவை.

அநலநட்சத்திரம் - செவ்வாய் நின்ற நாளுக்கேழாநாள், பதினொன்காநாள், பதினைஞாநாள், இருபத்தைந்தாம் நாளாய்வந்து தோஷமடைந்த நாள்.

அநலபித்தம் - உண்பதைச் சீரணிக்கச் செய்யும் உதராக்கினி.

அநலம் - அக்கினி, அநலநட்சத்திரம், உட்டணம், சித்திரைமூலம், சிவாகமம் இருபத்தெட்டினுள் ஒன்று, திருத்தியற்றது, பித்தம்.

அநலர் - அக்கினியுடையவர்.

அநலல் - கனலுதல், வெப்பமாயிருத்தல்.

அநலன் - அக்கினிதேவன், அட்டவசுக்களிலொருவன், அக்னி, அக்கி.

அநலாடி - சிவன்.

அநலி - சூரியன், நெருப்பு.

அநலுதல் - கனலுதல்.

அநலேறு - இடியேறு.

அநலோடுவேந்தன் - கார்முகிற் பாஷாணம்.

அநல் - அக்கினி, உட்டணம், கொடிவேலி, பித்தம், மூலாக்கினி, வன்னியிலை.

அநல்காலி - சூரியகாந்தக்கல்.

அநல்வென்றி - தங்கம்.

அநவசரம் - அகாலம், ஓய்வுநேரமின்மை.

அநவச்சின்னத்துபம் - அனவச்சின்னமாயிருக்குந்தன்மை.

அநவச்சின்னம் - எல்லைப்படாதது.

அநவதானம் - அவதானமின்மை.

அநவத்தாதேஷம் - முடிபுகாணுமையாகிய தோஷம்.

அநவத்தானம் - தவருனநடை, தவருன நிலை, நிலையின்மை, வாயு.

அநவத்திதம் - நிலையற்றது.

அநவத்தை - அநவத்தாதேஷம்.

அநவத்தைப்படுதல் - முடிபு காணுது மூட்டுப்படுதல்.

அநவபாசம் - தோற்றுமை, வெளிப்டாமை.

அநவரதம் - எப்போழ்தும், எப்பொழுதும்.

அநவலோபம் - இச்சித்த பண்டங்களைத் தந்து திருத்தி செய்தல்.

அநவலோபனம் - கருப்பந்தரித்தமூன்றுமாதத்திற் செய்யப்படும் கருப்பக் கிரியை.

அநவ்வியயகிருத்து - அவ்வியயமல்லாதகிருத்து.

அநற்கல் - சிக்கிக்கல்.

அநற்புதம் - அற்புதமின்மை.

அநற்றல் - எரித்தல், கனலச்செய்தல், சுடுதல்.

அநற்றிரள் - சோதிரூபி.

அநற்றுதல் - எரித்தல், சுடுதல்.

அநாகதசிவமூர்த்தி - அநாகத சிவமூர்த்தங்கொண்டது.

அநாகதசிவன் - பரமசிவத்திலிருந்து தோன்றினவருஞ் சதாசிவத்தைத் தோற்றுவித்தவருஞ் சகளநிட்கள போகருமான சிவன், இவர் வியாபினிக்குமேல் நாலங்குல அளவிலிருக்கின்ற வியோம என்னுஞ் சமனேயின் தானத்தை வியாபித்தவர்.

அநாகதநாதம் - பராசத்தி.

அநாகதம் - அடிக்கப்படாமை, அறியப்படாதது, சம்பாதித்துக்கொள்ளப்படாதது, சொல்லப்படாதது, நோய்படுத்தப்படாமை, வெளுக்கப்படாததும் புதிதுமான சீலை, மானுடசரீரத்திலுள்ளவாகச் சொல்லப்படு மாறுதாரங்களின் நான்காவது. அது மணிபூரகத்துக்குப் பத்துவிரற் பிரமாணத்திற்கு மேல் இருதய கமலத்தின் மூக்கோண வடிவினதாய்ப் பன்னிரண்டிதழுடையதா யிருக்கும், வந்தடையாமை, வருங்காலம்.

அநாகந்துகம் - அஞ்தியாயுள்ளது, இடையில்வந்ததல்லாதது.

அநாகரீகம் - மூரட்டுத்தனம், நாகரீகமற்ற காட்டுமிராண்டியின் பாங்கு, தையின்மை.

அநாகாமி - பௌத்தமதத்தின் தியானங்களுள்தனுள் மூன்றாவது.

அநாகாரம் - உணவின்மை, வடிவின்மை.

அநாகாலபிருதன் - பஞ்சகாலத்திலே தன்னைக் காத்துக்கொள்ளும்படி ஒருவனுக்கடிமையானவன்.

அநாகாலம் - பஞ்சகாலம்.

அநாகுலன் - இடைச்சங்கத்தார் காலத்திருந்த பெய்வப் பாண்டியன்.

அநாசத்தன் - விருப்பமில்லாதவன்.

அநாசரணம் - ஒழுக்கந்தவறின நடை, துன்னடை.

அநாசரித்தல் - துராசாரமாய் நடத்தல்.

அநாசாரம் - உபசாரமின்மை, உலக நடைக்கு மாறு, சீலையுடாமை, நல்லொழுக்கமின்மை, நிருவாணம், மரியாதையின்மை.

அநாசாரன் - நல்லொழுக்கமில்லாதவன்.

அநாசாரியன் - ஆசாரியன் ஆகாதவன்.

அநாசிகன் - மூக்கில்லாதவன்.

அநாசிரயம் - சார்பின்மை, பற்றுக்கோடாதலின்மை.

அநாசிரிதம் - சார்பில்லாதது, பற்றுக்கோடாகாதது.

அநாசிரிதர் - அநாசிரிதையைப் பொருந்தினவர், ஒன்றைப்பற்றுக்கோடாகக்கொண்டு பொருந்தாதவர்.

அநாசிரிதன் - அபேட்சியாதவன், சார்பில்லான்.

அநாசிரிதை - சாந்தியாதீத கலையிற் சிவதத்துவத்திலிருக்கும் பத்துப் புவனங்களுளொன்று. சோடசகலைப்பிரசாதத்திற் பதினொன்காவது கலை. இது வியாபினிக்கலைக் கப்பாலுஞ் சமனைக்கலைக் கிப்பாலும் நடுவிலிருக்கின்ற நான்கு கலைகளுள் நான்காவதும் அந்த நான்கிலொன்றான அனுதை கலைக்குமேலோரங்குலத்தில் துவாசாந்தத்துரிருப்பதுமான அதன் வடிவு வட்டமென்று சொல்வர்.

அநாசிரியர் - ஆசிரியரல்லாதவர்.
அநாதகி - சந்நியாசி.
அநாதசாலை - அநாதைகளின் விடுதி.
அநாதபம் - குளிர்மை, நிழல், வெயிலின்மை.
அநாதம் - அந்தரித்தது, ஆகரவற்றது.
அநாதரட்சகர் - கடவுள், அநாதரக்ஷகர்.
அநாதரம் - மதியாமை, அன்பின்மை, அவமதித்தல்.
அநாதரவு - அலட்சியம்.
அநாதரித்தல் - பற்றிக் கொள்ளாது விடுதல்.
அநாதர் - ஆதரிப்போரில்லாதவர்.
அநாதன் - ஆதரவில்லாதவன், திக்கில்லாதவன்.
அநாதி - ஆதியின்மை, தொடக்கமில்லது, கடவுள், சிவன், புராதனம், திக்கற்றவன்.
அநாதிகரம்பு - நெடுநாளாகப் பாழாய்க் கிடந்த நிலம்.
அநாதிகாரணம் - பிரபஞ்சத்தினது முதற்காரணமாகிய மாயை.
அநாதிசடிலன் - சிவன்.
அநாதிசித்தபதி - அநாதியாய்ச் சித்தித்த பதித்துவமுடையவர்.
அநாதிசித்தன் - அருகக்கடவுள்.
அநாதிசைவம் - பதிஞ்ஞுவகைச் சைவத்துளொன்று, அது பதி, பசு, பாசம், என்னும் மூன்றும் அநாதி நித்தமாய் வியாத்தமாய் இருக்கின்றன என்னும் பதிப்பொருளாகிய சிவனே முக்குணவிகற்ப மில்லாத வனுய்க் கண்டு விபூதி உருத்திராக்கம் பஞ்சாக்கரம் குருலிங்கவேடம் பொருளாய்க்கொண்டு சிவபூசை செய்து பாசம் நீக்கி ஆன்மாவானது சிவனுடன் சேர்ந்தவனேக் கும்பிட்டிருத்தல், பரமுத்தியென்றுஞ் சொல்லும்.
அநாதிசைவன் - சதாசிவமூர்த்தி.
அநாதிதரிசு - நெடுநாளாகப் பாழாய்க் கிடந்த நிலம்.
அநாதித்துவம் - தொடக்கமில்லாத நித்தியத்தன்மை.
அநாதிநாதர் - கௌளையாமளாதிகளைக் கற்பித்த நவநாத சித்தர்களில் ஒருவர்.
அநாதிநின்மலன் - அநாதியாகவே மலரகிதமாயிருப்பவன்.
அநாதிபஞ்சர் - நெடுநாளாய்ப் பாழாகக் கிடந்த நிலம்.
அநாதிபந்தம் - அநாதியாயுள்ள பந்தம்.
அநாதிபீடு - நெடுநாளாய்ப் பாழாகக் கிடந்த நிலம்.
அநாதிபெத்தசித்து - அநாதியே ஆணவமலத்திலே கட்டுண்டு கிடந்த ஆன்மா.
அநாதிபெத்தன் - அநாதியே மலத்திற் கட்டுண்டவன்.
அநாதிபோதம் - இயல்பாகவே ஞான முடைமை, இக்குண மலரகித மான ஆன்மாவுக்குரியதாகலால் இதனே அநாதிமுத்தத் தன்மையில் அடக்குவர்.
அநாதிபோதன் - நித்திய ஞான முடையவனுன கடவுள்.
அநாதிமல முத்தர் - இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர்.
அநாதிமான்-அநாதியுள்ளதாயிருப்பது
அநாதிமுத்தசித்து-இயல்பாகவே பாசங்களின் நீங்கினவனுன கடவுள்.
அநாதிமுத்தசிவன் - அநாதியே மல பந்தமின்றியிருக்குஞ் சிவன்.
அநாதிமுத்தத்துவம் - இறைவனது குணங்களுள் ஒன்று. அது இயல்பாகவே பாசங்களில் நீங்கியிருக்குந் தன்மையாம்.
அநாதிமுத்தன் - அநாதியே மலத்தாற் பந்திக்கப்படாத கடவுள்.
அநாதியமலன் - அநாதியே மலமில்லாத நிட்கள சிவன்.
அநாதியன் - அநாதியாயுள்ள கடவுள்.
அநாதியுருத்திரர் - ஈசுரதத்துவத்திலிருக்கிற பதினெட்டு ருத்திரர்களுள் ஒருவர்.

அநாதிரேக்கியம் - மிகுதியின்மை.
அநாதீநவம் - ஆதீனமின்மை, சுதந்தம்.
அநாதுரம் - அறிவின்மை, சிரமமையாமை, தைரியம், நோயின்மை.
அநாதேயம் - ஆதேயமற்றது.
அநாதை - திக்கற்றவள், ஒருசத்தி, அது ஞான சொரூபமாய் ஞான சத்தியாயிருக்கும் சாந்தியாதீத கலையிற் சிவ தத்துவத்திலிருக்கும் பத்துப் புவனங்களுள் ஒன்று. சோடசகலைப் பிரசாதத்திற் பதின் மூன்றுவது கலை. அது வியாபினி கலைக்கப்பாலுஞ் சமனகலைக்குப் பாலும் நடுவிலிருக்கின்ற நான்கு கலைகளின் மூன்றுவதும் அந்த நான்கிலொன்றுன அநந்தகலைக்கு மேலோரங்குலத்திற் றுவாதசாந்தத்துளிருக்கின்றதுமானது.
அநாத்தன் - ஆத்தனல்லாதவன்.
அநாத்துமலட்சணம் - ஆத்துமாவல்லாத தனிலட்சணம். அவ்விலட்சணங்கள் அசத்து, சடம் என்பன.
அநாத்துமா - ஆத்துமாவல்லாத பதார்த்தம், தன்னையடக்கி ஆண்டு கொள்ளாமை.
அநாத்தை - அவசங்கை, நிலையின்மை.
அநாந்தம் - இறுதியல்லாதது.
அநாமதேயம் - பெயரில்லாதது.
அநாமதேயன் - அப்பிரசித்தன்.
அநாயகம் - அரசின்மை, முதன்மையின்மை.
அநாமயம் - நோயின்மை.
அநாமயன் - கடவுள், நோயில்லாதவன்.
அநாமிகை - ஆழிவிரல், பெயரில்லது, மோதிர விரல், பவித்திர விரல்.
அநாமை - அநாமிகை.
அநாயகம் - அரசாட்சியின்மை, முதன்மையின்மை.
அநாயதம் - தடையினில்லாதது, நீளமில்லாதது, பிரிவின்றி நெருங்கிய தொடராயிருப்பது.
அநாயம் - அநியாயம், வீண்.
அநாயாசகவாதம் - ஒருவகை வாதம். அது வேகமான வோட்டம், மல சல முதலிய பதினைஞ்சு வேகத்தை அடக்கிவிடுதல், சீதளவஸ்து, கூய போசனம் இவைகளினுற் பிறந்து சகல காதுக்களிலும் வியாபித்துச் சரீரத்தில் மதத்தல், குத்தல், கனத்தல் முதலிய நானுவித வருத்தங்களையுண்டாக்கும்.
அநாயாசம் - அசைவில்லாதது, இலகு, சோம்பின்மை.
அநாயு - தக்கன் மக்களுள் ஒருத்தி. அவள் விருத்திராசுரன் முதலிய நாற்பது பிள்ளைகளுக்குந் தாய்.
அநாரதம் - எப்போழ்தும், எப்பொழுதும்.
அநாரபதம் - ஆரம்பஞ் செய்யப்படாதது.
அநாரம்பம் - தொடக்கமின்மை.
அநாரியதித்தம் - நிலவேம்பு.
அநாரியர் - ஆரியரல்லாதவர், மிலேச்சர், மிலேச்சர்.
அநாரோக்கியம் - நோய்.
அநார்ச்சவம் - மனக்கோட்டம், மனநேர்மையின்மை, வளைவு, வியாதி.
அநாவன் - வேந்தோன்றியன்.
அநாவிருஷ்டி } மழைக்குறைவு,
அநாவிருட்டி } மழையின்மை.
அநாவிருதம் - தடையின்மை, மறைக்கப்படாதது.
அநாவிருத்தி - திரும்பிவராமை, மறுதரம் பிறவாமை, பாசமுத்தி.
அநாவிலம் - நலங்கலின்மை, தெளிவு.
அநாவிலன் - சுக்கிரன்.
அநான்ம - ஆன்மாவல்லாதது.
அநான்மபுத்தி - ஆத்துமாவல்லாத தேகாதிபிரபஞ்சத்தை உண்மையாகத்தானென்று கொள்ளுதல்.
அநான்மவாதி - ஆன்மாவென் றொரு பொருளில்லை என்று சொல்லுவோன்.

அநான்மா - ஆன்மாவல்லாதது, ஆன்மாவல்லாத தேகாதிப்பிரபஞ்சம், தேகம்.

அநி - நெற்பொரி.

அநிகம் - சேனை, சங்கம் மூன்று கொண்டபடை.

அநிகர் - சேனையாளர்.

அநிகேதன் - நிலையான வாசஸ்தான மில்லாதவன்.

அநிக்கிரகம் } கட்டுப்பாடின்மை,
அநிக்கிரகித்தல் } காத்தல்.

அநிசம் - நித்தியம், எப்பொழுதும்.

அநிச்சகன் - விருப்பமில்லாதவன்.

அநிச்சாப்பிராத்தம் - ஒருவருக்குப் பிரியமில்லாதிருந்தும் வலாற்காரத்தினால் அவரைப்பயனனுபவிக்கச்செய்யும் முன்னேவினை.

அநிச்சிதம் - நிச்சயிக்கக்கூடாதது.

அநிச்சை-இச்சையின்மை, அனிச்சை.

அநிட்டநிவிர்த்தி - வேண்டாதன வொழிதல்.

அநிட்டப்பிரசங்கம் - தருக்கப்பாஷையிற சொல்லப்படும் எட்டாம் பதார்த்தமாகிய தருக்கம். அது நித்தமான வியாத்தியை யுடைய தருமங்களுள் வியாப்பிய அங்கீகாரத்தால் வியாபகத்தின் வாவு.

அநிட்டம் - இஷ்டமில்லாதது, இடையூறு, துன்பம், இட்டமில்லாதது, விரும்பப்படாதது.

அநிட்டை } உறுதியின்மை.
அநிஷ்டை }

அநிதம் - அநித்தியம், அளவுகடந்தது.

அநிதானம் - அஞ்தாரம்.

அநித்தம் - அநித்தியம், நிலையின்மை.

அநித்தியகாலம் - முடிவுகாலம்.

அநித்தியசமம் - உதாரணத்தால் ஞாயம் பேசல்.

அநித்தியசமாசம் - நித்தியசமாசமில்லாத சமாசம்.

அநித்தியதை - அநித்தியத்துவம்.

அநித்தியத்துவப் பிரசங்கம் - அநித்தியத்துவஞ் சாதித்தல்.

அநித்தியத்துவம் - நித்தியத்துவமல்லாமை.

அநித்தியம் - அநித்யம், அநித்தம், அநியதம், அநிதம், நிலையின்மை, பொய், நிலையாமை, நிலையற்றது.

அநித்தியலிங்கம் - வடமொழியில் விசேடணமாகி வரும்பதம் ஒரு லிங்கத்தில் நின்றது விசேடியமாகி வரும்பதத்திற் கொத்ததாக மற்றொன்றாக வரும் லிங்கம்.

அநித்திரைச்சுரம் - அறுபத்துநான்கு வகைச்சுர ரோகங்களுள் ஒன்று. அது நித்திரையின்மை, தேகவெரிச்சல், தாகம், மயக்கம், தலைத்திருப்பல், நாவும் வாயுமுலரல், மேற்சுவாசம், சீதளம் அதிகரித்தல், மிகுகூச்சல், அடித்தொடைச் சதையு முழங்காற்சதையும் நோவு, ஈனத் தொனியான வார்த்தை, சதாவிருமல், மூர்ச்சை என்னுமிக் குணங்களே யுண்டாக்குவது.

அநிந்திதை - உமாதேவியுடைய தோழிப்பெண்களுள் ஒருத்தி, நிந்திக்கப்படாதவள்.

அநிமாலினம் - சாவு.

அநிமிடம் - இமை வெட்டாமை, மற்சம்.

அநிமிடன் - கண்ணிமைக்காதிருப்பவன், தேவன், விட்டுணு.

அநிமீலனம் - இறவாமை.

அநிமேடம் - பிசாசு, மீன்.

அநிமேடன் - இமையாது கண்ணூன் நிப்பார்ப்போன், கடவுள்.

அநியதகன்மம் - ஈட்டிய முறையில் வராமற் பக்குவம்வந்துழிப் புசிக்க வருங் கன்மம். அது அசுவமேதமும் பிரமஹத்தியும் ஒருகாலத்திற் செய்யப்பட்டுப் பக்குவம் வந்துழி ஒருங்கே இரண்டும் புசிக்கப்படாமையிற் கருத்தால் இன்னகாலத்தில் இதுவென்றுறுத்திப் புசிக்குமதுபோல்வது.

அநியதகாலம் - நியமமல்லாதகாலம்.

அநியதகாலோபபோக்கியம் - இன்ன வேளை புசிக்கப்படுமென் றறியப் படாத கன்மம்.

அநியதம் - அழிவுள்ளது, விலக்கியது.

அநியமச்சிலேடை - சிலேடையணி யில் ஒன்று.

அநியமம் - தேகம், குன்னடை, விலக் கியது.

அநியமவுவமை - நியமித்தவுவமையை விலக்கிப்பிறிதுமொரு பொருளைக் கூட்டி உவமிப்பது (உ-ம்) "மது வார் கவிரே நின்வாயொப்பதன்றி யதுபோல்வதுண்டெனினுமாம்."

அநியம் - அன்னியம்.

அநியாயசம் - அநியாயத்தா லுண்டா யிருப்பது.

அநியாயம் - வீண், நீதியின்மை, நியாயமின்மை, அக்கிரமம், அஞ்ஞா யம்.

அநிரதம் - சத்துரூபத்துக்கன்னிய மாகுமாயை.

அநிராகருத்தா - அநிராகருத்திரு சம் பிரதானம்.

அநிராகருத்திரு சம்பிரதானம் - கேளாதேற்றலில் "முக்கண் மூர்த் திக்குப் பூவிட்டான்" என்பதிற் போல் வரு நான்காம் வேற்றுமை.

அநிருதம் - உள்ளதல்லாதது, பொய்.

அநிருதவாதி - பொய்பேசுவோன்.

அநிருத்தபதம் - ஆகாயம்.

அநிருத்தபாவினி - அநிருத்தன் மனே வியான உஷை.

அநிருத்தம் - தடையின்மை, நன்கு விளக்காமை, நிரூபிக்கப்படாதது.

அநிருத்தன் - அடங்காதவன், கிருட் டினன் பௌத்திரன், மன்மதன் மகன்.

அநிருமலம் - அழுக்கு.

அநிருவசனம் - சொல்லொண்ணாதது.

அநிர்தம் - ஒன்றுமில்லா திருத்தல், மாயை, அநிருதம்.

அநிர்வசனம் - வசனித்தற்கியலாத இல் பொருள், மாயை.

அநிர்வசனியம் - வசனிக்கப்படக் கூடாதது.

அநிர்வசனீயம் - சரியாக நிரூபிக்க முடியாதது, சொல்லொணாதது.

அநிர்வாகம் - இயைபின்மை, உண வுக்கு வழியின்மை, ஒவ்வாமை, பூரணமின்மை.

அநிர்வாச்சியம் - அநிர்வசனீயம்.

அநிலசகன் - நெருப்பு.

அநிலசம் - செம்முகக்குரங்கு.

அநிலச்சூலை - வாதசூலை.

அநிலநாள் - சோதிநாள், விசாகநாள்.

அநிலம்-காற்று, வாதரோகம், பிறப்பு.

அநிலன் - அட்டவசுக்களில் ஒருவன், ஓரவுணன், வாயு.

அநிலாசனம் - உபவாசம்.

அநிலாத்துமகன் - அனுமான், வீமன்.

அநிலாமயம் - வாதநோய்.

அநிலி - சோதிநாள்.

அநிவாரிதம் - தடுக்கப்படாதது.

அநீகம் - அநிகம், ஒருபடைத்தொ கை, சேனை, சங்கமூன்று, அக் குரோணிப்பகுதி.

அநீகிதம் - விரும்பப்படாதது, கவன மின்மை, போர்.

அநீகினி - சேனை, தாமரை, படைத் தொகைகளு ளொன்று. அது இரண்டாயிரத்து நூற்றெண்பத் தேழு ஆனைகளும், அவ்வளவு தேர் களும் ஆறுயிரத்தைந்நூற்றறுபத் தேழு குதிரைகளும், பதினாயிரத் துத் தொளாயிரத்து மூப்பத் தைந்து காலாட்களுங் கொண் டது, இஃதக்குரோணியின் பத் தில் ஒருபங்கு.

அநீசம் - மரியாதை.

அநீசன் - சாமர்த்தியமில்லாதவன், தலைவனில்லாதவன், நீசனல்லாத வன்.

அநீசுரவாதி } கடவுள் இல்லை என்
அநீசுவரன் } னும் மதஸ்தன்.

அநீச்சுரத்துவம் - ஈச்சுரனில்லை யென்னும் பாவம்.

அநீச்சுரவாதி } கடவுளில்லை யென்
அநீச்சுவரன் } பவன்.
அநீதம் - நீதியின்மை, அநீதி, நீத மின்மை, அநியாயம்.
அநீதர் - கீழ்மக்கள், நீதியற்றோர்.
அநீதன் - நீதியில்லான்.
அநீதி - நீதிக்கேடு, அநியாயம்.
அநீதிமான் - நீதியில்லாதவன்.
அநீதியர் - நீதியின்மையர்.
அநு - அணு, கதுப்பு, தொடர்ச்சி, ஈறு, அளவு.
அநுகதகம் - சம்பாவனை.
அநுகதம் - ஈட்டப்பட்டது, தொடர்பு, நிச்சயிக்கப்பட்டது.
அநுகதன் - பின்றொடர்வோன்.
அநுகதி } பின்போதல்.
அநுகதிகம் }
அநுகமம் } கூடப்போதல், தனது
அநுகமனம் } நாயகனோடு உடன் கட்டையேறுதல், பின்போதல்.
அநுகம் - செஞ்சந்தனம்.
அநுகம்பம் } இரக்கம், கிருபை.
அநுகம்பனம் }
அநுகம்பை - அநுக்கிரகம், இரக்கம்.
அநுகரணம் - ஒப்பாதல், வேறொன்று செய்வதுபோலச் செய்தல்.
அநுகரணவோசை - ஒலிக்குறிப்பு.
அநுகாரி - யானையின்மேல்.
அநுகருடணம் - ஆகருஷணம். அது மந்திரத்தினால் அழைத்தல், இழுத்தல்.
அநுகவீனன் - இடையன்.
அநுகற்பம் - உபவிதி, பிரதம கற்பமாகிய உரியபொருள், கிடையாத காலத்துக் கொள்ளப்படும் இரண்டாம் பொருள் பிரதிவிதி, மூவகை விபூதிகளிலொன்று. அது காட்டிலுலர்ந்துகிடந்த கோமயத்தைஎடுத்திடித்துத் தூளாக்கி மந்திரத்தோடு கோசலம்விட்டுப் பிசைந்து உண்டையாக்கி அக்கினியில் வைத்தெடுக்கப்படுவது.
அநுகன் - கணவன், காமவிச்சையுடையோன், பின்றொடர்வோன், யசமானன், வேலைக்காரன்.
அநுகாமி - கூடச்செல்வோன், சோழன்.
அநுகாரம் - ஒப்புமை, வேறொன்று செய்தல்போலச் செய்தல்.
அநுகிருதி - அநுகரணம், ஒத்த செய்கை.
அநுகிலாதன் - இரணியனது மக்களுளொருவன்.
அநுகீர்த்தனம் - பிரசித்தஞ் செய்தல்.
அநுகுணம் - ஏற்றது, தகுதியானது, அநுகூலமானது.
அநுகுணலங்காரம் - தன் குணமிகையணி. அது மற்றொரு சார்பினால் தனதியற்கைக்குண மிகுதல்.
அநுகூலசாத்திரம் - ஆத்தவாக்கிய மாகிய விம்சைக் குரியவைகளையும் பரோட்சார்த்தங்களையுங் குற்றமறவுணர்த்திச் சுருதியின் முதன்மையை விளங்கப் போதிக்கின்ற வழிநூல்.
அநுகூலப்பட - அநுகூலிக்க.
அநுகூலம் - காரியசித்தி, விக்கினமின்மை, நன்மை, சித்தி.
அநுகூலர் - அனுகூலமுடையவர்.
அநுகூலன் - உபகாரி, சிங்கார நாயகர் நால்வருளொருவன், சிநேகன், அநுகூலி.
அநுகூலி - சகாயஞ் செய்வோன்.
அநுகூலித்தல் - அநுகூலமுடையதாதல்.
அநுகோதம் - மூளையின் பிற்பக்கத்திற் கீழ்ப்பிரிவாகிய சிறிய மூளை.
அநுகோர்த்தம் - பின்மூளை.
அநுக்கம் - சந்தனம், சோம்பு, பயம், பாம்பு, வருத்தம்.
அநுக்காட்டல் - சாடை காண்பித்தல்.
அநுக்காரம் - ஒப்புமை.
அநுக்கிரககர்த்தா - அனுக்கிரக கிருத்தியம் செய்யுங் கடவுள்.

அநுக்கிரகபரை - அனுக்கிரகத்தை முக்கியமாக உடையது, பராசத்தி.

அநுக்கிரகம் - சிவனுடைய பஞ்ச கிருத்தியங்களுளொன்று. அது பசுவாகிய ஆன்மாவின் மலநீக்கிச் சிவத்துவம் வருவித்தல், தீட்சைசெய்தல், திமைனயநீக்கி நன்மையை அதிகப்படுத்தலாகிய தயவு, கிருபை, அருள்.

அநுக்கிரகாங்குரம் - அநுக்கிரக முண்டாதல்.

அநுக்கிரகி - அருளு

அநுக்கிரகித்தல் } அநுக்கிரகஞ் செய்
அநுக்கிரகிப்பு } தல்.

அநுக்கிரமணம் - கிரமமாக நடத்துதல், பின்போதல்.

அநுக்கிரமணி } நூலினிடத்தட
அநுக்கிரமணிகை } ங்கிய விஷயங்களினிவை எனச் சுருக்கிச் சொல்லும் பாகம், விஷயவரிசை.

அநுக்கிரமம் - கிரமப்படி நிகழ்தல்.

அநுக்கிராகன் } அநுக்கிரகஞ் செய்
அநுக்கிராகி } பவள்.

அநுக்கிராகம் - அநுக்கிரகஞ்செய்தல்.

அநுக்கிராகிணி - அனுக்கிரகஞ் செய்பவள்.

அநுக்கிராகியத்துவம் - அனுக்கிரகிக்கப்பட யோக்கியமாயிருத்தல்.

அநுக்கிராகியம் - அனுக்கிரகிக்கப்பட யோக்கியமானது.

அநுக்கிராகியர் - அனுக்கிரகிக்கப் படுதற்கு யோக்கியமானது.

அநுக்கிராகியன் - அனுக்கிரகிக்கப்படுதற்கு யோக்கியமுள்ளவன்.

அநுக்கிராகியானுக்கிராகக சம்பந்தம்- அனுக்கிரகிக்கப்படுவதும் அனுக்கிரகிப்பதுமாகிய சம்பந்தம்.

அநுக்குரோசம் - இரக்கம்.

அநுக்கை - அநுஞ்ஞை.

அநுக்ரஹம் - அநுக்கிரகம்.

அநுக்ரஹித்தல் - அநுக்கிரகித்தல்.

அநுக்ரமணி, அநுக்ரமணிகை - அநுக்கிரமணி.

அநுசங்கம் - அதிகாரத்தால்வருவித்து முடிப்பது, இரக்கம், காரணகாரியத் தொடர்ச்சி, விருப்பம்.

அநுசங்கிதம் - காரியமாகத் தொடர்ந்தது, கூடநிகழ்வது, சம்பந்தப்பட்டது.

அநுசந்தாத்திரு - அனுசந்தானஞ் செய்வோன், கூடஸ்தன்.

அநுசந்தானம் - ஆயத்தப்படுதல், இடையறாது சிந்தித்தல், இலக்குப் பார்த்தல், ஏற்றசார்பு, ஒழுங்குசெய்தல், செபஞ்செய்தல், தக்கசம்பந்தம், மிக்கவாராய்வு, விசாரணை.

அநுசந்தானம் பண்ணல் - இடையறாது சிந்தித்தல், செபஞ்செய்தல், லில்லிலம்பு பூட்டல்.

அநுசந்தித்தல் - சிந்தித்தல்.

அநுசந்தேயம் - விசாரணைக்குப் பாத்திரமானது, விசாரிக்கத்தக்கது.

அநுசயம் - ஒரு பொருளிற் சம்பந்தப்பட்டிருத்தல், பகைமை, பற்று, மனஸ்தாபம்.

அநுசரணம் } ஒன்றன்காரியம், சார்பு,
அநுசரணை } ஒன்றுடனுகிய வி
அநுஸரணை } சைவு, பழக்கம், பின்றொடர்தல், வழக்கம், அநுசாரம்.

அநுசரண் - கூடச்செல்வோன், தோழன், பின்செல்வோன்.

அநுசரி - சார்ந்துநட.

அநுசரிக்கை - அநுசரித்தல்.

அநுசரிதம் - தொடர்ந்த சரித்திரம்.

அநுசரித்தல் } சார்ந்து நடத்தல்,
அநுஸரித்தல் } பின் செல்லல்.
அநுசரிப்பு }

அநுசர் - தம்பியர்.

அநுசன் - அநுஜன், தம்பி, அனுசன்.

அநுசாசகன் - ஆளுபவன்.

அநுசாஸனம், அநுசாசணம் - கட்டளை.

அநுசாதன் - தம்பி.

அநுசாதை - தங்கை.

அநுசாத்தி - கட்டளை.

அநுசாரணம் - பின்றொடர்தல்.

அநுசாரம் - ஒப்புமை, காரியம், கிரகவக்கிரம், பின்செல்லல், பொருட்சுபாவம்.

அநுசாரி - உதவிசெய்வோன், சார்ந்து நடப்போன், பின்செல்வோன், வழிபடுவோன்.

அநுசிதம்-தக்கதல்லாதது, தகுதியின்மை, பொய், அநுச்சிதம்.

அநுசிந்தனம் - முன்னறிந்த விஷயத்தை நினைத்தல்.

அநுசிந்தை - தியானித்தல்.

அநுசிரஞ்சுவாதம் - மகாவாத மிருபத்து நான்கு வகைகளுளொன்று. அது தாடையின் பூட்டை யளுசரித்து ஏந்தேரமும் வாயைத் திறந்தாவது மூடியாவது இருக்கச் செய்வது.

அநுசீவகன், அநுசீவி } ஒருவரை அடைந்து சீவிப்போன், வேலைக்காரன்.

அநுசூதத்துவம்-மிக்கவியைபுடைமை

அநுசூதம் - நீங்காது கூடியிருத்தல்.

அநுசூதன் - கலந்திருப்பவன்.

அநுசூதை - நீங்காதிருப்பவள்.

அநுசை - அநுஜை, தங்கை.

அநுசைவர் - சிவதீட்சைபெற்ற கூத்திரியரும் வைசியரும்.

அநுயோகம், அநுசோசனம் } பின்னுன்புறுதல், மேலுமேலுந்துன்புறுதல்.

அநுச்சிட்டம் - உச்சிட்டமல்லாதது.

அநுச்சுவாரம் - உயிரின் பின்வரு மகார விகாரமாகிய புள்ளி, அது வடமொழியி லுயிர்வருக்கத்துப் பதினைந்தாம் எழுத்து.

அநுச்சூநகம் - வடுப்படாது பற்குறி வைத்தல்.

அநுச்சை - உத்தரவு, அநுஞ்ஞை.

அநுஜை - கட்டளை.

அநுஞ்ஞாலங்காரம் - வேண்டலணி. அது குணமல்லாததனுல் குணமுண்டாதலே அறிந்தக்குணமல்லாததனை வேண்டுதல்.

அநுஞ்ஞை - உத்தரவு, அநுஜ்ஞை, கட்டளை, சம்மதம், விடுகை.

அநுடம் - அநுவஷம், ஒரு நட்சத்திரம்.

அநுட்டணசீதம் - வெப்பமுங் குளிருமில்லாதது.

அநுட்டணம் - உற்பவம், குளிர்ந்தது, சூடற்றது, சோம்பு.

அநுட்டணஸீதம் - சூடுங் குளிர்ச்சியுமின்மை.

அநுட்டயம் - அநுட்டிக்கப்படுவது.

அநுட்டாதா - அநுஷ்டாதா, அநுட்டிக்கிறவன், தொழிலை முயன்று செய்வோன்,

அநுட்டானம் - அநுஷ்டானம், சித்தாந்தப்படுத்தல், செய்கை, செய்து முடித்தல், தகுதி, தியானித்தல், தொடங்குதல், விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்தல், ஒழுக்கம், தவம்.

அநுஷ்டிதத்தல், அநுட்டிதத்தல், அநுட்டிப்பு, அநுஷ்டுப் } சித்தாந்தப் படுத்துதல், செய்தல், தொடங்குதல், விதிக்கப்பட்ட தொழிற் செய்தல்.

அநுட்டுபு - சூரியனது தேரூருஞ் சந்தச்சானவயப்பரி ஏழின் பெயர்களுள் ஒன்று.

அநுட்டுப்பு - முப்பத்திரண்டசைகளையுடைய ஒருவகைச் செய்யுட்சந்தம். அஃது அடியொன்றிற் கெட்டசைகளையுடையதாய் நான்கடிகளைக் கொண்டதாயாவது முதலடிக் கெட்டசையும், இரண்டாமடிக்குப் பனிரண்டசையும் மூன்றாமடிக்குப் பன்னிரண்டசையும் உடைய மூன்றடிகளைக் கொண்டதாயாவது வருகிற சந்தம்.

அநுஷ்ணம் - குளிர், சோம்பல், பாதகம்.

அநுதரம் - சிற்றிடை, தோணி முதலியவற்றின் ஏற்றுமதிக்கூலி.

அநுதரிசணம் - மதுநீருண்ணல், மதுநீருண்ணும் பாத்திரம்.

அநுதரிசம் - ஆசை, தாகம், மது நீருண்ணும் பாத்திரம்.

அநுதரித்தல் - படகிலேற்றல், மெலிதல்.

அநுதார்த்தம் - உரூபகத்திலொன்று, வேதஸ்வரம் நான்கிலொன்று, படுத்தலோசை.

அநுதாபம் - பின் இரங்கல், மனத்தாபம்.

அநுதாரன் - உதாரகுணமில்லாதவன், தகுந்த மனைவியையுடையவன், பிசுனன், மனைவியாற் ரூடரப்பட்டவன்.

அநுதாவனம் - ஆராய்தல், சுத்தி செய்தல், பின்ரூடர்தல், பின்ஞகவோடித்துரத்துதல், பின்ஞகப்போதல்.

அநுதினம், அநுதினம் - நாடோறும், தினந்தோறும்.

அநுதோடம் - உப பாதகம்.

அநுத்தகித்தம் - சொல்லப்படாமற் சித்தியானது.

அநுத்தமம் - உத்தமமல்லாதது, எல்லாவற்றினு மிக்கவுத்தமம், தனக்குமேலாக உத்தமமான ஒன்றையில்லாதது.

அநுத்தம் - பொய்.

அநுத்தம்பவாதம் - ஒருவகை வாதரோகம். அது வாயினிருபக்க மூலங்களிலுங் காதினடிகளிலும் வருவது.

அநுத்தாரம் - உத்தமம், உறுதிநிலை, தெற்கு, மற்ரொன்று கூறுமறுமொழி, மறுமொழி சொல்லக்கூடாமை, மாறுகொளக்கூறுமறுமொழி, மிகச் சிரேட்டம், மேன்மை.

அநுத்தான் - உத்தமன், மிகுச்சிரேட்டன்.

அநுத்தரோபபாதிக தசாங்கம் - அங்காகமத்திலொரு பகுப்பு.

அநுத்தானம் - மூகங்குப்புறக்கிடத்தல்.

அநுத்தியோகம் - சோம்பு, முயற்சியில்லாமை.

அநுத்திரபஞ்சமம் - அயிர்ப்பு.

அநுத்துருபஞ்சமம் - ஒரு பெண், குறிஞ்சியாழ்த்திற வகையிலொன்று.

அநுத்துருதம் - ஒரு காலவளவு, அது ஒரு துருதகாலத்தின் பாதி, ஒரு மாத்திரையின் காற்பங்கு, பின் ரூடரப்பட்டது.

அநுத்துவயம் - இருதுதப்பு.

அநுத்துவாகம் - பிரமசரியம், விவாகமின்மை.

அநுத்துவேகம் - ஆவலின்மை.

அநுநயம் - ஆசாரக்கிரமம், சாந்தி செய்தல், பயிற்றுதல், மரியாதை, விண்ணப்பம், விருந்தர் முதலியோரை யுபசரித்தல்.

அநுநாசிதம்
அநுநாசிகை
அநுநாவிகம்
} மெல்லெழுத்து.

அநுநாதம் - எதிரொலி, ஒலி.

அநுபசங்காரி - சவ்வியபிசாரமாகிய ஏதுப்பொலி வகையு ளொன்ரூகிய முடிவுபெரூமை.

அநுபதிதம் - இறங்கினது, பின்ரூடரப்பட்டது, விழுந்தது.

அநுபத்தானம் - சமீபத்திலில்லாமை.

அநுபத்திதி - சமீபத்திலில்லாமை, ஞாபகப்படுத்தவியலாமை.

அநுபந்தசதுட்டயம் - ஒரு நூல் செய்வோன், அந்நூலொடு சேர்த்துத்தந்துரைக்கும் நான்கு பொருள்கள். அவை விடயம், சம்பந்தம், பயன், அதிகாரி என்பன.

அநுபந்தம் - அநுசரித்தல், அபிப்பிராயம், ஆகாமியம், இடையரூத் தொடர்ச்சி, இம்மையி லுண்டாகின்ற நன்மை தீமைகள், ஏது, ஒற்றுமை, ஒன்றலெ டணைக்கப்பட்டது, ஒன்றிப்பு, கட்டுதல், காரியத்தொடர்ச்சி, கூடுதல், சிசு,

தடை, தொடக்கம், தொடர்ச்சி, பிரயோசனமான செய்கையைச் செய்யப் பழகல், சேர்ப்பு.

அநுபந்தன் - உடன்பட்டவன், குரு வைப் பின்றொடர்ந்து நடக்குஞ் சீடன், பெற்றூரைப் பின்றொடர்ந்து நடக்கும் பிள்ளை.

அநுபந்தித்தல் - கூடிப்பந்தித்தல்.

அநுபந்தை - தாகம், விக்கல்.

அநுபபத்தி - சத்தியத்தைச் சாதிக்க வல்லதல்லாதது, சித்தாந்தமாகாத நியாயம், சித்தியாகாமை, தருதியின்மை, நிறைவேறுமை, பிரயோகிக்கப்படாமை, பொருத்தமின்மை, யுத்தியில்லாமை.

அநுபபத்திப் பிரசங்கம் - முற்றுப் பெறுததாதல்.

அநுபபத்தியேது - சாத்தியத்தைச் சாதிக்கவல்லாதவேது, சித்தாந்தமாகாத நியாயம்.

அநுபமம் - தனக்குநிகரில்லாதது, மிகச் சிரேட்டமானது.

அநுபமன் - தனக்குநிகரில்லாதவன், மிகச்சிரேட்டன்.

அநுபமை - உவமையின்மை, தென் மேற்றிசையானைக்குப் பெண்யானை, மிகச் சிரேட்டமானது.

அநுபம் - சேற்றுநிலம், மிகுதியும் நீர்ப்பாங்கான நிலம்.

அநுபயம் - இரண்டுமல்லாதது.

அநுபயோகம் - உபயோகமில்லாதது.

அநுபலத்தம் - அடையாமை, காணப்படாதது.

அநுபலத்தி - அநுபலத்தி அலங்காரம், உண்டென்னு ஞானத்தினின்மை.

அநுபலத்தியலங்காரம் - துகர்ச்சியின் மையணி.

அநுபலத்தியேது - மூன்றேதுக்களுளொன்று. அது சீதமின்மை, பனியின்மையைக் காட்டல்போலப் பிறிதொன்றின தில்லாமையைக் காட்டும் ஒன்றனது இல்லாமையாகிய ஏது.

அநுபலத்திவேத்தியம் - இல்லாமையைக் கொண்டறியப்படுவது.

அநுபல்லவம் - நுனித்தளிரை யடுத்திருக்குங் கீழ்த்தளிர்.

அநுபல்லவி - பதமென்று வழங்குஞ் செய்யுளின் இரண்டாமுறுப்பு.

அநுபவபூமி-இருவகை ஞானபூமிகளுளொன்று, அது சத்துவாபத்தி, அசஞ்சத்தி,பதார்த்தாபாவனை,தூரியகாமி என நான்கு வகைப்படும்.

அநுபவப்படல் - உற்றறிதல்.

அநுபவம் - அநுபோகம், காரியம், கைவல்லியம், சுகபோகம், தானே கண்டறியுமறிவு, நினைவிற்கு வேறுகிய உணர்வு, வாசனையாற் றோன்றும் அறிவு.

அநுபவாரூடம் - அநுபவத்திலேறினது.

அநுபவி - உலக விவகாரங்களை நினையாமல் ஆத்துமவிவேகத்தைஅடைந்து ஒரு சனனத்தில் சீவமுத்தராகுமேன், ஞானி.

அநுபவித்தல் - துய்த்தல்.

அநுபவிப்பு - அநுபோகம்.

அநுபவியம் - அநுபவிக்கப்படுவது.

அநுபவை - பார்ப்பதி.

அநுபவைகவேத்தியம் - அனுபவமொன்றாலே அறியத்தக்கது.

அநுபவைகவேத்தியன் - அனுபவமொன்றாலே அறியத்தக்கவன்.

அநுபாகம் - அலகுக்குரிய பாகம்.

அநுபாடணம், அநுபாஷணம் - கண்டிக்கும் பொருட்டாக ஒரு பிரதிஞ்ஞையைத் திரும்ப எடுத்துச் சொல்லுதல், சொன்னதைப் பின்னுஞ் சொல்லுதல்.

அநுபாடித்தல் - அநுவதித்தல், ஒருவர் சொன்னதை எடுத்துச் சொல்லல், சொல்லுதல்.

அநுபாதகம் - மகாபாதகதுல்லியம்.

அநுபாதம் - சரணங்களிலொன்று, சங்கலிதம், திரயாசிகம், பின்றொடர்தல்.

அநுபாதேயன் - அங்கீகரிக்கப்படக் கூடாதவன்.

அநுபாலனம் - கீழ்ப்படிதல், பாதுகாத்தல், காத்தல்.

அநுபாவம் - கண்காட்டுக் கைகாட்டு முதலிய அங்கசேட்டைகளினால் மனக்கருத்தை விளக்குங் குறி, திடமானவெண்ணம், தேசசு, நிச்சயம், மகத்துவம்.

அநுபாவியம் - அனுபவிக்கத்தக்கது.

அநுபானம் - மருந்தை யுட்புகுத்தற்குக் கொள்ளும் பானம், மருந்துடனருந்தும் பதார்த்தம், மருந்துடன் குடிக்கும் பானம்.

அநுபூதம் - அறிந்துகொள்ளப்பட்டது, காரியமாக வந்தது.

அநுபூதி - தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான அறிவு, நினைவிற் கயலாகி வேறுகிய உணர்வு.

அநுபூதிகம் - அநுபவிக்கத்தக்கது.

அநுபூதிமான் - ஞானி.

அநுபூதியநுசூதம் - அநுபவசித்தி.

அநுபூதியர் - அநுபூதியுடையோர்.

அநுபோகம் - இன்பம், சுகவாழ்வு, அனுபவம், கைவல்லியம், அப்பியாசம், அநுபவம்.

அநுபோகி - அனுபோகங் கொள்ளுவோன்.

அநுபோகித்தல் - அநுபவித்தல்.

அநுப்பிரமாணம் - அளவானது, இசைவானது.

அநுப்பிரவிட்டம் - உட்புகுதல்.

அநுப்பிரவிட்டன் - உட்புகுந்திருப்பவன்.

அநுப்பிரவேசம் - அநுக்கிரகம். அது போகவாசனையை நீக்கித் தெளிவித்தல், உட்புகுந்திருத்தல், ஒருவர் கருத்துக்குத் தன்னை இசைவாக்கல்.

அநுப்பிரவேசி - உமாதேவி.

அநுப்பிராசம் - அனுராகம், வழியெதுகை, அது ஒரு செய்யுளடியில் வரும் பலசீர்களில் இரண்டாமெழுத்து முதலியன ஒன்றிவருதல்.

அநுமகுண்டம் - சேதுவிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம்.

அநுமக்கொடியோன் - அருச்சுனன்.

அநுமசக்கரம் - விதிப்படி யனும மந்திர மெழுதப்பட்ட யந்திரம்.

அநுமசந்தேகம் - அனுமார் தூது, ஒரு நூல்.

அநுமதம் - அங்கீகரிப்பு, அன்பு, சம்மதி, பிரியம்

அநுமதி - சம்மதி, பௌரணை, கட்டளை.

அநுமந்தன் - அனுமான்.

அநுமந்தா - சம்மதித்தவன்போலிருப்பவன்.

அநுமந்திரு - இணங்குதல்.

அநுமந்திருசம்பிரதானம் - சம்மதமாயேற்ற பொருளில் வரும் நான்காம் வேற்றுமையுருபு.

அநுமரணம் - இறந்தவனோடு உடன் கட்டையேறி மரித்தல்.

அநுமாநம் - ஒருபிரமாணம், கருதலளவை, சந்தேகம், அநுமானம், நிதானிப்பு.

அநுமாபகம் - அனுமிக்கப்பண்ணுவது.

அநுமானசாமக்கிரி - அனுமானத்திற்கு வேண்டு முறுப்புக்கள்.

அநுமானப்பிரமாணலங்காரம் - அனுமானப்பிரமாணவணி.

அநுமானப்போலி - சாதநம் பட்சத்திலிருக்கையின்மை, சபட்சத்திலிருக்கையின்மை, விபட்சத்தினீக்கமின்மை என்னுங் குற்றங்களோடு கூடியுஞ் சில ரூபயோகத்தால் அனுமானம் போலத் தோற்றும் போலிநியாயம்.

அநுமானம் - ஐயத்தோடெண்ணுதல், ஐயம், தருக்கசாத்திரத்திற் சொல்லப் பட்ட பிரமாணங்களுளொன்றுகிய கருதலளவை. அது

நேரே யறியப்படாது சாதித்துப் பெறற் பாலதாய் மறைந்து நின்ற பொருளே அதனைவிட்டு நீங்காது பாண்டு முளளுய் நிகழும் ஏது வைக் கொண்டுணர்வதாகிய ஆன் மாவின் ஞானசத்தி, அது புகை யைக் கண்டு காணப்படாத நெருப் பை யுண்டென்று உணர்தல் போல்வது, ஓர் பிரமாணம், சந்தே கம்.

அநுமானவாக்கியம் அனுமானப் பிரமாணத்தா லொருவ னறிந்த தைப் பிறனறியும்படி யுணர்த்தும் வாக்கியம, இவ்வாக்கியத்திற்குப் பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம், உபநயம், நிகமனம் என்பன அவய வங்கள்.

அநுமாலுகம்மியம் - அனுமானத்தால் அறியப்படாதது.

அநுமாலுநுமானம்-கருதலனுமானம்.

அநுமாலுபாசம் - அனுமானப்போலி.

அநுமானி - நிதானி, சந்தேகி.

அநுமானிதம் - குதிரைக்கனைப்பு.

அநுமானித்தல் - அனுமாணப் பிரமா ணத்தாலறிதல், ஐயத்தோ டெண் ணுதல், குதிரைகனைத்தல்.

அநுமானோத்தி - அனுமானித்துப் பேசுதல்.

அநுமான் - அஞ்சனை யென்னும் பெண்ணினுடைய மகன், ஆஞ்ச நேயன்.

அநுமிதி - அநுமானத்தினுற் றோன்று மறிவு.

அநுமித்தல் - அனுமானப் பிரமா ணத்தினுலறிதல்.

அநுமேயம் - அனுமானப் பிரமாணத் தாலறியப்பட்டது, அறியத்தக்கது.

அநுமை - அனுமானத்தினுல் வரும் அறிவு, கண்ணிமையினடி.

அநுமோதனம் - அங்கீகரிப்பு, ஒத்து மகிழ்தல், சம்மதம்.

அநுயாத்திரி } பிரயாணத்திற்
அநுயாத்திரிகன் } கூடப்போவோன்

அநுயோகம் - கண்டிக்தல், தேவத் தியானம், வருந்திக் கேட்டல், விசாரணை, விஞ.

அநுயோகி - கூடியிருக்குமது, விதி வினை.

அநுயோசனம் - விஞ.

அநுரகசம் - ஏகாந்தம்.

அநுரஞ்சகம் - திருத்தியாதல்.

அநுரஞ்சனம் - நேசித்தல்.

அநுரதம் - ஆசையாயிருத்தல், நேசிக் கப்படல்.

அநுராதி - அன்பு, நன்கு மதிப்பு.

அநுராகபோகம் - காமபோகம், காம வனுபவம்.

அநுராகமாலை - ஒரு பிரபந்தம். அது தலைவன் கனவின்கண் ஒருத்தி யைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறு வது.

அநுராகம் - ஆசை, மிக்க பிரியம்.

அநுரூபம் - இணக்கம், ஏற்றது, ஒத் தது, தக்கது, தடை, மத்தியஸ் தம், ஒத்தஉருவம், ஒப்பு.

அநுரோதகம் - இணங்குதல்.

அநுரோதம் - பிறருக்காக அவர் விரும்புங் காரியங்களே முடித்தல்.

அநுர்தம் - பொய்.

அநுலாபம் - கூறியதுகூறல்.

அநுலேபகம் - சந்தன முதலிய பூசும் பொருள், தைல முதலியவை களைப் பூசுதல்.

அநுலேபம் - அபிடேகம், தைல முத லியவைகளைப் பூசுதல்.

அநுலேபனம் - பூசுதல்.

அநுலோமசன் - அனுலோமன்.

அநுலோமசை - சூரிய முகத்தின டிக்கு மாதர்களுளொருத்தி.

அநுலோமன் - உயர்குலத் தந்தைக் கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.

அநுவகன்-வாயு சக்கரங்களுள் ஒன்று.

அநுவக்கிரகம் - அனுவக்கிரம்.

அநுவக்கிரேட்டம் - இட்டத்தைச் சர்ப்பாகாரமாக வைத்து அதி லொரு விராசிகளேந்து நின்ற கால வளவு, இது மூன்று பாகையும் இரு பது கலையுமாம்.

அநுவசனம் - ஒத்தவாக்கியம்.

அநுவதித்தல் - முன்னர்க்கூறிய ஒரு பொருளே ஒரு நிமித்தத்தாற் பின்னு மெடுத்துக் கூறுதல், வழி மொழிதல்.

அநுவமிசம் - வமிசவரலாறு.

அநுவயித்தல் - ஒரு வாக்கியத்தி லிலக்கண முறைப்படி எழுவாய் பயனிலைகள் வெளிப்படத் தோன் றுமாறு சொற்களைக் கூட்டிச் சொல்லுதல்.

அநுவருணனை - வருணித்துச் சொல் லுதல்.

அநுவருத்தனம் - காரியம் கீழ்ப்படி தல், சம்மதித்தல், தொடருதல், பிரியப் படுத்துதல், மூற்சூத்திரத் திற் சொல்லப் பட்டதைக் கொண்டு குறைநிரப்புதல்.

அநுவருத்தி - அனுசரித்தல்.

அநுவருத்தித்தல் - தொடருதல், அநு வர்த்தித்தல்.

அநுவழி - புதன்.

அநுவாகம் - இருக்கு அல்லது யசுர் வேதத்தின் சங்கிரகம், வேதத்தி னுட்பகுப்பு.

அநுவாகாரியம் - அன்னுவா காரியம்.

அநுவாக்கியை - யாகத்தில் தேவதை யை அழைத்தற்குச் சாதனமான ஒரு வேத மந்திரம்.

அநுவாசம் - அன்பு, கூடியிருத்தல், வாசனையூட்டுதல், வேலைச்சாலை.

அநுவாசனம் - அன்பு, கூடியிருத்தல், வஸ்திரங்களுக்கு மண மூட்டுதல், வாசனையூட்டுதல், வேலைச்சாலை.

அநுவாசிதம்-வாசனையூட்டப்பட்டது.

அநுவாதம் - சம்மதம், நிந்தித்தல், முன்னர்க்கூறிய ஒரு பொருளே ஓர் நிமித்தத்தாற் பின்னுமெடுத் துக் கூறுதல். வார்திகூறிய பொருளே நீ யிவ்வாறு கூறினை யெனக் கண்டனஞ் செய்யும் பொருட்டுப் பிரதிவாதியுங் கூறல், வழிமொழிதல்.

அநுவாதி - அநுவாதம் செய்பவன், சமணரிலொருவன்.

அநுவாதித்தல் - அனுவதித்தல்.

அநுவாதேயம் - அங்கீகரிக்கப்படா தது.

அநுவாரோகணம் - அன்னுவாரோக ணம்.

அநுவிசாயினீ - அனுசரிப்பது, இணங்கியது.

அநுவித்தம் - கலக்கப்பட்டது, கல ந்து பின்னப் பட்டது, குயிற்றப் பட்டது, கூடினது, சம்பந்தப்பட் டது, தூலக்கப்பட்டது, பலவன் னப்பட்டது.

அநுவியவசாயம் - பிரத்தியகூப் பிர மாணத்தினுல் உணர்ந்ததை உண ர்ந்தேன் என ஒருவனுக்குப் பின் ணிகழு முணர்வு.

அநுவிரசனம் - வழிவிட்டனுப்புதல்.

அநுவிருத்தம் - மூட்டை வடிவம், மூன் சூத்திரத்திலிருந்து அவாய் நிலையாற் பின்சூத்திரத்திற் கெடுத் துகொள்ளப்படுஞ் சொன்முதலி யன.

அநுவிருத்தி-இசையச்செய்தல், இண ங்கல், உபசாரம், ஒப்பாகச்செய்தல், கூடிநின்று செய்தல், சேர்ந்திருத் தல், தொடர்ச்சி, புறநடை.

அநுவுரு - ஒத்தரூபம், அநுரூபம்.

அநுவுலோமன் - அநுலோமன்.

அநுவேதம் - கூட்டுதல், சம்பந்தம்.

அநுற்பத்தி - சித்தியின்மை, பிறப் பின்மை.

அநுற்பூதம் - காணப்படாதது.

அநூகம் - மோகித்தல், ஒழுக்கம், கழிந்த பிறப்பு, குணம், கோத்தி ரம், தன்மை.

அநூகன் - பிறப்பற்றவன்.
அநூடன் - விவாகஞ்செய்யாதவன்.
அநூநகன் - குறைவில்லாதவன்.
அநூநம் - குறைவின்மை, முழுமையும்.
அநூபசம் - இஞ்சிப்பூண்டு.
அநூபம் - ஈரம், எருமை, தவலை, நீர்நிலை, நீரருகுள்ள நிலம், யானை.
அநூரு - சூரியன் தேர்ப்பாகன், புதன், முடவன், அருணன்.
அநூர்த்துவாத்தி - மேற்கதுப்பினெலும்பு.
அநேகதங்காவதம் - காஞ்சிபுரத்துள்ள ஒரு சிவஸ்தலம்.
அநேகந்தாம் - அடிக்கடி.
அநேகபம் - அநேகபேசம் என்னுந்தலம், யானை.
அநேகபேசம் - காஞ்சிநகரத்துள்ள இருபது சிவாலயங்களுள் ஒன்று. இது விநாயகர் கயமுகனைக் கொன்று அவன் கொம்பிலுள்ள முத்துக்களாற் சிவனைப் பூசித்தமையால் வந்த பெயர் என்பர்.
அநேகமூர்த்தி - கடவுள்.
அநேகம - ஒன்றுக்குமேற்பட்டது, பல, அனேகம்.
அநேகர் - பலர், அநேகம்பேர், அநேகம் பெயர்.
அநேகவற்பாவி - முன்மொழியெண்ணையும் பின்மொழி தத்திதார்த்தமாயும் வந்து பலரையாவதுபலபொருளையாவது கருதிநிற்குஞ் சமாசம்.
அநேகன் - கடவுள், பசுவாகிய ஆன்மா, பலயோனிகளிலும் நிற்பவன்.
அநேகாகாரம் - பலவடிவம், பலவுருவம்.
அநேகாங்கம் - அநேகாங்கவுருவகம், பல அங்கம்.
அநேகாங்கவுருவகம் - உருவக அணிவகைகளுள் ஒன்று. அது ஒன்றன் அங்கங்கள் பலவற்றையு முருவகஞ் செய்து சொல்லுவது.
அநேகாசிரிதகுணம் - இரண்டு அல்லது இரண்டுக்கதிகமாகிய பல திரவியங்களை ஆதாரமாகக்கொண்டசையோக முதலிய குணம்.
அநேகாந்தம் - சந்தேகமானது, பலமுடிவு.
அநேகாந்தவாதம் - ஆருகதவாதம்.
அநேகாந்தவாதி - ஆருகதன்.
அநேகாந்தீகம் - அநேகாந்திகம்.
அநேகார்த்தம் - பலபொருள்.
அநேகான்மவாதி - ஆன்மாக்கள் அநேகம் என்று வாதிப்போன்.
அநேகேசுரவாதி - அநேகேச்சுரவாதி.
அநேகேசுவரத்துவம்-ஈசுவரர் பலராயிருக்குந்தன்மை.
அநேகேச்சுரவாதம் - பலகடவுளருளரென்று வாதித்தல்.
அநேகேச்சுரவாதி-சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களை ஒரீசுவரர்தனியே நடத்தமாட்டாரென்றும் அநேகேசுரர்கள் கூடி நடத்துவார்கள் என்றுங் கொள்பவன்.
அநேகை - அநேகமாயிருப்பவன்.
அநேடமூகன் - கபடமுடையவன், செவிடும் ஊமையுமானவன், தூர்ச்சனன்.
அநேடன் - அறிவில்லாதவன்.
அநைகாந்தம் } எதுப்போலிமூன்று
அநைகாந்திகம் } வகையுள் ஒன்று. அது விபட்சத்தினீங்கிப் பட்சசபட்சங்களி லிருத்தலாகிய நியமமில்லாத வது. இது பொது அநைகாந்தம், சிறப்பு அநைகாந்தம் என இரண்டாய் விரியும்.
அநைக்கம் } ஒற்றுமையின்மை,
அநைக்கியம் } ஒன்றன்மை, தடுமாற்றம், தாறுமாறு, பன்மை.
அநைக்குமம் - ஐக்கக்குறவு, பன்மை.
அநைசுவரியம் - ஐசுவரியமின்மை.
அநைதிகம் - ஐதிகமல்லாதது.
அநோக்கம் - மரப்பொது, மரம்.

அந் - அன், எதிர்மறையுபசரிக்கை.

அந்த - சேய்மைக் கட்டுப்பொருளிற் பெயர்ச்சொற்கு முன்னாக வரும் ஓரிடைச்சொல்.

அந்தகசயன் - சிவன், நமனெவன் றோன்.

அந்தகசன்னிபாதசுரம் - ஒருவகைச் சன்னிபாதசுரம், அது மறதி, அடிக்கடி தலைசுற்றுக்க முதலிய குணங்களை யுண்டாக்குவது.

அந்தகம் - ஆமணக்கு, குருடு, ஒரு சன்னிநோய்.

அந்தகரணம் - குருடாக்கல்.

அந்தகரன் - அழிப்போன்.

அந்தகரிபு - சிவன்.

அந்தகர் - அறிவிலிகள், எமர், குருடர்.

அந்தகன் - அழிப்போன், இயமன், ஓரிராக்கதன், ஓரசுரன், குருடன், சவுக்காரம், சனி, புல்லுருவி, நமன், சனி, யமன், ஓர் நமன், அரசன், அந்தன்.

அந்தகாசுகிருதன்
அந்தகாசுகிருத்து
அந்தகாந்தகன்
} சிவன்.

அந்தகாரம் - இருள், நரகம், அஞ்ஞானம், மனவிருள்.

அந்தகாரி - சிவன், நமவிரோதி.

அந்தகாலம் - மரண சமயம், சரணகாலம், வடிவுகாலம்.

அந்தகூபம்-ஒருநரகம்,தூர்ந்தகிணறு.

அந்தகோ - ஐயோவெனப் பொருள்படும் ஓர் இரக்கச்சொல்.

அந்தகோரம்
அந்தகோலம்
} நெல்லிமரம்.

அந்தகோலாங்கூலநியாயம் - மீமாஞ்சையிற் சொல்லப்பட்ட நியாயங்களுள் ஒன்று, அது ஒரு குருடன் பிறர்வார்த்தையை நம்பி ஊர்க்குப் போகலாம் என்று ஒருருத்தின் வாலை விடாமற் பிடித்துப்போய் நட்டம் அடைந்தது போலப் பிறர் வார்த்தையை நம்பி நட்டமடைதலைக் காட்டுவது.

அந்தகோளம் - நெல்லிமரம்.

அந்தக்கரணசதுட்டயம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்னும் நான்கு அந்தக்கரணங்கள்.

அந்தக்கரணசுபேட்சம் - பாகியேந்திரியங்களினுற் கண்ட பதார்த்தங்களைச் சிற்சத்தியானது அந்தக்கரணங்களோடுகூடி நின்று சிந்திப்பது.

அந்தக்கரணசைதன்னியர் - அந்தக்கரணங்களையே ஆன்மா என்று சொல்லு மதத்தர்.

அந்தக்கரணபுவனம் - அந்தக்கரணதத்துவங்களிலிருக்கும் புவனம். அவை மனோதத்துவத்தில் தாலசுவரம் என்னும் புவனமொன்றும், அகங்கார தத்துவத்தில் தலேசுரம் என்னும் புவனமொன்றும், புத்திதத்துவத்தில் பைசாச பிராட்சசயாட்சகாந்தருவயக்கிர சௌமிய பிராசேச பிரமமாகிய புவனங்கள் எட்டுமாம்.

அந்தக்கரணம் - அகங்காரம், ஆங்காரம், புத்தி, சித்தம், உட்கரணம், மனம், உட்கருவி, அந்தரித்திரியம், மனச்சாட்சி.

அந்தக்கரணன்மவாதி - அந்தக்கரணங்களு ளொன்றே ஆன்மாவென்று சாதிக்கும் மதத்தன்.

அந்தக்காரி - அழகானவள், அழகுள்ளவள்.

அந்தக்கிரகம் - உள்வீடு.

அந்தக்கிருத்தசாங்கம் - அங்காகமத்து ளொரு பகுப்பு.

அந்தக்கேடு - அழகீனம், சீர்கேடு.

அந்தக்கேணி - உள்ளே மறைந்த நீரையுடைய கிணறு, இது சுரப்புநீர்க்கேணி எனப்படும்.

அந்தசடகநியாயம் - மீமாஞ்சையில் சொல்லப்பட்ட நியாயங்களுளொன்று, அது ஓரிவேகியாற் சொல்லப் படுவதொன்று, ஒரு குருடன் ஊர்க்குருவியை பிடித்துக்கொண்

டது போலப் பலிக்கவருவது, இது கருத்திஞற் குணக்கூர நியாயத்தை யொத்தது.

அந்தசடம் - வயிறு.

அந்தச்சம் - அந்தச்சு.

அந்தச்சித்திரம் - உட்கலகம்.

அந்தச்சு - அந்தஸ்து.

அந்தணத்துவம - அந்தணஞ்தன்மை.

அந்தணஞாபி - விஷத்தைப்போக்குகிற மருந்து, ஞாபி வகை.

அந்தணமை - அந்தணன்றன்மை.

அந்தணரதுமிகாழில் - ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன.

அந்தணரறுதொழில் - ஓதல், ஓதுவிதகல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

அந்தணர் - அந்தத்தை புணர்வார் என்றது வேகாந்தத்தையே நோக்குவாரென்றவாறு. பார்ப்பார், முனிவர், அறவோர், பூசுரர், அறுதொழிலாளர், பிராமணர், இருபிறப்பாளர், ஈரிவளர்ப்போர், ஆதிவருணர், மேதியர், வேள்வியாளர், மேற்குலத்தோர், முற்குலத்தோர், ஐயர், வேதபாரகர், மூப்புரி நூலோர், தொழுகுலர், மூத்திமரபினர், கமலத்தாரினர், வேதக்கொடியர், தருப்பையர், முஞ்சியர், சமித்தினர், ஆய்ந்தோர், மெய்யர், உயர்ந்தோர், சிகையர்.

அந்தணர்கொடி - வேதக்கொடி.

அந்தணர்மாலை - தாமரைமாலை.

அந்தணர்வாக்கு - வேதம்.

அந்தணன் - முனிவன், பிராமணன், வியாழம், அருகன், கடவுள், சனி, சிவன், பார்ப்பான், பிரமன், வியாழன், துரியோதனன் தம்பி, அந்தணாளன்.

அந்தணாளர் - அழகியதண்ணளியுடையவர், அரசர்க்குறுதி, சுற்றத்தினருவர், பார்ப்பார், முனிவர்.

அந்தணாளன் - அழகியதண்ணளியுடையவன், பிராமணன், பார்ப்பான், முனிவன்.

அந்தணி - உமை, பிராமணப்பெண்.

அந்தண் - அந்தணர்குலம்.

அந்தண்டை - அப்பக்கம்.

அந்தண்புலவன்-பார்ப்பனப் புலவன்.

அந்தண்மை - அழகியகிருபை, பார்ப்பனத்தன்மை.

அந்ததமசம் - மிகுஇருள்.

அந்ததரம் - சித்தாந்தம.

அந்ததரன் - பிராமணனுயுள்ளவன்.

அந்ததாமிசிரம் } ஒருநரகம், தமோ
அந்ததாமிச்சிரம் } சிருட்டியாகிய ஐவகை யஞ்ஞானத்துள் ஐந்தாவது; அது திவ்வியாதிவ்வியபேதத்திலே சத்தாதிகள் பத்தும் அணிமாதி சித்திகள் எட்டும் பெற்று அதிலே மிகு பற்றுவைத்தல்.

அந்தத்தம் } யரலவ என்னும்
அந்தத்தாக்கரம் } இடையெழுத்துக்கள்.

அந்தத்தாபம் - உள்ளே தவிக்கை.

அந்தஸ்து - ஒழுங்கு, நிருவாகம், நிலை, நிலைமை.

அந்தந்த - அந்த அந்த.

அந்தந்தலை - முடிவுமுதலும்.

அந்தபரம்பரா நியாயம் - மீமாஞ்சையிற்சொல்லப்பட்ட ஞாயங்களுள் ஒன்று; அது குருடனைக் குருடன் பின்றொடருவது போலத் தான் செய்வதின்னதென ஆலோசியாமல் ஒருவன் மற்றொருவன் செய்வதுபோற் செய்தல்.

அந்தபரம்பரை - குருடரைக் குருடர் பின்பற்றும் நெறி.

அந்தப்புரம் - பெண்களுடைய அறை, மன்னன்றேவியில்லம், அரசியிருக்கை, அந்தர்ப்புரம்.

அந்தப்போதிகை - பின்னங்காலிற் சங்கிலி.

அந்தமந்தம் - உறுப்புக்கேடு, கூர்மையின்மை, செப்பமின்மை.

அந்தமன் - திருதராட்டிரன்.
அந்தமூள் - குறிஞ்சா.
அந்தம் - முடிவு, மரணம், குருடு, வேதாந்தம், அஞ்ஞானம், கஸ்தூரி, அவயவம், அழகு, ஆகாயம், இருள், எல்லே, ஒழுங்கு, கடை, கத்தூரி, சமீபம், சாவு, சுபாவம், சோறு, நிச்சயம், நீர், பாஷாணம், முடிவு.
அந்தரகணம் - ஆகாய கணம்.
அந்தரகாந்தாரம் - அந்திகைக்கிளை.
அந்தரகாமி - ஆகாயமார்க்கமாய்ச் செல்லுங்குதிரை.
அந்தரகுமாரன் - தேவருளொருசாதியான்.
அந்தரங்கிருத்தியம் - தன்னுலே நேரேசெய்யப்படும் கிருத்தியம்.
அந்தரங்கத்தியானி - ஆமை.
அந்தரங்கமாய் - அந்தரங்கத்திலே.
அந்தரங்கம் - உட்கருத்து, உற்றநண்பு, ஆலோசனை, உள்ளானது, இரகசியம், உள்ளாகவுடையது, எகாந்தம், மனம், உள்ளம்.
அந்தரங்கன் - அதிகம் நேசிக்கப்பட்டவன், அருமையானவன், இரகசியங் கேட்டு வைத்திருப்போன், உற்றநண்பன், விஷயங்களில் நம்பத்தக்கவன்.
அந்தரசாரிதர் - ஆகாயத்திற்றிரிபவர், அந்தரசாரிகள்.
அந்தரசாதி - வேறுசாதி.
அந்தரசாரி - ஆகாயசாரி.
அந்தரசிந்து - கற்பாஷாணம்.
அந்தரசைவம் - ஒருசைவம், சைவபேதம்.
அந்தரசைவர் - அந்தரசைவத்தைத் தழுவினோர்.
அந்தரசொளசம் - உட்சுத்தி.
அந்தரச்சிந்து - கற்பாஷாணம்.
அந்தரடித்தல் - தலைகீழாகப் பாய்தல்.
அந்தரதசை - மகாதசையிலுள்ளான கிரகநிலை.
அந்தரதாம்சர் - இடையிற் கருமையடைந்தவர்.
அந்தரதிசை - சாதகத் திசைகளி லொன்று, கோணதிசை.
அந்தர தூத்துபி - ஒரு வாச்சியம், தேவவாச்சியம்.
அந்தரத்தர் - சுவர்க்கலோகவாசிகள்.
அந்தரத்தாமரை - ஆகாயத்தாமரைப் பூண்டு, ஆகாசத்தாமரை.
அந்தரஸ்தானம் } ஆகாயநிலை.
அந்தரத்தானம் }
அந்தரநடனர் - கழைக்கூத்தர், கழாயர்.
அந்தரநதி - ஆகாயகங்கை, ஆகாசகங்கை.
அந்தரநாதன் - இந்திரன்.
அந்தரபவனி - ஆகாயகதி, ஆகாயகமனம், மிகுவேகம், ஆகாசகமனம்.
அந்தரபுத்தி - கிரகங்களினுட்கதி.
அந்தரபுருஷன் - உடம்பினுளிருக்கும் ஆன்மா.
அந்தரப்பிசாசு - பேயுருவம்.
அந்தரமகளிர் - அரம்பையர்கள்.
அந்தரமாமூலி - ஆகாயத்தாமரை.
அந்தரமிசிரம் - ஒருநரகம்.
அந்தரம் - நடுவுநிலை, தேவலோகம், விபரீதம், தேவாலயம், அந்தரிப்பு, அளவு, ஆகாயம், ஆகாசம், ஆதரவின்மை, இடம், இடுப்பு, இடை, இருள், உடுப்பு, உவமை, உள்வெளி, ஒப்பு, கடவுள்காலம், கூட்டம், கோயில், சேடம், சொந்தம், தனிமை, தீமை, தேவர், நடு, நிமித்தம், பிழைப்பு, புருவத்தினடு, பேதம், முடிவு, மோகம், விக்கினம், வெளி, வேறு, அந்தரவெளி.
அந்தரர் - தேவர்.
அந்தரவல்லி - கருடன் கிழங்கு, கொல்லங்கொவ்வை.
அந்தரவனசம் - கொடிப்பாசி.
அந்தரவனம் - பாழ்ங்காடு.
அந்தரவாசம் - ஆகாயத்தில் வசிக்கை, கொட்டைப்பாசி, ஒரு மருந்துப்பூடு.

அந்தரவாசி - ஆகாயகமனஞ் செய்பவன்.

அந்தரவாணி - அசரீரிவாக்கு.

அந்தரவாயு - குடலிறக்கம், அண்டவாதம், வீமபீசம்.

அந்தரவாயுக்கிரகணி - ஒருவகைக்கிரகணரோகம், அது அசதி, இரைச்சல், தளர்ச்சி, தாகம், புசித்தவுடன் பேதியாதல், விலாவிலிசிவு, சரீரம் வெளிறல், விக்கல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

அந்தரவிட்டை - ஒருநோய்.

அந்தரவீச்சு - அந்தரத்தில் வீசுதல், அந்தரிப்பு, பொறுப் பின்மை, பெரும்பொய்.

அந்தரவீணை - இருபத்திரண்டு வகை வீணைகளுள் ஒன்று.

அந்தராத்துமா - அந்தராத்மா, உயிர்க்குளுயிராயிருப்பவன், பரமான்மா, மனம்.

அந்தராந்தரதசை - கிரகங்களினது தசையில் உள்ளுக்குள்ளான தசாகாலம்.

அந்தராபத்தியை - கருப்பிணி.

அந்தராயம் - இடையூறு, உள் வருமடி, தூக்கம், தீமை.

அந்தராயாமவாதம் - தேகத்தினுட் புற நரம்புகளைப்பற்றிய ஒருநோய்.

அந்தராளசம்பந்தம் - ஆகமம் உபதேசித்த ஸ்ரீகண்டர்க்கும் உபதேசிக்கப்பட்ட தேவர்க்குமுள்ள சம்பந்தம்.

அந்தராளதிக்கு - கோணத்திசை.

அந்தராளம் - இடைக்காலம், கர்ப்பக்கிரகம், நடு, இடையிடம்.

அந்தராளன் - அனுலோமத் தந்தைக்குப் பிரதிலோமத் தாயிடத்திற் பிறந்த பிள்ளை.

அந்தரான்மா - ஆகாயத்தில் அந்தரமாகத்திரியும் ஆன்மா, உள்ளுணர்வு, உள்ளேயிருக்கும் ஆன்மா, மனுட னுள்ளத்திலிருக்கும் பரமான்மா, அந்தராத்துமா.

அந்தரி - அந்தரியென்னேவல், ஆகாயவாணி, ஒருவகைத்தோற்கருவி, தூக்கை, பார்வதி, தனித்திரு.

அந்தரிட்சம் - ஆகாயம், அந்தரிக்ஷம்.

அந்தரிதம் - சேடம்.

அந்தரித்தல் - அலைதல், நிலைகெடுதல், மனந்தடுமாறல், தனித்திருத்தல், உதவியற்றிருத்தல், மாறுதல், பேதித்தல்.

அந்தரிந்திரியம் - அந்தக்கரணம்.

அந்தரிப்பு - உதவியின்மை, தனித்திருக்கை.

அந்தரியாகம் - உட்பூசை, மானசபூசை.

அந்தரியாமி - ஆன்மா, கடவுள், சீவசாட்சி.

அந்தரியாமித்துவம் - ஆன்மாவோடு கலந்திருத்தல், உள்ளீடாயிருக்குந்தன்மை.

அந்தரிலம்பம் - ஒடுங்கிய மூக்கோணம்.

அந்தரிலயம் - துரியாதீதம்.

அந்தரீட்சம் - ஆகாயம்.

அந்தரீபம் - தீவு.

அந்தரீயம் - உள்ளுடை.

அந்தருத்திரேகம் - உட்டொடக்கம்.

அந்தருவேதி - அந்தர்வேதி.

அந்தரேண - ஒழிய, இல்லாமல், நடுவில், ஊடாக.

அந்தரேணம் - நடு.

அந்தர் - உள், கீழ்மக்கள், மறைவு, 112 ராத்தல்.

அந்தர்க்கதம் - இடையில் வருதல், மறைந்திருக்கை, உள்ளடங்கியது.

அந்தர்க்கதவுவமை - உள்ளுறை யுவமை.

அந்தர்க்கரணம் } உட்கருவி.
அந்தர்க்கருணம் }

அந்தர்க்கிருகம் - உள்வீடு.

அந்தர்ச்சடரம் - இரைக்குடர்.

அந்தர்ச்சரீரம் - உள்ளிந்திரியம்.

அந்தர்த்தகனம் - மதுநீர்வடித்தல், உள்ளனல்.

அந்தர்த்தசை - சோதிடத்திற் சொல்லப்பட்ட மகாதசையில் இடைவருங் கிரகங்களுடைய அதிகாரத்தோடு பொருந்திய காலம்.

அந்தர்த்தானம் - உள், மறைவிடம், மறைவு, மறைகை.

அந்தர்த்துவாரம் - உட்கதவு.

அந்தர்நியமனம் - உள்ளேயடக்குதல்.

அந்தர்ப்பகிர்வியாப்தன் - உள்ளும் புறமுஞ் செறிந்திருப்போன்.

அந்தர்ப்பவம் - உள்ளாதல், உள்ளே பிறத்தல்.

அந்தர்ப்பவித்தல் - உள்ளாக்குதல், உள்ளாதல்.

அந்தர்ப்பாவனை - உள்ளத்தில் பாவித்தல்.

அந்தர்ப்பாவிதகருமம் - அகனிலைச் செயப்படுபொருள்.

அந்தர்ப்பாவிதணிச்சு - பிறவினை விகுதிகள் தொக்கி நிற்பது.

அந்தர்ப்பிரகிருதி - உள்ளிந்திரியம்.

அந்தர்ப்பிரஞ்ஞன்-தன்னையறிபவன்.

அந்தர்ப்புரம் - அரசன் றேவியில்லம், உள்வீடு, அந்தப்புரம்.

அந்தர்ப்பூதம் - உள்ளிருப்பது, உள்ளடங்கினது.

அந்தர்மலக்கிருமி - தேகத்திலேகபத்திலுமுதிரத்திலும் பிறக்கின்ற கிருமிகள், மதுராந்நம், வெல்லம், பால், தயிர், மா, மழைத் தண்ணீர் இவ்வத்துக்களைத் தின்பதினால் பிறக்கின்ற கிருமிகள்.

அந்தர்முகம் - உண்ணோக்கியமுகம், உன்னோக்குகை.

அந்தர்முகி - அடங்கிய மனத்தன், உண்ணோக்கிய முகமுடையவன்.

அந்தர்முகியோனி - வாயு அதிகரித்து அந்தர்முகமாக எழும்பி பெண்களுக்கு யோனித்தானத்திலே உபத்திரவஞ்செய்யும் ஒருவகை நோய்.

அந்தர்யசனம் - அந்தரியாகம்.

அந்தர்யாகம் - அந்தரியாகம், கண்களை மூடி அல்லது மூக்கு நுனியைப் பார்த்து, ஞான முத்திரையோடிருந்து கொண்டு தன்னுள்ளே குண்டலி முதலிய எல்லாவுபகரணங்களையும் தேடியதாகவும் புறத்திற் செய்யுமாறே உள்ளே அக்கினி காரியஞ் செய்யப்படுவதாகவும் பாவித்துச் செய்யும் வழிபாடு.

அந்தர்யாமி - அந்தரியாமி.

அந்தர்வஞ்சிசன் - அந்தப்புரக் காவலாளன்.

அந்தர்வாகினி - கீழாறு.

அந்தர்வேதி -யாகசாலையினுள்ளிடம், இருநதிகளுக்கும் நடுவேயுள்ள சமபூமி. அது பிரயாகை தொடங்கிக் கங்கைக்கும் யமுனைக்கும் நடுவேயுள்ள தேசம்.

அந்தலை } சந்திப்பு, பேறு,
அந்தலைப்பு } முடிவு, மேடு.

அந்தளம் - கவசம், அந்தளகம்.

அந்தளகம் - கவசம்.

அந்தளி - தேவர்கோயில்.

அந்தன் - கடுக்காய், குருடன், சனி, யமன், அழகன், அறிவிலான்.

அந்தஸ்து - மேல்மாடி, ஒழுங்கு, நிலை.

அந்தா - ஒரு மகிழ்ச்சிக் குறிப்பு மொழி.

அந்தாதி - ஒரு பிரபந்தம். நின்ற பாட்டினிறுதியும் வரும்பாட்டின் முதலும் ஒன்றாய் வருமாறு தொடை, பராபரம், கடவுள்.

அந்தாதிச்சா - மகாதியானும் வருந் தசாபலம்.

அந்தாதித்தல்-அந்தாதியாகத் தொடுத்தல்.

அந்தாதித்தொடை - அடிதோறும் இறுதிக்கணின்ற எழுத்தேனும், அசையேனும், சீரேனும், சொல்லேனும், அடியேனும், மற்றை அடிக்காதியாக வருவது.

அந்தாதிமடக்கு - ஓரடியின் இறுதியும் மற்றையடியின் முதலும் பல

பொருள் ஒரு மொழியான் மடங்கி வருவது.

அந்தாமம் - பரமபதம்.

அந்தாயம் - மாதிர்.

அந்தாளி - குறிஞ்சி யாழ்த்திறன் வகை முப்பத்திரண்டில் ஒன்று.

அந்தாளிபாடை - பாலை யாழ்த்திறள் வகையில் ஒன்று, ஒரு பண்.

அந்தாஜ் - மதிப்பு.

அந்தி - அக்காள், அந்தியென்னேவல், இரா, தில்லைமரம், பாலையாழ்திறத்திலொன்று, பொருத்து, மாலைக்காலம், முடிவு, முத்தெருக்கூடுமிடம், ஊழி முடிவு, சந்தியாகாலம், மாலை, செவ்வானம், சந்தியாவந்தனம், இரவு, முச்சந்தி, அந்திநேரம், அந்திப்பொழுது, அந்திவேளை.

அந்திகைக்கிழை - அந்தரகாந்தாரம்.

அந்திகம் - அயல், கொள்கொம்பு, பக்கம்.

அந்திகாசிரயம் - தாவரம்.

அந்திகாவலன் - ஒரு தேவதை, மாலைக் காலத்தில் தெருக்களில் காவலாகத் திரிபுந் தேவதை.

அந்திகை - அக்காள், அடுப்பு, இரவு, ஒரு கண்ணேய், குருடு, சமீபம், பெண்.

அந்திகோன் - சந்திரன்.

அந்திக்கடை - மாலையில் விற்குங் கடை.

அந்திக்காப்பு - குழந்தைகளுக்கு அந்திப்போதில் செய்யும் ரக்ஷை.

அந்திக்காலம் - மாலை, இறுதிக்காலம்.

அந்திக்காவலன் - சந்திரன், ஒரு தேவதை.

அந்திக்கோன் - அந்திக்காவலன்.

அந்திசந்தி - எப்போதும், காலை மாலை.

அந்தித்தல் - பொருந்தல், பொருமுதல், மந்தப்படுதல், முடித்துவைத்தல், சந்தித்தல், கிட்டுதல், நியமித்தல், முடிதல்.

அந்திபகல் - இராப்பகல், கேவலசகலாவத்தைகளைக் கருதும் ஒரு குறிப்பு மொழி.

அந்திப்பூ - அந்திமந்தாரை, அந்திமல்லிகை.

அந்திப்பொழுது - மாலைக்காலம், சந்தி, சாயங்காலம், சாயம், சாய்பொழுது, மாலை, கோதூழி.

அந்திமகாலம் - மரணவேளை.

அந்திமதசை - அந்திம காலம்.

அந்திமந்தாரம் } ஒரு பூமரம்,
அந்திமந்தாரை } பூச்செடி வகை.

அந்திமலர்ந்தான் } அந்திப்பூ, அந்தி
அந்திமல்லிகை } மந்தாரை.

அந்திமல்லி - அந்திமந்தாரை.

அந்திமாலை - ஒரு நோய், பகற்காலத்தின் முடிவில்வரும் மாலைக்காலம், மாலைப்போது, மாலைக்கண்.

அந்திமான் - இடையெழு வள்ளலில் ஒருவன்.

அந்தியகருமம் - சாச்சடங்கு, அந்தியக் கிரியை.

அந்தியகாலம் - மரணகாலம்.

அந்தியகிரியை - அந்தியகருமம்.

அந்தியக்கிரியை - உத்தரக்கிரியை.

அந்தியசர் - புலையர்.

அந்தியசன் - சூத்திரவருணத்தோன், தம்மி, புலையன்.

அந்தியசைவர் - சிவதீட்சை பெற்ற பிரதிலோமர் முதலிய சாதியார்.

அந்தியபம் - இரேவதி, மீனராசி.

அந்தியம் - கடைப்பட்டது, மரணம், சமுத்திரம், பத்துக்கொண்ட எண், முடிவு, மரணகாலம், அந்தம்.

அந்தியர் - கீழ்மக்கள், புலையர்.

அந்தியவருணம் - நாலாம் வருணம், மிக்க கீழான வருணம்.

அந்தியாவசாயி - நிஷாதமாதுக்கும் சண்டாளனுக்கும் பிறந்தவன், இவன் நெழிற் சண்டாளத்தொழிலுஞ் சுடுகாடு காத்தலும். வேட்டையாடுதற்நெழிலையுடைய ஒரு வருணத்தார்.

அந்தியாவயவி - இறுதியில் வரும் அவயவமுடைய பிண்டம்.

அந்தியேஷ்டி } மரண யாகம், உத்
அந்தியேட்டி } தரக் கிரியை.

அந்தியை - மிலேச்சப் பெயருடையவள்.

அந்திரக்கண்மணி - நீலக்கல்.

அந்திரக்கொடிச்சி - கெந்தகம், கந்தகம்.

அந்திரம் - குடம், சிறு குடல்.

அந்திரவசனம் - கொட்டைப்பாக்கு.

அந்திரன் - வேடன், தேவன்.

அந்திரு-நிவர்த்திகலையில் பிருதிவி தத்துவத்தில் உள்ளனவாகச் சொல்லப்படும் புவனங்கள் நூற்றெட்டனுள் தென்மேற்றிசையிலிருக்கும் பத்துப் புவனங்களுள் ஒன்று.

அந்தில் - அசைச்சொல், அவ்விடம், வெண்கடுகு.

அந்திவண்ணர் - சிவன்.

அந்திவண்ணன் - சிவன், மாலைக்கால மேகநிறமாகிய சிவப்பு நிறமானவன்.

அந்தீகிருதன் - குருடனாக்கப்பட்டவன்.

அந்தீபூதன் - குருடனானவன்.

அந்து - அப்படி, கிணறு, கொகாலை, நெல்வண்டு, நெல்லந்து, அந்தம், யானைக்காற் சங்கிலி, பாதக்கிண்கிணி, நெற்பூச்சி, அந்துப்பூச்சி.

அந்துகம் - சங்கிலி, பாதகிண்கிணி, யானைச் சங்கிலி, அந்து.

அந்துக்கண்ணி - பிளிச்சைக்கண்ணி.

அந்துப்போதிகை - யானையின் பின் கால் சங்கிலி கட்டுங் குறுந்தறி.

அந்துளியிந்துளியாத்தல் - சுறையாடல், பதைபதைத்தல்.

அந்துகம் - யானைப்பாதகிண்கிணி.

அந்தேசம் - அந்தரிப்பு, அப்பம், கதியின்மை.

அந்தேசாலம் - தேற்றை.

அந்தேவாசி - சண்டாளன், மாணைக்கன்.

அந்தை - ஒரு நிறை.

அந்தைமந்தை - மந்தக்குணம்.

அந்தோ - அதிசயவிரக்கச் சொல், இரக்கச்சொல்.

அந்தோட்டம் - கண்டோட்டம் என்னும் ஒரு ரோகம், அது வாயு உதட்டிற் சேரும்போது பிறந்து உதடுகளிலே வெடிப்பை யுண்டாக்குமென்பர்.

அந்தோர் - நெல்லிமரம்.

அந்த்யம் - அந்தியம்.

அந்த்யேஷ்டி - அந்தியேஷ்டி.

அந்ருக்காவடி - தரித்திரன், சோம்பன்.

அந்நம் - சோறு.

அந்நபானம் - சோறும் தண்ணீரும்.

அந்நப்பிராசனம் - அந்நப்ராசனம், குழந்தைக்கு முதலில் சோறூட்டுங் கிரியை.

அந்நலார் } அப்பெண்கள், அழ
அந்நல்லார் } கிய பெண்கள்.

அந்நியபுட்டம - சூயில்.

அந்நியம் - அயல், சூயில், வேறு, அன்னியம்.

அந்நியர் - பிறர்.

அந்நியோன்னியம் - அந்யோன்யம், ஒன்றிலொன்று, ஒற்றுமை, ஐக்கியம்.

அந்ரீ - ஒரு அரசன்.

அந்ருவயம் - கண்ணழிவு.

அந்ருதம் - அந்ருதம்.

அந்வபித்தல் - அநுவயித்தல்.

அப - ஒரெதிர்மறையுபசருக்கை.

அபகடம் - அவகடம், வஞ்சகம்.

அபகமம் - புறப்பட்டுப் போதல், மறைந்துபோதல், மரணம்.

அபகரணம் - அபகரிப்பு, களவுசெய்தல், வழுச்செய்கை.

அபகரி - வஞ்சனையாய்க் கவர்.

அபகரித்தல் - கொள்ளையிடல், வஞ்சனையாகக் கவர்தல், கவர்தல், அபஹரித்தல்.

அபகருடசமை - அபகர்டசமை.

அபகருமம் - தூர்க்கருமம், நெருக்கிடை, பொல்லாங்கு.

அபகர்டசமை - தருக்கத்தினது அசத்தான உத்தராஜாதியிலொருவகை; அது அவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தால் அவ்வியாபகமான தருமத்தினது அபாவத்தைப் பொருளுக்கு வருவித்தல்.

அபகர்த்தா - அகற்றுவோன், அபகரிப்போன், திருடன்.

அபகளங்கம் - நீங்காவசை.

அபகனம் - அவயவம்.

அபகாசம் - வீண்சிரிப்பு.

அபகாதம் - அடித்தல், வெட்டல், கொல்லல்.

அபகாரகன் - திருடன்.

அபகாரம் - களவு, கொடுங்கோன்மை, தவறு, நட்டம், நன்மைக்குத் தீமை செய்தல், பொல்லாங்கு, வன்னம், கவர்கை, நன்றியற்ற செய்கை, தீங்கு, நன்றிகேடு, தீமை.

அபகாரி - எத்தன், துஷ்டன், நன்றியீனன், தீமை செய்வோன்.

அபகிருதி - எதிரிடை, தூர்செய்கை, நெருக்கிடை.

அபகீர்த்தி - தூர்கீர்த்தி, நிந்தை, அபக்கியாதி, அவகீர்த்தி.

அபகுண்டனம் - சுற்றல்.

அபக்கியாதி - நிந்தை, பழி, அபக்யாதி, அபகீர்த்தி.

அபக்கிரமம் - புகலிடம், போதல்.

அபக்கிரியை - தீங்கு, தூர்செய்கை.

அபக்குரோசம் - நிந்தித்தல்.

அபக்குவம் - பக்குவமின்மை, அபக்வம், முதிராமை.

அபக்குவர் - பக்குவரல்லாதவர்.

அபக்குவன் - பரிபாகமடையாதவன்.

அபக்குவி - பக்குவமில்லாதவன், அபக்குவன்.

அபங்கம் - கோளகபாஷாணம், பழுதின்மை.

அபங்கன் - நாசமில்லாதவன், பங்கமில்லாதவன், குறைவில்லாதவன்.

அபசகுநம் / அபசகுனம் - துன்நிமித்தம், சகுனத்தடை, தூர்நிமித்தம், தூர்க்குறி.

அபசங்கம் - பாதம்.

அபசதம் - கீழ்மை.

அபசதர் - அநுலோமராகிய கீழ்ச் சாதியார், கீழ்மக்கள்.

அபசதன் - அநுலோமனாகிய கீழ்ச் சாதியான், கீழ்மகன்.

அபசத்தம் - அபசப்தம், அபக்கியாதி, அசுபமொழி, அவசத்தம், வழுஉமொழி, வீண்பேச்சு, வழுச்சொல்.

அபசயப்படல் - தோல்வியடைதல்.

அபசயம் - அபஜயம், தோல்வி, பலவீனம், கேடு.

அபசரணம் - பின்னிடுகை, புறப்படுதல்.

அபசரம் - அகற்றுதல், சீக்கிரகதி.

அபசரிதம் / அபசரிதை - துராசாரம், துன்னடை, ஒழுக்கவீனம், துர்ச்சரித்திரம், தீயொழுக்கம்.

அபசருச்சனன் - கொல்லுதல், நன்கொடை, பிறவி நீங்கல், விடுதல்.

அபசவ்வியம் - வலப்பக்கம், அபஸவ்யம், தற்சனிக்கும் அங்குட்டத்திற்கும் நடு, இடப்பக்கம், மாறுபாடு.

அபசாரம் - மரியாதைதவறிய செயல், துராசாரம், தீங்கு, குறைவு, தூர்ச்செய்கை, துன்னடை, வெளிச்செல்லுதல்.

அபசாரி - ஒழுக்கந்தப்பினவள், வேசி.

அபசிதம் - ஆதரித்தல், செலவிடல்.

அபசித்தாந்தம் - தன் சித்தாந்தத்திற்கிணங்காதவற்றைச் சொல்லி சாதித்தல், போலி முடிவு, அபவித்தாந்தம்.

அபசித்துமூர்த்தம் - எட்டாமூர்த்தம்.

அபசுமாரம் - காக்காய் வலி, புத்தியின் தெளிவு நீங்குதல், அபஸ்மாரம்.

அபசுமாரரோகம் - புத்தியின் தெளிவை நீக்கும் ஒரு வகைரோகம்.

அபஸ்மாரம் - காக்கை வலிப்பு, வெறுக்கத்தக்கது.

அபசெயம் } அபஜெயம் } அவசயம், தோல்வி, பலவீனம்.

அபசேதிரு - ஆராதூரிக்காரன்.

அபச்சாயை - ஒரு மரணக்குறி, தள்ளு படிச்சாயை.

அபச்சுமாரம் - காக்காய் வலி, பைத்தியம்.

அபஞ்சீகிருதபூதம் - தன்மாத்திரை.

அபஞ்சீகிருதம் - தனித்தனியே நிற்கும் பூதங்கள்.

அபடி - திரைப்படாம், திரைச்சீலை.

அபடு - சாமர்த்தியமின்மை.

அபடுகரணம் - புலக்குறைவு.

அபட்கை - பாம்பின் நச்சுப்பல்லின் ஒன்று, கீழ்வாய்விழப்பல்.

அபட்சணம் - நோன்பு.

அபட்சதை - எதிர்.

அபட்சம் - வெறுப்பு.

அபட்சியம் - உண்ணத்தகாதது.

அபட்டமம் } அபட்டம் } அங்குசநுனி.

அபதந்திரவாதம் - ஒருவகை வாத ரோகம். அது ஊர்த்துவகாயத்தி லிருந்து அதோகாயத்தை மரத்த லடையச் செய்தும், அதோகாயத்தி லிருந்து ஊர்த்துவ காயத்தை மரத்த லடையச்செய்தும், மிகுந்த உபத்திரவத்தை விளைப்பதும், அங்கத்தை விற்போல வளைத்து வருத்தமுற நெட்டுயிர்ப்பை எழுப்புவதுமான ஒரு நோய்.

அபதம்-மஞ்சீதபூரண நின்மல சிவம்.

அபதரித்தல் - பொறுத்தல்.

அபதர்ப்பணம் - திருத்தி யில்லாமை, நோயுற்றுழிப் பசி பொறுத்தல்.

அபதாந்தரம் - சமீபம்.

அபதார்த்தம் - உள்ளதல்லாதது, உபயோகமற்றது.

அபதானகம் } அபதானம் } சுத்தநடை, மேன்மையான தொழில், வலி பெருஞ்செயல்.

அபதூறு - கொள்ளை, துர்க்கீர்த்தி, பழி மொழி, அவதூறு.

அபதேசம் - இலக்கு, உபாயம், காரணம், கீர்த்தி, நிக்கு, வஞ்சம், வேடம்.

அபதேவதை - பைசாசம், துர்த்தேவதை.

அபத்தக்களஞ்சியம் - அபத்தக்களஞ்சயம்.

அபத்தச்சந்தம் - உணவில் விருப்பின்மை, பசியின்மை.

அபத்தம் - தவறு, பொய், மோசம், நிலையாமை, அவத்தம், வீண்.

அபத்தன் - பத்தியில்லாதவன்.

அபத்தி - பத்தியின்மை.

அபத்திச்சந்தம் -பசியின்மை.

அபத்தியசத்துரு - நண்டு.

அபத்தியதை - மருத்துவிச்சி.

அபத்தியதோஷம் - கருண சுரத்தில் வரும் ஏழுவகைத் தோஷங்களுள் ஒன்று.

அபத்தியபதம் - யோனி.

அபத்தியம் - அபத்யம், பத்தியத்தவறு, பிள்ளை, அபத்தியம்.

அபத்தியவிக்கிரயி - மகவை விற்பவன்.

அபத்தியானம் - அமைதிப்பு, கெட்ட சிந்தனை, பொல்லாங்கு.

அபத்திரபம் - வெட்கக்கேடு.

அபத்திரபை - வெட்கக்கேடு, வெட்கப்படுகை.

அபத்திரவியம் - அசுத்தம், கலப்பு.

அபநயனம் - அழிதல், அழித்தல், எடுத்துக்கொள்ளுதல், கடனிறுத்தல்.

அபநீதம் - அபகரிக்கப்பட்டது, இறுக்கப்பட்டது, எடுக்கப்பட்டது.

அபநுதியுருபகம் - பொருளை மறுத்துவமையையுடம்படுத் துரைப்பது (உ-ம்) "கையல்ல காந்தண்மலர்."

அபநுத்தி - அகற்றுதல், துரத்துதல்.

அபநோதம் - பிராயச்சித்தம், அகற்றுதல்.

அபநோதனம் - போக்குதல்.
அபந்தலம் - செங்கத்தாரி.
அபப்பிரசாதை - வயிற்றிற் கருவழியப் பெற்றவள்.
அபப்பிரபஞ்சம் - பாமர சாதிகளான விழிசனர்மொழி.
அபமம் - கீழ்க்கதி, சூரியன் தக்கிணயனத்திலாவது உத்தராயணத்திலாவது இறங்குதல்.
அபமரணம் - அகாலமரணம், துன்மரணம்.
அபமார்க்கம் - துன்மார்க்கம், நாயுருவி, புன்சமயம்.
அபமார்க்கி - நாயுருவி.
அபமானம் - தூர்க்கீர்த்தி.
அபமிருத்தியு - அபமிருத்து, சடுதிமரணம், அகாலமரணம், நோய் முதலிய காரணமில்லாத மரணம்.
அபமிருத்து - துன்மரணம், அபமிருத்தியு, அகால மரணம்.
அபம - எதிர், கீழ்மை, பிரிவு, வித்தியாச முதலியதைக் காட்டும் ஒருபசருக்கம்.
அபயகத்தம், அபயகரம், அபயார்த்தம் } பயந்தீர வமைக்குங்கை.
அபயகுலசேகரன் - ஒரு சோழன்.
அபயக்கல் - எல்லைக்கல்.
அபயக்கை - அபயகரம்.
அபயங்கரம் - அச்சமின்மை.
அபயங்கொடுத்தல் - அடைக்கலமாயேற்றுக்கொள்ளுதல்.
அபயசம் - தூர்க்கீர்த்தி.
அபயஸ்தம் - அபயகரம், அபயஹஸ்தம்.
அபயஸ்தன் - தற்காப்போன்.
அபயதானம், அபயப்பிரதானம் } அடைக்கலம், அடைக்கலந்தருகை.
அபயமிடல், அபயமிடுதல் } அடைக்கலம் புகுதல், முறையிடுதல்.
அபயமுத்திரை - அபயமளித்தலைக் காட்டும் கைக்குறி.
அபயம் - அச்சமின்மை, அடைக்கலம், உலகமுடிவு, ஓலம், கிருபை, செவ்வியம், தயை, அருள்.
அபயர் - படைவீரர், ஒருவகை இராக்கதர்.
அபயலே - விலாமிச்சம் வேர், இலாமிச்சை.
அபயவத்தம் - அபயகரம், இணைக்கை பதினைந்து வகையுள் ஒன்று. அது இருவகையுஞ் சுகதுண்டமாக நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிற்பது, அபயஹஸ்தம்.
அபயவரதக்கை - அபிநயக்கைவகை.
அபயவாக்கு - அஞ்சேலெனல்.
அபயன்-அபயன் கடுக்காய், ஒரு கடுக்காய்வகை, அச்சமறுத்தோன், அருகன், கடவுள், சோழன், பயமற்றவன், வீரன், சூரன், பயமில்லான்.
அபயாஸ்தம், அபயாத்தம், அபயார்த்தம் } பயந்தீர வமைக்குங்கை, அபயஹஸ்தம்.
அபரக்கிரியை - பிரேத கருமம்.
அபரகாத்திரம் - கால், பின்கால்.
அபரசத்திதத்துவம் - அபரபிந்து.
அபரசன் - பின்னோன், தம்பி.
அபரசாமானியம் - அற்பவிடயங்களினுளதாகிய சாமானியத்தன்மை.
அபரசிவதத்துவம் - அபரநாதம.
அபரசூரியன் - ஞான நடைகளிற் சிறந்தோன்.
அபரஞானம் - வாலஞானம், சாஸ்திரஞானம்.
அபரஞ்சி - புடமிட்ட பொன், ஒடவைத்த பொன்.
அபரதி - தாமதித்தல்.
அபரத்துவம் - எதிர், பின், பின்மை.
அபரநாதகலைகள் - இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துகாமினி என்னும் ஐந்து கலைகள்.
அபரநாதம் - எதிரொலி.
அபரபக்கம் - சந்திரன் பிற்பக்கம், கிருட்டின பக்கம், தேய்பிறை, அமரபட்சம்.

அபரபட்சம் - அபரபக்கம், பதினைந்து நாளெனப் பொருள்படும் ஓர் குறிப்புமொழி, கிருஷ்ணபட்சம், அபரபக்ஷம், அமரபட்சம்.

அபரபதி - ஆணவமலம் நீங்கி இடைக் காலத்திற் பதித்தன்மை அடைந்த ஆன்மா.

அபரபாகம் - அபரபட்சம்.

அபரபுத்தி - கீழ்ப்போகங்களை அனுபவித்தல், பின்புத்தி.

அபரபோகம் - கீழ்ப்பட்ட போகானுபவம். அது அசுத்தமாயாகாரிய மாகிய புவனங்களிலிருக்கும் அமரேசராதியான உருத்திரர்கள் புசித்திருக்கும் போகம்.

அபரப்பிரணவம் - சுத்தப்பிரணவம்.

அபரப்பிரமம் - சகுணப்பிரமம்.

அபரமந்திரேசுவரர் - ஸ்ரீகண்டர் வீரபத்திரர் முதலிய அபரமூர்த்த சிவன்கள். இவர்கள் பிரளயாகலருட் பரிபக்குவ மலர்களாய்ச் சிவானுக்கிரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களாவார்கள்.

அபரமார்க்கம் - நாயுருவி.

அபரமூர்த்தசிவன் - அபரமூர்த்தியை அடைந்து சிவத்துவம் பெற்றிருக்கும் ஆத்துமா.

அபரமுக்தி - பதமுக்தி, சுத்தமாயாபுவனத்தை அடைந்திருத்தல்.

அபரம் - பிரேதகர்மம், அமரம், கீழ், எதிர், கவசம், நரகம், மேற்கு, பிணக்கு, பிந்தினது, பிற்பக்கம், பின், மூதுகு, யானைப்பின்கால், பொய்.

அபரராத்திரம் - இராத்திரியின் பிற்சாமம், கடுக்கசாமம்.

அபரர் - கீழ்ப்பட்டவர்.

அபரலோகம் - மோட்சம்.

அபரவயசு - முதிர்ந்தவயது.

அபரவாகீசுவரர் - பரவாகீசுவரரல்லாதவர், அபரமாகிய வாக்குக்கதிபர்.

அபரவாகீசுவரி - பரவாகீசுவரியல்லாதசத்தி, அபரமான வாக்குக் கதியானவள்.

அபரவாக்கியம் - பிரதான வாக்கியத்திற்குப் பின்வரும் வாக்கியம்.

அபரவித்தை - வேதாங்கமுதலியன.

அபரவித்து - அனந்திக்கிராந்த வித்துக பராசத்தி. இது அனந்திக்கிராந்த வித்துக பாசிவம் என்னுமபர நாதத்தாற் றோற்றுவிக்கப்பட்டது. அபரசத்தி சத்துவம், அர்த்தசந்திரன் நிரோதியென்னும் இரண்டும் இதிலடங்கும். மூலோபாதானமான குண்டலியினின் றுண்டான குணத்துமகங்கள் மூன்றனுள் ஒன்று. அபரவித்து, மோகினி, மகான் என்பனை மூன்று மகாத்துமகங்கள், மகாமாயை என்னுங் குண்டலினிசக்தியின் இரண்டாவது சோபத்தால் உண்டாகுஞ் சங்கற்பரூபமான வித்து.

அபரவித்துகலை - சாந்தி, சாந்தியதீதை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை என்னும் பஞ்சகலைகள்.

அபரன் - தாழ்வுடையோன்.

அபராங்கம் - சரீரத்தின் பிற்பாகம்.

அபராசிதன் - அபராஜிதன், அரன், அரி, மகாவிஷ்ணு, வெல்லப்படாதவன், சிவன்.

அபராசிதை - விசயதசமியில் வணங்கப்படுந் துர்க்கை.

அபராணம் - அபரான்னம், எற்பாடு, பின்னேரம், பிற்பகல், அந்திப் பொழுது.

அபராதம் - கட்டளையை மீறுதல், குற்றம், தண்டம், பிழை, பாவம், தண்டிதத்தல்.

அபராதகூபனம் - மன்னிப்புக் கேட்டுக் கொள்கை.

அபராதர் - கட்டளையை மீறுவோர்.

அபராதி - குற்றவாளி, தீங்குசெய்தோன்.

அபராத்தர் - பின்னுனவாப்தர்.

அபராத்தன் - தவறுசெய்பவன், தீங்குசெய்பவன், பின்னுனவாப்தன்.

அபராத்திரம் - கடைச்சாமம்.

அபராந்தம் - மேற்குக் கடைற்கரையி லுள்ள தேசம்.
அபராந்கர் - மேற்குக் கடற்கரையி லிருப்பவர்.
அபராவதாரம - வேறவதாரம்.
அபரான்னம் - மத்தியானத்தை யடுத் துப் பின்வரும் ஆறு நாழிகை கொண்ட நேரம்.
அபரிகாரம் - விலக்காமை.
அபரிசுட்டரோகம் - ஒரு வகைக் குட்டரோகம், அது சர்வாங்கத்தி லுங் கறுத்தவிரத்தம் வடிதல், நோய், தொடப்படக் கூடாமை, வீக்கம், வெடிப்பு முதலிய குணங் களுடையது.
அபரிசரம் - தூரம்.
அபரிச்சதம் - நிருமாணம்.
அபரிச்சின்னத்துவம் - கண்டஞ்செய் யப்படாத தன்மை, தேசத்தாலும் காலத்தாலும் வத்துவாலும் எல் லைப் படாமை.
அபரிச்சின்னம் - வகுக்கப் படாமை, கண்டஞ்செய்யப் படாமை, அள விடமுடியாதது.
அபரிச்சேதம் - ஒழுங்கின்மை, பிரி வின்மை.
அபரிட்காரம் - சீர்கேடு.
அபரிட்சயம் - காசமின்மை.
அபரிணயனம் - இல்வாழ்க்கைப்படா திருத்தல்.
அபரிணீதை - விவாகம்செய்யாதவள்.
அபரிதம் - அளவில்லாதது.
அபரிபக்குவமலர் - விட்டுநீங்கப் பக் குவமாகாத ஆணவ மலத்தை யுடைய ஆன்மாக்கள்.
அபரிபாடி - ஒழுங்கின்மை.
அபரிபூதம் - முதிராதது.
அபரிமாணம் - அளவில்லாதது.
அபரிமிதம் - அளவின்மை, எல்லை யின்மை, பெருமை.
அபரியந்தம் - மட்டற்றது.
அபரியாத்தம் - வல்லமையற்றது.
அபரியாத்தி - பூரணமில்லாமை.
அபரியாயம - ஒழுங்கின்மை.
அபரீபாத்திரம் - தகவித பாத்திரங் களில் ஒன்று.
அபரூபம் - அருமை, அவலட்சண ரூபம், அவலட்சணம்.
அபரேகம் - இது பூமியிலுண்டாகும் ஒருவகை கண்ணுடி போன்ற பொருள்.
அபரை - சிவசத்தி மூன்றனுள் ஒன்று, இதுவும் பிராமி, வைஷ்ணவி, இரௌத்திரி என மூன்றுவிதப் படும். இவற்றுள் பிராமி நூறு கோடியோசனை விசாலங்கொண்ட இரத்த மண்டலத்திலே சகல லோகங்களையுஞ் சிருஷ்டித்தல் காரணமாகவும், வைஷ்ணவி இர ண்டுகோடி யோசனை விசாலங் கொண்ட சுவேத மண்டலத்திலே சர்வலோகங்களையும இரட்சித்தல் காரணமாகவும், இரௌத்திரி மூன்று கோடி யோசனை விசாலங் கொண்ட விந்துமண்டலத்திலே சகல லோகங்களையுஞ் சங்காரித்தல் காரணமாகவும் இருப்பார்கள் என் பர். சிவதன்மிணி தீட்சை யிரண்ட னுள் ஒன்று. அது பவுதிகதீட்சை.
அபரோட்சஞானம்-பிரமசைதன்னிய தரிசனம், பிரத்தியட்ச ஞானம்.
அபரோட்சம் - அனுபவஅறிவு, பிர த்தியகூசம், கடவுளைத்தரிசிக்கை, அபரோகூசம்.
அபரோட்சன் - பிரமசைதன்னியதரி சனன்.
அபலச்சா - அபலமானசா.
அபலந்துரு - பயன்தராமரம்.
அபலம் - கதவின்றாள், வலியின்மை, பலவீனம், பலனற்றது, பயனின் மை, சத்தியின்மை.
அபலன் - பெலவீனன், வலியற்றவன்.
அபலாடிகை - தாகம்.
அபலாபனம் - மறைக்கை.
அபலாபம் - உருக்கம், வஞ்சகம், நேசம், பிறத்தல்.

அபலை - ராமருக்கு பசிவராதபடி உபதேசிக்கப்பட்ட மந்திரம, பெண், எதிரீ.

அபவருக்கம் - காற்றில்லாதவிடம், நந்தனவனம்.

அபவம் - அபாவம், உலகமுடிவு, திமிங்கலம்.

அபவரணம - மூடி.

அபவருக்கம் - நிறைவேற்றம், பலம், முடிவு, முத்தி, விடுதல், அபவர்க்கம்.

அபவருச்சனம் - நன்கொடை, பிறவி நீங்கல், விடுதல்.

அபவருத்தம் - அழித்தல்.

அபவருத்தனம் - அகற்றுதல், கலக்குதல், சுருகசுதல்.

அபவர்க்கம் - அபவருக்கம், முத்தி.

அபவர்த்தம் - அகற்றியெடுத்தல், ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு இராசியையாவது பலராசியையாவது சேடம்வராமல் அரிக்கும் வேறுராசி.

அபவர்த்தனம் - ஆட்டி யசைத்தல், சுருக்குதல், நீங்குதல்.

அபவனம் - நந்தனவனம்.

அபவாகம் - அருத்தாபத்தி, உள்ளறை.

அபவாக்கு - தீமைவிளக்குஞ் சொல்.

அபவாதம் - ஒவ்வாப்பேச்சு, அபகீர்த்தி, குற்றச்சாட்டு, தடை, பழிச்சொல், வெள்ளை, அபதூறு.

அபவாதயோகம் - குற்றஞ்சொல்லல்.

அபவாரணம் - மறைவு, மரணம்.

அபவித்தவ்வியம் - அசம்பவம்.

அபவித்தபுத்திரன் - தாய் தந்தையரால் நீக்கப்பட்டுப் பிறரால எடுத்து வளர்க்கப்பட்ட புத்திரன்.

அபவித்தன் - அகற்றப்பட்டவன், அபவித்தபுத்திரன்.

அபவித்திரம் - அசுத்தம், புனிதமின்மை.

அபவித்திரன் - அசுத்தன்.

அபவியயமானம் - கடனிறுமை, செலவிடல்.

அபவியயம் - ஆராதூரித்தனம்.

அபவிருத்தி - குறைவு.

அபவேட்டிதம் - கைவட்டணை நான்கனுளொன்று. அது தற்சனி விரல் முசலாகக் கைவரப்பிடிக்குந் தொழில், அபிநயவகை.

அபாகசாகம் - இஞ்சி.

அபாகம் - முதிராமை, பாகமின்மை.

அபாகரணம் - நிராகரணம், கடனிறுத்தல்.

அபாகிரோகம் - மசூரிகைரோக வகையுள் ஒன்று. அது சரீரத்திலே தூரந தூரமாக உலர்ந்துபோலுங் கருகினதுபோலுங் கொப்புளங்களாக எழுமபி இறக்கங் கொள்ளாமல் நெடுநாளேக்குநின்று உபத்திரவஞ் செய்யும்.

அபாகியம் - துரதிர்ஷ்டம், அபாகயம், நிர்ப்பாக்கியம.

அபாகியவான் } நிர்ப்பாக்கியர்.
அபாகியன் }

அபாங்ககம-அங்கவீனம், கடைகணன்.

அபாங்கதரிசனம் - கடைக்கண் பார்வை.

அபாங்கம் - கடைக்கண், கடைக்கண் பார்வை, திலகம், கடைகணிப்பு.

அபாசங்கம - அம்புக்கூடு.

அபாசம் - விருப்பின்மை, ஆசையின்மை, குற்றம்.

அபாசிரயம் - முற்றத்தின் பக்தர்.

அபாசீனம் - தெற்கு.

அபாசுவரம் - ஒளியில்லாதது.

அபாஷணம் } அமைதி, பேச்சின்
அபாடணம் } மை, மௌனம்.

அபாடவம் - அந்தக்கேடு, நோய்.

அபாணிக்கிரகணம் - விவாகமின்மை.

அபாண்டம் - இடுகிஸ்தை, அபாத்திரம், நிந்தை, இடுவந்தி.

அபாதானகாரகம் - நீக்கப்பொருள் கொடுக்கும் ஐந்தாம்வேற்றுமை வினையோடு முடிவது.

அபாதானம் - ஐந்தாம் வேற்றுமைப் பொருள்.

அபாதிதவிடயத்துவம் - அவாதித விடயத்துவம்.

அபாத்திரம் - பாத்திரவீனம், தானம் பெறத்தகாதவன்.

அபாத்திரன் - பாத்திரவீன்.

அபாத்திரீகரணம் - சுயதருமம்விட்டு அன்னியதருமஞ் செய்தல்.

அபாநன் - தசவாய்விலொன்று.

அபாபம் - இன்மை, ஒவ்வாமை, பாவமின்மை, மரணம்.

அபாமார்க்கஸ்நானம்-தேகத்தில் நாயுருவி தடவிச்செய்யும் ஸ்நானம்.

அபாமார்க்கம் - நாயுருவி.

அபாம்பதி - சமுத்திரம்.

அபாயக்கொடி - ஆபத்தைக் குறிக்குங் கொடி.

அபாயம் - ஆபத்து, அழிவு, எழுச்சி, சந்தியோசனை, நட்டம், பிரிவு, மோசம், வஞ்சகம்.

அபாரசக்தி - அளவிலாற்றல்.

அபாரணை - உண்ணுமை.

அபாரமார்த்திகம் - பரமார்த்தமில்லாதது, யதார்த்தமல்லாதது.

அபாரம் - அளவின்மை, எல்லைப்படாதது, கடவுள், மேடு, அளவற்றது, பரம்பொருள்.

அபார்த்தகரணம் - கள்ளவழக்கு.

அபார்த்தம் - அருத்தமில்லாதது, பிரயோசனமில்லாதது, தவறான பொருள்.

அபாவசதுட்டயம் - முன்னில்லாமை, பின்னில்லாமை, ஒன்றிலொன்றில்லாமை, என்றுமில்லாமை என்னுமபாவம் நான்கு.

அபாவப்பிரமாணம் - ஓரளவை : அஃது இயல்பாய் இல்லதனை இல்லையெனக்கோடல்.

அபாவம் - இன்மை, நினையாமை, ஓரளவை, கடுக்காய், பாவமின்மை, ஒரு பிரமாணம், இல்லாமை, நிர்மூலம்.

அபாவயோகம் - ஐவகையோகங்களுள் ஒன்று, அது காரணங்களுக் கெட்டாத பிரமத்தில் மனோலய மானது.

அபாவர்த்தனம் - திருப்புதல்.

அபாவவளவை - இல்லாததற்குவமை.

அபாவனை-தியானமின்மை, நிந்தனை.

அபாவாபாவம் - ஓரலங்காரம், அது பள்ளியுளீரம் புலராமையேறற்க என்பதிற்போல எச்சமுமுடிக்குஞ் சொல்லும் எதிர்மறுத்துடன்பாட்டுப் பொருளில் வருவதொன்று.

அபாஸ்தானவித்திரிதிக்கட்டி - ஒருவகை வித்திரிதிக்கட்டி, இது ஆசனத்திற் பலவித உபத்திரவங்களையுண்டாக்கி மலத்துவாரத்தைக் கெடுக்கும்.

அபானம் - கடுக்காய், குதம், பாயுரு, மூலாதாரம், ஆசனவாய்.

அபானவாயு - கீழ்நோக்கிச் செல்லுங் காற்று.

அபானவிருத்தி - அபானவாயுவாய்ச் சேட்டித்தல்.

அபானன் - உச்சத்தலத்தில் நிற்பது, தசவாயுவிலொன்று, அபானவாயு.

அபானீயம் - குடிக்கத்தகாதது.

அபி - கண்டனை, கதிப்பு, கேள்வி, அதிகம், சந்தேகம், சமீபம், பிரிவு, மேன்மை, விருப்பம் இவற்றைக் காட்டும் ஒருபசருக்கம், கண்டித்தல், அதட்டல்.

அபிகதம் - சமீபித்தல்.

அபிகமநம் - சமீபம்.

அபிகமம் - சமீபமாகப்போதல்.

அபிகருடணம் - உரிஞ்சுதல், பொய்க்கோட்படல், தேய்த்தல்.

அபிகாதசுரம் - ஒருவகைச்சுரம். இது குத்துக்காய முதலிய இரணங்களினாலும், அக்கினி சமீபமாயிருந்து நடத்துந் தொழிலினாலும் மதிக நடையினாலும், அதிக உழைப்பினாலும் வருவது.

அபிகாதசோபை - ஆயுதக்காய முதலியவற்றால் உண்டாகும் ஒருவகை ரோகம்.

அபிகாதம் - உபாதி, அடித்தல், நிரு மூலமாயழித்தல், பரிசித்தல், காய ப்படுத்தல், வருத்தம்.

அபிகாதவாதம் - அதிகமாக வழிநடத் தல் முதலிய காரணங்களாற் பிற ந்து சரீரமுழுதும் வியாபித்து அடித்தாற்போல நோகச்செய்யும் ஒருவகை வாதநோய்.

அபிகாதி - சத்துரு.

அபிகாயம் - அழற்சி, ஒருகாசம், சீற் றம், மனவேகம்.

அபிகாரம் - கொள்ளையிடல், நெய், படைக்கலந்தரித்தல், வருத்துகை.

அபிகிதகருத்தா, அபிகிதகர்த்தா } தன்செயலே யுணர்த்தும் வினைக்கு முழுவாயாக நிற்குங் கருத்தா.

அபிகிதகர்மம், அபிகிதகன்மம் } செயலே யுணர்த்தும் வினை செயப்பாட்டு வினையாய்வர அதற் கெழுவாயாக நிற்குஞ் செயப்படுபொருள்.

அபிகிதத்துவம் - மேற்கோள்.

அபிகிதம் - முன்சொல்லப்பட்டது.

அபிகிருதி - ஒருவகைச்சந்தம். அது ஒற்றெழுத்து உயிராவது உயிர் மெய்யாவது அடியொன்றிற்கு இருபத்தைந்தெழுத்தாய் வருவது.

அபிக்கியாதம் - அறியப்பட்டது.

அபிக்கியை - அழகு, அழைத்தல, கீர் த்தி சொல்லல், தூர்க்கீர்த்தி, நாமம், பரியாயபதம், பிரகாசம்.

அபிக்கிரகணம் - உடையவன் முன் னிலையில் யாதாமொரு பொரு ளைக் கவர்தல், கொள்ளையிடல்.

அபிக்கிரகம - திருடுதல், போர்க் கறை கூவுதல்.

அபிக்கிரணம் - எதிர்கொள்ளல்.

அபிக்கிரமம் - ஏறுதல், சருவுதல்.

அபிசங்கசுரம் - ஒருவகைச்சுரம், அது பூதாவேசசுரம், அவஷ்தகந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம், பயச் சுரம், துக்கச்சுரம், காமச்சுரம் என ஏழாக விரியும்.

அபிசங்கம் - குற்றச்சாட்டு, கூட்டம், சந்தியம், சமிப்பு, தழுவுதல்.

அபிசத்தி - தூர்க்கீர்த்தி, இரத்தல், நிந்தித்தல்.

அபிசந்தாநம் - உடன்தை, எய்ப்பு, சமாதானம் பண்ணுதல், விசேட மான உடன்படிக்கை.

அபிசந்தாபம் - யுத்தம்.

அபிசந்தானம் - அணுப்புதல், இணக் கம், பற்றுதல்.

அபிசந்தி - அணுப்பு, இணக்கம், காரி யம்.

அபிசம் - சங்கம்.

அபிசம்பந்தம் - சங்கிரதம், நல்லிணக் கம்.

அபிசம்பாதம் - சாபம், யுத்தம.

அபிசரன் - தோழன்.

அபிசர்க்கம் - சிருட்டிப்பு.

அபிசர்ச்சனம் - கொலை, நற்கொடை.

அபிசவணம் - அபிடவணம்.

அபிசவம் - கஞ்சி.

அபிசவனம் - முழுகுதல்.

அபிசனம் - கீர்த்தி, பிறந்தேயம், வமிசத்தலைமை, வமிசம்.

அபிசனவான் - உயர்குலத்தோன்.

அபிசாதகுலம் - நற்குலம்.

அபிசாதம் - தகைமையானது.

அபிசாதன் - உயர்குலத்தோன், தக்க வன், பண்டிதன்.

அபிசாபம்-குற்றச்சாட்டு,சபிப்பு,வீண்

அபிசாபனம் - சபித்தல்.

அபிசாபிவாரம் - இச்சித்தல்.

அபிசாரகம் - மந்திரத்தாற்கொல்லல்.

அபிசாரகோமம் - அபிசாரஹோமம், மந்திரயந்திரங்களினூற் கொலை முதலிய தீங்குசெய்தற்கு அமைக் கும் யாகம், அபிசாரவோமம், மார ணஓமம்.

அபிசாரசுரம் - ஒருவகைச் சுரநோய், அது அதர்வணவேத மாரணமந்தி ரங்களைக்கொண்டு ஒருவன் பே ரைச் சொல்லி யோமஞ் செய்தலி னூற் பிறக்கும் என்பர்.

அபிசாரணம் - சந்தித்தல், சமீபித்தல்.

அபிசாரமந்திரம் - மோகனமந்திரம்.

அபிசாரம் - நியமிப்பு, பெலன், மோகனம், யுத்தம், மந்திரவித்தை, பில்லி, சூன்யம் வைத்தல்.

அபிசாரவோமம் - மாரணவோமம்.

அபிசாரி - மோகஸ்திரீ, மோகன வித்தைக்காரன், லியபிசாரி, வேசை, அபிசாரி.

அபிசாரிகை - பிறர்சம்பந்த ஸ்திரீ.

அபிசாரிக்கை - கொலைமுதலிய தீங்கு விளைத்தற்பொருட்டுச் செய்யும் மந்திரசாதனை.

அபிசாரிதம் - மோகிக்கப் பட்டது.

அபிசிதம் - கூப்பிட்டிடுமன்னம், உண்ணல்.

அபிசித்தாந்தம் - சித்தாந்தஞ் சொல்லத் தொடங்கி வேறொன்றைச் சொல்லுதல்.

அபிசித்து - திராவிடதேசத்து அரசன், அபிசித்து, ஓரொட்டு நட்சத்திரம், இது உத்திராடத்திற்குப் பின் சோதி விஷயமாய்ச் சேர்க்கப்படுவது, ஒரு முகூர்த்தம்.

அபிசிரவணம் - ஒருவகை வேத மந்திரம்.

அபிசுதம் - புளித்தகஞ்சி.

அபிஞ்ஞர் - அறிந்தவர், நிபுணர்.

அபிஞ்ஞன் - அறிஞன்.

அபிஞ்ஞாப்பிரத்தியட்சம் - கேவலம் இந்திரியசம்பந்தத்தால் அறியுமறிவு.

அபிஞ்ஞானம் - அடையாளம், அறிவு, கறை.

அபிஷங்கம், அபிடங்கம் } சாபம்.

அபிஷ்டம், அபிடம் } மருந்து.

அபிடவணம் - நீரின்முழுகுதல், யாகாதி செய்தல்.

அபிடவம் - நீரின் முழுகுதல், புளிப்பேறினகஞ்சி.

அபிடித்தர் - அபிடேகஞ் செய்யப் பட்டவர்.

அபிடியந்தம் - கண்ணின் பெலவீனம், பாய்தல், பெருகுதல், பொசிதல், மிஞ்சினபாகம்.

அபிடுதம் - புளிப்பேறினகஞ்சி.

அபிடேகக்கூட்டு - சுவாமிக்கபிடேகஞ் செய்தற்குக் கூட்டுஞ்சரக்கு.

அபிடேகதிரவியங்கள் - அபிடேகஞ் செய்தற்கு வேண்டிய திரவியங்கள். அவை எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்சகவ்வியம், இரசபஞ்சாமிருதம், பலபஞ்சாமிருதம், பால், தயிர், நெய், தேன், சருக்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, இளநீர், சந்தனக்குழம்பு என்பவைகளாம்.

அபிஷேகம், அபிடேகம் } திருமஞ்சனம், முழுக்கு, ஸ்நீடம்.

அபிஷேகிக்க - அபிஷேகம்பண்ண.

அபிட்டம் - இதம், பாதாரசம்.

அபிட்டுதம் - துதிக்கப்பட்டது.

அபிதம் - இரட்சித்தல்.

அபிதர்மபிடகம் - அபிதன்மபிடகம்.

அபிதன்மபிடகம் - பௌத்தருடைய பிடகாகமங்கள் மூன்றனுள் ஒன்று.

அபிதா - அபிதை.

அபிதாநகோசம், அபிதாநசிந்தாமணி, அபிதாநமாலை } பதங்களின் அருத்தமறிவிக்கும் புத்தகம்.

அபிதாநம் - அபிதாநகோசம், சஞ்ஞை, சொல்லுதல், பெயர், பெயரிடுதல்.

அபிதாபம் - கலக்கம், மிகுவெப்பம்.

அபிதாமூலத்தொனி, அபிதாமூலம் } பெயரடியாகத்தோன்றிய குறிப்புப்பொருள்.

அபிதார்த்தம் - பதவுரை.

அபிதாவகம்-பின்னொடர்ந் தோடுதல்.

அபிதாவகம் - பின்றொடர்ந்து துரத்துதல்.

அபிதானம் - பெயர், பொருணூல், அபிதேயம்.

அபிதிற்சை - விருப்பம்.

அபிதேயம் - நாமம், பெயரிடத்தக்கது, சொல்லும் விஷயம், பொருளுள்ள சொல்.

அபிதேயரகிதம் - பயனில்சொல்.

அபிதை - செஞ்சொல், சொற்பொருள், பெயர்.

அபித்தியானம் - இச்சித்தல், தியானித்தல்.

அபித்தியை - இச்சை.

அபித்துரோகம் - குரூரம்.

அபிநந்தனர் - தீர்த்தங்கரருள் ஒருவர்.

அபிநந்தை - விருப்பம்.

அபிநயக்கூத்து - நிருத்தக் கைதழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பல வகைக் கூத்து.

அபிநயபிடகம் - பிடகசாத்திரங்கண் மூன்றுளொன்று.

அபிநயம் - அலங்கரிப்பு, உபசரணை, கூத்து, கைமெய் காட்டல், காமக் குறிப்பு.

அபிநயர் - கூத்தர்.

அபிநயித்தல் - நடித்தல், அபிநயஞ் செய்தல்.

அபிநவம் - அதிசயம், புதுமை, புதிது, புதியது.

அபிநாசசன்னி - ஒருவகைச்சன்னி.

அபிநிட்கிரமணம் - கக்குதல், புறப்படல்.

அபிநிட்பத்தி - முடிவு.

அபிநியாசசன்னிபாதசுரம் - ஒருவகைச்சன்னிபாதசுரம், அது வாதமும் பித்தமுஞ் சிலேஷ்மமுஞ் சமமாக அதிகரித்தலினுற் பிறப்பதும், பசிகீக்குதல், முகத்திற் பளபளப்பு, பேச்சில்லாமை, தூர்ப்பலம், பஞ்சேந்திரியத்தன்மை குறைவு, மயங்கிய நித்திரை, அறிவின்மை என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

அபிநியாசவாதம் - ஒருவகை வாத நோய்: அது வாதபித்த சிலேஷ்மங்களை அதிகரிக்கச் செய்துவருத்தும்.

அபிநிரியாணம் - படையெழுச்சி.

அபிநிவேசம் - ஊக்கமிகுதி, ஊக்கம், விடாமுயற்சி, அபிப்பிராயம், தொழிலிற் பிரவேசிக்கை, படிப்பு, முயற்சி.

அபிநீதி - சயிக்கை, சினேகம்.

அபிந்தியாசம் - கன்னிவகை.

அபிபவம் - கீழ்ப்படுத்தல்.

அபிபவனம் - கீழ்ப்படுதல், கீழ்ப்படுத்தல், வியாதி முதலியவற்றால் அறிவு மாறுபடுதல்.

அபிபூதம் - அபசயப்பட்டது, அறியாமையுள்ளது, கீழ்ப்படுத்தப் பட்டது, மழுங்கினது.

அபிபூதன் - அறியாமை யுள்ளவன், கீழ்ப்படுத்தப்பட்டவன்.

அபிபூதி - அவமானம், கீழ்ப்படுத்தல், தோற்கச் செய்தல்.

அபிப்பிரணயம் - தயவு, நிவிர்த்தி.

அபிப்பிரணயனம் - தயவு, பிராயச்சித்தம்.

அபிப்பிராயச்சந்தம் - அபிப்பிராயம், சம்மதம்.

அபிப்பிராயம் - உட்கருத்து, எண்ணம், நோக்கம், மறைபொருள், கருத்து.

அபிமதம் - அன்பு, சம்மதம், விருப்பம்.

அபிமந்தம் - கண்ணேறு.

அபிமந்திரணம் - அழைத்தல், ஆலோசித்தல், ஒன்றில் மந்திர உருவேற்றல், பிரதிஷ்டை.

அபிமந்திரம் - செபித்தல்.

அபிமந்திரிதம் - நால்வகைச் சுத்தியுள் ஒன்று, அது மந்திரித்தலாற் செய்யப்படுஞ் சுத்தி, மந்திரஞ் செய்யப்பட்டது.

அபிமந்திரித்தல் - ஒன்றிலே மந்திர உருவேற்றல், பிரதிஷ்டை பண்ணல்.

அபிமந்து - பஞ்சபாண்டவரு ளொருவனுகிய அருச்சுனனுக்குச் சுபத்திரை பெற்ற ஒரு மகாவீரன்.

அபிமரம் - கொலை, மறியல், யுத்தம்.

அபிமர்த்தம் - ஊர்க்கொள்ளை, தேய்த்தல், யுத்தம்.

அபிமன்
அபிமன்னியு
அபிமன்னு
} அருச்சுனன் மகன் வாளபீமன்.

அபிமாகேதலக்ஷை - ஒன்றைத் தன்னுடையதாகப் பாவிக்கும் அதிதெய்வம்.

அபிமாகம் - களிப்பு, மதிப்பு, மானம், அபிமானம்.

அபிமானகளத்திரம் - வைப்பாட்டி.

அபிமானதனங்கன் - அன்புமிக்கோன்.

அபிமானபுத்திரன் - ஸ்வீகாரபுத்திரன், வைப்பாட்டியின் பிள்ளை, வளர்ப்பு மகன்.

அபிமானம் - தன்மதிப்பு, அத்தியாசம், உள்ளக்களிப்பு, உயர்புணம், பற்று, அறிவு, ஒன்றைத் தன்னுடையதாக நினைத்தல், செருக்கு, தைசதாகங்காரம், நேசப் படுத்தல், மதப்பு, விரும்புதல், ஆணவமறைப்பு, உருக்கம், களிப்பு, கொலை, நேசம், பெருமை, கனம், கரிசனம், பட்சபாதம்.

அபிமானவிருத்தி - அகங்காரம்.

அபிமானஸ்திரீ - வைப்பாட்டி.

அபிமாஞக்கினி - அக்கினி மண்டலத்திலுள்ள அக்கினி தேவர்களாகிய அனலர் நாற்பத்தொன்பதின் மரில் தலைமை பெற்ற ஒருவன், பாவகன், பவமானன், சுசி என்பவர்கள் அவனுடைய புத்திரர்கள்.

அபிமானி - அபிமானமுடையோன், கனவான், பற்றுடையோன், கனம் பண்ணு.

அபிமானிதம் - புணர்ச்சி.

அபிமானித்தல் - அளவிடல், விரும்புதல், கனம்பண்ணல், மதித்தல், மெச்சல், ஆதரித்தல்.

அபிமானு-அறிவு, உருக்கம், பெருமை.

அபிமுகம் - நேர்முகம், முகதா, எதிர்முகம், சன்னதி.

அபிமுகர் - அபிமுகமுடையவர், பிரியமுற்றவர்.

அபிமுகன் - அபிமுகமுடையவன், எதிர் நோக்கிய முகமுடையோன், பிரியமுற்றவன், அனுகூலமானவன்.

அபிமுகி - அபிமுகமானது, எதிர் நோக்கிய முகமுடையது.

அபியவகிரீஷணம் - கல்லிப்பிடுங்கல்.

அபியாதி - சத்துரு, பகைவன்.

அபியிதகருத்தன் - எழுவாய்க்கருத்தன்.

அபியிதம் - சொல்லப்பட்டது.

அபியுக்தன் - அறிஞன்.

அபியுத்தம் - பகையெதிர்கொள்ளல்.

அபியுத்தன் - குற்றஞ் சாட்டப்பட்டவன், சாவதானமுடையோன், படித்தவன், வித்துவான்.

அபியூட்சணம் - அமைத்தல்.

அபியோகம் - தடை, தண்டனை, போர்க்கு அறை கூவுதல், முயற்சி, முறைப்பாடு, யுத்தம், போர், முறையீடு.

அபியோகி - அறைகூறுவோன், முழு முயற்சி யுடையோன், முறையீடு செய்வோன்.

அபியோத்தா - பகைவன், முறையீடு செய்பவன்.

அபிரங்கி - கருகெல்லிமரம், நீர்ப் பூலா.

அபிரட்சை - சருவலட்சணம், சர்வ லட்சணம்.

அபிரதி - சந்தோஷம், திருத்திகரம், தொழில்.

அபிரயோசனம் - பிரயோசனமற்ற.

அபிராமம் - அழகு, பிரியம், அழகானது.

அபிராமன் - அழகன், மனத்துக்கினியவன்.

அபிராமி - திருக்கடையூரிலே கோயில்கொண்ட உமா தேவியார், அழகுள்ளவள், சத்தமாதர்களுள் ஒருத்தி, சரசுவதி, பார்வதி, சரச்சுவதி.

அபிருசி - கீர்த்திப்பிரியம், மிகுவிருப்பம்.

அபிரூபன் - அறிவுடையான், காமன், சந்திரன், சிவன், திருமால், பண்டிதன்.

அபிலாசம் - விருப்பம்.

அபிலாசா - இச்சித்தல்.

அபிலாசுகன் - இச்சையுடையவன், விருப்பமுடையவன்.

அபிலாசை - விருப்பம், அபிலாஷம், அபிலாதை, அபிலாஷை.

அபிலாஷை - விருப்பம்.

அபிலாபம் - பேச்சு.

அபிலிகிதம் } எழுதுதல்.
அபிலேகனம் }

அபிவந்தனம்-வந்தனஞ் சொல்லுதல்.

அபிவாகியம் - கொண்டுபோதல், செலுத்துதல்.

அபிவாதனம் - பெரியோரை வாழ்த்துதல், கண்டவுடன் இருக்கை விட்டெழுதல், பாதந்தொழுதல் முதலிய உபசாரங்களாம்.

அபிவிக்கியாதம் - புகழ்பெற்றது, பெரும்பாலும் அறியப்பட்டது, பேர்பெற்றது.

அபிவியக்தம் - தெளிவு, வெளிப்படை.

அபிவியஞ்சகம் - தெரிவித்தல், தோற்றுவித்தல், வெளிப்படுத்தல்.

அபிவியஞ்சகர்-வெளிப்படுத்துவோர்.

அபிவியத்தம் - தெளிவு, மிகுவிளக்கம், வெளிப்படை.

அபிவியத்தீ - வெளிப்படுகை, வெளிப்படுதல்.

அபிவியத்தை - வெளிப்படுதல், வெளிப்பட்டிருப்பவன்.

அபிவியாத்தம் - பரம்புதல்.

அபிவியாத்தி - சருவவியாபகம்.

அபிவியாபகம் - ஒரு பொருண் முழுதிலும் பிறிதொருபொருள் வேறறக்கலந் தொற்றுமைப்பட்டிருப்பது.

அபிவிருத்தி - மிகப் பெருகுகை, மேன்மேலும் பெருகுகை, அபிவிர்த்தி, அபிவருத்தி, வளருதல், பெருவாழ்வு, பெருக்கம்.

அபிவிர்த்தி - அதிகப்படுதல், கூடுதல், சித்தியடைதல், பெருவாழ்வு, மிகப் பெருகுதல், வளருதல்.

அபிவெஞ்சகம் - தெரிவித்தல், தோற்றுவித்தல், வெளிப்படுத்தல்.

அபினி - ஒருமருந்து, கசகசாச்செடியின் பால், அபின்.

அபினை - அபின்ஞசத்தி.

அபின் - அபினி, ஒருமருந்து.

அபின்னதை-பேதமின்மை, முழுமை.

அபின்னநிமித்தோபாதானர் - பிரபஞ்சத்திற்கு நிமித்தகாரணமும் உபாதானகாரணமும் வேறற ஒன்றாயிருப்பவர்.

அபின்னம் - ஒற்றுமை, பேதமின்மை, முழுவிலக்கம், சிதைவின்மை, வேறுபடாதது.

அபின்ஞசத்தி - பங்கப்படாமை, மாயை, அபின்ஞசக்தி.

அபின்னை - வேறறக்கூடியிருப்பவள்.

அபீகன் - கணவன், காமுகன், சிவன், புலவன்.

அபீசணம் - அமைதல்.

அபீசு - கிரணம்.

அபீஷணம் } சாந்தம், நோயின்மை,
அபீடனம் } பட்சம்.

அபீட்சணம் - எப்போதும், கணந்தோறும், திரும்பத்திரும்ப.

அபீஷ்டதானம் } விரும்பியன கொ
அபீட்டதானம் } டுத்தல்.

அபீஷ்டம் } மிகவிருப்பம், விரும்பப்
அபீட்டம் } பட்டது, பிரியமானது.

அபீட்டவரதன் - விரும்பிய வரத்தைக்கொடுப்போன்.
அபீட்டிதம் - துதித்தல்.
அபீட்டியம் - துதிக்கத்தக்கது.
அபீட்டியம் - வைதல்.
அபீதம் - பயமின்மை.
அபீதன் - அச்சமில்லாதவன்.
அபீதி - பயமின்மை.
அபீமானம் - அபிமானம்.
அபீரன் - நிடையன்.
அபீரு - அச்சமிலான், வைரவன்.
அபீனசம் - பீனசமின்மை, அது சளியின்றி நாசி வறண்டிருத்தல்.
அபீனசரோகம் - சிலேட்டுமத்தைக் கொண்டு மூக்கின் நரம்புகளை அடைக்குமொருவகை நாசிகாரோகம். அது அதிக உபத்திரவமும், சுவாசம் விடும்போது குருகுரு என்னுமோர் சத்தமும், நாசியில் வியர்வையும் உண்டாக்கும்.
அபுக்தம் - அனுபவிக்கப்படாதது.
அபுட்பம் - மலராமை.
அபுண்ணியம் - பாவம்.
அபுதன் - மூடன்.
அபுத்தம் - உண்ணுதது, அபுக்தம்.
அபுத்தன் - அனுபவியாதவன், உண்ணுதவன், புத்தியில்லாதவன்.
அபுத்தி - அறியாமை, புத்தியின்மை.
அபுத்திபூருவம் } அறியாமல், தெரி
அபுத்திபூர்வம் } யாமல்.
அபுத்திரகன் } புத்திரனில்லாதவன்.
அபுத்திரன் }
அபுனராவிருத்தி - பிறவிநீங்கல்.
அபுனர்ச்சென்மம் -மறுபிறப்பின்மை.
அபுனர்ப்பவம் - மறுபடியும் பிறவாமை.
அபூதம் - அசுசி, இன்மை, முன் இல்லாதது.
அபூதவுவமை - இல்பொருளுவமம், முன்பில்லதனை உவமையாக்கியுரைப்பது.
அபூபம் - அபூருவம், நூதனம், அபேட்சை, ஆசை, அப்பவருக்கம்.
அபூரணகாலசம் - முதிராமற் பிறந்தது.
அபூரணம் - பூரணமாகாதது.
அபூரணி - பட்டுப்பருத்தி.
அபூருவம் - அருமை, ஆச்சரியமானது, முன்னில்லாதது, நூதனம், அபூர்வம்.
அபூர்ணகாலசம் - காலம் பூரணமாகு முன்பிறந்தது, முதிருமுன் பிறந்தது.
அபூர்ணகாலம் - முற்றுதற்குக் குறைவானகாலம்.
அபூர்ணம் - பூரணமின்மை.
அபூர்வகாலம் - அபூர்வமாயிருக்குந்தன்மை, நான் பிரமனல்லனென்னும் அஞ்ஞானத்துக்கு மூலகாரணகூடஸ்தபரம ஐக்கியங்கூறும்வேதவாக்கியத்தைக் கேட்டலாகிய சிரவணத்திற்குச் சொல்லப்படும் ஆறுவிதலிங்கங்களின் மூன்றுவதாகிய இலிங்கம். அதுகூடஸ்தனே பிரமமென அப்பியாசித்தனுபவித்த பொருளில் அதீதமாதல்.
அபூர்வம் - அருமை, நூதனம், புதுதானது.
அபூர்வவிதி - புதுவிதி.
அபூர்வன்-பரமான்மா.
அபெத்தன் - பந்தமகன்றோன்.
அபேச்சை - ஆசை.
அபேட்சன் - அபேட்சையுடையோன்.
அபேட்சி - அபேகூடி, விரும்பு.
அபேட்சிதம் - விரும்பப்பட்டது.
அபேட்சித்தல் - வேண்டிநிற்றல், விரும்பல், விரும்புதல், அபேகூடித்தல்.
அபேட்சிப்பு - விருப்பம்.
அபேட்சை - விருப்பம், ஆசை, எதிர்பார்த்திருத்தல், காரண காரியத் தொடர்பு, தருணம், அபேகூடை.
அபேதசட்டி - ஒருபொருள் தானே உடையானும் உடைப்பொருளுமாகிவரும் ஆரூம் வேற்றுமை

அபேதசித்தாந்தம் - பணிபலவாயும் பொன் ஒன்றாஞற்போல ஆன்மாவும் சிவமும் ஒன்றென்று வாதிக்கும் மாயாவாதக் கோட்பாடு.

அபேதசைவம் - ரூபம் அரூபம் ரூபாரூபம் என்னும் பேதமில்லாமல் இருக்குஞ் சிவனைச் சைவத்துக் குரிய வேடம், விபூதி, ருத்திராக்கம், பஞ்சாட்சரம், குருலிங்கவேடமுதலியவைகளைப் பொருளாகக் கொண்டு வழிபடுஞ் சைவம்.

அபேதச்சிறப்பு - பொன்னும் பணியும்போல ஒன்றினின்று தோன்றியும் அதனின் வேறாகாத தோற்றம்.

அபேதம் - பேதமின்மை, வேற்றுமையின்மை.

அபேதவாதம் - சிவமும் ஆன்மாவு மொன்றெனவாதிக்கும் வேதாந்தம்.

அபேதவாதி - சிவமும் ஆன்மாவும் ஒன்றென வாதிக்கும் வேதாந்தம், அத்துவைதி.

அபேதாத்தியவசாய சாதாரண தருமம் - இயற்கையில் வெவ்வேறாய் விளங்கினுங்கவியின் கொள்கையால் அபேதமாய்க் கிரகிக்கப்படுந் தன்மைகள்.

அபேயபானம் - குடிக்கத்தகாதது.

அபேனம் - அபின், நுரையின்மை.

அபைசுனம் - நேர்மைகோடாமை.

அபையம் - அபயம்.

அபையன்-கடுக்காய்.

அபோகண்டம் - அமைதி, அவலட்சணம், குழந்தை, பயங்கரம்.

அபோகம் - தருக்கத்தால் ஐயந்தீர்த்தல், ஞாயம் பேசுதல், போகமின்மை.

அபோகார்த்தம் - விபரீதவுரை.

அபோக்கியம் - அனுபவியாமை.

அபோசனம் - உபவாசம்.

அபோச்சியம் - அசுத்தமானது, உண்ணத்தகாதது.

அபோதசுவரூபன் - அறியப்படாத சுவரூபமுடையவன்.

அபோதம் - அக்கியானம், அறியாமை. அஞ்ஞானம்.

அபோதார்த்தம் - விபரீதப்பொருள்.

அபோத்தா - அனுபோகமில்லாதவன், உணவில்லாதவன்.

அபௌருஷேயம் - மனுஷனினின்று வராதது, ஒருவராற் செய்யப்படாதது.

அப்சரசு - தேவருலகத்திலுள்ள வேசிகள், இவர் காசுபருவருடைய மனைவியரென்றும், ஸ்நானஞ் செய்வதின் மிகப் பிரியரென்றும், சூரிய சகாயரான ஏழுகணத்தவர்களுளொரு கணத்தவரென்றும், அவர் கிருதஸ்தலை, புஞ்சிதஸ்தலை, மேனகை, சகசந்நியை, பிரமலோசை, அனுமிலோசா, கிருதாசி, விசுவாசி, ஊர்வசி, பூர்வசித்தி, திலோத்தமை, அரம்பை எனப் பன்னிருவரென்றும் முறையே சித்திரை முதலிய மாதந்தோறும் தனித்தனி சூரியனோடு போக்குவரவுடையவரென்றுஞ் சொல்லப்படுவர்; இவரன்றி ஊர்வசி,மேனகை,அரம்பை, மிசிரகேசி, அலம்புடை, விசுவாசி, கிருதாசி, பஞ்சசூடை, திலோத்தமை,பானுவதி, அபலை, இரம்மியை, எனப் பன்னிருவரென்று பேதித்துக் கூறுவாருமுளர், அப்ஸரஸ்.

அப்ஸரம் - நீர்வாழும் பிராணிகள்.

அப்சரர் - ஒருவகை வீரதேவதைகள், இவர் வபித்துதகமென்னும் நான்காம்பவனுதாரமே காசிரயபட்டணத்திலிருப்பவர், ஒரு தேவசாதியார்.

அப்சன் - சந்திரன், தன்வந்திரி.

அப்தசதம் - நூறுண்டு.

அப்தபூர்த்தி - ஆண்டுநிறைவு.

அப்தம் - ஆண்டு, வருஷம்.

அப்தா
ஹப்தா } கிழமை, வாரம்.

அப்தி - சமுத்திரம்.

அப்தரக்கணக்கு - வாரக்கணக்கு, வாரக்குறிப்பு.

அப்தோரியாமம் - யாக மிருபத்தொன்றிலொன்று.

அப்பக்கொடி - கொடிவகை.

அப்பச்சி - அப்பன், சிற்றுண்டி.

அப்ப
அப்படா } ஓரதிசயச்சொல்.

அப்படி - அவ்வாறு.

அப்பட்டம் - கலப்பற்றது.

அப்பட்டா - வட்டத்திருப்பி.

அப்பணை - ஆகாரம், உத்தரவு, பிணை, கட்டளை.

அப்பதி - கடல், வருணன்.

அப்பத்தாள் - அக்காள், அப்பாயி.

அப்பப்ப - அதியச்சொல்.

அப்பப்பா - அப்பப்ப, இரக்கம், அதிசயம் இவற்றின் குறிப்பு.

அப்பமுது - அப்பதிவேதனம்.

அப்பம் - அடை, சிற்றுண்டி, புட்டுத்திருப்புப்பூடு, வட்டத்திருப்பி.

அப்பர் - ஆண், ஆட்டின் பெயர்களுள் ஒன்று, சிவன், சைவசமயகுரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனர், தந்தையர், ஆண் குரங்கு.

அப்பல்-அணிதல், அப்புதல், மோதல், வியங்கோண்முற்று.

அப்பவருக்கம் - சிற்றுண்டிவிதம், அப்பவர்க்கம்.

அப்பவர்க்கங்கள் - அஃகுல்லி, அடை, அண்டகை, அபூபம், இலட்டுகம், கஞ்சம், கொலை, தோசை, பூரிகம், பொண்ணல், போளி, மண்டிகை, மோதகம், இலேயடை, மெல்லடை, கொலேய பூரிகை, போனகம், இடிசஃகுல்லி, பிட்டு, நுவணை, மலாவகம், ஒச்சை துவை. இவற்றுள் அஃகுல்லி யென்பது உக்காரிக்கும் சிற்றுண்டிக்கும், அடை அப்பத்திற்கும், அபூபம் வடைக்கும், கஞ்சம் ஓர் அப்பத்திற்கும் இடிமாவிற்கும், சஃகுல்லி வடைக்கும், நுவணை தினைமாவிற்கும் பேராம்.

அப்பவாணிகர் - ஒருவகைச்சாதியார், அவர் அப்பஞ்செய்து விற்பவர், பண்ணிகாரம் விற்போர்.

அப்பளக்குழவி - அப்பளம் செய்யும் குழவி.

அப்பளம் - ஒருவகைப் பணியாரம், அப்பளாம்.

அப்பளாகாரம்-உறைப்பும் உவர்ப்புங் கூடிய ஒரு வஸ்து, அப்பளக்காரம், அப்பளாக்காரம்.

அப்பழுக்கு - அசுத்தம், குற்றம்.

அப்பறத்தூணி - அம்புக்கூடு.

அப்பனூர் - சிவன்.

அப்பன் - தந்தை, தகப்பன், ஒரு பிரிய வசனம், அப்பனூர், அப்பா.

அப்பன்காளை - பெருமாள் மாடு.

அப்பா - அதிசயமுஞ் துன்பமுங் காட்டுஞ் சொல், அப்பன்.

அப்பாகம் - வாலுளுவை.

அப்பாஜி - வேலூராண்ட கிருஷ்ணதேவராயன் மந்திரி.

அப்பாடா - அதிசயத்தையும் சிரமபரிகாரத்தையும் உணர்த்தும் குறிப்பு.

அப்பாடி - அப்பாடா.

அப்பாட்டன் - மூப்பாட்டன், தந்தையின் பாட்டன்.

அப்பாத்தாள் - தந்தையைப்பெற்ற பாட்டி, அப்பாயி.

அப்பாத்தை - தமக்கை.

அப்பாயி - தகப்பனைப்பெற்ற பாட்டி, பையன், அப்பாவி.

அப்பாலைக்கப்பாலைக்கப்பாலன்-சிவன்.

அப்பாலைக்கப்பாலைக்கப்பால் - அந்த விடத்துக்கு மேலுள்ள விடத்துக்கு மேலுள்ளவிடம், அது பிரகிருதிக்கு மேலுள்ள அசுத்த மாயைக்கு மேலாக சுத்த மாயையைக் கடந்த வெளி, இதனை நாதமுங் கடந்த வெளி என்பர்.

அப்பால் - மேலும், அதன்மேல், அப் பக்கம், அப்பாலே, வெளியே.
அப்பாலி - கபடமில்லான், பாபமற்ற வன்; பேதை, அப்பாயி.
அப்பி - அக்காள், சமாட்டி, தலைவி, தமக்கை, எஜமாட்டி.
அப்பிகை - ஐப்பசி.
அப்பியங்கம் - அப்பியங்கனம், அப்ய ங்கம்.
அப்பியங்கனம் - அப்பியங்க ஸ்நானம், எண்ணெய் தேய்த்துக்கொள்தல், அப்பியஞ்சனம்.
அப்பிரியம் - வெறுப்பு, வெறுப்பான செயல்.
அப்பியங்கஸ்நானம் - எண் ணெய் முழுக்கு.
அப்பியங்கநம் - அப்பியங்கம்.
அப்பியங்கம் - உடம்பில் வாசனை பூட் டல், பிண்ணாக்கு, முழுக எண் ணெய் பூசுதல், மைதீட்டல், அப் யங்கம்.
அப்பியங்கனம் - அப்பியங்கம்.
அப்பியசனம் } அப்பியாசித்தல், பழ
அப்பியசித்தல் } குதல், பழகல்.
அப்பியசூயகன் - அழுக்காறுடை யோன்.
அப்பியஞ்சனம் - எண்ணெய், எண் ணெய் பூசுதல், மைதீட்டல், வாசனை பூட்டல்.
அப்பியந்தம் - தாமதம். [வி.
அப்பியந்தரகரணம் - அகத்துறுப்பு
அப்பியந்தரசத்தானுவித்தம் - அகச் சத்தானுவித்தம் என்னுஞ் சமாதி.
அப்பியந்தரதிருசியானுவித்தம் - அக த்திருசியானு வித்தம் என்னும் சவிகற்ப சமாதி.
அப்பியந்தரம் - உள்வீதி, உள்ளிடம், தாமதம், இடையூறு, இடையீடு.
அப்பியமித்தன் - நோயினாற் பீடிக்கப் பட்டவன்.
அப்பியம் - தேவர்க்கிடப்படும் அவிசு.
அப்பியமேகம் - ஒருவகை மே க நோகம். அதன்தன்மை மூத்திரமா னது யானையின் மலஜலத்தைப் போல அதிகவிரைவாய் ஒவ்வொரு வேளைக் கொருபடி அளவாகஇறங் குவதும் காய்ச்சினால் உவர்மண் ணைப்போல் அடியில் வண்டல் படி வதுமாம்.
அப்பியர்ச்சனம் } வழிபாடு.
அப்பியர்ச்சை }
அப்பியர்த்தனை - பிரார்த்தனை.
அப்பியர்த்தி - பிரார்த்திப்போன்.
அப்பியவகரணம் - உண்ணுதல்.
அப்பியவகருடணம் - கல்லிப்பிடுங்கு தல்.
அப்பியவகாரம் - உண்ணுதல்.
அப்பியாகதன் - சந்திக்க வந்தோன், முன்ன றியப்படாது வந்தோன், வந்து சேர்ந்தவன், முன் பழக்க முள்ள விருந்தினன்.
அப்பியாகமநம் - சந்தித்தல், வந்து சேருதல்.
அப்பியாகமம் - அடித்தல், சந்தித்தல், அயல், எழும்புதல், கொலை, சேரு தல், யுத்தம், வைராக்கியம்.
அப்பியாகமனம் - சந்தித்தல், வந்து சேருதல்.
அப்பியாகாதம் - சருவுதல்.
அப்பியாகாரம் - களவு.
அப்பியாசதன் - விருந்தாளி, அதிதி.
அப்பியாசபூமி - ஞான பாதத்துக்குச் சாதன மாகிய சுவேச்சை, வி சா ரணை, தனுமாநசி, என்னும் நிலை கள்.
அப்பியாசம் - இருமுறை கூறுதல், சமீபம், தொழில், கொள்ளுகை, பலகாலுஞ் சொல்லுகை, பிரருக் கம், பரீட்சை, பழக்கம், பயிற்சி.
அப்பியாசயோகம் - தியானம்.
அப்பியாசி - பயிற்சியுள்ளோன், பயில் பவன், அப்பியசி, அப்பியாசம் பண்ணு.
அப்பியாசித்தல் - பழகுதல்; அப்பிய சித்தல்.
அப்பியாதானம் - தூவக்கம்.

அப்பியாகதன் - முன் அறியப்படாதது வந்தேறன்.

அப்பியாமர்த்தம் - யுத்தம்.

அப்பியுகடிணம் - அமைத்தல்.

அப்பியுக்கணம் - நினைத்தல், ஈரல் வகைச் சுத்திகளில் ஒன்று. அது கவிழ்ந்த பதாகை முத்திரையையுடைய கைத்தலத்திலுல் பதார்த்தத்தினிடத்துத் தோன்றிய சித்தனது பிரகாசமானது தன்னுடைய தானத்தை விட்டு நீங்காமலிருக்கும் பொருட்டு மூடுவது, நீர் தெளித்தல்.

அப்பியுதயம் - சம்பவிப்பது, சித்தி பெறுதல், சூரியோதயம், தொடக்கம், திருவிழா, வர்த்திப்பு.

அப்பியுத்தானம - உயர்ச்சி, எழும்புதல், கீர்த்தி, சூரியோதயம்.

அப்பியுபகமம் - சமீபித்தல், சேர்க்கை, இயைபுமெய்யென்றெடுத்துக்கொள்கை, வாக்குத்தத்தம்.

அப்பியுபபத்தி - உடன்பாட்டுப் பொருத்தம், உதவிக்குப்போதல். இரங்குகை, தேற்றுகை, வாக்குத்தத்தம்.

அப்பியுபாயம் - பொறுத்தம்.

அப்பியுபாயனம் - கைக்கூலி, புகழ்ந்து கொடுக்குமுபகாரம்.

அப்பியுபேத்தியாசுசிரூடை - வேலையைச் செய்வேனென்று ஒப்புக்கொண்டபின் செய்யாதொழிதல், இது ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட பதினெட்டு வியவகார பதங்களுள் ஒன்று.

அப்பிரகற்பம் - ஒரு வைத்திய நூல், அது அப்பிரகத்தைப்பற்றிச்சொல்லுவது.

அப்பிரகச்செந்தூரம் - அப்பிரகத்தாற் செய்யப்பட்ட செந்தூரம்.

அப்பிரகத்தகடு - அப்பிரகத்தாற் செய்யப்பட்ட ஒருவகைத் தகடு.

அப்பிரகநவநீதம் - அப்பிரகஞ் சேர்த்துச் செய்யப்படும் ஒருவகை நெய்.

அப்பிரகபற்பம் - அப்பிரகத்தை பஸ்பமாக்கிச் செய்யப்படும் ஒருவகை மருந்து.

அப்பிரகபாஷாணம் - பிறவிப்பாஷாண வகை, வீளைவு பாஷாணத்தொன்று. இது இரசப்பிரீதி.

அப்பிரகம் - ஒருவகையுலோகக்கல். இது கிருஷ்ணப்பிரகம், கெந்தகாப்பிரகம், தேனப்பிரகம், பொன்னப்பிரகம, வெள்ளியப்பிரகம் எனப்படும, மைக்கா.

அப்பிரகமபதை - அசைவின்மை.

அப்பிரகம்பம் - அசைவின்மை, எதிர்செல்லவேலாமை, நடுக்கமின்மை.

அப்பிரகலோகம் - பௌத்த மதத்திலே சொல்லப்பட்ட பிரமலோகம இருபதினுள்ளே பன்னிரண்டாவது.

அப்பிரகாசத்துவம் - பிரகாசமில்லாததன்மை.

அப்பிரகாசம் - இருள், பிரகாசமின்மை, மறைவிலிருப்பது, விளக்கமின்மை.

அப்பிரகிருட்டம் - காக்கை.

அப்பிரசம் - மலடு.

அப்பிரசன் - சந்ததியில்லாதவன்.

அப்பிரசன்னம் - கலங்கல், திருத்தி பெற்றிராமை, பிரியவீனமா யிருத்தல்.

அப்பிரசாதம் - தயவின்மை.

அப்பிரசாதை - மலடி.

அப்பிரசித்தசம்பந்தம் - பக்கப்போலி நான்கனுள் ஒன்று. அது தனக்கு மாறுக நின்றவன் ஆராய்ந்து துணிந்த பொருளைத் தானும் அவனுக்குப் பொருந்தச் சாதித்துக் கொடுத்தல்.

அப்பிரசித்தம் - பிரபலமின்மை, விளக்கமின்மை, வெளிப்படையாகாதது, பிரசித்தமின்மை, அறியப்படாதது.

அப்பிரசித்தர் - பிரசித்தமாயறியப்படாதவர்.

அப்பிரசித்தவிசேடணம் - பக்கப் போலி நான்கனுள் ஒன்று; அது தத்தமக்கு மாத்திரஞ் சாத்தியா சாத்தியமாயுள்ள துணிவைத் தாம றியாதிருத்தல்.

அப்பிரசித்திவிசேடியம் - பக்கப் போலி நான்கனுள் ஒன்று. அது தம்முடைய எதிரிக்குத் தாங்கூறுந் தன்மை தெரியாதிருத்தல்.

அப்பிரசித்தவுபயம், அப்பிரசித்தோப யம் - பக்கப்போலி நான்கனுள் ஒன்று. அது தனக்கு மாறுபட் டோர்க்குள்ள தன்மியுஞ்சாதனதன் மமுமாகிய அவ்விரண்டு மற்றோ ரியையாமையால் அவை தெரியா திருத்தல்.

அப்பிரசை - சந்ததியில்லாதவள்.

அப்பிரதக்கிணம் } இடஞ்சாரியாய்ச்
அப்பிரதட்சிணம் } சுற்றுகை, இடம் வருகை.

அப்பிரதாகம் - மூக்கியமின்மை, விள க்க மின்மை.

அப்பிரதாபம் - ஒளிமை, மங்கல்.

அப்பிரதானம் - கீழானநிலை, முக்கிய மற்றது, அற்பம்.

அப்பிரதானி - பிரதானமற்றவன்.

அப்பிரதானிகம் - கொடாமை.

அப்பிரதிகரம் - ஒரு நரகம்.

அப்பிரதிகரன் - பழிவாங்காதவன், வன்மஞ்சாதியாதவன்.

அப்பிரதிகாரம் - பதிலின்மை.

அப்பிரதிட்டம் - ஒரு நரகம், இதிற் கொடிய பாவிகள் யந்திரங்களில் இடப்பட்டு அரைக்கப்படுவார்கள்.

அப்பிரதிட்டிதை - சேனைக்கூட்டத் தாராகிய மூவரிடத்துச் சபை, நிலையான இடமில்லாமல் சஞ்சரிக் கின்ற ஆணியர், வணிகக்கூட் டத்தார்.

அப்பிரதிபத்தி - அசட்டை, தவறு, நிதானிப்பின்மை.

அப்பிரதிபா } தடுமாறுதல், திகைத்
அப்பிரதிபை } தல், தோற்றல், விடைசொல்லத் தெரியாது வே றொரு கருத்துடையான் போன்று இருத்தலாகிய தோல்வித்தானம்.

அப்பிரதிரதன் - யுத்தவீரன்.

அப்பிரதிரூபகதை - எதிரில்லா வாக்கு, நிகரில்லா வாக்கு, புலப்படா தது.

அப்பிரதிரூபம் - நிகரில்லாதது.

அப்பிரத்தியட்சம் - இந்திரியங்களுக் கு விடயமாகாதது.

அப்பிரத்தியட்சன் - பிரத்தியட்சப் படாதவன்.

அப்பிரத்தியயம் - சந்தேகம்.

அப்பிரத்தியவாயம் - குறைதலின்மை.

அப்பிரஸ்துதப் பிரபஞ்சாலங்காரம் - புனைவிலி, புகழ்ச்சியணி, அது அவர்ணியத்தை வர்ணிக்க அத னது சமபந்தத்தால் வர்ணியந் தோன்றுதல்.

அப்பிரகுதுதம் - சம்பந்தப்படாதது, கொடாங்காது, புகழப்படாதது, வழக்கமில்லாதது, பொருத்தமில் லாதது, எடுத்துக்கொண்ட விஷய மல்லாதது, பழக்கமில்லாதது.

அப்பிரகாகம - அயிராவதயானை.

அப்பிரபிசாசகம் } இராகு.
அப்பிரபிசாசம் }

அப்பிரபு - வல்லமையில்லாதவன்.

அப்பிரபுட்பம் - நீர்.

அப்பிரமண்ணியம் - உதவிவேண்டிக் கூறும் குறிப்புமொழி.

அப்பிரமாணம் - அளக்கப்படாதது, எல்லைக்குட்படாதது, பிரமாண மின்மை, பொய்ச்சத்தியம்.

அப்பிரமாணன் - கடவுள்.

அப்பிரமாணுபலோகம் - பௌத்த மதத்தில் சொல்லப்பட்ட பிரம லோகம் இருபதனுள் ஐந்தாவது.

அப்பிரமாணிக்கம் - ஒவ்வாநியாயம், பிரமாணிக்கத்தகாதது, பொய், ஆதாரமற்றது, அயோக்கியத் தனம்.

அப்பிரமாணிக்கன் - பொய்யன்.
அப்பிரமாதங்கம் - இந்திரன் யானை.
அப்பிரமாதம் - சுறுசுறுப்பு.
அப்பிரமாலை - மேகசமூகம், மேக நிரை.
அப்பிரமு - ஐராவத யானையின் பெண் யானை, அப்பிரமை.
அப்பிரமுப்பிரியம்-அயிராவத யானை.
அப்பிரமேயம் - அளவிடப்படாதது, ஒரெண், அது அசமகாபூரி, அளக்கமுடியாதது.
அப்பிரமேயன் - அறியப்படாதவன், சிவன், கடவுள்.
அப்பிரணம் - பொய்யறிவு, கீழ்த்திசை யானை.
அப்பிரம - ஆகாசம், தேவலோகம், பொன், மேகம.
அப்பிரமலிகம் - மிக உயர்ந்தது, மேகத்தைத் தொடுவது, வாயு.
அப்பிரயோசநம் / அப்பிரயோசனம் / அப்பிரயோசிகம } பிரயோசனமின்மை, பயனின்மை.
அப்பிரயோச்சியம் - ஏவப்படாதது, பிரயோகிக்கப்படாதது.
அப்பிரவர்த்தகம் - செயலின்மை, செய்யவேலாமை.
அப்பிரவர்த்தனம் - ஏற்படாமை, சம்பவியாமை, செய்யாதொழிதல், துராசாரம், தொடங்காமை, முன்போகாமை.
அப்பிரவிருத்தன் - பிரவிருத்தியற்றவன்.
அப்பிரவிருத்தி - செயலொழிந்திருக்கை, முயற்சியின்மை.
அப்பிராகிருதசரீரம் - பிரகிருதி சம்பந்தமில்லாத சரீரம், திவ்யதேகம.
அப்பிராகிருதம் - பிரதானமானது, மேலானது, பிரகிருதி சம்பந்தமற்றது.
அப்பிராஞ்ஞதை - அறிவின்மை, கற்றுக் கொள்ளாமை.
அப்பிராஞ்ஞன் - அறிவில்லாதவன், கற்றுக்கொள்ளாதவன்.
அப்பிராணம் - மரணம்.
அப்பிராணன் - உயிரில்லாப்பொருள்.
அப்பிராணி - உயிரில்லாதது, அப்பாவி, ஏழை, வஞ்சகமற்றவன், பேதை, சக்தியற்றவன்.
அப்பிராத்தகாலம் - தர்க்க நூலில் சொல்லப்பட்ட நிக்கிரகத்தானங்களுள் ஒன்று. அது பிரதிஞ்ஞை முதலிய ஐந்து அவயவங்களையும் முறைபிறழப் பிரயோகித்தல், பிரார்த்தகாலமல்லாதது.
அப்பிராத்தம் - அடையாதது, வராதது, விதிப்படி வராதது.
அப்பிராந்தி - குழப்பமின்மை, மெய்யுணர்வு.
அப்பிராப்தி - அடையாமை.
அப்பிராப்பியம் - அடையத்தகாதது, அடைதற்கரியது.
அப்பிராமணன் - பிராமணனல்லாதவன், பிராமணன் போன்றும் பிராமணன் அல்லாதவன், போலிப் பிராமணன்.
அப்பிராமாணிக்கம் - அப்பிரமாணிக்கம்.
அப்பிராமாணியம் - பிரமாணத்தாலே நிச்சயம்பண்ணப்படாதது, பிரமாண மாகாமை.
அப்பிரியதரு - ஓதியமரம்.
அப்பிரியம் - மேகசம்பந்தமானது, வெறுப்பு.
அப்பிரியன் - சத்துரு.
அப்பிரீதி - சத்துருத்தனம், பகைமை, வெறுப்பு.
அப்பிருதக்கு - உடனாக, கூட்டமாக, வெவ்வேறன்றி.
அப்பிரோகசாதனம் - தன்னேயவு வோனில்லாத கருவி, அது பறவைக்குச் சிறையுங்காலும் போல்வது.
அப்பீரகம் - புளிமா.
அப்பு - அப்பென்னேவல், ஒரு முகூர்த்தம், அம்பு, கடல், தந்தை, நீர், பூராடநாள், பாதிரிமரம், துடை,

அப்பன், கடன், வீட்டு வேலைக் காரன், சார்த்து, எற்று, களவு.

அப்புக்கட்டு - அம்புகளின் கட்டு.

அப்புக்காய் - ஒருவித்தக்காய்.

அப்புதத்துவம் - மூப்பத்தாறு தத்து வங்களுளொன்று.

அப்புதல் - அறைதல், ஒற்றல், சும்மு தல், கொட்டுதல், களவல், சாத் துதல், பூசுதல், ஒற்றுதல், தாக்கு தல், கவ்வுதல், வாயில் நிணித்தல், சாற்றுதல்.

அப்புது - யானைப்பாகன் அதட்டு மோசை.

அப்புத்திரட்டி - கட்டுக்கொடி.

அப்புபூதவாதிமதம - அப்பு என்னும் பூதமே பிரமம் என்பவனுடைய மதம்.

அப்புருவம் - உப்பு, நகசாரம்.

அப்புலிங்கத்தலம் - திருவானைக்கா என்னுஞ் சிவத்தலம். இத்தலத் தில் இருக்கிற கோயிலிலே மூலத் தானத்திலே சலமே லிங்காகார மாகத் திரண்டிருப்பதால் அப்பா கார சிவலிங்கமென்பர்.

அப்புலிங்கம் - பஞ்சலிங்கத்துள் திரு வானைக்காவிலுள்ளது.

அப்புவின்கூறு-புறநிலை, கருவி வகை.

அப்புவின்கோபம் - சேத்துமம்.

அப்புளண்டம் - தகரை.

அப்புறப்படல் - குறித்த ஓரிடத்திற் கப்பாற்போதல்.

அப்புறப்படுதல் - இடமாற்றுதல்.

அப்புறப்படுத்தல் - இடமாற்றுதல்.

அப்புறப்படுத்துதல் - வெளியேற்று தல்.

அப்புறம் - அந்தப்பக்கம், பிறகு, வெளிப்பக்கம், அதன்பின், பின்பு, அப்பாலே.

அப்புறத்தூணி - சரகாண்ட பாஷா ணம்.

அப்பூதி
அப்பூதியடிகள் } அறுபத்திமூன்று நாயன்மாருள் ஒருவர்.

அப்பை - அப்பைக்கொவ்வை, கற் கொவ்வை, கொன்றை, சரக் கொன்றை, மீன்வகை.

அப்பைக்காய் - கொவ்வங்காய்.

அப்பைக்கொவ்வை - அப்பைக் கோவை.

அப்பைக்கோவை - ஒருவகைக் கோவைக்கொடி.

அப்போ
அப்போழ்து
அப்பொழுது
அப்பொழுதை
அப்போது } அக்காலத்தில்.

அப்போளகலர் - திரிசுதுவின் நிலை மைச் சீடர் பன்னிருவருள் ஒரு வன்.

அப்போதைக்கப்போது - அவ்வக்கா லத்தில், ஒன்று வேண்டியதாகக் கண்டவுடன், உடனுக்குடனே.

அப்யசித்தல் - அப்பியசித்தல்.

அப்ரகம் - ஒருவகை லோகக்கல், அப் பிரகம், பூவிந்துரதம்.

அப்ரத்துதபிரபஞ்சாலங்காரம் - புனை வினி புகழ்ச்சியணி.

அப்ரத்துதம் - தொடங்காமை, புனை யாமை, வழக்கின்மை, அப்ரசுத தம்.

அப்ரமாணம் - அப்பிரமாணம்.

அப்ரீதி - அப்பிரீதி.

அப்வாபு - சில்லறை பாபத்துகள்.

அமக்களம் - அமர்க்களம்.

அமங்கலம் - மங்கலமற்றது, அசுபம்.

அமங்கலி
அமங்கலை } கைம்மை, கைந், கலங் கழி, மடந்தை, தாபத நிலையவள், கைம் பெண், விதவை.

அமசடக்கம் - அடக்கம், அமைவடக் கம், மறைப்பு.

அமசம் - காலம், நோய், மதிகேடு.

அமச்சன் - வியாழம், மந்திரி, வியா ழன், அமைச்சன்.

அமச்சியல் - குறளின் பொருட் பாலி னுள் ஓரியல், மந்திரித்துவம்.

அமச்சு - மந்திரி, மந்திரித்தன்மை.

அமஞ்சி - அமிஞ்சி, கூலிகொடாமல் வாங்கும் வேலை, வீண், கூலியில்லாமல் வேலை செய்பவன்.

அமஞ்சியாள் - கூலியில்லாமல் வேலை செய்பவன், நெருக்கிடைப்பட்ட வேலைக்காரன்.

அமடு - சிக்குதல், பொல்லாங்கு, மடிப்பு, சிக்குகை.

அமடுபண்ணல் - ஆசைக்காட்டித் தீமைசெய்தல்.

அமட்டு } எய்ப்பு, பயமுறுத்துகை, அதட்டு, சிக்குப்படுத்து, உருட்டு. புரட்டு, மேற்கொள், அமட்டுகை.

அமட்டுதல் - அதட்டிப் பயமுறுத்துதல், மயக்குதல், உருட்டுதல், சிக்குப்படுத்தல், புரட்டுதல், மேற்கொள்ளல், சிக்கவைத்தல், புரளுதல்.

அமணக்கூத்து - நிர்வாணமாய் ஆடுங் கூத்து, கட்டுக்கடங்காச் செயல்.

அமணம் - அம்மணம், இருபதினெயிரம் பாக்கு, அவணம், சமணமதம், ஆடையின்மை, அமண்.

அமணர் - சமணர், மதிகேடர்.

அமணன்பாழி - சைனலயம்.

அமண் - அரையில் ஆடையில்லாமை, வரிக்கூத்துவகை, சமணர், சமண சமயம், சமண்மதம்.

அமண்டம் - ஆமணக்கஞ்செடி.

அமண்டலம் - ஆமணக்கு.

அமதம் - அறியப்படாதது, காலம், சம்மதமின்மை, நோய், மரணம்.

அமதி - மதியின்மை, கபடஞ் செய்வோன், காலம், சந்திரன்.

அமத்தல் - அமர்த்தல்.

அமத்திரம் - பாத்திரம், வெண்கலம்.

அமநசன் - மனமுடையனல்லாதவன்.

அமநஸ்கம் - இராசயோகத்தி னொரு விதம், அது மனமிறந்து நிற்பது, கவனமில்லாதது, புத்தியில்லாதது, மனத்தைக்கடந்தது, மனத்தையடக்கியாளுந் திறமில்லாதது.

அமந்தம் - உக்கிரமானது, ஒருமரம், காரிய சாமர்த்தியம், சாக்கிரதை, மந்தமில்லாமை.

அமந்தலம் - செங்கத்தரிச்செடி, செங்கத்தாரி.

அமந்தி - ஒருமரம், நாட்டு வாதுமை.

அமம் - நேரம்.

அமயம் - காலம், சமயம்.

அமர - இருக்கவென்னும் பொருள் படும் ஒரு வினையெச்சம், ஒருவமை யுருபு.

அமரகண்டம் - குதிரை வலி, நருமதையாறு பாயும் ஓரிடம்.

அமரகம் - போர்க்களம்.

அமரகோசம் - அமரகோசம், அமரம். இது விக்கிரமாதித்தியனுடைய சபையிற் சிறந்த ஒன்பது கவிகளிலொருவனுன அமரசிம்மன் செய்த ஒரு நிகண்டு.

அமரக்காரன்-ஆயிரங் காலாள்களின் தலைவன், போர் வீரன்.

அமரசயம் - அமராசயம், இரைக்குடல்.

அமரசிங் - இரசபுத்ர வீரனுகிய பிரதாப சிங்கின் குமாரன்.

அமரசிங்கம் - அமரசிங்கர் செய்த ஒரு நிகண்டு, அமரகோசம்.

அமரசிங்கர் - அமரகோசஞ் செய்தவர். இவர் சைனசமயத்தர், விக்கிரமாதித்தனுடைய சபையிலிருந்த ஒன்பது வித்துவான்களுளொருவர்.

அமரசிலேக்கந்தகம் } வைப்புப்
அமரசிலேக்கெந்தகம் } பாஷாண
அமரசிலேக்கெந்தம் } வகை, ஒரு
பாஷாணம்

அமராதை - அழிவின்மை.

அமாத்துவம் - அழியாமை.

அமரபக்கம்-அமரபட்சம், அமரபக்கம்.

அமரபட்சம் - பதினேந்து பூரணைக் குப்பின் சந்திரன் நிற்கும் பக்கம்.

அமரபதி } இந்திரன்.
அமரபர்த்தா }

அமரமாதர் - தெய்வமாதர்.
அமரமுனிவன் - தேவரிஷி.
அமரம் - தோணியின் பின்பக்கம், படகைத் திருப்புமிடம், அமரகோசம், ஒரு சம்ஸ்கிருத நிகண்டு, அபரம், அழிவின்மை, ஆயிரங்காலாட்களை ஆளுகை, இரசம், ஒரு நோய், ஒருவிதக் கண்ணேய், கிரந்த நிகண்டு, பித்தம், சுவர்க்திரிகம், தோணியின் பிற்பக்கம், வெண்மை.
அமரயோனி - வித்தியாதராதிபர்.
அமரர் - பகைவர், மானேர், தேவர்.
அமரர்கோன் - இந்திரன்.
அமரர்நாதன் - இந்திரன்.
அமரர்பதி - இந்திரன், கடவுள், தேவலோகம்.
அமரர்மாது - அரம்பை, அரமகள், சூர்மகள், அணங்கு.
அமரல் - பொலிவு.
அமரலோகம் - தேவலோகம்.
அமரன் - அமரசிங்கன் எனற ஆசிரியன், தேவன்.
அமராங்கனை - தேவப்பெண்.
அமராசயம் - கருப்பை.
அமராடல் - சண்டைசெய்தல்.
அமராத்திரி - மகாமேரு.
அமராபகை - ஆகாயகங்கை.
அமராபதம் - தேவருலகு.
அமராபதி - இந்திரன் நகர், அமராவதி, அமரை.
அமராபரணன் - பயமற்றவீரன்.
அமரார் - பகைவர்.
அமராவதி - இந்திரலோகம், தேவலோகம், அமராபதி, சாந்தகுணத்தினள்.
அமராவதியோன் - தேவேந்திரன்.
அமரி - அமிழ்து, கற்றாழை, சிறுநீர், இந்திராணுலகு, தெய்வப்பெண், தூர்க்கை, விடம், அமிர்தம், விஷம்.
அமரிக்கை - அடக்கம், ஆறுதல், அமைதி, அமைவு.
அமரிஷணம் - கோபம்.
அமரிதம் - கடுக்காய்.
அமரிய - பொருதவெனப் பொருள் படும் ஒரு பெயரெச்சம்.
அமரியம் - குருந்து, சண்பகப்பூ.
அமரியற்றல் - அமராடல்.
அமரியுப்பு - ஒருப்பு, சிறுநீரிலிருந்தெடுக்குமுப்பு.
அமரியோன் - போர்வீரன்.
அமருடணம் - கோபமுள்ளது.
அமருதல் - அடங்குதல், அமர்தல்.
அமருலகம் } தேவலோகம், சுவர்க்
அமருலது } கம்.
அமரேச - பிரதிடடாகலேயில் அப்புதத்துவத்திலுள்ள எட்டுப் புவனங்களுளொன்று.
அமரேசன் - இந்திரன், குய்யகாட்டகரிலொருவன், சிவலோகத்திலே உத்தர திசையோலக்கஞ் சேவிக்கும் முக்கியதேவர்களிலொருவன், பிருகஸ்பதியாகிய தேவகுரு, வியாழன்.
அமரேசுவரம் - அமரேசுபுவனம். அது அப்புதத்துவத்திலிருக்கும் எட்டுப் புவனங்களுளொன்று.
அமரேசுவரன் - இந்திரன்.
அமரேந்திரமுனி - சைன முனிவருள் ஒருவன்.
அமரை - அறுகு, இந்திராணகர், கருப்பை, கொப்பூழ்க்கொடி, வீடு, அமராபதி, அமராவதி.
அமரோசை-தக்கோசை, தக்குடுசுருதி
அமரோர் - தேவர், அமரர்.
அமர் - விருப்பம், கோட்டை மதில், யுத்தம், போர்க்களம், உக்கிரம், அமைதி, அமரென்னேவல், போர், மதில், மூர்க்கம், வெறி, திரேதாயுகத்தில் விஷ்ணுவின் பெயர், அமரு, அமை, அடங்கு, களி, பொருந்து, கிடை.
அமர்கொள்ளுதல் - மூர்க்கவெறியடைதல்.
அமர்க்களம் - ஆரவாரம், பம்பல், போர்க்களம்.

அமர்தல் - அமைதியாதல், இளைப்பாறுதல், பொருந்துதல், பொலிதல், அணைதல், ஏற்றுநாதல், திட்டமாதல், விரும்புதல், ஒப்பாதல், செய்தல், நெருங்குதல், அடங்குதல், அமைதல், இருத்தல், நெருங்கல், படிதல், பெருமை, மிகுதி, பொருந்தல், பொலிவு மிகுதி, வாய்த்தல், விரும்பல்.

அமர்த்தல் - அமர்த்திக்கை, அடக்கிக்கொள்ளுதல், அமரச்செய்தல், பொருதல், மாறுபடுதல், எற்படுத்தல்.

அமர்த்தன் - சாமர்த்தியமில்லாதவன்.

அமர்த்திக்கை - வீண் பெருமை பாராட்டுகை.

அமர்த்து - அடக்கு, எற்படுத்து, ஆயத்தம் பண்ணு.

அமர்த்துதல் - அமைதியாயிருக்கச் செய்தல், அடக்குதல், திட்டப்படுத்துதல், நிலைநிறுத்துதல், பெருமிதப்பட நடித்தல்.

அமர்த்தியர் - தேவர்.

அமர்நீதியர் - அறுபத்துமூன்று நாயன்மாருளொருவர்.

அமர்ந்து - பொருந்தி.

அமர்வித்தல் - தங்கச்செய்தல்.

அமர்வு - இருப்பிடம்.

அமலகமலம்-கோசலம், மலினமற்ற நீர்

அமலகம் - நெல்லி, ஆமலகம்.

அமலசாந்தம் - சுண்ணாம்பு, பசுவின் சாணம்.

அமலம் - மாசற்றது, அழகு, அழுக்கின்மை, அறிவு, புனிதம், மரமஞ்சள், வெண்மை, தூய்மை.

அமலர் - சிவன், மலமற்றவர்.

அமலல் - சேர்தல், நெருங்கல், பொருந்தல்.

அமலவாசகம் - பரிசுத்தவாசகம்.

அமலவாதனை - சுத்தவாதனை.

அமலனிட்டமணி - உருத்திராக்கம்.

அமலன் - அருகன், கடவுள், சிவன், மலமிலி, விட்டுணு.

அமலன்பாதியாளன் - விஷ்ணு.

அமலா - நெல்லிமுள்ளி.

அமலுதல் - அமலல்.

அமலை - பாட்டு, சொரிவு, ஆரவாரம், தேவி, உமையாள், சுத்தை, காளி, திரட்சி, இலக்குமி, ஒலி, கடுக்காய், கட்டி, கூத்து, கொப்பூழ்க் கொடி, சோறு, சோற்றுத்திரளை, பார்வதி, மலமில்லாதவள், மிகுதி.

அமலைதாரம் - காகலிநிஷாதம்.

அமல் - அமுல், செறிவு, மிகுதி, விசாரணை, நிறைவு, அதிகாரம்.

அமல்தல் - நெருங்குதல்.

அமல்தார் - அரசிறை, தண்டல் செய்யும் உத்தியோகஸ்தன்.

அமவாசி - அமாவாசி.

அமளி - ஆரவாரம், பள்ளியறை, படுக்கை, மிகுதி, மெத்தை.

அமளிகுமளி - பேராரவாரம்.

அமளிதுமளி - பேராரவாரம்.

அமளிபண்ணல் - போராடல்.

அமளை - கடுரோகிணி, கடுரோகணி, மரவகை.

அமறல்-மிகுதி, நெருங்கல், பொலிதல்.

அமனி - தெரு.

அமனேயோகம் - கவனமின்மை.

அமன் - பன்னிருசூரியர்களுளொருவனான அரியமன்.

அமன்ற - நெருங்கின.

அமாசயம் - அன்னந்தண்ணீர், தங்குமிடம்.

அமாதானம் - அடக்கம், சேமம்.

அமாத்தியர் - தந்திரிகள், மந்திரிகள்.

அமாத்தியன் - ஆலோசனை சொல்லுவோன், மந்திரி, அமாத்யன்.

அமாநசியம் - உபாதி.

அமாநம் - அளவின்மை.

அமாநீதை-நெருக்கின்மை, மரியாதை.

அமாமசி - அமாவாசி.

அமார் - கப்பற்கயிறு, அம்மார்.

அமார்க்கம் - துன்மார்க்கம், நாயுருவி, மார்க்கவிரோதம், சமயநெறியல்லாதது, வேதப்புறம்பு.

அமார்க்கயிறு - கப்பற்கயிறு.

அமார்ச்சுனம் - உரிஞ்சுப்படாதிருக்கை, சுத்தியின்மை, தட்டாதிருக்கை.

அமாவசி, அமாவாசி, அமாவாசியை, அமாவாசை } இரவிமதி யோகம், சூரியனுஞ் சந்திரனுங் கூடுநாள். அது கிருட்டிணபக்கத்திலே பதினைந்தாந் திதி, குரு, அமை.

அமானத்து - பொக்கிஷத்தில் விவரம் குறிக்காமல் வைத்த பணம், சேமிப்பு, ஒப்படைத்த பொருள்.

அமானம் - அளவின்மை.

அமானவன் - விரசைக்கரையிலுள்ள கடவுள்.

அமானனம் - அவசங்கை.

அமானி-இராசவிசாரணைக் குள்ளான நிலம், புளியாரைப்பூண்டு, பொது, பொறுப்பு, ஒரையறுக்கப் படாதது.

அமானிதை - மரியாதை.

அமிசகம்-கௌரவமான நாள், பங்கு.

அமிசகன் - பங்காளி.

அமிசடக்கம் - அமைதி.

அமிசம் - பாகம், அன்னப்புள், அம்சம், அதிர்ஷ்டம், செல்வாக்கு, தோள், நிதார்த்தம், பங்கு, பாகை, பின்னம், மேல்வாயிலக்கம், விவாகம்.

அமிசனம் - பிரிக்தல்.

அமிசாமம், அமிசாமியம் } பிரமாவின் மானதவாயி.

அமிசு - அணு, சூரியன், பிரபை.

அமிசுகம் - இலை, நல்லாடை.

அமிசை - தலையெழுத்து, விதி.

அமிச்சை - ஞானம்.

அமிஞ்சி - அமஞ்சி.

அமிடம் - தசை.

அமிதம் - அளவின்மை, அளவில்லாதது.

அமிதவாதி - மிதமிஞ்சின கொள்கையுடையவன்.

அமிதாவல் - ஆசைப்பெருக்கம்.

அமித்திரர் - பகைவர், அமித்ரர்.

அமித்திரன், அமித்துரு } சத்துரு, பகைவன்.

அமித்தை - பொய்யல்லாதது.

அமிரம்-மிளகு.

அமிருதக்கவிராயன் - பதினேழாம் நூற்றாண்டில் இராமநாதபுரியின் அரசனாகிய இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவான், இவன் அவ்வரசன்மேல் ஒருகோவை பாடினான்.

அமிருதசாகரன் - தமிழிலோ நிலக்கணச் செய்யுள்செய்க சம்ஸ்கிருதத்திலுந் தமிழிலுஞ்சிறந்த ஒருசமணவித்துவான்.

அமிருதம் - அமிர்தம், அமுதம், அமுர்தம், தேவருணவு, இனிமை, நீர், பசும பால், அமிர்து.

அமிருதை - திப்பிலி, துளசி, மது.

அமிர்தகலசம் - ஸ்தன்னியம்.

அமிர்தகலை - சந்திரகலை.

அமிர்தகிரணன் - சந்திரன்.

அமிர்தகொடி - சீந்திற்கொடி, அமிர்தக்கொடி.

அமிர்தக்குமரி - ஒருவகைத் தைலம், அது சீந்திற்கொடி, கற்றுழை மூதலியவற்றில் வடிக்கப்படுவது.

அமிர்தக்குழல்-மலைகரப்பணிகாரம்.

அமிர்தங்கலங்கல் - மூலிகலங்கல்.

அமிர்தசஞ்சீவகி, அமிர்தசஞ்சீவி } உயிர்தருமருந்து, குற்றுயிர்தருமருந்து.

அமிர்தசாகரர் - அமிதசாகரர்.

அமிர்தசாரம் - கற்கண்டு.

அமிர்தசோதரம் - குதிரை.

அமிர்தசுதாங்கிணி - நிலவு.

அமிர்தத்தானம்-தேவையான வழியாகச் செல்லும் புண்ணியமுள்ளார் பிரமாவின் தின முடிவுவரையும் இன்பத்துடன் வாழ்தற்கேதுவாய மோட்சமென உபசரிக்கப்படுவதாயுள்ள ஓரிடம்.

அமிர்தகாரணை - யோகிகளின் மூளையிலிருந்து வடிவதாக சொல்லப்படுவது.

அமிர்தநாதம் - யசுர்வேத உபநிடதங்களுளொன்று.

அமிர்தபதி - ஒருகாவியம்.

அமிர்தபலம் - நெல்லிக்காய்.

அமிர்தபிந்து - உபநிடத முப்பத்திரண்டிலொன்று.

அமிர்தப் பால் - தாய்ப்பால்.

அமிர்தமூடியவிடம் } மாச்சுக்கு.
அமிர்தமூடுவிடம் }

அமிர்தம் - அழிவின்மை, தேவருணவு, இனிமை, நீர், பசுவின் பால், யாசியாமற் கிடைக்கும் பிட்சை, மோட்சம், அமுதம், முக்தி, அமிழ்தம், இறவாமை, இனிப்பு, உணர்வு, சோறு, தேவவுண், நஞ்சுநீர், நெய், பாக்கியம், பால், பொன், முத்தி, மூர்ச்சை தீர்த்து உயிர்தருமருந்து, யாகசேடம், வெண்ணெய்.

அமிர்தயோகம் - சுபகாரியங்களுக்கு உபயோகமானவாரமும் நட்சத்திரமுங்கூடிய ஒருகூட்டம்.

அமிர்தர் - தேவர்.

அமிர்தவடை - பணிகாரவகை.

அமிர்தவல்லி - சீந்திற்கொடி.

அமிர்தவிந்து - யசுர்வேத உபநிடதங்களுளொன்று, ஆகாசத்தின் அடையாளம்.

அமிர்தன் - கடவுள், தன்வந்திரி என்னும் ஒரு தேவனைத்தியன், மரணமற்றவன்.

அமிர்தாகரணன் - கருடன்.

அமிர்தாசனர் - அமிர்தபோசனமுடையவர், தேவர்.

அமிர்தாசனன் - அமுதபோசனமுடையவன், தேவன்.

அமிர்தாமலகத்தைலம் - ஒருவகைத்தைலம், அது சீந்திற்கொடி, நெல்லிக்கனி முதலியவற்றிலிருந்து வடித்தெடுப்பது.

அமிர்தாமிர்தை - பஞ்சசத்தி கலைகளுளொன்று.

அமிர்தாரிவளை - சங்கநிதி.

அமிர்தாவல் - ஆசைப்பெருக்கம்.

அமிர்தீகரணம் - பூசை முதலியவற்றிற்குபயோகமாகத் தன்னுடம்பை அல்லதொரு பொருளை மந்திரத்திலுல் தகித்ததாகப்பாவித்தும் பின் நிஷ்களங்கமாய்த் தோன்றியதாகப்பாவித்தும் அமிர்தமய மானதாகக்கற்பித்துக்கொள்ளுதல்.

அமிர்து - அன்னம், சோறு, திரவியம், பால், பாற்கடலிற் கடைந்தெடுக்கப்பட்ட தென்னுந் தேவருணவு, தேவாமிர்தம்.

அமிர்தூட்டல்-பாலூட்டல்.

அமிர்தை - அழிவின்மை, கள், சீந்தில், திப்பிலி, துளசி, பார்ப்பதி, அமிர்தகடுகாய், இராசசஞ்சனம், நெல்லி, வெள்ளைப்பூண்டு, பார்வதி.

அமிர்த்தரங்கிணி - சந்திரகிரணம்.

அமில் - அமல்.

அமில்தார் - ஓரதிகாரி, அமல்தார்.

அமிழல் - அமிழ்தல்.

அமிழும் - ஆழுமெனப் பொருள்படஅமிழென்னும் வினைப்பகுதி யடியாற்பிறந்த ஒரெதிர்காலப் பெயரெச்சம்.

அமிழ் - ஆழ்.

அமிழ்தம் - அமிர்தம், அமுதம், இனிமை, மங்கலச் சொல்லிலொன்று.

அமிழ்தல் - அமிழ்ந்தல், தாழ்தல், ஆழ்தல்.

அமிழ்து - அமிழ்தம், அமரி, அமிந்தம், அமுதம், அமுது, சுதை, சாவாமருந்து, இனிமை, அமிர்தம், பால்.

அமிழ்த்தல் - அழுத்தல், தாழ்த்தல்.

அமிழ்த்து - ஆழ்த்து.

அமிழ்த்துதல் - ஆழ்த்துதல், அமுக்குதல், மறைத்தல்.

அமிழ்ந்தல் - அழுந்தல், தாழ்தல்.

அமிழ்ந்து - ஆழு, அமிழ்.

அமிழ்வித்தல் - அமிழச்செய்தல்.
அமிஞை - அமீஞை.
அமீதரம் - செம்மறியாட்டுக்கடா.
அமீர் - அரசன், பிரபு, தலைவன், ஆப்கானிய அரசன்.
அமீவம் - பாவம், வருத்தம்.
அமீஞை - கிராம உத்தியோகஸ்தன், கோர்ட்டில் ஜப்தி கட்டளை நடத்தும் உத்தியோகஸ்தன், அமீன்.
அமீன் - பணவசூல் செய்யுமோர் உத்தியோகஸ்தன், சிவில் கோர்ட்டுக் கட்டளைகளை நிறைவேற்றும் ஓர் உத்தியோகஸ்தன்.
அமுகம் - கடுக்காய், சீந்தில், நெல்லி.
அமுக்கடி - மந்தாரம், மூட்டாயிருத்தல், மூடமாயிருத்தல், மூடிக்கொள்ளுதல், நெருக்கடி.
அமுக்கல் - உள்ளே அமிழ்ந்தப் பண்ணல், கீழே அமரப்பண்ணுதல்.
அமுக்கனங்கிழங்கு - அசுவகெந்தி.
அமுக்கன் - இரகசியத்திற் கருமமுடிப்போன், தந்திரக்காரன், நித்திரையிலமுக்குமாவி, கபடமுள்ளவன்.
அமுக்கி - நித்திரையி லொருவர் நெஞ்சில் அல்லது வயிற்றிலே ஒரு பாரத்தினால் அமுக்குண்டாற் போன்று அசையப் பேசச் சுவாசிக்கக் கூடாதிருக்கவும் பதறியமனத் தோடு விழிக்கவும் செய்யும் ஒரு நோய், அமுக்கன்.
அமுக்கிரா - அசுவகெந்தி, ஒரு செடி.
அமுக்கிரி - அமுக்கிரா, அசுவகெந்திக் கிழங்கு.
அமுக்கு - அமர்த்தித் தள்ளுதல், அமுக்கு பாரம், அமுத்துகை, அமுத்துகிற பாரம்.
அமுக்குணி - அமுக்குணிப் பிள்ளையார்.
அமுக்குதல் - அமிழ்த்துதல், ஒடுக்குதல், அமிழ்த்தல், அமுத்துதல்.
அமுக்குரவு } அமுக்கிரா.
அமுக்குரா }
அமுக்கொத்தி - ஒருவகைக் கத்தி.
அமுங்கல் - அழுந்தல், தாழ்தல்.
அமுங்கு - அமிழ்.
அமுங்குதல் - அமிழ்தல், அழுந்துதல்.
அமுசம் - சிறு செருப்படைப்பூண்டு.
அமுசு - ஒட்டறை.
அமுணங்கம் - அடக்கமின்மை.
அமுதகடிகை - சில நட்சத்திர காலங்களிற் சுபகருமங்களுக்கு யோக்கியமாயினவாகக் கருதப்படும் நாழிகைகள். அவை: பரணி, மிருகசீரிடம், பூரம் என்பவற்றிற்கு மூப்பதிற்கு மேலும், பூசத்திற்குப் பதினொன்றின்மேலும், அச்சுவினிக்கு இருபத்தொன்றின் மேலும், கார்த்திகைக்கு ஐம்பதின்மேலும், திருவாதிரை, ஆயிலியம் என்பவற்றிற்கு நாற்பதின்மேலும், பூராடம், பூரட்டாதி என்பவற்றிற்குப் பத்தின்மேலும், அத்தத்திற்கு ஏழின் மேலும், உத்திராட்டாதிக்குப் பதினெட்டின்மேலும், சுவாதிக்கு இருபத்திரண்டின்மேலும், இரேவதிக்குப் பன்னிரண்டின்மேலும், அனுடம், மூலம், உத்தராடம், அவிட்டம், புனர்பூசம், உரோகிணி என்பவற்றிற்குப் பதினைந்தின்மேலும், சித்திரைக்குப் பதினாறின்மேலும், கேட்டைக்கு மூப்பத்தொன்றின் மேலும், விசாகம், திருவோணம், மகம், சதயம் என்பவற்றிற்கு இருபதின்மேலும், உத்தரத்திற்கு மூப்பத்து மூன்றின்மேலும் வரும் நாழிகை. விஷகடிகைக்கு மேல் வரும் நான்கு நாழிகை அமுதகடிகை என்பாருமுளர்.
அமுதகதிரோன் - சந்திரன்.
அமுதகம் - நீர், பாற்கடல், மூலை.
அமுதகிரணன் - சந்திரன்.
அமுதகுண்டம் - அமுதம் வைத்திருக்கும் பாத்திரம்.
அமுதகுண்டை - இரப்போர் கலம்.
அமுதகுலர் - இடையர், சான்றோர்.

அமுதங்கம் - கள்ளி, சதுரக்கள்ளி.

அமுதங்கரந்தநஞ்சு - கடுமொழியும் நல்ல இருநயமுமுள்ளவன், சுக்கின்மேற் பரணம்போல ஒரு மேலான பொருளே மூடிக்கொண்டிருக்கும விஷமுள்ள வஸ்து.

அமுதசம்பூரணன் - சந்திரன்.

அமுதசமபூதன் - சந்திரன்.

அமுதசருக்கரை - சீந்தில்மா.

அமுதசாரணி - வெள்வேலமரம்.

அமுதசித்தியோகம் - ஞாயிற்றுக்கிழமையில் அஸ்தமும், திங்கட்கிழமையில் மிருகசிரமும், செவ்வாய்க்கிழமையில் அச்சுவினியும், புதன்கிழமையில் அனுடமும், வியாழக்கிழமையிற் பூசமும், வெள்ளிக்கிழமையில் இரேவதியும், சனிக்கிழமையில் உரோகிணியும் வருங்காலம்.

அமுதசுரபி - மணிமேகலையிலிருந்த ஓர் அட்சய பாத்திரம்.

அமுதசூரு - வெள்வேல்,

அமுதசுரம் - மஞ்சிட்டி.

அமுதசாரணை - ஆகாரமின்றி நிஷ்டையிலிருக்கும் மௌன யோகிக்குச் சிரசின் மூளையிலிருந்துண்டாகும் அனுபவம், ஆதாரணை உணவாகிய அமுதமூல காரணம்.

அமுதசாரை - அமிர்தத்துளி.

அமுதபார்வை - பிரியநோக்கு, புணர்ச்சிநோக்கு.

அமுதபுட்பம் - சிறு குறிஞ்சா.

அமுதப்பார்வை - குளிர்ந்த பார்வை.

அமுதமதனம் - அமுதத்தின்பொருட்டுக் கடலைக் கடைதல்.

அமுதமேந்தல் - புண்ணியமொன்பதினொன்று. அது யாசகருக்கும் பெரியோருக்கும் அன்னமிடல்.

அமுதம் - தேவருணவு, மழை, சுவை, தன்மை, நிர்விகற்பம், அமிருதம், இனிமை, உப்பு, உயிர்தருமருந்து, கடுக்காய், சீந்தில், சேடம், தயிர், நிர்விகற்பு, நிரிபலை, நீர், நெல்லி, பால், பெருமை, போசனம், முத்தி, வேண்டல், முக்தி.

அமுதயோகம் - அமிர்தயோகம், அது ஞாயிற்றுக்கிழமையில் மூலம், திருவோணம், இரேவதி, அத்தம, உரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி ஆன நட்சத்திரங்களிலொன்று வருங்காலம். திங்கட்கிழமையில் மிருகசிரம், சுவாதி, உரோகிணி, புனர்பூசம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களிலொன்று வருங்காலம். செவ்வாய்க்கிழமையில் உரோகிணி,மூலம், உத்திரட்டாதி, உத்திரமாகிய நட்சத்திரங்களி லொன்று வருங்காலம. புதன்கிழமையில் பூரம், பூராடம், பூரட்டாதி, உத்தராடம், கார்த்திகை, உத்தரமாகிய நட்சத்திரங்களி லொன்று வருங்காலம். வியாழக்கிழமையிற் புனர்பூசம், சோதி, பூசம், அச்சுவினி, மகமாகிய நட்சத்திரங்களிலொன்று வருங்காலம். வெள்ளிக்கிழமையில் மூலம், அத்தம், இரேவதி, அச்சுவினியாகிய நட்சத்திரங்களிலொன்று வருங்காலம். சனிக்கிழமையில் மகம், சோதி, கார்த்திகை, உரோகிணி, சதயமாகிய நட்சத்திரங்களிலொன்று வருங்காலம்.

அமுதர் - இடையர், முல்லைநிலமாக்கள், கடவுள், வானோர், தேவர்.

அமுதவல்லி - அமிர்தவல்லி, சீந்தில், வள்ளிகாயகி.

அமுதவிந்து - அமுதத்துளி, அமுதவிந்துவாகிய வட்டம், அமிர்தத்துளி.

அமுதவெழுத்து - செய்யுள் அல்லது சொன்முதலிலே வரத்தக்க சுபவெழுத்து.

அமுதவேணி - சிவன்.

அமுதனார் - வைஷ்ணவாசாரியருள் ஒருவர்.

அமுதன் - அழிவில்லாதவன், கடவுள்.

அமுதாசனர் - அமிர்தாசனர், தேவர்.
அமுதாம்பரமணி - கௌத்துவமணி.
அமுதாரி - பூனைக்காலி.
அமுது - அமிழ்து, இனிய பொருள், நிவேதனம், மோக்ஷம், உப்பு, சுதை, சுவை, சோறு, நீர், பால், தேவாமிர்தம், உயிர்தரு மருந்து, அமுதம், உணவு, இனிமை, உணவுப் பொருள்களோடு உபசாரமாகச் சேர்த்து வழங்குஞ் சொல்.
அமுதுகுத்து - உறைமோர் குத்து.
அமுதுசெய்தல் - புசித்தல், உண்ணுதல்.
அமுதுசுதி - பாற்கடல்.
அமுதுபடி - அரிசி.
அமுதுபடைத்தல் - உணவு பரிமாறுதல்.
அமுதுபாறை - சோற்றுத்திரளை சேர்க்குங்கல்.
அமுதுமோர் - பிரைமோர்.
அமுதுறை - எலுமிச்சைக்கனி.
அமுதூட்டல் - சோறு அல்லது பாலுண்பித்தல்.
அமுதூட்டுதல் - பிள்ளைக்கு ஏழாமாதத்தில் சோறூட்டுதல்.
அமுதெழுத்து - அமுதவெழுத்து.
அமுதோர் - அம்பர்தமுடையவர்.
அமுத்தம் - கையாயுதம், வச்சிராபி.
அமுத்தி - அடைபட்டிருக்கை, தன்னிட்டமின்மை.
அமுத்திர - அங்கே, மறுமையில்.
அமுத்திரம் - மோட்சம்.
அமுந்திரி - அரிசி.
அமுமூட்சு - முமூட்சல்லாதவன்.
அமுரி - சிறுநீர், அமரி.
அமுரியுப்பு - ஒருப்பு, சிறுநீரிலிருந்தெடுக்குமுப்பு, அமரியுப்பு.
அமுல் - களவு, அமல்.
அமுறை - பூசினி மொக்கு.
அமூர்த்தம் - அமூர்த்திசாதாக்கியம், உருவமின்மை, உருவில்லாதது.
அமூர்த்தன் - சிவன்.
அமூர்த்தி - உருவமில்லாதவன்.
அமூர்த்திசாதாக்கியம் - சிவனது இரட்சண்ணியவுருவத்திலொன்று.
அமூர்த்தித்துவம - உருவமில்லாததன்மை.
அமூலம் - காரணமில்லாதது.
அமெரிக்கா - ஓர் கண்டம்.
அமெரிந்தியர் - கொலம்பஸ் முதல் முதல் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அதனை இந்தியாவென எண்ணி அதிலுள்ளாரை இந்தியர் என்றான். அவர்களுக்கே இப் பெயர்.
அமெந்துக்கொட்டை - வாதுமைக் கொட்டை.
அமேஷா - எப்போதும்.
அமேதகீக்கி - கற்றுழை.
அமேத்தியநாறி, அமேத்தியநாறுமரம் - ஒரு பூண்டு, ஒரு மரம், பீநாறிச் சங்கு.
அமேத்தியம் - மூங்கில், அசுத்தம், துர்ச்சகுனம், மலம்.
அமேயதை - அக்கிராகிய பாவம், அளவிடப்படாமை.
அமேயம் - பிரமேயமாகாதது, அளவிடமுடியாதது.
அமேயர் - அளவிடப்படக்கூடாதவர்.
அமேயன் - பிரமாணதீதன், அளவுபடாதவன்.
அமை - அமாவாசி, அமையென்னேவல், அமாவாசை, ஒரு நாணல், மூங்கில், கெட்டி மூங்கில், அழகு, படி, இசை, சம்பவி, சம்மதி, சேரு, தயார்செய், சரிப்படுத்து, விதி, சேர்.
அமைச்சர் - மந்திரிகள்.
அமைச்சன் - மந்திரி, மந்திரித் தலைவன், மந்திரித் தலைவனுடைய நட்பாளன், வியாழன்.
அமைச்சான் - மந்திரி, வியாழன்.
அமைச்சி - அண்டவாதம்.
அமைச்சியல் - மந்திராலோசனை, மந்திரித்தொழில்.

அமைச்சு - மந்திரி, அமச்சு, மந்திரித்தனம், அமைச்சன், மந்திரித்தன்மை.

அமைதல் - அடங்குதல், உடன்படுதல், சம்பவித்தல், பொருந்துதல், போதியதாதல், தங்குதல், ஆயத்தமாதல், தகுதியாதல், நிறைதல், முடிவடைதல், இல்லேயாதல், செய்யக்கூடியதாதல், சம்மதித்தல், நிறைத்தல், நெருங்குதல, பொருந்தல், திருப்தியாதல், தீர்மானமாதல்.

அமைதி - அடக்கம், அமரிக்கை, சமயம, நிகழ்ச்சி, பொருத்தம், மாட்சிமை, யாசஸ்தலம, பொருந்துகை, தன்மை, நிறைவு, செய்கை, திருப்தி, சாந்தம், தாழ்வு.

அமைத்தல் - அமையப்பண்ணுதல், சமைத்தல், செய்தல், நியமித்தல், செய்துமுடித்தல், படைத்தல், பதித்தல், அமைதிபெறச்செய்தல், சேர்த்தல், பொறுத்தல், அடக்குதல், ஆயத்தஞ் செய்தல, வசமாக்குதல், கெழுமல், புல்லுதல்.

அமைப்பு - அநுபோகம், நியமிப்பு, விதி, அமைந்திருக்கும் நிலே.

அமைப்போன் - கருந்தா செய்பவன்.

அமைய - திருத்தியர.

அமையம் - இளாமிச்சை, காலம், சமயம், அமயம்.

அமையவன் - அருகன்.

அமையாமை - கீழ்ப்படியாமை, கிடைத்தற்கருமை.

அமையான் - ஆருன்.

அமையுமென்றல் - ஆகட்டுமென்றல், வேண்டாமென்றல், அலம்.

அமைவடக்கம - அடக்கம், அமசடக்கம, அடங்கிய வொழுக்கம்.

அமைவர - மனத்துட்பதிய.

அமைவர் - ஞானிகள், முனிவர்.

அமைவன் - அடக்க முடையோன், முனிவன், அருகன், கடவுள், அறிவுடையோன், துறவி.

அமைவு - ஏற்றதாகை, ஆறுதல், நிறைவு, அடக்கம், பொருத்துகை.

அமோககாரணி - மாயை.

அமோகபாணம் - இருளே ங்க்குமம்பு, இலக்குத் தவறுத அம்பு.

அமோகப்படை - மருளகற்றும்படை.

அமோகம் - பெருகுந்தன்மை, மிகுதி, மோகமின்மை, மோகநீயம், இலக்குத் தவறுமை.

அமோகவாசான் - துரோணச்சாரியன்.

அமோகன் - மோகமில்லாதவன்.

அமோகி - மயக்கமில்லாதவன்.

அமோகை - கடுக்காய்.

அமோட்சம் - அடிமைத்தனம், ஜீவாந்தரம் வரையும் சிறையிருப்பு.

அம் - அசைச்சொல், அழகு, நீர், இடைச்சொல், சாரியை, தன்மை முன்னிலேயுளப்பாட்டுப் பன்மை விஜ விகுதி.

அமசசக்கரம் - நவாம்சசக்கரம்.

அம்சபத்திரம் - பாகசாஸனம்.

அம்சபாதம் - புள்ளடிக்குறி.

அம்சபூதன் - அமிசமாயிருப்பவன்.

அம்சம் - அன்னம், கீழ்வாயிலக்கத்தின் கீழெண், ஒரு உபநிடதம், பங்கு, உரிமைப்பங்கு, ஒரு மந்திரம், கூறு, அசபா, அமிசம்.

அம்சர் - அமவகைச் சன்னியாச ஆச்சிரமத்தாருள் ஒருவகையார்.

அம்சன் - ஹம்சன்.

அம்சஸ்வரம் - ஒரு ஸ்வரம்.

அம்சாம்சம் - பங்கிற்பங்கு.

அம்சாம்சி - பங்கு பங்காக.

அம்சாம்சிபாவம் - பங்கும் பங்குடையதுமாயிருத்தல்.

அம்சுமாலி - சூரியன்.

அம்பகம் - எழுச்சி, கன், உத்தரவு, கூத்தாடிக்குப் பொருந்திய கூலி, செம்பு, விடை.

அம்பகன் - சீர்பத்தபாவஷாணம்.

அம்படம் - ஆடுதின்னுப்பாலே, புழுக்கொல்லி.

அம்படலம் - அம்மி, இரதம், ஈயம், ஓடம், மரக்கால், வெளி, வெள்ளி.

அம்பட்டச்சி, அம்பட்டத்தி } நாவிதப்பெண்.

அம்பட்டன் - நாவிதன், அம்பஷ்டன்.

அம்பட்டன்கத்தி - ஒருவிதக் கத்தி, ஒருவித மீன், கடல்மீன் வகை.

அம்பட்டன்பாரை - அம்பட்டன் கத்தி.

அம்பட்டன்வாளை - ஒருமீன், சொட்டைவாளை.

அம்பஷ்டை - வட்டத்திருப்பி.

அம்பட்டை - அம்பட்டப்பெண், வட்டத்திருப்பிப்பூண்டு.

அம்பணத்தி - தூக்கை.

அம்பணம் - ஆமை, ஒருவகையாழ், தராகளக்குமரக்கால், துலாக்கோல், நீர், மரக்கால், வாழை, நீர்விழுங் குழாய்.

அம்பணவர் - ஒரு சாதியார், அவர் பாணர்.

அம்பதை - கள்.

அம்பரத்தவர் - தேவர்.

அம்பரமணி - சூரியன்.

அம்பரம் - ஆகாயம், ஆகாசம், கடல், சீலை, ஆடை, திசை, திக்கு, பரவெளி, மஞ்சள், சித்திரை, துயிலிடம்.

அம்பரர் - அசுரர்.

அம்பரவாணம் - எண்காற்புள்.

அம்பராந்தம் - திகாந்தம், புடைவையிலேரம்.

அம்பராம்புயம் - கடற்றுமரை, பதுமநிதி.

அம்பரான் - அம்பரென்னுந் தலத்திலிருப்பவன்.

அம்பரீசம் - எண்ணெய்ச்சட்டி, போர்.

அம்பரீசன் - சிவன், திருமால்.

அம்பரீடம் - ஒரு மகாநரகம், தூக்கம், நெய்விட்டுப் பொரிக்குஞ்சட்டி, யத்தம், விலங்கின் குட்டி.

அம்பரீடன் - சிவன், சூரியன், விட்டுணு, விட்டுணு பத்தஞான சூரியவங்கிடத்தோரரசன்.

அம்பரை - ஒரு கிமிளை.

அம்பரைநாதம் - அப்பிரகம்.

அம்பர் - அவ்விடம், ஒரு மரப்பிசின், ஓர்க்கோலை, ஒரு மருந்து, சோழதேசத்திலோரூர், அங்கே.

அம்பர்சா - சீலைவகை.

அம்பர்மாகாளம் - ஒருகலம்.

அம்பலக்கல் - ஊர்ப்பொது மேடைக்கல்.

அம்பலகாரன் - கிராமத்தலைவன், கள்ளர், வலையர்பட்டப்பெயர்.

அம்பலக்காரன் - கள்ளச்சாதித் தலைவன், சபையின் தீர்மானம், வெளியிடுவோன்.

அம்பலங்காய் - ஒரு பழம்.

அம்பலச்சாவடி - கிராமப்பஞ்சாயத்து மண்டபம்.

அம்பலக்கூத்தன், அம்பலத்தாடி } சிவன், சிவபிரான்.

அம்பலத்திநான்றிக்காய், தில்லைமரம்.

அம்பலமேறுதல் - சபையாரால் ஏற்றுக்கொள்ளப்படுதல், நியாயஸ்தலத்திற்குச் செல்லுதல்.

அம்பலம் - சபை, சித்திரக்கூடம், தில்லையம்பலம், அம்பலகாரன், பொதி, மன்றம், மன்று, சபை, சவை, பொதுவில், சிதம்பரத்திற் சபைவெளி, பலர் கூடும் வெளியிடம்.

அம்பலவரி - வரிவகை.

அம்பலவர், அம்பலவன், அம்பலவாணன் } சிவன்.

அம்பலவிருக்கம் - தில்லைமரம், அம்பலவிருட்சம்.

அம்பலி - கள்ளி, மூட்டை வெள்ளைக்கரு, வாக்சியம்.

அம்பல் - சேந்தன்றேயம், பழிமொழி, பழமொழி, புறங்கூறல், பழிச்சொல்.

அம்பரூத்தூணி - அப்பரூத்தூணி, அம்புக்கூடு, காசியரசன் குமாரி, ஒரு சத்தி, அம்புரூத்தூணி.

அம்பறுத்தல் - அம்பைத்தூணியி னின்று வாங்குதல்.

அம்பா - தாய், பார்வதி, உமாதேவி, துர்க்கை, பசுக்கதறல்.

அம்பாணி - அம்புநுணி.

அம்பாயம் - அக்கப்பாடு, உபாதி, பிரசவ வேதனை.

அம்பாரம் - அடுக்கு, குவியல், களஞ் சியம்.

அம்பாரி - அவுதா, யானைமேற்றவிசு, யானைமேற்பீடம்.

அம்பாலிகை - தருமதேவதை, பாண் டுவின்றாய், பார்வதி, மாதா, துர் க்கை.

அம்பாலெய்ய - அம்பெய்ய.

அம்பால் - தோட்டம்.

அம்பாவனம் - சரபம், ஒரு பட்சி.

அம்பாவாடல் - தைந்நீராடல்.

அம்பாள் - உமாதேவி.

அம்பி - தோணி, கள், காராம்பி, மிடா, தம்பி, தாம்பணி, இறை கூடை, ஓடம், சலசூத்திரம், தாம்பு, தெப்பம், மரக்கலம், கப் பல்.

அம்பிகா - ஒரு மாயாதேவி.

அம்பிகாபதி - சிவன், கம்பனுடைய மகன்.

அம்பிகாவல்லவர் - சிவன்.

அம்பிகாவனம் - உமாதேவிக் குரிய ஒரு சோலை, இது காஞ்சிக்கு மேற்கிலே உள்ள ஊர்.

அம்பிகேயகன் / அம்பிகேயன் } கணபதி, கந்தன், கணேசன், திருத ராட்டிரன்.

அம்பிகை - காளி, பரமேச்வரி, தரும தேவதை, திருதராட்டிரன்றாய், துர்க்கை, பார்வதி, மாதா.

அம்பிகைதநயன் / அம்பிகைதனயன் } குமரன், விநாய கன், வீரபத்தி ரன்.

அம்பிகைபாகன் - சிவன்.

அம்பிகைமாலை - ஒரு நூல்.

அம்பிலி - முட்டைக்கரு.

அம்பிறகு - ஈர்க்கில் உடு.

அம்பிற்குதை - அம்புக்குதை.

அம்பினடி - திப்பிலிமூலம், திப்பலி மூலம்.

அம்பு - குடிநீர், அம்புவாசினி, அத்தி ரம், ஆகுகம், ஆவரி, கம், கங்கபத் திரம், கதிரம், காண்டம், கோ, கோல், சரம், சாயகம், சிலீமுகம், தொடை, தோணி, பகழி, பத்தி ரம், பத்திரி, பல்லம், பிரதரம, புங்கம், புதை, மாக்கணம், வண்டு, வாலி, விசிகம், வேத்திரம், ஆடு தின்னுப்பாளை, எலுமிச்சை, கணை, சரகாண்டபாஷாணம், தளிர், திப் பிலி, நீர், பாதிரி, மூங்கில், மே கம், வாளையல், பாணம், கடல், உலகம், மூளை, அப்பு.

அம்புகிராதம் - முதலை.

அம்புகேசரம் - எலுமிச்சை.

அம்புக்கடடு - அத்திரக்கட்டு.

அம்புக்குதை - குலை, பகழி, புங்கம், அம்பினிறகு, அம்பின் நுனி.

அம்புக்குப்பி - புழுது, அம்புக்குழச்சு, அம்பின் கொண்டை.

அம்புக்குழைச்சு - அம்புக்குப்பி, புழுது.

அம்புக்கூடு - அத்திரக்கட்டு, அம்பு றுத்தூணி, ஆவநாழிகை, ஆவம், கணைப்புட்டில், தூணம், தூணி, தூணீரம், அம்புவைத்திருக்கும் கூடு.

அம்புசத்தி - இலக்குமி.

அம்புசம் - இடியேறு, ஒரு நகரம், அம்புஜம், தாமரை.

அம்புசன் - பிரமன்.

அம்புசன்மம் / அம்புசாதம் } தாமரை, அம்புஜா தம்.

அம்புசாதன் - பிரமன்.

அம்புசி - இலக்குமி.

அம்புசிரன் - சிவன்.

அம்புசெம் } தாமரைச்செடி.
அம்புசென்மம் }
அம்புதசாலம் - முகிற்கூட்டம்.
அம்புதம் - கோறைக்கிழங்கு, நீர், மேகம்.
அம்புத்தலை - உடு, சுரை, அம்பினடி.
அம்புதி } சமுத்திரம்.
அம்புநிதி }
அம்புபூரணரோகம் - சகசரோகம்.
அம்புப்பிரசாதனம் - தேற்றாங் கொட்டை.
அம்புப் பறை - பறையர்வகை.
அம்புப்புட்டில் - அம்பறாத்தூணி.
அம்புமாரி - அம்புமழை.
அம்புமுது - முத்துவகை.
அம்புயஞானநூல் - தாமரைத் தண்டின் நூல்.
அம்புயத்தவன் } அம்புயன்.
அம்புயத்தன் }
அம்புயத்தி - இலக்குமி.
அம்புயம் - இறைகூடை, புட்டில், தாமரை, நீரிற் பிறந்தது, பதுமநிதி, நீர், அம்புசம், அம்போசம், அம்போருசம்.
அம்புயன் - பிரமன், அம்புசன்.
அம்புயாசனம் - பதுமாசனம்.
அம்புயாசனை - இலக்குமி.
அம்புயாதம் - தாமரைச்செடி.
அம்புயாதன் - பிரமா.
அம்புயை - இலக்குமி.
அம்புரம் - கீழ்வாயிற்படி.
அம்புராசி - கடல்.
அம்புருகம் - நீரில்வளரும் பூண்டு, தாமரைச் செடி.
அம்புரோகினி - தாமரை.
அம்புலி - சந்திரன், அம்புலிமான், அம்புலிப்பருவம்.
அம்புலிச்சோதரி - இலக்குமி.
அம்புலிப்பருவம் - பிள்ளைத்தமிழில் ஒருறுப்பு, அது பிள்ளைக்குச் சந்திரனைக் காட்டுதலைக் குறிப்பிப்பது.
அம்புலிமணி - சந்திரகாந்தக்கல்.
அம்புலிமான் - சந்திரன், அம்புலியம்மான்.
அம்புவன் - அஞ்சுமானென்னும் ஆகமங் கேட்டவருளொருவன்.
அம்புவாகம் - முகில்.
அம்புவாகன் - நீர்கொண்டு செல்வோன்.
அம்புவாகினி - இறைகூடை, கீரிறைக்கும்பாத்திரம், எலுமிச்சை, பாதிரி.
அம்புவாசினி - எலுமிச்சை, பாதிரி, மரப்பூ.
அம்புவி - பூமி, ஜகம், சகம்.
அம்புவிடுதூரம் - லில்லில்வைத் தெய்யப்படும் அம்புபோகுந்தூரம், அம்பு இடுதூரம், அம்பு ஓடுதூரம், அம்பு எறிதூரம்.
அம்புவிறதூணி - அம்புக்கூடு.
அம்பை - காசிராஜன் புத்திரி, ஒரு நதி, வெட்டிவேர், உமாதேவி, தாய், தர்க்கை, பார்வதி.
அம்போசசனி - பிரமன்.
அம்போசம் - சந்திரன், தாமரை, நாரைப் பறவை, நீர்ப்பிறந்தது.
அம்போசயோனி - பிரமன்.
அம்போசன் - சந்திரன்.
அம்போதம் - முகில்.
அம்போதரங்கம் - கலிப்பாவி லேறுறுப்பு. நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாய்த் தாழிசைக்குந் தனிச் சொற்கும் நடுவேயேனும், அராகத்திற்குந் தனிச்சொற்கும் நடுவேயேனும் நிற்பது.
அம்போதரங்க வொத்தாழிசை - அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.
அப்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா - கலிப்பாவினத்துள் ஒன்று. அது வண்ணகத்தாழிசைக் கலிப்பா உறுப்பில் அராகமொழிந்த ஐந்துறுப்பையுங்கொண்டுவருவது.
அம்போதரம் - முகில்.
அம்போதி - கடல், காற்று, பாட்டினருத்தம், அம்புதி, அம்புநிதி, சமுத்திரம்.

அம்போநிதி } சமுத்திரம்.
அம்போராசி }
அம்போருகத்தர் - பிரமாக்கள்.
அம்போருகம் - தாமரை, நீரிற் பிறந்தது.
அம்போருகன் - பிரமா.
அம்போருகை - இலக்குமி.
அம்ம - உரையசைச்சொல், கேளெனல்.
அம்மகோ - ஓரிரக்கக்குறிப்புச்சொல்.
அம்மங்கார் - ஆசாரியன் மனைவி, அம்மான் மகள்.
அம்மங்காள் -அம்மங்கார்.
அம்மட்டி - கொட்டிக்கிழங்கு.
அம்மட்டு - அவ்வளவு.
அம்மணக்கட்டை - ஆடை கட்டாதவன்.
அம்மணத்தர் - சைனர்.
அம்மணத்தேண்டி - அம்மணக் கட்டை.
அம்மணம் - சோரமார்க்கம், வண்டப்பேச்சு, ஸ்ரீஷணவார்த்தை, நிர்வாணம், நிருவாணம், மட்டு.
அம்மணி - தனக்கு பந்துவல்லாத பெண்களை அழைக்கும்போது பிரயோகிக்கப்படும் ஒரு மரியாதை வார்த்தை, இடை.
அம்மந்தி - அம்மான் மனைவி.
அம்மமுண்ணல் - முலைப்பால் குடித்தல்.
அம்மம் - பெண்களின் முலை, ஸ்தனம்.
அம்மம்ம - மிக்க வியப்பைக்குறிக்கும் ஓரிடைச்சொல்.
அம்மல் - சமியாக்ருணம், மந்தாரம், மூடம், விறைப்பு.
அம்மவம்ம - மிக்க வியப்பினைத்தரும் ஓரிடைச்சொல்.
அம்மவோ - ஓரிரக்கக்குறிப்புச்சொல்.
அம்மனே - ஒரு வியப்புக்குறிப்பு.
அம்மனை - அம்மனையாடுங்கருவி, அக்கினி, அம்மானை, தாய், தலைவி.
அம்மனைப்பாட்டு - ஒரு பாட்டு.
அம்மனையோ - ஒரு துக்கக் குறிப்பு.
அம்மலே - அம்மனையோ.
அம்மன் - தாய், தேவதை.
அம்மன்கட்டு - கூகைக்கட்டு.
அம்மன்காசு - புதுக்கோட்டை நாணயவகை.
அம்மன்கொடை - ஓர் உற்சவம்.
அம்மன்கொண்டாடி - மாரிகோயிற் பூசாரி.
அம்மா - அதிசயச்சொல், எசமானி, ஒரு அசைச்சொல், தாய், விளிச்சொல்.
அம்மாச்சி - தாயைப்பெற்ற பாட்டி, தாய்.
அம்மாஞ்சி - அம்மான்மகன், மூடன்.
அம்மாஞ்சிம்தினி - அம்மான் சேயின் மனைவி.
அம்மாடி - அதிசயவிரக்க விசிராந்திக் குறிப்பு.
அம்மாட்டி - கொட்டிக்கிழங்கு.
அம்மாத்தாள் - மாதாமகி.
அம்மாத்திரம் - அவ்வளவு.
அம்மாமி - மாமன்மனைவி.
அம்மாம்பச்சரிசி - சித்திரப்பாலாவி, சீதேவியார், செங்கழுநீர்.
அம்மாய் - தாயைப்பெற்றவன், அம்மாச்சி.
அம்மார் - கப்பற்கயிறு.
அம்மாள் - தாய், மூத்தாள்.
அம்மாறு - பெருங்கயிறு.
அம்மானை - ஒருபிரபந்தம், ஒருவினையாட்டுக்கருவி, ஒரு பருவம், அம்மனை.
அம்மான் - தகப்பன், மாமன், தாயுடன் பிறந்தவன், பெண் கொடுத்தவன், அத்தைகணவன், கடவுள்.
அம்மான்நீர் - அம்மானெடுக்கும் மணவரிசை.
அம்மான்பச்சரிசி - சித்திரப் பாலாவிப்பூண்டு, செடிவகை.
அம்மான்பொடி - சொக்குப்பொடி.
அம்மி - அம்மிக்கல், அரைகல், மாமி, அரைசிலை.

அம்மிக்கல் - அம்மியிலரைக்குங் குழவி, அம்மி, அரைகல்.
அம்மிமிண்டி - அமசடக்கி, சுறுக்கிற் பேசாதவன்.
அம்மியம் - கள், காளம், சிறுசின்னம்.
அம்மியை -மிண்டுத்தனம்.
அம்மிரம் - மாமரம்.
அம்மிலசாரம் - காடி.
அம்மிலம் - புளிப்பு.
அம்மிலவிருட்சம்
அம்மிலிகா
அம்மிலிகை
} புளிப்பு - புளிய மரம்.
அம்மு - சோறு, பாசாங்கு பண்ணு.
அம்மூக்கள்ளன் - வஞ்சகன், அயோக்கியன்.
அம்மூதல் - அடைத்தல், உண்டல், மூடுதல், மாரீசம் பண்ணுதல், மேகமந்தாரமாதல்.
அம்மெனல் - ஒலிக்குறிப்பு.
அம்மேயோ - ஓர் துக்கக்குறிப்பு.
அம்மை - அழகு, கடுக்காய், கருமதேவதை, தவப்பெண், தாய், மேலுலகம், பார்வதி, வருபிறப்பு, வைசூரி, பாட்டி, அமைதி, சாந்தம்.
அம்மைகுண்டலி - தாயாகிய குண்டலிசத்தி.
அம்மைக்கட்டு - கூகைக்கட்டு.
அம்மைப்பால் - அம்மை குத்துதற் குரியபால்.
அம்மைமுத்து - வசூரிக் கொப்புளம்.
அம்மையப்பர் - சிவன்.
அம்மையார் - முதியவள்.
அம்மையார்கூந்தல் - கொடியார் கூந்தற்பூண்டு.
அம்மையோ - ஓர் வியப்புச்சொல்.
அம்மைவடு - அம்மைத்தழும்பு.
அம்மைவனப்பு - செய்யுட்குரிய எண்வகை வனப்புகளுள் ஒன்று.
அம்மைவார்த்தல் - மசூரிகை நோய் வரச்செய்தல், அம்மைப்பாலூற்றல்.
அம்மைவிளையாட்டு - மசூரிகை என்னும்நோய்.
அம்ருதம் - அமிர்தம்.
அய - நிவிர்த்திகலையிற் பிருதிவிதத்துவத்திலிருக்கும் நூற்றெட்டுப் புவனங்களுளொன்று, வித்தியாகலையில் இராகதத்துவத்திலிருக்கும் ஐந்து புவனங்களுளொன்று.
அயகம - சிறுகுறிஞ்சி, வசம்பு, சிறுகுறிஞ்சா.
அயகரம் - மலைப்பாம்பு.
அயக்கதை
அயக்கதையம்
} இருப்புச்தண்டம்.
அயக்கம் - நிராமயம், நோயின்மை.
அயக்கல் - அசைதல்.
அயக்களங்கு - இரும்புருக்கியமணி, இருமபுத்துரு, இருப்புத்துரு.
அயக்காந்தம - ஊசிக்காந்தம்.
அயக்கிரீவகன் - ஓரசுரன், திருமால், விஷ்ணு.
அயக்கிரீவம் - அதர்வணவேத உபநிடதத்தொன்று.
அயக்கிரீவன் - ஓரசுரன், விட்டுணு.
அயக்கிருட்டி
அயக்கிருதி
} காந்தக்கல்.
அயக்கீடம்-இரும்புக்கறை.
அயக்குதல் - அசைத்தல்.
அயசிலவேதை - கோளகபாஷாணம்.
அயசீசம் - அயம்.
அயசு - இரும்பு, உருக்கு, எஃகு, பொல்லா நிலம், அயஸ்.
அயசுபடில் - வெள்ளீயமணல்.
அயச்சிந்தூரம் - இரும்புச்சிந்தூரம்.
அயணம் - செலவு, வழி, அயநம்.
அயதார்த்தமரணம - யதார்த்தமல்லாத நினைவு.
அயதார்த்தம் - பொய்.
அயதார்த்தானுபவம் - யதார்த்தமல்லாத அனுபவம், அது சமுசயம், தருக்கம், விபரியயம் என மூன்று வகைப்படும்.
அயதி - திருநாமப்பாலை.
அயது - பொல்லாநிலம்.

அயத்தினம்-முயற்சியின்மை.

அயத்தின்சாரம் - இருப்புச்சிட்டம்.

அயத்தீ - இரும்புத்தொட்டி.

அயத்தொட்டி - இரும்புத் தொட்டி, வைப்புப் பாஷாணத்தொன்று.

அயநகாலம் - துலாயனத்துக்கும் மேடாயனத்துக்கும் இடையில் நிகழுங்காலம்.

அயநசலனம் - கிரகங்கள் மையவரியிலிருந்து பக்கவரிக்குத் திரும்புதல்.

அயநமண்டலம் - சமரேகைக்கு வடக்கே அல்லது தெற்கே சூரியன் செல்லும் வீதி.

அயநமாசம் - அயநாஞ்சாறு சாரத்திலே தினமான முதலிய அறியும் பொருட்டுக் கற்பிக்கப்பட்ட மாசம்.

அயநம் - பிறப்பு, வருடப்பாதி, வருடம், வழி, வீடு, சரித்திரம், இடம், போதல்.

அயநாள் - உரோகணி நாள்.

அயபற்பம் - இரும்புத்தூள், அயபஸ்பம், அயபஸ்மம்.

அயப்பூ - அயபாணி.

அயபாணி - ஒருசெடி.

அயமகம் - அசுவமேத யாகம்.

அயமணல் - அயமலை.

அயமத்தி - இவனிருக்கின்றனெனப் பொருள்படும் ஒரு வடமொழி வாக்கியம்.

அயமரம், அயமாரகம் } அலரிச்செடி.

அயமாரணம் - அரசமரம்.

அயமாரம் - அலரி.

அயமான்மாப்பிரமம் - வேதாந்தத்தில் இந்த ஆன்மப்பிரமம் எனப் பொருள் படும். அதர்வணவேதம் காவாக்கியம்.

அயமி - வெண்கடுகு.

அயமுகம் - ஓரிருக்கை.

அயமேதம் - அசுவமேதயாகம், அசுவமேதம், பரிவேள்வி.

அயம் - அதிட்டம், அரப்பொடி, அலரி, ஆடு, இரும்பு, குதிரை, குழி, குளம், சிறுபூலா, சேறு, நல்வினை, நிலம், நீர், விழா, சந்தேகம், சுனை, பள்ளம், உற்சவம், அயசு, அஜம், ஹயம்.

அயம்பற்றி - காந்தம்.

அயரப்போடல், அயரவிடல் } சமயம் வாய்க்கும் வரையில்அயரவிடுதல்.

அயர் - அயரென்னேவல், வருத்தம், வாட்டம், அயர்வு.

அயர்க்குதல் - மறத்தல்.

அயர்ச்சி - உணர்வழிவு, சோம்பு, பலவீனம், மறதி, வருத்தம், வெறுப்பு, சோர்வு, மனக்கவர்ச்சி, தளர்ச்சி, செய்கை.

அயர்தல் - செய்தல், சோர்தல், தளர்தல், உணர்வழிதல், மறத்தல், செலுத்துதல், வழி படுதல், விரும்புதல்.

அயர்தி - உணர்வழிவு, செய்தல், விரும்புதல், மறதி, சோர்வு.

அயர்த்தல் - அயர்வு, மறத்தல்.

அயர்ந்தநித்திரை - மிக்கநித்திரை.

அயர்ந்தீகம் - செய்வேம்.

அயர்ப்பு - மறதி, மறப்பு.

அயர்வு - அகலம், உன்மத்தம், மறப்பு, மனக்கவர்ச்சி, சோம்பு, தளர்வு, வருத்தம், வெறுப்பு, அயர்ப்பு.

அயர்வுயிர்த்தல் - வருத்தந் தீர்தல், இளைப்பாறுதல்.

அயலகத்தார் - அடுத்தவிடத்திலிருப்போர்.

அயலகம் - அடுத்தவீடு.

அயலவர் - பக்கத்தார், பக்கத்தவர்.

அயலவன், அயலன் } அண்டையான், பிறன், பக்கத்தான், அன்னியன்.

அயலாசாரம்-அக்கம்பக்கத்துக் கொத்தபடி.

அயலாதாரம் - இலக்கணதூலிற் கூறப்பட்ட ஏழாம் வேற்றுமையில்

வரும் நான்குவகை ஆதார காரகங்களுளொன்று. அது ஆதேயத்திற் கயலாக இருக்குமாதாரம (உ-ம்) ஆலின்கட் பசுக்கிடந்தது.

அயலார் - அயலவர், எவல் செய்வோர், பிறர், அயலோர்.

அயலான் - பக்கத்தவன், அன்னியன், பகைவன், அயலகத்தான்.

அயலி - வெண்கடுகு.

அயலுரை - அயலார் ஒருப்பட்டவுரை, அகப்பொருளில் கலோமகட்கியாதுமியைபில்லாதவுரை.

அயலோர் - ஏதிலர், மொதுமலர், வம்பலர், அருகினர், அயலார், மற்றையோர்.

அயல் - ஏதில், ஒன்றுவிட்டயல், உபாந்தியம், அருகு, பக்கம், அண்டை, பாரிசம், புறம்பு, காரம், காரம் உறைத்தல், அருகிடம், வேறு, அன்னியமானது, இடம்.

அயவணம் - ஒட்டகம்.

அயவந்தி - ஒருசிவத்தலம்.

அயவாகனன் - தீத்தெய்வம், அஜவாகனன், அக்னி, அக்கினிதேவன், நெருப்பு.

அயவாரி - வசம்பு.

அயவி - சிற்றரத்தை.

அயவு - அகலம்.

அயவெள்ளை - இரும்புப்பற்பம்.

அயவெள்ளி - ஓர் அயமருந்து.

அயறு - புண்வழலை, அசறு.

அயற்படல் - லிலகிச்செல்லல்.

அயற்படுதல் - நீங்கிப்போதல்.

அயனகாலம் - சூரியனேரயனத்தைச் சுற்றிவருங்காலம்.

அயனசலனம் - கிரகங்கள் மையவரியிலிருந்து பக்கவரிக்குத் திரும்புதல்.

அயனப்பிறப்பு - உத்தராயண தக்ஷிணாயனங்களின் தொடக்கம்.

அயனம் - பரிதி, பிறப்பு, பூ, மருடப்பாதி, வழி, வேதம், அயநம்.

அயனுள் - உரோகினிகாள், பிரமன் வாழ்காள், பிரமன்தினம்.

அயனிலம் - சர்க்காருக்கு இறைகட்டும் நிலம்.

அயனுலகு - பிரமலோகம், சத்திய லோகம், மனோவதி.

அயனூருவிலுதித்தோர் } வைசியர்.
அயனூருவில்வந்தோர் }

அயனூர் - சீகாழி என்னும் தலம்.

அயன் - அருகன், கிரமமானது, சிவன், சரியானது, சர்க்காரைச் சார்ந்தது, சாதாரணமானது, தசரதன்தந்தை, பிரமன்.

அயன்ஜமா - சரியான சூல்.

அயன்தரம - நிலத்தின் மூதன் மதிப்பு.

அயன்தீர்வை - நிலவரி.

அயன்நிலம் - சர்க்காருக்குக் கிஸ்தி கட்டு நிலம்.

அயன்பதஞ்சேர்ந்தோர் } சூத்திரர்.
அயன்பதத்துதித்தோர் }

அயன்மணம் - பிராசாபத்தியம்.

அயன்மனைவி - சரச்சுவதி, சரஸ்வதி.

அயன்மனையியர் - வாணி, சாவித்திரி, காயத்திரி.

அயன்முகத்துதித்தோர் - பார்ப்பார்.

அயன்மை - அன்னியம்.

அயன்வாவி - மானசம்.

அயன்வாழ்நாள் - கற்பம், வரம்.

அயன்றோளுதித்தோர் - அரசர்.

அயா - வருத்தம், தளர்ச்சி, அசா, அனேக யாகங்கள் செய்த அரசன்.

அயாசகபிச்சை - கேளாதிருக்கத் தானிருக்கும் இடத்தில் மற்றொருவன் கொண்டுவந்துதர ஒருவன் வாங்கும் பிச்சை.

அயாசகம் - அயாசகபிச்சை.

அயாசகன் - இரந்துகேளாதவன்.

அயாசிதம் - கேளாமற்றரக் கொள்ளும் பிச்சை.

அயாசிதவிருதம் - கேளாது வந்த பிச்சைப்பொருளைக்கொண்டு சீவனம் பண்ணுதல்.

அயாநம் - இயற்கைக்குணம்.

அயாவு - வருத்து.

அயாவுதல் - வருந்துதல்.
அயாவுயிர்த்தல் - பெருமூச்சு விடல், வருத்தநீங்கல், நெட்டுயிர்த்தல், கொப்புளித்தல்.
அயானம் - சுபாவம்.
அயிகம் - ஊமத்தை.
அயிக்கம்-ஐக்கம், ஒற்றுமை, ஐக்கியம்.
அயிக்கவாதி - ஐக்கவாதி.
அயிக்கியம் - ஒன்றுந்தன்மை.
அயிங்கவலை - சூடைமீன்.
அயிங்கிசை - வருத்தாமை.
அயிங்கிதை - கொல்லாமை, அ ஹிம்சை.
அயிச்சுரியம் - அயிச்சுவரியம், ஐசுவரியம.
அயிச்சுவரியம் } செல்வம்.
அயிச்சொரியம் }
அயிஞ்சி - நிலப்பனைப்பூண்டி.
அயிஞ்சை - கொல்லாமை, வருத்தாமை.
அயிணம் - ஐணம், மான்றோல்.
அயிதம் - தீங்கு.
அயிந்தா - வருகிற.
அயிந்திரதிசை - கிழக்கு.
அயிந்திரம் - ஐந்திரவியாகரணம்.
அயிப்பை - ஒரு செடி.
அயிம்சை - அயிஞ்சை.
அயிரம் - கண்ட சருக்கரை.
அயிராச்சுரபி - காமதேனு.
அயிராணி - இந்திராணி, பார்ப்பதி, பார்வதி.
அயிராணிகேள்வன் - இந்திரன்.
அயிராவச்சுரவி - காமதேனு.
அயிராவணம் - இந்திரன் யானை, இரண்டாயிரம் கொம்புடைய ஓர் யானை, அது கைலாயத்திலிருப்பது, கீழ்த்திசை யானை, சிவன் யானை.
அயிராவதப்பாதன் - தேவேந்திரன்.
அயிராவதம் - வெள்ளை யானை, அயிராவணம், ஐராவதம்.
அயிராவதன் - தேவேந்திரன், இந்திரன்.

அயிரி - நெட்டிப்புல், மீன்முள்ளரிந்திடுங் கத்தி.
அயிரியம் - நெட்டிச்செடி.
அயிரை - ஒரு சிறுமீன், நுண்மணல், ஒருநதி, நொய்ம்மீன், சேர நாட்டிலுள்ளதொரு மலை, ஆறு.
அயிர் - அயிரென்னேவல், சருக்கரை, நுண்மணல், நுண்மை, மணல், வெல்லம், சிறுநீர்.
அயிர்க்கடு - அங்குசம்.
அயிர்க்கல் } அனுமானித்தல், ஐயப்படுதல், மறைத்தல்,
அயிர்த்தல் } மாறுபடுதல், ஐயமுறுதல்.
அயிர்ப்பு - சந்தேகம், அயிர்த்தல்.
அயிலம் - இலுப்பைவேர்ப்பட்டை.
அயிலல் - உண்ணல்.
அயிலவன் } கந்தக்கடவுள், முருகக்
அயிலான் } கடவுள், வேற்படையுடையவன், குமரன்.
அயிலி - சதுரக்கள்ளி.
அயிலிடம் - சிற்றரத்தை.
அயிலுதல் - உண்ணுதல்.
அயிலுழவன் - வீரன்.
அயிலேயம் - முசுமுசுக்கைக்கொடி.
அயில் - அழகு, இரும்பு, நாஞ்சில், உண்ணென்னேவல், கூர்மை, கைவேல், கலப்பை, வேலம்பட்டை, கோரப்புல்.
அயில்தல் - உண்ணுதல், பருகுதல்.
அயிலவித்தல் - உண்பித்தல்.
அயிலை - ஒருமீன்.
அயில்வு } அயிலல், உண்டல்.
அயிரல் }
அயிற்கடு - அங்குசம்.
அயினி - உணவு, நீராகாரம், சோறு.
அயினிநீர் - சோறுகலந்த ஆலத்திநீர்.
அயின்றல் - உண்டல்.
அயின்றுள் - தாய்.
அயுகலம் - தனிமை.
அயுக்தம் - அயுக்தம், தகாதது.
அயுக்தி - பொருத்தமின்மை, பிரிவினை.

அயுதசித்தசம்பந்தம் - நீக்கமின்றிருப் பவற்றின் சம்மந்தம். அது கெடாத தாய் ஒன்று மற்றொன்றை எப்பொ ழுதும் பற்றி நிற்பது.

அயுதசித்தம் - சமவாயசம்பந்தம்.

அயுதம் - பதினாயிரம், பிரிவின்மை.

அயுதாயு - சூரியகுலத்துள்ள ஓரரசன். அவன் சிந்துதீபனுடைய மகன்.

அயுத்தம்-அயுக்தம், ஓரலங்காரம், பொருத்தமில்லாதது, தகுதியின்மை.

அயுத்தி - பிரிவினை, முறைகேடு.

அயே - அழைத்தலைக் குறிப்போர் அவ்வியபதம்.

அயோகரும் - சுத்தியல்.

அயோகம் - தகுதியின்மை, பிரிவினை, முயற்சி, வெறுப்பு.

அயோகவன் - சூத்திரனுக்கு வணிகப் பெண்ணிடத்திலே பிறந்தவன்.

அயோகவியவச்சேதம்-இயைபின்மை நீக்குதல்.

அயோகவிவச்சேசம் - தெளிவு காரம்.

அயோகனம் - சுத்தியல்.

அயோகன் - தாரமிழந்தவன்.

அயோகிருதயம் - இரும்புபோன்ற கடினமான மனம்.

அயோக்கியதனம், அயோக்கியதை, அயோக்கியம் - யோக்கியவீனம், தீயநடை, தகாதது, ஒவ்வாமை, நெறிகேடு.

அயோக்கியன் - யோக்கியனல்லாதவன், துஷ்டன், நாணயமற்றவன்.

அயோக்கிரம் - உலக்கை, சுத்தியல்.

அயோசனம் - பிரிவினை.

அயோதகதி - இரும்பு சுடுகின்ற தெனப் பொருள்படும் ஒரு வட மொழி வாக்கியம்.

அயோத்தி - சூரிய வமிச அரசர்களுடைய இராஜதானியாய்ச் சரயுநதிக் கரையிலுள்ள ஒரு நகரம், சத்தபுரியில் ஒன்று, கோசலம், சாகேதம், வினிதை.

அயோநிசன், அயோனிசன் - அயோனிஜன், யோனியாற் பிறவாதவன்.

அயோமயம் - இரும்பினாற் செய்யப்பட்டது.

அயோமலம் - இரும்புக்கிட்டம்.

அயோமுகி - ஓரரக்கி.

அயோற்கம் - அரப்பொடி.

அயோனி - சிவன் தொடக்கமில்லாதது, நித்தியம், பிரமா, யோனியிற் பிறவாதது.

அயோனிசத்துவம் - யோனியிற் பிறவாத்தன்மை.

அயோனிசம்-யோனியாற்பிறவாமை.

அயோனிசை - யோனி வழியாற் பிறாது கலப்பைச்சாலிற் பிறந்த சீதை யெனும் பெண்.

அய்மாசு - பரிசோசனை.

அய்யங்கார் - ஐயங்கார்.

அய்யர் - ஐயர்.

அய்யவி - சிறு கடுகு, ஐயவி.

அய்யனூர் - ஐயனூர்.

அய்யன் - ஐயன்.

அய்யா - தகப்பன்.

அய்யோ - துன்பச்சொல்.

அர - பாம்பு, அரா.

அரகர - சிவசிவ எனப் பொருள்படும் ஓரடுக்கு மொழி.

அரக்கம் - நன்னரி, அவலாக்கு, இரத்தம்.

அரக்கரிசி - அரக்குவகை.

அரக்கர் - அசுரர், இராட்சதர், யாது, தானவர், நிசாசரர், பிசிதாசனர், நிருதர், சாலகடங்கடர், இராக்கதர்.

அரக்கல் - அரைத்தல், சேய்த்தல், புடை பெயர்ச்சி, வியங்கோண் முற்று.

அரக்கன் - அசுரன், இராக்கதன், இராட்சதன்.

அரக்காம்பல் - செவ்வாம்பல்.

அரக்கி - இராக்கதஸ்திரீ, இராக்கதப் பெண்.

அரக்கிநடத்தல் - நெளிந்து நடத்தல், துடை உராய நடத்தல்.

அரக்கியர் - இராக்கதப்பெண்கள்.
அரக்கிலச்சினை - மெழுகிலுல் வைத்த முத்திரை.
அரக்கில் - அரக்குமாளிகை.
அரக்கினிரதம் - கொம்பரக்குக் கஷாயம்.
அரக்கு - அரக்கென்னேவல், கொம்பரக்கு, சாதிலிங்கம், சாராயம் சிவந்த மெழுகு, சிவப்பு, தேன், செய்மெழுகு, கள்ளின் விகற்பம், அரத்தம், தமரம், துப்பு, தேய்.
அரக்குக்காந்தம் - ஒரு மருந்துக்கல்.
அரக்குச்சாயம் - வார்ணிசு, சீலைகளுக் கூட்டும் கருஞ் சிவப்புச்சாயம்.
அரக்குதல் - சிதைத்தல், அழுத்தல், கீழ்த்தல், வருத்துதல், இலேதறித்தல், வெட்டுதல், குறைத்தல், முழுதுமுண் ணுதல் அரைத்தல், அழித்தல், இருப்பு விட்டுப் பெயர்த்தல், நெளிந்து நடத்தல், தேய்த்தல், அரக்கல்.
அரக்குத்தைலம் - கொம்பரக்கு முதலியவற்றிலிருந்து வடிக்கும் ஒரு வகைத்தைலம்.
அரக்குநீர் - இரத்தநீர், ஆலத்திநீர்.
அரக்குமஞ்சள் - மிகச் சிவந்த மஞ்சள்.
அரக்குமாளிகை - செம்மெழுகாற் செய்யப்பட்ட மாளிகை.
அரக்குவளையல் - அரக்கிலுலியன்ற கங்கணம்.
அரங்க - முற்றுக, முழுதும்.
அரங்கக்கூத்தி - பகிரங்கமான நாடக சாலையிற் கூத்தாடும் பெண்.
அரங்கக்கூத்தியர் - பகிரங்கமான நாடக சாலையிற் கூத்தாடும் பெண்கள்.
அரங்கசீவகன் - மைப்பூசு வேலை செய்து சீவிப்போன்.
அரங்கசீவன் - வண்ணக்காரன்.
அரங்கணி - அறுவு.
அரங்கநாதன் - ஸ்ரீரங்கத்துத் திருமால்.
அரங்கபூசை-வீரலக்குமியாகிய அரங்கதேவதைக்குச் செய்யும் பூசை.
அரங்கபூதி ஐப்பிசிமாசப் பௌர்ணமி வரும் இராத்திரி.
அரங்கபூமி - நாடகசாலை, நடிக்கும் கூடம், போர்க்களம்.
அரங்கமேடை - நாடகம் நடிக்கும் இடம்.
அரங்கம் - நாடகமாடுமிடம், படைக்கலம் பயிலுமிடம், ஸ்ரீரங்கம், ஆற்றிடைக்குறை, கல்விச் சாலை, கூத்துப் பயிலிடம், சத்திரம், சபை, சாலை, சிலம்பக்கூடம், சீரங்கம், சூதுபயிலிடம், நடனம், நிறம், போர்க்களம், திருவரங்கம்.
அரங்கர் - ஸ்ரீரங்கத்துப் பெருமாள்.
அரங்கல் - அழிதல், அழுந்தல்.
அரங்கன் - சீரங்கத்து விட்டுணு, அரங்கநாதன், அரங்கேசன்.
அரங்கி - வஞ்சகமுடையவள்.
அரங்கு - சூதாடுமிடம், கருப்பம், பிரங்கென்னேவல், பிறை, இடம், ஓரில், சபை, சூதாடற்கு வகுத்த வறை, போர்க்களம், யாற்றிடைக்குறை, நாடகமாடுமிடம்.
அரங்குதல் - அம்புமுதலியன தைத்தல், அழிதல், அழுந்துதல், வருந்துதல், உருகுதல்.
அரங்குவீடு - உள்ளறை.
அரங்கேசன் - அரங்கநாதன்.
அரங்கேறுதல் - சபைக்குமுன் வருதல்.
அரங்கேற்றம் - சபையிலேறுதல்.
அரங்கேற்று - அரங்கேற்றம், அரங்கேற்றென்னுமேவலுந் தெரிநிலை வினைப் பகுதியும் பெயரெச்சத் தொகையும்.
அரங்கேற்றுதல் - சபையிலேறச் செய்தல்.
அரங்கொழி செய்யுள் - புறநாடக உருக்களுள் இருதியுறு.
அரசகேசரி - தமிழிராகுவமிசத்தரசர்.

அரசங்கம் - அமைச்சு, அரண், குடி, கூழ்நட்பு, படை ஆகிய அரச அங்கம்.

அரசங்கள் - அரசமரத்தினின்றெடுக்குங்கள்.

அரசச்சின்னம் - அரசர் சின்னம், இராசரீக அடையாளம், முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதிள், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசண்மை - பகையரசன் அணித்தாக இருக்கை. அஃது நீதிகள் ஆறனுள் ஒன்று.

அரசநாபி - நாபிவகை.

அரசநீதி - அரசுநடத்து முறைமை கூறுநூல், இராசதர்மம்.

அரசபரி - இராசகுதிரை, அரசர்பரி.

அரசபரியினிலக்கணம் - அரசபரியினது லட்சணம். அது பெண்களது மனம்போல மிக்க மனத்தாய் வாழை மடலேப்போலச் செவியுளதாய் நான்குகாலும் பிடரும் முகமும் முதுகும் முன்புறமும் வெண்ணிறவாய் எண்பத்திரண்டு விரலுயர்ந்த இலக்கணத்தை யுடையது.

அரசமரம - மரவகை, அச்சுவத்தம், கணவம், குஞ்சராசனம், சுவலை, திருமரம், பணை, பிப்பலம் போதி,

அரசமுல்லை - அரசன் தன்மைகூறும் புறத்துறை.

அரசம் - சாரமில்லாதது, மூலநோய், சுவையில்லாதது, மூலரோகம, சுவையின்மை.

அரசரறுகுணம் - சந்தி, விக்கிரகம், யானம, ஆசனம, துவைதம், ஆச்சிரயம், கட்பு, பகை, செலவு, இருக்கை, கூடினரைப் பிரித்தல், கூட்டல்.

அரசரறுதொழில் - ஈதல், உலகோம்பல், ஓதல், படைபயிற்றல், பொருதல், வேட்டல் என்பன.

அரசரியல்பு - அரசர்க்கெப்பொழுது மிருக்கவேண்டிய தன்மைகள். அவை அஞ்சாமை, அறிவு, ஈகை, ஊக்கம் என்பன.

அரசரொளி - குடியோம்பல், கொடை, செங்கோல், தலையணியாகிய அரசர்க்குரிய மகிமை என்பனவாம்.

அரசர்குணம் - மூவிதக்குணங்கள். அவை தூங்காமை, கல்வி, துணிவு என்பன.

அரசர்குழு - மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஏற்றர்.

அரசர்கோயில் - மாளிகை, சாலை, மந்திரம், பவனம், குலம்.

அரசர்க்குக்குழு-அரசரைச் சூழ்வோர், அவர் சேனாபதி, தூதர், புரோகிதர், மந்திரி, வேதியர் என்பவர்.

அரசர்க்குத்துணைவர் - அரசர்க்குப் போர்த்துணைவர்.

அரசர்க்குறுதிச்சுற்றம் - இராசாக்களுக்கு உயிர்த்துணைவர் - அவர் அந்தணாளர், நட்பாளர், நியமித்திகப்புலவர், மடைத்தொழிலர், மருத்துவக்கலைஞர் என்பவர்.

அரசர்க்கெண்பெயராயம் - அரசர்க்குத் துணைசெய்யு மெண்மர். அவர் இவுளி, மறவர், கடைகாப்பாளர், கருமவிதிகாரர், சுற்றம், நகரமாக்கள், படைத்தலைவர், மந்திரியர், யானைவீரர் என்பவர்.

அரசர்க்கைம் பெருங்குழு - அரசரோடு கூடித் தொழில் நடாத்துமைவர். அவர் மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் என்பவர்.

அரசர்தானை - வேல், வாள், வில், தேர், பரி, யானை.

அரசர்பா - அகவற்பா.

அரசர்பின்னோர் - வணிகர், வைசியர்.

அரசர்மன்னன் - துரியோதனன்.

அரசவனம் - திருவாவடுதுறை என்னும் ஒரு சிவஸ்தலம்.

அரசவாகை - வேந்தனியல்பு கூறும் புறத்துறை.

அரசவாரியன் - குதிரை நடத்துவோரிற் சிறந்தவன்.

அரசவீதி - பூரியம்.

அரசவை - இராசசபை.

அரசளித்தல் - ஆளல், அரசாள்.

அரசஞ்ஞை - இராசகட்டளை.

அரசனீதி - அரசாகிய காவலை நடாத்தும்முறை.

அரசனுயிர்நாத்தோன் - காண்டாமிருகம்.

அரசன் - இராசன், எப்பொருட்குமிறைவன், எழுத்தானம் ஐந்திலொன்று, கார்முகிற்பாஷாணம், தாருசு, பாணகெந்தகம், முக்குவர்தலைவன், வியாழன், வாணகெந்தகம், இராசா, புரவலன், பெம்மான். ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன்.

அரசன்மனைவி - அரசி, பெருமாட்டி, பூமிச்செல்வி, தலைவி, இறைவி, இராணி, கொற்றவை, பூமாதா.

அரசன்விருத்தம் - ஒரு பிரபந்தம்.

அரசன்விரோதி - கோவை, பூப்பருத்தி, பூவரசு.

அரசாட்சி - இராசரிகம், இராசாவினுரிமை, இராசரீகம்.

அரசாணி - அரசங்கொம்பு, அரசாணிமேடை, விவாக மண்டபத்திலே அரசங்கால் நாட்டுமேடை, இராசாத்தி, அரசி.

அரசாணிக்காய் - பூசணி.

அரசாணிக்கால் - விவாக மண்டபத்திலே அரசாணியிலே முருக்குடன் நாட்டப்படும் அரசங்கொம்பு.

அரசாணிமேடை - அரசங்கால் நட்ட விவாக மேடை.

அரசாள - அரசுசெய்ய.

அரசாளல் - இராச்சியமாளல்.

அரசாளுகை - இராச்சியஞ்செய்கை.

அரசாளுதல் - அரசுசெய்தல், அரசாள்தல்.

அரசானம் - அரசமரம், அரத்தைப்பூண்டு, அரசு.

அரசி - இராசாத்தி, ஆணி, தலைவி.

அரசிகம் - இரசமின்மை, சுவையில்லாமை.

அரசிகன் - சுவையறியாதவன்.

அரசிப்படுதல் - அரசியின் தன்மை வகித்தல்.

அரசியலாறு - அரசர்க்குரியஇயலாறு, அவை அமைச்சு, அரண், குடி, கூழ், நட்பு, படை என்பன.

அரசியல் - இராசரிகமுறை, அரசங்கம், இராசரீகம்.

அரசியானை - அரசுவா.

அரசிருக்கை - சிம்மாசனத்திருக்கை, இராசசபை, சிங்காதனம், அத்தாணி, பூரியம், ஆசாரம், வேத்தவை.

அரசிருத்தல் - இராசாவாக வீற்றிருத்தல்.

அரசிருப்பு - அரசிருக்குமிடம்.

அரசிலியை - ஒரு சிவஸ்தலம்.

அரசிலை - அரசமரத்தினிலை, மிருகங்களுக்கிடும் அரசிலைக்குறி, அரைமூடி, எருக்கின் அணி விசேடம்.

அரசிலைத்தாக்கம் - அரசிலை போலுந்தொங்கல்.

அரசிறை-கப்பம், திறை, மிறை, பாகுடம், அரசாங்கவரி, அரசர்க்கரசன்.

அரசு - இராசா, வியாழம், இராச்சிய பாரம், அரசமரம், ஒருமரம், துவர்பத்திலொன்று, அப்பர்நாடு, வியாழன், அரசனது தன்மை, அரசன், இராச்சியம், அரசாட்சி, தலைமையானது, பண்டை வேளாளர் பட்டப் பெயர், கொடியரசு, பூவரசு, ஆற்றரசு.

அரசுகட்டில் - சிங்காசனம், சிங்காதனம்.

அரசுக்காவல் - நாட்டுக்காவல்.
அரசுசெய்தல் - ஆளுதல்.
அரசுநீழலிருந்தோன் - புத்தன்.
அரசுவா - பட்டத்தியானை.
அரசுவாவினிலக்கணம் - அரசியானையினதிலட்சணம், அது நான்கு காலும் துதிக்கையும் கோசமும் வாலுமாகிய எழுறுப்பும் நிலத்திற் றோய்வுதாய்ப் பாலையுஞ் சங்கையும் ஒத்த வெண்ணிறமான கானக முடையதாய்க் கால்களாலுந் துதிக்கையாலுஞ் சரீரத்தாலும் வாலாலும் கொம்பாலுங் கொல்ல வல்லதாய் ஏழுமுழ முயர்ந்து ஒன்பது முழநீண்டு பதின்மூன்று முழஞ்சுற்றுமுடைத்ததாய்ச் சிறிய கண்களையுஞ் சிவந்த புள்ளிகளையும் உடையதாய் முன்புயர்ந்து பின்பு தாழ்ந்திருக்கும் இலக்கணத்தை யுடையது.
அரசோனம் - வெள்ளைப்பூண்டு.
அரடா - அணியுறுப்பு வகை.
அரட்சி - மனக் குழப்பம்.
அரட்டம் - பாலைநிலம்.
அரட்டர் - குறுநிலமன்னர், குறும்பர்.
அரட்டன் - குறும்பன், துஷ்டன், குறுநிலமன்னன்.
அரட்டி - அச்சம்.
அரட்டு - கருவம், குறும்பர், குறும்பு, அச்சம்.
அரட்டுகம் } தசநாடகத்தொன்று.
அரட்டுசம் }
அரட்டுதல் - பயமுறுத்தல், அரட்டல்.
அரட்டுப்புரட்டு - பொய்ப்புரட்டு.
அரட்டையடி-வீண் வார்த்தை பேசு.
அரட்டையடித்தல் - வீணிடம்பம் பேசுதல்.
அரணம் - காட்டுத்துருக்கம், வேல், பரிகாரம், செருப்பு, மஞ்சம், அழகு, கதவு, கருஞ்சீரகம், கவசம், அரணி, காவல், காவற்காடு, காவற்சாலை, கோட்டை, தொடுதோல், மதில், வேலி, கோட்டைமதில்.
அரணைசவிக்ஷை - அக்ஷரக்குறி.
அரணைம்பரம் - மதில், வேலி.
அரணி - அரணியென்னேவல், ஒரு பூடு, கவசம், காடு, சூரியன், தீக்கடைக்கோல், தீத்தட்டிக்கல், நெருப்புறு காடு, மதில், தீக்கடைகோல், சிறப்பி, அரணைக்கு.
அரணித்தபரு - கட்டி.
அரணித்தல் - காவல் செய்தல், உரத்தல், சிறப்பித்தல், முறைத்தல், அரண்செய்தல், அலங்கரித்தல், கடினப்படுதல்.
அரணிப்பு - அடைப்பு, அழகு, காவல், சிறப்பிக்கை, முறைப்பு, வைரிப்பு.
அரணிய - அரணையுடைய, காவலையுடைய.
அரணியகதலி - காட்டுவாழை.
அரணியசடகம் - காட்டுக்கவுதாரி.
அரணியசாரணை - காட்டிஞ்சி, அரணிய சாறணை.
அரணியம் - காடு, ஆரணியம்.
அரணியவரணி - பெருங்காடு.
அரணியவான - சொற் செறிவுடைய.
அரணியன் - காட்டிலிருப்பவன், அடைக்கலமானவன்.
அரணியா - காட்டுக்கருணை.
அரணியானி - பெருங்காடு.
அரணிருக்கை - கோட்டை.
அரணை - ஒரு செந்து, பாம்பரணை.
அரணைப்புத்தி - ஞாபகக் குறைவான புத்தி.
அரண் - நிலவரண், நீரரண், மலையரண், காட்டரண், காவற்காடு, வேலாயுதம், வேல், அழகு, காவல், கோட்டை, மதில், மலை, காடு, கடல்.
அரண்மனை - அரசன் றெவியில், மாளிகை, கோட்டை, உண்மனை, மன்றேவியில்லம், இராசகிருகம்.
அரண்யம் - அரணியம்.
அரதனமாலை - ஓர் அலங்காரம்.

அரதனம் - இரத்தினம், அகன்மணி, சிலம்பணி, கவமணிப் பெ ரா து, மிருதபாஷாணம், சிலமபு.

அரதனகரம - இரத்தினமெடுக்குஞ் சுரங்கம், சமுத்திரம், இரத்தினாகரம்.

அரதி - வெறுப்பு, வேண்டாமை.

அரதிகோபம் - திருத்தியின்மை, வருத்தம்.

அரதிமறதி - ஞாபகத்தவறு.

அரதேசி - பரதேசி, அகதேசி.

அரதைப்பெரும்பாழி - ஒருதலம்.

அரத்தகம் - செம்பஞ்சு, அலத்தகம்.

அரத்தம் - செம்பருத்தி, ஒருவகைத் துகில், அரக்கு, இரத்தம, குங்குமப்பூ, சிவப்பு, செங்கடம்பு, செங்கழுநீர், செங்குவளை, செம்பஞ்சு, செமபரத்தம், செம்பருந்து, செம்மெழுகு, செமமை, பவளம், பொன், செம்பரத்தை, கடம்பு.

அரத்தனம் - இரத்தினம்.

அரத்தன் - செவ்வாய்.

அரத்தாங்கம் - செவ்வாயென்னுங்கிரகம், பவளம், மூட்டை.

அரத்தி - செவ்வல்லி.

அரத்தினி - சிறுவிரனீட்டிய பிடிமுழம், முழங்கை.

அரத்துறை - ஒரு சிவஸ்தலம்.

அரத்தை - பேரரத்தை, சிற்றரத்தை, செடிவகை, ஒரு மருந்து, மூடக்கொற்றன்.

அரத்தோற்பலம் - செங்கழுநீர், செங்குவளை.

அரநி - ஓரிட்ட தேவதை.

அரந்தை - குறிஞ்சிப்பண், மனக்கவலை, வருத்தம், துன்பம், மனக்கவர்ச்சி, விதனம்.

அரந்தையன் - தரித்திரன்.

அரபத்தநாவலர் - பரத சாஸ்திர நூலாசிரியர்.

அரபி - கடுக்காய், காடு, அரபிதேசம், ஒரு பாஷை.

அரபீசம் - பாதரசம்.

அரப்பள்ளியான் - சர்ப்பசயனனாகிய விட்டுணு.

அரப்பிரியை - உமாதேவி, உமை.

அரப்பு - அரைப்பு.

அரப்பொடி-இரும்புத்தூள், அரபொடி

அரமகளிர் } தெய்வப்பெண் பொது,
அரமகள் } தேவமாதர்.

அரமங்கை } தெய்வப்பெண்,
அரமடந்தை } அரமகள்.

அரமனை - இராசமனை, அரண்மனை, அரசுமனை.

அரமனையார் - அரண்மனையில் வேலை செய்வோர்.

அரமாதர் - தெய்வப்பெண்.

அரமாரவம் - நாயுருவி.

அரமி - கடுக்காய்.

அரமியம் - அரண்மனை, நிலாமுற்றம், பிரமிப்பூண்டு, வீட்டின் மேலுலாவும் வெளி, பிரமி, மேல் வீடு.

அரமுறி - இரும்புமுறிச்செடி, இருப்புமுறி.

அரம் - உதை, ஒருகருவி, கதவு, குகை, கீழறை, முடுகியல், வானரம், பாதலம், அராவுங்கருவி.

அரம்பணம் - வெற்றிலை நறுக்குங் கருவி.

அரம்பன் - குறும்புசெய்வோன்.

அரம்பிலம் - பாதாளம்.

அரம்பு - குறும்பு, ரோதனம், தீங்கு.

அரம்பை - அசமதாகம், தெய்வப் பெண், வாழை, ஓமம்.

அரம்பையர் - தெய்வமகளிர, தெய்வமாதர்.

அரயன் - அரசன், இராசா.

அரரம் - கதவு, மறைவு, அரரி.

அரரி - கதவு.

அரரு - சத்துரு.

அரர் - தீர்த்தங்காருள் ஒருவர்.

அரலை - கடல், கழலை, குற்றம், கொடும்பு, கோட்டை, மால், விதை, கொடு, முதுக்கு, பொடிக்கல்.

அரவகங்கணத்தோன் } சிவன்.
அரவக்கரையன் }
அரவக்கிரி - வேங்கடமலை.
அரவக்கொடியோன் - துரியோதனன்.
அரவச்சுடிகை - சர்ப்பத்தின் தலையிலிருக்குஞ் சூட்டு.
அரவஞ்செய்தல் - மனங்கலக்குதல், சத்தமிடுதல்.
அரவணிந்த மூர்த்தி } சிவன், அரவாபரணன்.
அரவணிந்தார் }
அரவணிந்தோன் }
அரவணை - அநந்தன், சேஷசயனம், தழுவு, விஷ்ணு கோயில் சருக்கரைப் பொங்கல்.
அரவணைச்செல்வன் - விட்டுணு, அரவணையான்.
அரவணைத்தல் - ஆதரித்தல், சேர்த்துக்கொள்ளுதல், தழுவிக்கொள்ளல், தழுவுதல்.
அரவணையான் - விட்டுணு.
அரவதண்டம் - யமதண்டனை.
அரவதுவசன் - துரியோதனன்.
அரவப்பகை - கருடன்.
அரவமணி - உருத்திராக்கமணி, நாகரத்தினம்.
அரவமின் - நாகலோகப்பெண்.
அரவம் - படையெழுச்சி, சர்ப்பம், ஆயிலியநாள், அரிபெய்சிலம்பு, ஒலி, சிலம்பு, பதஞ்சலி முனிவர், மனக்கலக்கம், பாம்பு, பேரொலி, ஆயிலியம், இராகு கேதுக்கள்.
அரவரசோன் - பதஞ்சலி முனிவன்.
அரவர் - தமிழர்.
அரவன் } சிவன், சிவபிரான்.
அரவாபரணன் }
அரவாய்க்கடிப்பகை - வேப்பிலை.
அரவான் - அருச்சுனனுக்கு நாககன்னியிடம் பிறந்தவன்.
அரவிசிட்டம் - சிவசம்பந்தம்.
அரவித்தல் - ஒலித்தல், அரவஞ்செய்தல்.
அரவிந்தம் - தாமரை, நாரைப் பறவை, செம்பு, மன்மதன் கணையிலொன்று.
அரவிந்தலோசனன் - விட்டுணு.
அரவிந்தன் - பிரமன்.
அரவிந்தாக்கன் - விட்டுணு.
அரவிந்தை - இலக்குமி.
அரவினுள் - அரவுநாள், ஆயிலியம்.
அரவீசம் - பாதரசம்.
அரவு - ஆயிலியம், ஒலி, பதஞ்சலி முனிவர், வைக்கோற்பழுதை, பாம்பு, அரா.
அரவுதல் - வருத்துதல், அரவஞ்செய்தல்.
அரவுநாள் - ஆயிலியநாள்.
அரவுயர்த்தவன் } துரியோதனன்.
அரவுயர்த்தோன் }
அரவுயிர்ப்பு - பாம்பின்சத்தம், பாம்பின் மூச்சு.
அரவெனுந்துதி - கருமசாந்தி.
அரவொலி - ஹர என்று சிவனை நோக்கிச்சொல்லும் சத்தம்.
அரவோன் - பதஞ்சலி முனிவன்.
அரளல் - பிரமித்தல்.
அரளி - நாறிமரம், பீநாறி, ஒருவகைப் பூச்செடி, பெருமரம், அலரி.
அரளித்தொக்கு - பீநாறிப்பட்டை.
அரளுதல் - பிரமித்தல், மிகவஞ்சுதல்,
அரஸ - சூரியன் தேவி.
அரஸசரஸ - பருக்கைக்கற்கள்.
அரள் - அரளு.
அரள்தல் - அரளுதல், பீதியடைதல்.
அரற்றல் - அரற்றுதல், யாழ்நரம்போசை.
அரற்று - ஒலி, புலம்பல், குறிஞ்சியாழ்த்திறவகை பலவுஞ் சொல்லியழுது தன் குறை உறுதல், அழு.
அரற்றுதல் - ஆரவாரித்தல், அழுதல், ஒலித்தல், புலம்புதல்.
அரனுள் - திருவாதிரை.
அரனிடத்தவள் - பார்ப்பதி, உமை, பார்வதி.
அரனெறி - ஒரு சிவாலயம்.

அரன் - எப்பொருட்கு மிறைவன், சிவன், பதினெருருத்திராரிலொரு வன், மஞ்சள், மாலியின் குமா ரன்.

அரன்மகன் - குமரன், முருகக் கட வுள், விநாயகன், வீரபத்திரன்.

அரன்வெற்பு - கயிலைமலை.

அரன்றோழன் - குபேரன், அரன் தோழன்.

அரா - அராவெண்னேவல், ஆயிலிய நாள, ஈகமல்லி, பாம்பு, அரவம்.

அராகதத்துவம் - வித்தியாதத்துவமே ழிஞ்ஞான்று, அது வித்தையிலி ருந்து தோற்றிப் போகத்திலே ஆசையை யெழுப்புவது.

அராகபகவான் - புருஷதத்துவத்திற் கும் அராகதத்துவத்திற்கும் அபி மான தேவதை.

அராகம் - சுக்கராகம், இச்சை, அடங் காமை, அவா, ஒரு பண், சிவப்பு, பரதவுறுப்புளான்று, பாலை யாழ்த்திறம், பொன், முடுகியல், வண்ணகவொத்தாழிசைக் கலிப் பாவிலெருறுப்பு, இராகம், இச் சையின்மை, ஆசை, இச்சை.

அராகவொத்தாழிசைக்கலிப்பா - வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா.

அராகித்தல் - இடையருது கடுகிச் செல்லுதல்.

அராக்கோள் - இராகுகேதுக்கள்.

அராக்கோன் - இராகுகேது.

அராசகம் - தேசம், அரசியலற் றிருக்கை.

அராதி - சத்துரு.

அராதிபங்கம் - முறியடித்தல்.

அராத்தல் - அராத்துதல், நினைப்பூட் டுதல், தேய்த்தல்.

அராத்திரி - கைலாசமலை.

அராத்துதல் - அராத்தல், மிண்டுதல்.

அராவட்டு - பிடிகொடாத கொண் டாட்டம், வேண்டாவெறுப்பு.

அராந்தாணம் - சைனப்பள்ளி, சைனர் கோவில்.

அராபதம் - போர், வண்டு.

அராப்பொடி - இரும்புத்தூள்.

அராமம் - சோலை, பயிர்.

அராமி - கெட்டவள், கெட்டவன், கொடியன்.

அராமுனி - பதஞ்சலிமுனி.

அராமை - கீழ்மகள்.

அரால்ம் - கொடுவாள், மதயானை, வளைந்தது.

அராலை - நாட்டியப்பெண், வேசி.

அராவணம் - புலம்பாமை.

அராவணல் - ஆதிசேடன்.

அராவணை - அரவணை.

அராவல் - அழுத்தல், உராஞ்சல், மிண் டல், தேய்த்தல்.

அராவவெங்கொடியோன் - துரியோ தனன்.

அராவாரம் - திராட்சைப்பழம், கொடி முந்திரி.

அராவான் - அருச்சுனனுக்கு உலூபி யிடம் பிறந்த மகன்.

அராவு - அரத்தால் தேய்.

அராவுதல் - அராவல், அரத்தால் தேய்த்தல், உரசுதல், மாறுபடுதல், அராத்துதல்.

அராவெரி - கருடன், கீரி, மயில்.

அரானகடகாமுகம் - நிருத்தக்கை முப் பதனுளொன்று.

அராளம் - இருவாட்சி, குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம்.

அரி - அடர்பு, அரிசி, அரிகை, அரில், அரிப்பிடி, அரியென் னேவல், அழகு, ஆயுதப்பொது, அரு, ஈர் வாள், உட்டுளைப் பொருள், ஐமை வடிவு, ஒளி, ஒரு கண்டம், கடல், கட்டில், கண், கண்வரி, கதிர் அறுக் கும் பருவம், இந்திரன், இயமன், கள், காற்று, கிரணம், கிள்ளை, கிளி, குடியிறை, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, கைப்பிடிக்கதிர், அரிக்கை, இடை விடுகை, ஆயுதம், அரிதாளம், கொடுவேலி, சக்கரம், சத்துரு, சந்திரன், சிங்கம், சிங்

கவிராசி, சிலம்பின் பருக்கைக் கல், சிலம்பினுட்பரல், சிலம்பு சில்லு, தகடு, சிவன், அக்கினி, சூரியன், செம்மறியாட்டுக்கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நித்திரை, நிறம், நெருக்கம், நெல், நெற்கதிர், பகை, பகைவன், பச்சை, படுக்கை, பறை, பன்றி, பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மலை, மயில், மழை, மழைத்தூவல், மாலை, மூங்கில், மென்மை, வாயு, வண்டு, வரி, வலி, கொழி, கொந்து, கழுவு, தினவெடு, பனங் கருக்கு, விசி, மக்கள் தூயிலிடம், தகட்டு வடிவு, தெருச்சந்தி, பூமாலை, வலிமை, மரக்காழ், நீர்த் திவலை, மஞ்சள் நிறம், நெருப்பு, திருவோணம், தூளசி, வில், விட்டுணு, ஹரி, வெற்றி, கருடபுத்திரன்.

அரிகண்டபுலவர் - காளமேகப் புலவர்.

அரிகண்டம் - ஒரு விரத வேடம். அது கழுத்தி லிருப்புத்தகடுகள் இணைத்துச்செய்த ஒரு சட்டத்தை யணிந்து செய்வது, தொந்தரை, ஈவகண்டத்திலொன்று, அரிவரு டம்.

அரிகண்டம்பாடுதல் - கழுத்தில் கத்தி கட்டிக்கொண்டு எதிரி கொடுக் கும் சமிசைக் கிணங்கப் பாடுவது. எதாவது தவறிஞ லக்கத்தியால் வெட்டுண்ண வேண்டிவரும்.

அரிகயிறு - அரிநூற்பொறி, தொட்ட கையை அரியும் நூற்பொறி.

அரிகரகுமரன் } ஐயனர், மாசாத்
அரிகரபுத்திரன் } தர்.

அரிகரப்பன் } வாதக்கரப்பான்,
அரிகரப்பான் } அரிக்குங்கரப்பான்.

அரிகரன் - பாதி சிவன் பாதி விஷ்ணு வாய் நின்ற சங்கரநாராயணன் திருவுரு, கேசவார்த்தம்.

அரிகரி - அத்திக்கொழுந்து.

அரிகல் - மகாமேரு.

அரிகளவம் - நதி.

அரிகள் - பகைவர்.

அரிகறையான் - செல்லு, தொந்தரை செய்வோன்.

அரிகாந்தி - விஷ்ணுக்கிராந்தி.

அரிகாம்போதி - இருபத்தெட்டாவது மேளகர்த்தா.

அரிகால் - அரிதாள்.

அரிகிணை - மரவயிரத்தாற் செய்யப் பட்ட ஒரு மருதநிலவாத்தியம், கிணைப்பறைவகை.

அரிகிராமம் - வித்தர்ப்பதேசத்திலுள்ள ஒரு பட்டணம்.

அரிகீரை - அறைக்கீரை.

அரிகுரல் - கரகரத்தல்.

அரிகுரவன் - நாயர் ஜாதிகளில் ஒரு வகை.

அரிகூடம் - கோபுரவாயில், கோபுர வாயின் மண்டபம்.

அரிகேசம் - சூரியனுடைய கதிர் களின் ஒன்று.

அரிகோராதினி - ஓரிட்ட தேவதை.

அரிக்க - தினவுபிடிக்க.

அரிக்கட்டு - அரிவிக்கட்டு, கதிர்க் கட்டு.

அரிக்கஞ்சட்டி - அரிக்குஞ்சட்டி.

அரிக்கண்சட்டி - அரிசியரிக்கிற சட்டி.

அரிக்கரியார் - சிவன்.

அரிக்காந்தி - விட்டுணு காந்திப் பூண்டு.

அரிக்காரன் - வெள்ளித்தடி பிடித்துக் கட்டியங் கூறுவோன்.

அரிக்கிராவி - நெல்வகை.

அரிக்குஞ்சட்டி - அரிசி களையுஞ் சட்டி.

அரிக்குதல் - அரித்துப் போடுதல், பேச்சிஞல் வருத்துதல்.

அரிக்குழி - பிள்ளைகள் ஹரி என்று தொடங்கி எழுதுவதற்காகத் தோண்டிய குழி.

அரிசட்டுவர்க்கம் - உலோபம், காமம், குரோதம், மோகம், மதம், மற்சரம் என்னும் ஆறு பகையின் கூட்டம்.

அரிசந்தனம் - ஐந்தருவிலொன்று, ஒருவகைச் சந்தனமரம், தாமரைப் பூந்தாது, நிலவு, மஞ்சள்.

அரிசமயதீபம் - ஒரு நூல்.

அரிசம் - அமாவாசையதிகமும், பிரதமை குறைவுமாகக் கூடி நிற்குந் தினம், மகிழ்ச்சி, மிளகு.

அரிசயம்-எலுமிச்சை, சரக்கொன்றை, கொன்றைமரம்.

அரிசரன் - சிவன்.

அரிசலம் - எலுமிச்சை, கொன்றை மரம்.

அரிசனம் - மஞ்சள்.

அரிசா - பெருங்குமிழி மரம்.

அரிசாரம் - பழுப்பு.

அரிசி - ஒரு தானியம், தண்டுலம், அரி, பரிவம், வீயம், மூங்கிலரிசி முதலியன.

அரிசிகோதல் - அரிசியைச் சுத்தம் பண்ணுதல்.

அரிசிக்கம்பு - கம்புப் பயிர்வகை.

அரிசிக்காடி - புளித்த கஞ்சி.

அரிசிக்காணம் - பழைய வரி வகை.

அரிசிச் சாதம் - அரிசிச் சோறு, அபக்குவமான சோறு.

அரிசிப்புல் - மத்தங்காய்ப்புல்.

அரிசியாக்கு - பொடியாக்கு.

அரிசிரங்கு - சொறிசிரங்கு.

அரிசில் - ஒரு நதி, ஒரு ஊர்.

அரிசில்கிழார் - ஒரு புலவர்.

அரிசு - தேன், மிளகு.

அரிசேவை - ஒரு நர்த்தனம்.

அரிசொல் - கும்பகோணத்துள்ள ஒரு நதி.

அரிசோபகந்தரவிரணம் - மூலபகந்தரம்.

அரிசோரோகம் - ஆண் குறியில் வரு மொருவகையுரோகம், அது வாத பித்தகபங்கள் இரத்த மாமிசங்களே அணுசரிக்கும்போது பிறப்பதும் அப்போ தாண்குறியி னுள்ளிலாவது வெளியிலாவது நமைச்சல், அவ்விடங்களின் மூலரோக மூளைகளைப்போலுஞ் சிறு சிறு காளான் மூளைகளைப்போலும் மாமிசம் எழும்புதல், அவைகளில் மிக வியர்வை கசிதல், இரத்தம் வடிதல் என்னும் இக் குணங்களுண்டாவதுமானது.

அரிசோவர்த்தமரோகம் - கண்ணிமையில் வரும் ஒருவகை ரோகம். அது இமைச் சந்திகளிலே துர்மாமிசம் வளரக் கண்களின் மரத்தல், மினுமினுப்பு, எரிச்சல், சிவப்பென்னும் குணங்களுண்டாதல்.

அரிச்சந்தனம் - ஐந்தருவி லொன்று, சந்தனம், கூரைக் கைதாங்குங் கட்டை.

அரிச்சந்திர } பிரதிட்ட கலையிலே
அரிச்சந்திரம் } தேயு தத்துவத்திலே உள்ள எட்டுப் புவனங்களிலொன்று.

அரிச்சந்திரன் - அறுவகைச் சக்கிரவர்த்திகளிலொருவன், அவன் சத்தியத்திற்குப் பேர் போனவன், இடையெழுவள்ளலிலொருவன்.

அரிச்சனை - பூசனை.

அரிச்சிகன் - சந்திரன்.

அரிச்சிதர் - ஓர் ருஷி.

அரிச்சுக்கட்டி - கண்டதைத் தனக்கென்று சேகரிப்போன்.

அரிச்சுவடி - அரிவரியேடு, நெடுங்கணக்குப் புத்தகம்.

அரிச்சுனம் - எருக்கு, மருதமரம்.

அரிஷணம் } நித்தியயோகத்
அரிடணம் } தொன்று.

அரிஷம் - உரோமப்புளகம்.

அரிடம் - கடுகுரோகிணி, வேம்பு.

அரிடிகம் - சிற்பநூல் மூப்பத்திரண்டிலொன்று.

அரிட்சி - பயம்.

அரிட்டசூதனன் - விட்டுணு.

அரிட்டநேமி - சூரியனுடைய துவாதச சாரதிகளுலெசருவன்.

அரிஷ்டம் } அதிட்டம், அந்தர்ப்
அரிட்டம் } புறம், அமங்களம், உற்பாதம், கள், காக்கை, கேடு, சுபம், சென்ம தோஷம், தாமிரம், பங்கம், பிரசவிக்கும் வீடு, புள்ளி, பூண்டு, மங்கலம், மரணக்குறி, மூட்டை, மோர், வம்பு, வெள்வெங்காயம், வேம்பு, நீங்கு, காகம்.

அரிட்டன் - ஓர் அசுரன்.

அரிட்டானகம் - அபசயம், பயங்கரம்.

அரிட்டித்தல் - கொல்லல், கொல்லுதல்.

அரிட்டை - கடுகுரோகிணி, கந்தருவராயிரவர் தாய், நீங்கு.

அரிணம் - கடல், சிவப்பு, பொன், மான், யானை, வெள்ளை.

அரிணவம் - கடல்.

அரிணன் - சிவன், சூரியன், விஷ்ணு.

அரிணுங்கன் - சந்திரன்.

அரிணி - பெண்மான், வஞ்சிக்கொடி, அருணி.

அரிணை - கள்.

அரிதகி - கடுக்காய் மரம்.

அரிதகிக்காய் - பச்சைக் கடுக்காய்.

அரிதம் - திக்கு, இருண்ட நீல நீறம், திசை, பசும்புள்ளிலம், பச்சை, பொன்னிறம், மஞ்சள்.

அரிதர் - ஓர் இருடி.

அரிதல் - சேதித்தல், அறுத்திடல், விடுவாய் செய்திடல், சூலல், கொய்தல், ஈறுதல், அறுத்தல்.

அரிதவெலி - மஞ்சணிறமுள்ள ஒரு வகையெலி. அது கடித்தாலக்கினி மந்தமும், கொட்டாவியும், மயிர்க்கூச்செறிவும் உண்டாகுமென்பர்.

அரிதளம் - பொன்னரிதாரம், அரிதாரம்.

அரிதாசர் - ஒரு பாகவதர், ஒரு புலவர்.

அரிதாசன் - தமிழில் இருசமய விளக்கஞ் செய்த புலவன்.

அரிதாரகக்கட்டு - தாளகக்கட்டு.

அரிதாரம் - அரித்திராபம், இலக்குமி, பழுப்பு, ஒரு மருந்து, தாளக பாஷாணம், கஸ்தூரி.

அரிதாரவகை - அரிதாரத்தினது வகை, அவை கட்டியரிதாரம், கரட்டரிதாரம், கனத்தீயரிதாரம், தகட்டரிதாரம், தாளகம், பொன்னரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம் என்பன.

அரிதாலம் - அரிதாரம்.

அரிதாலிகை - புரட்டாசிமாதச் சுக்கிலபக்கச் சதுர்த்தி.

அரிதாளம் - நவதாளத்தொன்று, பொன்னரிதாரம், அரிதாரம்.

அரிதாள் - ஓட்டு, கதிரறுத்தாள்.

அரிதானம் - அரிதாரம்.

அரிதிருமருகன் - விநாயகர் அல்லது சுப்பிரமணியர்.

அரிதினம் - ஏகாதசி.

அரிதின்வயச்சி - திருநாமப்பாலை, நன்னரி.

அரிது - அரியது, பச்சை, அருமையானது, அருமை.

அரிதேவம் - திருவோணநட்சத்திரம்.

அரிதை - பகைமை, வன்மம்.

அரிதொடர் - துவக்கும் சங்கிலிகளுள் ஒருவகை, தொட்டாற்கையை அரியும் சங்கிலிப்பொறி.

அரித்தல் - அணில், எலி முதலிய வறுத்தல், புன் முதலியவற்றைத் தூசுகளை நீக்கியெடுத்தல், மரமுதலியவற்றைப் பிரித்தெழுக்குதல், தினவெடுத்தல், மேய்தல், கொழித்தெடுத்தல், கூட்டுதல், நீர் அறுத்துச் செல்லுதல், நீரில் கழுவிப் பிரித்தல், பூச்சி தின்னுதல், இம்சித்தல், தூரு முதலியன தின்னுதல், நீக்குதல், படைத்தல், இடைவிடுதல், சங்கரித்தல், சிறிது சிறிதாகக் கவர்தல்.

அரித்தவிசு - சிங்காசனம், சிங்காதனம்.

அரித்திரம் - கந்தம், சுக்கான், மஞ்சள்.

அரித்திரா - மஞ்சட்கிழங்கின் மாமஞ் சள்.

அரித்திராசுரம் - ஒரு வகைச் சுர நோய். அது சர்வாங்கத்திலும் மஞ்சள் வண்னத்துடன் தடிப்பு, சயித்தியம், சடத்துவம், முகத்தில் எண்ணெய் தடவினதுபோலப் பிசுபிசுத்தல், நகங்களிலும் கண்களிலும் நோவு, கீல்களில் வீக்கம், எப்பம், கொட்டாவி, விக்கல், கைகால் குளிர்ச்சி, சிரோபாரம், தலைத்திருப்பல், நாவு கசத்தல், தாகம், நெஞ்சுலர்தல், மார்பெரிச்சல், அக்கினிமந்தம், மலபந்தம், பலவீனம், அரோசகம், வாயினுரை வீழ்தல், அதிகப்பேச்சு என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

அரித்திராபம் - பொன்னிறம், மஞ் சள்.

அரித்திராப்பிரமேகரோகம் - ஒரு வகைப் பிரமேகரோகம். அது மஞ்சணிறமான வெள்ளைக்காணல், சூடாக நீரிறங்கல், நெருப்பைக் கொளுத்தினதுபோலளரிச்சலுடன் கூடிய கடுப்பு, விருவிருப்பு, அதிக உஷ்ணம், முகத்தின் மஞ்சணிறம், நாவிற்கசப்பு, மனந்திடுக்கிடல் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

அரித்திராமேகம் - போகத்தால் வீளாந்த பித்தவெட்டை.

அரித்திரான்னம் - மஞ்சட்சாதம்.

அரித்து - அரித்தலைச் செய்யென்னச் சம், பச்சை.

அரித்துவசம் - சிங்கக்கொடி.

அரித்துவசன் - சிங்கக்கொடியை யுடையோன், வீமன்.

அரித்துவஞ்சத்துவம் - இருபத்தைந்து சிவமூர்த்தத்தொன்று, அது யமனைச் சங்கரித்த மூர்த்தம்.

அரித்துவம் - பகைமை.

அரித்துவாரம் - கங்காநதியுற்பத்தி, மாயாபுரி, ஒருமகாதலம்.

அரித்தை - கிலேசம், துன்பம், வினை முற்று.

அரிதர் - அறுப்பார், அறுப்பவர்.

அரிநாதம் - அறைகூவுதல், சிங்க நாதம்.

அரிதி - சித்தினிச் சாதிப்பெண்.

அரிதிம்பம் - மலைவேம்பு.

அரிநூற்பொறி - நகரத்தின் மதிலில் வைக்கப்படும் பொறிகளிலொன்று.

அரிநெல்லி - ஒருமரம்.

அரிந்தமன் - விட்டுணு, வெற்றியாளன், பகைவரை அடக்குவோன், திருமால்.

அரிபடை வட்டம் - எழுநரகத்தொன்று.

அரிபாகர் - அரியர்த்தர்.

அரிபாலுகம் - தக்கோலச்செடி, தக்கோலம் விதை.

அரிபிராணன் - சிவன்.

அரிபிரி - அரிபிரியம், தானிய முதலியன அரிதாகுகை.

அரிபிளவை - ஒரு சிலந்தி, விஷப் புண் வகை.

அரிபிறப்பு - பத்துவிட்டுணுவின் பிறப்பு.

அரிபீடிகை - சமஸ்கிருத பாஷையிலுள்ள ஒரு வியாகரணநூல்.

அரிபுதை - இரவு.

அரிபுரம் - சத்துருப்பட்டணம்.

அரிபுழு - அரிக்கும் புழு.

அரிபூச்சி - அரிக்கும் பூச்சி.

அரிபெட்டி - சல்லடை, மரமுதலியவற்றை அரிக்கும் பெட்டி.

அரிப்பதாகன் - வீமன்.

அரிப்பர் - அரித்துப் பொருள் தேடுவோர்.

அரிப்பறித்தல் - கொழித்தெடுத்தல்.

அரிப்பறை - அரித்தெழும் ஓசையையுடைய பறை.

அரிப்பன்
அரிப்பாளன்
அரிப்பான் } அரிப்புக்காரன்.

அரிப்பிணை - பெண்சிங்கம்.

அரிப்பிரத்தம் - இந்திரப் பிரத்தம்.
அரிப்பிரியம் - கடம்பு, சங்கு.
அரிப்பிரியை - இலக்குமி, பிரித் தெடுக்கை.
அரிப்பு - அரித்தல், குற்றம், தினவு, கோபம்.
அரிப்புக்காரன் - பொன் முதலியவற் றைத் தெரிக்கிறவன், அரித்துப் பொருள் தேடுவோன்.
அரிப்புக்கூடை - அரிப்பெட்டி, சல் லடை.
அரிப்புழுக்கல் - சோறு.
அரிப்பெட்டி - அரிபெட்டி, சல்லடை.
அரிமகன் - வாயுவின் மகனாகிய வீமன்.
அரிமஞ்சரி - குப்பைமேனி.
அரிமணல் - நுண்மணல்.
அரிமணி - மரகதரத்தினம், மரகதம்.
அரிமேை - அரிவாண்மேை.
அரிமதா - வெள்வேல்.
அரிமந்திரம் - சிங்கத்தின் குகை.
அரிமருகன் - முருகன், விநாயகன்.
அரிமருத்தனன் } மாணிக்கவாசகப்
அரிமர்த்தனன் } பெருமான்காலத் திருந்த ஒரு பாண்டியன், சத்துரு வைச் சங்கரிப்போன்.
அரிமல் - மாவிலிங்கு.
அரிமா - ஆண்சிங்கம், சிங்கவிராசி, சிங்கவேறு.
அரிமாநோக்கம் - சிங்கத்தின் பார் வை, அது முன்னும் பின்னும் பார்த்தல்.
அரிமாநோக்கு - செய்யுணினை சூத் திர நிலையிலொன்று.
அரிமான் - ஆண்சிங்கம், அரிமா.
அரிமுகச்சிவிகை - சிங்கத்தலைச் சிவி கை. அது சமயவாதிகளென்ற ஆசிரியர்களேறுவது.
அரிமுகவம்பி - சிங்கமுகவோடம்.
அரிமுகன் - சிங்கமுகாசுரன்.
அரிமுக்கை - மூன்று கைப்பிடியாக எடுக்கப்படும் ஒருவகை நெல்லா யம்.
அரிமேறை - நெற்கள சுதந்திரவகை.
அரிமைதா - வெள்வேலமரம்.
அரிய - அருமையான, அருமை.
அரியகம் - காற்சரியென்னும் ஆபர ணம், கொன்றைமரம், பாதசரம்.
அரியகொள்கை - தாபதற்குரிய அரிய இயல்பு. அவை பலதருமு நீரின் மூழ்கல், நிலத்திற்கிடத்தல், தோ லுடுத்தல், அக்கினியோம்பல், ஊர டையாமை, சடைதரித்தல், காட் டிலுணவு, கடவுள் பூசை என எட்டு.
அரியசம் - கொன்றை, சரக்கொ ன்றை.
அரியசாரணை - மாவிலிங்குமரம்.
அரியணை - சிங்காசனம், சிங்காதனம்.
அரியணைச்செல்வன் - அருகன்.
அரியண்டம் - அரிகண்டம்.
அரியதரம் - அதிரசம், ஒருபணிகா ரம்.
அரியது - அருமையானது.
அரியபச்சை - வங்காளப்பச்சை.
அரியமன் - துவாதசாதித்தரி லொரு வன்.
அரியமா - அரியமன், ஒரு பிதிர்தேவ தை, சூரியன்.
அரியமான் - அதிதியின் புத்திரராகிய சூரியர் பன்னிருவரிலொருவன், பிதிரர்கள் தலைவனுகிய வரிய மன்.
அரியம் - வாச்சியம்.
அரியயற்கரியார் } சிவ பெரு
அரியயற்கரியோன் } மான்.
அரியரபுத்திரன் - அரிகரபுத்திரன்.
அரியர் - கிடைத்தற்கருமையானவர்.
அரியல் - அரிதல், கள், வியங்கோண் முற்று.
அரியன் - அருமையானவன், சிரேட் டன், மேலானவன், வைசியசூலத் தோன்.
அரியாசம் - ஒரு வாசனைத்திரவியம்.
அரியாசனம் - சிங்காசனம், சிங்கா தனம்.

அரியாணி - வைசிய ஜாதிப்பெண்.
அரியாயோகம் - கருவிலக்காகப் பூணுந்த அவரைப்பட்டிகை, மருந்து.
அரியார் - ஒரு பட்டினவசாதி வகுப்பு.
அரியார்பவம் - பத்து.
அரியான் - நெல்வகை.
அரியுண்மூலம் - கோரைக்கிழங்கு.
அரியூர்தி - சிவன்.
அரியெடுப்பு - ஒரு அளவு.
அரியேறி - தூர்க்கை.
அரியேறு - ஆண்சிங்கத்தினது சாயலாகச் செய்யப்பட்ட வடிவம், ஆண் சிங்கம்.
அரிராசி - களகதந்திரவகை.
அரில் - குற்றம், சிறுதூறு, பகை, பிணக்கு, சிறுகாடு, மூங்கில், பின்னல், மாறுபாடு.
அரிவட்டம் - கழுத்திலே மாட்டும் அரிகண்டம்.
அரிவரி - அரிச்சுவடி, நெடுங்கணக்கு, எழுத்துவருக்கம்.
அரிவருடம் - சலகண்டத்துளொன்று. அது ஏமகிரிக்கும் நிடதகிரிக்கும் இடையேயுள்ளது, நவவருடத்துள்ளொன்று.
அரிவாட்கள்ளன் - கூன்வாள் பிடிக்குங்கைப்பறண்டையில் வருநோய்
அரிவாட்சொண்டன் - கடலில் திரியும் ஒரு கொக்கு.
அரிவாட்டயர் - அறுபத்து மூன்று நாயன்மாருளொருவர்.
அரிவாட்பெட்டி - மரமேறிகள் உபயோகிக்கும் ஆயுதப்பெட்டி.
அரிவாண்மனை - அரிவாண்மனைப் பூண்டு, காய் முதலிய கறி பதார்த்தங்களை அரியுங்கருவி, செறிக்கப்பட்ட பலகை, கறி குறைக்குங் கருவி.
அரிவாண்மனைப் பூண்டு - ஒருவகைப் பூண்டு, செடிவகை.
அரிவாண்மூக்கன்-ஒரு கொக்கு, ஒரு வகைப் பூண்டு, அரிவாட் சொண்டன்.
அரிவாள் - குயம், கூனிக்குயம், கொடுவாள், புள்ளம், ஈர்வாள், குனிக்குலம், கூன்வாள், கூனிரும்பு, வெட்டரிவாள்.
அரிவாள்மனை - ஒருபூண்டு, கறி குறைக்கும் கருவி.
அரிவி - அரிகதிர், கதிர்ப்பிடி.
அரிவிகொய்தல் - அறுத்தல்.
அரிவிக்கள்ளன் - அரிவி பிடிக்கும் கைப்பிடிப்பு, கைப்பறண்டையில் வரும் நோய்.
அரிவிமயிர்-வீரர் வேல் நுனியிலணியும் பறவை மயிர்.
அரிவியரிவாள் - கருக்கரிவான்.
அரிவை - இருபத்தைந்து வயதுப் பெண், தேவப்பெண், பெண் பொது.
அரிவைபங்காளன் - சிவன்.
அரிள் - பயம்.
அரினி - தெய்வப்பெண்.
ஆரீடம் - கடுகு, கடுகுரோகிணி.
ஆரீதன் - விச்வாமித்திரன் குமரன்.
அரு - அணு, அறிவு, மாயை, காயம், உருவமற்றது, கடவுள், சித்த பதிவு, அட்டை.
அருக - நெருக்கமாக.
அருகசரணம் - அருகனேச்சரண் புகுகை.
அருகசனி - பேரேலப்பூண்டு.
அருகஞ்சி - சீந்திற்கொடி.
அருகணி - பிரண்டைக்கொடி.
அருகணை - நுழைவாயிலின் பக்கம்.
அருகணைத்தல் - தழுவல்.
அருகதாசன் - ஒரு சைநகவி.
அருகத்து - பௌத்த மதத்தினது நியானங்கள்ஐந்தனுள்நான்காவது.
அருகந்தர் - அருகசமயத்தோர்.
அருகந்தன் - அருகசமயத்தோன், சைனமதத்திற் சொல்லப்படும் இருபத்துநான்கு தீர்த்தகருளொருவன்.
அருகந்தாவத்தை - மோட்சநிலை.
அருகமதம் - ஒரு மதம். இது பாட்டினகரத்தில் உதிட்டிரசகம் (1445)ம்

வருஷத்தில் பிறந்த ஆருகதன் என் பவனால் ஸ்தாபிக்கப்பட்டது.

அருகம் - சமணமதம், தகுதி, யோக்கியம்.

அருகர் - அனுசரிதர், சமணர், சமீபத்திலுள்ளவர், தோழர், சமீபம்.

அருகல் - அணைதல், ஒழுகல், கிட்டுதல், குறைதல், சாதல், சுருங்குதல், வியங்கோன்முற்று, அருகு, குறைவு.

அருகனேத்தரித்தாள்-தரும தேவதை.

அருகனேமுடிதரித்தாள் - தர்மதேவதை.

அருகன் - சங்காத்தி, சயினர்களின் தேவகுரு, பக்குவன், தோழன், தக்கவன், அருக்கக் கடவுள், அருகக் கடவுள், சைனமதத்தான், யோக்கியன், அசோகன், அண்ணல், அதிசயன், அந்தணன், அமைவன், அருட்கொடிவேந்தன், அரிபணைச் செல்வன், அறவோன், அறிவன், ஆசான், ஆதன், ஆத்தன், உரவன், உறுவன், கந்தன், கமலபூர்த்தி, கருத்தா, கலைநாதன், காதிவென்றோன், காமற் காய்ந்தோன், குற்றங்களில்லோன், கொல்லாவேதன், சதுமுகன், சமிசம்பு, சாதரூபி, சாதுசந்தன், சித்தன், சிவகதியிறைவன், சினவரன், சினன், சினேந்திரன், சீமான், செய்யோன், செல்வன், சைனன், தத்துவன், தருமராசன், திகம்பரன், திருமறுபார்பன், தீர்த்தன், நக்கன், நான்முகன், நிச்சிந்தன், நிராயுதன், நீதிநூலி, நீத்தவன், பண்ணவன், பரமேட்டி, பிதா, புண்ணியன், புத்தன், புலவன், புனிதன், பூமிசை நடந்தோன், பொன்னெயிற்கோன், போதன், மாமுனி, முத்தன், முனிந்தோன், முனைவன், யோகி, வரதன், வாமன், விதாதா, விநாயகன், விராகன், விறலோன், வீரன், அருகன், எண்குணன், வான்தேவன், எண்சிறப்பு முள்ளோன், அத்தன், சோதி, பகவான், சுயம்பு, மாசேனன், வெண்மோன், ஒரு அரசன்.

அருகன்குடை - பொற்குடை, முத்துக்குடை, இரத்தினக்குடை எனமுறையே சொல்லப்படும் சகலபாசனம், சந்திராதித்தியம், நித்திய விமோதமாகிய அருகதேவனுக்குரியனவாகிய மூக்குடைகள்.

அருகன்குணம் - அருகதேவனுக்குடையனவாகச் சமணநூலிற்சொல்லப்படுநற்குணங்கள். அவை அநந்தசுகம், அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், நிர்க்கோத்திரம், நிர்நாமம், நிராயுஷியம், அறிவின்மை எனவெட்டாம்.

அருகன்சிறப்பு - அருகதேவனுக்குடைய மங்கலப் பொருள்கள், அவை தூபதீபக் காட்சி, தேவதுந்துபி, தெய்வத்துவனி, சிங்காதனம், பிண்டி, வெண் சாமரை, புட்பமாரி, மும்மைக்குடை எனவெட்டாம்.

அருகன்ஞானம் - அருகனுக்குரிய ஐந்து வகை ஞானங்கள். அவை மதிஞானம், சுருதஞானம், அவதிஞானம், மனப்பரியய ஞானம், கேவலஞானம் என்பன. அவற்றுள் மதிஞானம் சுபாவபுத்தி, சுருதஞானம் நூலுணர்ச்சி, அவதிஞானம் தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு, மனப்பரியயஞானம் தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையுமறியுமறிவு, கேவலஞானம் திரிகால உணர்ச்சி.

அருகன்மதில் - உதயதரம், கலியாணதரம், பிரீதிதரம் எனச் சொல்லப் படும் அருகனுடைய மும்மதில்கள்.

அருகன்வாகனம் - தாமரைப்பூ.
அருகன்விட்டகுணம் - அருகதேவனுக்குடையனவல்லவாகச் சமணநூலிற் சொல்லப்படுந் தீக்குணங்கள். அவை ஞானவருணியம், தரிசனவருணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், கோத்திரம், நாமம், அந்தராயம் என எட்டாம்.
அருகா - கெடாத.
அருகாண்மை - அருகாமை.
அருகாமை - சமீபம்.
அருகாழி - கால்விரல்மோதிரம்.
அருகி - கள், கொஞ்சங்கொஞ்சமாய்ப்குலி, வினையெச்சம்.
அருகித்தோன்றல் - அரிதாகத்தோன்றல், சுருங்கித் தோன்றல்.
அருகியரத்தம் - பூனைக்காலி.
அருகியல் - சாதிப்பெரும்பண்வகை.
அருகியகுறிஞ்சி
அருகியற்செவ்வழி
அருகியற்பாலை
} ஒருபண்.
அருகியவழக்கு - குறைந்த உபயோகமுள்ளவழக்கு.
அருகியன்மருதம் - குரல்குரலாயசெம்பாலை, பண்வகை.
அருகில் - சமீபத்தில்.
அருகு - அருகர், அருதல், அணை, கிட்டு, அறி, ஓரம், இடம், மரியாதைத் தீவட்டி, குறை, அருகென்னேவல், சமீபம், தீவர்த்தி, பக்கம்.
அருகுக்கால் - கதவுநிலை.
அருகுதல் - நோவுண்டுதல், கெடுதல், கிட்டுதல், குறிப்பித்தல், அறிதல், கிட்டல், அருகல், குறைதல், அரிதாதல், அஞ்சுதல்.
அருகுதைத்தல் - மடித்துத் தைத்தல்.
அருகுவைத்தல் - சூடுபோடுதல்.
அருகுறல் - கிட்டல்.
அருகே - கிட்ட.
அருக்கசர் - அச்சுவினி தேவராகிய தேவ வைத்தியர்.
அருக்கசன்
அருக்கசூனு
} கன்னன், சனி, சுக்ரீவன், யமன்.
அருக்கசோதரம் - இந்திரன்யானை.
அருக்கஞ்சட்டி - அரிக்குஞ்சட்டி.
அருக்கதானம் - பொற்காணிக்கை.
அருக்கத்தி - வருத்தம்.
அருக்கநிலை - சூரியநிலை.
அருக்கந்தன் - சிவன், பௌத்தன்.
அருக்கந்தன்-அருக்கநிலை, சூரியநிலை, சிவன், பௌத்தன்.
அருக்கபாதவம் - நிம்பம்.
அருக்கபுத்தி - சூரியகதி.
அருக்கமண்டலம் - சூரியமண்டலம்.
அருக்கம் - எருக்கு, குறைவு, சூரியன், தாமிரம், திராவியம், துன்னிமித்தம், நீர்க்காக்கை, நெருப்பு, படிக்கல், சுருக்கம்.
அருக்கர் - சூரியர்.
அருக்கலம் - அலை, கடை.
அருக்கல் - அச்சம், அருக்காணிபண்ணல், அருமைப்படுத்துதல், அழுக்காறடைதல், சுருக்கல்.
அருக்கவிக்கேபம்
அருக்கவிட்சேபம்
} சூரியாட்சம்.
அருக்களி - பயப்படு, அருவருப்பு.
அருக்களித்தல் - அருவருத்தல், பயப்படுதல்.
அருக்களிப்பு - அருவருப்பு, பயம்.
அருக்கனிலை - காணக் கோளிரண்டின்நிலை, சூரியநிலை.
அருக்கன் - இந்திரன், காணக்கிரகங்களிரண்டு, சுக்கு, சூரியன், ஞாயிற்றுக்கிழமை,மூத்தகுமாரன்.
அருக்கன்வீதி - கிராந்தி மண்டலத்தை நான்கிராசிகொண்ட மூன்று பாகமாகக்கொண்டு சூரியன் செல்லும் வீதி.
அருக்கன்றிசை - கிழக்கு.
அருக்காணி - அருக்கிறவன், அருக்குதல், அருமை, அழுத்தம்.
அருக்காணிகாட்டல்
அருக்காணிபண்ணல்
} பிரிய வீனங்காட்டிப் பின்னிற்றல்.

அருக்கியத்திரவியங்கள் - அட்சதை, எள், சம்பாநெல், சலம், தருப்பை நுனி, பால், யவம், வெண்கடுகு என அருக்கியத்திற்கு உபயோக மாகும் எட்டுத் திரவியங்கள்.

அருக்கியம் - பூசனை முறையுளொன்று, அது படையற்போடுதல், மந்திர நீரிறைத்தல், அர்க்கியம்.

அருக்கினம் - ஆரோக்யம், நோவின்மை.

அருக்கீசம் - இருதயமுதற் கண்ட மட்டாக ஏழங்குலம் வியாபித்து நிற்கும் ஒரு கலை.

அருக்கீசன்-தேவர் யாவர்க்கும் மிகப் பூசிக்கப்படத்தக்க மகாதேவன்.

அருக்கு - அஞ்சுகை, அருக்காணி, அருக்கென்னேவல், அருமை, எருக்கு, பயம், சுருக்கு, குறை, ஒடுக்கு, செய்யப் பின்வாங்கு, அலட்டு.

அருக்குதல் - அச்சமுறுதல், காய்ச்சுதல், அருமை செய்தல், ஒடுக்குதல், குறைத்தல், சுருக்குதல், செய்யப் பின்னிற்றல், மனமின்மை காட்டுதல், விலக்குதல், அழித்தல்.

அருக்கேந்துசங்கமம் - அமாவாசியை.

அருக்கை - தமக்கை.

அருக்கோபலம் - சூரியகாந்தம், பளிங்கு.

அருங்கதி - மோட்சம்.

அருங்கலச்செப்பு - ஒரு நூல், மணிக்கலம், பெய்த பணிப்பெட்டகம், அணிகலப்பெட்டி.

அருங்கலச் செவ்வித்தழ்-பொற்றமரை.

அருங்கலம் - ஆபரணம், அழகு செய்யும் பொருள், இரத்தினத்திரயம், அரசர்க்குரியபொருள்.

அருங்கலோகாயகன் - புத்தன்.

அருங்கவி - சித்திரகவி, சித்திரகவிப் புலவன்.

அருங்காவல் - கடுஞ்சிறை.

அருங்கிடை - பட்டினி, கடும் பட்டினி.

அருங்கு - அருமை.

அருங்குரைத்து - அருமைத்தெனப் பொருள் படுமொரு குறிப்புவினை.

அருங்கேடன் - அழியாதவன், பொருமைக்காரன்.

அருங்கேடு - கேடில்லாமை.

அருங்கொடைத்தானம் - உத்தமதானம்.

அருங்கோடை - அதியுஷ்ணம், மழையின்மை, கடுவெயிற்காலம், வரட்காலம்.

அருசாவிரா - பெருங்குமிழ் மரம்.

அருசி - சுவையின்மை, பசியின்மை, அறுப்பு, அரோசிகம், விருப்பின்மை.

அருச்சகன் - சம்பாத்தியகாரன், கோயிற் பூசைசெய்வோன், அர்ச்சகன்.

அருச்சனை - அருச்சி, அர்ச்சனை.

அருச்சியம் - அருச்சனை, அருச்சிக்கத்தக்கது.

அருச்சயோகம் - பூசை.

அருச்சனம்-சம்பாத்தியம், வணக்கம்.

அருச்சனை - பூசனை, பூசை.

அருச்சி - அருச்சியென்னேவலும், தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும், பூசை.

அருச்சிகன் - கோவிற்பட்டன், சந்திரன்.

அருச்சிக்கை - அருச்சித்தல்.

அருச்சிதம் - தேட்டம், வணக்கம்.

அருச்சிதன் - பூசிக்கப் படுவோன்.

அருச்சித்தல் - புண்ணிய மொன்பதில் ஒன்று, அது பூசித்தல், பூப் பலியில் மலர்தூவல்.

அருச்சிப்பு - அருச்சனை.

அருச்சியப்பிரபுத்துவம் - அருச்சிக்கப் படத்தக்க முதன்மை, தேவநவ விலாச சபைக்குரிய முதன்மை.

அருச்சியம் - உவப்பில்லாதது, வணக்கம்.

அருச்சுநம் - எருக்கஞ்செடி, ஒரு வகை நேத்திரரோகம். அதுவெள்

விழிமேற்கடப்பம்பூ நிறமான படலத்தைப் பிறப்பிக்கும், களங்கமின்மை, புல்லுபொன், மயிற்பரவை, மருதமரம், வெண்மை,

அருச்சுனவட்டம்- திருவிடைமருதூர்.

அருச்சுனன் - கார்த்தவீரியன், தாய்க்கு ஒரேபிள்ளை, பாண்டுபுத்திரர் ஐவரிலொருவனான விசயன், வெண்ணிற முள்ளவன்.

அருச்சுனி - பசு.

அருச்சுனம் - எருக்கு, துரும்பு, நேத்திரரோகம், பொன், மயில், மருந்து, வெண்மை, மருதமரம்.

அருச்சுனன் - அருச்சுனன், விஜயன், அனுமக்கொடியோன், காண்டீவன், கிரீடி, கிருட்டினன், கேசவச்சோழன், சவ்வியகாசி, சுவேதவாகனன், தனஞ்சயன், பற்குணன், பார்த்தன், மாதவிக்கொழுநன், விசயன், வீபற்சு, கார்த்தவீரியன்.

அருச்சை - பூசிக்கப்படுந் தெய்வம், பூசை, அர்ச்சை, பூசனை.

அருஞ்சயன் - சீவனுடைய தாயாகிய விசையை என்பவளுக்குப் பாட்டனான ஒருவன்.

அருஞ்சிறை - கடுஞ்சிறை, நரகம், கடுங்காவல்.

அருஞ்சுரம் - நிழலற்ற நீழிடம்.

அருஞ்சோதி - நெல்வகை.

அருடணன் - வைசிய விராத்தியனும் வைசியப் பெண்ணும் சோரத்திற் புணர்ந்து பெற்றபிள்ளை.

அருடம் - கோபமின்மை, திருத்தி.

அருட்கண் - கிருபைநோக்கு, கிருபாநோக்கம், ஞானக்கண்.

அருட்குடையோன் - அருகன், கடவுள்.

அருட்குறி - சிவலிங்கம்.

அருட்கேவலம் - தத்துவசுத்தியின் பின்னர்ப் படுங்கேவலம்.

அருட்கொடியோன்
அருட்கொடிகேந்தன் } அருகதேவன், அருகன்.

அருட்கொடையோன் - கடவுள்.

அருட்சத்தி - இரசம், பராசத்தி.

அருட்சி - அருளுதல், அரட்சி.

அருட்சித்தி - பாதரசம்.

அருட்சித்து - அனுக்கிரகத்திற் குரிய சித்து.

அருட்செல்வம் - கடவுள் கடாட்சம், கருணையாகிய செல்வம்.

அருட்சோதி - கடவுள், கவுரிபாஷாணம்.

அருட்டம் - கடுகுரோகிணி, மிகுரு, வேம்பு.

அருட்டாசனம் - தெய்வதாசனம்.

அருட்டல் - அருட்டுதல்.

அருட்டி - அச்சம், நடுக்கம்.

அருட்டு - எச்சரிப்பு. எழுப்பு, மயக்கு.

அருட்டுதல்-எழுப்புதல், ஏவி விடுதல், சாக்கிரதையாகப் பண்ணுதல், நித்திரை தெளிவித்தல், மயக்குதல்.

அருட்டெரிசனம் - சூரியோதயத்திலே இருளும் நட்சத்திரமுமின்றிச் சூரிய பிரகாசமாத்திரம் கண்ட கண்போல அருடோற்றிய காலத்துக் கேவலவிருளுங் கருவிக்கூட்டங்களுந் தோன்றாது அருளே மாத்திரம் ஆன்மாக்கண்டு கொண்டிருப்பது.

அருட்டை - கடுகுரோகணி, தக்கனது புத்திரிகளிலொருத்தி.

அருட்பாக்கள் - கடவுளருள்பெற்ற ஞானியர் எனப்பட்டார் செய்த பாக்கள்.

அருட்புரி - சூறிஞ்சியாழ்த்திறவகையிலொன்று.

அருணகிரணகலம் - சித்தாந்தத்திற் பிராசாத கலைகள் பன்னிரண்டில் எட்டாவதாகிய நாதாந்தம். அது வலப்புறத்தின் மாத்திரம் விந்து வையுடைய கலப்பை வடிவுள்ள தாக நாதகலைக்கு மேல் பிரமாந்திரமட்டாக மூன்றங்குலம் வியாபித்து நிற்குங்கலை.

அருணகிரி - அருணசலம், திருவண்ணாமலை.

அருணகிரிநாதர் - திருவண்ணாமலையில் எழுந்தருளியிருந்த கௌமார பரமாசாரிய சுவாமிகள், திருப்புகழ் ஆசிரியர்.

அருணகிரியந்தாதி - ஒரு புத்தகம்.

அருணசாரதி - சூரியன்.

அருணபூதரம் - அருணசலம்.

அருணமணி - மாணிக்கம்.

அருணம் - சிந்தூரம், செம்மறியாடு, எலுமிச்சை, ஆடு, எலுமிச்சு, கருமைகலந்த சிவப்பு, செவ்வானம், தாமிரம், தேயம் ஐம்பத்தாறிலொன்று, பதினெண் பாடையிலொன்று, பொன், மான், மிகுசிவப்பு, யானை, விடியல்.

அருணர் - சான்மலித்தீவிலரசர், கிருஷ்ணன் குமரர்.

அருணலோசனம் - புரூ.

அருணவசம் - கடலிற்பிறந்தது.

அருணவமந்திரன் - வருணன்.

அருணவம் - கடல்.

அருணவூரி - இந்திரகோபம்.

அருணவெலி - ஒருவகை எலி.

அருணன் - சூரியன், சூரியன் சாரதி, புதன், வருணன்.

அருணக்கிரசன் - கருடன்.

அருணசலக்கவிராயன் - இராமநாடகஞ் செய்த ஒரு சிறந்த வித்துவான், ஒரு புலவர்.

அருணசலபுராணம் - ஒரு சைவ புராணம்.

அருணசலம் - திருவண்ணாமலை, அருணை.

அருணத்துமசன்-இராமாயணத்திலே சொல்லப்படும் சடாயு என்னும் பறவை, கன்னராசன், சனி, சாவர்ண மனு, சுக்கிரீவன், யமன்.

அருணி - மான் சாதிப்பெண்.

அருணினம்-திருநாமப்பாலை,நன்னூரி.

அருணினைவு - நற்குணம் பத்தினுள்ளே ஒன்று.

அருணெறிசுரக்குஞ்செல்வன் - புத்தன்.

அருணை - அருணசலம், பஞ்சபூதத்தலங்களிலொன்று.

அருணைதம் - மேருமலையின் கீழ்த்திசையிலுள்ள ஒரு குளம்.

அருணைதயம் - சூரியோதயம், வைகறைப்பொழுது.

அருணைபலம் - பதுமராகம்.

அருதா - சதாப்புப்பூண்டினிலை.

அருத்தகங்கை - காவிரியாறு.

அருத்தகாமம் - பொருளாசை.

அருத்தகோளம் - பாதிக்கோளம்.

அருத்தசந்திரகுண்டம் - ஒன்பது பங்காகச் செய்யப்பட்ட ஈற்கோணசேத்திரத்தினடியிலும் கடையிலும் ஒவ்வொரு பங்கு தள்ளிவிட்டு நடுவிலிருக்கும்எழு பாகத்தைச் சமசூத்திரத்தினுற் சுற்றவரும் அர்த்தசந்திராகாரமான குண்டம்.

அருத்தசந்திரபாணம் - பிறைமுகாத்திரம்.

அருத்தசந்திரம் - மயிற்றோகைக்கண்.

அருத்தசந்திரன் - அட்டமியிற் சந்திரன், இளம்பிறை.

அருத்தசாத்திரம் - அருத்தவேதம். அது பொருடேடுதற்குபயோகமான பார்க்கஸ்பத்தியம், ஔசனமுதலிய நூல்களேக்கருதும்.

அருத்தசாமம் - அர்த்த சாமம், சாமத்திற் பாதி, நடிரா.

அருத்தசானவி - காவேரிநதி.

அருத்தசீரி - வீளைவிற் பாதி வாரமாயெடுக்கப்பொருந்தி உழுது பயிரிடுஞ் செய்கைக்காரன்.

அருத்தஞ்ஞன் - சொல்லினருத்தங்கள் பலவற்றையும் அறிந்தவன்.

அருத்தநம் - இடுக்கண் செய்தல், நிந்தித்தல்.

அருத்தநாரீசன்
அருத்தநாரீசுரன்
அருத்தநாரீசுவரன் } பாதி பெண் வடிவமான சிவன்.

அருத்தநாள் - பாதிநாள்.

அருத்தநிசா - அர்த்தசாமம்.
அருத்தநூல் - பொருணூல்.
அருத்தபதி - அரசன், குபேரன்.
அருத்தபாகம் - பாதிப்பங்கு, அர்த்த பாகம்.
அருத்தபாகை - வேதநூற்பொருள்.
அருத்தபிரயோகம் - திரவியங்களை எடுத்துப்பாவித்தல்.
அருத்தப்பிராத்தி - சம்பத்தடைதல்.
அருத்தம் - சொற்பொருள், செல்வப் பொருள், பயன், அர்த்தம், கருத்து, சொற்பயன், பாதி, பிரயோசனம், பொருள், பொன்.
அருத்தயாமம் - அர்த்தசாமம், அரையாமம், அது மூன்றேமுக்காலு ழிகை, இரவின் முன்னிகழும் மூன்றேமுக்காலுழிகையையும் பின்னிகழும் மூன்றேமுக்காலுழிகையையும்விட்டு இரவில் திரியாமாவென மூன்றியாமங் கொள்ளப்படுவதின் நடுநிகழும் யாமம்.
அருத்தராத்திரம் - நடுராத்திரி.
அருத்தரேசிதம் - நிருத்தக்கை முப்பதிலொன்று.
அருத்தலக்கணை - விட்டும் விடாதலக்கணை.
அருத்தலாபம் - திரவியசம்பாத்தியம்.
அருத்தலோபம் - சத்தவிசனத்தொன்று, அஃது கொடாமை.
அருத்தல் - உண்பித்தல், அருத்துதல்.
அருத்தவத்து - அருத்தமுடையது.
அருத்தவாதம் - அபிப்பிராயத்தைக் கூறுதல், சிரவணத்திற்குரிய சடுவிதலிங்கங்களில் ஆறுவதானது, அர்த்தவாதம்.
அருத்தவிபத்தி - தெளிவாக அருத்தஞ் சொல்லுந்திறமை, பயன் சொல்லல்.
அருத்தவேடணை - ஏடணைத்திரயத்தொன்று.
அருத்தவேதம் - உபவேதம் நான்கின் ஒன்று.
அருத்தனம் - நிந்தை.
அருத்தனை - பிச்சை கேட்டல்.
அருத்தன் - கடவுள், பாதி பாகமாகக் கொண்டவன்.
அருத்தாங்கீகாரம் - அரைமனம்.
அருத்தாதிகாரன் } உக்கிராணக்
அருத்தாதிகாரி } காரன்.
அருத்தாநம் - தோத்திரஞ் செய்தல்.
அருத்தாந்தரநியாசம் - எதிர்க்கருத்து, வேற்றுப்பொருள்வைப்பணி.
அருத்தாந்தரம் - கருத்துப்பிரிவு.
அருத்தாந்தரன்னியாசம் - அருத்தாந்தரநியாசம்.
அருத்தாபத்தி - ஆறளவைகளில் ஒன்று.
அருத்தாபத்திப்பிரமாணம் - அருத்தாபத்தி.
அருத்தார்த்தி - திரவியந்தேடப் பிரயாசைப்படுவோன்.
அருத்தானம் - தோத்திரஞ் செய்தல்.
அருத்தி - இரந்துகேட்போன், செல்வமுடையவன், வேலைக்காரர், ஆசை, உண்பித்தென்னுமெச்சம், கூத்து, பாதம், பாதி செய்யென்னேவல், விரும்பப்படும் பொருள், கள், செல்வஞ்சை, யாசி.
அருத்திதம - இரந்துகேட்டல், விரும்பல், பிட்சைத்திரவியம்.
அருத்தித்தல் - பாதி செய்தல், வேண்டுதல், யாசித்தல்.
அருத்தியன் - விருப்பமுடையவன், வேண்டியவன்.
அருத்திரம் - மரமஞ்சள்.
அருத்து - அருத்தென்னேவலுந்தெரிநிலைவினைப் பகுதியும் பெயரெச்சத்தொகையும், பொருள், செற்பொருள், ஊட்டு அனுபவிக்கச்செய்.
அருத்துதல் - உண்பித்தல், அனுபவிக்கச்செய்தல்.
அருத்துரு - ஆராய்வு, நுணுக்கம்.
அருத்துருமம் - வெள்வேலமரம்.
அருத்தேந்து - அர்த்தசந்திரன்.

அருந்தோதயம் - அர்த்தோதயம், குரு அத்தமிக்கச் சூரியனுதிக்கு முகூர்த்தம், அத்தோயம்.

அருந்தோபார்ச்சனம் - பொருளீட்டல்.

அருநரகம் - பாழ்நரகம்.

அருநிலம் - பாலைவனம்.

அருநிலை - கடந்து செல்லற்கரிய ஆற்று நிலம், யுத்தநிலை, ஆழமான நீர்நிலை.

அருநிழல் - விளக்கின் சிறு நிழல்.

அருநீர் - பாய்ச்சு நீர்.

அருநெஞ்சு - விருப்பின்மை.

அருநெல்லி - ஒருமரம், சிறுநெல்லி, அரிநெல்லிக்காய்.

அருநெறி - சுருங்கியவழி, நரகம், பாலை நிலம், வாயில், போவதற்கரிய வழி, மனை வாயில்.

அருந்ததார் - அருந்ததிப்புதல்வர்.

அருந்ததி - ஒரு நட்சத்திரம், வசிட்டன் மனைவி, அவள் கற்பிற் சிறந்தவள், ஒரு பர்வதம்.

அருந்ததிகாட்டல் - கற்பில் அருந்ததி போலிருக்கக் கலியாணத்தில் மணப் பெண்ணுக்கு அருந்ததி நட்சத்திரங் காட்டல்.

அருந்ததிபதி - வசிஷ்டமுனிவன்.

அருந்தமன் - குபேரன்.

அருந்தமிழ் - நல்ல தமிழ்.

அருந்தல் - அருந்துதல், அருமையாதல், அனுபவித்தல், புசித்தல், அருமை.

அருந்தவர் - முனிவர்.

அருந்திடல் - உண்ணுதல்.

அருந்திறல் - அரிய திறமையுடையவன்.

அருந்து - அருந்தென்னேவலுந் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத்தொகையும்.

அருந்துதல் - தன்னிடத்துக்கொள்ளுதல், அனுப்பித்தல், அனுபவித்தல், உண்ணுதல், குடித்தல், விழுங்குதல்.

அருந்துதன் - வேதனை செய்வோன்.

அருந்துதி - அருந்ததி.

அருந்துவோன் - உண்போன்.

அருந்தூதன் - வேதனை செய்வோன்.

அருப்பகம் - அற்பமானது, குழந்தைத்தன்மையானது, பெலமில்லாதது, விலங்கின் பிள்ளை அல்லது குட்டி.

அருப்பகன் - இலக்ஷை, பைத்தியக்காரன், மூடன்.

அருப்பம் - அருமை, மலைமேற்றுருக்கம், ஊர்காட்டுத்துருக்கம், திண்மை, வழுக்கு நிலம், நெற்கதிர்க் கரு, முதல் முளைக்கும் மீசை, சிறிது, அரண், அரிது, உரோமக்கிளர்ச்சி, ஊர், கள், காடு, கொலை, கோட்டை, துக்கம், தொடரிப்பூண்டு, நோய், பனி, பிட்டு, பிள்ளை, மருதநிலத்தூர், மா, மீசை முளைக்க அரும்புவிடல், முகரோகம், மோர், அர்ப்பம், அரும்பு, அல்பம், அற்பம்.

அருப்பலம் - அனிச்சமரம்.

அருப்பு - தயிர், அரும்பு, கிளைத்தல், கொலை, துக்கம்.

அருப்புத்துருப்பு - அருந்தேட்டம், அருமை.

அருப்புத்தொழில் - அலங்கட்கு அரும்பு கட்டும் வேலை.

அருமணம் - அருமணவன்.

அருமணவன் - ஒரு தீவு, அருமணத் தீவின் யானை.

அருமதாளம் - நவதாளத்தொன்று.

அருமந்த - அரியமருந்தன்ன, அருமையான, அருமாந்த.

அருமந்தான் - அருமந்தன்னன்.

அருமருந்தன்ன - அரிய மருந்து போன்ற எனப் பொருள்படும் ஒரு விகாரமொழி, அருமந்த.

அருமருந்து - அமிர்தம்.

அருமவதி - ஒருபண்.

அருமறை - மேலான வேதம்.

அருமறைக்கொடியோன் - துரோணசாரி.

அருமன் - ஒரு பிரபு.
அருமாந்த - அருமந்த.
அருமாமணை - அரிவாண்மணை.
அருமிதம் - அளவின்மை.
அருமேதகம் - அக்கினிக்கீடங்கள் இருபத்தேழினுள் ஒன்று
அருமேனி - கலைகளுடன் கூடாத நிட்களமான திருமேனி, அது உருவாதீதமான சரீரம், கடவுளின் அரூபவடிவம்.
அருமை - பெருமை, பிரயாசம், சிறுமை, இன்மை, அரியதன்மை, எளிபதாய்க்கிடையாதது, சிறப்பு, மேன்மை, அபூர்வம், பிரீதி, வருத்தம்.
அருமைக்காரன் - கொங்குவேளாள ருள்சடங்குநடத்தும் பெரியோன்.
அருமையானது - அரியது.
அருமையானவாகள் - அரியவர்கள், அரியோர்.
அருமையானவள் - அரியவள்.
அருமையானவை - அரியவை.
அரும்பண்டம் - கிடைக்காத சாமான், விசேஷமானது, கடற்ரூரம், மலைத்தாரம் முதலியன.
அரும்பதவுரை - அரிய சொல்லுக்கு உரை.
அரும்பர் - அரும்பு.
அரும்பல் - அரும்புதல், முகைத்தல், மூளைத்தல்.
அரும்பாலை - ஓரிசை, பாலைப்பண் வகை.
அரும்பாவி - பெரும்பாவி.
அரும்பி - குங்கும பாஷாணம்.
அரும்பிஞ்சு - மிக இளங்காய்.
அரும்பிணி - தீராத வியாதி.
அரும்பித்தல் - தோன்றுதல், மூகிழ்த்தல்.
அரும்பு - மொட்டு, அரும்பென்னேவல், குகை, ஈனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், கோலகம், மூனை, புன்னகைசெய், பூவரும்பு, பொன் முதலியவற்ரூற் செய்த வரும்பு, முகை, மெல்லியமயிர், அரிசி.
அரும்புக்கட்டி - வேளாளருள் ஒரு வகையார்.
அரும்புதல் - தோன்றுதல், புன்னகைத்தல், பொடித்தல், முகைத்தல், மூளைத்தல், வளரல், முகிழ்த்தல்.
அரும்புமணி - பொன்னுற் செய்யப்பட்ட அரும்புகளையுடைய ஒரு கழுத்தணி.
அரும்பூட்டு - இணைக்கக்கூடாதது, சிக்கிக்கொள்கை, இயல்பிலாத் தொடர்ச்சி, இணைக்கக்கூடாமை, ஒட்டு, தொடர்ச்சியின்மை, போக்தும் போதாதிருப்பது, மோசத்திலகப்படுகை, வருந்திப்பூட்டுவது.
அரும்பூதுகை - ஊதிப்பொன் மணி செய்கை.
அரும்பூதுதல் - பொன் மணியை ஊதிச்செய்தல்.
அரும்பெறல் - பெறுதற்கரிது, பெறற்கருமை.
அரும்பொருவினை - எண்வகை மணத்துளொன்று.
அரும்பொருள் - அரியகருத்து, பெறுதற்கரிய பொருள், ஞாபகம், பிசி.
அருவசாட்சாத்காரம் - அறிவினின்று குருவாயுணர்த்தியது.
அருவசிவசமவாதி - ஆன்மசித்தும் சிவசித்தும் ஒத்து வேரூய் நிற்கு மென்று சொல்லும் மதஸ்தன்.
அருவதா - கதாப்புச்செடி.
அருவத்திருமேனி - சிவன் நடிக்கும் நவபேதத்திலே அருவவடிவமாகக் கற்பிக்கப்படுஞ் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கு மேனிகள்.
அருவம் - அருத்தல், உருவமில்லாதது, அருமை, உருவமின்மை.
அருவரு - வெறு.
அருவருத்தல் - வெறுத்தல்.
அருவருப்பு - அசோகம், வெறுப்பு, பயிர்ப்பு.

அருவர் - தமிழர், கஞ்சம் உழவர்கள்.

அருவல் - பருவரல், சருவுதல், சற்றுச் சற்றுப்போதல், துன்பம், நோவுவகை.

அருவன் - உருவிலி.

அருவா - கொடுந்தமிழ்நாட்டு பன்னிரண்டினொன்று, அருவாநாடு.

அருவாட்டி - அருவாநாட்டுப்பெண்.

அருவாணம் - கோயிற் பிரசாதம், தாலம், செப்புத்தாலம்,

அருவாணாடு - அருவாநாடு, தென்னாற்காடு.

அருவாதல் - பிறப்பறுதல்.

அருவாநாடு - கொடுந்தமிழ் நாட்டுள் ஒன்று, தென்னாற்காடு.

அருவாமணை - அரிவாண்மணை, அரிவாள் மணை.

அருவாவசு - சூரியன் கதிர் கரு ள் வியாழனை விளங்கச்செய்யுங் கதிர், சூரிய சமூகத்தினின்று பாட்டயர் வோருள் ஒருவன்.

அருவாவடக்கு - கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுளொன்று.

அருவாவடதலை-கொடுந் தமிழ் நாட்டினொன்று, செங்கற்பட்டு ஜில்லா.

அருவாளர் - அருவாளநாட்டிலரசர்.

அருவாள் - அருவா, அரிவாள்.

அருவி - அருகதிர், கழிமுகம், திணைத்தாள், நீர், நீரூற்று, ஒழுங்கு, உருவமில்லாதது, மலையின் வீழாறு, மலையின் வீழ்புனல், அரிவி, நீர் வீழ் அருவி.

அருவிபாய்தல் - மலையில் அருவிபாய்தல்போலக் கண்ணீர் பாய்தல்.

அருவினை - விசேஷ பாவம்.

அருவு - குறை.

அருவுகால் - அருகுகால்.

அருவுடம்பு - பத்துவகை இந்திரிய வுணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காம வினைவிளைவுகளோடும் கூடிய மனம். அது நுண்ணுடம்பு எனவும்படும். சூக்கும சரீரம்.

அருவுதல் - மெல்லெனச் செல்லுதல், கிட்டுதல், அருத்தொழுகுதல், துன்பப்படுத்துதல், அருவி முதலியன பாய்தல், கண்காரித்தல், குறைதல், சருவுதல்.

அருவுரு - அருவுருவம், சகளநிட்களத்திருமேனி.

அருவுருவத்திருமேனி - சிவன் நடிக்கும் நவபேதத்திலே அருவுருவ வடிவமாகக் கற்பிக்கப்படும் சதாசிவமாகிய திருமேனி.

அருவுருவம் - அருவென்றும் உருவென்றும் சொல்லலாகாதது.

அருவேதனை - பெருந்தொந்தரவு.

அருளகம் - வெள்ளெருக்கு.

அருளப்பாடு - அருளிப்பாடு.

அருளரிசி-குடசப்பாலை, வெட்பாலை.

அருளல் - அசைதல், உத்தரவுபண்ணல், காத்தல், கிருபைசெய்தல், கொடுத்தல், சிருஷ்டித்தல், சொல்லல், நித்திரை விழித்தல், பெருங்கொடை.

அருளவம் - அழிஞ்சில், பெருமரம்.

அருளறம் - அருளாகிய அறம்.

அருளறம்பூண்டோன் - புத்தன்.

அருளாகி - குடசப்பாலை.

அருளாந்தை - பாலையுடைச்சி.

அருளாபு - சாரணைப் பூண்டு, அருளாப்பு.

அருளாமை - அருள் செய்யாமை.

அருளாழிவேந்தன் - அருகன், கடவுள்.

அருளாளன் - கிருபையை விசேடமாகவுடையவன், ஒரு மறையவன்.

அருளிகேட்டல் - ஒருவர் சொன்னதை அருள்பண்ணிக்கேட்டல், தயவோடு செவிகொடுத்துக்கேட்டல்.

அருளிச்செயல் - கட்டளை, அடியார் பாடல்.

அருளிச்செய்தல் - அனுக்கிரகித்தல், கிருபை செய்தல், சொல்லியருளுதல்.

அருளிப்பாடியன் - கட்டளை கிறை வேற்றுவோன்.

அருளிப்பாடு - ஆக்ஞை, உத்தரவுப் படி செய்வோம் என்னும் குறிப்பு, அருளப்பட்ட உத்தரவு.

அருளிலி - தயவில்லாதவன்.

அருளு - கிருபைசெய்.

அருளுடைமை - தொடர்புபற்று தியல்பாக எல்லாவுயிர்கண்மேலும் செல்லுவதாகிய கருணையுடைமை.

அருளுதல் - அருளல், அருள்தல்.

அருளுவம் - அருளவம்.

அருளுறுதி - வேம்பு.

அருளோன் - காருண்ணியன், கிருபையுடையோன்.

அருள் - கருணை, நல்வினை, ஏவல், அவயவம், மரவகை, கதவு, இரக்கம், தயவு, தயா, ஈயென்னேவல், உமை, கொடை, சத்தி, சாத்துவிகக் குணத்தொன்று. அஃது கிருபை, கட்டளை.

அருள்செய்தல் - கிருபையாடு சொல்லுதல்.

அருள்தல்-கிருபைசெய்தல், மகிழ்தல், வுதயடன் சொல்லுதல், உத்திரவு செய்தல், அளித்தல், அச்சமுறுதல்

அருள்நினைவு - அருணினைவு.

அருள்பாடு - அருளிப்பாடு.

அருள்புரிபத்திரம் - அரசனொருவன் சேவகம், சௌரிய முதலியவை களை வியந்து கொண்டாடி அவனுக்குக் கிராம முதலியவற்றைக் கொடுத்தற்குச் சாதனமாக எழுதிக் கொடுக்கும் பத்திரம்.

அருள்மரம் - முதிர்ந்த மாதுளைமரம்.

அருள்மாரி - கிருபாவர்ஷம், கிருபையைப் பொழிவோன்.

அருள்வாக்கி - தெய்வாவுக்கிரகம் பெற்ற கவிஞன்.

அருள்வேதம் - கிறிஸ்துவர் வேதம்.

அருள்விருட்சம் - பஞ்சதாரு.

அருஜன் - இராவணனுக்கு உதவி புரியவந்த இராக்ஷசன்.

அருஷன் - தருமன் எனும் மனுவின் புத்திரன்.

அரூதா - சதாப்புச்செடி.

அரூபகம் - உருவமின்மை.

அரூபதை - அவலட்சணம்.

அரூபம் - அருவம், ஆகாயம், உருவமற்றது, குறைவு, வெறுமை, உருவமின்மை.

அரூபமாதல் - பாழடைதல்.

அரூபி - உருவிலி, கடவுள், கருப்பூரம், சிவன், அசரீரி.

அரூபினரூபின் - எண்பத்தொருபதங்களிலொன்று.

அரூபை - அவலட்சண முள்ளவள், ஒரு தெய்வம், உருவமில்லாதவள் ஒப்பில்லாதவள்.

அரேசகண்டு - கருணைக்கிழங்கு.

அரேசிகம் - வாழைமரம்.

அரேணுகம் - கடுக்காய்வேர், கவுந்தி, காட்டுமிளகு, வால்மிளகு, கடுமாவேர்.

அரேணுகை - காட்டுமிளகு.

அரை - பாதி, அல்குல், தண்டு, மரத்தினடிப் பாகம், அரையென்னேவல், இடை, பாதிக்கொடி, ஒரு மரம், உடம்பின் நடுவிடம், வயிறு, நசுங்கு, தேய், அழி.

அரைகடி - அரைக்கடி.

அரைகல் - அம்மி.

அரைகுறை - முற்றுப்பெறாமை.

அரைக்கச்சு, அரைக்கச்சை } இடைக்கச்சு.

அரைக்கடி - இடிப்பிலுண்டாகும் சொறிப்புண்.

அரைக்கடுவன் - அரைக்கடி.

அரைக்கல் - அரைத்தல்.

அரைக்காணி - நூற்றறுபதில் ஒரு பாகம்.

அரைக்கால் - எட்டிலொன்று.

அரைக்கீரை - ஒருவகைக் கீரை.

அரைங்கரம் - நாஞ்ஞழி.

அரைச்சட்டை - சல்லடை.

அரைசபாரம் - அரசுநடத்துங் கடமை.
அரைசர் - அரசுசெய்வோர்.
அரைசன் - அரசன்.
அரைசாந்து - அரைத்த சுண்ணாம்பு.
அரைசி - இராசாத்தி, இராணி, பட்டமகிஷி.
அரைசிலை - அம்மி, அரைகல்.
அரைசு - அரசு.
அரைசெலவு - மசாலைச்சாமான்.
அரைச்சதங்கை - ஒரிடையணி, அரையணி.
அரைச்சல்லடம் - அரைச்சட்டி.
அரைச்சாயம் - இளஞ்சாயம்.
அரைஞாண் - கிணற்றில் செங்கல் வரை, அரைநூல், இரதம், இரத்தினம், அரைநாண், ஆண்மகள் அரையிற்கட்டும் கயிறு, அரைவடம், அரையணி.
அரைஞாண்மணி - அரையிற்கட்டும் சதங்கை, கிங்கிணி.
அரைதல் - அரைப்படல், உரோஞ்சல், தேய்தல்.
அரைத்தல் - அரக்குதல், கொட்டை நீக்குதல், அரைக்குதல், அழித்தல், உரிஞ்சல், தேய்த்தல், நசுக்கல், வியாதியிலழுந்துதல், மாவாக்கல்.
அரைத்துகில் - உடம்பினரையி லணியப்படுஞ் சீலை.
அரைத்தொடர் - அரையிற்கட்டுஞ் சங்கிலி, இடைச்சங்கிலி.
அரைநலம் - விதைநருங்காது குறையாயிருக்கு நலம்.
அரைநலவன் - விதை செம்மையா அடிக்காதமாடு.
அரைநா - முதலை.
அரைநாண் - இடுப்பில்கட்டுங் கயிறு, அரைஞாண்.
அரைநாவை - ஒரு பாற்கோடிய மண்வெட்டி நுனி, கலப்பையின் ஒருபால் வளைந்த நுனி.
அரைநாள் - நடுநாள், நாளிற்பாதி, பாதி நாள், நடுராத்திரி.
அரைநீர் - பாசனநீர்.
அரைநூல் - அரைச்சதங்கை, அரைஞாண், நூலிற்பாதி.
அரைநூன்மாலை - மேகலாபரணம்.
அரைநெக்கல் - அரைத்திட்டம், பழுத்தது.
அரைநோக்கு - கிரகநோக்குவகை.
அரைபடல் - மாவாதல்.
அரைபடுதல் - உரைசப்படுதல், பழிக்கப்படுதல்.
அரைப்படிப்பு - நிரம்பாக்கல்வி.
அரைப்பட்டிகை - மாதரிடையணியிலொன்று.
அரைப்பணம் - அல்குல், ஒருபணத்திற்பாதி.
அரைப்பு - அரைத்தல், சீயக்காய் முதலியன, இருப்பைப்பிண்ணுக்கு, அரைக்கை.
அரைப்புக்கட்டி - இருப்பைப் பிண்ணுக்கு.
அரைப்பூட்டு - இடைக்கட்டு, இடுப்பின் பொருத்து.
அரைப்பை - இடுப்பிற்கட்டும் நீண்ட பணப்பை, அல்குல்.
அரைமனிதன்-மதிப்புக்குறைந்தவன்.
அரைமா - நாற்பதிலோர்பாகம்.
அரைமூடி - சிறு பெண்பிள்ளைகள் அரையிற்றரிக்கும் ஒரு பணி, அரசிலை.
அரையணிகை - விவாகத்தில் வதூவரர் புதிய ஆடைகள் அணிகை.
அரையம் - ஒரு பெரிய நகரம்.
அரையர் - விஷ்ணு கோயில்களில் திவ்யப்ரபந்தங்களைப் பாடுந் தொண்டு செய்வோர்.
அரையலன் - சோம்பன், சோம்பேறி.
அறையலிடுகை - தேய்த்தல்.
அரையல் - அரைக்கப்பட்டது, சோம்பல், தூவையல், அரையலன்.
அரையளுடுதல் } அரைத்துத் தூளாக்கல்.
அரையனிடுதல் }
அரையன் - அரசன், திகளிதம், அரைசன்.

அரையாப்பு - அரையிலுண்டாகும் ஒரு கட்டி, மேக நோயால் இடையிலுண்டாகும் பரு.

அரையிரவு } அர்த்தராத்திரி, இர
அரையிருள் } வின் பாதி.

அரைவடம் - அரைஞாண், அரைநாண், பெண்யேற்றுக்காரர் அரையிற் கட்டும் ஒரு கயிறு, அரைச்சதங்கை.

அரைவட்டம் - அரைமூடி, பாதிவட்டம்.

அரைவண்டி - சிறுவண்டி.

அரைவயிரக்கண் - கம்மாளர் கருவியின் ஒன்று.

அரைவயிறவன் } அரையரிசிநெல்,
அரைவயிறன் } கருக்காய்.

அரைவாசி - பாதி.

அரைவாயன் - தெரிந்து பேசவறியாதவன்.

அரைவாய் - தேய்ந்தவாய், பாதிவாய் கொண்டது.

அரைவெறி - சிறிதுவெறி.

அரைவைரம் - அரிசிமுதிராத நெல்.

அரோ - ஓசைச்சொல்.

அரோகம் - சுகம், நோயின்மை.

அரோகி - சுகமுடையவன், நோயில்லாதவன்.

அரோகிணி - அரோகிணிக் கடுக்காய்.

அரோகிதை - சுகமுடைமை, நோயின்மை.

அரோகை - தைத்தியராமத்திலே கோயில்கொண்ட உமை.

அரோசகம் } அருவருப்பு, சமியாக்குணம், பசியின்மை,
அரோசம் } பிரயாசமின்மை,
அரோசிகம் } வெறுப்பு, ஊணில் வெறுப்பு.

அரோசனம் - பிரகாசமின்மை, சந்தோஷமின்மை, பிரியமின்மை, அருவருப்பு, பிரியவீனம்.

அரோசி - அருவரு.

அரோசிகம் - அசுத்தம், அருவருப்பு, ஒக்காளம், உணவில் வெறுப்பு.

அரோசிகை - அருவருத்தல், பசியின்மை.

அரோசித்தல் - அருவருத்தல், அருவருப்பால், வெறுத்தல்.

அரோசிப்பு - அருவருப்பு.

அரோதனம் - அழுகையின்மை, சூழ்தல், தடை, படைவளைப்பு.

அரோரூட்டுமா - ஒருகிழங்கின்மா, அது ஆள்வள்ளிக்கிழங்கென்பர்.

அர் - ஒருபகுதிப் பொருள்விகுதி, பெயர் வினைகளில் உயர்திணைப் பன்மையைக்காட்டும் ஒரு விகுதி, பெயர் வினைகளில் ஒருமைச் சிறப்பில் வரும் ஒரு விகுதி, மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரிறுதியுகரத்தோடொத்து வரும் ஓரிடைச்சொல்.

அர்கதமுனி - அருகன்.

அர்க்கக்கீராதித்தைலம் - எருக்கம்பால், சதுரக்கள்ளிப்பால் முதலியவற்றில் வடித்தெடுக்கும் ஒரு வகைத் தயிலம்.

அர்க்கசூனு - இயமன், கன்னன், சனி, சுக்கீவன்.

அர்க்கத்து - தடங்கல்.

அர்க்கபந்து - கௌதமபுத்தன், தாமரைக் கொடி.

அர்க்கமலை - அருணாசலத்துக்குக் கிழக்கேயுள்ள ஒருமலை.

அர்க்கம் - அருக்கம், எருக்கஞ்செடி, செம்பு, நீர்க்காகம், பளிங்கு, தானியவிலை, பூகாளாட்சம், பொன்.

அர்க்கலம் - கதவடைக்குந்தாழ்.

அர்க்கன் - இந்திரன், ஞாயிற்றுக்கிழமை, அருக்கன்.

அர்க்காதிபன் - திரவியாதிபதி.

அர்க்காவசு - துவாதசகலாப்பிரசாதம்.

அர்க்காரி } வேலுகாரன், அரிக்கா
அர்க்கார் } ரன்.

அர்க்கியம் - அருக்கியம்.

அர்க்குளா - கடல் மீன் வகை.

அர்ஜி
அர்ஜிதாஸ்து } விண்ணப்பம்.
அர்ஜிதார் - விண்ணப்பஞ் செய்வோன்
அர்ஜிதாவா - விண்ணப்பம்.
அர்ச்சகன் - அருச்சகன், ஒச்சன், பூசகன், பூஜகன்.
அர்ச்சகாகிரகம் - ஒருவகைநோய். அது குழந்தை பிறந்த பதினேராநாளிலாவது பதினேராமாதத்திலாவது பதினேராம் வருஷத்திலாவது குழந்தையை அல்லது தாயைப்பிடிக்கும், ஒரு பெண்கிரகத்தாலாயதென்பர். அதனால் தேகமினைத்தல், சுரம், சர்வாங்கத்திலுமிருநோவு, அன்னத்தில் வெறுப்பு, விழுத்தவிழி விழித்தபடியிருத்தல் என்னும் இக்குணங்களுண்டாகும்.
அர்ச்சனம் - திரவியஞ் சம்பாதித்தல்.
அர்ச்சனாதிகாரம் - பூசனை செய்தற்கு யோக்கியம்.
அர்ச்சனாபாகம் - அர்ச்சனாபோகம்.
அர்ச்சனியம் - அருச்சியம்.
அர்ச்சனீயம் - மதிக்கத்தக்கது.
அர்ச்சனை - அருச்சனை, பூசை, அர்ச்சிப்பு, அருச்சிப்பு, வணக்கம்.
அர்ச்சாவதாரம் - திருமால் நிலையுள் ஒன்று.
அர்ச்சி - ஒளி, சுவாலை, பூசைசெய்யெனப் பொருள்படும் அர்ச்சி என்னேவல், அருச்சி, பூசி, வணங்கு, பரிசுத்தமாக்கு.
அர்ச்சிகம் - ஓர் மலை.
அர்ச்சிசு - தக்கன் குமரி.
அர்ச்சிதன் - அருச்சிதன், பூசிக்கப்படுவோன்.
அர்ச்சித்தல் - அருச்சித்தல், பூசித்தல்.
அர்ச்சியசிஷ்டர் - பரிசுத்தவான்கள்.
அர்ச்சியம் - அருச்சியம்.
அர்ச்சுனம் - அருச்சுனம், மருது.
அர்ச்சுனன் - அருச்சுனன்.
அர்ச்சை - மூர்த்தி, கல், மரம், மண் முதலிய வற்றாற் செய்யப்பட்ட விக்கிரகம்.
அர்டணம் - சந்தோஷம், நித்திய யோகத்தொன்று.
அர்ணல் - அரைநாண்.
அர்த்தகங்கை - காவேரி.
அர்த்தக்கிரியாஸ்திதி - யாதாரு பதார்த்த தெரிசனத்தினால் ஞானமானது கெடுக்கப்படாமலிருக்குமோ அது.
அர்த்தக்கிரியார்த்தி - பிரயோசனமான கிரியையிச்சிக்கின்றவன்.
அர்த்தசகாயம் - பண உதவி.
அர்த்தசஞ்சயக்கிருது - ஒருவகை யதிகாரி.
அர்த்தசந்திரபாணம் - பிறைமுகங் கொண்டபாணம்.
அர்த்தசந்திரம் - வியூகவகை நான்கனு ளொன்றாகிய அசங்கத்தின் விரியாறனுளொன்று.
அர்த்தசந்திரன் - பாதிச்சந்திரன், பாதிச் சந்திரன்வடிவான வளை வாக நகத்தைப் பதித்துவைக்கும் நகக்குறி, பாதிச்சந்திரா காரமாக வளைக்கப்பட்ட கை, பிறைமுகாஸ்திரம், புருவநடுவுக்குமேல் மூன்றங்குலம் வியாபித்து நிற்கும் பிறை வடிவுடைய கலை, அது பன்னிரண்டு கலைகளில் ஆறாவது.
அர்த்தசம்வாதம் - உண்டில்லை என்னும் வாதம்.
அர்த்தசம்வித்தி - விடயத்தை யறியும் அறிவு.
அர்த்தசா - பிறைவடிவு.
அர்த்தசாமம் - அர்த்தஜாமம், இரவில் நடுச்சாமம், அர்த்த ராத்திரி, அத்த ராத்திரி.
அர்த்தசாமர்த்தியம் - சொற் பொருளின் வலிமை.
அர்த்தசாலம் - பொருட்கூட்டம்.
அர்த்தசித்திரம் - தாளப்பிரமாணம் பத்துவகையுள் ஒன்றாகிய மார்க்கம்

என்பதின் பிரிவுகள் ஆறனுள் ஒன்று. அது அரைமாத்திரையோர் கலையாகக் கொண்டது.

அர்த்தநாசம் - பொருட்கேடு, முழுதும் நாசம்.

அர்த்தநாரி - அரதனக்குற்றவகை.

அர்த்தநாரீசத்துவம் - பாதி உடம்பு பெண்ணுயிருக்கும் சிவமூர்த்தம்.

அர்த்தநாரீசன் - அர்த்தநாரீசுரன்.

அர்த்தநாரீசுரன் - பாதியுடம்பு பெண்ணுக இருக்குஞ் சிவன்.

அர்த்தநாரீசுவரம் - பாதிச்சரீரம் பார்வதியாரும், பாதிச்சரீரம் சிவபெருமானுமாக வீற்றிருந்த கோலம்.

அர்த்தபாகம் - பாதிப்பங்கு.

அர்த்தபிரபூதம் - ஒருவகை நோய். அது கண்ணிமைகள் சரிந்து தொங்குதல், தலைமயிர் மூறைத்தல், தாடையுலரல், முகக்களை நீங்குதல், துக்கித்தமுகம், உருட்டி யுருட்டிப் பார்க்குதல், அகால நித்திரை, மந்தாக்கினி, சுபாவவார்த்தை, சொப்பனத்தில் இறந்தவர்களைக் கண்டு பேசுதல், கறுப்பாகிய வஸ்து, வெல்லம், பால், மாமிசமிவைகளில் விருப்பம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

அர்த்தபிப்பலி - பாதி வால்மிளகு.

அர்த்தபிருட்டகம் - அங்கக் கிரியை பதினெறிலொன்று.

அர்த்தபுஷ்டி - பொருட் பொலிவு.

அர்த்தபேதரோகம் - சிரசில் வரும் ஒருவகை ரோகம்.

அர்த்தப்பிரகரன் - அர்த்தப் பிரகரதோஷம். அது ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரைக்கும் முறையே வரு நாலாஞ் சாமம், வழாஞ்சாமம், இரண்டாஞ்சாமம், ஐந்தாஞ்சாமம், எட்டாஞ் சாமம், மூன்றாஞ் சாமம், ஆறாஞ் சாமம், என்னும் காலங்கள், புதன் மகன்.

அர்த்தப்பிரதீதி - அர்த்தமறிதல்.

அர்த்தப்பிராணன் - அர்ப்பப் பிராணனுக்கும் மகாப் பிராணனுக்கும் இடையாக உச்சரிக்கப்படும் எழுத்துக்கள்.

அர்த்தமண்டபம் - கருப்பக் கிரக மண்டபம்.

அர்த்தமாத்திரயோசன நிர்விகற்பக் காட்சி - குணங்களையின்றிப் பொருண் மாத்திரம் அகப்படுக்கும் நிர்விகற்பக்காட்சி.

அர்த்தமானியம் - பாதிப்பகுதி இறையிலியாக விடப்பட்ட நிலம்.

அர்த்தம் - அருத்தம், பொருள், பாதி.

அர்த்தம்பண்ணல் - பொருள் சொல்லல்.

அர்த்தம்பண்ணுதல் - பொருள்கொள்ளுதல்.

அர்த்தரதன் - ஒரு வில்லாளியோடு போர்ச்சத்தியற்றவன்.

அர்த்தராத்திரி - பாதியிரா, நடுநிசி.

அர்த்தவாதம் - பிரயோசனத்தை சொல்லுதல், புகழ்தல், புகழ்ச்சி.

அர்த்தவுதயம் - அர்த்தோதயம்.

அர்த்தவேதம் - உபவேதங்கள் நான்கனுளொன்று. அது கூடிண ஆச்சியசரு உபகாராதிகளை நிண்ணயம் பண்ணுவித்துத் தருமாதி சதுர்வித புருஷார்த்தத்திற்கும் சாதனமாயிருப்பது, பொருணூல்.

அர்த்தாங்கம்-அர்த்தாங்கவாதரோகம்.

அர்த்தாங்கவாதம் - பாரிசவாதம்.

அர்த்தாங்கீகாரம் - ஒரு பகுதியை அங்கீகரித்தல்.

அர்த்தாட்சி - பக்கப்பார்வை.

அர்த்தாதுரம் - பணவாசை.

அர்த்தாத்-வெளிப்படையாகச் சொல்லாமலே,உத்தேசிக்காமல்இடையே.

அர்த்தாத்து - அர்த்தத்திலுள் இருக்கிறபடி, உள்ளபடி.

அர்த்தாந்தரந்யாசம் - வேற்றுப் பொருள் வைப்பென்னும் ஓரலங்காரம்.

அர்த்தாந்தரம் - தோல்வித் தானம் இருபத்தொன்றில் ஒன்று, அது

தனக்கு வருந் தோல்வியைப் பிறி தொன்று பேசி மறைத்தல், பிரகிரு தத்திற் சம்பந்தமான பொருளு டைய சொல், வேறு காரணம், வேறுபொருள்.

அர்த்காபத் - அருத்தாபத்தி என்னும் பிரமாணம்.

அர்த்தாபத்தி - ஓர் அளவை.

அர்த்தாபத்தியலங்காரம் - பொருட் பேற்றுப் பிரமாணவணி.

அர்த்தாப்பு - உருளைக்கிழங்கு.

அர்த்தி - இரவலன் ஏவியது செய் வோன், முறையிடுவோன், வாதி, யாசகன்.

அர்த்திதவாதம் - ஒருவகை ரோகம்.

அர்த்தித்தல் - இரத்தல், வேண்டுதல், யாசித்தல்.

அர்த்தோதயம் - அறுபது வருஷத் திற் கொருமுறை வரும் ஒரு விசேடகாலம். அது தைமாசத்தில் ஞாயிற்றுக் கிழமையும் அமாவாசை யும் திருவோண நட்சத்திரமுங் கூடியகாலம்.

அர்ப்பகன் - பாலகன்.

அர்ப்பணம்-நிவேதித்தல், உரியதாகக் கொடுக்கை,ஒப்பித்தல்,நிவேதனம்.

அர்ப்பம் - ஒளிமில்லாதது, பனி, பிள்ளை, பூண்டு.

அர்ப்பன் - மானுக்கன்.

அர்ப்பி - நிவேதி.

அர்ப்பிதம்-கொடுக்கப்பட்டது, நிவே திக்கப்பட்டது, உரியதாக்கப் பட் டது, அர்ப்பணம், காணிக்கை.

அர்ப்பித்தல் - நிவேதித்தல், உரிய தாக்குதல்.

அர்ப்பீடம் - அரப்பாயம்.

அர்ப்புதம் - ஒரெண், ஒருமலை, பாம்பு, மாமிசமொத்தை, மேகம், ஆயிரங் கோடி.

அர்ப்புதவர்த்துமரோகம் - கண் ணி மையிஞ்ஞரங்களில் மாமிச மொத் தையைப் போலத் தடித்தலை யுண் டாக்கும் ஒரு நோய்.

அர்வாசீனம் - நவீனகாலத்து, பின் வருவது, மாறுனது.

அல - அலவென்னேவலுக் தெரிநிலை வினைப்பகுதியும், அல்லவென்னுங் குறிப்பு வினை லகாரங்கெட்டு நின்ற ஒரு விகாரமொழி, அல்ல, கிலேசி, வறுமைப்படு.

அலகம் - ஆனைத்திப்பிலி, யானைத்திப் பிலி, வேப்பலகு.

அலகம்பு - அம்புவகை.

அலகரி - பெருக்கு.

அலகலகாக - தனித் தனியாக.

அலகிடல் } அளவிடுதல், எழுத்
அலகிடுதல் } தெண்ணி யோசை கூட்டுதல், கண்டித்தல், துடைப்பத் தாற் பெருக்குதல்.

அலகிரி - அலகரி.

அலகின்மாறு - விளக்குமாறு, துடை ப்பம.

அலகு - அளவு, அளவுகருவி, கதிர், கூர்மை, சோதிடம, ஆயுதத்தில் அலகு, தாடை, கொதுகு, செந்துக் களின் கொடிறு, கைம்மறம், நூற பாவினலகு, அகலம், பொன்னுங்கா ணி, ஆண்பனை, இலட்சம்பாக்கு, ஆயுதப்பொதி, எண், ருதுப்பு, கத் தியிற் கூர்ப்புறம், சலாக்கு, துடை ப்பம, நுளம்பு, நெண்மணி, மயிர்க் கதிர், பலகறை, பறவைமூக்கு, பாவோட நினைக்குமலகு, மகிழம் விதை, விசாலம், கூர்மை.

அலகுகட்டல் - அலகுகட்டுதல், கணக் குப்பைசல் செய்தல், மந்திரத்தால் வாயைக் கட்டல்.

அலகுகட்டை - வண்டிச்சக்கர வட்டை.

அலகுகிட்டுகை - திறக்கப்பட இயலா மல் மேல்வாயலகும் கீழ்வாயலகும் நெருங்கி நிற்கை.

அலகுகிட்டுதல் - சன்னியாற் பல்லு கிட்டுதல்.

அலகுகூடை - பிரப்பங்கூடை, வளா ர்க்கூடை.

அலகுசோலி - அறுகு.
அலகுஞ்சம் - நுளம்பு, மின் மினி.
அலகுநிலை - பாக்குச்சு நிலை.
அலகுநிறுத்தல் - திரௌபதை உத்ஸவத்தில் கத்திக்குக் காப்புக்கட்டுகை.
அலகுபருப்பு - ஒருபட்டாணி.
அலகுபனை - ஆண்பனை, ஒருபனை, அலகு.
அலகுபாக்கு - மெல்லிதாய்க் கத்தரித்து வேகவைத்த ஒரு பாக்கு.
அலகுபூட்டல் - சவசில் வாயை மூடுதல்.
அலகுபோடல் - நாக்கைத் துளைத்துச் செய்யுமோர் சுவம், அலகுபோடுதல்.
அலகுப்பூட்டு - பிரார்த்தனைக் கென்றிடப்படும் வாய்பூட்டு.
அலகுவிறைப்பு - குளிர்ச்சியால் வாய் கிட்டுதல்.
அலகை - கற்றூழை, காட்டுக்கற்றூழை, பிசாசம், பேய்க்குமட்டி, பேய், பிசாசு.
அலகைக்கொடியாள் - காளியம்மை.
அலகைக்கொடியுயர்த்தாள் - காளியம்மை.
அலகைச்சுரம் - கீழ்க்காய்நெல்லி.
அலகைத்தேர் - கானலாகிய பேய்த்தேர்போலும், அசத்தியம், பேய்த்தேர்.
அலகைமுலையுண்டோன் - கண்ணன், திருமால்.
அலகைமுலையோடாவியருத்திலேன்-கிருட்டினன்.
அலக்கணம - அதிட்டவீனம், இலக்கணவீனம்.
அலக்கண் - துன்பம், துக்கம்.
அலக்கலக்காய் - தனித்தனியாய்.
அலக்கழி - அலைக்கழி.
அலக்கழிதல் - வருந்துதல்.
அலக்கழித்தல் - துன்பப்படுத்தல், அலைத்துவருத்துதல், கெடுத்தல், அழகுகாட்டுதல்.
அலக்கியம் - அறியப்படாதது, அற்பக் காரியம், இலக்கியமல்லாதது, காணப்படாதது, தோற்றத்திற் சிறியது, விசேடக்குறிகளல்லாதது, லக்ஷ்யமல்லாதது.
அலக்கினம் - இலக்கினமல்லாதது, துட்டலக்கினம்.
அலக்கு - தனிமை, அலாக்கு, வரிச்சு, துறட்டுக்கோல், கிளை.
அலக்குதல் - அசையச்செய்தல், அலக்கல்.
அலக்குத்தடி - வேலியடைக்கும் மரக்கிளை.
அலக்குப்போர்-சேவகரீட்டிகளை ஒன்றுடொன்று எதிர்த்து வைக்கை.
அலக்கைச்சுரம் - கீழ்க்காய்நெல்லி.
அலக்கொடுத்தல் - உபத்திரவித்தல்.
அலக்கொடுப்பு - உபத்திரவம்.
அலங்கடை - அல்லாவிடம்.
அலங்கமலங்க - பொறிகலங்க.
அலங்கம் - அரண், கொத்தளம், மதிலிலேருறுப்பு.
அலங்காரணம் - அலங்கரிப்பு, அலங்காரம், அலங்கிருதம், அலங்கிருதி.
அலங்காரி - அலங்காரியென்னேவலுக் கெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும், சிங்காரி.
அலங்காரித்தல் - அலங்காரஞ் செய்தல், அணிதல், ஒப்பனைகை செய்தல், கைத்தல், பூணுதல், பூசுதல், பொற்பூறுத்தல், மண்ணல், வினைதல், வேய்தல், சிங்காரித்தல்.
அலங்கரிப்பு - சிங்காரிப்பு, அலங்கரித்தல்.
அலங்கலம் - அசைதல், ஒழுங்கு.
அலங்கல் - அசைவு, இரக்கம், ஒளிசெய்தல், கலுழ்தல், தளிர், பூமாலை, மயிர்ச்சூட்டுமாலை, அசைதல், ஒளிர்தல், மணங்கவங்கல்.
அலங்கலுரி - மூத்துச்சிப்பி.
அலங்காரத்திருவிழா - விசேடத் திருவிழா.

அலங்காரகைவேத்தியம் - மண்டப் படி கைவேத்தியம்.
அலங்காரபஞ்சகம் - ஒரு பிரபந்தம், அலங்காரப் பஞ்சகம்.
அலங்காரப்படுத்துதல் - சிங்காரித்தல்.
அலங்காரப் பிரியன் - விஷ்ணு.
அலங்காரப்பேச்சு - சிங்காரப்பேச்சு, புனைவுறை.
அலங்காரம் - சிங்காரம், ஆகாரம், செய்யுளணி, பொற்பு, சங்கீத வுறுப்புவகை, ஒப்பனை, காமர், கை, துப்பரவு, தையல், அணியிலக்கணம், அழகு, ஆபரணம், உவமை, ஒரு நூல், கட்டழகு, கலைஞானம் அறுபத்து நான்கிலொன்று, சிறப்பு, வாசகச் சிறப்பு.
அலங்கார விளக்கு - மரத்தண்டிற் பல கிளைகொண்ட மண விளக்கு.
அலங்காரி - அலங்காரஞ் செய்யப் பெற்றவள்,
அலங்காரித்தல் - அலங்கரித்தல்.
அலங்கியம் - கடத்தற்கரியது.
அலங்கிருதம் } அலங்காரம், சிங்கா
அலங்கிருதி } ரம்.
அலங்கு - அலங்குதல், அலங்கென்னேவலும் தெரிநிலை வினைப்பகுதியும் பெயரெச்சத் தொகையும், அலை, ஒளி செய்.
அலங்குதல் - மனந்தத்தளித்தல், இரங்குதல், ஒளிர்தல், அசைதல், இரங்கல், ஒளி செய்தல்.
அலங்கை - தளசிப்பூண்டு, துளசி.
அலங்கோலம் - சீர்கேடு, ஒழுங்கின்மை, கோலக்கேடு, அலங்கோலை, கிரமமில்லாமை.
அலசகம் - உதரவாயு, சோம்பு.
அலசகுட்டம் - ஒருவகைக் குட்டரோகம், அது இரத்த நிறமாக ஆற்றிற் கிடக்குஞ் சிறு சிறு கூழாங் கல்லு களைப்போலக் கொப்புளங்கள் பிறந்து உடைந்து இரணங்களாவது.
ஆசிரபத்தன் - மூலநட்சத்திரத்திற் பிறந்தவன்.

ஆசிரபம் - மூலநட்சத்திரம்.

ஆசிரமம் - ஆச்சிரமம், பன்னகசாலை, முனிவர் உறைவிடம், பர்ணசாலை, நிலை.

ஆசிரமி - ஆச்சிரம நிலையில் நிற்பவன், சன்னியாசி.

ஆசிரம் - இடம், தீ.

ஆசிரயணம் - சார்ந்து நிற்கை.

ஆசிரயம் - இடம், இருத்தல், கொள், கொம்பு, சமீபம், புகலிடம், வழக்கு, வாசம், அடுத்திருக்கை.

ஆசிரயவிகீனன்-உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது இந்த ஏதுசாத்தியங்களுக்கு ஆகாயத்திற் பூப்போல என்கிற திருட்டாந்தம் பொருந்துகையிலை என்பது.

ஆசிரயவீனன் - உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது இந்த ஏதுவுக்குத்தானே ஆகாயத்திற்பூப் போல என்கிற திருட்டாந்தமாயிருக்கிற ஆகாயபுட்பமில்லாதபடியிலை என்பது.

ஆசிரயன் - சமீபத்திலுள்ளவன், தற்காப்போன்.

ஆசிரயி - சார்.

ஆசிரயிகர் - தொண்ணூற்றெருசாதியிலொருசாதியார்.

ஆசிரயித்தல் - அனுட்டித்தல், கைக்கொள்ளல், விரும்பல், சார்தல்.

ஆசிரவம் } இணக்கம், உடன்
ஆசிராவம் } படிக்கை, உபத்திரவம், நவபதார்த்தங்களுளொன்று.

ஆசிரிதம் - ஆசிரயமானது, சார்ந்திருக்கை.

ஆசிரிதர் - பொருந்தினவர்.

ஆசிரிதன்-திவ்யந்தன் பௌத்திரன். இவனுக்குப் பாண்டியன், சோழன், கேரளன் என மூவர்புத்திரர். இவர் மூவரும் தனித்தனி வமிசத்தராய்ப் பின்னர் பிரகாசிக்குமாறு தத்தம் பெயரால் ஜனபதங்களே யுண்டாக்கினர், பற்றுகிறவன், சார்ந்திருப்பவன்.

ஆசிரித்தல் - ஆசிரயித்தல்.

ஆசிரியச்சீர் - அகவலுரிச்சீர், ஆசிரியப்பாவிற் குரியதளை, அது மாநாள் என்னும் வாய்பாடுகளின் பின்னேரசையும் விளமலர் என்னும் வாய்பாடுகளின் பின்னிரையசையும் வருவது.

ஆசிரியச்சரிதகம் - கலிப்பாலி னுறுப்புகளாறனுள் தனிச்சொற்குப்பின்னர் மூன்றடியிற் குறையாது பல வடியாலாகிவரும் ஆசிரியப்பா.

ஆசிரியத்தளை - ஆசிரியச்சீர்.

ஆசிரியத்தாழிசை - அகவற்பாவினத்துள் ஒன்று. அஃது எனைத்துச் சீரானுந் தம்முளளவொத்து மூன்றடியாய்த் தனித்தேனும் ஒருபொருண்மேல் மூன்றடுக்கியேனும் வருவது.

ஆசிரியத்துள்ளல் - துள்ளலோசை மூவகையுள் ஒன்று. அது வெண்டளையுங் கலித்தளையுங்கலந்துவருதலாற் பிறக்குமோசை.

ஆசிரியத்துறை - அகவற்பாவினத்துள் ஒன்று. அஃது எனைத்துச் சீரானும் வருமடி நான்குடைத்தாய் ஈற்றயலடி குறைந்தேனும் இடைமடங்கியேனும் முதலடியும் மூன்றுமடியுங் குறைந்தேனும் வரும்.

ஆசிரியத்தூங்கல் - தூங்கலோசை மூவகையுளொன்று. அது ஒன்றுதவஞ்சித்தளையாற் பிறக்குமோசை.

ஆசிரியநிகண்டு - ஆசிரியப்பாக்களாற் செய்யப்பட்ட ஒரு நிகண்டு.

ஆசிரியநிலைவிருத்தம் - அடிமறியாதே வருவது.

ஆசிரியப்பா - ஐந்துபாவினொன்று, அஃது அகவல்.

ஆசிரியமண்டலவிருத்தம் - அடிமறியாக வருவது.

ஆசிரியமதம் - ஆசிரியர்க்குரியமதங்கள். அவை பிறர்மதத்திற் குடன்படுதல், பிறர்மதத்தை மறுத்தல், பிறர்மதத்திற்குடன்பட்டுப் பின்பு மறுத்தல், தானொரு பொருளையெடுத்துநாட்டி அதனை வருமிடந்தோறு நிறுத்தல், இருவரால் விரோதமாகக் கொள்ளப்பட்ட இரண்டனுளொன்ற னிடத்துத் துணிதல், பிறர் நூலிலுள்ள குற்றத்தை யெடுத்துக்காட்டல், பிறர்மதத்திற்குடன்படாதுகித் தன்மதத்தைக்கொளளல் என்பனவாம்.

ஆசிரியமாலை - ஒருநூல்.

ஆசிரியம் - ஆசிரியப்பா, இருத்தல், கொள்கொம்பு.

ஆசிரியரிலக்கணம் - ஆசிரியரது இலட்சணம். அது உயர்குடிப்பிறப்பு, சீவகாருண்யம், கடவுள்வழிபாடு இவைகளாலாகிய மேன்மையும், பல நூல்களிற்பழகிய தேற்றமும், நூற்பொருளை மாணக்கரெளிதி லுணரும்படி தொடுத்துச் சொல்லும் வன்மையும், நிலத்தையும் மலையையும் துலாக்கோலையும் பூவையும் ஒத்த குணங்களும் இவைபோல்வன பிறவுமாம்.

ஆசிரியர் - உபாத்தியாயர், குரு, நூலாசிரியர்.

ஆசிரியர்கூற்று - கவிக்கூற்று, முதுமொழி, மேற்கோள், ஆசிரியவசனம், பழஞ்சூத்திரம்.

ஆசிரியர்நல்லந்துவனார் - கடைச்சங்கப் புலவருளொருவர், இவர் கலித்தொகை என்னு நூல் செய்தவர்.

ஆசிரியர்மதம் - ஆசிரியமதம்.

ஆசிரியவசனம் - குருவாக்கியம், பதினொன்குரையி லோருரை, மேற்கோள்.

ஆசிரியவிசை - அகவலோசை.

ஆசிரியவிருத்தம் - அகவற்பாவினத்துளொன்று. அது அளபொத்த கழிநெடிலடி நான்கினுவருவது, ஒருகவி, மனவிருத்தம்.

ஆசிரியவுரிச்சீர் - அகவற்குரிய சீர்.

ஆசிரியவோசை - ஆசிரியப்பாவிற் குரிய சந்தம். அது நேரொன் றுசிரியத்தளையாற் பிறப்பது ஏந்திசையகவலெனவும், நிறையொன் றுசிரியத்தளையாற் பிறப்பது தூங்கிசையகவலெனவும், அவ்விருதளைகளின் கலப்பாற் பிறப்பது ஒழுகிசையகவலெனவுஞ் சொல்லப்படும்.

ஆசிரியன் - உவாத்தி, குரு, நூலாசிரியன், போதகாசிரியன், புலவன், உபாத்தியாயன், ஞானசிரியன், ஆசாரியன்.

ஆசிலேடம் - ஆலிங்கனம்.

ஆசிலேடித்தல்-ஆலிங்கனம்பண்ணல்.

ஆசினி - ஆகாயம், ஈரப்பலா, காழ், மரவயிரம், மரவுரி, ஆகாசம்.

ஆசீயம் - கருஞ்சீரகம்.

ஆசீர் - மங்களம், வியங்கோன்.

ஆசீர்வசனம்
ஆசீர்வதித்தல்
ஆசீர்வதிப்பு
ஆசீர்வாதம்
} வாழ்த்தல், ஆசி கூறல், வாழ்த்து.

ஆசீல் - மதிப்பு.

ஆசீவகப்பள்ளி-சமணமுனிவர்மடம்.

ஆசீவகர் - சமணமுனிவர்.

ஆசீவகன் - சமணரில் ஒரு பிரிவினன், சமண தவத்தோன்.

ஆசீவம்
ஆசீவனம்
} சீவனம்.

ஆசு - அற்பம், ஆசுமணை, இருகுறணைரிசை வெண்பா, இடையிற் றனிச்சொற்கு முன்னிற்பது, இல

க்கு, கவசம், ஆணவமலம், தூட்பம், சீக்கிரம், ஐயம், துன்பம், ஆசுகவி, வாளின்கைப்பிடி, கவசம், கைக்கவசம், குற்றம், கைக்கருவி, சடுதி, சமிசை, நாற்கவியிலொன்று, நூலிழைக்குங் கருவிகளிலொன்று, தூசி, பற்றுசு, முப்பத்திரண்டு பாஷாணத்தொன்று, பற்று, விரைவு.

ஆசுகம் - அம்பு, காறறு, பறவை.

ஆசுகவி - ஆசுகவிபாடும் புலவன், நாற்கவியி லொன்று. அது பொருளடிபாவணி முதலியன கொடுத்து மற்றொருவன் பாடுவெனப் பாடுங் கவி.

ஆசுகன் - காற்று, வாயுதேவன்.

ஆசுகி - பறவைப்பொது, பறவை, புட்பொது.

ஆசுசுக்கணி - அக்கினி.

ஆசுணம்-அசோகு, அரசு, அசோகம்.

ஆசுபத்திரி-ஒருமரம், வைத்தியசாலை, அசுரத்தன்மை.

ஆசுமணி - செய்தற்கருவிகளு ளொன்று.

ஆசுமணி - நூல்சுற்றுங்கருவி.

ஆசுமேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டிலொன்று.

ஆசுரதம் - சம்மதித்தல்.

ஆசுரபாவம் - அசுரத்தன்மை.

ஆசுரம் - அசுரமணம். அதுபெண்ணுக்குஞ் சுற்றத்துக்கும் வேண்டுவன கொடுத்துக்கொள்ளுமணம், இஞ்சி, அசுரம்.

ஆசுரவைத்தியம் - இராணவைத்தியம்.

ஆசுரி-இராணவைத்தியன், அசுரஸ்திரீ

ஆசுவயம் - விரைவு, வேதநூட்பம்.

ஆசுவயுசி - யாகமிருபத் தொன்றில் ஒன்று.

ஆசுவலாயநீயம் - உபநிடத முப்பத்திரண்டிலொன்று.

ஆசுவலாயனசூத்திரம் - உபநிடதமுப்பத்திரண்டினுளொன்று. அது ஆசுவலாயனனென்னும் மகாவிருடியால் இருக்குவேத விகித கருமங்களைக்குறித்தெழுதப்பட்ட ஒரு சூத்திரதூல்.

ஆசுவலாயனர் - ஒருமுனிவர்.

ஆசுவலாயனன் - ஒரு மகாவிருடி, அவன் இருக்குவேத விகிதகருமங்களைக் குறித்துச் சூத்திரஞ் செய்தவன், ஆசுவலாயனன்.

ஆசுவாசம் - இளைப்பாறுகை, இளைப்பாறுதல்.

ஆசுவிகன் - ஆசீவகன்.

ஆசுவினம், ஆசுவின், ஆசுவீசம் } ஐப்பசிமாதம், சாந்திரமாசத்துள் ஏழாவது.

ஆசூசம் - சூதகம், தீட்டு, ஆசௌசம், அசுத்தி.

ஆசூடனம் - உரிஞுதல்.

ஆசூரம் - வெள்வெங்காயம், வெள் வெண்காயம்.

ஆசெடை - ஆசெடுத்தல்.

ஆசெதுகை - ஆசிடையிட் டெதுகை.

ஆசெறாண் - ஆதீண்டுகுற்றி.

ஆசேகம் - நனைக்கை.

ஆசேசனம் - தெளித்தல்.

ஆசை-அன்பு, திசை, நீளம், பதினெண்குற்றத்தொன்று, திக்கு, பொன், மனதீக்குணம் மூன்றிலொன்று, மாயை, யாக்கை, விருப்பம், விருப்பு, விழுப்பம், விழைவு, வினாரி, வினைவு, வெப்பம், புரி, பெட்பு, மாதர், மோகம், வயர்வு, வாஞ்சை, வித்துப்பு, பொருளாசை, காமவிச்சை, பேற்றில் நம்பிக்கை, வெம்மை, வேட்பு, வேட்கை, அணங்கு, அரை, அருத்தி, அவா, ஆர்த்தி, ஆதரம், ஆர்வம், ஆவல், இச்சை, இராகம், எட்டை, காதல், காமம், காமர், நசை, நச்சு, நம்பு, நயப்பு, நரம்பு, பற்று, பிணை.

ஆசைக்கிழத்தி - வைப்பாட்டி.

ஆசைப்படல் - ஆசைப்பெருக்கம்.

ஆசைப்படுதல் - விரும்புதல், ஆசை கொள்ளுதல்.

ஆசைப்பாடு - விருப்பம், ஆசைப்படுதல்.

ஆசைப்பெருக்கம் - அவா, பேராசை, இரதி, இவறல், கவர்தல், காதலித்தல், சார்தல், தாழ்தல், நச்சுதல், நம்பல், நயத்தல், நல்கல், பற்றல், பெட்டல், பேணல், மேவல், விரும்பல், வீழ்தல், வஃகல், வெட்டல், வேண்டல்.

ஆசைமருந்து - தன் வசமாக்கக் கூட்டும் மருந்து.

ஆசையறுதல் - மனதின் சற்குணம் நானகிலொன்று. அஃது விருப்பகற்றல்.

ஆசோதை - இளைப்பாறல், ஓய்வு.

ஆசோத்தியம் - ஆயாசமின்மை.

ஆசௌசம் - அசுத்தம், சூதகம், ஆசூசம், தீட்டு.

ஆஸ்கந்திதம் - ஆக்கிரந்திதம்.

ஆச்சந்திரகாலம்-சந்திராஸ்தமட்டும்.

ஆச்சந்திரார்க்கம் - சூரியசந்திராஸ்தமட்டும், ஆச்சந்திராத்தியகாலம்.

ஆச்சமரம் - மூகைப்புல்.

ஆச்சரியம் - அதிசயம், வியப்பு.

ஆச்சல் - அசைத்தல், பாச்சல், பாய்ச்சல்.

ஆச்சனை - முழுதுஞ் செலவழிக்கை.

ஆச்சா - ஒருமரம், சாலமரம்.

ஆச்சாட்டு - சிற்றீரம்.

ஆச்சாதகபலை - பருத்தி.

ஆச்சாதகம் - ஆணவமலம், மறைவு, அஞ்ஞானம்.

ஆச்சாதம் } உறை, புடவை, மூடி,
ஆச்சாதனம் } மேலங்கி, ஆடை, மறைப்பு.

ஆச்சாபுரம் - ஒரு சிவஸ்தலம்.

ஆச்சாமரம் - ஆ, சாலம், சுள்ளி, மராமரம், யாலம்.

ஆச்சாள் - தாய்.

ஆச்சான் - ஆசாரியன்.

ஆச்சி - தாய், பாட்டி, ஆய்ச்சி, ஆய், ஆச்சாள்.

ஆச்சியகந்தமேகம் - ஒருவகை மேகரோகம். அது மூத்திரமானது நெய்யை யொத்துத் துணியிற் றேய்த்துக் கொளுத்தினுல் எரிவதும் நாளொன்றுக்கு நான்குபடி அளவாக இறங்குவதுமாம்.

ஆச்சியசுத்தி - தக்கிருதசுத்தி, நெய்யினுற் சுத்திசெய்தல்.

ஆச்சிபூச்சி - ஒருவிளையாட்டு.

ஆச்சியம் - நெய்.

ஆச்சியாடு - இரந்துசேர்க்கும் ஆடு.

ஆச்சிரமத்தான் - ஆச்சிரமத்தையுடையவன்.

ஆச்சிரமம் - ஆசிரமம், இளைப்பாறுமிடம், சங்கம், நிலை, பன்னசாலை, முனிவருறைவிடம், வாழ்க்கைநிலை, பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரத்தன், சந்நியாசி.

ஆச்சிரமி - ஆச்சிரமத்தையுடையோன்.

ஆச்சிரயம் - ஒருவனை யடுத்திருத்தல், பாதுகாப்பு, புகலிடம், ஆசிரியம்.

ஆச்சிரயவினேன் - உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது ஆசிரயவினேன்.

ஆச்சிரயவீனன்-உவமைப்போலி பதினெட்டனுளொன்று. அது ஆசிரயவீனன்.

ஆச்சிராமம் - ஆளுகை செல்லுமிடம், ஒரூர், ஆச்சிரமம்.

ஆச்சிலை - கோமேதகம்.

ஆச்சு - ஆயிற்று, முடிந்தது, ஆச்சுது.

ஆச்சுரிதகம் - அட்டகாசம், குதிரைக் கனைப்பு, கொடித்தல்

ஆச்சுவரி - அரசு.

ஆச்சேதம் } நறுக்குதல், வெட்டுதல்.
ஆச்சேதனம் }

ஆச்சோதனம் - வேட்டை.

ஆஸ்தானம் - நீதிஸ்தலம், தருமசபை, ஆத்தானம்.

ஆஸ்தி - சம்பத்து.

ஆஸ்திகன் - ஆத்திகன்.

ஆஸ்தை - விருப்பம், சிரத்தை.
ஆஸ்பதம் - சத்து, புகலிடம், காரணம்.
ஆஞா } தகப்பன், ஆஞான்.
ஆஞி }
ஆஞ்ஞை - ஆக்கினை.
ஆஞ்சனேயன் - அனுமான், அநுமான் ஆஞ்சநேயன்.
ஆஞ்சான் - அந்தரிப்பா யசைவது, கட்டிச்சாம்புங் கயிறு, சிறிய தனிக்கொப்பு, நிறுக்குங் கருவிகளின் கயிறு, மரக்கலப்பாய் கட்டுங்கயிறு, இளமரத்தின் தண்டு.
ஆஞ்சான்பற்றி - மரக்கலப்பாய் கட்டும் ஸ்தம்பம்.
ஆஞ்சி - அலையல், எலம், கூத்து, சோம்பல், சோம்பு, விளையாடல், அச்சம், அலைவு.
ஆஞ்சில் - ஒருவிதப்பூடு, சங்கஞ் செடி.
ஆஞ்செலகை - கப்பல், தெப்பம்.
ஆஞ்ஞாபனம் - கட்டளையிடுகை.
ஆஞ்ஞாபித்தல் - கட்டளையிடல், அறிவித்தல்.
ஆஞ்ஞை - அஞ்ஞை, ஆணை, ஆறு தாரத்தொன்று, அஃது நெற்றித் தானம், கட்டளை.
ஆஞான் - ஆஞா.
ஆடகச்சயிலம் - மேரு.
ஆடகத்தி - குங்குமபாஷாணம்.
ஆடகமாடம் - இரவிபுரம். இது மலை நாட்டிற் கன்னியா குமரிக்கு வடமேற் கெல்லையி லேழுநாழிகை வழித்தூரத்தி லுள்ளது, திருவனந்தபுரம்.
ஆடகம் - கூத்தாடுமிடம், சிறு நகாப்பூ, துவரை, நால்வகைப் பொன்களுள் ஒன்று, பொன், உலோகக் கட்டி, உலோகம்.
ஆடகன் - இரணியகசிபு.
ஆடகாந்நிதானம் - வடமொழியிற் சிறந்த ஓர் கைத்தியநூல்.
ஆடகி - துவரைச்செடி, துவரை.
ஆடகூடம் - செப்புமலை.
ஆடகேசன் - பாதாளலோகத்துள்ள உருத்திரகணத்தலைவன்.
ஆடகேசுரர் - பாதலத்தைக் காக்கின்ற கோடியுரு யுத்திரருட்டலைவர்.
ஆடகேசுரம் - ஆடகேசனுடைய புவனம்.
ஆடகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டிலொன்று.
ஆடம் - ஆமணக்கு, இருபதுகொத்துக்கொண்ட ஓரளவு.
ஆடம்பரம் - இடம்பம், கண்மடல், கோபம், சந்தோஷம், தூலக்கம், பெருமை, போர்ப்பறை, யானை பிளிறுலி, வேடிக்கை, இடம்பத் தோற்றம்.
ஆடரி - சுப்பிரமணியக் கடவுள்.
ஆடலார் - நடனமுடையவர்.
ஆடலிடம் - அரங்கம்.
ஆடலை - பூவில்லாமரம், பூவிளா, பூவாதமரம்.
ஆடல் - மாறல், அசைதல், குளித்தல், கூத்தாடல், கூத்து, செய்தல், சொல்லல், ஸ்நானஞ் செய்தல், நயச்சொல், புணர்தல், பொருதல், நடங்கல், வெற்றி, நட்புரை, நடித்தல், வீரம், வார்த்தை, விசயம், விளையாடல், அசைகை, தடித்தல், தாண்டல், தாங்கல், பெயர்தல், அகவல், ஆவல், குனித்தல், தன்பம், செய்கை, விளையாட்டு, புணர்ச்சி, சொல்லுகை, ஸ்நாநம், போர், ஆளுகை, ஆள்தல்.
ஆடவர் - ஆண்மக்கள், இளையோர், பிராய மூப்பத்திரண்டிற்கும் நாற்பத்தெட்டிற்கும் இடைப்பட்டவர். இவர் மன்னரெனவும் படுவர், புருடர்.
ஆடவர்கூட்டம் - சபை, சபை, பண்ணை, அவை, சங்கம், கோட்டி.
ஆடவர்பருவம் - பாலன், காளை, குமரன், ஆடவன், மூத்தோன், விருத்தன்.

ஆடவவிருத்தம் - வயது நாற்பத்தெட்டிற்கும் அறுபதுக்கு மூடான பருவமுள்ளவர். இவர் மூத்தோரெனவும் படுவர்.

ஆடவள் - பெண், மங்கைப் பருவம், விருத்தை.

ஆடவன் - ஆண்மகன், இளைஞன், நான்காம் பருவத்தினன், புருடன். வயது முப்பத்தின்மேல் நாற்பத்தெட்டுக் குட்பட்டவன்.

ஆடவை - ஏவல், நிருத்தசபை, பெண், மிதுனவிராசி, நடனசபை.

ஆடற்கூத்தியர் - அகக்கூத்தாடுவோர்.

ஆடற்கூறுபாடு - கூத்தினதுபகுப்பு. அதுதாண்டவம், நாட்டியம், நிருத்தம் என மூவகைப்படும்.

ஆடற்பேதம் - கூத்தினதுவேற்றுமை. அது நின்றாடல், வீழ்ந்தாடலென இருவகைப்படும்.

ஆடனூல் - நாட்டியநூல்.

ஆடா - கால்களிற் கட்டியைப்போலுண்டாகுங் குதிரைநோய்.

ஆடாதொடை, ஆடாதோடை } ஒரு மருந்துச் சாமான், பாவட்டை, வாசை.

ஆடி - அளந்து, ஆடுபவன், உத்திராடநாள், கண்ணாடி, கர்க்கடகமாதம், காற்று, கூத்தாடி, ஓரசுரன், கூத்தாடுபவன், பளிங்கு, நான்காம் மாதம், ஆசாடம், சுசி, வாயாடி.

ஆடிக்கரு - கர்ப்போடகமேகம், ஆடிமாதத்து நீருண்டமேகம்.

ஆடிக்கோடை - ஆடிமாதத்தில் அறுவடையாகும் நெல்.

ஆடிடம் - விளையாடுமிடம்.

ஆடிப்பட்டம் - ஆடிப்பருவத்திற் பயிரிட உத்தேசிக்கும் நாட்கள்.

ஆடிப்பால் - ஆடிமாதப் பிறப்பில் செய்யும் விருந்தில் உபயோகிக்கும் தேங்காய்ப் பாலுணவு.

ஆடிப்பூரம் - ஆடிமாசத்தில் பூராகூத்திரத்தில் நிகழும் அம்பாள் உற்சவம்.

ஆடிப்பெருக்கு - பதினெட்டாம் பெருக்கு.

ஆடிய - அளந்த.

ஆடியமாவாசை - ஒருபுண்ணிய காலம்.

ஆடியறவெட்டை - ஆடிமாசத்திலுண்டாகும் பொருள்முடை.

ஆடிவேட்டை - மகளையும் மாப்பின்ளையையும் ஆடிக் கழைப்பதற்காகக் கள்ளசாதியார் செய்யும் களவு.

ஆடு - அசம், ஆடென்னேவல், கூத்து, கூர்மை, மறியாடு, மேடவிராசி, வெற்றி, மை, மறி, கொறி, சாகம், தகர், மேழகம், கொல்லுகை, சமைக்கை, கொச்சை, எழகம், வர்க்காலி, பள்ளை, வெள்ளை, காய்ச்சுகை, விலங்குவகை, அயம், அருணம், உடு, ஒருவு, துள்ளல், புருவை, வெறி, வெள்ளாடு, உதன், வருடை, மேடம், கடா, அசை, கூத்தாடு, விளையாடு, சண்டைப்படு, பிற, திரி, நீராடு, தருவை, மோத்தை.

ஆடுகால் - தலாகிற்குமரம்.

ஆடுகொம்பு - கட்டுகொம்பு.

ஆடுசதை - காலின் பின்பக்கத்து ஆடுந்தசை.

ஆடுஞ்சரக்கு - உஷ்ணத்தாற் காற்றாய்ப்போகும் இரசமுதலிய பொருள்கள், மருந்துச் சரக்கு.

ஆடுதன் - விளையாட்டுச் சீட்டுச் சாதிகளுள் ஒன்று.

ஆடுதல் - ஆடல், அசைதல், கூத்தாடுதல், விளையாடுதல், நீராடுதல், பொருதல், சஞ்சரித்தல், முயலுதல், பிறத்தல், சொல்லுதல், செய்தல், அனுபவித்தல், பூசுதல், அளத்தல்.

ஆடுதின்னிப்பாலை, ஆடுதின்னிப்பாளை } ஒரு மருந்துப் பூடு, புழுக்கொல்லி.

ஆடுதுடை - சதைப்பற்றுள்ள தொடைப்பகுதி.

ஆடுதுறை - ஒரூர்.

ஆடுதொடை - தொடையின் கீழ்ப் புறம்.
ஆடுபந்தர் - நடைப்பந்தர்.
ஆடுமாடு - கால்நடை.
ஆடுமாலை - ஓரிடத்துந் தரித்திராத வன், யௌவனஸ்திரீ, உல்லாச முள்ள குமரிப்பெண்.
ஆடுவான் - ஆடப்பட்டவன், நடே சன், ஆடுபவன்.
ஆடு, ஆடூஉ } ஆண்மகன்.
ஆடூஉவறிசொல் - ஆண்பான்மொழி.
ஆடை - சித்திரைநாள், சீலை, நேத்தி ரப்படலம், பனங்கிழங்கி னுட் டோல், பால் முதலியவற்றினேடு, போர்வை, ஏடு, கண்படலம்.
ஆடைக்குறி - வண்ணரிடுந் தூணிக் குறி.
ஆடைத்தயிர் - ஏடெடாத தயிர்.
ஆடைமேல் - கழுத்து.
ஆடையொட்டி - ஒட்டுப்புல், சீலைப் பேன், பூண்டுவகை.
ஆடைவீசுதல் - மகிழ்ச்சிக் குறியாக ஆடையை மேலேவீசுதல்.
ஆடோபம் - பெருமை, வாயு, பாக் கை, வீங்குகை.
ஆடோபன் - பெருமைக்காரன்.
ஆடோபி - பெருமைக்காரி.
ஆட்கடியன் - பாம்புவகை.
ஆட்காசு - பழங்காசுவகை.
ஆட்காட்டி - ஆள்காட்டுகின்றவன், ஆள்காட்டுகின்றவள், ஒரு புள், சுட்டுவிரல், பறவை வகை.
ஆட்கால் - சதுரங்க கட்டத்துள் காலாட்காயால் வெட்டக்கூடிய அறை.
ஆட்கூலி - வேலைக்காரனுக் குரிய கூலி.
ஆட்கொல்லி - கொலைகாரன், கொலை காரி, பணம், கொலைஞன்.
ஆட்கொள்ளுதல் - அடிமை கொள் ளுதல், உருக்கொள்ளுதல்.
ஆட்சபணம் - உபவாசம்.
ஆட்சபாடிகன் - நியாயாதிபதி.
ஆட்சபாதன் - ஒரு தருக்கசாத்திரி.
ஆட்சாரணம் - குற்றச்சாட்டு, நிந்தனை.
ஆட்சாரம் - குற்றச்சாட்டு.
ஆட்சி - ஆண்மை, ஆளுகை, வழக் கம், உரிமைநிலையிலொன்று, நன் னிமித்தம், பழக்கம், முயற்சி, ஆன் றோர் வழக்கு, அனுபவம், கிருக நிலையுளொன்று, ஆள்.
ஆட்சிபடல் - தற்கிழமையாதல்.
ஆட்சிப்படுதல் - உரிமையாதல்.
ஆட்சிவீடு - ஆட்சிஸ்தானம்.
ஆட்சியர் - ஆட்சியுடையார்.
ஆட்சுமை - ஒருவன் தாக்கும்பாரம்.
ஆட்செய்தல் - தொண்டு செய்தல், அடிமை வேலைசெய்தல்.
ஆட்சேபகம் - குற்றச்சாட்டு, நோய், வலி.
ஆட்சேபம் - தடைபண்ணுதல், நியா யத்தைத் திரும்பத்திரும்பக் கொடு த்தல், வழக்குரைத்துத் தள்ளுதல், தடை, குற்றம், நிராகரணம், சங்கை, ஆக்ஷேபம், ஆக்ஷேபனை, ஆட்சேபனை.
ஆட்சேபவணி - ஓரலங்காரம். அது உள்ளபொருளை மறுத்தலாற் கரு தியபொருளுக்குச் சிறப்புண்டாக வருணித் துரைப்பது.
ஆட்சேபனம் - எதிர்நியாயம், ஆட் சேபம்.
ஆட்சேபனை - மறுப்பு.
ஆட்சேபலங்காரம் - முரணணி அல்ல தெதிர் மறையணி.
ஆட்சேபி - மறு.
ஆட்சேபித்தல் - தடைசெய்தல், மறு த்தல்.
ஆட்சேபிப்பு - தடை, மறுப்பு.
ஆட்சை - கிழமை.
ஆட்டகம் - திருமஞ்சன சாலை.
ஆட்டமடித்தல் - ஒரு விளையாட்டு, அது புள்ளோக்கிட்டியா லடித்தல்.
ஆட்டமாய் - போல.

ஆட்டம் - அசைவு, அலைவு, உவமை யுருபு, கூத்து, சூதாடுதல், சூது முதலியவற்றினேர்முறை விளை யாட்டு, தன்மை, முயற்சி, அதிகா ரம், சஞ்சாரம், ஆட்டமாய், விளை யாட்டு, சாயல்.

ஆட்டல் - அசைத்தல், கூத்தாட்டு தல், கடப்பித்தல், ஸ்நானம்பண் ணுவித்தல்.

ஆட்டாங்கள்ளி - திருகுகள்ளி.

ஆட்டாங்கொடி - சோமலதை.

ஆட்டாங்கோரை - ஒருகோரை.

ஆட்டாண்டு - ஒவ்வோர் ஆண்டும்.

ஆட்டாம்பிழுக்கை - ஆட்டின் மலம்.

ஆட்டாம்புழுக்கை - ஆ ட் டு ம ல ம், ஆட்டாம்பிழுக்கை.

ஆட்டாளி - நிர்வகிப்போன்.

ஆட்டாள் - ஆட்டிடையன்.

ஆட்டி - ஆட்டு வே ர ான், தலைவி, பெண், மனைவி.

ஆட்டிடையன் - ஆடுமேய்க்குமிடை யன்.

ஆட்டியவாதம் - ஒ ரு வ கை வாத நோய். அது இளிப்பு வலது, எண ணெய் வலது, மச்சம், மாமிசம், மந்தரசம், தயிர், பால் இவைகளை மிகவும் புசித்தெக்காலத்து நடக்கா மல் நித்திரைசெய்வதினுற் பிறந்து சத்த தாதுக்களில் இருக்கின்ற வாத மார்க்கங்களையுஞ் சிலேஷ்ம மார்க்கங்களையும் அ டை த் து ச் சிலேஷ்மத்தோடுகூடி உபத்திர வத்தைச் செய்வது. அதனுல் தேகத்தில் திமிர், கனம், நோய், உறக்கம், இளைப்பு, வீக்கம், மல மூத்திரச் சிக்கல், பிரமை, தாழ் வாய் நோவு, முதலிய குணங்கள் உண்டாகும்.

ஆட்டிறைச்சி - ஆட்டுமாமிசம்.

ஆட்டு - அலைப்பு, முழுகுதல், ஆடுந் தன்மை, ஆட்டுந்தன்மை, ஆட் டென்னேவல், கூத்து, தத்துவம், வல்லமை, விளையாட்டு, அசை, அலை, கூத்தாட்டு, நீராட்டு, பம் பரமாட்டு.

ஆட்டுக்கசாலை - ஆட்டுக்கிடை.

ஆட்டுக்கடா - ஆணாடு, ஆ ட் டு க் கிடாய்.

ஆட்டுக்கல் - அமுத பாஷாணத்தி னொன்று, அரைக்குங்கல், ஆட்டு ரோசனை.

ஆட்டுக்கால் - அடம்பென்னுங்கொடி, ஆட்டினது கால்கள், பூமருது, ஆட்டுக்காலடம்பு.

ஆட்டுக்காலடமபு - அடப்பங்கொடி.

ஆட்டுக்காற்கல் - கொக்கைக்கல்.

ஆட்டுக்கிடாய் - ஆணாடு.

ஆட்டுக்கிடை - ஆட்டுத்தொழுவம், ஆடுகளைக் கூட்டுமிடம், ஆட்டுப் பட்டி.

ஆட்டுக்குட்டி - குட்டன், சோரன், பரழ், மணங்கு, மறி, வெள்ளை.

ஆட்டுக்கோன் - சிவன்.

ஆட்டுசம் - ஆடாதோடை.

ஆட்டுச்சதை - ஆடுசதை.

ஆட்டுச்செவிப்பதம் - தேங்காய்வழுக் கைப்பருவம்.

ஆட்டுதப்பி - ஆடு அசையிடுமிரை.

ஆட்டுதல் - அசைத்தல், அலைத்தல், ஆடச்செய்தல், அசைத்தல், துரத் தல், வெல்லுதல், ஸ்நானம்பண்ணு வித்தல்.

ஆட்டுத்தொட்டி - ஆட்டுக்கிடை.

ஆட்டுப்பட்டி - ஆட்டுக்கிடை.

ஆட்டுப்பலகை - செக்கின் கீழுள்ள சுற்று மரம்.

ஆட்டுமந்தை - ஆட்டின் கூ ட் ட ம், ஆடு கூடுமிடம்.

ஆட்டுரோமம் - ஆட்டுமயிர்.

ஆட்டுவாகனன் - அக்கினிதேவன்.

ஆட்டுவாணிகன் - ஆட்டுவியாபாரி, ஆட்டிறைச்சி விற்போன்.

ஆட்டுவாண்பன் - கசாப்புக்காரன்.

ஆட்டுவாணியன் - ஆட்டுவாணிகன்.

ஆட்டை - ஆண்டு, விளையா ட் டி ல் தொடங்குமுறை.

ஆட்டைக்கருமம், ஆட்டைத்திதி, ஆட்டைத்திவசம் } இறந்தவன் விஷயமாக முதல் வருட முடிவிலே அவனிறந்த திதியிலே செய்யப்படும் சிரார்த்தக்கிரியை, முதல் திவசம், வருஷாப்திகம்.

ஆட்டைவட்டம் - வருஷந்தோறும்.

ஆட்டைவட்டன் - ஆட்டைவட்டம்.

ஆட்டைவிழா - வருஷத்திருவிழா.

ஆட்படல் - தொண்டடைதல்.

ஆட்படுதல் - அடிமைப்படுதல், தலைப்படுதல், அடிமையாதல், உயர்நிலையடைதல், தேகசுகமடைதல்.

ஆட்பலி - நரபலி.

ஆட்பழக்கம் - மனிதசஞ்சாரம்.

ஆட்பார்த்தல் - ஆள்தேடுதல்.

ஆட்பிடியன் - முதலை.

ஆட்பிரமாணம் - ஆள்மட்டவளவு.

ஆணகம் - சுரை.

ஆணங்காய் - ஆண்பனையின் காய், ஆண் பனையின் பாளை.

ஆணட்சத்திரம் - புருட நட்சத்திரம். அது அத்தம், புனர்பூசம், பூசம், திருவோணம், அபிசித்து, அனுஷம், உத்திரட்டாதி, பூரட்டாதி, அசுவதி முதலியன.

ஆணத்தி - கட்டளை.

ஆணம் - அன்பு, ஆணவம், குழம்பு, கொள்கலம், நேயம், பற்றுக்கோடு, குழம்புத்தான், தேசம், பாத்திரம், தாழ்மை, சிறுமை.

ஆணரி - ஒரி.

ஆணர் - நன்மை, பாணர், வளமை.

ஆணலி - ஆண்தோற்றம் மிக்க அலி.

ஆணவப்பிணிப்பு - ஆணவமலபந்தம்.

ஆணவமலகாரியம் - ஆணவமலத்தினது காரியம். அது விகற்பம், கற்பம், சூரோதம், மோகம், நகை, கொலை, அளர், மதம் என்பன.

ஆணவமலம் - அறியாமை, சுபாவமயக்கம், மும்மலத்தொன்று, மூலமலம். அது உடம்பை யானென் றிருக்கை.

ஆணவமறைப்பு - மூலமலத்தடை.

ஆணவம் - ஆங்காரம், கோளகபாவஷாணம், நான் பெரியவன் என்கிற குணம். மூலமலம், செருக்கு, ஆணவமலம், கர்வம், அகங்காரம்.

ஆணவேதி - ஆக்கினேயதி.

ஆணன் - ஆண்மையுடையவன்.

ஆணுடுதல் - இஷ்டப்படி நடத்தல்.

ஆணுப்பிறந்தோன் - ஆவாரை, கழுக்காணி, புருடனுக அவதாரஞ்செய்தவன், மனிதன், ஆவிரை.

ஆணுள் - ஆண்டன்மையுடைய பெருநாள், ஆண் நட்சத்திரங்கள்.

ஆணூறு - மேற்கு நோக்கி யோடும் ஆறு.

ஆணி - உரையாணி, எழுத்தாணி, எல்லை, காயாணி, தைக்கிறவாணி, முதன்மை, மேன்மை, வாளலகு, இருப்பாணி, அச்சாணி, மரவாணி, புண்ணாணி, ஆதாரம், ஆசை, கீலம், புண்ணில்முளை, விருப்பம்.

ஆணிக்கல் - பொன்நிறுக்கும் கல்.

ஆணிக்குருகு - அடிக்குருகு.

ஆணிக்குருத்து - பனை, தெங்கு முதலியவற்றினடுக்குருத்து.

ஆணிக்கொள்தல் - இருப்பிடத்தை ஸ்திரம் செய்து கொள்ளுதல்.

ஆணிக்கோவை - உரையாணிக் கொத்து.

ஆணிச்சவ்வு - விழிப்படலம்.

ஆணிச்சிதல் - பருவின் முளை, சீப்பிடித்த புண்ணாணி.

ஆணிச்சீ - மூலச்சிதல்.

ஆணிச்செருக்கம் - இலவணபாவஷாணம்.

ஆணிடி - பேரிடி.

ஆணித்தங்கம் - உயர்ந்த பொன்.

ஆணித்தரம் - உறுதி முதற்றரம்.

ஆணிதைத்தல் - பொருத்த ஆணியடித்தல், ஆணிகால் முதலியவற்றில் பாய்தல்.

ஆணிப்புண் - உள்ளாணியுள்ளிலக்கி.

ஆணிப்பூ } ஒருநோய், கண்வியாதி.
ஆணிப்பூடு }
ஆணிப்பொன் - உயர்ந்த பொன்.
ஆணிமாண்டவியர் - மாண்டவியன்.
ஆணிமுத்து - வயிரமுத்து, உயர்தர மான முத்து.
ஆணியச்சு-ஆணியுண்டாக்கும் அச்சு.
ஆணியிடுதல் - கண் நிலைக்குத்துதல்.
ஆணிரோகம் - ஒருவகை ரோகம். அது பருக்கைக் கற்களின் மேன டத்தாலும் முட்கள் தைத்தொடித லாலும் பாதத்தில் அரத்தைப்போ லிருக்கின்ற மூடிச்சுகளையுண்டாக் குவது.
ஆணிவேர் - உச்சிவேர், மூலவேர்.
ஆணு - அன்பு, இனிமை, நன்மை, நேயம், நேசம்.
ஆணுடம்பு - ஆண்குறி.
ஆணுவம் - திமிர், ஆணவம்.
ஆணெழுத்து - குற்றெழுத்து, உயி ரெழுத்து.
ஆணை - அடையாளம், ஆக்கினை, ஏவல், சத்தியம், சபதம், தடுத்தல், நிண்ணயம், மெய், வெற்றி, சூள், தெரிசொல், தேவசாட்சி, பிரமா ணம், கட்டளை, அதிகாரம், தடுக்கை, விரதம், வஞ்சம், வஞ் சனை, இலஞ்சனை, ஆன்றோர் மரபு, ஆஞ்ஞை, கட்டு, மரபு.
ஆணைச்சக்கரம் - அரசாட்சித் தத்துவம், செங்கோல்.
ஆணையாசக்கரம் } அரசாட்சித் தத்
ஆணையாசக்கிரம் } துவம்.
ஆணையிடல் - தகைதல், தடுத்தல், தட்டல், வட்டித்தல், வாரித்தல்.
ஆணையிடுதல் - கட்டளையிடுதல், சப தஞ் செய்தல், சத்தியம்பண்ணல்.
ஆணையோலை - கட்டளைத் திரு முகம்.
ஆணைவழிநிற்றல் - அரசன் கட்ட ளைப்படி நடத்தல், வேளாண்மை மாந்தரியல்புளொன்று.
ஆணைவிடுதல் - சூளுறவை நீக்குதல்.

ஆண் - வீரியம், வீரன், ஆண்மரம், ஆண்பாற் பொது, ஆண்மகன், ஆண்மை, மேன்மை.
ஆண்கடன் - ஆண்மக்கள் கடமை.
ஆண்குமஞ்சான் - குங்குலியம்.
ஆண்குறட்டை - குறட்டை வகை.
ஆண்குறி - ஆடவக்குறி, லிங்கம், இலிங்கம்.
ஆண்கூத்து - நடன்.
ஆண்கை - ஆறுவகைக் கையு ளொன்று.
ஆண்கோள் - ஆண்கிரகம், அங்கார கன், குரு, சூரியன்.
ஆண்சந்ததி - ஆண்மகவு.
ஆண்சாவி - துவாரமில்லாத திறவு கோல்.
ஆண்சிரட்டை - தேங்காயின் அடிப் பாதியோடு.
ஆண்செருப்படை - செருப் படை வகை.
ஆண்சோடினை - ஆண்கூத்துக் குச் செய்யும் சிங்காரம்.
ஆண்டகை - ஆண்டன்மை, அரசன், இராசா, சிறந்தோன், வீரன், பெரு மையிற் சிறந்தோன்.
ஆண்டகைமை - ஆண்டன்மை,வீரம்.
ஆண்டகையோர் - ஆண்மக்கள்.
ஆண்டண்டு - காதிற்புறவருகு.
ஆண்டமை - ஆண்டதன்மை.
ஆண்டருளுமுறை - ஆண்டருளு கின்ற வொழுங்கு. அது மார்க்கட சம்பந்தம் மார்க்காரசம்பந்த மென இருவகைப்படும்.
ஆண்டலை - ஆண்மகன் தலைபோன்ற தலையையுடைய ஒரு புள், சேவற் கோழி, கோழி, படைத்தலைவன், பூவில்லாமரம்.
ஆண்டலைக்கொடி - குமரக் கடவுள் கொடி, பேய் முதலியன பலியை நுகராமற் கட்டப்படுங் கொடி. அது தலை ஆன்மகன் தலையாகவும் உடல் புள்ளின் வடிவமாகவும் எழு தினது.

ஆண்டலைக்கொடியுயர்த் தோன்
ஆண்டலிக்கொடியோன் } குமரன்.

ஆண்டவரசு - திருநாவக்கரசு நாயனார்.

ஆண்டவன் - அரசன், ஆளுகைசெய்கிறவன், எசமான், கடவுள், உடையவன், ஆண்டி, ஆண்டை.

ஆண்டளக்குமையன் - ஆதனூரில் கோயில் கொண்ட விட்டுணு.

ஆண்டளப்பான் - வியாழன்.

ஆண்டளப்போன் - வியாழன், வியாழம்.

ஆண்டார் - உடையோர், தேவர்.

ஆண்டாள் - சூடிக்கொடுத்த நாய்ச்சியார்.

ஆண்டான் - ஆண்டவன், எசமான், தலைவன், ஆள்வோன், எசமான், கடவுள்.

ஆண்டி - தவசி, பண்டாரம், பரதேசி, வரிக்கூத்துவகை, யாசகி.

ஆண்டிச்சி - பண்டாரத்தி.

ஆண்டித்தாரா - தாராவகை.

ஆண்டிப்பாதி - அயனம்.

ஆண்டு - அவ்விடம், வருடம், பிராயம், கொல்லமாண்டு, அயனம், சமை, தெய்வதம், ஆயனம், வருஷம், ஆண்டை, வற்சரம்.

ஆண்டுநிறைவு - குழந்தைகளின் முதல் அப்தபூர்த்தி நாள்.

ஆண்டுமாறி - ஒருவசைச் சொல், ஆண்டுமூஞ்சி.

ஆண்டை - அவ்விடம், எசமான், தேட்கொடுக்கி.

ஆண்டையர் - மனிதர்.

ஆண்டொழில் - பராக்கிரம வேலை, வீரச்செய்கை.

ஆண்டொழின்மைந்தன் - அருச்சுனன்

ஆண்தண்டு - வலக்காதின் தண்டு.

ஆண்பட்சிதோஷம் - ஒருவகை தோஷம். அது தாகம், பேதி, சரீரவுலர்ச்சி, கண்களிற்குழி ஆகிய இக்குணங்களையுண்டாக்கும்.

ஆண்பனை - காயாப்பனை.

ஆண்பாடு - ஆண்குணம், மனிதன் செயல்.

ஆண்பாத்தி - உப்புப் பாத்திவகை.

ஆண்பாலெழுத்து - ஆண் பாலிற் குரியவெழுத்துக்கள். அது அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்பன. இதன்றி ஒருசாரார் உயிர்க் குற்றெழுத்தும் உயிர்மெய்க் குற்றெழுத்தும் என்பர்.

ஆண்பால் - ஆண்பகுதி, ஆண்டன்மை, புல்லிங்கம், ஆண்சாதி.

ஆண்பான்மயிர் - குஞ்சி, பித்தை, ஓரி, குழல், சார், பங்கி, கேசம், சுரியல், கதுப்பு, தலை, நவிர், பிச்சம், சிகை.

ஆண்பான்மயிற்முடி - பின்னகம், பந்தம், முடி, முச்சி, கொண்டை, குழல், சிகழிகை, சுடிகை, மௌலி.

ஆண்பாற்பிள்ளைக்கவி - காப்பு முதற் சிறுதேர்ருய்ச் சொல்லப்படும் பத்துறுப்புகளும் பப்பத்து விருத்தத்தான் முடியப்பாடுவது.

ஆண்பிள்ளை - ஆண்குழந்தை, கெட்டிக்காரன், தலைவன், மனிதன், புருஷன், ஆண்மகன், சமர்த்தன், வீரன், கணவன்.

ஆண்பிள்ளைச்சிங்கம் - வீரன்.

ஆண்பெண் - தம்பதி.

ஆண்மகன் - காளை, குமரன், புமான், புருடன், மாந்தர், மானவர், மைந்தர், நம்பி, ஆடூஉ, ஆணிற்சிறந்தோன், ஆடு, ஆண்குழந்தை, கணவன், மகன், மனிதன், புருஷன்.

ஆண்மரம் - அகவயிரமுள்ள மரம், அழிஞ்சில், செம்மரம், சேமரம், எகின்.

ஆண்மலடு - புருடர்களுக்கேற்படும் ஒருவகை மலட்டுரோகம்; அது விந்து நித்திப்பற்று சலத்தில் விட்டாற் கரைந்து மிதப்பதும், உயிர்ப்

பில்லாததும், மூத்திரத்தில் நுரை கட்டுவதுமான தன்மையையுண்டாக்கும்.

ஆண்மாரி - மூர்க்கமுடையாள், அடங்காக் குணமுள்ளவள்.

ஆண்முதலே - கரா.

ஆண்மை - ஆண்டன்மை, திடன், மனமுயற்சி, மெய், வலி, ஆளுந்தன்மை, வெற்றி, அகங்காரம், உடைமை, வாய்மை, அதிகாரம், தைரியம், ஆண்மை, ஆண்மைத்தனம், ஆண்தகைமை.

ஆண்மைச்சினைப்பெயர் - ஆண்பாலேயே விளக்கி நிற்குஞ் சினைப்பெயர்.

ஆண்மைச்சினைமுதற்பெயர் - ஆண்பாலேயே விளக்குஞ் சினைமுதற்பெயர்.

ஆண்மைத்தனம் - ஆண்மைத்தன்மை.

ஆண்மைமுதற்பெயர் - ஆண்பாலேயே விளக்கிநிற்குமுதற்பெயர்.

ஆண்மைமுறைப்பெயர் - ஆண்பாலேயே விளக்கிவருமுறைப் பெயர்.

ஆண்வண்டு - சுரும்பு, மதுகரம், தும்பி.

ஆண்வழி - ஆண்சந்ததி, தந்தைவழி.

ஆதக்க - ஆகக்கடவன.

ஆதங்கம் - ஆபத்து, உபத்திரவம், கலம், காய்ச்சல், தீங்கு, நோய், பறையொலி, பயம், அச்சம், துக்கம், ஆடங்கம்.

ஆதஞ்சனம் - அழித்தல், உபத்திரவம், உறையிடல், தீவிரம், பஸ்மமாக்கல்.

ஆதண் - நோய், வருத்தம்.

ஆதண்டை - காற்றேட்டி.

ஆததாயி - கொல்லவொருப்பட்டு நிற்கிறவன்.

ஆததாயிகள் - கொடியோர்.

ஆதபசுரம் - ஒருவகைச் சுரநோய். அது சித்திரை, வைகாசி, ஆனி, ஆடிஆகிய மாதங்களிலுதயம்முதல் இரண்டு சாமம் வரையிலும் நிற்காமல் வழி நடப்பதினுற் பிறந்து, எரிவு, வேதனை, பன்னெய், தாகம், சோர்வு, தலைவலி, தலைச்சுழல்வு, வாயுலர்வு, பேதி, அடிக்கடி நித்திரை, பிரமை, மாரடைப்பு, கால் கைநடுக்கம், கண்களில் நீரொழுக்கு ஆகிய இக்குணங்களையுண்டாக்கும்.

ஆதபத்திரம் - குடை, வெண்குடை.

ஆதபத்தினர் - சூரியர்.

ஆதபநீயம் - ஒருவகை நெல்.

ஆதபம் - ஒளி, குடை, வெயில்.

ஆதபவாரணம் - குடை, ஆதபத்திரம்.

ஆதபன் - சூரியன், பார்ப்பான்.

ஆதப்பியேசுவரம் - சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டிலொன்று.

ஆதமிலி - ஆதரவில்லாதவன்.

ஆதம் - ஆதரவு, கூந்தற்பனை, விருப்பு, அன்பு, ஆதரம்.

ஆதம்பாதமில்லாதவன் - ஆதரவில்லாதவன்.

ஆதம்பேதி - செப்பு, நெருஞ்சிப்பூண்டு.

ஆதரம் - அன்பு, ஆசை, ஊர், கேள்வு, சங்கிப்பு, சங்கை, சிலம்பு, துவக்கம், உபசாரம், உபசரணை.

ஆதரவு - அன்பு, ஆதாரம், உதவி, தாவரம், விருப்பம், தேற்றுகை, ஆதரணை, தேற்றாவு, பத்திரம்.

ஆதரவுசெய்தல் - அன்பு பண்ணுதல், தாங்குதல்.

ஆதரவுசொல்ல - ஆதரவுகூற, ஆதரவு இயம்ப.

ஆதரிசம் - உரை, கையெழுத்துப் பிரதி, மூலம், பளிங்கு, வியாத்தி, கண்ணுடி, ஆதரிசனம்.

ஆதரிசனம் - கண்ணுடி, வெளிப்படையாக்கல்.

ஆதரித்தல் - உபசரித்தல், பாதுகாத்தல், விரும்புதல், அன்புவைத்தல், உதவி செய்தல், சங்கித்தல், தாபரித்தல், ஆசைகூர்தல்.

ஆதர் - குருடர்.

ஆதலால் - ஆகையால்.

ஆதலை - உதவி, தாபரிப்பு.

ஆதல் - உண்டாதல், சம்பவித்தல், முடிதல், இணக்கமாதல், விருத்தியாதல், அமைதல், ஒப்பாதல், நந்துதல், தரிசனம், ஆகுதல், கல்விநூல், கூத்து, தெரிதல், நுணுக்கம்.

ஆதவம் - ஆதபம், ஒளி, குடை, கொன்றைப்பூ, வெயில்.

ஆதவன் - சூரியன், பார்ப்பான், ஆதபன்.

ஆதளை - ஆமணக்கு, ஆயாசம், எலியாமணக்கு, மாதளை, காட்டாமணக்கு வகை.

ஆதளைமாதளை - வருத்தம், மனக்கலக்கம்.

ஆதனமூர்த்தி - சிவலிங்கம்.

ஆதனம்-ஆசனம், சேலை, நிலைமை, நீளுதல், பார்வை, விலாசம், ஆஸ்தி.

ஆதனூர் - நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று.

ஆதன் - அருகன், அறிவிலான், உயிர், குரு, குருடன், அறிவிலி, ஆத்மா.

ஆதன்மையால் - ஆகையால்.

ஆதாம் - முதல்மனிதன்.

ஆதாயம்-இலாபம், நன்மை, பெறுதல், ஊதியம்.

ஆதாரகாரகம் - தானப்பொருளைக் காட்டு முருபுடைப் பெயர்.

ஆதாரதண்டம் - முதுகெலும்பு.

ஆதாரதலம் - ஆதாரமாறிற்கும் உரிய தானங்கள். அவை திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, சிதம்பரம், திருக்காளத்தி, காசி என்பன.

ஆதாரதேவதை - ஆதார தானத்திற் குரிய தெய்வங்கள். அவர் விநாயகர், பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்பனவாம்.

ஆதாரதோற்றம் - ஆதார தானத்திற் சேரும் தோற்றங்கள். அவை பங்கம், வினக்கு, மின்னல், மின்மினி, சூரியன், சந்திரன் என்பன.

ஆதாரநிலை - பற்றுக்கோடு, கந்து, ஆலம்பம், ஆலம்பனம், தஞ்சம், தூவு.

ஆதாரம் - அடி, அத்திபாரம், ஈடு, உடல், காக்குதல், தாபரம், தானம், நிலை, பாத்தி, மழை, வாய்க்கால், பற்றுக்கோடு, ஆதரவு, இடம், பிரமாணம், ஆதரவுச்சாதனம், அஸ்திவாரம்.

ஆதாரயேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டிலொன்று.

ஆதாளி - இரைச்சல், கலக்கடி, சத்தம், படாடோபம், புரட்டல், வீம்புபேசல், பேரொலி, இடம்பப் பேச்சு, மனக்கலக்கம், மனக்கலக்கமுடையவன், பெருமை பாராட்டல்.

ஆதாளிக்கல் - இரைதல், உடலை அங்குமிங்கும் புரட்டியருளல், கலக்கடி பண்ணல், வீம்புபேசல், சத்தமிடல், படாடோபம் பண்ணல்.

ஆதாளிக்காரன் - படாடோபக்காரன்.

ஆதாளிக்குதல் - ஆதாளிக்கல்.

ஆதாளித்தல் - ஆயாசப்படுதல்.

ஆதாளிமன்னன் - ஆதாளி பண்ணுவதில் தலைமைபெற்றவன், கரடி.

ஆதாளை - ஆதளை.

ஆதானம் - ஈடு, ஏற்றுக்கொள்ளுதல், சங்கற்பித்தல், ஸ்தாபனம், பெறுதல், வயிக்கை, பற்றுகை, செய்தல்.

ஆதானிகம் - கருப்பாதானம்.

ஆதானும் - எதுவாயினும்.

ஆதி - தொடக்கம், தொடக்கமுள்ளது, தலை, அயன், தாழ், காரணம், பழைமை, ஆதிதாளம், அரிபிரசாயம், மூலம், முதன்மை, எசமான், அரன், பூருவம், நேரோடுகை, சிவன், முன்னர், மோனை, ஆரம்பம், பிசாசயம், மண்டலமாயோடுகை, மஞ்ஞெவியாதி, மனவருத்தம், முதற்காலம், அடி, ஆரம்பம், அதிசயம், அருகன், இடம், இறை

வன், ஈடு, எப்பொருட்குமிறை வன், எழுவாய், ஒரு தானம், கட வுள், காய்ச்சற் பாஷாணம், குதி ரைக் கதியுள் ஒன்று, சூத்திரம், சூரியன், தொன்மை, நேரோடல், பரமசிவம், பழமை, பிரதானம், பிரமன், புத்தன், மண்டலமாயோ டல், மனவிருப்பம், மிருதபாஷா ணம், முதல், வனப்பு, அது பழங்கதை கூறுதல், விட்டுணு, வேர்.

ஆதிகடுஞ்சனி - மு த ன் மை யா ன கொடிய சனிரோகம், மகம்.

ஆதிகம் - சிறுகுறிஞ்சா.

ஆதிகரன் - பிரமன்.

ஆதிகவி - பழமையான புலவன், வால் மீக மஹாருஷி, வால்மீகி முனி, வான்மீகி முனிவர்.

ஆதிகாரணகாரியம் - மு தற் காரியத் தாற் காரியப்படுவது.

ஆதிகாரணம் - முதற்காரணம்.

ஆதிகாரணவகத்திணை - முதற்காரண வகத்திணை.

ஆதிகாலம் - பண்டைக்காலம்.

ஆதிகாவ்யம் - ராமாயணம்.

ஆதிகேசவன் - விட்டுணு.

ஆதிக்கடுஞ்சாரி - நவச்சாரம்.

ஆதிக்கமேகம்-ஒருவகை மேகரோகம். அது மூத்திரத்தைச் சும்மா வைத் திருந்தாலும் காய்ச்சினாலும் இள நீர்ச் சலம்போனிறமும் வாசனையு முண்டாகச் செய்வது. அதனால் தாகமும் தேகவாட்டமும் உண் டாகும்.

ஆதிக்கம் - ஆதிக்கியம், உ ய ர் ச் சி, உரிமை, முதன்மை, த லை மை, மேன்மை, ஆதிக்கியம்.

ஆதிக்கற்பேதம்
ஆதிக்கல்நாதம்
ஆதிக்கல்பேதம்
ஆதிக்கன்ஞதம்
} அன்னபேதி.

ஆதிக்கன் - பெரியவன், மேன்மகன்.

ஆதிக்கியம் - ஆதிக்கம்.

ஆதிக்குடி - சவர்க்காரம், முதன்மை பெற்ற குடி, சவுக்காரம்.

ஆதிக்குரு - மூப்பூ.அது பஞ்சலோகங் களைப் பேதிக்கச் செய்வது, பூவ ழலை, பூநீறு,முதன்மைபெற்ற குரு.

ஆதிசத்தி.- பஞ்ச சத்திகளிலொன்று, ஆதியாகிய சத்தி.

ஆதிசாரம் - சிற்பநூல்கள் மூப்பத்தி ரண்டிலொன்று.

ஆதிசேஷன்
ஆதிசேடன்
} பூமியைத் தாங்கிக்கொ ண் டி ரு க் கி றது என்று சொல்லப்படும் அனந்தன் என்னும் பாம்பு.

ஆதிசைவம் - சைவம் ப தி னை நி னொன்று.

ஆதிசைவர் - சிவாலயங்களிற் பூசை க்கு அதிகாரிகளாகிய சிவப்பிராம ணர், குருக்கள்மார்.

ஆதிசைவன் - பதினாறு சைவர்களுள் ஒருவன்.

ஆதிச்சரக்கு - சூதம்.

ஆதிச்சனீ - மகநாள், ஆதிசனி.

ஆதிஷ்டம்
ஆதிட்டம்
} உண்டசேடம், சேடம்.

ஆதிஷ்டி
ஆதிட்டி
} பிரமசாரி.

ஆதிதாசர் - சண்டேசுவரன்.

ஆதிதாரணம் - ஈடு.

ஆதிதாளம் - தாளவகை.

ஆதிதிராவிடன் - பஞ்சம சாதியான்.

ஆதிதேயம் -அன்னபானாதிகள் கொடு த்து அதிதியைப் பூசித்தல்.

ஆதிதேயர் - அதிதிவமிசத்தார். அவர் கள் தேவர்கள்.

ஆதிதேயன் - தேவன், விருந்தினரை உபசரிப்போன்.

ஆதிதேவன்-சிவபெருமான், சூரியன், முதற்கடவுள்,நாராயணன்,கடவுள்.

ஆதிதைவிகம் - தெய்வத்தால் வருந் துன்பம்.

ஆதித்தசூலை - எமன், க ன் ன ன், காளிந்தி, சனி, சுக்கீவன், தத்தி யன், நாதன், மனு.

ஆதித்ததேவர் - திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர்.

ஆதித்தபுத்தி - அருக்கபுத்தி.

ஆதித்தபுத்திரர் - சூரியனது மக்கள், அவர் கன்னன், காளிந்தி, சனி, சுக்கிரீவன், தத்தியமகன், நாதன், மனு என்பவராம்.

ஆதித்தமணி - சூரியன், முத்து.

ஆதித்தமண்டலம் - சூரியமண்டலம், மும்மண்டலத்தொன்று. அஃது இதயகமல முதற்கண்டத்தானமலவும், சூரியவட்டம், இருதயத்திலுள்ள ஒரு யோகஸ்தானம், சூரிய லோகம்.

ஆதித்தம் - காவிக்கல், குருசு.

ஆதித்தர் - வானோர், தேவர்.

ஆதித்தல் - ஆதியாகத் தொடுத்தல்.

ஆதித்தவாரம் - ஞாயிற்றுக்கிழமை.

ஆதித்தன் - ஆதிக்குரு, சூரியன், சேர நாட்டிலிருந்த ஓரரசன், இவன் சிதம்பரத்துக் கனகசபையின் மூகட்டைக் கொங்கிற் செம்பொன்னினுல் செய்தவன், ஆதித்தியன்.

ஆதித்தன்கூர்மை - இலவணபாஷாணம்.

ஆதித்தன்மத்திமச்சா - ஆதித்தனுக்குக் கற்கடகமுதல் ஆறிராசியிற் கண்டசா.

ஆதித்தன்வெள்ளை - ஆதித்தன் கூர்மை.

ஆதித்தன்றேவி - உஷை, சாயை.

ஆதித்தாய் - எவாள்.

ஆதித்தியசா-ஆதித்தனுடைய சாவாக்கியம்.

ஆதித்தியம் - அதிதிபூசைக்குரிய பொருள், உபசரணை, சுவனித்தல்.

ஆதித்தியர் - ஆதிதயர், தேவர், அதிதியிடத்திற் காசிபப் பிரசாபதிக்குப் பிறந்த புத்திரர் பன்னிருவர். அவர் அமிசுமந்தன், அரியமன், இந்திரன், சவிதா, தாதா, துவஷ்டா, பகவன், பூஷன், மித்திரன், வருணன், விசுவந்தன், விஷ்ணு என்பவராம். இவருள் இந்திரன், விஷ்ணு என இருவரும் வைவசுவத மனுவந்தரத்தில் ஆதித்தியராகவிருந்து சட்சுர் மனுவந்தரத்தில் துஷிதராயினர். கற்பாரம்பத்தில் பிரமாவினுற் சிருஷ்டிக்கப்பட்ட ஜயரென்றும் இவரைச் சொல்லுவார்கள். இப் பன்னிருவரும் சிருஷ்டியில் இச்சையில்லாதவராய் பிரமாவினது ஆஞ்ஞைக் குட்படாராயினர். அதனல் மனுவந்தரங்களோறும் பிறக்குமாறு சபிக்கப்பட்டார்கள்.

ஆதித்தியவிருதயம் - ஒருதோத்திரம். இதை ஓதிவந்தால் சூரியானுக்கிரக முண்டாம். இராவணனைக் கொல்லச்சென்ற இராமருக்கு அகஸ்தியரால் உபதேசிக்கப்பட்டது.

ஆதித்தியன் - ஆதித்யன், ஆதித்தன், சூரியன், தேவன்.

ஆதித்தியை - சரச்சுவதி.

ஆதிநாடி - ஆதாரமாயுள்ள நாடி.

ஆதிநாதப்பெருமாள்- திருக்குருகூரிற் கோயில்கொண்ட விட்டுணு.

ஆதிநாதர் - நவநாதசித்தரிலொருவர்.

ஆதிநாதவல்லி - திருக்குருகூரிற் கோயிற்கொண்ட இலக்குமி.

ஆதிநாதன் - ஒரு சைனகுரு, சிவன், கடவுள்.

ஆதிநாராயணன் - வயிரக்கல், வச்சிரக்கல், விட்டுணு.

ஆதிநித்தியர் - சிருஷ்டிக்கப்பட்டும் ஒருநாளும் அழியாதவர்.

ஆதிநூல் - முதனூல், வேதம்.

ஆதிபகவன்
ஆதிபகவான் } கடவுள், சிவன்.

ஆதிபதி - அதிபதி, எப்பொருட்கு மிறைவன், கடவுள்.

ஆதிபத்தியம் - அதிகாரம், சுதந்திரம், தத்துவம், தலைமை, மகத்துவம்.

ஆதிபரம் - சாதிக்காய், பரப்பிரமம்.

ஆதிபரன் - இராசா, எப்பொருட்கும் இறையவன், கடவுள்.

ஆதிபராபரன் - கடவுள்.
ஆதிபலம் - சாதிக்காய்.
ஆதிபன் - அரசன், எசமானன், இராசா, தலைவன், இறைவன்.
ஆதிபாஷை - வடமொழி.
ஆதிபிட்சு - சிவன்.
ஆதிபுங்கவன் - அருகவி, கடவுள்.
ஆதிபுரி - திருவொற்றியூர்.
ஆதிபூதம் - அதிட்டானபூதம்.
ஆதிபோகம் - ஈடுவைத்ததைப் பாலித்தல், முதற்போகம்.
ஆதிபௌதிகம் - பஞ்சபூதங்களாலும் உண்டாகுந் துன்பம்.
ஆதிப்புலவன் - அகத்தியமுனிவர்.
ஆதிமகாகுரு - தூரிசு.
ஆதிமகாநாதம் - உலோகமணல்.
ஆதிமடக்கு - ஓரலங்காரம். அது வரிக்கு முதலில் ஒரே சொல்வரப் பாடுவது.
ஆதிமத்தியாந்தம் - முதலிடைகடை.
ஆதிமத்தியாந்தரகிதன் } கடவுள்,
ஆதிமத்தியாந்தன் } சிவன்.
ஆதிமம் - முதலாவது.
ஆதிமருந்து - சுக்கு, மிளகு, திப்பிலி, முதன்மையான ஒருமருந்து, திரிகடுகம்.
ஆதிமலடு - ஒருவகை மலட்டுநோய், அது வயிற்றின் மூன்றுமடிப்பு விழுந்து இடுப்புப் பருத்துத் தேகம் ஸ்தூலிப்பதாற் கருத்தரியாது போவதாம்.
ஆதிமலை - இமயமலை.
ஆதிமீன் - அசுவதிநட்சத்திரம்.
ஆதிமுதல் - எல்லாவற்றிற்கு முன், கடவுள், முதன் முதல், ஆரம்ப முதல்.
ஆதிமூர்த்தி - கடவுள், ஆதிமூலம், முதற் கடவுள்.
ஆதிமூலம் - முதற்காரணம், விஷ்ணு, கடவுள், மூலகாரணமானது.
ஆதியங்கடவுள் - அருகன், கடவுள், முதற் கடவுள்.
ஆதியந்தணன் - பிரமதேவன்.
ஆதியந்தபாதிச்சா - சீக்கிர உச்சம், மகரச்சர.
ஆதியந்தமில்லாதவன் - கடவுள், சிவன்.
ஆதியந்தம் - அடிமுடி, முதற்றொடங்கி முடியுமட்டும்.
ஆதியரிவஞ்சம் - போகபூமியாறிலே ஒன்று.
ஆதியாசை - நரப்படைவாலுரைக்கப்பட்டவிசை. அது பதிஞ்ஞாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றேரு வகைப்படும்.
ஆதியாமம் - மூவகைப்புல்.
ஆதியாழ் - ஆயிர நரம்புள்ள யாழ்.
ஆதியுகம் - கிருதயுகம்.
ஆதியுலா - திருக்கைலாய ஞானவுலா.
ஆதியூழி - கிருதயுகம்.
ஆதியெழுஞ்சனி - மகம்.
ஆதியெழுத்து - முதலெழுத்து. அது உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும்.
ஆதியோடீற்றம் - முதலிலிருந்து முடிவு வரை.
ஆதியோடிடைமடக்கு - ஓரலங்காரம், அது நான்கடிகளு ளடியின் முதலினும் இடையினு மடக்கு வருவது.
ஆதியோடுகடைமடக்கு - ஓரலங்காரம். அது அடிகளுள் முதலுங் கடையு மடங்கிவருவது.
ஆதிரம் - நெய், ஆச்சியம்.
ஆதிரவிச்சிலை - காவிக்கல்.
ஆதிரன் - பெரியோன்.
ஆதிராச்சியம் - தலைமையரசு, ஏகாதிபத்தியம்.
ஆதிரை - சாதுவன் மனைவி, திருவாதிரை.
ஆதிரையன் - திருவாதிரைக் குரிய சிவன்.
ஆதிரையான் - ஆதிரை முதல்வன்.
ஆதிரௌத்திரம் - சௌவீரம்.
ஆதிவராகம் - ஆதிவராகன்.
ஆதிவராகன் - விட்டுணு, திருமால்.
ஆதிவருணம் - பார்ப்பாரச்சாதி.

ஆதிவருணர் - முதல் வருணத்தார், அவர் பார்ப்பார், பிராமணர்.
ஆதிவருணன் - பார்ப்பான்.
ஆதிவாகியம் - சூக்குமசரீரம்.
ஆதிவாயிலார் - பரத சேனாதிபதிய நூலாசிரியர்.
ஆதிவாரம் - ஞாயிற்றுக்கிழமை.
ஆதிவிந்து - நிலப்பாஷாணம், மழை, கார்முகில் பாஷாணம்.
ஆதிவிராகன் - அருகன், சிவன், சோர பாஷாணம்.
ஆதிவிராட்டியம் - வெள்ளைப் பாஷாணம்.
ஆதிவிருத்திசந்தி - மொழிக்கு முதனின்ற இ - ஈ - எ - ஐ யாகவும், உ - ஊ - ஒ ஔ வாகவும், அகரம் ஆகாரமாகவும் இரு ஆராகவுந் திரிவது.
ஆதிவேதம் - இருப்பு, பௌடிகம்.
ஆதீண்டுகுற்றி - தருமமாய்ப் பசுமுதலியன சொரிந்துகொள்ள நாட்டியிருக்கும் கல்.
ஆதீபனம் - கோலஞ்செய்தல்.
ஆதீனகர்த்தா - சைவமடாதிபதி.
ஆதீனம்-ஆஸ்தி, ஆளுகை, உடைமை, உரிமை, வமிசம், வசம், சைவமடம், சுதந்திரம், அதீனம், சார்பு.
ஆதீனவம் - கீழ்ப்படியாமை, மீறுதல்.
ஆது - ஆறனுருபு, தெப்பம், யானையைப் பாகாதட்டுமோசை.
ஆதுரம் - அவா, நோய், பரபரப்பு, பேராசை, வியாதி.
ஆதுரன் - ஆசையுற்றோன், நோயுற்றோன்.
ஆதுலசாலை - ஆதுலர் சாலை.
ஆதுலம் - தரித்திரம்.
ஆதுலர் - தரித்திரர்.
ஆதுலர்க்குச்சாலையளித்தல் - அறமுப்பத்திரண்டிலொன்று.
ஆதுலர்சாலை - அசத்தர்க்கும் வறியவர்க்கும் உண்டியும் உறைவிடமும் அமைக்குஞ்சாலை.
ஆதுலன் - தரித்திரன், அசத்தன், வறியவன், நோயாளி, வறியன், அசக்தன்.
ஆதுவம் - கள்.
ஆதுனிகன் - இக்காலத்தவன்.
ஆதூர்த்தரசன் - கசனது மூன்றும் புத்திரன். இவன் தருமாரணியத்தை யுண்டாக்கினவன். இவனது மகன் இராஜவிருடியாகிய கயன்.
ஆதெரிசம் - கண்ணுடி.
ஆதேசம் - ஆதாயம், ஒழுங்கு, உபதேசம், ஆதேயம், கிரகசாரம், திரிபு, புத்தி, பதில், கட்டளை, லாபம்.
ஆதேயம் - ஆதாயம், தாங்கப்படுவது, சுமக்கப்பட்டது.
ஆதொண்டை - காற்றோட்டி, சாத்தோட்டி, ஓர் கொடி, தொண்டைச் செடி.
ஆதோரணர் - துரத்துகிறவர்கள், யானைப்பாகர்.
ஆதோரணன் - யானைப்பாகன்.
ஆத்தம் - இஷ்டம், குருவுக்குச் செய்யும் அனுகூலவிருத்தி, அந்தரங்கம்.
ஆத்தல் - யாத்தல், அமைத்தல், பிணித்தல்.
ஆத்தன் - அருகன், கடவுள், கூட்டாளி, சங்காத்தி, சத்திய ஆடையவன், நண்பன், தக்கவன், சிவன், சினேகிதன், தோழன், பெரியவன், நம்பத்தக்கோன், இஷ்டன், முதல்வன், ஆப்தன்.
ஆத்தா - அணிநுணுமரம், ஆத்தாள், இராமசீத்தா, சீத்தாப்பழம், சீத்தா.
ஆத்தாடி - ஆச்சரியக் குறிப்பு, இளைப்பாறற் குறிப்பு.
ஆத்தாடியுள்ளான் - ஒரு குருவி.
ஆத்தாள் - தாய், பார்ப்பதி, பாட்டி, தலைவி.
ஆஸ்தானக்கோழை - சபைக்கோழை.
ஆஸ்தானசந்தோஷம் - கோணங்கித்தன்மை, விகடக்கூத்து.

ஆஸ்தானசந்தோஷி - விகடக்கூத்தன், விகடக்கூத்தி.

ஆஸ்தானமண்டபம் - தருமசபைகூடுமிடம், கொலுமண்டபம்.

ஆஸ்தானமேறல் - விவகாரந் தீரும் பொருட்டுத் தருமசபையேறுதல்.

ஆஸ்தாநம், ஆஸ்தானம், ஆத்தானம் } ஆபத்து, கேடு, கோபுரவாயில், நீதித்தலம், தருமசபை, மண்டபம்.

ஆத்தான் - பெரியோன்.

ஆஸ்தி - ஆதனம், சம்பத்து, பாக்கியம்.

ஆத்தி - ஒரு மரம், பெண்பால்விகுதி, அச்சுவையப்புக் குறிப்பு, ஆரம், ஆர், சல்லதி, தாதகி, ஆத்திமரம், ஆத்தாடி.

ஆஸ்திகம் - ஆத்திகம்.

ஆத்திகன் - ஆஸ்திகன்.

ஆஸ்திகன் - ஏகேச்சுவரவாதி, ஆத்திகன்.

ஆத்திக்கேடு - ஆற்றாண்மை, சத்துக்கேடு.

ஆத்திக்கனி - வெருகு.

ஆஸ்திக்காரன் - சம்பத்துடையவன்.

ஆஸ்திக்காரி - சம்பத்துடையவள்.

ஆத்திக்கியம் - ஆஸ்திக்கியம், ஆஸ்திகத்தன்மை.

ஆத்திசூடி - ஔவைசெய்த ஒரு நூல், சிவன்.

ஆத்திசூலை - குதிரைவியாதி வகை.

ஆத்திச்சூடி - சிவன்.

ஆத்திவ்டி, ஆத்திட்டி } நீர்மூள்ளி.

ஆத்தியந்தம் - முதலும் முடிவும்.

ஆத்தியன் - சிவன்.

ஆத்தியான்னிகம் - உடம்பாடு கூடிய உயிர்வழியால் வருந்துன்பம்.

ஆத்தியு - ஆவத்து.

ஆத்தியேபாந்தம் - ஆதியந்தம்.

ஆத்தியை - தூக்கை.

ஆத்திரக்காரன் - அவசரமுடையவன்.

ஆத்திரக்காரி - அவசரமுடையவள்.

ஆத்திரதம் - இஞ்சி.

ஆத்திரமூலம் - ஒருவித மூலரோகம். இது இரத்தத்தினாலும் பித்தத்தினாலும் பிறந் தெப்பொழுதும் இரத்தக்கசிவை யுண்டாக்கும்.

ஆத்திரம், ஆத்திரவம், ஆத்திரியம் } அவசரம், ஆவத்து, கோபவிரைவு, பரபரப்பு, கோபம், ஆபத்து.

ஆத்திரேயர் - வடமொழியில் வைத்திய அகராதி நிகண்டுசெய்த பேர் போன ஒரு பண்டிதர்.

ஆத்திரேயன் - சந்திரன், தத்தாத்திரேய மூனி.

ஆத்திரையன் - ஆத்திரேயன், ஒரு தமிழ்ப் பேராசிரியன், அத்திரி குலத்திற் பிறந்தவன்.

ஆத்திரை - யாத்திரை.

ஆத்தின்னி - பாணன்.

ஆத்துக்காரர் - வீட்டுக்குரியவர், கணவன்.

ஆத்துமகத்தியை - தற்கொலை.

ஆத்துமகம் - பிறத்தல்.

ஆத்துமகன்னம், ஆத்துமகாந்தன் } தற்கொலை.

ஆத்துமகுப்தா - பூனைக்காலி.

ஆத்துமகோஷம், ஆத்துமகோடம் } கரகம்.

ஆத்துமசந்தேகம் - உள்ளேயம்.

ஆத்துமசன் - மகன், புத்திரன்.

ஆத்துமசிநேகம் - நெருங்கியஉறவு.

ஆத்துமசிநேகன் - நெருங்கிய உறவையுடையோன்.

ஆத்துமசிநேகி - நெருங்கிய உறவையுடையவள்.

ஆத்துமசுத்தி - பஞ்சசுத்தியிலொன்று.

ஆத்துமசை - மகன்.

ஆத்துமஞ்ஞானம் - ஆத்துமாவை அறியும் அறிவு.

ஆத்துமஞ்ஞன் - தன்னையுந் தலைவனையு மறிபவன்.

ஆத்துமதரிசகம் - கண்ணுடி.
ஆத்துமதரிசம் - பளிங்கு.
ஆத்துமதரிசனம் - ஆத்தும நிலையறி தல்.
ஆத்துமதெரிசனை - ஆத்துமாவினிலை யைத் தெரிசித்தல்.
ஆத்துமபுத்தர் - பூனைக்காலி.
ஆத்துமபுத்தி - சீவகாட்சி, சுயவறிவு, தன்னறிவு.
ஆத்துமபூ - சிவன், பிரமன், மன் மதன், விட்டுணு.
ஆத்துமபோதம் - ஆத்துமஞானம்.
ஆத்துமமோனி - காமன், சிவன், பிர மன், விட்டுணு.
ஆத்துமம் - அதர்வண வேதோப நிடத முப்பத்தொன்றி லொன்று. அரத்தை, பிராணன், மனம், உயிர், ஆத்துமா, ஆத்மா.
ஆத்துமலக்கணம் } ஆத்துமாவின்
ஆத்துமலட்சணம் } சுபாவக்குணம். அஃது ஆனந்தம், சத்து, சித்து.
ஆத்துமவசம் - தன்னடக்கம்.
ஆத்துமவாதி - ஆத்துமாவே தெய்வ மென்று வாதிப்போன்.
ஆத்துமவிசாரணை - ஆத்துமாவை யறியும் பொருட்டு விசாரிக்கும் விசாரிப்பு.
ஆத்துமவிசாரம் - ஆத்துமாவை யறி யும் விசாரம்.
ஆத்துமா - அறிவு, ஆன்மா, உடல், உறுதி, கரடிக்குட்டி, காற்று, சீவன், சுபாவம், சூரியன், தீ, பிர மன், பிராணன், புத்தி, மகன், ஆத்மா.
ஆத்துமார்த்தம் - ஆத்தும லாபத்திற் சூரியது, தற்பிரயோசனம்.
ஆத்துமானவாதம் - ஒருவகை வாத நோய். அது சீதளம், மலபந்த வஸ்து, சிலேஷ்மவஸ்து, புளிப்பு வஸ்து, மாப்பண்டம், பனிக்காற் றிவைகளினுற் பிறந்து அடிவயிற் றிற்றங்கி வேதனை செய்யும். அக் காலங்களில் குடலின் துவாரத்தில் வலித்தல், மலஜலங் கட்டுப்படல், வயிற்றிலிரைச்சல், வயிறுப்பல், வாதசுரக்குறியாகிய இக்குணங்க ளுண்டாகும்.
ஆத்துமீகம் - ஆத்தும சம்பந்தம்.
ஆத்துமீயம் - தன்னுடையது.
ஆஸ்தை - நிலை, நம்பிக்கை, மதிப்பு.
ஆத்தை-அதிசய விரக்கச்சொல், ஆத் தாள், ரான்ரூள்.
ஆத்மசக்தி - ஆன்மாவிற்சூரிய ஆற் றல்.
ஆத்மசுத்தி - ஆத்மாவின் தூய்மை, ஆன்மசுத்தி.
ஆத்மசௌசம் - அகத்தூய்மை.
ஆத்மஜன்-ஆத்துமசன், ஆத்துமஜன்.
ஆத்மஞானம் - தன்னையறிகை.
ஆத்மஞானி - தன்னை யறிந்தவன்.
ஆத்மநாசம் - தன்னைக் கெடுத்துக் கொள்கை.
ஆத்மபுத்தி - தன்னறிவு.
ஆத்மபந்து - ஆன்மாவின் உறுதிச் சுற்றம்.
ஆத்மபோதம் - ஆத்மஞானம்.
ஆத்மம் - நூற்றெட்டுபநிடதங்களு ளொன்று.
ஆத்மரூபம் - ஆன்மரூபம்.
ஆத்மலாபம் - தன்னை யறிகை, சொந்தலாபம், ஆத்மா உய்தல், முக்தி.
ஆத்மஹத்தி - தற்கொலை, ஆத்ம விதம்.
ஆத்மா - சீவான்மா, பிராணி, உயிர், பரம்பொருள், சீவசெந்து.
ஆத்மார்த்தம் - ஆத்துமார்த்தம், தற் பிரயோசனம், ஆத்மா உய்தற்கு ஏதுவானது.
ஆத்மானந்தம் - மோக்ஷானந்தம்.
ஆத்மிகம் - ஆத்மசம்பந்தம்.
ஆத்யன் - ஆத்தியன், முதல்வன்.
ஆத்ரம் - ஆத்திரம்.
ஆத்ரேயன் - ஆத்திரேயன்.
ஆநகதுந்துபி - இரணபேதி, வசு தேவன்.

ஆநகம் - தேவதாரு, தம்பட்டம், துந்துமி, முரசம், மேளம்.

ஆநநம் - முகம்.

ஆநந்த - நாற்பத்தெட்டாவது வருடம்.

ஆநந்தகரப்பன் - ஒருவகைக் கரப்பானோய். அது சர்வாங்கத்திலுஞ் சாரைப்பாம்பின் ரோலையொத்துத் தினவு, சொறி, சலக்கிரவு முதலியன உண்டாவதோடு கண்டத்தில் வெடித்து நீரொழுக விகாரரூபம், தாதுநஷ்ட முதலிய குணங்களை உண்டாக்கும்.

ஆநந்தகாநநம் - ஆனந்தத்தை யுண்டாக்குங் காடு, காசி நகரம்.

ஆநந்தகிரி - சாலிவாகன சகாப்த மெண்ணூற்றின் மேலிருந்த வோர் சமஸ்கிருத வித்துவான். இவனைச் சங்கர திக்குவிசயம் என்னும் நூல் செய்தானென்றொரு சாராரும், சங்கராச்சாரியருக்குச் சீடனென்றொரு சாராருங் கூறுவர்.

ஆநந்தகம் - யோனி.

ஆநந்ததீர்த்தர்-மத்துவாச்சாரியர்கள்.

ஆநந்தத்தாண்டவம் - சந்தோஷக் கூத்து, சிவன் கூத்து.

ஆநந்தத்தாண்டவன் - நடேசன்.

ஆநந்தநாயகி - திருநெல்வாயிலிற் கோயில் கொண்டிருக்குந் தேவியார்.

ஆநந்தநி - பிரமன் பட்டணம்.

ஆநந்தநித்திரை - யோகநித்திரை.

ஆநந்தபடம் - கூறைப்புடவை.

ஆனந்தபயிரவி - ஓரிராகம்.

ஆநந்தபரவசம் - ஆநந்தக்களிப்பு.

ஆநந்தபாஷ்பம்
ஆநந்தபாட்பம் } சந்தோஷத்தினால் உண்டாகுங் கண்ணீர்.

ஆநந்தபைரவி - ஓரிராகம்.

ஆநந்தப்பிரபவம் - இந்திரியம்.

ஆநந்தமயகோசம் - பஞ்சகோசத்தொன்று. அது அவித்தை.

ஆநந்தமயம் - கடவுள், கோசமைந்தில் ஒன்று, தன்வசமற்றிருத்தல்.

ஆநந்தமயன் - கடவுள்.

ஆநந்தமூலி - கஞ்சா.

ஆநந்தம் - அரத்தை, கடவுள், மகிழ்ச்சி, சந்தோஷம், பாக்குற் றங்களிலொருவகை, பேரின்பம், சாக்காடு, ஆனந்தம்.

ஆநந்தரியம் - ஆநந்தர்யம், இடையீடின்மை, சம்மந்தம்.

ஆநந்தரூபன் - சந்தோஷத் தோற்ற மூடையவன்.

ஆநந்தரூபி - சந்தோஷத் தோற்ற மூடையவள்.

ஆநந்தலட்சணம் - பரமாத்மா சகல பதார்த்தத்தைக் காட்டியுந் தன்னிடத்துப் பிரமை நீங்காதிருப்பது.

ஆநந்தவருவி - ஆநந்தக் கண்ணீர்ப் பெருக்கு.

ஆநந்தவல்லி - சந்தோஷத்தையுடையவள், உமாதேவி, கோழித்தலைக் கந்தகம்.

ஆநந்தவாதி - கௌரிபாஷாணம்.

ஆநந்தவுரு - சுகசொரூபம்.

ஆநந்தனம் - இன்பங்கொடுப்பது, உபசரணை, சந்தோஷித்தல்.

ஆநந்தன் - அருகன், சிவன், விஷ்ணு, கடவுள், சந்தோஷத்தையுடையவன், சுகசொரூபி.

ஆநந்தாகிருதி - ஆநந்தரூபமாயிருத்தல்.

ஆநந்தாத்மா - பிரமன்.

ஆநந்தாலயம் - சந்திரலோகு.

ஆநந்தி - அரத்தைப்பூண்டு, ஆனந்தமுடையவன், மகிழ்ச்சி, பார்வதி, மகிழ்பவன், மகிழ்ச்சியுடையவன்.

ஆநந்தித்தல் - சந்தோஷித்தல்.

ஆநந்தியம் - அழிவின்மை, மூடிவின்மை.

ஆநந்தை - கொட்டைக் கரந்தை, பார்வதி, உமாதேவி.

ஆநாகசுரம் - ஒருவகைச் சுரநோய், அது மலபந்தம், மலத்துவாரத்திற் சூலை, அக்கினிமந்தம், சீதளம். சிரோபாரம், நெற்றியெறிவு, தாகம், நெஞ்சுலர்வு, தூர்ப்பலம், தேககனம், தேக நிறபேதம், கண் சிவப்பு, உரோமச் சிலிர்ப்பு, அடிக்கடி நீரொழுக்கு முதலிய குணங்களே யுண்டாக்குவதோடு நாடியையலைவுற்றுச் சூட்சமமாகவும் வேகமாகவும் நடக்கச்செயயும்.

ஆநாகரோகபேதம் - ஆநாக நோயினது விகற்பம். அது அஷ்டிலாரோகம், பிரதியஷ்டிலாரோகம், துனிரோகம், பிரதிதுனிரோகம் என நான்கு வகைப்படும்.

ஆநாகரோகம் - வயிற்றை யிழுத்துப் பிடிக்கும் ஒருவகை நோய்.

ஆநாகரோகலட்சணம் - ஆநாக நோயின திலக்கணம். அது குதஸ்தானத்தில் அபானவாயுவும், இதயஸ்தானத்திலுதானவாயுவும், தமக்குரிய தொழிலை விட்டொன்றுகச் சேர்ந்து வயிற்றை யிழுத்து வலித்துக்கொள்ளும். அக்காலத்தில் வயிற்றிலிரைச்சல், மலச்சிக்கல், சுரம், சுவாச மூதலிய உபத்திரவங்களுண்டாகும்.

ஆநாத்தம் - ஆடாங்கு, ஒரு தேயம், கடல், சண்டை, தோல்.

ஆநாயகலை - வலைபோன்ற வத்திரம்.

ஆநாயம் - வலை, வாயுக்கண்ணறை.

ஆநி - கழித்தல், குறைவு, கேடு, விடுதல், நஷ்டம், ஹாநி, உத்திராடநாள், ஓர் மாதம், கேட்டை நாள், பொருந்தநாதி, மூலநாள், வெட்டுக்குருத்து.

ஆநியம் - நாள், பகல், பருவம், பொழுது, மூலநாள்.

ஆநிரை - பசுக்கூட்டம்.

ஆநிரைகாத்தோன் - கிருட்டினன்.

ஆநிலன் - அனுமான், வீமன்.

ஆநிலி - அனுமான், வீமன்.

ஆநிலை - பசுக்கொட்டில்.

ஆநின்று - நிகழ்கால இடைநிலை.

ஆநீர் - கோசலம், கோமூத்திரம்.

ஆநுகூல்யம் - அநுகூலமுடைமை.

ஆநுபூர்வம் - கிரமமான தொடர்ச்சி.

ஆநுபூர்வி, ஆநுபூர்விகம் } கிரமம், வரிசை.

ஆநுமாணிகம் - அநுமாணிக்கப்பட்டது.

ஆநெய் - பசுநெய்.

ஆந்தகம் - குருடர்கூட்டம், பாதாளம்.

ஆந்தகர் - பாதாளலோகத்தர்.

ஆந்தம் - இறுதி, முடிவு.

ஆந்தரங்கம - இரகசியம், உச்சசிநேகம், உச்சிதம்.

ஆந்தரங்கன் - அதிக நேசிக்கப்பட்டவன், அருமையானவன், இரகசியங்களைக் கேட்டு வைத்திருப்பவன், உற்றநண்பன், விஷயங்களை நம்பத்தக்கவன்.

ஆந்தரதேசம் - ஒருதேசம். இது கோதாவிரி, கிருஷ்ணநதிகளுக்கு மத்தியில் உள்ளது. இது தெலுங்கு தேசம் எனப்படும். திரிலிங்கதேசமென்பது வடமொழி வழகு.

ஆந்தரபிருத்தியர் - சூத்திரன் வமிசத்தாரான மகததேச வரசர். இவர்கள் சாலிவாகன சகாப்தமுதல் நானூறு வருடம் இராச்சியம புரிந்தோர்.

ஆந்தரம் - ஆந்தரதேசபாஷை. இது வே தெலுங்கு என்றும் தெலிங்கு என்றும் வழங்குவது. இது கண்ணுவ மகாவிருடியாற் பிரவிருத்தி செய்யப்பட்ட தென்பர், தெலுங்கு.

ஆந்தரர் - ஆந்தரதேசத்தர், பஞ்சதிராவிடருள் ஒருவகையார்.

ஆந்தராளிகன் - மத்தியஸ்தன்.

ஆந்தனேயும் - ஆமனவும்.

ஆந்திகை - அக்காள்.

ஆந்திரகம் - ஆந்திரீகம், குடல்.

ஆந்திரதேசம் - ஆந்தரதேசம்.

ஆந்திரபித்தவாதம் - ஒருவகைப் பித்தவாத ரோகம். அது வாதவஸ்து, சீதளவஸ்து, மச்சம், மாமிசம், வெல்லம், பிண்ணாக்கு, தயிர், காந்தியவன்னம், இவைகளை அதிகமாகப் புசித்தலினாற் பிறந்து பெருங்குடலின் துவாரத்தில் வியாபித்து வயிற்றிற்கலக்குவதுபோலு மறுக்குதல்போலும் இருப்பதோடு உப்பல், நோவு, மலமூத்திரக் கட்டுப்பாடு, மிகுவார்த்தை, வாந்தி, எப்பம், மூர்ச்சை, பிரமம் என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

ஆந்திரம் - ஒருபாடை, குடல், சாதி நான்கினொன்று, தேயமைம்பத்தாறில் ஒன்று, மரணம், தெலுங்கு பாஷை, ஆந்திரகம், ஆந்திரீகம்.

ஆந்திரர் - ஆந்தரர்.

ஆந்திரன் - தெலுங்கன்.

ஆந்திரீகம் - குடர், குடல்.

ஆந்தை - ஒரு பறவை, ஓர்புள், பஞ்சபட்சியில் ஒன்று, புறமுமட்டி, பேராமுட்டி, ஓர் இயற்பெயர், இருடி, கின்னரம், கூன், பிங்கலை, கூகை.

ஆந்தைக்காதல் - ஆந்தைக் கூவுகை, ஆந்தைநூல்.

ஆந்தைவிழி - ஆந்தை பார்க்கும் பார்வை.

ஆந்தோளம் - கமகம் பத்தனுளொன்று.

ஆந்தோளி - ஓரிராகம், ஒருவகைச் சிவிகை.

ஆபகம் } ஆறு, நதி.
ஆபகை }

ஆபச்சகாயன் - துன்பத்திலுதவுவோன், வயிரவன்.

ஆபச்சைவன் - அட்டவசக்களிலொருவன்.

ஆபணம் - கடை, கடைவீதி, ஆவணம்.

ஆபணியம் } கடைவீதி, கடைச்சரக்கு, ஆபணம்.
ஆபணீயம் }

ஆபதம் - ஆபத்து.

ஆபதோத்தாரணன் - வயிரவன்.

ஆபத்சகாயர் - திருப்பழனத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

ஆபத்சகாயேசுவரர் - குரங்காடுதுறையிற் கோயில்கொண்டிருக்குந்தெய்வம்.

ஆபத்சன்னியாசம் - மரிக்குங்காலத்தில் பெறுந்துறவு.

ஆபத்தம் - பிரதிட்டை.

ஆபஸ்தம்பசூத்திரம் - யசுர்வேதவிகித கருமங்களைக் குறித்து ஆபஸ்தம்பரென்பவராற் சூத்திரமாகச் செய்யப்பட்ட ஒருநூல்.

ஆபத்தம்பம் - தருமநூல் பதினெட்டில் ஒன்று.

ஆபஸ்தம்பர் - வடமொழி வைத்திய சாஸ்திரங்களிற் போனை ஒரு பண்டிதர்.

ஆபஸ்தம்பன் } ஒரு மகாவிருடி.
ஆபத்தம்பன் } இவர் யசுர்வேதவிகித கருமங்களைக் குறித்துச் சூத்திரங்கள் செய்தவர். அஃது ஆபஸ்தம்ப சூத்திரம் எனப்படும்.

ஆபத்தனம் - எய்ப்பினில்வைப்பு.

ஆபத்தி - தோஷம், பொருந்துதல்.

ஆபத்து - அவசரம், பெரியதேவை, மிகு வருத்தம், விபத்து, உபத்திரவம், வியாகுலம்.

ஆபந்தம் - அலங்காரம், உருக்கம், கட்டு, நுகம்.

ஆபந்நம் - விபத்து.

ஆபந்நன் - விபத்தையடைந்தவன்.

ஆபந்நாகரன் - விபத்திற்கு உறைவிடமானவன்.

ஆபம் - நீர், நீர்ச்செறிவு.

ஆபரணக்கடைப் புணர்வு - பின்கொக்கி, கயில், மடை, திருகணி.

ஆபரணச்செப்பு - ஆபரணங்களன் வைக்கும் ஒருவகைச் செப்பு, அணிகலப்பெட்டி, கடிப்பம், கண்டிகை,

காண்டம், கோடிகம், துமானம், பரணி, பீடிகை.

ஆபரணம் - சத்தாவத்தையிலொன்று. அது இருபத்தைந்து தத்துவங்களையும் ஒன்றற்கொன்று பேதந்தெரியவொட்டாமல் மறைத்திருப்பது, சீலை, பூஞரம், அணிகலம், நகை, அணி, அணிகலன், அண்டிகலன், ஆரம், இழை, கலம், கலன், பணி, பூடணம், பூண், மஞ்சு, மதாணி, வள்ளி, சரம், தாமம், கண்டிகை, காண்டம், கோடிகம், துமானன், பரணி, பீடிகை, கிம்புரி, தாங்கி, வயிரம், காழ், சரம், சவி, ஆடை.

ஆபற்காலம் - ஆபத்து சமயம்.

ஆபற்சந்நியாசம் - ஆபத்துக்காலத்திற் பெறுந்துறவு, ஆபத்சந்யாசம்.

ஆபனம் - மிளகு.

ஆபனிகன் - வேடன்.

ஆபன் - அட்டவசுக்களிலொருவன்.

ஆபாகம் - அடுப்பு, குயக்கலஞ் சுடும் சூளை.

ஆபாசம் - போலி, மிகுவிருப்பம், அசுத்தம், அசகியம், கெடுதல், அபிப்பிராயம், ஒளி, பயங்கர ரூபம், பிரதிபிம்பம், பொய்த்தோற்றம், மிகுவிருப்பு, போலி ஞாயம்.

ஆபாசன் - ஜீவன், போலி நியாயம் பேசுவோன்.

ஆபாசித்தல் - எதார்த்தமான வஸ்துவைப்போல் தோன்றுதல், பிரதிபிம்பித்தல்.

ஆபாஷணம், ஆபாடணம் } சுற்றத்தாரிடத்தும் சிநேகரிடத்தும் பேசும் பேச்சு.

ஆபாஷம், ஆபாடம் } பாயிரம்.

ஆபாதசூஷம், ஆபாதசூடம், ஆபாதமஸ்தகம், ஆபாதமத்தகம், ஆபாதமஸ்தம், ஆபாதமத்தம் } உச்சி தொடங்கி உள்ளங்கால்மட்டும், பாதாதிகேசம்.

ஆபாதன் - தீயன்.

ஆபாலகோபம் - ஆபாலகோபாலம்.

ஆபாலகோபாலம் - எல்லோரும்.

ஆபாலி - பேன்.

ஆபானம் - மதுக்கடை.

ஆபிசாரம் - அபிசாரம்.

ஆபிமுக்கியம் - அநுகூலமாக இருக்கை.

ஆபிரிக்கா - ஒரு பூகண்டம்.

ஆபிஜாத்யம் - உயர்குடிப் பிறப்பு.

ஆபிலவனம் - நீர்தெளித்தல், முழுகுதல்.

ஆபீசு - உத்தியோகசாலை.

ஆபீசுநாடா - சிறுநாடா.

ஆபீஷம், ஆபீடம் } சிகையிற் சுற்றின பூமாலை.

ஆபீநம் - பசுவின்மடி, இடையர்வீதி.

ஆபீரம் - இடையர்சேரி, ஆயர்வீதி, சிந்துநதிக்கு மேற்காரியாவர்த்தத்தோடு சேர்ந்த ஒரு தேசம்.

ஆபீரர் - இடையர்.

ஆபீரன் - இடையன்.

ஆபீரவல்லி - இடைச்சேரி.

ஆபீலம் - சங்கடம், நவரசங்களிலொன்று.

ஆபீனம் - கிணறு, கொழுப்பு, சிற்பர்வீதி, பசுவின்மடி, மூலமடி.

ஆபூஷம், ஆபூடம் } துத்தநாகம்.

ஆபூபிகம் - மாவினற்செய்த பலகாரசமுதாயம்.

ஆபூப்பியம் - மா.

ஆபோகம் - அனுபவம், பாம்பின்படம், பூரணம, முயற்சி, கீதவுறுப்புள் ஒன்று.

ஆபோசனம் - போசனம், விழுங்குகை.

ஆபோதனம் - அறிவு, போதித்தல்.

ஆப்காரி - மது முதலிய குடிபதார்த்தங்களுக்கேற்பட்ட வரி.

ஆப்கார் - சாராயங் காய்ச்சுவோன்.

ஆப்தம் - ஆண்டு, நேசம்.

ஆப்தர் - நேசர்.

ஆப்தன் - உள்ளது கூறுவோன், இஷ்டன், நம்பத்தக்கோன், நேசன்.

ஆப்திகம் - தலைத்திவசம், வருடந்தோறும் வருவது.

ஆப்பகூரா - ஒருவிதபான பாத்திரம்.

ஆப்பம் - அப்பம், ஒருவகைப் பலகாரம், கும்பவிராசி.

ஆப்பனூர்க்காரணர் - திருவாப்பனூரிற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

ஆப்பி - பசுச்சாணி.

ஆப்பிடல் - அகப்படல்.

ஆப்பிடு - அகப்படு.

ஆப்பிடுதல் - அகப்படுதல்.

ஆப்பிரீர் - கரைத்த பசுவின்சாணி, பசுவின் மூத்திரமுஞ் சாணியும்.

ஆப்பியந்தரம் - உள், உள்ளானது.

ஆப்பியாயநம் - உறவினரது சேர்க்கை, சந்தோஷம், திருப்தி.

ஆப்பிரச்சனம் - வழியபசாரம்.

ஆப்பு - ஆப்பு, எட்டி, மரம்பிளக்குங் கருவி, மூளை, நொய், கட்டு, சரீரம், கட்டப்படுவது.

ஆப்புளண்டம் - கையாந்தகரை, கரிசலாங்கண்ணி.

ஆப்பேறல் - ஆப்பேறின்பிரிவு.

ஆப்பை - அகப்பை.

ஆப்யந்தரம் - ஆப்பியந்தரம்.

ஆப்யாயநம் - ஆப்யாயம், ஆப்பியாயநம்.

ஆமகணம் - குழந்தைகட்குச் சீத வழும்பு விழுகிற ஒரு நோய், சீதக்கட்டு.

ஆமகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டி லொன்று.

ஆமக்கட்டி - சுரக்கட்டி.

ஆமக்கணம் - ஒருவகைக் கணரோகம். அது வாதநாடி மற்றநாடிகளிற் பின்னிக்கொண்டு நடத்தல், புளிப்புத் துவர்ப்பு வஸ்துக்களை வெறுத்தல், அன்னத்தி லிச்சையறல், நாபியில் நோதல், தேகத்தி னுள்ளிற் காய்தல் முதலியவைகளை அதிகரிக்கச் செய்து எரிகுன்மக் குணம், பித்தவெட்டை, காதுநஷ்டம் என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

ஆமக்கழிச்சல் - சீதபேதி.

ஆமக்கள் - கணவன்.

ஆமக்கன் - ஆமக்கள், ஆண்மகன்.

ஆமசன்னி - ஆசீரத்தால் வரும் சன்னி.

ஆமசிராத்தம் - பச்சைப்படி கொடுக்கிற சிராத்தம், பாகம்பண்ணாத சாமக்கிரிகளைக்கொண்டு செய்யும் சிராத்தம்.

ஆமசுரம்-குழந்தைகளுக்கு அசீரணத்தால் வரும் சுரம்.

ஆமசூல - வயிற்றுவலி.

ஆமசூலரோகம் - ஒருவகைக் சூல நோய். அது மிகு சலபானம், அகால போசனம், மலசலபந்தம், அசீரண வஸ்துக்களைப் புசித்தல் முதலிய வற்றால் ஆமமாகிய வசீகரணம் விருத்தியடைந்து சூலையை அதிகரிக்கச் செய்யும். அதனால் மார்பு, விலா, வயிறு, முதலியஇடங்களில் ஈட்டியாற் குற்றல்போற் குற்றலுண்டாகும்.

ஆமஷம் } உத்தேசம், பலன், மதி
ஆமடம் } ப்பு.

ஆமடி - காஞ்சீரம், எட்டி.
இரத்தகுன்மம் - ஒருவகைக் குன்மரோகம். அது இரத்தவாத குன்மம், இரத்தவாத பித்த குன்மமென இருவகைப்படும். ருதுகால ராஜசைத் தடைப்படுத்தும் ஒருநோய்.

இரத்தகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரத்தகைரவம் - செந்தாமரை, செவ்வாம்பல்.

இரத்தகோகனகம - செந்தாமரை.

இரத்தக்கட்டி - புண்கட்டிவகை.

இரத்தக்கட்டு - உதிரஞ்சுரக்கை.

இரத்தக்கண்ணன் - கோபக்கண்ணன், ஓரசுரன்.

இரத்தக்கலப்பு - உற்றவுறவு, நெருங்கிய உறவு.

இரத்தக்கவிச்சு - இரத்தவெடில், உதிராகாற்றம், இரத்தக்கவில்.

இரத்தக்கழலை - மூவகைக் கழலை நோய்களுளொன்று. அது இமைக்கு மேற்புறத்திலிரத்தநிறக்கட்டியை யெழுப்புவது.

இரத்தக்கழிச்சல் - ஒருவகைக் கிராணி நோய். அது இரத்தபேதியை மாறு துண்டாக்குவது, பேதிவகை, இரத்தக்கிராணி.

இரத்தக்கணப்பு - இரத்தமீறுகை, கருவம், இரத்தக்கொழுப்பு.

இரத்தக்காட்டேறி - பிசாசுவகை.

இரத்தக்காணிக்கை - போரில் வீழ்ந்த மைந்தர்க்குக் கொடுக்கும் மானியம்.

இரத்தக்கிரந்தி - ஒருவகைக்கிரந்தி நோய். அது நிரிதோஷங்களிலுல் இரத்தமானது கெடுதியை யடைந்து மிகவும் கொதித்துண்டாகிற நூறைகளிலுல் சனித்த கிருமிகள் தமது மூக்கிலுற் கிண்டுங்காலத்திற் பிறந்து உதிரத்தை வடியச் செய்வது.

இரத்தக்கிராணி - இரத்தக்கழிச்சல், ஒருவகை யிரத்தபேதி.

இரத்தக்கிருமி - ஒருவகைக் கிருமி ரோகம். அது அணுக்கிருமி, வட்டக்கிருமி, மிகுசூக்மக்கிருமி, காலில்லாக்கிருமி, செங்கிருமி, தோற்சுக்கிருமி என அறுவகைப்படும்.

இரத்தக்கிலிஷ்டம் - ஒருவகை நோய்.

இரத்தக்குமிளம் - ஒருவகைக் குமிள ரோகம். இது வெள்விழியிற் செங் குன்றியைப்போலச் சிவந்த கொப் பளத்தை யுண்டாக்குவது.

இரத்தக்குலே - ஒருநோய்.

இரத்தக்குவை - ஒரு வ கை க க் க ண் ணோய். இது கடைக்கண்ணிலி ரத்த நிறமான நுண்ணிய தசையை யுண்டாக்கும்.

இரத்தக்குழல்-இரத்தமோடுங் குழாய்.

இரத்தக்குறைவு - இரத்தக்குறைச்சல்.

இரத்தக்கொதி - தக்கமுதலியவற்றா லுண்டாகும் உதிரக்கொதிப்பு, காமக்கிளர்ச்சி.

இரத்தக்கொழுப்பு - இரத்தபுஷ்டி, கருவம், மதம், செருக்கு.

இரத்தக்கோமாரி - மாட்டுக்கு வரு மோர் நோய்.

இரத்தசந்தனம் - செஞ்சந்தனம்.

இரத்தசந்தியகம் - செங்கழுநீர்புட் பம், செந்தாமரை.

இரத்தசந்தியாகம் } செந்தாமரை.
இரத்தசரோருகம் }

இரத்தசம்பந்தம் - இரத்தக்கலப்பு.

இரத்தசாகம் - செங்கீரை.

இரத்தசாட்சி - சத்தியத்தின்பொரு ட்டுக் கொல்லப்படுகை, சத்தியத் தின்பொருட்டுக் கொல்லப்படுப வன்.

இரத்தசாமுண்டி - தூர்க்காபேதம்.

இரத்தசிகுவம் - சிங்கம்.

இரத்தசிரஸ்தாபம் - ஒருவகை வாதத் தலைவலிரோகம். இது வாதாதிக் கத்திஞல் நெறிகளிற் கடவாத்தி யம் வாசிப்பதுபோல நிரல்கண் ணும்புருவமும் நெற்றியுமிற்றுவிழு வது போற் றெரித்தல், வெளிச்சத் தைப் பார்க்கக்கூடாமை, தலைசுழற் றலுடன் நோதல், காதிரைச்சல், நரம்புகள் புடைத்துப்புதல், நாசி யிற் சலம்வடிதல் என்னுமிக்கு ணங்களை யுண்டாக்கும்.

இரத்தசிராவகரோகம் - ஒ ரு வ கை நோய். அது இமைச்சந்திமார்க்கத்தி லொட்டியிருக்கின்ற நரம்புகளி லிரத்தமானது வியாபிக்கும்போது பிறந்து கண்களினின்றும் சுத்த உதிரத்தைப்போல் உஷ்ணஜலத் தைச் சிவந்தும் அதிகரித்தும் குறைந்தும் ஒழுகப்பண்ணும்.

இரத்தசிராவம் - ஒருவகைநோய். அது இரத்தமானது வெளுத்தோ அல் லது சிவந்தோ அல்குல் மார்க்க மாய் விழுவது.

இ ர த் த சிலேஷ்மதுஷ்ட விரணம் - ஒருவகை விரணநோய். அது வெளுத்துஞ் சிவந்து மிருக்கும். அதினின்றுஞ் சீழு மிரத்தமு மொழுகும்.

இரத்தசிலேஷ்ம பித்த துஷ்ட வி ர ணம் - ஒருவகை விரணநோய். அது இரத்த கபத்திற்கும் இரத்த பித்தத்திற்கு முள்ள குறிகளோ டிருக்கும்.

இரத்தசிலேஷ்மம் - ஒ ரு வ கை க் சிலேஷ்மநோய். அது பிரதி தின மும் இரத்த வாந்தியோடு அவ் வாந்தியில் தூர்க்கந்தமான கோ ழை வீழ்தல், பலமுங் காந்தியுங் கெடல், அவயவங்கள் சுருங்கல், சுரம், எரிச்சல், அதிக சுவாசம், வேதனை, உள்ளங்கை உள்ளங்கால் எரிவு, மார்பிலுந் தலையிலுங் குத் து, வயிற்றுப்பிசம், வாந்தி, தே கத்திமிர், சிரோபாரம், காதி ரைவு, சோகைஷ, மூர்ச்சை, கண் சுழற்சி, மயக்கம் என்னும் இக் குணங்களை அதிகரிக்கச் செய்வ துந் தவிர முழங்கால், முழங்கை, முதுகு, விலா, கணுக்கை, கீல் என்னும் இவ்விடங்களிற் கடின மான வீக்கம், குடைச்சல், சளி, இருமல், நாவறட்சி, காவில் தித் திப்பாகிய இவைகளையு முண்டாக் கும்.

இரத்தசூலை - சூதகவாய்வு.
இரத்தசூறை - மீன்வகை.
இரத்தசெந்துகம் - நாங்கூழ்.
இரத்தச்சிலேநதி - ஒருவகைச் சிலேந்தி. அது தேகத்தி லெங்காவதுபடில் பட்டவிடஞ் சிவந்து தடித்துச் சுற்றிலுஞ் சிறிய கொப்பளங்க ளெழும்ப அதில் ஓயாது இரத்த முஞ் சீழும் வடிந்துகொண்டே யிருக்கும்.
இரத்தச்சுரப்பு - இரத்தங்கன்றுதல், சரீரக் கொழுப்பு, இரத்த மிகுதி, இரத்த ஊறல், செருக்கு.
இரத்தச் சுருட்டை - சுருட்டைப் பாம்பு வகை.
இரத்தஞ்சிந்துதல் - கொல்லுதல்.
இரத்தஞ்சுணடுதல் - இரத்தம் வற் றுதல், கொழுப்பேறுதல்.
இரத்தட்சயம் - இரத்தகாசம்.
இரத்ததாது - செம்பு, செவ்வரிதா ரம்.
இரத்ததாதுகதசுரம் - ஒருவகைச் சுர நோய். அது உமிழ்நீரி லிரத்தம் வீழ்தல், தாகம், உடம்பெங்கும் சிவந்த தடிப்பு, எரிச்சல், தேகச் சிலப்பு, பிரமை, மதம், பிரலாபம், இருநெறியுமிடித்தல், கீல்களெல்லா நோதல், வியர்த்தல், சரீர நோ வோடு கன்றுத மூர்ச்சை, நாக்கு வழுவழுப்பு, நாக்கு மஞ்சணிறமா யிருத்தல், நெஞ்சிற் கபாதிக்கம், நித்திரை, மலபந்தம் என்னும் இக் குணங்களே யுண்டாக்கும்.
இரத்ததிமிரம் - ஒருவகைக் கண் ணேய். அது கண்களைச் சிவப் பாக்குவதுமன்றிப் பார்வையிலும் அவ்வாறே தோற்றுவிக்கும்.
இரத்ததிரிதோஷ துஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது இர த்த வாத துஷ்டவிரண முதலிய மூன்று விரணக்குறிகளைப் பெற் றிருப்பது.
இரத்ததுண்டம் - மூக்கு.
இரத்ததுஷ்டவிரணம் - ஒரு வ கை விரணநோய். அது பவளமல்லது இரத்தத்தைப்போன்ற நிறத்தைப் பெற்றுப் பித்தத துஷ்டவிரணக் குறிகளேயெல்லாம் பெற்றிருப்ப தோடு குதிரை கட்டுமிடத்தில் வீசுகின்ற வாசனையைப்போல வா சனையும் வீசும்.
இரத்தத்துண்டம் - கிளி.
இரத்தத்தொடர்வு - இரத்த சம்பந் தம்.
இரத்தநரம்பு - உதிரநரம்பு, இரத்த தாது.
இரத்தந்ததும்புதல் - முகஞ்சிவந்து காட்டுதல், கோபத்தால் முகம் சிவத்தல்.
இரத்தபடலம் - ஒரு வ கை க் கண் ணேய். அது கண்மணியிற் கரித் தல், குமுறல், காந்தல், கன்றுதல், பீளைசாரல், எரிதல், இரத்தங்கட் டல், நெறிக்குங் கீழ் புருவம் நெற் றி பிடரி உச்சி ஆகிய இடங்களிற் குத்தலாகிய குணங்களே யுண்டாக் கும்.
இரத்தபதமம் - ஒரு வ கை க் கண் ணேய். அது இமையிற் சிவந்த நிறத்தையும் இரத்தகீரையு முண் டாக்கும்.
இரத்தபலி - இரத்தஞ் சிந்தும்பலி, கொலை, உதிரநைவேத்தியம்.
இரத்தபலை - கோவப்பழம்.
இரத்தபழம் - ஆலமரம்.
இரத்தபாஷாணம் - வைப்புப்பாஷா ணம் முப்பத்திரண்டிலொன்று.
இரத்தபாண்டுச் சிலந்தி - ஒருவகைச் சிலந்தி. அது பட்டவிடத்தில் வெ ளுத்துத் தடித்துச் சிவந்து இரத் தம் வடியும்.
இரத்தபாதம் - கிளி.
இரத்தபாரதம் - சாதிலிங்கம்.
இரத்தபாளம் - மூசாம்பரம்.
இரத்தபானம் - இரத்தம் பருகல், இரத்தம் குடித்தல்.

இரத்தபிண்டம் - சீனமல்லிகை.

இரத்தபித்தசூலை - இரத்த வாந்தி நோய்.

இரத்தபித்ததுஷ்டவிரணம் - ஒரு வகை விரணநோய். அது உதிர நிறம் அல்லது மஞ்சணிறமாயிருக்கும். அதினின்றுங் கோமூத்திரம் போலு மிரத்தம்போலுஞ் சல மொழுகும். அதனலெரிச்சலும் விருவிருப்பும் உண்டாகும்.

இரத்தபித்தம் - இரத்தவாந்திநோய், உதிரங்கெட் டொழுகும் ஒரு வியாதி.

இரத்தபித்தரோகம் - ஒரு வகைப் பித்தரோகம். அது இரத்தவாந்தி, வயிறுப்பல், வியர்வை, தூர்ப்பலம், குளிர், சுரம், சதா சீதளம், கால் கை நேத்திரம் இவ்விடங்களி லெரிச்சல், இளைப்பு, கோழை, கொட்டாவி, விக்கல், தலைதிருப் பல், மந்தாக்கினி, அரோசகம், நிறக்குறைவு, சரீரவேதனை, வயி ற்றுநோவு, நாவுலர்ச்சி, அருசி, அசீரணம் என்னுமஇக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தபிந்து - வயிரக்குற்றவகை.

இரத்தபீசன் - ஓரசுரன்.

இரத்தபீனசம் - ஒருவகைப் பீனிச நோய். அது நாசிக்குள் நமைச்ச லோடு திமிர், சிவந்தசளியு மிரத்தமுமொழுகல், கண்ணிலுங் காதி லுந் தினவு, கண்ணுமுரோமமுஞ் சிவத்தல், அருசி என்னும் இக் குணங்களை யுண்டாக்கும், மூக்கி லிருந்து இரத்தங்காணும் நோய்.

இரத்தபுஷ்டி - இரத்தநிறைவு.

இரத்தபுட்பிகர் - மூக்கிரட்டை.

இரத்தபுட்பிகை - மூக்கிரட்டை.

இரத்தபை - அட்டை.

இரத்தபோளம் - ஒருவகை வாசனைப் பண்டம்.

இரத்தப்பசப்பு
இரத்தப்பசுமை } இரத்தபுஷ்டி.

இரத்தப்பலம் - ஆல்.

இரத்தப்பலி - இரத்தப்பிச்சை, இரத்தவுணவு.

இரத்தப்பழி - கொலைப்பழி, கொலை, கொலைக்குக் கொலை.

இரத்தப்பிரமியம் - மூத்திரத்தோடி ரத்தம் விழுகிற ஒரு மேகநோய், இரத்தப்பிரமேகம்.

இரத்தப்பிரமேகம் - ஒருவகைப் பிர மேகரோகம். அது தயக்கம், தலை திருப்பல், சரீரம் பஞ்சைப்போல் மெதுவுறல், முயலிரத்தம்போலுஞ் சிவந்து சுருக்குடன் அடிக்கடி வேதனை யுண்டாகும்படி நீரிறங்க லாகிய இக்குணங்களை யுண்டாக் கும், இரக்தமெவட்டை.

இரத்தப்பிரவாகம - இரத்தப்பெரு க்கு, உதிரப் பெருக்கு.

இரத்தப்பிரவை - ஏழ்நரக வட்டத் தொன்று. அஃது இரத்த நிலம்.

இரத்தப்பிரியன் - வெகாலி விரு ப் புடையோன்.

இரத்தப்பீனசம - மூக்கின் வழியா யிரத்தம் விழுகிற ஒரு கபால நோய்.

இரத்தப்புடையன் - கடித்த வுடன் கண் மூக்கு வாய் வழியாயிரத்தம் வரச் செய்கிற ஒரு பாம்பு, பாம்பு வகை.

இரத்தப்பெருக்கு - இரத்தப்பிரவாகம்.

இரத்தப்பேதி - ஒருவிதப் பேதி நோய்.

இரத்தமசூரிகை - ஒருவகை மசூரிகை யுரோகம். அது மேலெங்கும் இர த்த நிறமான கொப்பளங்களை மெரிச்சலு முண்டாக்கும்.

இரத்தமடக்கி - உதிரங்கட்டு மருந்து.

இரத்தமண்டலம் - செந்தாமரை.

இரத்தமண்டலி - கடித்தவுடன் துவாரங்கள் வழியாயிரத்தம் வரச் செய்கிற ஒரு விஷப்பாம்பு, விஷப் பாம்பு வகை.

இரத்தமதம் - ஒருவகை மதரோகம். அது தேகமுங் கண்ணுமதர்த்த லோடு பித்த மதரோகக் குணங் களையு முண்டாக்கும்.

இரத்தமாடன் - ஒருபேய்.

இரத்தமாரணம் - காவிக்கல்.

இரத்தமானியம் - உம்பிளிக்கை மானியம்.

இரத்தமுகபாகம் - ஒருவகைநோய். அது பித்தத்தைக்கொண்டு வாய்க்குள் நெற்பானே ஆலியைப்போற் புகையை யெழுப்புவதோடு வாய்க்குள் இரத்தம் போன்ற செந்நிறத்தைத் தோற்றுவிக்கும்.

இரத்தமூத்திரம் - சிறு நீருடன் இரத்தமொழுகும் நோய்.

இரத்தமூலம் - இரத்தம் விழுகிற ஒரு மூலநோய்.

இரத்தமேகம் - ஒருவகை மேகரோகம். அது மூத்திரமானது இரத்த நிறத்தையு மிலவணத்தையுந் தூர்க்கந்தத்தையும் பெற்று உஷ்ணரம் பமாய் அனலே வீசிக்கொண்டு முயலிரத்தம் போன்று இரண்டுபடி அளவாக இறங்கும். அதைக் காய்ச்சிப் பரீக்ஷித்தாற் புலாலுற்றம் வீசும். அதனால் கோசமும் பீசமுங் கடுக்கும், இரத்தமேவட்டை.

இரத்தம் - குங்குமப் பூ, சாதிலிங்கம், சிவப்பு, செம்பு, பவளம், ஈரல், குங்குமம், கொம்பரக்கு, அரத்தம், ஆர்க்கம், உதிரம், எருவை, கறை, கீலாலம், குருதி, சுடுவல், செந்நீர், செம்பால், செம்புனல், சோணிதம், சோரி, தோரை, தோன்றி, நெய், நெய்த்தோர், புண்ணீர், புலானீர், ரத்தம்.

இரத்தயோனி - ஒருவகை யோனிரோகம். அது நிகழ்ஸ்தானத்திற் சகிக்கக்கூடாத வுபத்திரவத்தையு மிகுந்த விரத்தவொழுக்கையுமுண்டாக்கும்.

இரத்தரோகம்-ஒருநோய், கண்ணேயுளொன்று.

இரத்தலிங்கநாசம் - ஒருவகைக் கண்ணேய். அது பாவையை இரத்தமாக்குவதோடு அப்பாவையையுங் கண்களிலெளியையு மழுக்கும்.

இரத்தல் - இரவு, ஏற்பு, ஏற்றல், குறைகோள், யாசித்தல், வேண்டல், பிச்சைகேட்டல், வேண்டுதல்.

இரத்தவடி - வைசூரிக்குரு, வைசூரி.

இரத்தவமனம் - இரத்தவாந்தி.

இரத்தவரி - ஒருவகைக் கண்ணேய். அது கண்களிற் செந்நிறவரியைப் பிறப்பிக்கும்.

இரத்தவலிப்பு - இரத்தாதிக்கத்தால் வரும் இசிவு, இரத்த மிகுதியால் உண்டாகும் இசிவு நோய்.

இரத்தவழலை - விஷப்பாம்புவகை.

இரத்தவள்ளி - செவ்வள்ளிக்கிழங்கு.

இரத்தவற்கனம் - செம்பு.

இரத்தவாதகுன்மம்-ஒருவகைக் குன்மநோய். அது இரத்தகுன்மத்தினோர் பேதம்.

இரத்தவாத சிலேஷ்ம துஷ்ட விரணம் - ஒருவகை விரண நோய். அது இரத்தவாதத்திற்கும் இரத்தகபத்திற்கும் உள்ள குறிகளுடனிருக்கும்.

இரத்தவாததுஷ்டவிரணம் - ஒருவகை விரணநோய். அது பவளமல்லது கரியைப்போன்றிருப்பதோடு அதினின்று மிரத்தம்போலுந் தயிர்ச்சலம்போலுஞ் சீழ்த்தண்ணீரொழுகும். அதனால் குத்தலும் வாந்தியுமுண்டாகும்.

இரத்தவாதபித்தகுன்மம்- ஒருவகைக் குன்மநோய். அது இரத்தகுன்மத்தினோர் பேதம், பெண்களுக்கு வரும் நோய் வகை.

இரத்தவாதபித்தத்துஷ்டவிரணம் - ஒருவகை விரண நோய். அது இரத்தவாதத்திற்கு மிரத்தபித்தத்திற்குமுள்ள குறிகளுடனிருக்கும்.

இரத்தவாந்தி - இரத்தமாக எடுக்கும் சத்தி.

இரத்தவாரி - சூதப்பெருக்கம்.

இரத்தவித்திரதிக்கட்டி - ஒருவகைக் கட்டிநோய். அது கறுத்தும் ஒரு வேளை வெளுத்துச் சிறு சிறு கொப்பளங்களோடு பிறந்து அதி கதாகம், நோவு, பித்த வித்திரதிக் கட்டியிற்காணுங் குணமாகிய இவைகளை யுண்டாக்கும். அது புருஷர்களுக்கு வெளிப்புறத்திலும் மாதர்களுக்கு உட்புறத்திலும் தோற்றும்.

இரத்தவிந்து - இரத்தினத்திலுள்ள பொரிவு, மாணிக்கத்தின் மூன்றாவது சாதி, மாணிக்கவகையாகிய குருவிந்தம்.

இரத்தவிரியன் - ஒரு விஷப்பாம்பு.

இரத்தவீசம் - மாதுளை.

இரத்தவெடில் - இரத்தமணம்.

இரத்தவெட்டை - இரத்தம் கலந்து மூத்திரம் வெளிப்படும் நோய் வகை.

இரத்தவெறி - ஆங்காரம், இரத்தங் குடித்தவெறி.

இரத்தவோட்டம் - இரத்தம் தேகமெங்கும் செல்லுகை.

இரத்தாகம் - சிற்றாமணக்கு.

இரத்தாக்கம் - எருமைக்கடா புறவம்.

இரத்தாக்கன் - சூரியன்.

இரத்தாசயம் - இரத்தந் தங்குமிடம், இருதயம்.

இரத்தாட்சி - ஐம்பத்தெட்டாவது வருடம்.

இரத்தாதாரம் - தோல்.

இரத்தாதிசாரம் - பிராந்தி நோய், சீதபேதிவகை.

இரத்தாதிமந்தம் - ஒருவகை மந்தரோகம். அது கண்கள் சிவத்தல், சிலவேளை செம்பரத்தம்பூப்போல மிகவுஞ் சிவத்தல், திறக்கும்போதுந் தொடும்போதும் நோதல், கருவிழியானது இரத்தத்தில் மூழ்கினது போற்றோற்றல், நெறி தந்தம் தாடை மண்டை ஆகிய இவ்விடங்களில் வேதனை என்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தாபிஷந்தம் - ஒருவகைக் கண்ணோய். அது கண்கள் கோவப்பழம்போற் சிவந்து அதினின்று மிரத்த நிறத்தையொத்த சலமும் பீளையுமொழுகுதல், கருவிழிவெளிறலென்னும் இக்குணங்களை யுண்டாக்கும்.

இரத்தாம்பரம் - சிவப்புப்புடவை, செவ்வாடை.

இரத்தாற்புதகிரந்தி - ஒருவகைக் கிரந்தி நோய்.

இரத்தாற்புதம் - ஒருவகை நோய், அது ஆண்குறி முற்றிலும் இரத்தத்தினுற் கருமை செம்மையுள்ள கொப்பளங்களைப் பிறப்பித்து அளவற்ற வேதனையை யுண்டாக்கும்.

இரத்தி - இத்தி, இலந்தை, மாவகை.

இரத்திரி - இத்தி மரம்.

இரத்தினகசிதம் - மணியிழைக்கப்பட்டது, இரத்தினம் பதிக்கப்பட்டது.

இரத்தினகபுவை - பூமி.

இரத்தினகருப்பம் - சமுத்திரம்.

இரத்தினகர்ப்பேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரத்தினக்கம்பளம் } உயர்ந்த சித்திர
இரத்தினக்கம்பளி } ரக் கம்பளம்.

இரத்தினக்குற்றம் - சரமலம், கீற்று, சம்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், மிருத்து, கோடியில்லன, கோடிமுறிந்தன, தாரை மழுங்கல்.

இரத்தினங்கள் - வயிரம், முத்து, பவழம், கோமேதகம், இந்திரநீலம், வைடூரியம், புட்பராகம், மரகதம், மாணிக்கம்.

இரத்தினசபை - திருவாலங்காட்டு நடராஜ சபை.

இரத்தினசானு - மகாமேரு.

இரத்தினச்சுருக்கம் - ஒரு வைத்திய நூல், புகழேந்திப் புலவர் செய்த ஒரு உறுப்புவமை நூல், மகளிர் உறுப்புவமை முதலிய கூறும் ஒரு நூல், வாகடநூல், அழகுறச்சுருங்கியது.

இரத்தினதீவம் - இலங்கை.

இரத்தினபரீட்சை - கலைஞான மறுபத்திநான்கிலொன்று, அறுபத்து நாலு கலையுள் இரத்தினங்களின் இயல்பறியும் வித்தை.

இரத்தினபூஷேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரத்தினப்பிரத்தம் - கைலாயத்தின் தாழ்வரை.

இரத்தினப்பிரபை - ஏழு நரகத்தொன்று.

இரத்தினமாத்திரை - ஒரு குளிகை.

இரத்தினமாலை - மணிவடம்.

இரத்தினம் - மாமணிப்பொது, மணி, ரத்தினம், இரத்தினக்கல், சிரேட்டம்.

இரத்நாகரம் - கடல், மகோததி, தனுஷ்கோடிக்கு வடக்குள்ள கடல், இரத்தினமிருக்கும் சுரங்கம்.

இரத்நாங்கி - இரண்டாம் மேளகர்த்தா.

இரத்தினி - பிடி, முழம், முன்கைப் பேரெலும்பு.

இரத்தினேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரஸ்து - படைகளுடைய போசனச் சாமான், வாழைப்பழம்.

இரத்நுதல் - பேசலாலெழுமொலி.

இரத்தை - பராசத்தி வேதம், மஞ்சிட்டி.

இரத்தோஷ்டம் - ஒருவகை அதரரோகம். அது உதடுகளி லிரத்தத்தைப்போன்ற நிறத்தை யுண்டாக்கும்.

இரத்தோற்பலம் - செங்குவளை, செந்தாமரை.

இரந்திரம் - குழி, சென்மலக்கினம், துவாரம், துளை, வெளி, ஜன்மலக்கினம், இராசியம், நிந்தை, ரந்திரம்.

இரந்தை - இலந்தை.

இரந்துணி
இரந்துண்ணி
இரப்பன்
இரப்பாணன்
இரப்பாண்டி
இரப்பாளன்
} யாசகன்.

இரப்பு - தரித்திரம், பிச்சை, மன்றாட்டு, யாசிப்பு, யாசிக்கை, இரவு, யாசித்தல்.

இரப்புக்கோழி - கோழிக்காரக விலக்கண மூன்றனுளொன்று. அது கொள்வோன் வேண்டக் கொடுப்போன் கொடுப்பதாம்.

இரப்புணி - இரப்போன், இரந்துண்ணி.

இரப்பை - இடையிதழ், ரப்பை.

இரப்போர் - இரவலர், இரவோர், தீனர், நிரப்போர், பரிசிலாளர், மார்க்கணர், யாசகர், வறிஞர்.

இரப்போர்கலன் - கடிஞை, கப்பரை, பாத்திரம், ஓடு, சிரட்டை, குடுவை, மண்டை.

இரப்போன் - இரந்துண்ணி.

இரமடம் - பெருங்காயம்.

இரமணம் - இரம்மியம், காமச்சேட்டை, சுரதவிளையாட்டு, புணர்ச்சி, இரமணீயம், இன்புறச்செய்கை.

இரமணன் - காந்தன், தலைவன், நாயகன்.

இரமணியம் - இரம்மியம், இரமணீயம், இரமணம்.

இரமணீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

இரமணீயம் - இன்பஞ் செய்வது, அழகுள்ளது, இரம்மியமானது.

இரமதி - காமம், காமன், காலம், தூர்த்தன், மோட்சம்.

இரமம் - ஆசை.
இரமன் - காமன், நாயகன்.
இரமாபதி - திருமால்.
இரமாப்பிரியம் - தாமரை.
இரமித்தல் - சந்தோஷித்தல், புணர்தல்.
இரமியம் - திருப்தி, பூரண சந்தோஷம், இரமிய வருடம், இரம்மியம்.
இரமியவருடம்-நவவருடத்தொன்று.
இரமை - இலக்குமி, செல்வம், மனையாட்டி.
இரம்பக்கல் - குருந்தக்கல்.
இரம்பம் - ஈர்வாள், கத்தூரி மிருகம், மரமறுக்கும் வாள்.
இரம்பன் - வாநரத் தலைவன்.
இரம்பியம் - பூரண சந்தோஷம், மகிழ்ச்சி தருவது, இரமியம், ரம்மியம், திருப்தி, மிளகு.
இரம்பிவம் } மிளகு.
இரம்பிலம் }
இரம்பை - இரம்பம், தேவலோக தாசி, அரம்பை, ரம்பை.
இரம்மியேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
இரயன் - வேகமாய் நடப்போன்.
இரலை - அச்சு வினிநாள், ஊதிடு கொம்பு, கருமான், கலைமான், புல்வாய், துத்தரியென்னும் ஊது கொம்பு, அச்சுவினி, அச்சுவிநி.
இரவச்சம் - இரத்தலினுலுண்டாகும் பயமுங் கூச்சமும், மானந்தீரவரும் யாசகத்துக்கு அஞ்சுகை.
இரவணம் - ஒட்டகம், குயில், பரிகாசம் பண்ணுதல், வெண்கலம், வெப்பம், பரிஹாசம்.
இரவணன் - ஒட்டகம், கூப்பிடுஞ் சுபாவமுடையவன்.
இரவதம் - குயில்.
இரவம் - இருள்மரம், ஒலி.
இரவுமணி - இராத்தோறும் வருஞ் சந்திரன்.
இரவலர் - ஏற்போர், இரப்போர், இரவோர்.
இரவலன் - ஏற்பதில் வல்லோன், யாசகன்.
இரவலாளர் - யாசகர்.
இரவலாளன் - இரவலன்.
இரவல் - மீண்டுந் தருவதாகக் கொள்கை, மூகமாற்று, சொந்தமல்லாதது, யாசகம், மீண்டுந்தருவதாகக் கொண்ட பொருள், இரத்தல்.
இரவறிவான் - கோழிச்சேவல், சேவற்கோழி.
இரவற்குடி - குடிக்கூலியின்றி குடியிருக்குங் குடும்பம், அடுத்து வாழுங் குடும்பம், இரவல்வீடு.
இரவற்சோறு பிறரைச் சார்ந்து பிழைக்கும் பிழைப்பு.
இரவன் - சந்திரன்.
இரவாக்கல் - ஓரிரத்தினம்.
இரவி - சூரியன், மலை, மூக்கின்வலத்துவாரம், வாணிகத் தொழில், நான்கு முகமுடைய சூரியன், ரவி, எருக்கு, வணிகம், சொற்பம்.
இரவிகன்னம்-பூமிக்குஞ் சூரியனுக்கு முள்ள தூரம்.
இரவிகாந்தம் - சூரியகாந்தக்கல், சூரியகாந்தம், தாமரை.
இரவிகுலம் - சூரியவமிசம், சூரியகுலம்.
இரவிகேந்திரம் - அணித்தானபாதையில் வருஞ் சூரியனுக்கும் கிரகத்துக்குமுள்ள தூரம்.
இரவிக்கை - மூலைக்கச்சு, தனக்கச்சு, மாதரணியும் மார்க்கச்சு, இரவுக்கை, ரவுக்கை.
இரவிதேவி - உஷாதேவி, சாயாதேவி.
இரவிநாள் - இரேவதி.
இரவிநிறமணி - சாதுரங்க பதுமராகம்.
இரவிபுடபுத்தி - சூரியனது உத்தமபுடம்.
இரவிபுரம் - மலைநாட்டின் கண்ணுள்ள ஒரூர்.

இரவிமண்டலம் - சூரியமண்டலம்.
இரவிமதி - வெள்ளி.
இரவிமனைவியர் - உஷாதேவி, சாயாதேவி.
இரவிமைந்தன் - எமன், கன்னன், சனி, சுக்ரீவன்.
இரவிவாரம் - ஞாயிற்றுக்கிழமை.
இரவிவிக்கேபம் - கிரகணத்திற் சூரியன் கிராந்திமார்க்கத்திற் சாய்ந்திருக்கை.
இரவிற்றிரிவோன் - அரக்கன்.
இரவு - இரத்தல், இராத்திரி, மஞ்சள், பிச்சை, வறுமை, யாசிக்கை, இருள் மரம், இரா, ரா, ராவு.
இரவுக்குறி - களவுப் புணர்ச்சியில் இராக்காலஞ் சந்திக்க நியமிக்குமிடம்.
இரவுக்கை - மார்க்கட்டுச் சட்டை, மூலேக்கச்சு.
இரவுத்திரம் - இரௌத்திரம்.
இரவுத்திரியம் - சிவதீட்சை.
இரவுபகல் - கேவல சகலங்கள், இராக்காலமும் பகற்காலமும்.
இரவுரவம - இரௌரவம், ஓர் நரகம், இருபத்தெட்டாகமத்துளொன்று.
இரவெரி - சோதிவிருட்சம்.
இரவெரிமரம் - ஒரு மரம், சோதிவிருட்சம்.
இரவை - அணு, அற்பம், துப்பாக்கியிலிடும் ஈயச்சன்னம், பணிப்பொது, வச்சிரம், நுட்பமான பொருள், கோதுமைக்குறுணை, ரவை, சொற்பம், கோதுமைக்குறு நொய்.
இரவைசல்லா - மெல்லிய துணி.
இரவோர் - யாசகர்.
இரவோன் - சந்திரன், யாசகன், வறியவன்.
இரளி - கொன்றை.
இரற்றல் - ஒலித்தல், இரற்றுதல்.
இரற்று - இரற்றென்னேவல், ஒலி, ஒலித்தல்.
இரற்றுதல் - ஒலித்தல், சத்தமிடுதல்.
இரா - இரவு, இருத்தலேச் செய்யாவென்னும் அஃறிணேப் பன்மை மூற்று, இருந்தென்னெச்சம்.
இராகங்கலத்தல் - ஓர் இராகம் மற்றொன்றோடு சேர்தல்.
இராகசூத்திரம் - தராசுக்கயிறு, பட்டுநூல்.
இராகதத்துவம் - அராகதத்துவம்.
இராகப்புள் - கின்னரம், மிதுனம்.
இராகமாலிகை - இசைப்பாட்டுவகை.
இராகமெடுக்க - இராகமாலாபிக்க.
இராகமெடுத்தல் - ஆலாபனஞ்செய்தல்.
இராகம் - அன்பு, ஆசை, கீதம், சடத்தீயிலொன்று, சிவப்பு, நிறம், மோகம், வித்தியாதத்துவமேழிலொன்று, இராகதத்துவம், இசை, இன்னிசை, ராகம் [32] பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தந்நியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம். இவற்றுள் பைரவி - புருடவிராகம், பிராமணசாதி; இதன் மனைவிகள் தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி; அதிதேவதை-யீசன்; பூபாளம் - புருடவிராகம், பிராமணசாதி. இதன் மனைவிகள் வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதை - திருமால்; சீராகம்-புருடவிராகம், அரசசாதி, இதன்மனைவிகள், இந்தோளம், பல்லதி, சாவேரி. அதிதேவதை, சகச்சுவதி; படமஞ்சரி - புருடவிராகம், அரசசாதி, இதின் மனைவிகள்தேசி, இலலிதை, தோடி, அதிதேவதை - இலக்குமி; வசந்தம்-புருடவிராகம்,

வைசியசாதி, இதின் மனைவிகள்- இராமக்கிரியை, வராளி, கைசிகம். அதிதேவதை - சூரியன்; மாளவி - புருடவிராகம், வைசியசாதி, இதின் மனைவிகள் நாராயணி, சுண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை - நாரதன்; பங்காளம் - புருடவிராகம், சூத்திரசாதி, இதன்மனைவிகள் தங்கியாசி, காம்போதி, கௌளரி, அதிதேவதை-விராகன்; நாட்டை- புருடவிராகம், சூத்திரசாதி இதன் மனைவிகள் தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம். அதிதேவதை - தும்புருவன். இவையன்றிப் பலவகைப் படவழங்கு மிராகம் பலவுள அவை கூறிற் பெருகும்.

இராகவர்த்தனி - மூப்பத்திரண்டாவது மேளகர்த்தா.

இராகவன் - இரகுவம்சத்திற் பிறந்தவன், இராமன்.

இராகவி - பெருமருஞ்சில், ஆனெருஞ்சி.

இராகவிண்ணூடகம் - கொன்றை, சரக்கொன்றை.

இராகவிராகம் - விருப்புவெறுப்பு, வேண்டுதல் வேண்டாமை.

இராகவேகம் - ஆசைமிகுகை.

இராகவேந்திரதீர்த்தர் - மத்வாச்சாரியர்களுள் ஒருவர்.

இராகாந்தநிலையர் - ஸ்ரீகண்டமூர்த்தி.

இராகி - குரக்கன், கேழ்வரகு, பற்ருசு, ராகி.

இராகு - கரும்பாம்பு, கோமேதகம், நவக்கிரகங்களுளொன்று, தமம், மதிப்பகை, மதியுணி, ராகு, ஒரு கோள்.

இராகுகாலம் - இராகுவின் காலம்.

இராகுக்கிராகம் - சந்திர கிரகணம்.

இராகுதசை - இராகுவின் அனுபவ பலாபலம், வருங்காலம்.

இராகுமண்டலம் - பூமியின் சாயை.

இராகூச்சிட்டம் - உள்ளி, வெண் காயவகை.

இராகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.

இராகை - குட்டம், பருவமுடையாள், பூரணை.

இராக்கசி - அரக்கி, கருங்கச்சோலம்.

இராக்கடைப்பெண்டிர் - வேசையர்.

இராக்கதம் - பெண்ணுஞ் சுற்றமும் உடன்படாது வலுவிற் கொள்ளுமணம், தலைமகளை வலிதிற்கொள்ளும் மணம், இரவு 15 முகூர்த்தத்துள் ஆறுவது.

இராக்கதர் - இராட்சதர், அரக்கர், இடும்பர், சாலகடங்கர், நிருதர், பிசிதாசனர், யாது, யாதானவர், வாளேர், மாற்றலர், இராகூஸர், ஊன்தின்பவரும் இரவில் சஞ்சரிப்பவரும் தேவர்க்குப் பகைவருமாகிய ஓர் ஜாதியார்.

இராக்கதன் - அரக்கன், இராகூதன், ராகூதன்.

இராக்கதி - அரக்கி, இராக்கிஷி.

இராக்கதிர் - சந்திரன்.

இராக்காச்சல் - இரவில் காயுஞ்சுரம்.

இராக்கிடைப்பெண்டிர் - இராக்கடைப்பெண்டிர்.

இராக்கினி - இராசாத்தி, இராணி, அரசி.

இராக்குருடு - மாலைக்கண்.

இராசகம் - இராக்கூட்டம்.

இராசகயம் - இராசயானை.

இராசகரம் - இறை, அரண்மனை.

இராசகலகம் - கொடுங்கோன்மை, படைக்குழப்பம்.

இராசகற்பனை - அரசஞானை.

இராசகனி - எலுமிச்சைக்கனி, எலுமிச்சை.

இராசகன்னி - அரசிளம்பெண்.

இராசகாரியம் - அரசியல், அரசர்க்குச் செய்யும் ஊழியம், மேலான காரியம்.

இராசகீயம் - அரசனுக்குரியது, இராசாங்க சம்பந்தமானது.

இராசகிரி-வெள்ளைக்கிரி, வெண்கிரி.

இராசகுஞ்சரம் - அரசுவா, அரசர் தலைவன், இராசகுமாரன், சோமகன்.

இராசகுஞ்சரன் - பராராஜகுஞ்சர பாண்டியன்.

இராசகுதிரை - அரசுபரி.

இராசகுலம் - அரசகுடும்பம்.

இராசகெம்பீரபாண்டியன் - இராசேச பாண்டியனுக்குப்பின் அரசு செய்த பாண்டியன்.

இராசகேசரி - சோழர்காலத்து அளவு கருவி.

இராசகோலம் - இராசவேஷம், அரசன் கொலுவிடை.

இராசகோழை - இராச பயம், ஒரு கபநோய், ஒரு காசநோய் வகை.

இராசக்கிருகம் - அரண்மனை.

இராசசங்கம் - இராசசபை.

இராசசதனம் - அரசன் வீடு.

இராசசபை - அரசவை, இராசசங்கம்.

இராசசமூகம் - அரசஸ்தானம்.

இராசசம் - இராசப் பிறப்பு, இராசதம், இராஜசம், ஆங்காரம், மூக்குணத்திலொன்று.

இராசசாரம் - மயில்.

இராசசார்த்தூலன் - இராஜசூடாமணிக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.

இராசசிங்கம் - அரசரேறு.

இராசசிருங்கம் - குடை.

இராசசின்னம் - அரசர்க்குள்ள முடி முதலிய வரிசை, இராசதத்துவம், அரசர் சின்னம்.

இராசசூடாமணி - இராஜமார்த்தாண்டனுக்குப் பின் அரசு செய்த பாண்டியன்.

இராசசூயம் - அரசர்கள் செய்யும் வேள்வி, தாமரை, மலை, வெற்றி வேந்தனுற் செய்யப்படும் ஓர் யாகம்.

இராசசேகரபாண்டியன் - கரிகாற் சோழன் காலத்துள்ள ஒரு பாண்டியன்.

இராசசேகரன் - அரசர் தலைவன்.

இராசசேர்வை இராசாக்களின் சேர்மானம்.

இராசசேவை - அரசர்க்குச் செய்யும் பணி, அரசனைக்காணல்.

இராசஸ்ரீ - கீர்த்திபெற்ற, மதிப்பான, இராஜஸ்ரீ, இராயஸ்ரீ.

இராசதகுணவகை - தானம், தவம், தருமம், பேணல், ஞானம், கல்வி, நலன், கேள்வி.

இராசதண்டம் - செங்கோல், அரசனுல் விதிக்கப்பட்ட தண்டம், அரசன் சிட்சை.

இராசதண்டனை - இராசதண்டம்.

இராசதந்தம் - முன்வாய்ப்பல்.

இராசதந்திரம் - அரசியல், அரசியல் நூல்.

இராசதபுராணம் - பிரமனைத் துதிக்கும் புராணத் தொகுதி.

இராசதம் - ஒரு காலம், மூக்குணத்திலொன்று. அஃது ஊக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி என்னும் எழுகுணமுடையது, இரசோகுணம்.

இராசதரிசனம்-இராசாவைக் காணல்.

இராசதருமம் - அரசாதுதொழில், இராசநீதி, செங்கோன்மை, அரச அறநெறி.

இராசதாலம் - கழுகு, கழுகு.

இராசதானம் } தலைப் பட்டினம்,
இராசதானி } வேந்திருக்கை, தலைநகர், மாகாணம், புரம், புரி, நகரம், அரசன் வாழும் நகரம்.

இராசதிருஷ்டி - அரசன் கண்ணோட்டம்.

இராசதுரோகம் - இராசாக்களுக்குச் செய்யும் வஞ்சகம், அராசகம்.

இராசதுரோகி - அரசர்களுக்கு வஞ்சகஞ் செய்யப்பட்டவன்.

இராசதெரு - இராசமனைத்தெரு, பெருந்தெரு.

இராசதேவிமனை - அந்தப்புரம், கந்தவாரம்.

இராசத்திரவியம் - அரசர் செல்வம்.

இராசத்துவம் - அரசியல்பு, இராசதத் துவம், இராசாங்கம், அரசன் தன்மை.

இராசத்துவாரம் - அரண்மனை வாசல், ஆஸ்தானம்.

இராசநாகம் - நாகப்பாம்பிலேர் சாதி.

இராசநிட்டூரம் - கொடுங்கோன்மை.

இராசநீதி - இராச தருமம்.

இராசநோக்கம் - அரசன் மனப் போக்கு, அரசன் கருணை.

இராசநோக்காடு - பிரசவ வேதனை.

இராசநோக்கு - இராசகிருபை, இராச பார்வை.

இராசபக்தி - இராச விசுவாசம்.

இராசபஞ்சகம்-அரசாட்சியினிடைஞ் சல், இராசபயம், பஞ்சகவகை.

இராசபட்டம் - இராசாதிகாரம், முடி சூட்டு.

இராசபட்டினம் - இராசநகரம்.

இராசபதவி - அரசனிலை.

இராசபத்திரம் - இராசகட்டளை.

இராசபத்தினி - இராசன் தேவி, இராணி, இராஜஸ்திரீ.

இராசபம் - கழுதை.

இராசபயங்கரன் - பராராச குஞ்சரனுக் குப்பின் அரசு செய்த பாண்டியன்.

இராசபரி - பரியரசு.

இராசபலை - முதியார் கூந்தல்.

இராசபாட்டை, இராசபாதை } இராச மார்க்கம், போக்கு வரவுக் குரியபெருவழி.

இராசபாவம் - அரசத்தன்மை.

இராசபிரதிநிதி - பிரதிகாவலன்.

இராசபினவை - முதுகிலுண்டாகும் சிலந்தி, பெரிய விஷப்புண்.

இராசபுத்திரன் - கோமகன், அரசன் மகன், க்ஷத்திரியன்.

இராசபுரி - இராசநகர், வெல்லம்.

இராசபுள் - எண்காற்புள், சரபம்.

இராசபோகம் - அரசனனுபவத்துக் குரிய சுகம்.

இராசப்பக்கவிராயர் - திருக்குற்றாலக் குறவஞ்சி எழுதியவர்.

இராசமகிஷி - அரசன் மனைவி.

இராசமடைப்பள்ளி - அரசர்க்குச் சமையல் செய்தோர் வழிவந்த ஒரு சாதியார்.

இராசமண்டலம் - இராசசங்கம், அரசர் சங்கம், அரசர் கூட்டம்.

இராசமந்தசர்ப்பம் - ஒருவகை நாகம். அது மந்த நடையும், தலை உடல் வயிறு முதலிய இடங்களில் மினு மினுப்பும், சித்திரவன்னத்தை யொத்த புள்ளிகளையும் பெற்றிருப் பது.

இராசமனை - அரமனை, குலம், கோயில், சாலை, நகரம், பவனம், மந்திரம், மாலை, மாளிகை.

இராசமன்னர்கோவில் - காவிரியின் தெற்கேயுள்ள ஒரு வைஷ்ணவ ஸ்தலம்.

இராசமாநகரி - இராசபட்டினம்.

இராசமாநாகம், இராசமாமந்தம் } கருவழலை, ஒரு வகைப்பாம்பு.

இராசமாபுரம் - ஜீவகன் இராஜதானி. இது எமாங்கத தேசத்திலுள்ளது, சீவகன் தலைநகர்.

இராசமார்க்கம் - இராசபாட்டை, 40 முழ அகலமுள்ள வீதி, இராசா செல்லும் தெரு.

இராசமார்த்தாண்டன் - சித்திர விக் கிரம பாண்டியனுக்குப் பின் அரசு செய்த பாண்டியன்.

இராசமாளிகை - அரசர் அரண்மனை, இராசநகரம்.

இராசமானியம்-அரசரால் விடப்பட்ட இறையிலி நிலம், இராசமான்யம்.

இராசமான்னியம் - இராசபொறுப் பாய் நடப்பது.

இராசமுடி - அரசர் கிரீடம், சாயக் கொண்டை.

இராசமுத்திரை - அரசரிலச்சினை.

இராசமோடி - இராசகம்பீரம்.

இராசயானை - எழுமுழ முயர்வும் ஒன்பதுமுழ நீளமும் பதின்மூன்று முழச் சுற்றுமுடைய யானை.

இராசயுகம் - பாலை.

இராசயோகம் - ஒருத்தம யோகம், யோக விசேஷம், அரசரது சுகானுபவநிலை, யோகபேதம்.

இராசராகேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனுளொன்று.

இராசராசதேவன் - சோழவரசர் சிலர் பெயர்.

இராசராசபாண்டியன் - பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய திருவிளையாடல் கண்ட பாண்டியன்.

இராசராசன் - இராசாதிராஜன், குபேரன், சக்கரவர்த்தி, துரியோதனன், இராசராசதேவன்.

இராசராசேசுவரம - தஞ்சைப் பெருங்கோயில்.

இராசராசேசுவரி - துர்க்கை, பார்வதி.

இராசராசேச்சரம் - தஞ்சாவூர் பெரிய கோயில்.

இராசராசேச்சுவரி - ராஜராஜேசுவரி.

இராசரிகம் - இராசதத்துவம், அரசாட்சி.

இராசரிஷி - கூத்திரிய முனிவன், இராசர்.

இராசர் [54] அங்கன், அருணன், அவந்திநாடன், ஆந்திரன், இலாடன், யவனன், ஒட்டியன், கருசன், கலிங்கன், கன்னடன், கருநாடன், காசன், காசிமீரன், காந்தாரன், காம்போசன், கிராடன், குருகுதேசன், குடகராசன், குந்தளன், குருநாடன், குலிந்தன், கூர்ச்சரன், கேகயன், கேரளன், கொங்கணன், கொல்லன், கோசலன், சகதேசராசன், சவ்வீரன், சாலுவன், சிங்களன், சிந்துநாடன், சீனராஜன், சூரசேனன், சோழராஜன், சோனகநாடன், திராவிடன், துளுவன், தெங்கணன், நிடதன், நேபாளன், பாஞ்சாலன, பப்பரன், பல்லவன், பாண்டியன், புலிந்தன், போடநாடன், மகதன், மச்சராசன், மராடன், மலையாளன், மாளவன், யுகந்தரன், வங்கன், வங்காளன், விதர்ப்பன்.

இராசலட்சணம் - அரசர்க்குரிய உடற்குறி, அரசர் சின்னம்.

இராசலட்சுமி - அட்ட லட்சுமியில் ஒன்று.

இராசலேகம் - திருமுகம்.

இராசவசித்துவம்
இராசவசியம்
இராசவசீகரம்
} இராசாவைத் தன் வசமாக்குதல்.

இராசவட்டம் - பொதுவான சந்ததி, இராச்சிய சமாசாரம், இராசதோரணை.

இராசவதி - அரண்மனை, சிங்காசனம்.

இராசவமிசம் - அரசர் குலம்,

இராசவரிசை - இராசசிறப்பு.

இராசவர்க்கம் - இராசசந்ததி, வெண்மையுங் கருப்புங் கலந்த நிறம், இராசவமிசம், அரசகுலத்தார்.

இராசவல்லபன் - அரசனிடத்துச் செல்வாக்குள்ளவன்.

இராசவள்ளி-ஒரு கொடி,வள்ளிவகை

இராசவாகனம் - சிவிகை, கோவேறு கழுதை, அரசனூர்தி, காஞ்சிகை, மணிக்காற்பள்ளி.

இராசவாகியம் - அரசனேறும் பட்டத்தியானை.

இராசவாயில் - இராசவாசல்.

இராசவாய்க்கால் - தலைமையான நீர்க்கால்.

இராசவிட்டேரம் - கொடுங்கோல்.

இராசவிரணம் - இராசபிளவை.

இராசவிராசன் - இராசாதிராசன், குபேரன், துரியோதனன்.

இராசவிருட்சம் - கொன்றைமரம்.

இராசவீதி - இராசதெரு, அரசர் பவனிவருவதற்குரிய வீதி, பெருந்தெரு.

இராசவைத்தியம் - பத்தியமில்லாத வைத்தியம்.

இராசனியகம் - அரசர்களினது கூட்டம்.

இராசனியன் - பட்டத்தரசன்.
இராசனை - வெள்ளைப்பூண்டு.
இராசன் - அரசன், இந்திரன், சந்திரன், தலைவன்.

இராசா - இராசன், அரசன், ஒருதெலுங்கச்சாதி, அண்ணல், அதிபதி, அதிபன், அயன்மேல், வந்தோன், ஆண்டகை, இறை, இறைவன், இனன், எந்தல், ஒங்கல், காரணன், காவலன், குரிசில், கோ, கொற்றவன், கோமான், கோன், சக்கிரி, தராபதி, தலைவன், தோன்றல், நரபதி, நிருபன், பதி, பார்த்திவன், புரவலன், பூபதி, பூபாலன், பெருந்தகை, பெருமகன், பெருமான், பொருநன், மாண்டலீகன், மன், மன்னவன், மன்னன், மீளி, முதல்வன், வாகுசன், வேந்தன். இவற்றுண் மற்றொருவரைப் பணியாதுலகாள்வோர் பெயர்:- சக்கரவர்த்தி, சார்வபௌமன், மண்டலேசுவரன். குறுநில மன்னர் பெயர்:- அரட்டர், குறும்பர், புரோசர், வேளிர். சாளுவர்பெயர் - சளுக்கு வேந்தர், வேல்புலவராசர்.

இராசாக்கினை - இராசகட்டளை, இராச தண்டனை, அரசஞ்ஞை, அரச தண்டனை, இராசதண்டம், அரசன் கட்டளை.

இராசாங்கம் - அட்ட வைசுவரியத்தொன்று, இராச சின்னம், இராசத்துவம், இராசவாளுகை, அரசுக்குரிய அங்கங்கள், அரசாட்சி, அரசுரிமை.

இராசாசனம் - சிங்காசனம்.
இராசாணி - இராணி.
இராசாததம் - பழமுன்னிப்பாலை, மூளாஞ்செடி.
இராசாதிகாரம் - இராசதத்துவம், அரசனுக்குரிய அதிகாரம்.
இராசாதிபதி
இராசாதிபன் } இராசராசன்.

இராசாதிராசபாண்டியன் - வரகுண பாண்டியனுக்குப் பின் அரசு செய்த பாண்டியன்.
இராசாதிராசன் - திறைவாங்குமரசன், அரசர்க்கரசன், சக்கரவர்த்தி.
இராசாத்தி - அரசன்மனைவி, அரசி, இராணி, இராஜஸ்திரீ.
இராசா மந்திரி - ஒருவிளையாட்டு.
இராசாவர்த்தம் - இரத்தினம்.
இராசாளி - ஒரு பறவை, வல்லூறு, பைரி, கள்ளச் சாதியாருள் ஒரு பட்டப் பெயர், ராசாளி.
இராசான்னம் - மூக்குங்காலுஞ் சிவந்து வெண்ணிறமாயிருக்குமன்னம், உத்தமசாதி யன்னம், ஒருவகை உயர்ந்த நெல்.

இராசி - இணக்கம், ஒழுங்கு, ஒரை, குவிதல், கூட்டம், மத்தியானம், மேடை முதலிய வீடு வரிசை, குவியல், இனம், மொத்தம், அதிட்டம், சுபாவம், பொருத்தம், இராசிக்கணக்கு, சமாதானம், ராசி, ராஜி. [12] மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். இவற்றுண் முன்ஞறும் உத்தராயணராசி, பின்ஞறு தக்கிணையன ராசி. அன்றியு முதன் மூன்றுங் கடை மூன்று மேறுமிராசி, இடையாறுமிறங்குமிராசி.
இராசிகட்டுதல் - தானியவிளைவுமுன் மதிப்பளவுக்கு வருதல்.
இராசிகம் - அட்சரகணிதம், அமிசம், அரசனுல் வருவது, ஒரிராசி, குவியல், நரம்புவரி.
இராசிகர்ச்சு - புன்செய் அறுவடைச் சுதந்தரம்.
இராசிகளின் பெயர் - மேடம், இடபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.
இராசிகளின்பொது - இல், ஒரை, பவனம்.

இராசிகாணுதல் } கண்டுமுதற்
இராசிகாண்தல் } கணக்குக்கட்டுதல், இராசிகட்டு.

இராசிகாரோகம் - ஒருவகை நோய். அது வெயிலாதி யிறுக்கத்தால் வருகின்ற வியர்வையைக்கொண்டு சரீர நிறம்போலவே சிறுத்தும் பருத்தும் அணுக்களே யொத்தும் வட்டவடிவாய் நெருங்கிய வியர்க் குருவை யுண்டாக்குவது.

இராசிகூடுதல் - இராசிகாண்.

இராசிகை - வயல், வரி.

இராசிக்கணக்கு - கூட்டுவியாபாரத்தில் தனித்தனிக் கூட்டாளிக்கு லாப நஷ்டம் கணக்கிடும் முறை களுள் ஒன்று.

இராசிக்காரன் - இராசிமண்டலம், அதிட்டமுள்ளவன், அதிர்ஷ்டசாலி

இராசிசக்கரம் - இராசிமண்டலம், இராசிகளே எழுதியடைத்த சக்கரம்.

இராசித்தலைவர் - பொருத்தம், மணப்பொருத்தம் பத்திலொன்று.

இராசிநாதன் - அவ்வவ்விராசியினின்று ஆளுகை செய்யும் கிரகம்.

இராசிநாமா - உடன்படிக்கைப்பத்திரம், உத்தியோகத்தினின்று விலகிக்கொள்வதற்கு எழுதும் பத்திரம்.

இராசிபண்ணுதல் - சமாதானஞ் செய்தல்.

இராசிபாகம் - பின்னம்.

இராசிபுடம் - இராசிகளிற் கிரக நிற்கு நிலை.

இராசிப்படுதல்-மனம் பொருந்துதல்.

இராசிப்பணம் - தனித்தனி எண்ணுமல் மொத்த அளவில் எண்ணும் பணம்.

இராசிப்பிரிவு - கிரகங்கள் இராசி கடக்கை.

இராசிப்பொருத்தம் - இராசியிணக்கம், மணப்பொருத்தம் பத்திலொன்று, இராசிப்பலன்.

இராசிமண்டலம் - இராசிவட்டை, ஒரை, கிரகங்கள் செல்லும் வீதி, இராசிவட்டம், இராசிசக்கரம்.

இராசியடி - பொலியடி தானியம், அளந்த பின் கிடக்கும் களநெல்.

இராசியத்தானம் - குறி, கெற்பக்கிரகம், மறைவு, மறைவிடம்.

இராசியம் - அந்தப்புறம், சா, தாமரைப் பூ, பெண்குறி, மறைவு, இரகசியம், மறைபொருள்.

இராசியளத்தல் - குவித்த தானியத்தை யளத்தல்.

இராசிலம் - இருதலைப்பாம்பு, சாரைப் பாம்பு, நீர்ப்பாம்பு.

இராசிவக்கிரம் - இராசிப்பிரிவில் ஒன்று.

இராசிவசியம் - இராசிகளினது வசியம். அதுமேடத்திற்குச் சிங்கமும் விருச்சிகமும், இடபத்திற்குக் கடகமுந் துலாமும், மிதுனத்திற்குக் கன்னியும், கடகத்திற்கு விருச்சிகமுந்தனுசும், சிங்கத்திற்கு மகரமும், கன்னிக்கு இடபமும் மீனமும், துலாத்திற்கு மகரமும், விருச்சிகத்திற்குக் கடகமுங் கன்னியும், தனுசிற்கு மீனமும், மகரத்திற்குக் கும்பமும், கும்பத்திற்கு மீனமும், மீனத்திற்கு மகரமுமாம்.

இராசிவட்டம் - இராசிச்சக்கரம், இராசிமண்டலம்.

இராசீகதெய்வீகம் - அரசராலுந் தெய்வத்தாலும் வருவது.

இராசீகம் - அரசனால் வருவது.

இராசீகரம் - அரசாட்சிக்குரியது, அரசாளுகை.

இராசீலம் - இராசிலம்.

இராசீவம் - தாமரைப்பூ, தாமரை.

இராசுனை - சிற்றரத்தை.

இராசேசபாண்டியன் - இராசேந்திர பாண்டியனுக்குப்பின் அரசுசெய்த பாண்டியன்.

இராசேந்திரதேவன் - சோழவரசர் சிலர் பெயர்.

இராசேந்திரபாண்டியன் - இரசவாதஞ் செய்த திருவிளையாடல் கண்ட பாண்டியன்.

இராசோத்துங்கன் - சிறந்த அரசன்.

இராசோபசாரம் - அரசனுக்குரிய உபசாரம்.

இராச்சியக்காரர் - இராச்சியம் பண்ணுவோர்.

இராச்சியபரிபாலனம் - இராச்சியப் பாதுகாப்பு, அரசாட்சி.

இராச்சியபாரம் - இராச்சியப் பொறுப்பு, அரசாளும் பொறுப்பு, இராச்சிய பரிபாலனம், அரசுரிமைப் பொறுப்பு.

இராச்சியம் - அரசுசெல்லுமிடம், ஆளுகை உலகு, நாடு, அரசாளுந் தேசம், ராச்சியம்.

இராச்சியலக்ஷ்மி - அரசுச் செல்வம்.

இராச்சியவதி - இராச்சியக்காரி.

இராச்சொல்லாதது - ஊசி, வசம்பு.

இராச்சொல்லாதவன் - அம்பட்டன்.

இராடம் - ஒரு தேயம், கழுதை, பெருங்காயம், வெங்காயம், வெண்காயம், இலாடம்.

இராட்சகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இராட்சச - ஒருவருஷம்.

இராட்சசம் - இராக்கதம்.

இராட்சசன் - இராக்கதன், அரக்கன்.

இராட்சத - நாற்பத்தொன்பதாவது வருடம்.

இராட்சதன் - இராக்கதன்.

இராட்சயன் - இராட்சசன்.

இர்ாஷ்டிரம் - இராஜதானியைச் சேர்ந்தவூர்.

இராஷ்டிரிகை - அரிசி, சிறுவழுதுணை.

இராஷ்டிரியன் - அரசன் மைத்துனன்.

இராட்டினத்தொட்டி - இராட்டினம் போலச் சுழல் தொட்டி.

இராட்டினம் - ராட்டினம், நூல் நூற்குங் கருவி, நூற்கும் யந்திரம், நீரிறைக்கும் கருவி, பஞ்சரைக்குங் கருவி, ஏறி விளையாடும் சுழல்தேர், மாளிகைகளிற் கட்டப்படும் ஒருவிசைச் சுழற்றேர்.

இராட்டினவாழை - ஒருதண்டில் நடுவிட்டு மேலுங்கீழுஞ் சீப்பிடும் வாழை, வாழைவகை.

இராட்டினவூசல் } இராட்டினம்
இராட்டினவூஞ்சல் } போற் சுற்றுமூஞ்சல், சுழலும் ஊசல்.

இராட்டு - இராசா, ராட்டு, இராட்டினம், தேன்கூடு, அரசன், இருள்.

இராணம் - இலை, மயிற்றோகை.

இராணி - இராஜஸ்திரீ, அரசி, ராணி, இராயணி.

இராணிவாசம் - அந்தப்புரம்.

இராணுக்கள் - போர்வீரர்.

இராணுவமோடி - அணிவகுப்பு.

இராணுவம் - படை, யுத்தமுகம், சேனை, ராணு, இராணு.

இராதங்கம் - கால், கோரம்.

இராதம் - கடைக்கொள்ளி, வைகாசி மாதம்.

இராதா - எண்ணம்.

இராதாங்கம் - கலப்பை, மழைத்துளி.

இராதாந்தரேசுவரம் - இராதிதரேசுவரம், சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

இராதை - கிருஷ்ணன் மனைவி, மின்னல், லிசாகம், மின்.

இராதைகாந்தன் - கிருட்டினன்.

இராத்தல் - 40 ரூபா எடை, ஒர்யூத எடை.

இராத்திரகம் - பஞ்சராத்திரம்.

இராத்திரம் - இரவு.

இராத்திரி - இரவு, மஞ்சள், அல், அல்கல், அல்லி, இரசனி, இரா, எல்லி, ஏமம், கங்குல், திகாந்தகம், திதி, நத்தம், நிசா, நிசி, மாலை, யாமம், யாமினி, விபாவரி, ராத்திரி.

இராத்திரிகாசம் - வெண்டாமரை, வெள்ளாம்பல்.

இராத்திரிசரன் - அரக்கன், கள்வன், சேகண்டிக்காரன், பைசாசம்.

இராத்திரிவேதம் - கோழி.
இராதேசுவரம் - சிவத்தலங்களாயி ரத்தெட்டனு ளொன்று.
இராந்து - இடுப்பு, தொடைச்சந்து, ராந்து.
இராந்துண்டு - இலந்தை.
இராபம் - விருத்தத்திற் பிடிக்குமூங் கில்.
இராப்பத்து - அத்தியயனோற்சவத் தின் பிற்பகுதி.
இராப்பாடி - புதரவண்ணன்.
இராப்பாடிக்குருவி - பாடுங்குருவி வகை, குருவி வகை.
இராப்பாலை - மரவகை.
இராப்பிச்சை - சந்திபிட்சை.
இராப்பூ - ஆம்பல் முதலியன.
இராப்போசனம் - இராச்சாப்பாடு, நற்கருணை, கிறிஸ்தவ சபையின் ஸம்ஸ்காரங்களில் ஒன்று.
இராமகவி - ஓரிராகம், அது மத்தியா னத்தில் பாடுவது.
இராமகன் - இராமக்கன்.
இராமகுரு - வசிஷ்டர்.
இராமக்கம்-ஒரு வைசூரி,இராமக்கன்.
இராமக்கன் - சிச்சிலுப்பை வகை.
இராமக்கிரி - குறிஞ்சிப் பண் வகை.
இராமக்கிரியம் } ஓரிராகம்.
இராமக்கிரியை }
இராமக்கோவை - கற்கோவை.
இராமசகன் - சுக்கிரீவன்.
இராமசந்திரன் - இராமபிரான், தச ரதராமன்.
இராமசித்தா - மரவகை.
இராமசுவாமி ஐயர் - வேதவேதாந்தக் கணித சாஸ்திரங்களில் வல்லவர். யாழ்ப்பாணத்திலே வட்டுக் கோட் டையிற் பிறந்தவர்.
இராமசேது - இராமர் அணை.
இராமச்சந்திர தீர்த்தர் - மத்வாச் சாரியர்களு ளொருவர்.
இராமச்சந்திரன் - இராமன்.
இராமடங்கா - ஒருவகைப் பொன் ணையம்.
இராமடம் } பெருங்காயம்.
இராமடை }
இராமதாபனி - நூற்றெட் டுபங்கிட தங்களுள் ஒன்று.
இராமதுளசி - துளசிவகை.
இராமதூதன் - அனுமான், அநுமான்.
இராமதேசுவரம் - சிவத்தலங்களாயி ரத் தெட்டனு ளொன்று.
இராமநவமி - சித்திரையில் சுக்கில பட்சத்தே வரும் நவமி திதி.
இராமநாடகம் - கீர்த்தனைகளாக அமைந்த இராமாயண நூல்.
இராமநாதர் - இராமேச்சுரத்திற் கோ யில் கொண்டிருக்குஞ் சுவாமி. இவ்விலிங்கம் இராமசுவாமியால் தாபிக்கப்பட்டது.
இராமநாதன் - இராமலிங்கம்.
இராமபத்திரன் - தசரத ராமன்.
இராமபத்திரி - ஒரு மருந்து.
இராமபத்தினி - சீதை.
இராமபாணம் - இராமரம்பு, ஒரு புழு, ஒரு மருந்து, பாச்சைவகை, மல்லி கை வகை.
இராமபுத்திரர் - குசலவர்.
இராமப்பிரியா - ஓர் இராகம்.
இராமப்பிரியை - ஐம்பத்திரண்டா வது மேளகர்த்தா.
இராமமரம் - அணிநுணு.
இராம முழியன் - கடல்மீன் வகை.
இராமம் - அழகு, ஆசை, விரும்பத் தக்கது, நன்மை.
இராமரகசியம் - நூற்றெட் டுபங்கிட தங்களுள் ஒன்று.
இராமரசம் - ஒருபான மருந்து.
இராமராச்சியம் - நல்லரசாட்சி.
இராமர் - சிவராமன், தசரதவிரா மன், பலராமன், பரசுராமன்.
இராமலிங்கம் - இராமேச்சரத்துச் சிவபிரான், ஆறுபடி கொண்ட மரக்கால்.
இராமலிங்கம்பிள்ளை - திருவருட்பா இயற்றிய ஒரு சிவபக்தர்.
இராமவாசகம் - தவறுத வாக்கு.

இராமன் - ராமன், சந்திரன், தசரத மகாராசருடைய புத்திரன், வருணன், பரசுராமன், தசரதராமன், பலராமன்.

இராமன் குமாரர் - இலவன், குசன்.

இராமன்சம்பா - சம்பா வகை.

இராமன் பூசித்தவிடம் - சித்தாச்சிரமம், இராமேச்சுரம், கதிர்காமம், திருமாற்பேறு, வாரணவதம்.

இராமன்றேவி - சீதை.

இராமாநுசர் - வைஷ்ணவ சமயாசாரியரிலொருவர்.

இராமாநுசன் - இலக்குவன், விட்டுணு சமயாசாரியரிலொருவர், இலக்குமணன்.

இராமாயணம் - இதிகாசத் தொன்று, இராமசரிதை.

இராமாயண வகை - கம்பராமாயணம், வான்மீகி இராமாயணம், பால இராமாயணம், அத்தியாத்ம இராமாயணம், மூல்ல இராமாயணம், பட்ட இராமாயணம், சம்புவ இராமாயணம்.

இராமாலை - கருகுமாலை.

இராமாவதாரம் - தசரத ராமனுக அவதரித்த திருமால் பிறப்பு, கம்ப ராமாயணம்.

இராமாறு - இராத்தொறும்.

இராமானம் - இராமநாழிகை.

இராமானுசகூடம் - வைஷ்ணவப் பிராயாணிகள் தங்குஞ் சாவடி.

இராமானுசம் - வைஷ்ணவர் உபயோகிக்கும் ஒரு வகைச் செப்புப் பாத்திரம்.

இராமானுசர் - விசிஷ்டாத்துவைத ஸ்தாபனு சாரியர்.

இராமானுசீயர் - ஸ்ரீ வைஷ்ணவர்.

இராமிலன் - கணவன், காமன்.

இராமேசம் - இராமேச்சுரம், இராமேசுவரம்.

இராமேசுவரம் - இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலுள்ள ஒரு சிவஸ்தலத் தீவு, இராமேச்சுரம்.

இராமேச்சுரம் - ஒரு சிவதலம், இராமேசுவரம். [ரன்.

இராயசக்காரன் - எழுத்து வேலைக்கார

இராயசம் - எழுத்துக்காரியம், சம்பிரதித்தொழில், எழுத்துவேலை, எழுத்து வேலைக்காரன்.

இராயசன் - சம்பிரதி.

இராயணி } இராசாத்தி, இராச
இராயனி } ஸ்திரீ.

இராயர் - இது மார்த்தவப் பிராமணர்களுக்குட் பட்டமாக வழங்கி வருகிறது. விஜயநகரவரசர் பட்டப்பெயர், மகாராஷ்டிர மாத்தவப் பிராமணர் பட்டப்பெயர்.

இராயன் - ராயன், அரசன், ரோமைச் சக்கரவர்த்தி.

இராயிரம் - இரண்டாயிரம்.

இராய் - ராய், கல்.

இராவடம் - அசோகு, அராவுத்தொழில், இராவடவேலை, இராவுந்தொழில், அராவுந்தொழில்.

இராவடி - ஏலம், பேரேலம்.

இராவணச் சன்னியாசி - மோச வேஷக்காரன்.

இராவணம் - அழுதல், ஆரவாரித்தல், விளக்கு, அழுகை.

இராவணன் - இலங்கை வேந்தன், கடவுள், தசக்கிரீவன்.

இராவணன்புல் - கடற்கரையிலுள்ள ஒருவகைக் கூரியல்பு.

இராவணன்மீசை - ஒரு புல், இராவணன்புல்.

இராவணுகாரம் - பயங்கர வடிவம்.

இராவணுசுரம - வீணைவகை.

இராவணுஸ்தம் } ஒரு வீணை.
இராவணுத்தம் }

இராவணரி - இராமன்.

இராவணி - இந்திரசித்து, இராவணன்மகன்.

இராவணீயம் - இராகங்களைச் சாமவேதத்திற் பொருத்திப் பாடும் முறையைஅறிவிக்கும்நூல், இராவணியம்.

இராவணேசுவரம் - சிவத்தலங்க ளா யிரத்தெட்டனு ளொன்று.
இராவதம் - சூரியன்குதிரை, மேக லோகம்.
இராவதி - ஒருகொடி, ஒருநதி, யம புரம்.
இராவல் - அராவுதல், இராவுதல்.
இராவிரேகு - தலையணிகளு ளொன் று, அரைமூடி, அரசிலைச்சுட்டி.
இராவிரேக்கு - அரசிலைச் சு ட் டி , அரைமூடி, குழந்தைகள் நெற்றி மயிரில் தொங்குகிற அணியு ளொன்று, இராவிரேகு.
இராவு - அராவு.
இராவுகை - இராவுதல்.
இராவுதல் - அராவுதல், அராவு.
இராவுத்தம் - குதிரைச்சேவகம்.
இராவுத்தன் - குதிரைச்சேவகன், கு திரைப்பாகன், குதிரை வீரன், தமிழ் முகம்மதியரில் ஒரு பிரிவி னரின் பட்டப் பெயர், ராவுத்தன்.
இராவுத்தாங்கம் - திருவிழாக் காலங் களில் மனிதர்களாவது, ஸ்திரீக ளாவது வேஷம்போட்டுக்கொண் டு குதிரைச்சவாரி செய்கிற ஒரு வேடிக்கை, ஒருவகைக் கொண் டாட்டம்.
இராவைக்கு - இரவுக்கு.
இராவோன் - சந்திரன்.
இராவ் - மாத்தவ பிராமணர், ஜயி னர், சேர்வைக்காரர்.
இரி - கெடு, தோல், விடி, அஞ்சு, தோற்றோடச்செய், அழி, வெரு ட்டு.
இரிகம் - இரத்தாசயம், இருதயம், நியாயப் பிரமாணம், மனம், வழ க்கு.
இரிகு - சத்துரு.
இரிக்கி - பெருங்கொடி வகை.
இரிங்கணம் - ஒருபுள், தவறிவிழுதல்.
இரிசல் - இரிதல், புலனேவேறொன் றிற் செலுத்தல், மனமுறிதல், பிளவு, மனமுறிவு.
இரிசால் - இருசால்.
இரிசியா - பூனைக்காலி.
இரிஷபம் - இரிடபம், ரிஷபம், இட பம், காளை, இடபராசி.
இரிஷி - ரிஷி, இருடி, இருஷி.
இரிஷ்டம் - பேரகத்தி.
இரிஞர் - அச்சமுள்ளோர், பகைவர்.
இரிஞன் - பகைவன்.
இரிஞ்சி - மகிழ்.
இரிணம் - உழமண்பூமி, பாழடைந் தது, உவர்நிலம்.
இரிதல் - அஞ்சுதல், ஓடல், கெடு தல், சாய்தல், தோற்றோடல், ஒடு தல், விலகுதல், வடிதல்.
இரித்தகம் - பாழடைந்த வீடு.
இரித்தம் - தனம், பணம்.
இரித்தல் - அச்சுறுத்தல், அழித்தல், ஓட்டுதல், கெடுத்தல், முறியடித் தல், தோற்றோடச் செய்தல், பயப் படுத்தல், சாய்த்தல்.
இரித்தை - சதுர்த்தி, நவமி, சதுர்த் தசி யென்னுந் திதிகள், நாழிகை.
இரிபு - அச்சம், ஓடுதல், சத்துரு, தோல்வி, பகை, வெறுப்பு, இரி யல்.
இரிபேரம் - வெட்டிவேர்.
இரிப்பு - அச்சுறுத்தல், முறியடிக் கை.
இரிமான் - எலிவகை.
இரியல் - இரிதல், கெடுதல், நல்லா டை, பறத்தல், அச்சத்தால் நிலை கெடுகை, விரைந்துசெல்கை, அழு கை, விரைவு.
இரியல்போக்குதல் - சாய்த்துக்கொ டுத்தல்.
இரியல்போதல் - தோற்றோடுதல்.
இரீஇ - இருத்தி, இருந்து.
இரீடை - அவமானம்.
இரீட்டம் - குறுகல்.
இரீணம் - பெருகின தண்ணீர்.
இரீதி - ஒழுங்கு, பித்தளை, இரும்புக் கரை, எல்லை, கிட்டம், தேசவழக் கம், முறைமை, நீதி.

இரீதிகவுளம் - ஒரிராகம்.
இரீதிப்புஷ்பம் - குசுமாஞ்சனம், ஈயச் செந்தூரம்.
இரு - பெரிய அதிதியின் நாமாந்தரம், இரண்டு, பெரிய, கரிய, இரட்டிப்பான, இருநிலம், உண்டாயிரு, சீவி, மீந்திரு, தரி, தங்கு, உட்காரு, உத்தேசி.
இருகண் - ஊனக்கண், ஞானக்கண்கள்.
இருகந்தம் - இருமணம்.
இருகரையன் - இரண்டு உத்தேச முள்ளவன்.
இருகன் - விஜயன் புத்திரன், விருகன் தந்தை.
இருகால் - அரை, இரண்டுதாள், இரண்டுமுறை.
இருகாழி - இரண்டு கொட்டையுள்ள காய்.
இருகுரங்கின்கை - முசுமுசுக்கை.
இருகுறணேரிசைவெண்பா - நேரிசை வெண்பாவி லொன்று.
இருகை - இருபக்கம்.
இருகோட்டறுவை - முன்னும் பின்னும் தொங்கலாக நாலவிட்ட துகில்.
இருக்கல் - இருத்தல்.
இருக்கன் - பிரமன், இருக்குவேத முணர்ந்தவன்.
இருக்கால் - இரண்டுமுறை, கவற்றிற்றுயத்து லொன்று, இரண்டு தரம்.
இருக்காழி - இரண்டு கொட்டையுள்ளது.
இருக்கு - உபநிடத முப்பத்திரண்டி லொன்று, மந்திரம், முதல்வேதம், வேதம், வேதமந்திரம், இருக்குவேதம்.
இருக்குகை - இருத்தல்.
இருக்குதல் - இருத்தல்.
இருக்குமணி - கண்ணன்தேவி.
இருக்குமாங்கதன் - சூர்யவம்சத்தரசன்.
இருக்குவேதம் - முதல்வேதம்.
இருக்குவேள் - ஒருசார் சிற்றரசர்.
இருக்கை - ஆசனம், இருத்தல், ஊர்ப்பொது, குடியிருப்பு, வீடு, உட்கார்ந்திருக்கை, இருப்பிடம், கோள்களிருக்குமிராசி, ஊர், கோயில், அரசர்போர்புரியக் காலங் கருதியிருக்கும் இருப்பு, வசிக்குமிடம்.
இருக்கையுதவல் - ஆசனமளிக்கை.
இருங்கடல் - பெரிய சமுத்திரம்.
இருங்கரம் - பதக்கு.
இருங்கீர்த்தி - பெரும்புகழ்.
இருங்குணம் - பெருமையான குணம்.
இருங்கோவேள் - வேளிர்தலைவருள் ஒருவன்.
இருசகம் - மாதுளை.
இருசங்கன் - பேருசங்கன்.
இருசட் - பன்னிரண்டு.
இருசமயவிளக்கம் - ஒருநூல்.
இருசால் - தண்டற்பணம் செலுத்துகை, கஜாலுவுக்கு அனுப்பும்பணம்.
இருசால் நாமா - தண்டற் பணத்துக்கு விவரங் கூறும்பட்டி.
இருசி-இருதுவாகுந் தன்மையில்லாப் பெண், ஒரு பெண் பசாசு, ஒரு பெண் பிசாசு, இருடி.
இருசிகன் - ஊர்வன் மகன், விசுவாமித்திரன் றங்கை, சத்தியவதி கணவன், ஜமதக்கினி தந்தை.
இருசியசிம்மகுஷ்டம் - ஒருவகைக் குஷ்டரோகம். அது முட்களைப் போல் மெல்லியதாய் நீண்டு பிசுபிசுத்துச் சுரசுரத்து உள்ளிற் கறுத்து நுனியிற் சிவந்து நெருக்கமாகக் கொப்பளங்க ளெழும்பும். அவைகளிற் புழுக்களு நோவும் எரிச்சலும் உண்டாகும்.
இருசியம - ஒருவகை மிருகம்.
இருசீரகம் - சீரகம், கருஞ்சீரகம்.
இருசு - உரித்து, செவ்வை, பண்டியுளிரும்பு, மூங்கில், நேர்மை, வண்டியச்சு, அச்சு.

இருசுடர் - ஆதித்தன், சந்திரன், சந்திரசூரியர்.

இருசுடர்த்தோற்றம் - பெருங்காப்பிய வுறுப்புளொன்று.

இருசுபகந்தரவிரணம் - ஒருவகை விரணநோய். அது வாதபித்தத்திலுற் பிறந்து குதவளையத்தை யொட்டி யொழுங்கான துவாரங்களை யுண்டாக்கிச் சீழை யொழுகுவிக்கும்.

இருசுவரோமா - சுவர்ணரோமா மகன்.

இருசுழி - இரட்டைச் சுழி.

இருஞ்சிறை - காவல், நரகம், மதில்.

இருஷபத்துவசன் - சிவபெருமான்.

இருஷபம் - இடபம், காதிற்றுளை.

இருஷி - இருடி, பிரபை, வேதம், ரிஷி, மூனிவன்.

இருடி - ஆந்தை, இருதுடையாதிருப்பவள், முனிவன்.

இருடிகருமன் - தூரியோதனன் றம்பியருள் ஒருவன்.

இருஷீகேசன் } திருமால், விஷ்ணு.
இருடிகேசன் }

இருடிபத்தினி } முனிவன் மனைவி.
இருடிபன்னி }

இருஷியஞ்ஞம் - வேதாப்பியாசம்.

இருஷியமூகம் - கிட்கிந்தை.

இருடியர் - விட்டுணு, விருத்தன், விசாலாக்கன், வச்சுகுண்டினன், சாபலன், ஆருணி, முயல், சமதக்கினி, சடரன், சங்கமன், சயன், பக்கன், மகாக் கிரீபன், மகாகாயன், பாசதரன், மகோதரன், கருணன், பாரகன், மகாமாருகாலன், உத்தாலகன், அகத்தியன், வஜிட்டன், காசிபன், மார்க்கண்டேயன், பிருகு, அங்கிரா, கௌதமன், கவுசிகன், தக்கன், மூற்கலன், கௌச்சிகன், மகாசேனன், காணன், ஆமலகப்பியன், ஆரார்த்திதரன், திரிபாதன், உக்கிரவீரன், ஏகபாதன், துவிபாதன், பதுமநாபன், இரணியாக்கன், கிலீபன், உலோபன், கல்லாரன், வளாதரன், காலாக்கினி, சுவேதவாகு, உருத்திரபதி, சூலன், சுவேதாச்சுவதரன், சித்தன், அதற்பன், காலமாலி, பங்கன், அருணன், நேயகன், சகன், பவுலன், சீலன், பாண்டகன், பிசிங்கி, பருப்பதன், சிலாதன், காவலன், கலாதரன், சாபாலன், ஆர்த்திதன், சிவசங்கற்பத்தன், மாபத்தன், இலம்பகன்னன், மாண்டன், மோசகன், மசகாண்டன், சபாவன்னன், சங்கு, சத்திதன், அரிவிசுவன், வசு, அக்கினி, வன்னன், சாபலி, சோமன், காலரூபன், நிருதி, தேவலன், பரந்தமன், சத்தியன், நிராதிதன், சரன், சுகன், சனி, சுதீக்கணன், தூமமன், சமதக்கினி, அரிதகன், பராசரன், சூதன், பரத்துவாசன், மாண்டவ்வியன், வியாசன், பிரன், புதன், சதாநந்தன், கண்ணுவன், உபயாசன், யாசன், மத்தியந்தினன், உபமன்னியன், பதஞ்சலி, வியாக்கிரபாதன், சிகண்டி, காண்டிப்பியன், சத்தி, அத்திரி, விபாண்டகன், சுண்டலன், சௌனகன், கைவல்லியன், பண்டிதோத்தமன், சரபங்கன், வாரன், கருணன், நாரதன், துருவன், அசிதன், அங்கிவேந்திரன், கபிலன், இருசிய சிருங்கி, மித்திரா வருணன், கார்த்தியாயன், புலத்தியன், உசத்தியன், சுச்சகன், மிருகண்டேயன், மிருகண்டேயன், வாமதேவன், சிகண்டி முதலாயினோராம்.

இருட்சதே - அந்தகாரம்.

இருட்சம் - மானவதேசத் தருகேயுள்ள ஒருமலை.

இருட்சரன் - இராக்கதன்.

இருட்சன் - அசமீடன் மூன்றாமகன். இவன் பௌத்திரன் குரு. புருஜய

ன்மகன், பரிமியாசுவன் தந்தை, தேவாதிதிமகன்.

இருட்சி - இருள், மயக்கம், இருட்டு.

இருட்டல் - இருளாதல், இருட்டுதல்.

இருட்டு - அறியாமை, இருள், மயக்கம், இருளு.

இருட்டுதல் - இருளடைதல், மந்தாரமிடுதல், இருளாதல், இருளச்செய்தல்.

இருட்பகை - சூரியன்.

இருட்பகைவன் - சூரியன்.

இருட்படலம் - இருட்டொகுதி.

இருட்பிழம்பு - இருட்படலம், இருளின் திரள்.

இருட்பூ - மரவகை.

இருணபாதகம் - கடன்தீர்க்காமல் மோசஞ்செய்தல்.

இருணபாதகன்-கடன் தீர்க்காதவன்.

இருணம் - உப்பளம், உவர்த்தரை, கடன், கழிக்கப்படுமெண், உவர் நிலம், ருணம்.

இருணாள் - கிருஷ்ண பட்சத்துநாள்.

இருணிலம் - நரகம்.

இருண்டி - சிறுசண்பகம், சண்பகம்.

இருண்மதி - கிருஷ்ண பட்சத்துச் சந்திரன், அமாவாசை.

இருண்மலம் - ஆணவமலம்.

இருண்மை - இருளுடைமை, இருண்டிருக்குந்தன்மை.

இருதராமன் - வசுதேவன் தம்பி, ஆனகன்மகன், தேவேந்திரர் பதினொன்று பேர்களுளொருவன்.

இருத்துவஜன் - பிரதத்தன்.

இருதம் - நீர், மெய், உஞ்சவிருத்தி.

இருதயகமலம் - உள்ளம்.

இருதயகோசம் - இரத்தாசயகோசம்.

இருதயத்துடிப்பு - மார்பு படபடவென்று அடித்துக் கொள்கை.

இருதயம் - இரத்தாசயம், உயிர்நிலை, உள்ளம், கருத்துரை, மனம், நேசத்துக் குறைவிடமான ஸ்தானம், கருத்து, நடு, ஹ்ருதயம்.

இருதலை - இருமனை.

இருதலைக்கபடம் - விலாங்குமீன்.

இருதலைக்கொள்ளி - இருதலையுந் தீப் பற்றிய கொள்ளி, எப்பக்கத்துந் துன்பஞ் செய்வது.

இருதலைஞாங்கர் - குமரன்வேல்.

இருதலைநோய் - எழுஞாயிறு.

இருதலைப்பட்சி - ஒரு பறவை.

இருதலைப்பாம்பு-மண்ணுணிப்பாம்பு.

இருதலைப்புடையன் - பாம்புவகை.

இருதலைப்புள் - இரண்டுதலைகளுள்ள பறவை.

இருதலைப்பூச்சி - ஒருபூச்சி.

இருதலைமணியம் - நண்பன்போல் நடித்து இருவருட் கலகம் விளைக்குந் தொழில்.

இருதலைமணியன் - இருதலைப்பாம்பு, குறளை சொல்வோன்.

இருதலைமாணிக்கம் - ஒருமந்திரம், முத்திபஞ்சாட்சரம்.

இருதலைவிரியன் - பாம்புவகை.

இருதவாக்கு-இவன் தனக்கு ரேவதி கூஷ்திரத்து நாலாம் பாதத்திற் பிறந்த புத்திரன் துஷ்டனாகிய நிமித்தம் ரேவதியைப் பூமியில் விழுமாறு சபித்தான்.

இருதன் - விஜயன் மகன்.

இருதாரைக்கத்தி - இரண்டுபக்கம் கூர்மையுள்ள கத்தி.

இருதி - இரண்டெழுத்தாலாகிய அசை.

இருதிணை - அஃறிணை, உயர்திணை.

இருதிராசம் - வேனில்.

இருது - இரண்டுமாத பருவம், ஒரு மாதம், கடவுளின் முத்தொழில், பிரபை, மகளிர்சூதகம், மகளிர் முதற்பூப்பு, ருது, மகளிர் பூப்பு, பக்குவம், தக்க காலம்.

இருதுகாலம் - கருப்பந்தரிக்கத்தகு நாள்; அது பூப்படைந்து பதினாறு நாள்மட்டும், மாதவிடாய்க்காலம், கருத்தரிக்குங் காலம்.

இருதுக்காட்சி - அகப்பொருட்டுறையிலொன்று.

இருதுசங்கமனம் - இருதுகாலத்தில் முதல்முதலாக நாயகன் நாயகியை கூடுதற்கு செய்யுங்கிரியை.

இருதுசந்தி - பருவச்சங்கிரமம், இரண்டு பருவங்கள் சந்திக்குங்காலம்.

இருதுசாந்தி - ஒருசடங்கு, சோபன கலியாணம், சாந்திக்கலியாணம்.

இருதுதுகர்வு - பருவங்கட் குரிய அனுபவம்.

இருதுபர்ணன் - அயோத்தியாபுரி யரசன். இவன் அய்தாயுவன் மகனும் சர்வகாமன் தந்தையுமாவன். இவ்வரசன் நளனைத் தனக்குத் தேர்ப்பாகனுக்கி அக்ஷஹிருதயத்தை யுபதேசித்து அவனிடத்திருந்து தான் அசுவஹிருதயத்தைப் பெற்றான்.

இருதுப்பெருக்கி - சூதகம் வெளியேற்றும் மருந்து.

இருதுமதி - பிரௌடையான பெண், ஸ்திரீ, கருத்தரித்தற்கு உரிய நிலையிலிருப்பவள்.

இருதுவலி - இருதுகால குன்மம்.

இருதுவாதல் - பூத்தல், பிரௌடையாதல்.

இருதுவிருத்தி - வருடம்.

இருதுஸ்நானம் - முதற்பூப்பில் நடத்தும் சீராட்டச்சடங்கு.

இருதொண்டு - பதினெட்டு.

இருதௌத்தி - சத்தியவசனம்.

இருதௌற்றம் - சரமசரம்.

இருத்தருதம் - ஒருவகைநோய். அது நாபியில் மலத்தை அடக்கி அடக்கி விடுதலால் அபானவாயுவு குதத்தை நன்று யனுசரித்து அத்துவாரவாளியத்தின் அடியையும் நுனியையுஞ் சுருங்கச் செய்வதாற் பிறந்து மல விசர்ச்சனத்திற்கு உபத்திரவத்தையுண்டாக்குவது. அதனால் ஆசனத்தில் வெடிப்புண்டாகிப் பச்சைப் புண்போல் நோகும்.

இருத்தம் - பிரகாரம்.

இருத்தல் - இருத்துதல், சீவித்தல், தங்கல், தாழ்தல், உளதாதல், நிலை பெறுதல், உட்காருதல், உள்ளிறங்குதல், ஆயத்தமாயிருத்தல், உத்தேசித்தல், ஓர் துணைவினை, முல்லையுரிப்பொருள், ஆசனத்தமர்தல்.

இருத்தாகசன்னிபாதசுரம் - ஒரு வகைச்சுரநோய். அது அவயவங்களில் மிகுந்த வேதனை, உடம்பெரிவு, காங்கை, கழுத்துக்குள் நோவொடு தினவு, பிரமை, சோர்வு, பிரலாப வார்த்தை, தாகம், அதிகபேதி அல்லது சொற்பப்பேதி என்னும் இக்குணங்களையுண்டாக்கும்.

இருத்தி - இருத்தலைச் செய்தென்னெச்சம், இருப்பாயென்னுமுற்று, இருவென்னேவல், சித்தி, மேன்மை, வளர்ச்சி.

இருத்திப்பேசுதல் - அழுத்திச்சொல்லுதல்.

இருத்திப்போடுதல் - நிலைக்கச்செய்தல், அசையாமற் செய்தல்.

இருத்திவைக்க - இருத்திக்கொள்ள.

இருத்தினர் - வேள்வியில் குருவுக்கு ஒத்தாசை செய்பவர்.

இருத்தினன் - இருத்துவிக்கு.

இருத்து - அஸ்தக்கிரியை, வயிரக்குற்றங்களுள் ஒன்று, இருத்துவிக்கு, நிறுத்து, உட்காரச்செய், அழுத்து, கீழிறங்கு, இருத்திக்கொள்.

இருத்துதல் - அழுத்தல், உட்காரச் செய்யல், தாமதிக்கச் செய்யல், நிலை பெறச்செய்யல், உட்காரச் செய்தல், தாமதிக்கச் செய்தல், அழுத்துதல், அடித்து உட்செலுத்துதல், நிலைபெறச்செய்தல், கீழிறங்குதல்.

இருத்துவிக்கு - யாகபுரோகிதன்.

இருத்தை - இருபத்துநாலு நிமிஷங் கொண்ட ஒருநாழிகை, சந்திரனென்காம் பக்கம், ஒன்பதாம் பக்கம், பதினென்காம் பக்கம், சேங்கொட்கூட, நாழிகை வட்டில்,

இரித்தை, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி.

இருநா - உடும்பு, பாம்பு,

இருநிதிக்கிழவன் - குபேரன்.

இருநிலம் - பூமி.

இருநினை - இருமனம்.

இருநினைவு - இரண்டுபட்டமனம்.

இருந்ததிருக்கோலம் - திருமாலின் வீற்றிருக்கும் இருப்பு.

இருந்தேதகுடியாக - எல்லாருமாக.

இருந்தகம்பி - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய திருக்குறுங்குடியிற் கோயில்கொண்ட விட்டுணு.

இருந்தமிழ் - சிறந்ததமிழ்.

இருந்தவளமுடையார் - கூடலழகர்.

இருந்தாற்போர் - திடீரென்று.

இருந்தில் - இருந்தை.

இருந்து - அசைச்சொல், கரி, இருந்தை.

இருந்தும் - ஆகவும்.

இருந்தேத்துவார் - மாகதர்.

இருந்தை - கரி, இருந்து.

இருந்தையூர் - மதுரையிலுள்ள விஷ்ணுஸ்தலம்.

இருந்தையூர்க்கருங்கோழி மோசியார் - இடைச்சங்கப் புலவருளொருவர்.

இருபஃது } இருபது } இரண்டுபத்து.

இருபவம் - தேவதைகள்.

இருபன் - பிரம்மாவின் மானச புத்திரருள் ஒருவன்.

இருபன்னியம் - சேங்கொட்டை.

இருபாவிருபஃது - பிரபந்தவகை, மெய்கண்ட சாத்திரத்தொன்று.

இருபாவிருபது - ஒரு பிரபந்தம், அஃதுபத்து வெண்பாவும் பத்தகவலும் அந்தாதித் தொடையால் இருபதினொன்று வருவது, இருபாவிருபஃது.

இருபான் - இருபது.

இருபிறப்பாளர் - உபநயனத்திற்கு முன்ன மொருபிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையு முடையவர், பார்ப்பார், பிராமணர்.

இருபிறப்பாளன் - துவிசன், பிராமணன்.

இருபிறப்பு - இருசனனம், சந்திரன், சிறகு, பல், பார்ப்பார், முட்டையிற் பிறப்பன, இரண்டு சன்மம்.

இருபிறவி - இருசாதி சேர்ந்து பிறக்கும் பிராணிவர்க்கம்.

இருபுடைமெய்க்காட்டு - ஒன்றே இரு வேறுவகையாகத் தோற்றுவது.

இருபுட்சன் - இந்திரன்.

இருபுரியாதல் - மாறுபாடாதல்,

இருபுலன் - மலசலங்கள்.

இருபுறவசை - இருமரபி னிகழ்வு கூறல், வசைபோன்ற வாழ்த்து.

இருபுறவாழ்த்து - இருமரபின் புகழ் கூறல், வாழ்த்துப்போன்ற வசை.

இருபுனல் - கீழ்நீர் மேல்நீர்கள்.

இருபூ - இருபீபாகம்.

இருபூலை - பூலா, வெள்ளைப்பூலாஞ்சி.

இருபெயரொட்டு - இருசொல்லொரு சொல்லாக நிற்பது.

உயிர்மெய் - ககரமுதல் னௌகாரமீ ருய்க்கிடந்த இருநூற்றுப் பதினெ றெழுத்தும்.

உயிர்வாங்கல் - உயிரெடுத்தல், கொல்லல்.

உயிர்வாதனை - உயிர்க்குறும்வேதனை, அஃது அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, மூனி வறுமை முதலியன.

உயிர்வாழ்க்கை - சீவனம்.

உயிர்வாழ்தல் - உயிரோடு கூடிவாழ்தல், சீவித்தல், உய்தல், உய்தி, சீவனம், பிழைத்தல், வாழ்தல்.

உயிர்விடுதல - ஒருவர்க்காக அல்லது நற்காரியத்துக்காக உயிரைத் தானே விடுதல், மிகப்பாடுபடுதல், சாதல்.

உயிர்வேதனை - சீவவருத்தம், உயிர்க்குத்தும்பம் வினவிப்பவை, அனல், சீதம், வாதம், அசனி, புனல், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, மூனிவறுமை என்பனவாம்.

உயில் - சாதனப்பத்திரிகை, மரண சாசனம்.

உயிறு - இலாமிச்சம்புல்.

உயுத்தம் - யுத்தம், போர்.

உயோகுதுயில் - யோகநித்திரை.

உய் - சீவி, உயிர்வாழ், ஈடேறு, தப்பு, தழை, செலுத்து, ஓட்டு, நடத்து, கொடு, அறிவி.

உய்கதியால் } உண்டாகுந்தடி, கிளை
உய்தடி } க்கும் வேலைக் கொம்பு.

உய்கை - ஈடேறுகை, துன்பம்நீங்குகை, உய்தல்.

உய்க்கை - உய்த்தல்.

உய்தக்கோர் - பிழைக்கத்தக்கோர்.

உய்தல் - ஈடேறுதல், உண்டுபடுதல், தப்புதல், தாழ்தல், பிழைத்தல், சீவித்தல், நீங்குதல், ஆற்றுதல், வலிதல், உயிர்வாழ்தல்.

உய்தி - ஈடேற்றம், உயிர்வாழ்தல், பரிகாரம், நீங்குகை, உயிர்வாழ்வை யென்னுமுற்று.

உய்த்தரல் - செலுத்துதல்.

உய்த்தலில்பொருண்மை - ஓரலங்காரம். அஃது கருதிய பொருள் மொழிக் கண்ணே தோன்றத் தொடுப்பது.

உய்த்தல் - செலுத்தல், சேர்த்தல், வைத்தல், அநுபவித்தல், செலுத்துதல், வாகனமூர்தல், காரியத்தை முடித்தல், உய்யச்செய்தல், நீக்குதல், ஆயுதம் பிரயோகித்தல், அனுப்புதல், நடத்துதல், கொண்டுபோதல், அனுபவித்தல், கொடுத்தல், அறிவித்தல், ஆணை செலுத்துதல், அடைவித்தல், குறிப்பித்தல், நடத்தல், அமிழ்த்தல்.

உய்த்துணரல் - ஆராய்ந்தறிதல்.

உய்த்துணரவைப்பு - முப்பத்திரண்டு தந்திரயுத்தியிலொன்று. அது ஆராய்ந்தறியவைக்கை, ஓர் உத்தி.

உய்த்துணர்தல் - ஆராய்ந்தறிதல், நுட்பமாய்த் தெரிதல்.

உய்த்துணர்வு - ஆராய்ந்துணரும் அறிவு, ஞானம்.

உய்ப்பு - உய்க்கை, உய்த்தல்.

உய்மணல் - கருமணல்.

உய்யக்கொண்டான் - எருமை முல்லை, கொய்யாமரம், திருக்கற்குடி, உஜ்ஜீவிக்கச் செய்தவன்.

உய்யல் - உய்தல், செல்லல், எறுதல்.

உய்யவந்ததேவநாயனார் - திருவியலூரிலவதாரஞ்செய்து சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுளொன்றாகிய திருவுந்தியார் என்னும் நூலியற்றினவர், திருக்கடவூரில் அவதாரஞ்செய்து சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியார் செய்தருளியவர்.

உய்யவந்தபெருமாள் - நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய விருத்துவக் கோட்டியிற் கோயில் கொண்ட விட்டுணு.

உய்யானம் } சிங்காரவனம், சோலை, பூந்தோட்டம், உத்தியானம்.
உய்யானனம் }
உய்வனவு - ஈடேற்றம், சீவனம், தழைவு, வாழ்வு, மேழிப்பு.
உய்விடம் - பிழைக்குமிடம்.
உய்வித்தல் - ஈடேற்றுதல், பிழைப்பித்தல், வாழ்வித்தல்.
உய்விப்பு - ஈடேற்றம், பிழைப்பிப்பு, வாழ்விப்பு.
உய்வு - ஈடேற்றம், பிழைப்பு, உயிர்த்தப்புகை, உய்தி, உய்தல்.
உர - பெல.
உரககன்னி - நாககன்னி.
உரககேதனன் - அரவக்கொடியோனுகிய துரியோதனன்.
உரககேது - உரககேதனன்.
உரகடல் - பெருங்கடல், கொந்தளிக்குங்கடல்.
உரகதம் - சர்ப்பம்.
உரகபந்தம் } நாகபந்தம், மிறைக்கவி.
உரகபந்தனம் }
உரகமல்லி - நாகமல்லி.
உரகம் - நாகமல்லிகை, பாம்புமல்லிகை, பாம்பு, உரங்கமம், உரங்கம், உரகதம்.
உரகர் - சமணர், நாகர்.
உரகவல்லி - வெற்றிலைக்கொடி.
உரகன் - ஆதிசேடன், பாம்பு.
உரகாசனன் - கருடன், விட்டுணு.
உரகாதிபன் - ஆதிசேடன், உரகேந்திரன், ஆதிசேஷன்.
உரகாரி - கருடன், மயிற்பறவை.
உரகேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
உரகேந்திரன் - ஆதிசேடன், வாசுகி, உரகாந்திரன்.
உரக்க - கெட்டியாக, வலிதாக, குரலோங்க, உரத்து.
உரக்கம் - வசத்திலிருப்பு.
உரங்கமம் } பாம்பு.
உரங்கம் }
உரங்காட்டுதல் - அன்பு பாராட்டுதல்.
உரங்குத்தல் - புலப்பித்தல்.
உரங்குத்துதல் - மரத்தைச் சுற்றி மண் கெட்டித்தல்.
உரங்கொள்ளல் - கடினமுறல், பலங்கொள்ளல், வலியுண்டாக்கல்.
உரங்கொள்ளுதல் - கெட்டியாதல், பலமாதல், உரங்கொள்தல், உக்கிரமாதல், கடினமாதல்.
உரசல் - உரிஞ்சல், தேய்த்தல், உரசுதல்.
உரசன் - நெஞ்சுரப்புள்ளவன்.
உரசி - நெஞ்சம்.
உரசிதம் } மூலை.
உரசிருகம் }
உரசிலன் - நல்ல மார்புடையவன்.
உரசு - உரிஞ்சு, உரஞ்சு.
உரசுதல் - உரசல், உராய்தல், உருஞ்சுதல், தேய்த்தல்.
உரசுவானு - நல்ல மார்புடையவன்.
உரசூநிகை - முத்துத்தாவடம்.
உரச்சதம் - கவசம்.
உரஞ்சிவந்தான் - குதிரை வகை.
உரஞ்சுதல் - துடைத்தல், தேய்த்தல், உரசுதல்.
உரஞ்செய்தல் - உரங்குத்தல், திரப்படுத்தல், உறுதி கொள்ளுதல், வலியுறுதல், ஸ்திரப்படுத்தல்.
உரஞ்சொல்லுதல் - உரஞ்செய்தல், உறுதி கூறுதல்.
உரணம் - ஆட்டுக்கடா, முகில்.
உரணட்சம் } தகரை.
உரணட்சியம் }
உரண்டம் } காக்கை.
உரண்டை }
உரத்தல் - பலத்தல், வலியுறல், கெட்டியாதல், முருடாதல், எடுப்பாதல், கொந்தளித்தல், கடுமையாதல், மிகுதல்.
உரத்திதம் - விருத்தி.
உரத்திதன் - விருத்தியானவன்.
உரந்தை - தின்பம்.
உரபடி } உரப்பு, திடம்.
உரபிடி }

உரப்பம் - பெருங்காயம்.
உரப்பல் - அதட்டல், அடரொலி, திரட்டோசை, உரப்புதல்.
உரப்பித்தல் - பலப்பித்தல், பலமுறை செய்தல்.
உரப்பியடித்தல் - பேச்சால் வெல்லுதல்.
உரப்பிரம் - வெள்ளாடு.
உரப்பிரு - செம்மறியாடு.
உரப்பு - அதட்டுகை, உரப்பென்னை வல், திண்மை, பலப்பு, வலி, பேரொலி, முருகு, கடினம், மனத்திண்மை, அதட்டு, தூரத்து, உரத்தொலி, உரத்தல்.
உரப்புதல் - வாயால்தட்டல், அதட்டியொலித்தல், திரண்டொலித்தல், பயமுறுத்துதல், உரத்தூ ஒலிக்கச் செய்தல், உரத்தொலித்தல்.
உரப்புப்பிசின் - பர்மாவிலும் அந்தமான் தீவுகளிலும் 80 அடிக்கு மேல் வளரும் மரவகை.
உரமடித்தல்-எருக்கொணர்ந்திடுதல்.
உரமண் - சத்துள்ள நிலம், கெட்டியான மண்.
உரமிடல் - எருப்போடுதல்.
உரமுண்டாக்கல் - தைரியமுண்டாக்கல்.
உரமெடுத்தல்-குழந்தையின் உரத்தை நீக்குதல்.
உரம் - உள்ளமிகுதி, ஊக்கம், ஞானம், திண்ணியவறிவு, மதில், மார்பு, வயிரம், வலி, வேகம், திண்மை, வலிமை, திடம், வைரம், எரு, வியூகத்தின் முன்னணி, குழந்தை கட்கு விழுஞ் சூலுக்கு வகை, மனோவலி.
உரம்புகுதல் - விசையோடு புகுதல்.
உரம்போடு - எருப்போடு, உரப்பி.
உரம்போடுதல் - உரப்பித்தல், எருப்போடல், பலப்படுத்துதல்.
உரம்விழுதல் - பன்னிரண்டு மாதத்துக்குட்பட்ட கைக்குழந்தைகள் தரையில் புரளுவதினால் உண்டாகும் ஒரு பிடிப்பு நோய்.
உராகிருதம் - அங்கீகரிக்கப்பட்டது.
உரலடி - யானை.
உரலாணி - உரலடிக்கிடும் மரவாணி, உலக்கை.
உரலாமணக்கு - ஆமணக்கு வகை.
உரல் - இடியப்பவுரல், நெல் முதலிய குத்தும் உரல், உலூகலம், எருத்து, கறை, திட்டை.
உரவுக்காடு - மலையில் நிலையாகச்செய்யும் விவசாயம்.
உரவம் - வலிமை.
உரவாசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
உரவர் - அறிவுடையோர், சமணர், நாகர், வலியுடையோர்.
உரவல் - உலாவல்.
உரவன் - அருகன், அறிவுடையோன், பலமுடையோன், அறிஞன், வலியோன்.
உரவியன் - வலியோன்.
உரவு - அறிவு, வலி, வலிமை, மனோபலம், மிகுகை, விஷம், மிகுதி, வலியுறு, உலாவு.
உரவுதல் - வலியுறுதல், உலாவுதல், பலனுறுதல்.
உரவுநீர் - உலாவுநீர், உவர்நீர், பலத்த சமுத்திரம், கடல், யாறு.
உரவோர் - அறிஞர், மூத்தோர், வலியோர்.
உரவோன் - விளிவில்லாதோன், வலியவன், வலியோன், மூத்தோன், ஊக்கமுடையோன்.
உரறல் - பெருங்கோபம், கோபம் கொள்ளல், இடித்தல், முழங்குதல்.
உரறு - ஒலி, முழங்கு.
உரறுதல் - உரறல்.
உரற்கட்டை - உரலுக்கான மரத்துண்டு, மரவுரல்.
உரற்களம்-அறிஞர் கூடிப் பேசுமிடம்.
உரற்குழி - உரலிற் குற்றுங்குழி, குற்றுதற்குத் தரையில் அமைத்த குழி.

உரற்குற்றி - உரற்கட்டை.

உரற்பெட்டி - அரிசி சிந்தாதபடி வைக்கும் உரலின் வாய்க்கூடு.

உரற்றல் - ஒலித்தல், பேரொலி.

உரற்று - உரற்றென்னேவல், ஒலி, உரற்றல்.

உரற்றுதல் - உரற்றல், முழங்குதல்.

உரனர் - மனவலியுடையோர், உரனுடையோர், உரவோர்.

உரனுறுதல் - பலனடைதல்.

உரன் - அறிவு, உள்ளமிகுதி, ஊக்கம், பலம், மார்பு, வெற்றி, திண்மை, பற்றுக்கோடு, உரம், வலி.

உராட்சல் - உரிஞ்சுதல், உரைதல்.

உராதரம் - மூலை.

உராய் - உராயென்னேவல், தேய்த்தல், உடலுரிஞ்சு, உரிஞ்சு, உரை.

உராய்ஞ்சல் - உரைசல்.

உராய்ஞ்சு - உராய், உரை.

உராய்ஞ்சுதல் - உராய்.

உராய்தல் - உரிஞ்சல், உரோசல், உரைதல், உரோஞ்சல்.

உராய்போதல் - உரைதல்.

உரால் - ஓடுகை.

உராவல் - உலாவல்.

உராவுதல் - பரவுதல், பரத்தல், இடம் விட்டுப் பெயர்தல், செல்லுதல், வலியடைதல்.

உரி - அரைப்படி, உரிச்சொல், உரிய, உரியென்னேவல், கொத்துமல்லி, தோல், மரப்பட்டை, அரைநாழி, உரிமை, ஓர் அளவு, கூளை, கழற்று, கழல்.

உரிக்குட்டி - கடல்மீன்வகை.

உரிசூறை கொள்தல் } ஆடையை
உரிசூறைகொள்ளுதல் } அபகரித்தல்.

உரிசை - தீஞ்சுவை, உருசி, சுவை.

உரிச்சீர் - மூவகையான் வருஞ்சீர்கள். அவற்றுள், நேரசையாயிறுவது வெண்பாவுரிச்சீர், நிரையசையாயிறுவது வஞ்சியுரிச்சீர்.

உரிச்சொல் - பொருள்களின் பல வகைக் குணங்களை யுணர்த்துஞ் சொல், திரிசொல், உரிச்சொற் பனுவல், நிகண்டுநூல், இசையுரிச் சொல், குறிப்புரிச்சொல், குணப் பண்புரிச்சொல், தொழிற் பண் புரிச் சொல்.

உரிஞல் - உரிஞுதல், உரிஞ்சுதல்.

உரிஞு - உராய், தேய், அரை.

உரிஞுதல் } தேய்த்தல், வழுந்தல்,
உரிஞ்சல் } உராய்கை, பூசுதல்,
உரிஞ்சுதல் } உராய்தல், வியங் கோண்முற்று.

உரிஞ்சு - இழை, அரை, பூசு.

உரிதல் - கழலல், கழற்றல், மூளத்தல், அபகரித்தல், சீலையைக் களைதல்.

உரிது - உரிமையானது.

உரித்தகோழி - இறகு பிடுங்கிய கோழி.

உரித்தல் - உரிக்குதல், களைதல், வழுந்துதல்.

உரித்தாளி } இனமானவன்,
உரித்தானவன் } சுதந்திரன், சொத்துக்குரியவன், தக்கோன், நண்பன்.

உரித்திரம் - மஞ்சள், மரமஞ்சள், ஒருநகைத்திரம்.

உரித்து - உரிமை, உரியது, தகைமை, கடமை, பட்சம், பாங்கு, பால், உற்ற நட்பு, ஆட்சி, ஆண்வம், காணி, தகவு, தகுதி, தாயம், கெழு, ஆவணம்.

உரித்துலுக்கன் - ஒருவகைப் பழைய கொள்ளைக்கூட்டத்தான்.

உரித்துவைத்தல் - நேரொப்பாதல், வெளிப்படுத்தி வைத்தல்.

உரிப்பகாப்பதம் - பகுக்கப்படாதுரிச் சொல்லாய் நிற்பன.

உரிப்பொருட்டலைவன் - கிளவித் தலைவன்.

உரிப்பொருள் - அகத்திணை முப் பொருளிலொன்று. அது புணர்

தல், புணர்தனிமித்தம் ஊடல், ஊடனிமித்தம் இரங்கல்.

உரிமை - ஆட்சி, இஷ்டம், இனம், உரித்து, ஒவ்வொன்றிற்குத் தகுவது, கடமை, குணம், சிநேகம், சுதந்தரம், மனைவி, இயல்பு, உரித்தான்மை, உரித்தானது, பாத்தியதை, அடிமை, அடிமைத்தொழில், பிரியம், நட்புப்பற்றிய சுதந்தரம், சுவாதீனம், இதம், ஒற்றுமை, காணி, கிழமை, குறிக்கோள், கெழுதகைமை, தகவு, தகுதி, பாங்கு, பால், உரியதன்மை.

உரிமைகொண்டாடல் - உரிமை பாராட்டல்.

உரிமைகொண்டாடுதல் - பாத்தியதை கொண்டாடுதல்.

உரிமைக்கஞ்சி - சாகுந்தறுவாயில் வாக்குங் கஞ்சி, சாவீட்டிற் சுற்றத்தார்க்கு வார்க்குங் கஞ்சி.

உரிமைக்கடன் - சேர்ந்திருந்த உரித்துக்குச் செய்யுங் கடன், பிரேதத்திற்குரியவர்கள் செய்யுங் கடமை.

உரிமைக்கட்டு - இனக்கட்டுப்பாடு, விவாகத்துக்குரிய இனமுறைச் சமபந்தம்.

உரிமைக் கலியாணம் - இனத்திற் செய்யும் விவாகம்.

உரிமைக்காணி - உரிமை வழியிற் காணி, பாத்தியதையாற் கிடைத்த நிலம்.

உரிமைக்காரர்-உரியவர்கள், சுதந்திரர்

உரிமைக்காரன் - சொத்துக்குப் பாத்தியஸ்தன், பொறுப்பு வகித்தற்குரிய இனத்தான்.

உரிமைசெப்புதல் - மணம் பேசுதல்.

உரிமைசெய் - கடமை செய், கருமாதி செய்.

உரிமைசெய்யல் - கடமை செய்யல், கருமாதி செய்யல், அடிமைத் தொழில் செய்யல், சாச்சடங்கு நடத்துதல்.

உரிமைச்சுற்றம் - அடிமைத்திரள்.

உரிமைச்சொல் - உரித்துக்கொண்ட பேச்சு.

உரிமைச்சோறு - உரிமைக்கஞ்சி.

உரிமைத் தத்துவம் - உரித்தெடுக்கும் அதிகாரவுறுதி, பாத்தியம், இறந்தவருடைய சொத்தைக் காக்க நீதிபதியிடம் பெறும் அதிகாரம், சம்ரக்ஷணபாத்தியம்.

உரிமை பாராட்டுதல் - உரித்துக் கொண்டாடல், சம்பந்தங்கொண்டாடல், உரிமை கொண்டாடுதல், பாத்தியதை கொண்டாடல்.

உரிமைபேசல் - உரிமை காட்டிப் பேசல்.

உரிமைப்பங்கு - உரிமை வழியாய் வரும் பங்கு.

உரிமைப்பள்ளி - அந்தப்புரம்.

உரிமைப்பாடு - உரித்து, உரிய கடமை.

உரிமைப்பிள்ளை - உரித்துக் குடந்தைப் பிள்ளை, சுவீகார புத்திரன்.

உரிமைப்பெண்-விவாகத்துக் குரிமையான பெண், உரிமைபற்றி விவாகஞ் செய்யப்படும் பெண்.

உரிமைமண் - சவக்குழியிலுரிமைக்காரர் போடுமண், சவக்குழியில் இனத்தார் போடும் மண்.

உரிமைமாணகர் - அந்தப்புரம்.

உரிமையாட்சி - உரிமையால் வந்த ஆட்சி, சொத்தின் சுதந்தாமனுபவிக்கை.

உரிமையாளி - சொந்தக்காரன்.

உரிமையிடம் - வீட்டில் மனைவி வசிக்கும் பாகம்.

உரிமையில் - உரிமைமாணகர்.

உரிமையின்மை-சொந்தமற்றது, அநிகம்.

உரிமையெடுத்தல் - பாத்தியதை பெறுதல்.

உரிமைவழி - உரித்துக் காரணமாய் வருவது, சம்பந்த முறை, பரம்பரைச் சுதந்திரம்.

உரிமைவிடுதல் - சுவாதீனம் அளித்தல், பாத்தியதையை விட்டுவிடுதல்.

உரியடி - உரிச்சீரான் வருமடி, ஒரு வெண்வகத் திருவிழா.

உரியது - உடையது, சுதந்தரமானது, தக்கது.

உரிய பொருள் - உரிய அர்த்தம், சுதந்திரமான திரவியம்.

உரியர் - உரியோர், உரியார், உடையவர்கள், சுதந்திரர், சம்பந்தமுடையார், அறிஞர்.

உரியவள் - உரித்தானவள், மனைவி.

உரியவன் - இனத்தான், உரித்தானவன், கணவன், சக்கவன், உரியன், தாயத்தான்.

உரியள் - மனைவி.

உரியன் - உரியவன், உரிமையுள்ளவன், அதிகாரி, உறவினன், கணவன்.

உரியார் - அறிஞர், சாயத்தார், உரியோர், உடையோர்.

உரியாழாக்கு - அரையே அரைக்கால் படி.

உரியாள் - உரியவள், மனைவி.

உரியோர் - கிழவர், உரவர், அறிஞர், உடையவர்கள், உறவோர், சுதந்திரர், சம்பந்தமுடையார்.

உரியோள் - உரியவள்.

உரியோன் - கணவன், சுதந்தரி, உரியன், ஆப்தன், உரியவன், புருடன்.

உரிவை - தோல், உரிக்கை, மரவுரி, வினைமுற்று.

உரீகாரம் - வாக்குத்தத்தம், அங்கீகாரம்.

உரீகிருதம் - அங்கீகரிக்கப்பட்டது.

உரு - வடிவழகு, விலையுயர்ந்த, விக்கிரகம், வியாதி, அதிகமான, பெரிய, நீண்ட, உருவமுள்ளது, உளியிற் செய்த சித்திரவேலை, பல முறை செய்யும் அனுசந்தானம், இசைப்பாட்டு, தோணி, தாலி முதலியவற்றிற் கோக்கும் உரு, கப்பல், உருப்படி, அச்சம், மான், மிகுதி, உருவு, உருபு, உரூபம், உருவம், கோபி, அழலு, முதிரு, ஒத்திரு, தோன்று, முளை, சுர, அட்டை, அழகு, உடல், உருத்தலேச் செய்யேன்னேவல், உள், எலுமிச்சை, கரு, கலை, கோபம், சன்னதம், செபத்தினுரு, தோற்றம், நிறம், நோய், பதுமை, பருமை, மரக்கலம், வடிவு, விலையுயர்ந்தது, வெப்பம், வேற்றுக்குறி முதலிய வெண்வகையிடைச் சொற்குறி, வைக்கோற்புரி.

உருகம் - பிறப்பு.

உருகல் - இரங்குதல், கரைதல், நீராழமாதல், மனங்கரைதல், உருகுதல்.

உருகாயேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உருகு - கரை, இரங்கு, மனங்கரை, இளை, மெலி.

உருகுதல் - உருகல், வெப்பத்தால் இளகுதல், மனநெகிழ்தல், மெலிதல், இரங்குதல், கரைதல், மனங்கரைதல்.

உருகுபதம்-இளகுதற்குரிய பக்குவம்.

உருகை - புல்லூரி, அறுகம்புல்.

உருக்கங்காட்டுதல் - அன்புகாட்டுதல்.

உருக்கம் - அன்பு, இரக்கம், உருகுந்தன்மை, மனநெகிழ்ச்சி, உருகுகை, தொடை.

உருக்கல் - உருக்குதல், கோயில் கட்டியவருடைய உரு.

உருக்கண்டித்தல் / உருக்கன் } ஒரு நோய், சடைவு, மேனியை வாட்டும்நோய்.

உருக்காங்கட்டி - உருக்காங்கல்.

உருக்காங்கல் - உருகிப்போன செங்கல்.

உருக்காட்டுதல் - உரு வெளியாகத் தோன்றுதல்.

உருக்காரம் - வெண்காரம்.

உருக்கிச்சாய்த்தல் - உலோகங்களை நீண்டகட்டியாக உருக்குதல்.
உருக்கினம் - அஞ்சன பாஷாணம்.
உருக்கு - உருக்கென்னேவல், எஃகு, எருக்கு, உருக்கினபொருள், தீயிற் கரை, வாட்டு, வருத்து, எகு, அழி.
உருக்குக்காரம் - உருக்குச் சரக்கு, வெங்காரம்.
உருக்குதல் - உருகச்செய்தல், கெடுத்தல், தீயிற்கரைத்தல், வருத்தல், வாட்டல், இளகிவிழச் செய்தல், நெகிழ்த்துதல், மெலியச் செய்தல், அழித்தல்.
உருக்குத்தட்டார் - பொற்கொல்லர்.
உருக்குத்துதல் - உருவம் அமைய வார்ப்படம் வார்த்தல், அம்மை குத்துதல்.
உருக்குப்பிரமியம் - இரத்தப் பிரமியம், சலக்கழிச்சல், நீரிழிவு.
உருக்குமகாரன் - தட்டான்.
உருக்குமணல் - அயமண், அயமணல்.
உருக்குமணி - ஒரு காதணி, கிருட்டினன்றேவி, உருக்குமினி, ருக்மிணி.
உருக்குமண் - உருக்குமணல்.
உருக்குமம் - பொன், ருக்மம்.
உருக்குமிணி - கண்ணபிரான் தேவி மைத்தேவி.
உருக்குருக்கு - கர்ப்பூர வகை.
உருக்குலைதல் - வடிவங் கெடல், வடிவம் கெடுதல், மூன்னுருவம் அழிதல், மேனி மெலிதல்.
உருக்குவேளை - மெதுகாணி, மெருகாணி.
உருக்கொடுத்தல் - ஏவிவிடுதல், கொடுமைசெய்யத் துணிதல், புத்தி சொல்லுதல்.
உருக்கொள்ளல் - ஆவேசங்கொள்ளல், கருக்கொள்ளல், வடிவமெடுத்தல், உருக்கொள்ளுதல்.
உருக்கொள்ளுதல் - உறுப்படைதல், சன்னதங்கொள்ளுதல், உருக்கொள்தல், வடிவெடுத்தல், கருவிலுருவாதல், ஒழுங்கானவளர்ச்சியடைதல், ஆவேசங்கொள்ளுதல்.
உருங்குதல் - உண்ணுதல்.
உருசகம் - ஒருவித உப்பு, ஆமணக்கு, கொம்மட்டி, புண்ணுக்கு வைக்கும் காரம், மாதுளை.
உருசதி - அசுபவார்த்தை.
உருசம் - மனோகரமானது.
உருசி } இன்பம், சுவை, மதுரம்,
உருசிகரம் } இன்சுவை, இனிமை, விருப்பம், இனிமையானது, இனிப்புள்ளவை, சந்தவின்பம், மிகுசுவை, அனுபவி, சுவைபார், ருசி, உருசை, சுவைதோன்று, ருசிபார்.
உருசிகாட்டல் - ஆசை, பதங்காட்டல், இனிப்புக்காட்டல்.
உருசிகாட்டு - இனிப்புக்காட்டு, ஆசைபதங்காட்டு.
உருசிகாட்டுதல்-இனிப்புக் காட்டுதல்.
உருசிகாணல் - உருசி அறிதல்.
உருசிகாண்ணுதல் } சுவையறிதல்.
உருசிகாண்தல் }
உருசிதட்டுதல் - உருசிப்படுத்தல், சுவைதோன்றல்.
உருசிதம் - விரும்பப்பட்டது.
உருசித்தல் - அனுபவித்தல், சுவைத்தல், சுவைப்படுதல்.
உருசிபார்த்தல் - சுவைத்தறிதல்.
உருசியசிம்மக்குட்டம் - ஒரு வகைக் குஷ்டநோய். அது கொப்புளங்கள் முட்களைப்போல் மெல்லியதாய் நீண்டும், பிசுபிசுத்தும், சுரசுரத்தும், உள்ளிற்கறுத்தும், மூணையிற் சிவந்தும் நெருக்கமாக வெழும்பி இரணங்களாவது. அவைகளில் புழுக்கள் நெளிதலும், நோதலும், எரிச்சலுமுண்டாகும். சிலவேளை நோவு மாத்திரமிருந்தாலு மிருக்கும்.
உருசியம்-கடமையென்னுமோர் மிருகம்.
உருசிரம் - மனோகரமானது.
உருசிரவன் - சத்தியசுவன் மகன்.

உருசு - அத்தாட்சி, திருவ்ட்டாந்தம், ருஜு, ருசு, ரூபகாரம்.

உருசுபகந்தவிரணம் - ஒருவகை விரணநோய். அது வாதபித்தத்திஞற் பிறந்து குதவளையங்களை யொட்டி ஒழுங்கான துவாரங்களை யுண்டாக்கிச் சீழை யொழுகுவிப்பது.

உருசுப்படுத்த - உருசுப்பிக்க, உருசுவாக்க, மெய்ப்பிக்க.

உருசுப்படுத்தல் } மெய்ப்பித்தல்.
உருசுவாக்கல் }

உருசுப்படுத்து - மெய்ப்பி.

உருசை - ஆசை, இன்சுவை, விருப்பம், உருசி.

உருச்செபித்தல்-மந்திரத்தைத் திரும்பத்திரும்பக் கணக்கிட்டு அனுசந்தித்தல்.

உருஷங்கி - துரியோதனன்தம்பியருள் ஒருவன்.

உருடி - முனி.

உருடை - வண்டி, பண்டி.

உருட்சி - உருளுதல், உருளுகை, திரட்சி, உருண்டை.

உருட்டல் - உருகச்செய்தல், கவணெறிதல், திரட்டல், புரட்டல், மத்தளம் விரைவாயடித்தல், வெல்லல், உருளச்செய்தல், வெல்லுதல்.

உருட்டா - இடம்பவார்த்தை, உருட்டால், டம்பப்பேச்சு.

உருட்டால் - உருட்டா.

உருட்டித்தைத்தல் - தூணியைச் சுருட்டித் தைத்தல்.

உருட்டிப்பார்த்தல் - கோபமாய்ப் பார்த்தல், கோபக்குறி தோன்றச் சுழல விழித்துப் பார்த்தல்.

உருட்டிப்போடல் - அழித்துப் போடல், புரட்டிவிடல்.

உருட்டிப்போடுதல் - பேச்சால் மருட்டி வெல்லுதல், அழித்துவிடுதல், சாகச்செய்தல்.

உருட்டிவிடுதல் - உருட்டிப்போடு.

உருட்டிவிழித்தல் - உருட்டிப்பார்.

உருட்டு - உருட்டென்னேவல், உருளுதல், திரட்சி, புரட்டு, வெருட்டு, உருட்டுகை, சக்காம், கட்டடவளவு, புரளும்குரலிசை, மோதிரவகை, சரிவு, ஏமாற்றுகை, உருட்டுதல், வருத்து.

உருட்டுக்காரன் - புரட்டன்.

உருட்டுதல் - உருட்டல், உருளச்செய்தல், உண்டையாகச் செய்தல், வருத்துதல், இசைநரம்பை வருடுதல், விளையாட்டில் வெல்லுதல், சப்தஜாலத்தால் மருட்டுதல்.

உருட்டுப்புரட்டு - வஞ்சகச்செயல்.

உருட்டுமோதிரம் - மோதிரவகை.

உருட்டுவண்ணம் - அராகந்தொடர்ந்து வருவது, தூரிதமுள்ளவண்ணம்.

உருணி - உருளுஞ்சன்மையுடையது.

உருண்டுபோதல் - சாதல்.

உருண்டை - உண்டை, திரட்சி, கவளம், திரளை.

உருண்டைக்கட்டி-உண்டைக் கட்டி.

உருதம் - மிருகபட்சிகளின் சத்தம்.

உருதம்பண்ணுதல் - உச்சரித்தல்.

உருது - சேனை, பாசறை, வடஇந்திய பாஷைகளுள் ஒன்று.

உருத்தகம் - ஒரு சன்னிநோய்.

உருத்தகுதம் - ஒருவகைக்குதநோய். அது நாள்தோறு மலத்தை அடக்கியடக்கி விடுதலால் அபானவாயுவு குதத்தை நன்றுயனுசரித்து அத்துவார வளையத்தினடியையும் தூணியையுஞ் சுருங்கச்செய்யுங் காலத்திற் பிறப்பது. அந்தச் சுருக்கத்தால் மலமானது பிரயாசையின் மேல் வெளிப்படும். இப்படி வெளிப்படுந்தோறும் ஆசனத்தில் வெடிப்புண்டாகிப் பச்சைப் புண் போல உபாதி நேரிடும்.

உருத்தம் - தடுக்கப்பட்டது.

உருத்தரித்தல் - வடிவங்கொள்ளல்.

உருத்தல் - கோபம், கோபித்தல், பெருஞ்சினங் கொள்ளுதல், அழலு

தல், முதிர்தல், ஒத்தல், தோன்றுதல், உருவெடுத்தல், கரத்தல், வெளிப்படுதல், கண்மம் விளைதல், மிகுதல், சினக்குறிப்புக் காட்டுதல், சினேகக் குறிப்பு தோற்றுதல், மிகுதி, மூளுதல்.

உருத்தாகசண்னிபாதசுரம் - ஒருவகைச்சுரநோய். அது அவயவங்களின் மிகுநோவு, உடம்பெரிவு, கால்கை கழுத்துக்குள் நோவோடு தினவு, பிரமை, சோர்வு, பிரலாபப்பேச்சு, தாகம், அதிகபேதி அல்லது சொற்பபேதி என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

உருத்தாகசண்னிவாதசுரம் - ஒருவகை சுரநோய். அது இரைப்பு, இருமல், உடம்புசுற்றல், கழுத்தினரம்பு இழுத்தலோடு வேதனை, தாழ்வாய்க் கீல்கள் பிடித்தலோடு நோவு, சர்வாங்கத்திலும் குத்தலுடன் நடுக்கம், கழுத்திலும் நெற்றியிலும் வியர்வை, பிதற்றல், தவித்தல், தயக்கம், கண்டவரோடு முறையிடல், கிடைபொருந்தாமற் புரளல், உதடு உலர்தலெனு மிக்குணங்களை யுண்டாக்குவது.

உருத்திதம் - அழுகை, உரியபொருள், தொழிலின் லாபம், வளர்தல், தொழிலிலாபம், வட்டி.

உருத்திரகணம் - சிவகணம், சிவனடியார்.

உருத்திரகணிகை - உயர்குலத்துப் பெண், தேவதாசி, சிவன்கோயிற் ரூசி, தேவடியாள்.

உருத்திரகணிகையர் - வேசியர்களுக்கு வேறாய் கற்புநிலை வழுவாதிருந்து பூஜாகாலத்தில் சுத்தநிருத்தஞ்செய்யும் மகளிர்.

உருத்திரகணேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உருத்திரகன்னியர் - உருத்திரகணத்தைச் சேர்ந்த மகளிர்.

உருத்திரகிரந்தி - மூலாதாரமும், சுவாதிட்டானமும்.

உருத்திரகிரி - கைலாயமலை.

உருத்திரகோடீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று, திருக்கழுக்குன்றம்.

உருத்திரங்கண்ணர் - சங்கப்புலவருள் ஒருவர். இவர் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படை செய்தவர்.

உருத்திரசடை - சிவதுளசி, மஞ்சிவிக்கான், திருநீற்றுப்பச்சை, சிவதுளசிப் பூண்டு.

உருத்திரசம் - பாதரசம்.

உருத்திரசருமன் - இறையனாரகப் பொருளுரை கேட்டவரும் அகநானூறு தொடுத்தவருமாகிய ஒரு புலவர்.

உருத்திரசன்மகண்ணர் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். இவர் திருவள்ளுவமாலைச் செய்யுளிலொன்று செய்தவர்.

உருத்திரசன்மர் } கடைச்சங்கப்
உருத்திரசன்மனார் } புலவருளொருவர். இவர்உப்பூரிக்குடிக்கிழார்குமாரர். இவரைக் குமாரக்கடவுளம்சமென்பர். அகநானூறு தொகுத்தவர் இவரே. இறையனாரகப்பொருளுரை செய்த நாற்பத்தொன்பதின்மர் உரையையு மாங்கிற்கேட்டுநற்கீரருரையே மெச்சினஐயாண்டு நிரம்பா மூங்கைப்பிள்ளையாகியவருமிவரே.

உருத்திரசாதகம் - உருத்திராட்சமாகிய சிவசிந்நம்.

உருத்திரசாதனம் - உருத்திராக்கம்.

உருத்திரசாவர்ணி - பன்னிரண்டாவது மனு.

உருத்திரசூத்தம் - உருத்திரனைப் புகழ்ந்துகூறும் ஒரு வேதமந்திரம்.

உருத்திரணீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உருத்திரபசுபதிநாயனார் - அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் தலையூரிற் பிறந்து இரவும் பகலும் தண்ணீரில் நின்று உருத்திரஞ்சொல்லிச் சிவபக்தி பண்ணியவர்.

உருத்திரபஞ்சமம் - ஒருபண், ஓர் இராகம்.

உருத்திரபூ - மயானம்.

உருத்திரபூஷணம் - பாம்பு.

உருத்திரபூமி - மயானம்.

உருத்திரமணி - உருத்திராட்சம்.

உருத்திரமுடிச்சு - பூநூல் முடிச்சின் வகை.

உருத்திரம் - ஓரலங்காரம். அஃது வெகுளிதோன்றக் கூறுவது, பெருங்கோபம், மஞ்சள், உரித்திர சூத்தம், நவரசத்திலொன்று, கீருத்திரம், கோபம்.

உருத்திரரோகம் - மாரடைப்பு.

உருத்திரர் - இந்திரதிக்கில் கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, இவ்வியன், சாத்தா, பிஞ்ஞகி, திரிசோதியன். அக்கினி திக்கில் உருத்திரன், உதாசனன், பிங்கலன், காதகன், அயன், சுவலன், தகனன், வெப்புரு, பிரமாந்தகன், கூயாந்தகன். இயமதிக்கில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கத்திரு, காலன், தன்மன், சங்யோத்தர், வியோகிருதன். நிருதி திக்கில் நிருதி, மாரணன், அரந்தர், குரூரதிருட்டி, பயாந்தகன், உலர்த்துவகாயன், விரூபாக்கன், தாமிரு, உலோகிதன், தெங்கிருட்டினன். வருண திக்கில் பலன், அதிபலன், பாசத்தன், மகாபலன், சுவேதா, செயபத்திரன், தீர்க்கவாகு, செலாந்தகன், வடவாமுகன், தீமான். வாயு திக்கில் சீக்கிரன், இலகு, வாயுவேகன், தீக்ஷணன், சூக்குமன், கூயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபத்தி, மேகவாகனன். குபேரதிக்கில் நிதீசன், ரூபவான், தன்னியன், சௌமியன், சௌமியதேகன், பிரமத்தனன், சுப்பிரகடன், பிரகாசன், இலக்குமிவான், சோமேசன். ஈசான திக்கில் வியாத்தியாதீபன், ஞானபுகன், சருவன், வேதபாரகன், மாத்துருவிருத்தன், பிங்கலாக்ஷன், பூதபாலன், பலிப்பிரியன், சருவவித்தியாதியாதிபன், தாதா. அண்டகடாக வோட்டுக்குக் கீழே விஷ்ணு திக்கில் அனந்தன், பாலகன், வீரன், பாதாதிவிரதிபதி, லிபு, இடபத்துவசன், உக்கிரன், சுப்பிரன், உலோகிதன், சருவன். அண்டகடாகத்தின் மேலே பிரமதிக்கில் சம்பு, விபு, கெணத்தியகூன், திரியகூன், திரீதேசகவாதகன், சன்வாகன், விவாகன், நபன், லீபசு, விலட்சணன் என்பவர்களாம்.

உருத்திரலோகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உருத்திரவிருதயம் - நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

உருத்திரவீணை - ஒருவீணை, யாழ்வகை.

உருத்திரவுப்பு - வெடியுப்பு.

உருத்திரன் - ஏகாதசவுருத்திரரிலொருவன், சிவன், பெருங்கோபி, அக்கினிதேவன், சிவகணத்தோன், சிவகுமாரன், கொடுங்கோபி.

உருத்திராகாரம் - பெருங்கோபத்தோற்றம்.

உருத்திராக்கதாரணபிரீதித தேவதைகள் - பிரமன், விட்டுணு, உருத்திரன், பிரமாணி, நாராயணி, மாகேசுவரி, கௌரிநாராயணி, வராகி, உருத்திராணி, இந்திராணி, அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிபாதர், சிகண்டி, ஸ்ரீகண்டர், கங்கை,

யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணநதி, தூங்கபத்திரை, இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன், ஆதித்தர் பன்னிருவர், அச்சுவினிகள் இருவர், ஈசர் பதினொருவர், வசுக்கள் எண்மர்.

உருத்திராக்கத்தின்பெயர்கள் - அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணி.

உருத்திராக்கந்தரிக்கலாகாத காலங்கள் - சயனம், மலசலமோசனம், புணர்ச்சி, நோய், சனனசௌசம், மரணசௌசம்.

உருத்திராக்கந்தரிக்குங்காலங்கள்- [11] சிவமந்திர செபம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவபுராண படனம், சிவத்தியானம், சிவாலய தரிசனம், தேவாரதிருவாசக பாராயணம், அவை கேட்டல், தீர்த்தமாடல், விரதமனுஷ்டித்தல், சிராத்தஞ் செய்யல்.

உருத்திராக்கந்தரிக்குந் தானங்கள் - குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள்.

உருத்திராக்கம் } உருத்திரமணி, மர
உருத்திராட்சம் } வகை, உருத்திராகூம், ஒருமரம், உருத்திராட்ச மரத்தின்கால், ஒரு சிவசிங்கம், உருத்திராட்சமணி.

உருத்திராக்கவகை - வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, கருநிறமணி.

உருத்திராக்கவளவு - எண்ணளவு, எல்லையளவு.

உருத்திராட்சகண்டி - உருத்திராட்சகண்டிகை.

உருத்திராட்சகண்டிகை - உருத்திராக்கமாலை.

உருத்திராட்சக்கரை - வஸ்திரக்கரைவகை.

உருத்திராட்சசாபாலம்- நூற்றெட்டுபநிடகங்களுள் ஒன்று.

உருத்திராட்சப்பூனை - அடியார் வேடம்பூண்ட வஞ்சகன்.

உருத்திராட்சமுகம் - உருத்திராட்சமணியின் மேற்பக்கத்தின் பிரிவு.

உருத்திராட்சம் - உருத்திராட்சமரப்பொது, உருத்திராட்ச மரவகை, உலங்காரை, மரவகை, தூப்பாக்கிமரம், உருத்திராக்கமணி.

உருத்திராணி - பார்வதி, உருத்திரை, சத்தமாதரி லொருத்தி.

உருத்திராபிஷேகம் - உருத்திர மந்திரஞ் செபித்துச் செய்யும் அபிஷேகம்.

உருத்திராரி - மன்மதன்.

உருத்திராவாசம் - காசி.

உருத்திரி - ஒரு வீணை.

உருத்திரிதல் - உருமாறுதல், மாறுவேடங்கொள்ளுதல், மாறுவேடங் கொள்ளல்.

உருத்திரேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உருத்திரை - உருத்திராணி, பார்வதி.

உருத்திரோத்காரி - ஐம்பத்தேழாவது வருடம்.

உருத்துவம் - பருப்பம்.

உருத்துவிசேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

உருநாட்டு - சித்திரம், விக்கிரகம்.

உருந்திரம் - விசாலமானது.

உருபகதீவகம் - ஓரலங்காரம்.

உருபகம் - உருவகம்.

உருபு - உருவம், வேற்றுமையுருபு முதலிய விடைச்சொல், வடிவம், நிறம்.

உருபுகம் - ஆமணக்கு.

உருபுத்தொகை - உவமையுருபு தொக்கு நிற்பது.

உருப்புப்புணர்ச்சி - வேற்றுமையுருபு புணர்ந்துவருவது.

உருபுமயக்கம் - ஒரு வேற்றுமை யுருபு நிற்கவேண்டுமிடத்துப் பிறி தொன்று தன்பொருள் படாது அதன் பொருள்பட நிற்றல்.

உருபுவமானத்தொகை - உருபுமுப மானமுந் தொக்குநிற்பது.

உருபுவமைத்தொகை - உருபுவமை தொக்குநிற்பது.

உருபூதகம் - ஆமணக்குச்செடி.

உருப்பசி - ஊர்வசி, தெய்வப்பெண் களிலொருத்தி.

உருப்படல் } உருவாதல், உரு
உருப்படுதல் } வேறல், சன்னதங் கொள்ளல், சீர்ப்படுத்தல், சீர்ப்படு தல்.

உருப்படி - கணக்கிடக்கூடிய பொ ருள், உபயோகமான பொருள், இசைப்பாட்டு, எண், தினுசு.

உருப்படியாதல் - உருவாதல்.

உருப்படியாய் - யாதொரு அங்கப் பழுதுமின்றி.

உருப்படுத்தல் - உருவேறப்பண்ணு தல், சித்திரித்தல், உருப்படச் செய்தல்.

உருப்பம் - உட்டணம், கோபம், தினைமா, மிகுதி, வெப்பம், உருப்பு, உஷ்ணம், உருமம்.

உருப்பாத்தி - கடல் மீன்வகை.

உருப்பிடித்தல் - படம் பிடித்தல்.

உருப்பிணி - உருக்குமிணி.

உருப்பிரமம் - ஆட்டுக்கொம்பு.

உருப்பு - பூரணம், மிகுதி, வெப்பம், சினத்தீ, கொடுமை, உரப்பு, கோபம்.

உருப்போடல் } பாடம் பண்ணல்,
உருப்போடுதல் } மந்திரஞ் செபித் தல்.

உருமகாலம் - கோடைக்காலம்.

உருமணி - கருவிழி.

உருமத்துக்குவிடுதல் - மத்தியானத் தில் வேலை நீங்க விடுதல்.

உருமம் - உட்டணம், மத்தியானம், வெப்பம், நடுப்பகல், உஷ்ணம்.

உருமலேவாரி - உலோகமணல்.

உருமவிடுதி - மத்தியானத்தில் வேலை நிறுத்துகை.

உருமவேளை - மத்தியானம்.

உருமாலை - உருமால், உறுமாலை.

உருமால் - தலைப்பாகை, அங்கவஸ் திரம்.

உருமாறல் } கோலமாறுதல், சரீ
உருமாறுதல் } ரம் வேறுபடல், வேற்றுருக் கொள்ளல்.

உருமி - உட்டணி.

உருமித்தல் - உட்டணித்தல், மன வெப்பமடைதல்.

உருமிப்பு-உட்டணம், மனவெப்பம்.

உருமிளை - யமன் மனைவி.

உருமு - அச்சம், இடி, உரும், கர்ச்சி, முறுமுறு.

உருமுக்குரல் - இடியோசை.

உருமுதல் - உறுமுதல், கர்ச்சித்தல், முறுமுறுத்தல், அச்சமுற ஒசித் தல்.

உருமுத்துவசன் - இந்திரன் மைந் தன்.

உருமேறு - உருமு, பேரிடி, இடி யேறு.

உருமேனி - பரமேசுவரன் உயிர்கள் தங்கண்ணுற் காணும்படி யெடுக் குஞ் சகளவடிவம்.

உருமை - சுக்கிரனது மனைவி, உப்பு விளையும் பூமி.

உரும் - அச்சம், இடி, விடுதல்.

உரும்பரம் - சர்ப்பம், பாம்பு, செம்பு, பெருங்காயம்.

உருரசம் - பாதரசம்.

உருவ - நன்றாக.

உருவகப்படுத்த - உருவகிக்க.

உருவகப்படுத்தல் - அலங்காரப் படுத் திச் சொல்லல்.

உருவகப்படுத்துதல் - உபமேயத்தை உபமானத்தோடு அபேதமாகக் கூறுதல்.

உருவகம் } ஓரலங்காரம். அஃது
உருவகவணி } உவமையைப் பொருளாயும் பொருளே யுவமையாயுங் கூறுவது, ரூபகம்.

உருவகவிரி - ஓரலங்காரம். அது பண்புருபு விரிந்து நிற்பது.

உருவகவுயர்வு நவிற்சியணி - ஓரலங்காரம். அஃது உபமேயத்தைச் சொல்லாற் சொல்லாமல் உபமானச் சொல்லால் இலக்கணையாய்ச் சொல்லுதல்.

உருவகவுருவகம் - ஓரலங்காரம். அது உருவகத்தையே பெயர்த்தும் பிறிதொன்றாக வுருவகஞ் செய்வது.

உருவகன் - வசுதேவனுக்கிளையிடம் பிறந்த மகன்.

உருவகி - உருவகப்படுத்து.

உருவகித்தல் - உபமேயத்திலுவமானத்தைப் பேதமின்றி யேற்றிச் சொல்லுதல், உருவகப் படுத்துதல்.

உருவக்கொடியோர் - கொடியுருவினோர்.

உருவங்காட்டி - கண்ணாடி.

உருவசாத்திரம்-கலைஞான மறுபத்து நான்கிலொன்று, உறுப்பமைதியால் ஏற்படும் உயர்விழிவுகளைக் கூறும் நூல்.

உருவசி - உருப்பசி, ஊர்வசி.

உருவச்சாதகம் - உருவச் சாத்திரம்.

உருவமெடுத்தல் - வடிவமெடுத்தல், வடிவங்கொள்ளுதல்.

உருவம் - அழகு, உடலுறுப்பு, உடல், காணக்கூடியது, சொரூபம், நிறம், வடிவம், விக்கிரகம், வேஷம், கவறு, மந்திரவுரு, பிரதிமை, பஞ்சகந்தங்களுளொன்று, உருவு, ரூபம்.

உருவரை - செழிப்புள்ள நிலம்.

உருவல் - உருவுதல், காதணியிலொன்று.

உருவழிதல் - உருக்கெடுதல், மேனிவேறுதல், முழுதுஞ் சிதைதல்.

உருவாக்கல் } உண்டுபண்ணுதல்,
உருவாக்குதல் } சீர்ப்படுத்தல், படைத்தல், பொருளாக்குதல்.

உருவாஞ்சுருக்கு - உருவுசுருக்கு.

உருவாணி - தேய்ந்துபோனது, மெலிந்தவுடல்.

உருவாணிபற்றுதல் - தேய்ந்து போதல், மெலிவடைதல்.

உருவாதல் - உருவமெடுத்தல், உரூப மடைதல் பொருளாதல், வடிவுறுதல், சீர்ப்படுதல்.

உருவாரச்சம்மட்டி - வீழி.

உருவாரபம் - பிரதிமை, வெள்ளரி.

உருவாளர் - உருவமுடையவர்.

உருவி - செம்முள்ளி, நாயுருவி, புல்லுருவி, முள்ளி, பூமி.

உருவிடுதல் - மந்திரஞ்செபித்தல்.

உருவித்தல் - உருவகப்படுத்தல்.

உருவியழுதல் - விம்மியழுதல்.

உருவியுப்பு - நாயுருவியுப்பு.

உருவிலாளன் - மன்மதன்.

உருவிலாளி - உருவிலாளன்.

உருவிலி - உருவிலாளன், உருவில்லாதவன், மன்மதன்.

உருவில் - உருவில்லாதவன், மன்மதன்.

உருவிழத்தல் - வடிவமிழத்தல்.

உருவினகோலம் - கதியற்ற நிலைமை.

உருவு - அச்சம், உருவம், உருவன்னேவல், வடிவம், உரு, வடிவு, வால் முதலியவற்றை உருவு, தழை முதலியனவுருவு, சுளுக்கு முதலியவற்றிற்கு உருவு, கயிற்றை உருவு, ஊடுருவு, பறி, கழற்று.

உருவுகயிறு - மாடுகட்டுங்கயிறு.

உருவுசுருக்கு - சுருக்கு முடிச்சு.

உருவுடம்பு - தூலசரீரம்.

உருவுதடம் - சுருக்குக்கயறு, உருவு சுருக்கு.

உருவுதல் - இலைமுதலியன வுருவுதல், உறுப்பு, உறைகழித்தல், புதைந்தோடல், சுளுக்கு முதலியவற்றைப் போக்கத்தடவுதல், கயிற்றுச்

சுருக்கையுருவுதல், ஊடுருவிச் செல்லுதல், கையாற் பொருள் வரும்படி உருவுதல், துளைத்தல், சிதகல்.

உருவுதிரை - திரைவகை.

உருவுவடம் - வண்ணம்பற்றி வரும் ஒப்புமை.

உருவுவம் - உருவுவபமானம்.

உருவுள்ளு - கொள், கொள்ளுப் பூண்டு.

உருவெடு - வடிவெடு.

உருவெடுத்தல் - உருக்கொள்ளுதல், வடிவமெடுத்தல், வடிவெடுத்தல்.

உருவெளி, உருவெளிக்காட்சி, உருவெளித்தோற்றம் } மனதிலுள்ள பொருளின் மருட்சித்தோற்றம்.

உருவெளிப்படல், உருவெளிப்படுதல் } மனதிலெண்ணியது தோன்று மனத்தோற்றம்.

உருவெளிப்பாடு - உருவெளிக் காட்சி, உருவெளித் தோற்றம்.

உருவேறல் - அதிகப்படுதல், ஆவேசமேறல், உருப்படுதல், செபம் முதிர்தல்.

உருவேறுதல் - மந்திரவுரு அதிகமாதல், ஆவேசமேறுதல், மூர்க்கமிகுதல்.

உருவேற்படல் - உருவமுண்டாதல்.

உருவேற்றல், உருவேற்றுதல் } ஆவேசமேற்றல், துர்ப்போதனை செய்யல், மந்திரத்தை அதிகமாய்ச் செபித்தல், நெட்டுருப் பண்ணுதல்.

உருவை - சுரை, முள்ளி.

உருவொளி - கண்ணுடி முதலியவற்றிற் காணும் நிழல்.

உருளரிசி - கொத்துமல்லி, கொத்துமலி, கொத்தமல்லி.

உருளல் - உருளுதல்.

உருளாயம் - கவறுபட்டத்தால் வரும் ஆதாயம், உருளும் கவற்றின் கட்டப்பட்ட வரவு.

உருளி - உரோகிணிநாள், தேருருளை, பொருத்து, வட்டம், ஒருவகை வெண்கலப் பாத்திரம், எந்திரத்தினது மேற்கல், வட்டவடிவான பாத்திரம், யாக்கையின் மூட்டு.

உருளிபுரள்தல் - உருளி புரள்ளுதல், எலும்புப் பொருத்து விலகுதல்.

உருளிபெயர்தல் - உருளிபுரள்.

உருளிபோதல் - பொருத்து விலகுதல்.

உருளியெடுத்தல் - பொருத்துப் புரட்சியெடுத்தல்.

உருளு, உருள் } புரள், திரள், அழி.

உருளுதல் - அழிதல், புரளுதல்.

உருளை - உருண்டை, உரோகிணிநாள், தேர் முதலியவற்றினுருள், பண்டி, முட்டை, வட்டம், வெள்ளைப் பாஷாணம், சக்கரம், உருள்.

உருளைக்கல் - பரற்கற்கள்.

உருளைக்காந்தம் - ஒருவகைக் காந்தக்கல்.

உருளைக்கிழங்கு - கிழங்குவகை, செடிவகை.

உருள் - உருளென்னேவல், உரோகிணிநாள், தேருருளை, வண்டி, உருளு, புரளு, திரளு, அழி, செல், பண்டி, வட்டம்.

உருள்தல் - உருள்ளுதல், புரளுதல், திரளுதல், அழிதல், செல்லுதல்.

உருள்வண்டு - பீவண்டு.

உருஸ் - திருவிழா.

உரூடபதம் - இடுகுறிமாத்திரப் பெயர், பகாப்பதம்.

உரூடம் - இடுகுறி, பகாப்பதம், பிரசித்தம்.

உரூடி - இடுகுறி, பிரசித்தமானது, காரியத்தைக்கண்டு காரணத்தை நிச்சயிக்கை, ரூடி.

உரூடிகம், உரூஷிதம் } தூளியி னின்மறை பட்டது.

உரூடியார்த்தம் - இயற்சொல்.

உரூட்சம்-மொந்தன் வாழைக்கிழங்கு.

உரூட்சை - வாழைக்கிழங்கு.
உரூதி - ஆயில்பட்டை.
உரூபகதாளம் - ரூபகதாளம்.
உரூபகம் - அத்தாட்சி, ஒரு செய்யுள், உரூவக அலங்காரம், சத்த தாளத் தொன்று, உரூபகதாளம்.
உரூபகாரப்படுத்துதல் - மெய்ப்பித் தல்.
உரூபகாரம் - அத்தாட்சி, திருஷ் டாந்தம்.
உரூபகாலங்காரம் - உருவகவணி.
உரூபசுன்மாத்திரை - பஞ்ச தன்மாத் திரையிலொன்று.
உரூபம் - உருவம், கிரிகாமாலே பண் ணல், சாயை, சுபம், நிலே, நிறம், மந்தை, விக்கிரகம், வடிவம், அழகு, ரூபம, உரூபு, சொரூபம்.
உரூபாணம் - சிவிகை.
உரூபாய் - பதினறு அணு கொண்ட வெள்ளிநாணயம், ரூபாய்.
உரூபாரூபம் - நவபேதத்தொன்று. அஃது சதாசிவம்.
உரூபாவதி - அழகுடையவள், பன்னி ரண்டாவது மேளகர்த்தா.
உரூபி - உரூபமுள்ளது, மெய்ப்பி, ரூபி.
உரூபிகரம் - உரூபம், உரூபிகரிக்கை, உருவமைடுக்கை.
உரூபிகரி - உருவப்படு, உரூபி.
உரூபிகரித்தல் - உரூபப்படுத்தல், கரு விலுருப்படல், உரூபித்தல், உரு வப்படுதல்.
உரூபிகாரப்படுத்தல் - உரூபிகரித்தல்.
உரூபிகாரம் - உரூபம்.
உரூபிகை - வெள்ளெருக்கு.
உரூபித்தல் - அத்தாட்சிப் படுத்தல், மெய்ப்பித்தல், ஆராய்தல், சிந்தித் தல், ருஜுப்படுத்துதல்.
உரூபு - உரூபம், சாயல்.
உரூப்பியம் - அழகானது, பொன் வெள்ளி நகை, வெள்ளி, வெள்ளே, அழகுள்ளது, பொன்னகை.
உரேந்திரன் - வீரன்.

உரை - ஆகமப் பிரமாணம், புகழ், வியாக்கியாபனம், உயர்ச்சி, உரை யென்னேவல், ஒலி, சொல், சொற் பயன், தேய்மானம், தேய்வு, பேச்சு, பொன், மாற்றறியு முறை, வேதமொழி, சொற் பொருள், மாற்றுரை, உரைக்கை, பேசு, எழுததொலி, அருத்தம், பதம், பாழி, முழக்கம், பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசக செபம், மொழி, வியாக்கியானம், விடை, துணிபு, ஆகமம், ஆசிரிய வசனம், அத்தம்.
உரைகட்டல் } உரைபண்ணுதல்.
உரைகட்டுதல் }
உரைகலங்குதல் - பேச்சுத் தடுமாறு தல்.
உரைகல் - பொன் வெள்ளியுரைக் குங்கல், கட்டளைக்கல், மருந்து ரைக்குஞ் சிறு கல், கட்டளை.
உரைகாரர் - உரையாசிரியர், வண் ணுர்.
உரைகாரன் - உரையாசிரியன்.
உரைகோளாளன் - சொல்லும் உரை யை எளிதிலறிய வல்லவன்.
உரைக்கிழத்தி - சரசுவதி.
உரைக்கோள் - உரைகாரன் கருத்து.
உரைசல் } சீக்கல், தேய்த்தல்,
உரைசுதல் } ஆராய்கை, உரிஞ்சு தல், தேய்தல், உரைதல்.
உரைசு } தேய், உரை.
உரைஞ்சு }
உரைசெய்தல் - சொல்லுதல், வியாக் கியானம் பண்ணுதல்.
உரைசெய்யல் - பேசல், வியாக்கியா னம் பண்ணல்.
உரைச்சூத்திரம் - உரையினிடையே உரைகாரரியற்றிய சூத்திரப்பா.
உரைச்செய்யுள் - கட்டுரை.
உரைஞ்சல் - தேய்த்தல், சீக்கல், உரைதல்.
உரைஞ்சு - உரைசு, உரை..
உரைஞ்சுதல் - உரைசுதல்.

உரைதல் - தேய்தல், வீணாதல், உராஞ்சல், உராய்தல், உராய்போதல், உரிஞ்சல், உரைஞ்சல், உரோஞ்சல்.

உரைத்தல் - ஒலித்தல், கற்பித்தல், சொல்லுதல், தேய்த்தல், பூசுதல், மெருகிடுதல்.

உரைத்தாமென்றல் } உத்தியில் ஒன்று.
உரைத்தூமென்றல் }

உரைநடை - வாசகநடை.

உரைநயம் - வியாக்கியானத்தின் இனிமை.

உரைநூல் - உரையுள்ள நூல், உரையாகிய நூல், உரைபெற்ற நூல்.

உரைபாடம் - மூலமும் உரையும்.

உரைபெறுகட்டுரை - காலியங்களில் உரைநடையிலமைந்த தொடர்.

உரைப்படல் - உரைக்கப்படல்.

உரைப்பாட்டு - கட்டுரை நடை.

உரைப்பு - உரைக்கை, சொல்லுகை, தேய்ப்பு, உரைத்தல்.

உரைப்பொருள் - விரித்துரைக்கும் மெய்யுரை.

உரைமானம் - தேய்ப்பு.

உரைமுடிவு - நியாயத் தீர்மானம்.

உரைமெழுகு-உரைத்தபொன் வெள்ளிகளை ஒற்றும் மெழுகு.

உரையசை - தன்னுற்றலைப் பெரும் பான்மையுமிழந்து சிறிது பொருளுணர்த்திவரும் இடைச்சொல்.

உரையசைக்கிளவி - ஒருவனை எதிர்முகமாக்குஞ்சொல்.

உரையல் - உரைதல், சொல்லுகை, உரைத்தல்.

உரையளவை - ஆகமப்பிரமாணம்.

உரையறிகருவி - உரைகல், மாற்றறிவிக்கும் ஆணி.

உரையனுமானம் - நூலிற்சொல்லியதுகொண்டு சொல்லாததையும் ஒப்புமைபற்றியறியும் உய்த்துணர்வு.

உரையாசிரியர் - உரையாசிரியன், இளம்பூரணர்.

உரையாசிரியன் - உரைசெய்வோன்.

உரையாடல் - சொல்லல், பேசல், பேசுதல்.

உரையாடுதல் - சொல்லுதல், சம்பாஷித்தல்.

உரையாணி - மாற்றறியுமாணி.

உரையிடல் - உரைத்தல்.

உரையிலக்கணம் - நூலுரைக்கு வேண்டுமிலக்கணம். அது பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினை, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரிய வசனம்.

உரையிற்கொள்தல் - உரையிற் கொள்ளுதல், மூலத்திற் சொல்லப்படாததை உரையிற் சேர்த்துக்கொள்ளுதல்.

உரையிற்கோடல் - உத்தியில் ஒன்று.

உரையுரைத்தல் - பயனுரைத்தல், மெய்யுரைத்தல், பிரித்துரைத்தல், அன்றியும் பதவுரையுரைத்தலின் பெயர், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், பொழிப்புரைத்தல்.

உரையேடு - உரைபாடம்.

உரைவன்மை - சாதுரியப் பேச்சு, சொற்றிட்பம், பேச்சு வல்லமை.

உரொக்கக்காரன் - பண இருப்புள்ளவன்.

உரொக்கம் - கையிருப்புப் பணம், ரொக்கம்.

உரொட்டி - உறட்டி, அப்பம்.

உரோககம் - சிவனடிபாதம். இது இலங்கைத் தீவிலுள்ள ஒரு மலை.

உரோகக்கிரகம் - மருந்து, உரோகக்கினம்.

உரோகசாந்தகன் - வைத்தியன்.

உரோகசிரேட்டம் - சுரம்.

உரோகணி - ஒரு நட்சத்திரம், பலதேவன்மூர்ப், உரோகிணி, அரோகிணிக் கடுக்காய், உரோகணிநாள், பலராமன் தாய்.

உரோகணிதனயன் - பலபத்திரன்.

உரோகணிநாள் - அயநாள், உருளி, உருள், உரோணி, ஊற்றுல், சகடம், சகடு, சதி, தேர், பண்டி, பார், விமானம், வையம்.

உரோகணீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உரோகதி - நாய்.

உரோகஸ்தன் - உரோகி.

உரோகம் - இறங்குதல், உயர்தல், எழும்புதல், தளிர், எறுதல், ஒளியின்மை, நோய், பூவரும்பு, வியாதி, வறுகை.

உரோகரம் - கயரோகம்.

உரோகாதம் - நெஞ்சிடித்தல், மாரடித்தல்.

உரோகி - நோயாளி.

உரோகிணி - உரோகிணிநாள், ஒன்பானுண்டுப்பெண், கடுக்காய், கடுகுரோகணி, பலராமன்றாய், பீதரோகணி, ஒரு நட்சத்திரம், பலராமன் தாய்.

உரோகிணிதனயன் - பலபத்திரன்.

உரோகிதகம் - செம்மரம்.

உரோகிதம் - இந்திரதனு, சிவப்பு.

உரோகிதாசுவம் - அக்கினி.

உரோகீ - செம்மரம்.

உரோகீஷம் - கலைமான்.

உரோங்கல் - உலக்கை.

உரோசங்கெட்டவன் - மானவீனன்.

உரோசப்படல் } சுவரணை கொள்
உரோசப்படுதல் } ளல், நாணப்படல்.

உரோசம் - மானம், மூலை, வெட்கம், ரோஷம், கோபம்.

உரோசல் - உரைஞ்சல், உராய்தல்.

உரோசனகம் - எலுமிச்சை.

உரோசனம் - முள்ளிலவு.

உரோசனி - கடுகு, கோரோசனை, செந்தாமரை.

உரோசனை - கடுகு, கோரோசனை, செந்தாமரை, மகிடரோசனை முதலிய ரோசனை.

உரோசி - சூரியகாந்தி, நாணு, சுவரணைகொள்.

உரோசித்தல் - உரோசப்படுதல், நாணுதல், சுவணைகொள்ளுதல்.

உரோசுதல் - உரோசல், உராய்தல்.

உரோஞ்சல் - உரிஞ்சுதல்.

உரோஞ்சுதல் - உரைஞ்சுதல், உரோசு.

உரோடம் - கோபம்.

உரோணி - உரோகிணிநாள், உரோகிணி, தொண்டை நோய் வகை, ஒரு நோய், உரோகணி நாள்.

உரோதசி - ஆகாயமும் பூமியும் ஏகோபித்திருத்தல்.

உரோதம் - தடை, நதிதீரம், நீர்க்கரை.

உரோதனம் - அழுதல், கண்ணீர், அழுகை.

உரோதனி - சிறுகாஞ்சொறி.

உரோதித்தல் - அழுதல்.

உரோதேர்வக்கிரை - நதி.

உரோபணம் - இறங்குதல்.

உரோபம் - அம்பு, பாணம்.

உரோமகசுவணம்-மயிர்க்கூச்சிடுதல்.

உரோமகுச்சகம் } சாமரம்.
உரோமகுச்சம் }

உரோமகூபம் - மயிர்க்குச்சு, மயிர்ச்சிலிர்ப்பு.

உரோமகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உரோமக்கட்டு - நிறைமயிர், புறமயிரடர்ச்சி.

உரோமக்கால் - மயிர்த்துவாரம்.

உரோமக்கிழங்கு - வசம்பு.

உரோமசங்காரி - அம்பட்டன், உரோமத்தைப்போக்கும் ஒரு மருந்து.

உரோமசன் - உரோம ரிஷி, ஒரு முனிவன்.

உரோமத்துவாரம் - மயிர்த்துவாரம், மயிர்க்கால்.

உரோமந்தேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உரோமபூமி - தோல்.

உரோமப்பட்டு - எலி மயிர் முதலியவற்றாற் செய்த பட்டு.

உரோமப்புளகம்
உரோமப்புளகிதம்
உரோமப்பொடிப்பு } மயிர்ச்சிலிர்க்கை.

உரோமமுனி - பதினெண் சித்தரில் ஒருவர்.

உரோமம் - புறமயிர், மயிர், மயிர்ப் பரப்பு.

உரோமராசி - மயிரொழுங்கு.

உரோமரேகை - உரோமத்திலெழுங்கு, மயிரொழுக்கு.

உரோமலம்பம் - வண்டு.

உரோமாஞ்சம்
உரோமாஞ்சலி
உரோமாஞ்சிதம் } உரோமம் பொடிப்பு, குதூகலிப்பு, உரோமபுளகம், மயிர்க்கூச்சிடுதல், மயிர்ப் பொடிப்பு.

உரோமாம்பரம் - கம்பளம், சால்வை.

உரோமாரிஷம் - மயிர்ப்புளகம்.

உரோமாவலி - உரோமரேகை.

உரோமி - மயிர்ச்சிகைப்பூடு, மயிர்ச் சிகைப்பூண்டு.

உரோருகம் - முலை, தனம்.

உர்வீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உர்வீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

உலககர்த்தா - கடவுள்.

உலகங்காத்தாள் - அவுரி.

உலகங்காத்தான்-அவுரிச்செடி,அவிரி.

உலகசஞ்சாரம் - உலகவாழ்வு, உலகைச் சுற்றிவருதல்.

உலகசயன் - புத்தன்.

உலகஞானம் - உலகத்தைப்பற்றிய அறிவு, கருவிநூலறிவு.

உலகத்தார் - உலகிலுள்ளார், உயர்ந்தோர், உலகப்பற்றுடையார்.

உலகத்தோற்றம் - புராண இலக்கணங்களைந்தனுளொன்று. அது உலகத்தினுற்பத்தியைக் கூறுவது.

உலகநடை - உலகவியற்கை, உலகாசாரம், உலகத்தா ரொழுக்கம், உலக வழக்கு, உலக வழக்கம், உலகொழுக்கம்.

உலகநாதன் - அரசன், கடவுள், பிரமன்.

உலகநாயகி - பாவநாசப்பதியிற் கோயில்கொண்டிருக்குந் தேவி.

உலகநீதி - இயல்பான நீதி, உலக நடை, தேசவியற்கை நீதி, நன்னெறி, ஒரு நூல்.

உலகநூல் - இலௌகீக சாஸ்திரம்.

உலகநேத்திரன் - சூரியன்.

உலகநோன்பு - துறவாது விரதங் காக்கை.

உலகபத்ததி - உலகத்தாரொழுகும் வழி.

உலகபாந்தவன் - சூரியன், விட்டுணு.

உலகபாரணன் - விஷ்ணு.

உலகபாலர் - அஷ்ட திக்குப் பாலகர்.

உலகப்பற்று - உலகபந்தம், பூலோக பாசம், விஷயாபிமானம்.

உலகப்பிரசித்தி - பூலோகமெங்கும் பரந்த புகழ்.

உலகப்புரட்டன் - மிகு புரளிக்காரன், பெருமோசக்காரன்.

உலகமரியாதை - உலக வழக்கம்.

உலகமலையாமை - நூலழகினொன்று.

உலகமலைவு - ஓரலங்காரம். அஃது உலகழகாழுக்கிறப்பக் கூறுவது,கற்றோர்க்கும் மயங்கவைத்தல், நூற்குற்றங்களுமொன்று.

உலகமளந்தான் - திருமால்.

உலகமன்னவன் - சக்கரவர்த்தி.

உலகமாதா - இலக்குமி, சரச்சுவதி, செம்மணத்தக்காளி, பார்ப்பதி, சரசுவதி, உமை, பார்வதி.

உலகமீன்றாள் - பார்ப்பதி, பார்வதி.

உலகமுண்டோன் - விட்டுணு, திருமால், விஷ்ணு, ஸ்ரீ மகாவிஷ்ணு.

உலகம் - ஆகாயம், உயர்ந்தோர், உலகத்தார், உலகு, குணம், சனம், சிருட்டிப் பொருள்கள், திசை, நாடு, பதவி, பிரபஞ்சம், பூமி, புவனப்பொது, நிலப்பகுதி, திக்கு, மக்கட்டொகுதி, நன்மக்கள், சீவராசிகள், வழக்கம், உலோகம்,சான்

ரோர், உலோகானுபவம், உலகத்தன்மை, அந்தரம், சுவர்க்கம். அன்றியும் பூலோகம், பரலோகம், பாதாளலோக மென்பாருமுளர். மேலுலகேழும் கீழுலகேழும்; மேலுலகாவன பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம். கீழுலகாவன அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம். மங்கலச்சொல் இருபத்திரண்டினொன்று.

உலகயாத்திரை - உலகநடை.

உலகரட்சகன் - உலகத்தைக் காப்போன்.

உலகரட்சணியம் } உலகத்தாரை
உலகரட்சை } யீடேற்றுகை.

உலகரீதி - உலகமுறை.

உலகர் - உலகத்தார்.

உலகவழக்கம் } இபல்பாய் வழங்கு
உலகவழக்கு } வது, உலகொழுங்கு, உலகத்தார் வழங்குவது.

உலகவுறவி - எல்லாச் சாதியாரும் வந்து தங்குதற்குரிய தருமசாலை.

உலகவுறவு - இலௌகிக வுறவு.

உலகவாஞ்சை - உலக விருப்பம், உலக விஷயங்களிலுள்ள பற்று.

உலகவாதம் - ஐதிகம்.

உலகவார்த்தை - பொதுஜனவார்த்தை

உலகவாழ்வு - இகவாழ்வு.

உலகவிடைகழி - சனங்கள் கடந்து செல்லற்குரிய பெருவாயில்.

உலகவியாபாரம் - இலௌகிகவிஷயம்.

உலகவிரட்சகன் - கடவுள், மனுஷரை யீடேற்றுபவன்.

உலகவிருத்தம் - உலகவழக்கே காடுமாறுபடும் உரை.

உலகவேடணை - ஏடணைத்திரயத்தொன்று.

உலகவொடுக்கம் - ஒவ்வொரு காரியத்தத்துவங்களும் அதனதன் காரியத்தில் ஒடுங்குதல்.

உலகளந்தான் - விஷ்ணு.

உலகளந்தோன் - விட்டுணு, உலகமளந்தான்.

உலகளவு - நாட்டின் நிலவளவு.

உலகாசாரம் - உலகவொழுக்கம், உலக வழக்கம்.

உலகாயதம் - புறச் சமயம் ஆறினொன்று. அது சார்வாகன் கோட்பாட்டின்படி உலக இன்பமே சிரேஷ்டமென்னும் ஒரு நிரீச்சுரவாத சமயம், உலோகாயதம், ஒரு மதம்.

உலகாயதன் - உலகாயத சமயத்தோன்.

உலகாயிதம் - உலகாயதம், சடமாயாவாதம், அறுசமயங்களிலொன்று.

உலகாளல் } உலகோம்பல்.
உலகாளுதல் }

உலகாள்வோன் - உலகாதிபன், அரசன்.

உலகிகம் - இலௌகிகம்.

உலகியல் - உலகநடை, உலக வழக்கம், உலகரீதி, உலக நீதி.

உலகியற்கை - உலகியல்.

உலகின்பொது - தலம், நாடு, புவனம், பொழில், அவனி, புவி.

உலகு - ஆகாயம், உயர்ந்தோர், ஒழுக்கம், திசை, நாடு, நிலம், பூமி, மக்கள், முப்பகையினொன்று, உலகம்.

உலகுண்டவன் - விஷ்ணு.

உலகுண்டோன் - விட்டுணு.

உலகுரை - உலகவாதம்.

உலகுலம் - திப்பிலி, திரிபாலை.

உலகேசன் - உலகிற்கு ஈசன்.

உலகோடுதல் - எங்கும் பரவுதல்.

உலகோம்பல் } அரசரது தொழிலின் ஒன்று. அஃது
உலகோம்புதல் } உலகுகாத்தல்.

உலகோர் - உலகர், பெரியோர்.

உலக்கை - இருப்புத்தண்டு, ஒழிக்கை, குத்துமுலக்கை, கேடு, சாவு, திருமணவாணம், மெருகன்கிழங்கு, அழிவு, தானிய முதலியன குற்

றங் கருவி, ஓர் ஆயுதம், உலத்தல், உரோங்கல், தடி, முசலம்.

உலக்கைக்கணை - உலக்கையின் திரண்டதலை, திரண்டதலையுள்ள உலக்கை, உலக்கைப்பூண், தேய்ந்து போன உலக்கை நுனி.

உலக்கைக் கழுந்து - புக்திக்குறை உள்ளவன், உலக்கைப்பிடி.

உலக்கைக்கொழுந்து - முசலகிசலம், உலக்கை நுனிபோலக் கூர்மை யற்றது.

உலக்கை சாத்துதல்-அடிக்கடி சொல்லிச் சொல்லி அறிவுறுத்துதல்.

உலக்கைசார்த்தல் - கெடுத்தல்.

உலக்கை சார்த்துதல் - அழித்தல்.

உலக்கைத்திங்கள் - ஆவணிமாதம்.

உலக்கைப்பாட்டு - வள்ளைப்பாட்டு.

உலக்கைப்பாலை - பாலைமரவகை.

உலக்கைப்பிடங்கு - உலக்கைக் கணை.

உலக்கையாணி - பூட்டினடுவாணி.

உலங்கலம் - கற்பாத்திரம்.

உலங்காரணை - அவிரி, அவுரி.

உலங்காரை - மரவகை.

உலங்கு - கொசுகு, திரண்டகல், கொதுகு, உலம், கீடம்.

உலண்டம் } கோற்புழு, பட்டு, பட்டு
உலண்டு } நூலை உண்டாக்கும் கோற்புழு, வண்டு.

உலத்தல் - ஒழிதல், கெடுதல், குறைதல், அழிதல், கழிதல், நீங்குதல், முடிவுபெறுதல், கெடல், சாதல்.

உலத்திசூலை - ஒருவித்தச்சூலை.

உலபம் - நெருங்கிப் படர்ந்த கொடித்திரள்.

உலப்பல் - உலப்புதல், கலப்புக் கட்டோசை.

உலப்பு - ஒழிவு, கேடு, சாவு, அழிவு, குறைவு, அளவு, உதவுகை, முடிவு.

உலப்புதல் - அலப்புதல், ஆர்த்தல்.

உலப்பேறி - திருத்தப்பட்ட நிலம்.

உலமரல்
உலமருதல் } அச்சக்குறிப்பு, அஞ்சல், துன்பம், துன்புறல், அச்சமுறல்.

உலமரு - உலம்வா, அஞ்சு, துன்புறு.

உலமா - இஸ்லாம் மதக் கல்வி கற்றறிந்தவன்.

உலம் - கற்றிரள், திரண்டகல், திரட்சி.

உலம்பல் } ஒட்சித்தல், ஒலித்தல்,
உலம்புதல் } ஆரவாரம், போரொலி செய்தல், அலப்புதல், அலப்பல், முழங்குதல்.

உலம்வரல் - சுழலல்.

உலம்வாதல் } நெஞ்சு உழலுதல்.
உலம்வாவருதல் }

உலரல் - உலர்தல், காய்தல்.

உலரி - ஓலரி.

உலரு } காய், வாடு.
உலர் }

உலருதல் - காய்தல், வாடல், உலர்தல்.

உலர்ச்சி - காய்வு, வாட்டம்.

உலர்தல் - காய்தல், வாடல், அழிதல்.

உலர்த்தல் - உலர்த்துதல்.

உலர்த்தற்பாடு - உலர்த்தப்பட்ட நிலைமை.

உலர்த்தி - உலர்ச்சி.

உலர்த்திச்சூலை-ஒருவகைச்சூலைநோய் அது பித்தவஷ்ணம், அக்கினி, வறட்சி, குடல்வாதம், குன்ம முதலியவற்றுற் பிறந்து சரீரத்தினுட்புறத்தில் உலர்த்தலுடன் குத்தல், வெளிப்புறத்தில் வீங்கித் தடித்தல், சர்வாங்கமும் நோதல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குவது.

உலர்த்துசூலை - சூலைநோய் வகை.

உலர்த்துதல் - காய்ச்சுதல், உலரச் செய்தல், காயச்செய்தல், வாட்டல்.

உலர்ந்ததேங்காய் - கொப்பறை.

உலர்ந்தபுல் - திரணம்.

உலர்ந்தபூ - உணங்கல், சாம்பல், வாடல்.

உலர்ப்பெலி - ஓர் எலி.

உலர்மரம் - வானம்.

உலர்வு - உலர்ச்சி.

உலவக்காரன் - உலோபக்காரன், பிறனில்லிற் கொஞ்சமாயுண்பவன், அன்னியரிடத்திற் சங்கோசப்படுபவன்.

உலவமரம் - இலவமரம்.

உலவம் - உலோபம், அன்னியர் முன்பு மனக்கூச்சம்.

உலவல் - உலவுதல், உலாவுதல், குறைதல்.

உலவாகிழி - எடுக்க வெடுக்கப் பொருள் குறையாகிழிக்கட்டு, எடுக்க வெடுக்கக் குறைபடாப் பொன் முடிப்பு.

உலவித்தல் - உலோபமாயிருத்தல், ஒறுத்தல், கூசிமியாழுகல்.

உலவு - உலாவல், குறைதல், உலாவ, கூசிக்குறை.

உலவுதல் - உலாவுதல், ஒழிதல், கூசிக் குறைத்தல், உலாவு, குறைதல்.

உலவை - ஊர், ஓடைமரம், காற்று, கிலுகிலுப்பை, குடி, குலம், தழை, மரக்கோமபு, மரப்பொந்து, முல்லை நிலக்கான்யாறு, வள்ளி, விலங்கின் கொம்பு, மரச்செறிவு, குடைவேல், ஓடை, வள்ளிக்கொடி, வாத ரோகம், விறகு, கிலுகிலுப்பைச் செடி, கொம்பு, வினை முற்று.

உலவைநாசி - திப்பிலி, திபபலி.

உலவையான் - வாயுதேவன்.

உலறல் - காய்தல், சினக்குறிப்பு, பெருங்கோபம், உலறுதல்.

உலறுதல்-காய்தல், சிலம்புதல், சினக்குறிப்புக் காண்பித்தல், வற்றுதல், சிதைதல், பொலிவழித்தல், சினத்தல், உரைதடுமாறுதல், பொலிவழிதல்.

உலா-உலாவென்னேவல், ஒரு பிரபந்தம். அஃது பாட்டுடைத்தலைவன் உலாவந்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற்கூறி அவனதுகுலம் முதலிய மகிமையை விளக்குவது, பவனி வருதல், ஒரு பிரபந்தம், பவனி, சாரிவருதல்.

உலாகுமம் } மலைநிலை.
உலாகுளம் }
உலாங்கம் }

உலாங்கிலி } காவட்டப்புல்.
உலாங்கு }
உலாங்குலி }

உலாஞ்சுதல் - உலாஞ்சல், கிறுகிறுத்தல், தள்ளாடுதல், அசைந்தாடுதல், தலைசுற்றுதல்.

உலாத்தல் - உலாவுதல், சாரிவரல், உலாத்துதல்.

உலாத்து - உலாத்தென்னேவல், உலாவுகை.

உலாத்துக்கட்டை - கதவுக்குடுமி, சுழியாணி, மூலையாணி, கதவு நின்றாடும் சுழியாணி.

உலாத்துக்கதவு - பிணையற்கதவு.

உலாத்துதல் - உலாவல், சாரிவரல், உலாவச்செய்தல், பரவச்செய்தல், உலாவுதல்.

உலாந்தாக்கமலம் - மட்ட வயிர வகை.

உலாப்போதல் - பவனிபோதல், சாரி, பவனி.

உலாமடல் - ஒரு பிரபந்தம். அஃது ஒரு பெண்ணைக் கனவின் மணந்தோன் அவள் பொருட்டு மடலூர்வேனெனக் கலிவெண்பாவாற் கூறுவது.

உலாமா - கச்சமரம், கடுகுரோகணி.

உலாம் - ஒருவமச்சொல்.

உலாவரல் - சஞ்சரித்தல், பவனி வருதல்.

உலாவல் } இயங்கல், பொழுது
உலாவுதல் } கழித்து விளையாடல், சஞ்சரித்தல், பவனி வருதல், இயங்குதல், வியாபித்தல், சூழ்தல், சாரிபோதல், மெல்ல நடத்தல், அசைதல், தியங்கல், திரிதல், வழங்கல்.

உலாவாதல் } சஞ்சரித்தல், பவனி வருதல், அசைதல்.
உலாவாவருதல் }

உலிந்தம் - ஒரு தேயம்.

உலிமணி - நாயுருவி.

உலிற்கன் - வெண்கலம்.

உலு - தினைமுதலியவற்றின் சப்பட்டை, தினை முதலியவற்றின் பதர், பதர்.

உலுக்கல் - குலுக்கல், உலுக்குதல்.

உலுக்கு - அசை, குலுக்கு.

உலுக்குதல் - அசைத்தல், குலுக்குதல்.

உலுக்குமரம் - மிண்டிமரம், நெம்புகட்டை.

உலுடிதம் - துவாரம், நிலத்திலுருளுதல், நடுங்கல்.

உலுட்டிதம் - அடிக்கடி பூமியிற் புரளுங்குதிரை.

உலுண்டனம் - உருட்டுதல், களவு செய்தல், கொள்ளையிடுதல்.

உலுத்தகன் - வேடன்.

உலுத்தத்தனம் - உலோபத்துவம், உலோபகுணம், உலோபத்தன்மை.

உலுத்தம் - உலோபம், பொருளாசை, உலுத்தத்தனம்.

உலுத்தல் - உதிர்த்தல்.

உலுத்தன் - பொருளாசைக்காரன், வாங்கின கடனைக் கொடாதவன், உலோபி.

உலுத்து - உதிர்.

உலுத்துதல் - உதிர்த்தல், உலுப்பு.

உலுப்தன் - மிக்க ஆசையுள்ளவன்.

உலுப்புதல் - உதிர்த்தல்.

உலுப்பை - அடைந்தோர் பெரியோர் முதலியவர்களுக்களிக்கு மூண்பண்டம். காய் வருக்கம், கோயில் முதலியவற்றிற் கனுப்புங் காணிக்கை, சாமான் பை, சிறு காய், அதிகாரிகள் பெரியோர் முதலியோருக்கு, மரியாதையாக அனுப்பும் உணவுப்பண்டங்கள், ஊண் பண்டம், காணிக்கை.

உலுப்பைகட்டுதல் - பெரியோர் தயவு சம்பாதிப்பதற்காக வெகுமதி அனுப்புதல்.

உலுப்பைகொடுத்தல் - கீழ்ப்பட்டவர்க்குப் படி கொடுத்தல்.

உலுப்பைப்பை - சாமான் பை.

உலுலாயம் - காட்டெருமை.

உலுவம் - வெந்தயம்.

உலுவா } பெருஞ்சீரகம், வெந்தயம், உலுவம்.
உலுவாவரிசி }

உலூகம் - ஆந்தை, இந்திரன், ஒருவகைப்பரி, குங்கிலியம், கோட்டான், கூகை.

உலூகலகம் - குங்கிலியம், உரல்.

உலூகலம் - உரல், குங்கிலியம்.

உலூகன் - இந்திரன், சகுனிமகன், இவன் பாரதயுத்தத்தில் சகாதேவனாற் கொல்லப்பட்டவன்.

உலூகாரி - காக்கை.

உலூதம் - உலூதை.

உலூதை - சிலந்திப்பூச்சி, எறும்பு.

உலூநம் - அறுக்கப்பட்டது.

உலூபி - ஒருவகை மீன்.

உலை - உலையென்னேவல், கம்மாளனுலை, நெருப்புள்ளடுப்பு, பாகஞ் செய்யவைக்கு நீருலை, கொல்லனுலை, சோறு சமைத்தற்காகக் கொதிக்கவைக்கும் நீர், மனநடுக்கம், உலைப்பாத்திரம், நெருப்புள்ள அடுப்பு.

உலைகொதித்தல் - சோறுசமைத்தற்குரிய நீர் கொதிப்படைதல்.

உலைக்கட்டல் - பொங்கற்பானைக்கு மாவிலைசெருகிய கயிறுகட்டல்.

உலைக்கட்டுதல் - பொங்கற்பானைக்கு மாவிலைசெருகிய கயிறு கட்டுதல்.

உலைக்களம் - அடுப்பு, உலைமுகம், கொல்லனுலையிடம், உலோகங்கள் உருக்குமிடம், உரவி.

உலைக்குறடு - கம்மாளர் கருவியிலொன்று, உலைமுகத்திலிரும்பு தூக்குங்குறடு.

உலங்குதல் - கீழ்ப்படுதல்.

உலசல் - உலவு, ஒவ்வாமை, கெடுதல், கேடு.

உலச்சல் - அலவு, கலக்கம், அலகை.

உலதல் - அலைதல், அழிதல், கலைதல், கெடுதல், சீரழிதல், மனங்கலங்கல், பலங்குறைதல், வருந்தல், நிலைகுலைதல், அஞ்சுதல்.

உலத்தண்ணீர் - உலைநீர், காய்ந்த இரும்பைத் தோய்க்கும் நீர், சோறு சமைத்தற்குக் கொதிக்கவைக்கும் நீர்.

உலத்தல் - அலைத்தல், அழித்தல், கலைத்தல், கெடுத்தல், சீரழித்தல், மனதைக் கலக்குதல், முறியடித்தல், வருத்தல், மனதைக் கலக்கல், ஆள்தியைக் கெடுத்தல்.

உலத்துருத்தி - உதி, அத்திரி, உதை, சிரை, கொல்லுலையிலுள்ள நெருப்பூதுந் துருத்தி.

உலநீர் - இரும்புதோய்க்குநீர், பாகஞ் செய்யவைக்குநீர், உலத் தண்ணீர்.

உலந்தபழம் - அளிந்தபழம்.

உலப்பு - அலைப்பு, முறியடிக்கை, வருத்தம், அழிவு, வருத்துகை, உலைத்தல், அகைத்தல், நிறைத்தல், வேதனை.

உலமுகம் - கம்மாள னுலை முகம், கொல்லனுலையிடம்.

உலமூக்கு - கொல்லனுலையின்மூக்கு, கொல்லுலையில் துருத்தி வைக்குந்துவாரம், குருகு, சிவை.

உலமூடி - உலைப்பானையின்மேல் மூடும் சிறு சட்டி.

உலமூட்டல் - அடுப்புமூட்டல், கொல்லனுலையில் நெருப்புமூட்டல்.

உலமூட்டுதல் - உலைவைத்து நெருப்பு மூட்டுதல்.

உலயமுது - உலைத்தண்ணீர்.

உலயர்பிணந்தின்னி - மாமிசபேதி.

உலயாணிக்கோல் - உலையிருப்புக்கோல், சூட்டுக்கோல், உலைமுகத் திருப்புக்கோல், சுட்டுக்கோல்.

உலயிற்பிணந்தின்னி - மாமிசபேதி.

உலயேற்றுதல் - உலைப்பானையை யடுப்பிலே வைத்தல், உலைவைத்தல், சமையல் செய்வதற்கு உலைப் பானையை அடுப்பில்வைத்தல்.

உலவு - அச்சம், அலைவு, அழிவு, கெடுதி, தடுக்கம், நிலையின்மை, சஞ்சலம், தோல்வி, தரித்திரம், ஊக்கக்குறைவு, உலைதல்.

உலவைத்தல் - உலைமூட்டல், உலையேற்று, உலையேற்றுதல், அழிவு செய்தல்.

உலொங்கு - கீழ்மைப்பட்டிரு.

உலொடலொடெனல் } ஓர் வகை
உலொடலொடென்று } யொலிக்
கூப்பிடல் } குறிப்பு.

உலொடலொட்டைப் பேச்சு - பிரயோசனமில்லாத பேச்சு.

உலொடுக்கு - ஒலிக்குறிப்பு, வெறுப்பு, வெறுமை.

உலொட்டி - கள்ளுக்குடுவை, மஸ்துள்ள பதார்த்தம், வெறிதருமவஸ்து

உலொட்டிக்காரன் }
உலொட்டிக்குடிக்கிறவன் } குடியன்.
உலொட்டிமூஞ்சி }

உலொட்டை - சொட்டைப்பேச்சு.

உலோககாந்தம் - காந்தம்.

உலோககாரன் - கொல்லன், உலோகக்காரன்.

உலோகக்கட்டி - பஞ்சலோகத்தை யுருக்கிக்கூட்டியகட்டி, உலோகங் கலந்த கட்டி, ஆடகம், சுவணம், தகணை, மாழை, வங்காரம்.

உலோகசனனி - இலக்குமி.

உலோகசாக்ஷி - துவாதசாதித்தருளொருவன்.

உலோகசித்து - புத்ததேவன்.

உலோகதருமிணி - போக காமிகட்குச் செய்யப்படுவதான சபீச தீட்சை வகை.

உலோகதாது - துத்தபாஷாணம்.
உலோகத்திரம் - வெள்ளி லோ த் திரம்.
உலோகநிமிளை - நிமிளைவகை.
உலோகபற்பம் - அயவெள்ளை.
உலோகபாந்தவன் - சூரியன்.
உலோகபாலகர் - அஷ்டதிக்குப்பா லகர்.
உலோகபாலன் - இராசா.
உலோகப்பிரகாசன் - துவாதசாதித் தருளொருவன்.
உலோகமணல் - இரும்புமணல்.
உலோகமாதா - இலக்குமி.
உலோகம் - இரத்தம், இரும்பு, எழு வகைலோகம், தேவலோக மு தலிய பதினலுலோகம், பஞ்சலோ கம், பார்வை, பூமி, மனிதன், உல கம், பொன் முதலிய தாதுப்பொ ருள், உலகத்துக்கடுத்த தன்மை, உலோஹம், தமனியம், தாமிரம், ஈயம், வெள்ளி, பதுகம், இரதி, நாகம், கஞ்சம், செம்பு, இவையே பஞ்சலோகம். செம்பொன், வெண் பொன், கரும் பொன், வெண்க லம், தரா.
உலோகரட்சகன் - உலகத்தைக் காப் பவன், விட்டுணு.
உலோகராட்டு - கடவுள்.
உலோகரூடம் - தேசவழக்கம்.
உலோகலன்-சுத்தமாகப் பேசாதவன்.
உலோகவாதம் - ஐதிகம்.
உலோகவிருஷ்டம் - கழுகு, பருந்து.
உலோகவேடனை - மண்ணிச்சை.
உலோகாதியந்தம் - உலக ஆரம்பமும் முடிவும்.
உலோகாதீதம் - உலகத்துக்கதீதப் பட்டது. அதாவது உலகத்துக் கெட்டாதது, மேற்பட்டது.
உலோகாபிசாரம் - யுத்தத்திற்குப்புற ப்படும்போது அரசர் செய்யும் பூசை.
உலோகாயதம் - உலகாயதமதம், சார் வாகமதம்.
உலோகாயதன் - ஈசன் கன்மம் ஆன் மாவென்பன இலவாமென்றும், மக ளிரிடத்தின்பமொன்றுமே பொரு ளாமென்றுங் கூறுஞ் சமயவாதி, சார்வாகன்.
உலோகாயிதன் - உலோகாயதன்.
உலோகார்த்தம் - இலௌகீக நயம், உலக நன்மை.
உலோகாலோகம் - பூமியை வளைத் திருக்கும் சக்கரவாளப்பருவதம்.
உலோகிதகம் - கெம்புக்கல்.
உலோகிதசந்தனம் - குங்குமப்பூ.
உலோகிதநதி - பிரமபுத்திர நதி.
உலோகிதம் - இரத்தம், சிவப்பு, செவ் வாய், மஞ்சள், யுத்தம், சிவந்தது, சந்தனம், சூகாட்டவகை.
உலோகிதன் - செவ்வாய்.
உலோகிதாங்கம் - செவ்வாய்.
உலோகேசன் - கடவுள், உலகேசன்.
உலோகேசுவரம் - சிவத்தலங்களாயி ரத்தெட்டனுளொன்று.
உலோகோத்தமம் - பொன்.
உலோகோத்தரம் - எல்லாரும் இச் சிக்கக்கூடியது, விசேஷமானது.
உலோகோயம் - இமயமலைக்குத்தெற் கும் இராமேசுரத்துக்கு வடக்கு முள்ள தேசங்கள்.
உலோசமஸ்தகம் - ஓமம்.
உலோசம் - கண்மணி, காதணி, கட் டியாபரணம், வானம், விண்ணுண்.
உலோசனம் - கண்.
உலோசி - பேய்ப்பசலை.
உலோசிதம் - சந்தனமரம்.
உலோச்சனர் - இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னுஞ் சோழ னைப்பாடிப் பரிசுபெற்ற ஒரு புல வர், அகநானூறு பாடிய புலவருள் ளுமொருவர்.
உலோச்சு - தம் தலைமயிரைத் தம் கையாற் பறிக்கை.
உலோஷ்டபேதனம் - மண்கட்டி யுடைக்குந்தடி.
உலோஷ்டம் - மண்கட்டி.

உலோட்டம் - ஓடு, மண்கட்டி, மண்ணுங்கட்டி.
உலோட்டி - சோலி, வெறியுள்ள சாராயம்.
உலோஷ்டு - மண்கட்டி.
உலோத்திரம் - ஒரு மரம்.
உலோபத்துவம் - உலோபத்தன்மை.
உலோபம் - அற்பம், ஆசை, ஈயாமை, உட்பகையாறினொன்று, குறைவு, கெடுதல், பொருளாசை, விகாரம் எட்டினொன்று, கடும்பற்றுள்ளம், கொஞ்சம்.
உலோபர் - உலோபிகள்.
உலோபனம் - ஒறுப்பு, குறைத்தல்.
உலோபன் - பிசுனன், உலோபி, கிருபணன்.
உலோபாமுத்திரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனுளொன்று.
உலோபாமுத்திரை - அகத்தியன் மனைவி.
உலோபி - நொய்யது, பிசுனன், பேராசையுள்ளவன், உலோபகுணமுள்ளவன்.
உலோபித்தல் - பிசுனித்தனம் பண்ணல், செட்டுச்செய்தல், பற்றுள்ளஞ்செய்தல், கெடுதல்விகாரமடைவித்தல்.
உலோபுதல் - உலோபி.
உலோமகருணம் - புளகப் பொடிப்பு.
உலோமசம்-சடமாஞ்சில், சடமாஞ்சி.
உலோமசன் - ஒரு மஹரிஷி.
உலோமம் - ஒழுங்கு, வால், வாணுனி, புறமயிர்.
உலோமன் - உரோமன், ஒழுங்குடையான்.
உலோலம் - அசைவு, விருப்பம், ஆசைப்பெருக்கம்.
உலோலம்பம் - வண்டு.
உலோலன் - காம விகாரமுள்ளவன், துஷ்டன்.
உலோலிதமுகம் - சிந்தையாலொரு தோண்மேற்றலைசாய்ந்து கிற்கு முகம், துக்க முகம்.
உலோலிதம் - அசைவு, சிந்தையாலொரு தோண்மேற் றலைசாய்த்தல், பயம்.
உலோலுபன் - விஷய சுகங்களில் ஆசையுள்ளவன்.
உலோலை - இலக்குமி, ஈ.
உலோவுதல் - உலோபீ.
உலௌகீகம் - இலௌகீகம்.
உல் - கழு, கூர்க்கட்டைப்பாரை, தேங்காயுரிக்குங் கருவி.
உல்கு - ஆயம், சுங்கவிறை, சுங்கம்.
உல்குசெய்தல் - சுங்கங்கொள்ளுதல்.
உல்பகம் - மறைப்பது.
உல்பா - உலுப்பை.
உல்பே - உலுப்பை.
உல்லங்கனம் - உல்லிங்கனம், மீறுகை, கடந்துபோதல், கடக்கை, அவமதிப்பு, கிந்தை.
உல்லம் - ஒரு மீன்.
உல்லரி - தளிர்.
உல்லாகசனம் - புளகப்பொடிப்பு.
உல்லாசக்காரன் - உல்லாசன், மகிழ்ச்சிமேல் நாட்டமுள்ளவன்.
உல்லாசநடை - களிப்புமிகுந்த நடை.
உல்லாசப்படுத்துதல் - களிக்கச்செய்தல், உபசரித்தல்.
உல்லாசப்பேச்சு - வீணுகப் பேச்சு.
உல்லாசம் - அத்தவாளம், அத்தியாயம், உத்தரீயம், உள்ளக்களிப்பு, சந்தோஷம், சரசக்களிப்பு, வத்திப்பு, ஏகாசம், மீக்கோள், மேற்போர்வை, வடகம், மகிழ்ச்சி, இறுமாப்பு.
உல்லாடி - மெல்லிய ஆள்.
உல்லாபம் - நலிந்தமொழி, மழலைச்சொல், மேற்கட்டி.
உல்லாபன் - நோயுற்றெழுந்தோன்.
உல்லாப்பியம் - கரமை.
உல்லி - ஒல்லி, மெல்லிய ஆள், மெல்லியது, வெங்காயப்பூ.
உல்லிங்கனம் - அவமதிப்பு, கடக்கை, கலக்கம், கண்டைமிகுதி, கிந்தை, மீறுதல்.

உல்லியம் - கிணறு.
உல்லியர்-கூவதூலோர், கூபதூலோர்.
உல்லு - ஒருதலைக்கூருள்ள கட்டை.
உல்லுகம் - கொள்ளி.
உல்லேகம் - உச்சரிப்பு, ஓரலங்காரம், பூனைத்துரை, பலபடப் பூனைவணி.
உல்லேகனம் - உயர்த்துதல், உவாந்திக்தல், எழுதல், கல்லுதல், சீவுதல்.
உல்லேற்றல் } கழுவேற்றுதல்.
உல்லேற்றுதல் }
உல்லோசம் - மேற்கட்டி.
உல்லோலம் - பெருங்கடற்றிரை, கூத்தின் அங்கக் கிரியைகளுள் ஒன்று, பேரலை, பெருந்திரை.
உவ - விரும்பு, மகிழ், இன்பமாயிரு.
உவகுருவாணன் - இல்லறத்தையடையு நிலையிலிருக்கும் பிரமசாரி.
உவகுலம் - திப்பிலி, திரிபலை, திப்பலி.
உவகை - களிப்பு, மாயயாக்கை, பதினெண் குற்றத்துளொன்று, மகிழ்ச்சி, அன்பு, காமம், சிருங்காரரசம், பிரியம், ஒகை, பிரீதி, மாராயம், முத்தம், மோதம், உகவை, சக்தோஷம்.
உவகைக்கண்ணீர் - ஆனந்தபாஷ்பம்.
உவகைக்கலுழ்ச்சி - வாட்புண்மிகுந்த கணவனைக்கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்க்கும் புறத்துரை.
உவகைச்சொல் - முகமன்.
உவகைப்பறை - மங்கலப்பறை, மகிழ்ச்சியைக்குறிக்கும் பறை, தூரியம்.
உவகைமுத்து - உவகைக்கண்ணீர்.
உவக்கான் - அப்பொழுது, அவ்விடம், உங்கே, உங்கே பார்.
உவச்சக்காணி - உவச்சனுக்கு கோயிற் கொட்டிழியத்திற்காக விடப்படும் மானியம்.
உவச்சர் - ஓச்சர், சோனகர்.
உவச்சன் - பூசாரிச்சாதியான், சோனகன்.
உவட்சி - அசைப்பு, துவளுகை.
உவட்டல் - அருவருத்தல், எதிரெடுத்தல், சத்திபண்ணல், பெருகல், வெறுத்தல், உவட்டுதல், பெருக்கு, வியங்கோண்முற்று.
உவட்டி - உவட்டிப்பு, அருவரு, குமட்டு, அருவருப்பு.
உவட்டித்தல் - அருவருத்தல், எதிரெடுத்தல், தேக்கெடுத்தல்.
உவட்டிப்பு - அருவருப்பு, குமட்டு.
உவட்டிற்கூர்மை - மாமிசபேதி.
உவட்டு - அருவருப்பு, உவட்டென்னேவல், குமட்டுகை, புரட்சி, பெருக்கு, வெறு, பிரவாகி, பெருக்கெடு.
உவட்டுதல் - அருவருத்தல், குமட்டுதல், பிரவாகித்தல், புரளுதல், வெறுப்புறுதல், தெவிட்டுதல், மிகுதல்.
உவட்டுரை - இகழ்ச்சிசொல்.
உவட்டுறல் - அருவருத்தல், பெருகுதல், தெவிட்டல்.
உவட்டெடுத்தல் - பெருக்கெடுத்தல்.
உவணகேதனன் }
உவணக்கொடியோன் } விட்டுணு, திருமால், ஸ்ரீ மகாவிஷ்ணு.
உவணமுயர்த்தோன் }
உவணம் - உயர்ச்சி, கருடன், கழுகு, பருந்து, உயரம்.
உவணர் - கருடர்.
உவணவூர்தி - உவணகேதனன், விஷ்ணு.
உவணன் - கருடன்.
உவணி - வாள்.
உவணை - உவ்விடம், தேவலோகம், சுவர்க்கம்.
உவண் - உவ்விடம், மேலிடம்.
உவதி - தருணி, பதினேறு வயதுப் பெண், யுவதி.
உவதை - மலையின் வீழருவி, பேரருவி.
உவத்தல் - மகிழ்தல், விரும்பல், பிரியமாதல், விரும்புதல்.

உவந்தோனவிடயம் - உயர்த்தினிதாயுள்ள கண்மலருடைமையும், இனிமையான உள்ளமுடைமையும், கோபமின்றிய முறுவலும், நகையுடைமையமிருத்தலும், சோலை முதலியவற்றிற்சென்று விளையாடலுடைமையு முதலியவாம்.

உவப்பு - உயரம், பிரியம், பொலிவு, மகிழ்வு, விளையாட்டு, மகிழ்ச்சி, விருப்பம்.

உவமச்சொல் - உவமவுருபு.

உவமத்தொகை - உவமையுருபு தொக்க தொடர்மொழி, உவமைத் தொகை.

உவமப்பொரு - ஒன்றை ஒப்பாகக் கூறும் உவமை.

உவமப்போலி - உள்ளுறையுவமம்.

உவமம் - ஒன்றோடொன்றை யொப்புறுத்தல், உவமை, ஒப்பு.

உவமவளவை - ஒப்பளவை.

உவமவாசகம் - உவமவுருபு, உவமையுருபு.

உவமவுருபு - உவமைகுறிக்கும் உறுபு.

உவமன் - உவமன், உவமை.

உவமாதீபகம் - உவமை விளக்கணி, ஒரு அலங்காரம்.

உவமாநிலம் - சுவர்.

உவமாவாசகம் - உவமையுருபு.

உவமானசங்கிரகம் - ஒருநூல், மகளிர் உறுப்புக்களுக்குவமை கூறும் ஒரு நூல்.

உவமானத்தொகை - உபமானந் தொக்குநிற்பது.

உவமானப்பிரமாணம் - ஓரளவை.

உவமானம் - உவமிக்கும் பொருள், சமானம், உபமானம்.

உவமானித்தல் - ஒப்பிடுதல், உவமி.

உவமானிலம் - சுவர்.

உவமாலங்காரம் - ஓரலங்காரம்.

உவமித்தல் - உவமைப்படுத்தல், ஒப்புக்கூறுதல்.

உவமிப்பு - ஒப்பிடுகை, உவமித்தல்.

உவமேயப்பொருள் = உபமேயம்.

உவமேயம் - உவமிக்கப்படு பொருள், உபமேயம்.

உவமை - உவமம், ஓரலங்காரம். அஃது பண்பு தொழில் பயன் முதலிய காரணமாகப் பொருளொடுபொருளிசைய ஒப்புவமைப்படுத்துவது, ஒப்பு, உவமையணி, ஒட்டணியாகக் கூறப் படும் நீதிகள், ஒப்புமை, இகல், இணை, ஈடு, உறழ்வு, எதிர், கட்டளை, கிடை, சங்காசம், சதிரிசம், சமம், சமானம், சன்னியம், சாயல், துணை, துல்லியம், நிகர், நிகாசம், நிபம், நேர், புரை, பொருவு, பொருவுதல், போல், மலை, மானம், மான், இடை, சாம.

உவமைத்தொகை - உவமையுருபு தொக்க சொல், வினையுவமம், பயனுவமம், மெய்யுவமம்,உருவுவமம்.

உவமையகத்திணை - இருபொருடரு ஒன்றினை ஒப்புமை காட்டி யுரைத்தல்.

உவமையாகுபெயர் - உவமானத்தின் பெயரை உவமேயத்திற்கு வழங்குவது, உவமையான பொருளின் பெயர் உவமேயத்திற்கு ஆகி வருவது.

உவமையின்மை - அசமானம், இறைவனெண் குணத் தொன்று, ஒப்பின்மை, அதுவம், தனிமை.

உவமையுருபு - உவமை, அற்று, அனைய, அன்ன, ஆங்கு, இகல், இயைய, இன்ன, உறழ், என்ன, எய்ப்ப, ஒப்ப, கடுப்ப, கதழ்வு, கேள், சன்னிபம், சன்னியம், சேத்து, தூக்கு, நிகர, நேர, புரைய, பொருவ, போல, மான, கறழ்வு, ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க, வென்ற, வியப்ப, வெள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப, கள்ள, காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள, மாற்ற, மறுப்ப, புல்ல, பொற்ப,

வெல்ல, வீழ, நாட, நளிய, நடுங்க, நந்த, ஓட, தூணைப்ப, அற்று, காய்த்த, தூளைப்ப, சுற்ற, காய்ந்த.

உவமையுருவகம் - ஓரலங்காரம். அஃது உருவகஞ் செய்பொரு ளைத் திரும்பவுமோர் விசேடத்தி னால் ஒன்றோடு ஒப்புமைப் படுத்து வது.

உவமைவிரி - ஓரலங்காரம். அது உபமா வாசகம் விரிந்து நிற்பது.

உவர்ாகம் - கிராணகாலம், கிரகணம்.

உவரி - கடல், மகளிர் விளையாட்டு, மூத்திரம், உப்புநீர்.

உவரிக்கெண்டை - ஒருமீன்.

உவரிலீலை - உபரிலீலை.

உவரை - பயிரோடுகூடிய பூமி, பூமி.

உவரோதம் - இடையூறு, உவர்க் கடல்.

உவர் - உவப்பு, உவர்ப்பு, கடல், கடு கடுப்பு, உயர்திணைப் பலர்பாற் படர்க்கைச் சுட்டுப் பெயர், வெறுப்பு, உப்புச் சுவை, உப்பு, களர் நிலம், உழைமண், இனிமை, உவர்மண், அமாவாசி, பௌர்ணி மை, உப்புக்காரி, துவர், அரோசி.

உவர்க்கடல் - சத்த சமுத்திரத் தொன்று, உப்புக்கடல்.

உவர்க்கம் - கடற்கரை.

உவர்க்களம் - உப்பளம், சவர்நிலம், உவளகம்.

உவர்க்காரம் - சவர்க்காரம்.

உவர்ச்சங்கம் - முட்சங்கு, முட்சங் குப் பூண்டு.

உவர்ச்சங்கு - முட்சங்கு.

உவர்த்தரை - உவர்க்களம், களர் நிலம், இருணல், கழிநிலம்.

உவர்த்தல் - அரோசித்தல், துவர்ப்பு, வெறுப்பு, உப்புக் காித்தல், துவர்த்தல், அருவருத்தல், வெறுத் தல், ஓர் சுவை, இலவணம், உப்பு, பௌவம்.

உவர்நிலம் - உவர்த்தரை, உவர் சேர்ந்த நிலம்.

உவர்நீர் - உப்புச் சலம், உப்பு நீர், உரவு நீர், உறை.

உவர்ப்பு - உப்புறைப்பு, நிந்தை, வெறுப்பு, உப்புச்சுவை, துவர்ப்பு, இகழ்ச்சி, அவாவின்மை, ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குற்சை. இவை முறையே கிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச் சம், அருவருப்பு.

உவர்ப்பூமி - உவர்ப்பைக் கொண்ட நிலம.

உவர்மண் - உழமண், சவர்மண், களர் நிலம், உழைமண், உப்புச் சேர்ந்த மண்.

உவர்மண்காரம் - உழைமண்.

உவலை - தழை, பொய், சருகு, இழிவு, ஒட்டை.

உவலைக்கூவல் - தழைமூடிய கிணறு.

உவல் - தழை, சருகு.

உவவனம் - உபவனம்.

உவவு - உவப்பு, உவா, தவம், பௌ ர்ணிமை, அமாவாசை.

உவளகம் - அந்தப்புரம், இடைச் சேரி, இரண்டு, உப்பளம், ஒரு பக் கம், கன்மதம, குளம், பள்ளம், மதில், சிறைச்சாலை, மனைவாயில், நீர் நிலை, அகழி, விசாலம், திரிகை.

உவளம் - சோறு, யானைக்கவளம்.

உவளல் - துவளல்.

உவளி - சுத்தஞ் செய்.

உவளித்தல் - தூயதாக்கல், தூய்மை செய்தல், சுத்தஞ் செய்தல்.

உவளு - துவளு.

உவளுதல் - துவளுதல்.

உவள் - முன் நிற்பவள், அவளுக்கும் இவளுக்கும் இடையில் உள்ளவள்.

உவள்தல் - உவளுதல், துவளுதல், கம்பித்தல், பரத்தல்.

உவறுதல் - சுரத்தல், ஊறுதல்.

உவற்றுதல் - சுரக்கச் செய்தல்.

உவனியம் - துவைத்துக் கட்டும் மருந்து.

உவனி - வாள்.

உவனித்தல் - ஈரலித்தல், தாய்மை செய்தல், எய்யத் தொடங்குதல், ஈரமாதல்.

உவனிப்பு - ஈரம், ஈரிப்பு.

உவனியம் - உபநயநம்.

உவன் - ஒரு சுட்டுச் சொல், முன் நிற்பவன், அவனுக்கும் இவனுக்கும் இடையில் உள்ளவன்.

உவன்றி - நீர் நிலை.

உவன்றி செய்தல் - நீர்நிலை யுண்டாக்குதல்.

உவா - அமாவாசி, இளமை, இளையோன், கடல், தம்பி, நிறைவு, பூரணை, யானை, வாலிபன், பௌர்ணிமை, அமாவாசை, உகாமரம், யூகநாதன், உம்பல், யானையரசு, கழிறு.

உவாகரும்மம் - உபாகரும்மம்.

உவாதி - உபாதி, எல்லை, கடுந்துன்பம்.

உவாதை - வேதனை.

உவாத்நி - கற்பிப்போன், உபாத்தியாயன், வேத மோதுவிப்போன்.

உவாத்திகன் - உபாத்தியாயன்.

உவாத்திச்சி - உபாத்தியாயனி.

உவாத்திமை - உபாத்தியாயத் தொழில்.

உவாத்திமைத் தொழில் - பள்ளிக் கூடம் வைத்திருத்தல், உபாத்தியாயரது தொழில்.

உவாத்தியன் - உபாத்தியாயன்.

உவாத்தியாயனி - உபாத்தியாயனி.

உவாத்தியாயன் - கற்பிப்போன், உபாத்தியாயன்.

உவாத்தியாரம்மாள் - உபாத்தியாயனி.

உவாத்தியான் - உபாத்தியாயன்.

உவாத்தினி - உபாத்தியாயனி.

உவாத்து - உபாத்தியாயன்.

உவாத்தேக்கு - உகாமரம்.

உவாநாடி - கிரகணபரிசன நாடி.

உவாந்தம் - பௌர்ணிமை, அமாவாசை, பூரணை.

உவாந்தி - சத்தி.

உவாமதி - பூரணைச்சந்திரன், பூர்ண சந்திரன்.

உவாய் - ஒரு மரம், உவாத்தேக்கு.

உவாலம்பம், உவாலம்பனம் } தூஷணை, உபாலம்பனம்.

உவாவறுதி - அமாவாசி, பூரணையின் முடிவு.

உவாளி - பூட்டை, அறுகு, பூட்கை.

உவிதல் - சாதல், நீர் வற்றியவிதல், நெருக்கத்தினு லவிதல், வற்றுதல், அவிதல்.

உவித்தல் - அவித்தல்.

உவியல் - சமைத்த கறி.

உவை, உவ் } அஃறிணைப் பன்மைப்படர்க்கைச் சுட்டுப் பெயர், உங்குள்ளவை, உவ்விடத்துள்ளவை, உவ்விடம்.

உவைச்சன் - உவச்சன்.

உவையம் - உபயம்.

உவ்வி - தலை, தலைவி.

உவ்விடம் - உம்பர், அவ்விடத்துக்கும் இவ்விடத்துக்கும் இடையிலுள்ளது, உவணை.

உவ்வு - தவம்.

உவ்வை - உப்பை.

உழ - பழக, முயல, வேலை செய்ய, தொழில் நடத்த, உத்தியோகஞ் செய்ய, வருந்த, தவத்தினுட்பட.

உழக்கல் - கலக்கம், காரியம், நடத்தல், சிலம்பம்பழகல், மறுவைத்தல், மிதித்தல், வருந்தல், உழக்குதல்.

உழக்கால் - உழவுகோல்.

உழக்காழாக்கு-காலேயரைக்கால் படி.

உழக்கு - உழக்கென்னேவல், காற்கொத்து, காற்படி, மிதிப்பு, கவறிட் டுருட்டும் உழக்கு, ஓர் அளக்கும் கருவி, ஓர் அளவு, சிலம்பம் பழகு, மிதி, கலக்கு.

உழக்குதல் - உழக்கல், மடித்தல், கலக்குதல், மிதித்தல், கொன்று திரிதல், உழுதல், விளையாடுதல்.

உழக்குருட்டுதல் - சூதாடுதல்.
உழக்கோல் - தாற்றுக் கோல்.
உழச்சியர் - மருதநிலப் பெண்கள்.
உழத்தல் - பழகல், புரளல், வருந்தல், வெல்லல், பிரயாசப் படுதல், முயலுதல், வருந்துதல், செய்தல், வெல்லுதல்.
உழத்தி - மருதநிலப் பெண், உழவச் சாதிப் பெண்.
உழத்திப்பாட்டு - ஓர் பிரபந்தம், உழவுச் செய்திகளைக் கூறும் ஒரு பிரபந்தம். அஃது வேளாண்மைச் சிறப்பும், வேளாண்மை மாந்தர் சிறப்புந் தோன்ற இடையிடைச் சிந்தும் விருத்தமும் விரவி வரப் பாடுவது.
உழபுலவஞ்சி - பகைவர் நாட்டைச் சுட்டொரித்தலைக் கூறும் புறத்துறை.
உழப்பல் - குழப்பிப் பேசல், பழகல்.
உழப்பறையர் - உழுது சீவிக்கும் பறையர்.
உழப்பன் - கள்ள நியாயம் பேசுகிறவன், போலி நியாயம்பேசுவோன்.
உழப்பாளி - பிரயாசி, முயற்சியுள்ளவன், பிரயாசப்படுவோன், பிரயாசப்படுவோள்.
உழப்பு - ஊக்கம், முயற்சி, வருத்தம், வலி, மனச் சஞ்சலம், வலிமை, உற்சாகம், குழப்பப் பேச்சு, கைத்தொழில், பழக்கம்.
உழப்புதல் - குழப்பிப் பேசல், பழகுதல், வார்த்தையால் மழுப்புதல், வாதஞ் செய்தல், காலங் கடத்துதல், குழப்பிப் பேசுதல், குழம்பு, உயிர் முயற்சி.
உழப்பெருது - உழுமெருது.
உழமண் - அழுக்கெடுக்கும் மண், உழைமண், உவர்மண்.
உழம்பல் / உழம்புதல் } ஒலித்தல், குழம்பல், பிதற்றல், கலந்தெதாலித்தல், குழம்புதல்.
உழம்பு - ஒலி, குழம்பு.
உழர்தல்-கோதி வகிர்தல், புரளுதல், வருத்த மாற்றுது புரளுதல்.
உழலல் / உழலுதல் } அசைதல், ஆடுதல், உலாந்து திரிதல், சுழலல், அலைதல், மனஞ் சுழலல்.
உழலு / உழல் } சுழல், ஆடு, சுற்றித்திரி, அசை, மனஞ் சுழல், பிறவிற் சுழல்.
உழலை - உழலை மரம், தாகம், செக்கு முதலியவற்றின் உழலை மரம், குறுக்கு மரம், கணைய மரம், பெருந்தாகம், ஒரு ரோகம்.
உழலைத்தடி - உழலை.
உழலை மரம் - தொண்டுக் கட்டை, மாட்டின் கழுத்துக் கட்டை, உழலை.
உழலைமாடு - ஓடிப் போகாதபடி கழுத்தில் உழலைமரங் கட்டியுள்ள மாடு.
உழல் - உழலென்னேவல், உழுதல்.
உழல்தல் / உழல்லுதல் } அசைதல், சுழலுதல், அலைதல், நிலை கெடுதல்.
உழவடை - நிலத்தின் குடிப்பாத்தியம்.
உழவடைத்தல் - உழுவதற்காக நிலத்தை ஒப்படைத்தல்.
உழவடை மிராசு - குடிமிராசு.
உழவர் - சூத்திரர், படைவீரர், பூவைசியர், மருத நில மாக்கள், வேளாளர், உழுந் தொழிலுடையோர்.
உழவன் - உழவுமாடு, உழுபவன், கரும பாரகன், வீரன், மருதநிலக் களமன், சூத்திரன், பூவைசியன், ஏர்மாடு.
உழவாரப்படை / உழவாரம் } உழைவாரம், புற்செதுக்குங்கருவி.
உழவீரம் - உழுதற்குத் தக்க ஈரம்.
உழவு - உழுந்தொழில், சூத்திரர் வைசியர்க்குரிய அறு தொழிலி லொன்று, படைச்சால், உழுகை, வேளாண்மை, சரீரத்தி னுழுக்கை, தொய்யில்.

உழவுகட்டல் - முதற்சால் போதல்.
உழவுகட்டி - உழவிலே புரண்ட மண்ணுங் கட்டி, உழவிற் பெயரும் மண் கட்டி
உழவு கட்டுதல் - முதற்சால் போதல்.
உழவுகாடு - உழவுக்கேற்ற நிலம்.
உழவுகாணியாட்சி - நிலத்தை உழுது பயிர் செய்யும் உரிமை.
உழவுகாலம் - உழும் பருவம்.
உழவுசுட்டை - உழவுமாடு.
உழவு குண்டை - உழவுமாடு.
உழவுகோல் - கேட்டிக் கம்பு, முட்கோல், தாற்றுக்கோல், குதிரை தூண்டுங் கருவி, குதிரைச் சம்மட்டி.
உழவுகோல் மாட்டுதல் - உழவு கோலில் மாட்டித் தண்டித்தல்.
உழவுசால் - படைச்சால், உழவிடும் வளையம்.
உழவு பொறுத்த மாடு - உழவில் தேர்ந்த மாடு.
உழவு மழை - உழுதற்கு வேண்டிய பருவ மழை.
உழவெருது - உழுங் காளைமாடு.
உழவோர் - உழவர்.
உழவோன் - உழவன்.
உழறுதல் - கலங்குதல், கலங்க வடித்தல், சஞ்சரித்தல், அலைதல், மோதும்படி தள்ளுதல்.
உழற்சி - ஆடுகை, சுழற்சி, திரிதல், வருத்தம், அலைகை, சுற்றித்திரிகை, மனச் சுழற்சி.
உழற்றல் - தாகம், வெப்பம்.
உழற்றி - சுழலுகை, மிகுதாகம்.
உழற்று - சுழற்சி, சுழற்று, கைகாலு ழற்று, காலத்தை வருத்தத் தோடு கழி, வருந்திப் புரள்.
உழற்றுதல் - சுழற்றுதல், வருத்துதல், வருந்திப் புரளுதல், அலையச் செய்தல், வருத்தத்தோடு கழித்தல், நோவாற் புரளுதல்.
உழன்றுறுத்தல் - கடினவேலை செய்தல், பழகித் தேர்தல்.
உழன்றி - மாட்டின் கழுத்தில் மாட்டுங் கட்டை, சுழலத் தக்கது.
உழாஅன் - உழவன்.
உழால் - உழுகை, கிண்டுதல்.
உழி - இடம், ஏழனுருபு, பக்கம், அளவு, அளவில்.
உழிஞை - அஃடை வெற்றி மாலையின் ஒன்று, சிறுபூளை, கொற்றான், பகையரண் வளைப்போர் சூடும் மாலை, உழிஞைத்திணை, ஒரு மரம்.
உழிஞைத் திணை - பகையரண் வளைத்தலை யுணர்த்துந் திணை, பகையரணை வளைக்கையில் அதனைக் காத்தலை யுணர்த்துந் திணை.
உழிஞைமாலை - ஒரு பிரபந்தம். அஃது மாற்றூரார்ப்புறஞ் சூழ உழிஞைப் பூமாலை சூட்டிப் படை வளைப்பதைக் கூறுவது, பகைவரண் பிடிப்பார்க்கு மாலை.
உழிஞையிலக்கணம் - வேற்றுவேந்தனுடைய அரணைச் சென்ற வேந்தன் வளைத்தல், இருந்த வேந்தன் காத்தல்.
உழிஞ்சில் - உன்னம், வாகை, வாகை மரம்.
உழிதரல் - சுழலல், திரிதல்.
உழிதல் - அலைதல்.
உழிதாதருதல் } அலைதல், சஞ்சரித்
உழிதாதல் } தல்.
உழு - உழுவென்னேவல், பிள்ளைப் பூச்சி, உழுவான், வருழு, நிலத்தைக் கிளை.
உழுகு - ஒழுகு.
உழுகை - உழுதல்.
உழுதகாடு - உழப்பட்ட மேட்டு நிலம்.
உழுதல் - உழல், நிலத்தைக் கிளைத்தல், கிண்டுதல், மயிரைக் கோதுதல்.
உழுதுண்போர் - வேளாளர், வேளாளரில் தாமே பயிரிட்டுண்ணும் ஒரு வகையார்.

உழுதாண் - பயிர் செய்து சீவிக்கை, பயிர் செய்து சீவித்தல்.
உழுத்தமா - உழுந்திடித் தெடுத்தமா, உழுந்தின்மா.
உழுத்தம்பொடி - உழுத்தமா.
உழுத்தல் - பதனழிதல்.
உழுத்து - ஓர் ஆபரணம்.
உழுநர் - உழவர்.
உழுநிலம் - உழுதற்குரிய பூமி.
உழுந்து - உளுந்து, மாடம், தானிய வகை, ஓர் பயறு.
உழுந்தோதனம் - உழுத்தம் பயற் றொடு கலந்தட்ட சோறு.
உழுபடை - கலப்பை.
உழுபடைச்சால் - சீதை, கலப்பை.
உழுமகன் - உழவன்.
உழுமுளை - கலப்பைக் கூர்.
உழுவம் - எறும்பு.
உழுவல் - உழுவனென்னு முற்று, குணம், முறை, விடாது தொடர்ந்த வன்பு, அன்பு, முறைமை.
உழுவலுப்பு - தொழுப்பு, உழவின் சால் வளவு.
உழுவன்பு - எழுமையுந் தொடர்ந்த அன்பு.
உழுவாங்கோல் - உழவெருதைத் தூண்டுங்கோல்.
உழுவான் - ஒரு வகைப்புழு, உழுவா னெடுத்த மண், பிள்ளைப் பூச்சி, உழு.
உழுவித்துண்போர் - வேளாளருள் பிறரைக் கொண்டு பயிர் செய் வித்துண்ணும் ஒரு வகையார்.
உழுவை - ஒருவித மீன், புலி, நல்ல தண்ணுழுவை,சுண்டல வுழுவை, தும்பிலி.
உழை - இடம், அருகு, உவர்மண், சூரியன் மனைவிகளில் ஒருத்தி, பூவிதழ், இரா, உழையென்னே வல்,எழனுருபு,எழிசையினென்று, சிரத்திற் பிறக்கு மிசை, பக்கம், பசு, மான், யாழினோர் நரம்பு, வைகறை, வாணன்மகள், மத்திம சுரம், பக்கத்தில், சமீபம், உஷா தேவி, விடியற் காலம், வினை முற்று, வருந்தியீட்டு, வேலையிற் பிரயாசப்படு, துன்பமுறு, இரை.
உழைக்கலம் - வெள்ளி முதலியவற் றூற் செய்த ஆளும் பாத்திரங்கள்.
உழைச்செல்வான் - நோயாளிக்குப் பக்கத்திருந்து மருந்து முதலியன கொடுப்பவன்.
உழைஞர் - பக்கத்தில் நிற்கும் ஏவலா ளர்.
உழைதல் - இரைதல், துன்பமுறல்.
உழைத்தல் - சேகரித்தல், சொல்லா லெழு மொலி, பிரயாசப் படுதல், வருந்தி யீட்டுதல், வேலை செய் தல், வருந்துதல், சம்பாதித்தல், வருந்தல்.
உழைத்துக் கொடுத்தல் - சம்பாதித் துக் கடன் முதலியன கொடுத்தல், பெற்றோர் முதலியவரைப் பேணு தல், ஈணுகப் பிரயாசப் படுதல்.
உழைப்பறிக்க - சேற்றிற் புரள, போராட்டப்பட..
உழைப்பறித்தல் - சேற்றிற் புரளு தல், போராட்டப் படல், வருந்தி முயலுதல், சேற்றிலுழலுதல்.
உழைப்பாளி - பிரயாசப் படுபவன், பிரையாசைப் படுபவள்.
உழைப்பு - சுறுசுறுப்பு, சேகரிப்பு, பிரயாசம், முயற்சி, வருந்தி யீட் டுகை, சம்பாத்தியம்.
உழைப்பேறுதல் - செய்த் திருத்த மடைதல்.
உழைமண் - உழமண், உவர்மண்.
உழையர் / உழையோர் } ஏவல் செய்வோர், மந் திரிகள், அமைச்சர், பக்கத்தவர், ஏவலாளர், மந்திரிகளி ன் நட்பாளர், சமீபத்திலுள்ளோர்.
உழையவர் - உழையர்.
உழையாளன் - வேலைக்காரன்.
உழையிருந்தான் - அமைச்சன்.
உழைவாரம் - ஓராயுதம்,புற்செதுக்கி, உழவாரம்.

உழைவு - யாழின் உள்ளோசை.

உளகு - யாழினேருமுப்பு, யாழின் தண்டு, கிராம வொழுகு.

உளங்கு - உளகு.

உளதம் - கேட்டல்.

உளதாதல் - உண்டாதல், இருத்தல்.

உளது - மெய்ம்மை, இருப்பது.

உளத்தியலிடை - நாயக சுரத்தி லிடைச்சொல்.

உளப்படல் } இணங்குதல், உட்படு
உளப்படுதல் } தல், சம்மதித்தல், மனதிலிருத்தல்.

உளப்படுதல் - சம்மதித்தல், உள்ளடங்குதல், உரியதாதல், உளப்பாடு.

உளப்படுத்தல் - உறழச்செய்தல், உளப்படச்செய்தல்.

உளப்படுத்துதல் - மனத்துட் கொள்ளுதல், உட்படுத்துதல்.

உளப்பறிதல் - உளவறி.

உளப்பாடு - மனத்துயர், எண்ணம், உட்படுத்துகை, உளம்படும்பாடு, இணக்கம், உட்படுகை.

உளப்பாட்டுவினை - ஒரிடப்பொருளுடன் பிறவிடப்பொருள்களையுமுட்படுத்தி அவ்வொன்றுக்குரிய விகுதியான் வினைப்படுத்துவது.

உளப்பு - நடுக்கம்.

உளப்புலப்பயன்றற் குறிப்பு - ஓரலங்காரம். அஃது இயல்பாயுள்ள பயன் வேறொன்று லாயதெனத் தற் குறிப்புச் செய்தல்.

உளப்புலவேதுத்தற்குறிப்பு-ஓரலங்காரம். அஃது இயல்பாயுள்ளதை ஏதுவினால் வந்ததென அத்தியவசயித்தல்.

உளமாந்தை - உளமாந்தை.

உளமை - உண்மை.

உளம் - ஆன்மா, நெஞ்சு, உள்ளம், கருத்து, மனம், எண்ணம்.

உளம்புதல் - அலைத்தல், சத்தமிடுதல்.

உளராதல் - இடமாதல், உடைந்தையாதல், உள்ளாதல்.

உளரு - உளர்.

உளர் - உடங்தை, உட்பட்டது, உளரென்னேவல், ஏது, சிறகு கோது, சிறகுதறு, சுழலு, உளரு, யாழினரம்பு, தடவு, தாமதி, சுழல், அசை, காற்றுளர், சிதறு.

உளர்ச்சி - உளர்தல், சுழற்சி, உளர்வு, உளர்ப்பு.

உளர்தல் - அசைதல், இறகு உதறுதல், இறகு கோதல், ஈடாடுதல், குரவையிடல், சிந்தல், சுலாவல், சுழலல், தடவல், கோதுதல், தலை மயிர் ஆற்றுதல், அசைத்தல், சிதறுதல், தடவுதல், யாழ் முதலியன வாசித்தல், கலக்குதல், தாமதித்தல், சுழலுதல், உறுதியற்றாடுதல்.

உளர்ப்பு - அலைக்கை, அலைத்தல்.

உளர்வு - அசைவு, ஈடாட்டம், சுழற்சி, உளர்கை, சுலாவல், சுழலல், பேரொலி.

உளவறிதல் - துப்பறிதல்.

உளவன் - உளவுக்காரன், வேவுகாரன், துப்பாள்.

உளவாடம் - முன்பணம்.

உளவாள் - துப்பாள்.

உளவு - அசுகை, உட்காரியம், ஒற்றன், ஒற்று, வேவு, இரகசியம், இரகசியத்திலறிந்த செய்தி, உபாயம், உள்ளதன்மை.

உளவுகாரன் - உளவன், உளவாளி.

உளறல் } குளிறுதல், தடுமாறிப்
உளறுதல் } பேசல், பிதற்றல், பேரொலி, குழறுபடையான மொழி, ஆரவாரித்தல்.

உளறு - குழறு, பயத்தினுற்றடுமாறிப் பேசு, வீணுயுளறு, கனக்கண்டு பிதற்று.

உளறுபடி } கலக்கம், குழப்பம்,
உளறுபிடி } உளறுபடை, குழறுகை.

உளறுபடை - பேச்சிற் குழறுகை, உளறப்பட்டது, உளறுபடி.

உளறுவாயன் - விடாதுபேசுவோன், பிதற்றுவோன்.

உளி - இடம், ஏழனுருபு, கணிச்சி, நகஞ்சீவி, கத்தரிக்குங் கருவி, ஓர் ஆயுதம், உழி, ஓர் கருவி, இடங்கம், தறிக்குங் கருவியி னொன்று.

உளிக்காரம் - அரிதாரம்.

உளிக்கொம்பு - விலங்கின் அடிக் கொம்பு.

உளிஞை - கோபுரவாயில், படை.

உளித்தலைக்கோல் - இருப்புப்பாரை.

உளிப்பாரை - குழிகல்லுங் கருவியில் ஒன்று, உளித்தலைக்கோல்.

உளியம் - கரடி, இடம்.

உளிவைத்தல் - மரத்தினுளியிட்டுத் தறித்தல்.

உளு - உசு, உளுவென்னேவல், ஒரு புழு, உளுத்தது, உளுத்துப்போ.

உளுக்கல் - உளுக்குதல்.

உளுக்காத்தல் } இருத்தல், இருத்
உளுக்கார்த்தல் } துதல், சுவர் முத லியன கீழிறங்குதல்.

உளுக்காரு - இரு, பொருத்துப்போ, உட்காரு, இருத்திக்கொள்.

உளுக்காருதல் - உளுக்கா.

உளுக்கு - ஒரு கருவி, நரம்புச்சுருக்கு, சுளுக்கு, உலோக பாத்திரங்களு க்கு மெருகிடு.

உளுக்குதல் - உளுத்தல், சுளுக்குதல், கெளிதல், மெருகிடுதல்.

உளுத்தல்-உலோக பாத்திரங்களுக்கு மெருகிடல், சிதைந்து போதல், மரமுதலிய மாவாதல், மரமுதலி யன புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்.

உளுந்து - உழுந்து, ஒரு பயறு, ஒரு தானியம், உளுத்தம் பயறு.

உளுப்பு - உளுத்தல், உளுக்கை, உளுத்தமரம்.

உளுப்புத்தாவல்-புழுக்கஆரம்பித்தல்.

உளுப்புத்தாவுதல்- உளுக்கத்தொடங் குதல்.

உளுவை - ஒருமீன், உளுவைமீன், ஆற்றுமீன் வகை, கடல்மீன்வகை.

உளை - ஆண்மயிர், உரோமம், உளை யென்னேவல், ஒலி, குதிரை முத லியவற்றின் பிடர்மயிர், சேறு, புற மயிர், பேசலாலெழுமொலி, தலை, தலையாட்டம, அழுகை, நோ, பிர சவ வேதனைப்படு, அழி, தோல், வருத்து, ஊளையிடு, வெறு, அழை.

உளைக்கால் - உரோமக்கால், மயிர்க் கால்.

உளைச்சல் - உளைவு, உளைப்பு.

உளைதல் - உவாதிப்படுதல், கைகால் முதலியவுளைதல், நெருடித்தல், பிரசவவேதனைப்படுதல், மனம் நோதல், குடைச்சல், நோவடை தல், வயிறுளைதல், அழிதல், தோற் றல, சிதறிப்போதல், ஊளையிடுதல், குடைதல், வருந்தல், ஈடுபடுதல், பல்லுவலித்தல்.

உளைத்தல் - அழைத்தல், ஒலித்தல், வருந்தல், வெறுத்தல், ஊளையிடு தல், வருத்துதல், யாழ் ஒலித்தல்.

உளைந்துபேசல் - ஒருவனைக் கருதிப் பேசல், சுடப் பேசுதல், மனத்தாங் கலாய்ப் பேசல்.

உளைந்து பேசுதல் - மனம் நொந்து பேசுதல்.

உளைப்பு - அழைப்பு, ஒலிப்பு, வருத் தம், உளைவு, பிதக்குடைச்சல்.

உளைமயிர் - பிடரி மயிர்.

உளைமாந்தை - கடுநோய், உட்புண்.

உளைவு - குடைவு, சரீரவருத்தம், மன நோ, வலிப்பு, வாதநோயி னொன்று, வயிற்றுளைவு, குடைச்ச நோவு, குடைச்சல், வருத்தம்.

உளைவெடுத்தல் - நோவுண்டாதல்.

உள் - இடம், உட்புறம், உள்ளென் னேவல், ஏழனுருபு, தொழிற் பெயர் விகுதி, மனம், உள்ளிடம், அந்தரங்கமானது, மனவெழுச்சி, உள்ளான், நினையென்னேவல், அகடு, அகம், அகணி.

உள்கல் } நினைத்தல், மடிதல்,
உள்குதல் } உள்ளு, உள்ளழிதல்.

உள்கு - ஆராய்.

உள்படுதல் - மனமொப்பி நடத்தல், அறிதல்.

உள்பொருள் - மூக்காலத்தினுமுள்ள பொருள், உள்ளபொருள்.

உள்மருந்து - உள்ளுக்குக்கொள்ளும் மருந்து.

உள்மனை - ஊர்க்குடியிருப்பு மனை.

உள்யோசனை - உள்ளுக்குள்ளான யோசனை.

உள்வட்டம் - நாணய மாற்றில் பெரும் ஊதியம.

உள்வணக்கம் - மனவணக்கம், அந்தரங்க வழிபாடு.

உள்வயிரம் - அகவயிரம், மனவயிரம், அகக்காழ், செற்றம்.

உள்வயிரிப்பு - புண்ணின் உரத்த உட்பாகம், கையிருப்பு.

உள்வரி - மாறுவேடம்.

உள்வலிப்பு - ஒரு நோய்.

உள்வழக்கு-உள்ளதையுள்ளதென்கை.

உள்வழிகடந்தோன் - கடவுள்.

உள்வினையல்-உள்ளே வினையலானது.

உள்வினவு - உட்கவிவு.

உள்வாங்குதல் - உள்ளுக்கிழுத்தல், சிருட்டித்தல்.

உள்வாசல் - முற்றம்.

உள்வாய்- வாயினுட்புறம், எரியினுட்பக்கம்.

உள்வாரம் - சமவாரம், மனவிருப்பம், அந்தரங்கச்சார்பு, மேல்வாரம்.

உள்விழுதல் - உள்ளேபோதல், சினேகங் கூடுதல், குறைதல், உள்ளாதல், காரியார்த்தமாய்ச் சினேகித்தல்.

உள்விழுத்துதல் - நட்பாக்கி வசப்படுத்துதல்.

உள்வினை - உட்களம், உட்பகை.

உள்வீச்சுச்சன்னி - ஒருவகை நோய்.

உள்வீடு - உள்ளினுள்ளறை.

உள்வீழ்தல் - குறைதல்.

உள்வெக்கை-ஒருநோய், உள் வெப்பு.

உள்வெட்டு - உயர்ந்த மாற்று, உரையாணியினுள் வெட்டு, மரத்தின் உட்பகுதிப் பலகை, சோற்றி வெட்டு.

உள்வெண்டயம் - அரசரேறும் குதிரைக்குக் காலில் அணியும் பித்தளைக்கழல், பொதி மாட்டின் முதுகில் வைக்கும் அணை.

உள்வெதுப்பு - உட்வெக்கை, மன வெறுப்பு.

உள்ள - இருக்கிற, உண்மையான.

உள்ளகம் - நெஞ்சு.

உள்ளக்கருத்து - உண்ணேக்கம், தாற்பரியம், மனத்தினுள்ளம்.

உள்ளக்குறிப்பு - உட்கருத்து, மனக்குறிப்பு.

உள்ளக்காட்சி - மானதக்காட்சி.

உள்ளக்களிப்பு-மனமகிழ்ச்சி.

உள்ளக்குறை - மனக்குறை.

உள்ளங்கம் - உள்ளூறுப்பு.

உள்ளங்கால் - உட்கால், உள்ளடி.

உள்ளங்கை - அகங்கை, அங்கை, குடங்கை.

உள்ளடக்கம் - எண்ணங்களை வெளிவிடாமை, அடக்கி வைத்த பொருள்.

உள்ளடக்கல் - அமசடக்கம்.

உள்ளடக்குதல் - உட்பட்டிருக்கச் செய்தல், மறைத்தல்.

உள்ளடங்கல் } உட்பட்டிருத்தல்.
உள்ளடங்குதல் }

உள்ளடங்கு - உட்பட்டிரு.

உள்ளடி - இரகசியம், உள்ளங்கால், கிட்டடி,சமீபம்,நெருங்கிய சுற்றம்.

உள்ளடிக்குள் - வீட்டிலுள்ளவர்க்குள்ளே.

உள்ளடிநிலம் - அடுத்துள்ள நிலம்.

உள்ளடியார் - உறவர்.

உள்ளடியிலே - உள்ளடிக்குள்.

உள்ளதனபாவம் - ஆனையைப் பந்தியிற் கண்டிலமென்றூர்போலும் அபாவம்.

உள்ளது - உடையது, உண்மை, உள்ளமை, சரியானது, உள்பொருள், மெய், விதிக்கப்பட்டது, ஆன்மா.

உள்ளதுசிறத்தல் - களிப்பு, கூர்ப்பு.
உள்ளத்தம் - கருத்துப்பொருள்.
உள்ளத்துறைவோன் - கடவுள்,
உள்ளநாள் - ஆயுள்நாள், ஆயுட்காலம், ஓரிடத்திலிருக்குங் காலம்.
உள்ளநிகழ்ச்சி - மனக்கருத்து.
உள்ளநெறி - சம்பவப் பிரமாணம்.
உள்ளநோய் - மனோவியாதி.
உள்ளந்தாள் - உள்ளங்கால்.
உள்ளபசுமை - ஐயமற்ற உண்மை, மெய்வாழ்வு.
உள்ளபடி - உண்டான அளவு, யதார்த்தம், உண்மையாக, தக்கவளவு.
உள்ளபிள்ளை - பணக்காரப்பிள்ளை.
உள்ளப்படிறு - மனவஞ்சம்.
உள்ளப்புணர்ச்சி - மனதிலே புணர்ச்சி பண்ணுவதாக நினைத்துருகியடைதல், வீணெண்ணத்திற் கொண்ட மகிழ்வு, தலைவனும் தலைவியும் உள்ளத்தாற் கூடும் கூட்டம்.
உள்ளமட்டும் - இருக்கிறவரையிலும்.
உள்ளமிகுதி - ஊக்கம், உள்ளக்கிளர்ச்சி, ஆட்சி, ஆண்மை, ஆள்வினை, உத்தியோகம், உரம், உரன், உற்சாகம், ஊக்கம், சால்பு, சான்றாண்மை, தாளாண்மை, யோகம், உறம்.
உள்ளமுடையான் - ஒரு சோதிட நூல்.
உள்ளமை - உடைமை, உண்மை.
உள்ளம் - ஆன்மரூபஞானம், ஆன்மா, புருடன், கருத்து, மனம், முயற்சி, வாக்கியத்தின் கருத்து, ஊக்கம், விஞ்ஞானம், அகச்சான்று, உல்லம், உல்லமீன்வகை, ஆத்மா, மனச்சாட்சி.
உள்ளரங்கம் - அந்தரங்கம்.
உள்ளல் - உள்ளான்குருவி, நினைத்தல், மறவாது மதித்தல், கருத்து.
உள்ளவறிவு - விஞ்ஞானம்.
உள்ளவன் - உடையவன், பணக்காரன், பொருளுடையவன்.
உள்ளவாறு - உள்ளபடி.
உள்ளழிதல் - மனமழிதல்.
உள்ளளவு - உண்டானமட்டும், சிலநாள் மட்டும்.
உள்ளளவும் - உள்ளமட்டும்.
உள்ளறை - உள் வீடு, பெட்டியினுள்ளறை.
உள்ளன் - உள்ளிருக்குமாள், சினேகன், போர் அடிக்கிற மாடுகளில் தலைமாடு.
உள்ளா - ஒரு வகைக் கடல்மீன்.
உள்ளாகல் } உடந்தையாதல், உட்
உள்ளாகுதல் } படுதல், கீழ்ப்படுதல், சேரல்.
உள்ளாக்கல் }
உள்ளாக்குதல் } வசப்படுத்தல்.
உள்ளாடல் - உள்ளாடுதல்.
உள்ளாடு சத்துரு - உள்ளானவனைப் போலிருக்குஞ் சத்துரு, உட்பகைஞன்.
உள்ளாடுதல் - உடந்தையாதல், உட்சேரல், உளவறிய உள்ளே பயிலுதல்.
உள்ளாடை - மகளிருள்ளுடை.
உள்ளாதல் - உடந்தையாதல், உட்படுதல், வசப்படுதல், உடன்படுதல்.
உள்ளாந்தரங்கம்-மிகுந்த அந்தரங்கம்.
உள்ளாயிருத்தல் - உற்றயோசனைக் காரணமிருத்தல்.
உள்ளாயுதம் - தடிக்குளடங்கிய கத்தி.
உள்ளார் - இருப்போர், உடையோர், உள்மனிதர், பகைவர்.
உள்ளாளம் - கூத்தின் விகற்பம், கானவகை.
உள்ளாளனம் - கூத்தின் விகற்பம், உள்ளாளம்.
உள்ளாளுங்கள்ளாளும் - இருபுறத்துக்கு மிணங்கிக் கள்ளமாய் நிற்பவன்.
உள்ளாள் - வீட்டிற் பயில்வோன், வீட்டிற் பயில்வோள்.
உள்ளானம் - உள்ளாளனம்.
உள்ளான் - இருப்போன், உடையோன், உள்மனிதன், ஒருகுருவி,

பகைவன், உள்ளன், உள்ளல், ஓர் பறவை, உள்ளு.

உள்ளி - வெண்காயம், வெள்ளைப் பூண்டு, வெங்காயம், வெள்ளுள்ளி.

உள்ளிடல் } உட்படுதல்.
உள்ளிடுதல் }

உள்ளிடை - உட்காரியம், அந்தரங்கம்.

உள்ளிடையானவன் - இனத்தான்.

உள்ளிட்டது - உள்ளடங்கியது.

உள்ளிட்டார் - கூட்டாளிகள், பங்காளிகள்.

உள்ளித்திரி - உள்ளிப்பூண்டின் உள்ளிருக்கும் பகுதி.

உள்ளிந்திரியம் - மன முதலிய புலன்கள்.

உள்ளிப்பல் - பூண்டின் திரி.

உள்ளிப்பூடு - பூண்டுவகை.

உள்ளிப்பூண்டு - உள்ளிப்பூடு.

உள்ளியர் - அறிவுடையோர்.

உள்ளிருப்பு - வைத்திருக்குமாஸ்தி, வைப்புநிதி.

உள்ளிவிழவு - உள்ளிவிழா.

உள்ளிவிழா - பண்டைக்காலத்துக் கருவூரில் நிகழ்ந்த திருவிழா.

உள்ளின்மாசு - மனமாசு.

உள்ளீடு - உட்படுகை, உள்ளிருக்குஞ் சத்து, உள்ளானகருத்து, உடன் படிக்கை, உள்ளே இடப்பட்டது, உள்ளே இடுவது.

உள்ளு - உள்ளான் பறவை, உள்.

உள்ளுக்குக் கொடுத்தல் - உண்ணும் படி மருந்து கொடுத்தல்.

உள்ளுக்குச் சாப்பிடுதல் - மருந்துண்ணுதல்.

உள்ளுக்குள் - உள்ளே.

உள்ளுச்செல்லுதல் - நினைவோடுதல்.

உள்ளுடன் - பலகாரத்திலுள் வைத்தது, உட்கிடக்கை.

உள்ளுடை - கோவணம், உள் வேட்டி, கௌபீனம்.

உள்ளுடைதல் - மனமுறிதல், முழுதுஞ் சிதைதல், மனங்கலங்குதல்.

உள்ளுடைவு - மனத்துயர்.

உள்ளுதல் - எண்ணல், நினைத்தல், நினைதல், ஆராய்தல், மதித்தல்.

உள்ளுப்புடை - உட்டுளை.

உள்ளுயிர் - கடவுள்.

உள்ளுயிர்க்குன்று - நத்தை.

உள்ளுருகல் - மனங்கரைதல்.

உள்ளுருகுதல் - மனங்கரைதல்.

உள்ளுருக்கி - ஒருவகைநோய், க்ஷணநோய்.

உள்ளுறுதல் - உள்ளாதல்.

உள்ளுறுத்தல் - உட்படுத்தல், நினைப்பித்தல், உட்செலுத்துதல், உட்கருதுதல், உள்ளிடுதல், உட்புகுத்தல், நினைத்தல்.

உள்ளுறை - உள்ளெண்ணம், பாடும் படி புலவர்க்குக் கொடுக்குஞ் சமிசை, மறைபொருள், உட்கருத்து, பொருளடக்கம், உள்ளுறையுவமம்.

உள்ளுறையுவமம் - உய்த்துணர்வகைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் பிறவற்றொடும் புலப்படுவது, தோன்றுமலுவமிப்பது.

உள்ளூர் - ஊர்நடு, சொந்தவூர், வழக்கமானவூர்.

உள்ளூர்ச்சரக்கு - சொந்த ஊரில் விளையும் பொருள்.

உள்ளெரிச்சல் - பொறுமை.

உள்ளே - உள்ளாக.

உள்ளேபோடுதல் - தன்வசப்படுத்துதல்.

உள்ளொடுக்கம் - மனவொடுக்கம், தன்னடக்கம்.

உள்ளொற்றுதல் - உண்ணிகழ்ச்சியை உய்த்துணர்தல்.

உள்ளோசை - அகவொலி, உள்ளொலி, மெல்லோசை, ஒளிர், தெளிர், நரல்வு, நுழைவு, நுணுக்கம், முரல்பு, முரல்வு, விழைவு, மணிமுதலியவற்றினுள்ளணுக்கு.

உள்ஷரத்து - அந்தரங்க ஒப்பந்தம்.

உற - கிட்ட, ஓர் உவமவுருபு.

உறகுதல் - உறங்குதல்.

உறக்க - பிழிய, கறக்க, முற்றுங் கவர, கிள்ளியெடுக்க, பிதுக்க.

உறக்கம் - ஒடுக்கம், நித்திரை, மரணம், யாக்கைக்குற்றம்.பதினெட்டில் ஒன்று, சோர்வு.

உறக்கல் - உறங்கச்செய்தல், கறக்குதல், கிள்ளல், பிழிதல், முற்றுங் கவரல், விரலாற் பிதுக்கியெடுத்தல், தூங்கச் செய்தல், இமையை மூடச்செய்தல்.

உறக்கு - உறக்கென்னேவல், நித்திரை, துயிற்று, நாசப்படுத்து.

உறங்கல் - உறங்குதல், நித்திரை செய்தல்.

உறங்கி - புளியமரம்.

உறங்கு-நித்திரைசெய், ஒடுங்கு,சோர்.

உறங்குதல் - இலை முதலிய வொடுங்குதல், நித்திரை, மயக்கமுறுதல், சோர்தல், தங்குதல், வதங்குதல், நித்திரைசெய்தல்.

உறட்டலன் - வறண்டவன், உடல் வற்றியவன்.

உறட்டல் - உலர்த்தல், வறண்டது.

உறட்டற்களி - வறட்களி, வரண்ட களிமண்தரை.

உறட்டி - அப்பம், வறண்டது, உரொட்டி.

உறட்டு - உறண்டைநாற்றம், குறை, குறைசொல்லல், சதுப்புநிலம், சுறட்டு, கரட்டுநிலம், வரட்டு.

உறட்டுக்கண் - வக்கிரக்கண்.

உறட்டுக்கை - இடக்கை.

உறட்டுதல் - வறட்டுதல்.

உறட்டை - தூர்க்கந்தம், வறட்சி.

உறட்டையடித்தல் } தூர்க்கந்தம்
உறட்டைவீசல் } வீசல்.

உறண்டல்மண் - வறள்மண்.

உறண்டற்களி - வறட்களி.

உறண்டு - முரட்டுக்குணம், வறள்.

உறண்டுதல் - வறள்தல்.

உறண்டை - உறட்டை, தொந்தரை செய்கை, முரட்டுத்தனம், தூர்க்கந்தம்.

உறண்டையாடல் - அலக்கழிவு செய்யல்.

உறத்தல் - கறத்தல், பிதுக்கல், முற்றக்கவர்தல், கிள்ளியெடுத்தல், பிளத்தல், அழுத்துதல், உறிஞ்சுதல், ஒட்டக் கறத்தல், சிறிதாதல், செறிதல், தூணுகுதல், நெருங்குதல்.

உறந்தை - உறையூர்.

உறப்பு - செறிவு.

உறமுறை - உறவின்முறை.

உறல் - உறுதல், கிட்டல், வருதல், அடைகை, உறவு, பரிசம், பொருந்தல்.

உறவர் - உறவோர்.

உறவன் - உறவுடையான்.

உறவாக்கல் - ஒருமைப்படுதல், நட்பாக்கல்.

உறவாக்குதல் - சமாதானப் படுத்துதல்.

உறவாடுதல் - உறவாதல், நட்புச்செய்தல்.

உறவாதல் - ஒருமைப்படல், கேண்மையாதல், சினேகமாதல், சிநேகமாதல்.

உறவாளி - உறவினன்.

உறவி - உயிர், உலக்களம், உறவு, ஊற்று, எறும்பு, ஒருபுழு, கிணறு, சுற்றம், மலமுருங்கை, பிரிவிருத்தி.

உறவின்முறையார் - உறவர், பந்துக்கள்.

உறவு - உற்றசமயம், எறும்பு, ஐக்கம், ஒற்றுமை, சம்பந்தம், சிநேகம், சுற்றம், சேர்க்கை, பொருத்தம், உறுகை, நட்பு, விருப்பம், பிரிவிருத்தி, இகுளை, இனம், உறவி, ஒக்கல், கடும்பு, கயிறை, கேள், தொடர்ப்பு, நண்பு, நல்லி, பந்தம், பரிசனம், பாசனம், குடும்பம், கூளி, கேண்மை, பந்தனம்.

உறவுகூடுதல் - சிநேகங்கூடல், நட்பாதல்.

உறவுகொண்டாடல் - உறவாடல், உறவு பாராட்டல்.

உறவுமுறையார் - உறவின்முறையார், சுற்றத்தார்.

உறவோர் - சுற்றத்தார், நண்பர், சுற்றத்தோர், அடைந்தோர், இருளே, இனத்தார், உரியோர், உற்றூர், கிளைஞர், சார்ந்தோர், சிறந்தோர், சூழ்ந்தோர், தக்கார், நமர், நட்டோர், நள்ளியர், பரிசனம், பற்றினர், மேவினர். அன்றியும் தந்தைவழிச்சுற்றம், தாயம். இவ்வழியுறவோர் ஞாதிகள், தாயத்தார், தாயாதிகள். குடியிலிறந்தோர் பெயர் - தென்புலத்தார், பிதுர்க்கள், பிதிர்கள், பிதிர்க்கள், நண்பர்.

உறழ - ஒருவகையுருபு.

உறழல் - உறழ்தல், எண் கூட்டிப் பெருக்கல்.

உறழ் - இடையீடு, ஒப்பு, காலம், பெருக்கம், வாது, பெருக்கு, பகை கொள், விகற்பமாகு, எதிராகு, இகல், உவமையாகு.

உறழ்கலி - கலிப்பாவகை.

உறழ்குறித்தல் - வாதுசெய்யக்கருதுதல்.

உறழ்ச்சி - உறழ்வு, உண்கூட்டின் பெருக்கம், மாறுபாடு, திரிகை, விகற்பம், பிரஸ்தாரம், பெருக்கல்.

உறழ்தலுவமை - ஓரலங்காரம்.

உறழ்தல் - இகலல், இடையிடல், உவமித்தல், எண்கூட்டிப்பெருக்கல், எதிராதல், பகைத்தல், போலுதல், விகற்பமாதல், இடையிடுதல், மாறுபடுதல், திரிதல், செறிதல், வீணையில் ஒருநரம்பைவிட்டு ஒருநரம்பைத் தெறித்தல், ஒத்தல்.

உறழ்ப்பு - காந்தார பஞ்சமம்.

உறழ்வு - இடையீடு, உணர்வு, உவமை, எண்ணின் பெருக்கம், எதிர், சமம், பகை, போர், விகற்பம், உறழ்ச்சி, ஒப்பு, செறிவு, மாறுபாடு, எண்பெருக்கல், எண்பெருக்குகை.

உறன்முறை - உறவுமுறை.

உறுதவன் - நொதுமலன்.

உறுமை - உதாசீனச் செயல்.

உறூர் - பகைவர்.

உறுவரை - முற்றூட்டு, சொந்த அநுபவத்திற்குரிய நிலம்.

உறுவுதல் - சோர்தல்.

உறி-உறியென்னேவல், தூக்கு, பண்டம் வைக்கும்பொருட்டுத் தொங்கவிடும் உறி, சிக்கம், சிதர், சிமிலி.

உறிஞ்சல் } உள்ளேவாங்கல்,
உறிஞ்சுதல் } உள்ளிழுத்தல், ஆக்கிராணி, உள்ளேயிழு, வாயால் உள்ளிழுத்தல், மூக்கால் உறிஞ்சுதல்.

உறிதல் - உறிஞ்சுதல்.

உறியடி - வைணவத்திருவிழா, கிருஷ்ணன் பிள்ளைப் பருவத்தில் உறிவெண்ணெயெடுத்ததைக் கொண்டாடும் திருநாள்.

உறியடுக்குச்சட்டி - உறியில் வைக்கப்படும் அடுக்குப்பானை.

உறியிற்சமணர் - சமண முனிவருள் ஒருபாலார்.

உறு - உறுவென்னேவல், மிகுதி, மிக்க, மிகுதியான.

உறுகஞைளன் - தரித்திரன், தீவினையாளன்.

உறுகண் - அச்சம், தரித்திரம், துன்பம், நோய்.

உறுகண்ணுளர் - உறுகண்ணுடையோர், தரித்திரர்.

உறுகண்ணுளன் - அச்சமுள்ளான், தரித்திரன்.

உறுகை - உறுதல்.

உறுகோள் - சம்பவம்.

உறுக்கல் - அதட்டல், கடத்தல், குதித்தல், கோபம், சினக்குறிப்பு, தண்டித்தல், உறுத்துதல், படத்தல், கடிந்துகொள்ளல், பயமுறுத்தல், குரூரமாய்ப் பேசல்.

உறுக்காட்டம் } உறுக்குதல், உறுக்காட்டியம் } தத்துவம், உறுக்கு } அதட்டுகை, அதிகாரஞ் செலுத்துகை.

உறுக்குதல் - அதட்டுதல், கோபித்தல், தண்டித்தல், தாண்டுதல்.

உறுசுவை - சாராலங்காரம்.

உறுசூது - வஞ்சகம்.

உறுண்டுகம் - அவுபலபாஷாணம்.

உறுதல் - அடைதல், உண்டாதல், இடைத்தல், கூடல், சம்பவித்தல், சேர்தல், தங்கல், பொருந்தல், வருதல், இருத்தல், நன்மையாதல், வருந்துதல், மனத்தினிகழ்தல், மிகுதல், பழுதுபடுதல், படுதல், பரிசித்தல், அன்பு கொள்ளுதல், ஒத்தல், தொடங்குதல், அனுபவித்தல், நினைத்தல், பயனுறல்.

உறுதி - அங்கம், அறிவு, ஆதாரம், ஆற்றல், ஆண்மலாபம், உள்ளகாரியம், உற்றதொழில், சம்பவிப்பது, கல்லி, உபதேசம், தளாராகிலே, திடவாக்கு, நம்பப்படுந் தன்மை, நல்லகாரியம், நன்மை, நிச்சயம், பயன், வல்லமை, திடம், புருஷார்த்தம், செய்யத்தக்கது, மந்திரம், நல்லுபதேசம், இலாபம், ஆட்சிப்பத்திரம், விடாப்பிடி, உறுவது, பலம், வலி, வினைமுற்று, திரம், வலிமை, சன்மார்க்கவுபதேசம், திடப்படுத்துகை, தளராமை, வழக்கின் திடம், பிடிவாதம்.

உறுதிக்கட்டுரை - இடித்துக்கூறுகை.

உறுதிச்சீட்டு - ஸ்திரப்படுத்தும் சாஸனம், உறுதிச்சொல்லைக் குறிக்கும் சீட்டு.

உறுதிச்சுற்றம் - உற்றதுணைவர்.

உறுதிச்சொல் - கண்டிப்பு, நல்லுபதேசம், நிசச்சொல், நிச்சயமொழி, இடித்துரை, இடி, இடித்தல், கழறல், நெருங்கல், கண்டிப்பு.

உறுதிபண்ணுதல் - ஸ்திரம் பண்ணுதல்.

உறுதிபயத்தல் - நயன்றரல், நலந்தருதல்.

உறுதிபூசுதல் - திடப்படுத்துகை.

உறுதிப்படுதல் - ஸ்திரப்படுதல், திடப்படுதல்.

உறுதிப்படுத்தல் - சாதனமுடித்தல், வற்புறுத்தல், நிச்சயப்படுத்தல், பெலப்படுத்தல், ஸ்திரப்படுத்துதல், பலப்படுத்தல், தெருட்டல், வருட்டல்.

உறுதிப்படுத்து - பலப்படுத்து, உடன்படிக்கை செய்.

உறுதிப்பத்திரம் - எழுத்துறுதி, உறுதிச் சீட்டு.

உறுதிப்பாடு - திடம், ஸ்திரப்படுகை, வாக்குறுதி, திடப்படுத்தல்.

உறுதிப்பொருள் - ஞானம், கடவுள், நிச்சயார்த்தம், உறுதி, உறுதியான பொருள்.

உறுதிமுடித்தல் - சாஸனம் எழுதிக் கொடுத்தல்.

உறுதிமொழி - உறுதிச்சொல், பிரமாணமாகச் சொல்லும் வார்த்தை.

உறுதியர் - உற்றதுணைவர், தூதர், மந்திரிகள்.

உறுதியோர் - தூதர்.

உறுதுணை - உற்றதுணை.

உறுத்தல் - உண்டாக்கல், உறுவித்தல், ஏற்படுத்தல், ஒற்றுதல், சேர்த்தல், தாக்கல், நாட்டல், நினைப்பித்தல், பயத்தல், வருத்தல், வருவித்தல், மிகுக்கை, ஒற்றுகை, மிகுத்தல், பொருத்துதல், அழுத்துதல், மனதிலுறுத்தல்.

உறுத்தாதருதல் } நெருக்குதல்.
உறுத்தாதல் }

உறுத்துதல் - உண்டாக்குதல், அமைத்தல், அடைவித்தல், ஒற்றுதல், மனத்தழந்தச் செய்தல், அழுத்துதல், மனத்தை வருத்துதல், மிகுத்தல், விரித்தல், கோபித்துச் சீறுதல், உறுத்தல்.

உறுத்தை - அணில்.

உறுநர் - சேர்ந்தவர்.
உறுநன் - சேர்ந்தவன்.
உறுங்கருவாய் - தற்சமயம்.
உறுபு - செறிவு, பாலையாழ்த்திறம், மிகுதி.
உறுபூசல் - கைகலந்த யுத்தம்.
உறுபொருள் - உடையாரில்லாமையால் ஒருவனுக்குக் கிடைக்கும் பொருள்.
உறுப்படக்கி - ஆமை.
உறுப்பணங்கெட்டவன் - உறுப்பினங் கெட்டவன் என்பதின் திரிபு, அங்கவீனன், மூடன்.
உறுப்பறை - அங்கவீனன், அங்கச்சேதம், அவயவம் அறுத்தல், கை குறைத்தல் முதலியன.
உறுப்பற்றவன் - அவயவவீனன், ஒழுக்கமில்லான், அங்கவீனன்.
உறுப்பா - ஒருமரம். இது மலையாளக் கரையில் உற்பத்தி, கப்பல்செய்வதற்கு உபயோகமான மரவகை.
உறுப்பில்பிண்டம் - உறுப்புக் குறை எட்டிலொன்று. அஃது அங்கங்கள் நிறைவில்லாதது, கருவில்வடிவுறுமுன் சிதைந்த தசைப்பிண்டம்.
உறுப்பினகவல் - ஒரு பொருண்மேற் பற்றிசைப்பது.
உறுப்பு - அங்கம், அடுக்கு, அடையாளம், அவயவம், உடல், உறுதி, காணியாட்சிப்பத்திரம், துறுவல், நெருக்கம், பங்கு, மரக்கொம்பு, மிகுதி, மேல்வரிச்சட்டம், உடம்பு, மெய்யெழுத்து, பாலையாழ்த்திறம், அங்கலட்சணம், காத்திரம், அங்கலக்ஷணம்.
உறுப்புக்குறை - அங்கவீனம்.
உறுப்புக்குறைவிசேடம் - ஓரலங்காரம். அஃது வேண்டு முறுப்புக் குறைவை செயலினருமைதோன்றக்கூறுவது.
உறுப்புத்தள்ளுகை-அண்டுதள்ளுகை
உறுப்புத்தற்கிழமை - உறுப்போடொற்றுமையுடையது.
உறுப்புத்தோல் - பூணூலிற் கட்டிய மான்றோல்.
உறுப்புநலனழிதல் - துயருறுவோரது அங்கத்தழகு கெடல்.
உறுப்புமயக்கம் - உறுப்புக்குறை எட்டிலொன்று.
உறுப்புள்ளவன் - அங்கலட்சணமுடையவன், ஒழுக்கமுள்ளவன், திறமை யுடையவன், திறமுடையவன்.
உறுமல் - இரைதல், உறுமுதல், எழும்பல், குமுறல்.
உறுமாலா, உறுமாலே, உறுமால் } அஸ்தபாவாடை, தலைச்சீலை, தலைப்பாகை, உருமால், தலைச்சாத்து, மிக்க, மிகுதியான.
உறுமி - ஒருபறை, தண்ணுமை, ஒருவகைத் தோற்கருவி.
உறுமியடித்தல் - குறுந்தடியால் ஒலியுண்டாகுமாறு உறுமியை மெய்த்தடித்தல்.
உறுமு - முறுமுறு, பன்றியுறுமு, மேகமுழங்கு, சின, எழும்பு.
உறுமுதல் - உறுமல், உறுமென்று ஒலித்தல், முறுமுறுத்தல், எழும்புதல், சினத்தல், இரைதல், முழங்குதல்.
உறும்பு - உலர்ந்த கரம்பை மண்ணின் கூரிய சிறுகட்டி.
உறும்புதல் - உறுமு.
உறுவது - வரப்போவது, ஒப்பது, சம்பவிப்பது, இலாபம், தகுவது, வரற்பாலது.
உறுவதுகூறல் - எண்வகை விடையிலொன்று.
உறுவதுதெரிதல் - வணிக ரெண்குணத்தொன்று. அஃது வருவதறிதல்.
உறுவதுரைத்தல்விடை - வினவுக்கு விடையாய் உறுவதைச் சொல்லல்.
உறுவர் - தேவர்.
உறுவர் - முனிவர், மிக்கவர்.
உறுவலி - மிக்கவலியுடையோன்.

உறுவல் - உறுவேனென்னுமுற்று, தின்பம்.

உறுவன் - அருகன், முனிவன், அடைந்தோன், எதிர்ந்தவர், மிக்கோன்.

உறுவித்தல் - வருவித்தல், அனுபவித்தல், பொருத்துதல்.

உறுவை - ஔவை சகோதரிகள் நால் வருளொருத்தி.

உறை - ஆடையழுக்கற்றுநீர், இடம், இருப்பிடம், இரை, இலக்கக் குறிப்புளொன்று, உயர்ச்சி, உவர்நீர், உறையென்னேவல், காரம், கிணற்றுறை, கௌசனை, துளி, நீளம், படைக்கூடு, பண்டம் பெய்யுறை, பாம்பின் விடப்பை, பாலிடுபிரை, பொருள், மருந்து, மழை, மழைத்துளி, வாழ்நாள், விலங்குணவு, வெண்கலம், பெருமை, உயரம், பேரளவுக்குச் சங்கேதமாக் விடுஞ் சிற்றளவுக்குறி, மிகக் குறைவானது, ஓரளவு, தின்பம், ஆயுதக்கூடு, பண்டம் பெய்யுங்கூடு, காணிக்கைப்பொருள், ஒழுகல், மழைக்காலம், உறைமோர், ஆடையழுக்கற்றுமுவர்நீர், உணவு, உறைப்பு, கூடு, இறை, வினைமுற்று, இலக்கக்குறி, வாசஞ்செய், இரு, சஞ்சரி, இறுகு, செறி.

உறைகாரர் - படையுறைசெய்வோர், காரோடர், முச்சியர்.

உறைகாரன் - காரோடன்.

உறைகாலம் - மழைக்காலம், வாழ்நாள்.

உறைகுத்தல் - பிரைகுத்தல், பிரையிடல்.

உறைகுத்துதல் - பாலுக்குப் பிரைகுத்துதல்.

உறைகோடுதல் - பருவமழை பெய்யாதொழிதல்.

உறைக்கப்பார்த்தல் - உற்று நோக்குதல்.

உறைக்கிணறு - சுடுமண்ணுறையிட்ட கிணறு.

உறைச்சாலை - ஔஷதசாலை.

உறைதல் - இருத்தல், சஞ்சரித்தல், ஒழுகுதல், இறுகுதல், செறிதல், வசித்தல், பால் முதலியன இறுகுதல், நிலப்பால் முதலியனவிறுகுதல், வசித்தல்.

உறைத்தரல் - உதிர்தல்.

உறைத்தல் - அழுந்தல், எரிதல், காத்தல், தாக்கல், துளித்தல், உதிர்தல், சுவையுறைத்தல், தாக்கிப் பயன் வினைத்தல், முள் முதலியன உறுத்துதல், காரமாயிருத்தல், உறுத்தல், ஊன்றுதல், மோதுதல், மிகுதல், அதட்டுதல், அவமானித்தல், அமுக்குதல், ஒத்தல், அதட்டுகை, சிந்துதல், கார்த்தல்.

உறைத்துளி - மழைத்துளி.

உறைநாதி - வெட்டியான் மானியம்.

உறைந்தமழை - கட்டியான மழை.

உறைபதி - இருப்பிடம், வசிக்குமூர், சுயவிருப்பு, உறைவிடம், இருக்கும் இடம்.

உறைபனி - இறுகின பனி.

உறைப்பன் - சக்திமான்.

உறைப்பு - உக்கிரம், எரிவு, காரம், கூர்மை, கொடுமை, திரப்படுகை, மழை, தாக்குகை, பதிவு, சுவைக் கூர்மை, ஊற்றம், வாய்ப்பு, அழுத்தம், வேதனை, மழை பெய்கை.

உறைப்புக்காட்டுதல் - காரமாதல்.

உறைமோர் - பாலிடுபிரை, பலப்பு.

உறையல் - பிணக்கு.

உறையிடம் - இருப்பிடம், உள்வீடு, தங்குமிடம்.

உறையுள் - ஆயுள் இருக்குமிடம், உறைகாலம், ஊர்ப்பொது, தங்குமிடம், நாடு, மக்கட்படுக்கை, மருதநிலத்தூர், வீடு, உறைகை, ஊர், மனிதர் துயிலுமிடம், யுகம், நகரம்.

உறையூரேணிச்சேரி - ஒரு சிற்றூர், அது உறையூரெல்லையிலுள்ளது.

உறையூர் - திருச்சிராப்பள்ளிக் கருகி லுள்ள சோழனூர், மருதநிலத் தூர், சோணாட்டின் பழய தலை நக ருள் ஒன்று, உறந்தை, கோழி.

உறையூர்நிகளாபுரி - காவிரியின்றென் கரையிலுள்ள ஒரு விஷ்ணு ஸ்த லம்.

உறையூர்முதுகூற்றனார் - கடைச் சங் கப் புலவர்களுளொருவர்.

உறையூர்வல்லி - உறையூரிற் கோயில் கொண்ட இலக்குமி.

உறைவி - உறைபவள்.

உறைவிடம் - இருக்குமிடம், ஆகாரம்.

உறைவு - இருப்பு, உறையுந்தன்மை, தங்குகை, இருக்குமிடம், இறுகை.

உற்கசம் - ஒரு புண்ணிய தீர்த்தம். அரு தவுமியரைப் பாண்டவர்கள் புரோகிதராக வரித்தவிடம்.

உற்கடம் - அதிகம், சமயமில்லாநிலம், நிறைவுடையது, செருக்கு, நன் னரி, மதயானை, வெறி.

உற்கடிதம் - பஞ்சதானத்தொன்று.

உற்கடுகாதனம் - சம்மணமாயிருத் தல்.

உற்கட்டிதம் - இருக்கை வகை.

உற்கணம் - தட்டை.

உற்கண்டிதம் - தூக்கப்படல்.

உற்கமம் - ஒருதேசம், கௌடமைந் தின் ஒன்று.

உற்கம் - ஊழித்தீ, கடைக்கொள்ளி, தீத்திரள், அனற்றிரள், விண்வீழ் கொள்ளி, எரிகொள்ளி.

உற்காரி - கோபத்தோடு பேசு.

உற்காரித்தல் - சினத்தார்த்தல், வாந் தித்தல்.

உற்கருடம் - அதிசயம்.

உற்கலன்- சுமைகாரன், பறவைபிடிப் போன்.

உற்கல் - எரிந்துவிழுதல்.

உற்கன் - சயன்மகன்.

உற்காதம் - ஆரம்பஞ் செய்காரியம், ஆயுதம், ஆரம்பம், தூற்பிரிவு, விர ணம்.

உற்காதா - யாகஞ்செய்யும் ஆசிரிய ருள் ஒருவன், சாமவேத கீதம் பாடுபவன், உத்காதா.

உற்காமுகம் - கொள்ளிவாய்ப்பேய்.

உற்காரசூலை - ஒருநோய்.

உற்காரம - அதிர்ச்சி, இரைதல், உக் காரம், தூற்றியபொலி, வாந்தி, தூற்றுந்தானியம், வாந்தி செய் தல், கார்ப்பு.

உற்கிரமணம் - போதல்.

உற்கிராமம் - எதிரிடை, திறம்புதல்.

உற்கிருட்டம் - மேன்மையானது,உற் கிருஷ்டம்.

உற்கிருஷ்டம் - மிகுதி, மேன்மை, மேன்மையானது.

உற்கிருதி - வடமொழிச் சத்தவகை.

உற்கீதம் - பிரணவம், சாமவேதம் பாடுதல்.

உற்கீதை - பிரணவம்.

உற்கீரணம் - உவாந்தித்தல்.

உற்குதல் - விண்ணினின்றும் எரி கொள்ளி விழுதல்.

உற்குரோசம் - சத்தம், நீர்வாழ்ப் பற வை, நீர்ப்பறவை வகை.

உற்கை - கடைக்கொள்ளி, சுவாலை, தீ, தீக்கொள்ளி, விண்மீன், விண் வீழ்கொள்ளி, நெருப்புக்கொள்ளி.

உற்கோசகன் - பரிதானம்வாங்கி.

உற்சங்கம் - இணைக்கை வகை, உற் சங்கக்கை.

உற்சர்க்கத்தலம் - மூலாதாரம்.

உற்சர்க்கப்பிணி - உலகம் வாணாள் போக முதலியவைகளால் வளர் பிறைபோற் பெருகுங்காலம், சம ணரின் காலப்பிரிவில் ஒன்று.

உற்சர்க்கம் - அத்திவாரம், கைவிடு தல், கொடை, தானம், மலமோச னம்.

உற்சர்ப்பிணி - உலகம் வாணாள் போகம் முதலியவை பெருகுங் காலம், சமணரின் காலப்பிரிவி லொன்று.

உற்சவபேரம் - உற்சவ விக்கிரகம்.

உற்சவமூர்த்தி - உற்சவர்.

உற்சவம் - உயர்ச்சி, களிப்பு, கோபம், திருவிழா, விருப்பம், விவாகம், கொண்டாட்டம், ஆசைப்பெருக்கம், சாறு, சேறு, தூணங்கறல், மூருகு, விழா.

உற்சவர் - உற்சவத்திலெழுந்தருளும் விக்கிரகம்.

உற்சவவிக்கிரகம் - திரு விழாவில் எழுந்தருளுந் திருவுரு.

உற்சற்சனம் - நன்கொடை.

உற்சாகசத்தி - அரசற்குரிய மூச்சத்திகளிலொன்று.

உற்சாகஞ்செய்தல் - பெருமுயற்சி செய்தல்.

உற்சாகபங்கம் - ஊக்கக்கேடு.

உற்சாகப்பிழை - ஊக்கமின்மை.

உற்சாகமருந்து - களிப்புண்டாக்கும் மருந்து.

உற்சாகம் - ஊக்கம், சந்தோஷம், நூல், புண்ணியமேழிலொன்று, முயற்சி, மகிழ்ச்சி, உத்ஸாகம், உத்ஸாஹம், உரூற்று, இயற்றல், உழப்பு, உத்தியோகம், ஆள்வினை, தாளாண்மை, மனப்பூரிப்பு.

உற்சாதனம் - அழித்தல், உழுதிரட்டித்தல், போதல், வாசனை யூட்டல்.

உற்சாயம் - உற்சாகம்.

உற்சாரகன் - கடைகாப்போன்.

உற்சுகம் - இச்சித்தல்.

உற்சுகாசீரணம் - ஒருவகைச்சீரண நோய். அது அறுசுவையுடனெரு வன் புசிக்க அதிலிச்சைப்பட்டேக்கமுற்றவர்களுக்கு மூன் வழக்கமான போசனம் அசீரணப்பட்டு வெகுநேரம் பொருத்துஞ்சீரணிக்காமல் எலும்பைப்போலவே கிடக்கும். அப்போது புளியேப்பம், வயிற்றிலிரைச்சல், பொருமல், நோவோடு அநேக உபத்திரவங்களான விகார முதலிய குணங்களை யுண்டாக்குவது.

உற்சேதம் - உடல், உயர்ச்சி, காயம்பட்ட சரீரம், கொலை.

உற்சேபணம் - கால்செய்வட்டம்.

உற்சேபம் - அலைபுரள்தல், அனுப்புதல், எறிதல், கக்குதல், மோதுதல்.

உற்பதம் - தப்பு, பறவை, பிழை, மேலேபோதல்.

உற்பதனம் - உற்பத்தி, ஏறுதல், மேலேபோதல்.

உற்பத்தி - கருவுண்டாகுகை, தோற்றம், பிறப்பு.

உற்பத்திக்கிரமம் - பிறப்புவகை, வங்கிஷ அட்டவணை.

உற்பத்திசமவாதம் - மாவிரதம்.

உற்பத்திப்பிரயோகம் - காரணங்களாலுகிய காரியம், பொருண்மாட்சி.

உற்பலசாசனன் } பெருங்காயம்.
உற்பலசானன் }

உற்பலபத்திரம் - உற்பலத்தினிலை, பெண்களின் தனம், திலகம், நகரேகை.

உற்பலம் - கருநெய்தல், குவளை, சீதேவியார், செங்கழுநீர், செங்குவளை, கோட்டம், நெய்தல்.

உற்பலம்பம் - தோற்றம்.

உற்பலவரை - திருத்தணிகைமலை.

உற்பலவனம் - நடந்தது.

உற்பலாவதி - சுராவஷ்டிரன்பாரி, தாமசமனுவுக்குத் தாய். இவள் நிர்விருதவிருஷிசாபத்தால் மிருகமாகிச்சுராவஷ்டிரன் பரிசத்தாற் கருப்பந்தாங்கினவள்.

உற்பலாவர்த்தகவிமானம் - திருவிண்ணகரியிலுள்ள விமானம்.

உற்பவமாதல் - பிறத்தல்.

உற்பவமாலை - ஒரு பிரபந்தம். அஃது பாட்டுடைத்தலைமகன் பிறப்பினை ஆசிரிய விருத்தத்தாற் பாடுவது. திருமால் பிறப்புப் பத்தினையும், ஆசிரிய விருத்தத்தால் கூறும் பிரபந்தம்.

உற்பவம் - கருப்பந்தரித்தல், பிறப்பு, உற்பத்தி, சனனம், தோற்றம், பூரணகுதி செய்தல்.
உற்பவி - பிற, கருப்பபடு.
உற்பவித்தல் - உற்பத்தியாதல், பிறத்தல், தோன்றுதல்.
உற்பவிப்பு - கருப்படுகை, பிறப்பு.
உற்பனம் } உண்மை, உத்தமம்,
உற்பன்னம் } கல்வி, தோற்றம், பிறப்பு, விரைவில் அறிகை, தோன்றியது, நிமித்தம்.
உற்பாடனம் - கக்கல், கிருமூடம்.
உற்பாதகம் - எண்காற்புள்.
உற்பாதபிண்டம் - மேதாவி.
உற்பாதம் - கொடுமை, தப்பு, தானுய்ச்சம்பவித்தது, துன்னிமித்தம், நுண்ணறிவு, யூகம் முதலியன, விண்வீழ் கொள்ளி, உத்பாதம், துர்க்குறி.
உற்பாதயோகம் - ஓர் அசுப யோகம்.
உற்பாதனம் - பிறப்பித்தல்.
உற்பாதித்தல் - உண்டாக்குதல்.
உற்பிச்சம் - உத்பிச்சம்.
உற்பிராசனம் - நிந்தை.
உற்பிரேட்சை - ஓரலங்காரம். தற்குறிப்பேற்றம்.
உற்பின்னம் - பிளவுபடுதல்.
உற்பீசம் - நிலத்திற்பிறப்பன, உற்பிச்சம்.
உற்பூதம் - காணப்படுவது.
உற்றது - சரியானது, தகுந்தது, நிகழ்ந்த காரியம், உண்மை, நேர்ந்தது, பொருந்தியது.
உற்றதுரைத்தல்விடை - வினவுக்கு விடையாய்ச் சம்பவித்ததைச் சொல்லல்.
உற்றபடி - நிகழ்ந்தவாறு.
உற்றபண்புரைப்போர் - தூதர்.
உற்றவளவு - உள்ளதன்மை, சரியளவு.
உற்றவன் - உறவின் முறையான், சேர்ந்தவன், தகுந்தவன், சுற்றத்தான், நண்பன், நோயாளி, உறவன்.
உற்றவிடம் - ஆபத்துக்காலம், சினேகமான இடம்.
உற்றறிதல் - ஆராய்ந்தறிதல், சேர்ந்தறிதல், பரிசித்தறிதல், பயின்றறிதல்.
உற்றறிவு - பரிசவுணர்ச்சி.
உற்றுணமை - உள்ளந்தரங்கம், உற்றசிநேகம், நெருங்கிய உரிமை.
உற்றுணமைபேசுதல் - பரிந்துபேசுதல்.
உற்றுராய்தல் - தீர்க்கமாயாலோசித்தல்.
உற்றூர் - உறவோர், சினேகர், சுற்றத்தார், நண்பர், மிக்கவர், சிநேகர்.
உற்றூன் - கணவன்.
உற்றிடம் - அடைக்கலம், ஆபத்து, உற்றசமயம், ஆபத்துக்காலம்.
உற்று - ஓர் உவமவாசகம்.
உற்றுக்கேட்டல் - கவனமாய்க் கேட்குதல், உற்றுக்கேள்தல், கூர்ந்து கேட்டல், கவனமாய்க்கேள்.
உற்றுணர்தல் - ஆராய்ந்தறிதல்.
உற்றுநோக்கல் - உற்றுப்பார்த்தல்.
உற்றுநோக்குதல் - கவனித்து நோக்குதல், கூர்ந்தாராய்தல்.
உற்றுப்பார்த்தல் - கண்ணூன்றிப் பார்த்தல், உற்றுநோக்கு, ஆராய்ந்து பார்த்தல்.
உற்றுழி - வருத்தமான காலம், துன்புறு காலத்தில், உற்றிடம்.
உற்றூர் - உற்றூர்.
உனகன் - இழிந்தவன்.
உனத்தகு - குறிஞ்சா.
உன் - விரைந்தெழும்பு, உந்து, உன்னை, இழுப்பு, உனது, உன்னென்னேவல், மனம், நினை.
உன்மணி - உயர்ந்தமணி.
உன்மதம் - மதிமயக்கம், கழிகாமம்.
உன்மத்தகம் - ஊமத்தை.
உன்மத்தகி - குறிஞ்சா, சிறுகுறிஞ்சா.
உன்மத்தம் - ஊமத்தை, மயக்கம், மன்மதாவஸ்தையிலொன்று,

வெறி, காமன் கணைகளுள் பைத் தியமுண்டாக்குவது, காமனங் கணைகளிலொன்றன் செயல், பைத்தியம், மன்மதன் கணை யுளொன்று.

உன்மத்தர் - பித்தர், மயக்கமுடை யோர், வெறியர்.

உன்மத்தன் - மாலியவந்தன் மகன், பித்தன், வெறியன்.

உன்மத்தி - குறிஞ்சா.

உன்மத்து } ஊமத்தை, ஊமத்தஞ்
உன்மத்தை } செடி, உன்மத்தகம், ஊமத்தை.

உன்மந்தம் - கொலை.

உன்மனி - உடலிலேயுள்ளஒரு யோக ஸ்தானம்.

உன்மனை-பிராசாதவியல்பி லொன்று, உன்மனி.

உன்மாதபித்தம் - ஒருவகைப் பித்த நோய். அது அறிவீனம், மந்த புத்தி, வெட்கமுஞ் சாதிபேதமும் விடல், அதிக வார்த்தை, எப்பம், வாந்தி, வயிறுப்பல், அக்கினிமந் தம், கூச்சம், அழுகை, தூர்ப்பலம், நித்திராபங்கம், அதிகதாகம், மூர்ச்சை, சோவைஷ, எரிச்சலென்னும் இக்குணங்களே யுண்டாக்கும்.

உன்மாதம் - மயக்கம், வெறி.

உன்மாதவானு - சித்தப்பிரமைகொண்டவன்.

உன்மார்க்கம் - துன்னடை.

உன்மானம் - நிறை, அளவு, நிறுக்கை.

உன்மானன் - இச்சித்த பொருள் கிடைப்பதெப்போதென்றவசரப்படுவோன்.

உன்முகம்-ஒன்றிற் கருத்தாயிருக்கை, மேனோக்கம், மேனோக்கியமுகம், முன்னோக்குகை, அனுகூலமாயிருக்கை, அண்ணாந்து பார்க்கை, மேல் நோக்கம்.

உன்முகன் - கருத்தாயிருப்பவன், உன்முகி, சகுனர்மனுவுக்கு நடுவலியிடம் பிறந்த புத்திரன். பாரி புவ்கரணி. மக்கள் அங்கன், சுமனசன், கியாதி, கதரு, ஆங்கீரசன், கயன், பிரீதகேசி.

உன்முகி - உன்முகன்.

உன்மேதை - கொழுப்பு.

உன்மை - தசை பிடுங்குங் குறடு.

உன்னதஸ்தானம்-மேலான ஸ்தானம்.

உன்னதம் - உயர்ச்சி, மேன்மை, உந்நதம்.

உன்னதி - வத்திப்பு.

உன்னநிலை - போர்க்குமுன் உன்ன மரத்தால் நிமித்தமறியும் புறத்துறை, உன்னம்.

உன்னமனம் - எழுச்சி.

உன்னம் - அன்னப்புள், ஈரம், தசை பிடுங்குங் குறடு, நினைவு, நீர்வாழ் பறவைப்பொது, மனம், அன்ன வகை, கருத்து, தியானம், நிமித்தம் குறிக்கும் ஒரு மனம், அன்னப்பறவை வகை, தசை கிழிக்குங்கருவி, சிறு விரலும் பெரு விரலும் தம் முட்கூட மற்றை மூன்று விரல்களும் விட்டு நிமிரும் இணையாவினைக்கை, அன்னம்.

உன்னயம் - உயர்வு, அசுவ சாத்திர நூல்களிலொன்று, உன்னயம், உயர்த்துகை.

உன்னயனம்-உந்நயம், அருத்தாபத்தி, ஆலோசித்தல், தியானம், உந்நயனம்.

உன்னலர் - பகைவர்.

உன்னல் - உன்னுதல், நினைத்தல், நினைக்கை, மனம்.

உன்னுகங்கொடி - பெருமுசுட்டை.

உன்னுகம் - காடி.

உன்னுமம் - உயர்த்துதல்.

உன்னுயங்கொடி - கொடிவகை.

உன்னுயம் - உயர்வு.

உன்னுலயம் - இதயம்.

உன்னி - அழிஞ்சில், குதிரை, தியானத்திற்குரிய பொருள், செடிவகை, சிந்தி, உன்னிப்பு.

உன்னித்தல் - தியானித்தல், உயர்தல்.

உன்னிப்பு - உயர்வு, ஊகிப்பு, கவனிப்பு, குறிப்பு, பலம், முயற்சி, புத்தி கூர்மை, கௌரவம், உயரம்.

உன்னியம் - அயிக்கம், செசாந்தம், ஐக்கம்.

உன்னியர் - பந்துக்கள், சுற்றத்தார்.

உன்னு-ஊன்றி நிமிர், விரைந்தெழும் புகை, இழுக்கை, சடைச்சி, நினை, இழு, உந்து, பேச வாய் கூட்டு, எழும்பு.

உன்னுதல் - இழுத்தல், உந்தல், கிளர்தல், நினைத்தல், பாய்தல், விரைந்தெழுப்பல், சிந்தித்தல், பேச வாய் கூடுதல், ஊஞ்சலுந்துதல், எழும்புதல், முன்னங்கால் விரலூன்றி நிமிர்தல்.

உஜ்ஜர் - உசூர்.

உஜ்ஜீவனம் - உய்வு.

உஜ்ஜீவித்தல் - உய்தல்.

உஷக்காலம் - வைகறை.

உஷாகாலம் - உஷக்காலம்.

உஷார் - கவனம், தயார்.

உஷ்ணகாரகன் - சூரியன்.

உஷ்ணகாரி - சூடுதருவது.

உஷ்ணகாலம் - வேனிற்காலம்.

உஷ்ணசஞ்சீவி - பிரண்டை.

உஷ்ணசன்னி - சூரிய வெப்பந்தாக்குதலாலுண்டாகும் நோய்.

உஷ்ணசிகை - செவ்வாய், சனி, சூரியன் என்ற இவைகளிலொன்றுக்கு அடைந்த இராசிகளின் கால்.

உஷ்ணபூமி - வெப்பமுள்ள தேசம்.

உஷ்ணபேதி - சூட்டினாலுண்டாகும் வயிற்றுப் போக்கு.

உஷ்ணமண்டலம் - உஷ்ணமான பிரதேசம்.

உஷ்ணமானி - சூடளக்குங் கருவி.

உஷ்ணம் - வெப்பம், கோபம்.

உஷ்ணவலயம் - உஷ்ணமண்டலம்.

உஷ்ணவாதக்கிராணி - கிராணிவகை.

உஷ்ணவாயு - அஜீரண சம்பந்தமான நோய்.

உஷ்ணதிக்கம் - வெப்ப மிகுதி.

உஷ்ணித்தல் - சூடாதல்.

உஷ்ணோதகம் - வெந்நீர்.

உஸ்தாத்து - உபாத்தியாயர், தேர்ந்தவர்.

உஸ்தி - உத்தி.

ஊ

ஊ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் ஆறும் எழுத்து, உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துகளுள் வாயைத் திறத்தலோடு இதழ் குவிவாற் பிறக்கும் ஒரு நெட்டுயிர், உணவு, இறைச்சி, சந்திரன், சமாக்கிய கலை, சிவன், ஊன், ஒரெழுத்து, ஒரொலிக்குறிப்பு, வருத்தமாற்று தனுங்கல், வினையெச்ச விகுதி, உண்ணு, தசை, சதை.

ஊகடன் - முருங்கை.

ஊகம் - ஊமத்தை, கருத்து, குரங்கு, தியானம், நினைவு, படைவகுப்பு, புலி, ஞானம், வியூகம், ஒருவகைப் புல், ஊகித்தறிகை, ஆலோசனை, யுக்தி, பிராந்தி, பெண் குரங்கு, கருங்குரங்கு, அறிவு, யூகம்.

ஊகனம் - அனுமித்தல், தீர்த்தல், நியாயஞ் சொல்லுகை.

ஊகனி - துடைப்பம்.

ஊகாஞ்சிதம் - தற்குறிப்பேற்றம்.

ஊகாமுள் - ஊகம்புல்லின் முள்.

ஊகாரம் - ஒரெழுத்து.

ஊகி - ஊகிப்பவன், நுண்ணறிவுடையோன், நுண்ணறிவுடையோள், நினை, உத்தேசி.

ஊகித்தல் - உத்தேசித்தல், நியாயஞ் சொல்லல், நினைத்தல், மட்டுக்கட்டுதல், யோசித்தல், ஆலோசித்தல், தருக்கித்து ஆராய்தல்.

ஊகிபாஷை - யூகிபாஷை.

ஊகூ - ஒரு வித்தியாதரன், கந்தருவருள் ஒருவன்.

ஊகை - யூகை, கல்வி, ஊகம், யூகம்.

ஊகைமுள் - ஊகாமுள்.

உளக்கப்பாடு - உளக்கங்கொள்கை.

உளக்கம் - உண்மை, உயர்ச்சி, உள்ள மிகுதி, உற்சாகம், முயற்சி, வலி, மனக்கிளர்ச்சி, வலிமை, உள்ளக் கிளர்ச்சி, மேற்கொண்ட எண்ணம், உளக்கு, உள்ளத்தின் மிகுதி.

ஐயகோ - ஐயோ, இரக்கம் துக்கங்களின் குறிப்பு.
ஐயக்கடிஞை - பிச்சை வாங்குங் கலம்.
ஐயக்கணசூலை - ஒருநோய், சூலை நோய்வகை.
ஐயக்காட்சி - ஐயம், ஓரளவை.அஃது குற்றியோமகனை எனக்காண்டல், தோன்றின தொரு பொருளை அதுவோ இதுவோ என்று இரண்டுறக் கருதுகை.
ஐயக்காரன் - சந்தேகி, பிச்சைக் காரன்.
ஐயக்கிளவி - ஐயச்சொல்.
ஐயங்கவீனம் - புதுவெண்ணெய், ஹையங்கவீநம்.
ஐயங்கன் - ஒருபேய்.
ஐயங்காய்ச்சி - ஒருதேவதை, ஒரு நோய், ஒரு பெண்பேய்.
ஐயங்கார்- பிராமணருக்குள் ளதிகாரி, வைணவப்பிராமணன், வைஷ்ணவாசாரியர், ஸ்ரீ வைஷ்ணவப்பிராமணர் பட்டப்பெயர்.
ஐயச்சொல் - வினாச்சொல், அவை என்னகொல், எவன், யாதென்பன.
ஐயஞ்சு - நிலப்பனைக்கிழங்கு, நிலப்பனை.
ஐயடிகள்காடவர்கோனாயனார் - தொண்டைநாட்டிற் பல்லவராசவமிசத்துதித்துச் செங்கோனடாத்திய வோரரசர். இவர் அரசாட்சி துன்பமய மெனக்கருதி அதனைவெறுத்துப் புத்திரனை அரசனுக்கிச் சிவத்தொண்டையே மேற்கொண்டு ஸ்தலங்கடோறுஞ் சென்று தரிசனந் திருப்பணி முதலியன செய்துகொண்டிருந்து திருப்பதமடைந்தவர், கூற்றிரக்கோவை வெண்பாப்பாடியவருமிவரே.
ஐயநாடி - சிலேட்டுமநாடி.
ஐயபூளி - பருமணல்.
ஐயப்படல் } சந்தேகப்படுதல்.
ஐயப்படுதல் }
ஐயப்படாமை - அறுத்துறுப்பி னொன்று. அஃது சந்தேகப்படாமை.
ஐயப்பாடு - சந்தேகப்படுதல், ஐயம்.
ஐயமறுதல் - பஞ்சவினாவினொன்று. அஃது சந்தேகநீர்த்தல்.
ஐயமறுத்தல் - சந்தேகநீர்த்தல்.
ஐயம் - இரப்போர்கலம், ஒருவிதக் காட்சி, கோழை, சந்தேகம், சிலேத்துமம், பிச்சை, முத்திவிக்கின மூன்றினொன்று, மோர், சிலேட்டுமம், அகப்பொருட் டுறைகளுள் ஒன்று, ஐயக்காட்சி, ஐயவணி, சிறுபொழுது, குற்றம்.
ஐயம்பிடாரி - ஒருகிராமதேவதை.
ஐயம்புகுதல் - பிச்சையெடுத்தல்.
ஐயர் - பார்ப்பார், பெருமையிற் சிறந்தோர், முனிவர், வானோர், பெரியோர், ஸ்மார்த்தப்பிராமணர் பட்டப்பெயர், வீரசைவர் பட்டப்பெயர், பாதிரிமார் பட்டப்பெயர்.

ஐயவணி - ஓரலங்காரம். அஃது ஒப் புமையினு னெருபொருளே அது வோ அதன் ஒப்புடைப்பொருளோ வென ஐயமுறுதல்.

ஐயவதிசயம் - ஓரலங்காரம்.

ஐயவி - கடுகு, வெண்சிறு கடுகு, ஒரு நிறை, கடுக்காய், கதவிற்குக்காவ லாக புறவாயிலிலே தூக்கப்படும் தூலாமரம், அம்புகளின்கட்டு.

ஐயவித்தூலம் - ஐயவி, தலைகளைப் பிடித்துத் திருகும்படி நெருக்கும் ஒருமதிற்பொறி.

ஐயவிலக்ஙு - ஓரலங்காரம். அஃது ஐயுற்றதனை விலக்குதல்.

ஐயவினு - சந்தேகவினு, ஐயமறுத் தல்வினு.

ஐயவுணர்வு - நிச்சயமில்லாவறிவு.

ஐயவும்மை - சந்தேகவும்மை, உம்.

ஐயவுவமை - ஓரலங்காரம். அஃது உவமையையும், பொருளையும் ஐயுற்றுரைப்பது.

ஐயவோ - இரக்கக் குறிப்பு.

ஐயள் - வியக்கத்தக்கவள், வியத்தற் குரியள்.

ஐயறிவுயிர் - ஐம்புலன்கள் வழியாய் அறிவடையு முயிர்.

ஐயனரிதனர் - புறப்பொருள் வெண் பாமாலை யாசிரியர்.

ஐயனர் - அரிகரபுத்திரன், வனரட்ச கன், சாத்தன், அரியரபுத்தி ரன், அறத்தைக்காப்போன், ஆரி யன், ஐயன்,கருங்கடல்வண்ணன், காரி, கோழிக்கொடியோன், சாத வாகனன், செண்டாயுதன், புட் கலைமணாளன், புறத்தவன், பூரணை கேள்வன், யோகி, வெள்ளை யானை யூர்தி.

ஐயனர்கொடி - கோழிக்கொடி.

ஐயனர் தேவியார் - பூரணை, புட்கலை.

ஐயனர் வாகனம் - வெள்ளையானை, காரிக்குதிரை.

ஐயன் - அரசன், அருகன், அழகுடை யவன், கடவுள், சிவன், உபாத்தி யாயன், உயர்ந்தோன், ஐயனர், குரு, சாத்தன், தந்தை,மூத்தோன், முனிவன், ஆசான், பார்ப்பான், ஸ்மார்த்தப்பிராமணர் பட்டப்பெ யர், எசமானன், பிதா, ஐயர்.

ஐயன்பாழி - சாஸ்தாகோயில்.

ஐயா - ஒருவரை மரியாதையோடழை க்கும் ஒரு விளிப்பெயர், தலைவன், ஐயன்.

ஐயாகோ - ஐயகோ.

ஐயாயிரம் - ஒரெண், ஐந்து ஆயிரம்.

ஐயாறு - திருவையாறு.

ஐயானனம் - சிங்கம், சிங்கராசி.

ஐயானனன் - சிவன், ஐந்து முகங் களையுடைய சிவன்.

ஐயிதழ் - ஒருதுத்தி, துத்தி.

ஐயுணர்வு - ஐம்புலவறிவு, ஐயவுண ர்வு, புலன்கள் வேறுபாட்டால் ஐந் தாகிய உணர்வு.

ஐயுறல் - ஐயப்படல், ஐயுறுதல்.

ஐயுறவு - சந்தேகம்.

ஐயுறுதல் - ஐயுறல், சந்தேகித்தல், சந்தேகப்படுதல்.

ஐயூர் - மூலங்கிழார்,முடனுரென்னும் புலவர்களேத் தந்தவூர்.

ஐயெனல் - விரைவினகுறிப்பு, வருத் தக்குறிப்பு, உடன்படற் குறிப்பு, விரைவுக் குறிப்பு, அதட்டற் குறி ப்பு.

ஐயே - விளிக்குறிப்பு.

ஐயை - காளி, தலைவி, தவப்பெண், தாய், தூர்க்கை, பார்வதி, மகள், குருபத்தினி, மாதாமிகள்.

ஐயைந்து - இருபத்தைந்து.

ஐயையோ, ஐயோ } அதிசய விரக்கச்சொல், இரக்கச்சொல், சோ கக்குறிப்பு.

ஐயோன் - நுண்ணியன்.

ஐராணி - இந்திராணி, பார்ப்பதி, பார்வதி.

ஐராபதம் - ஐராவதம்.

ஐராவணம் - அமிர்தம், இந்திரன் யானை, ஒருமரம், கீழ்த்திசையானை,

சிவபிரான் வாகனமாகிய யானை, பட்டத்துயானை.

ஐராவணன்
ஐராவதப்பாகன் } இந்திரன்.

ஐராவதம் - இந்திரன்யானை, கீழ்த்திசையானை, தோடை, மின்னல்.

ஐராவதி - ஒருநதி, மின்னல், யமன் மனைவி.

ஐரிணம் - ஒருப்பு.

ஐரேயம் - கள்.

ஐரோப்பியன் - ஐரோப்பா கண்டத்தான்.

ஐலபிலன் - குபேரன், திலீபனென்னு மரசன்.

ஐலவிலன் - இலவிலன் மகன்.

ஐலேயம் - எலம்விளையும்பூமி.

ஐலேயன் - புரூரவச்சக்கிரவர்த்தி.

ஐவகைக்குசலவித்தை - ஐந்துவகையான குசலவித்தைகள். அவை எண்ணல், எழுதல், இலேகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல் என்பன.

ஐவகைத்தந்தையர் - அரசன், தலைவன், தந்தை, முன்னோன், குரு.

ஐவகைத்தாயார் - ஈன்றதாய், உவட்டுத்தாய், செவிலித்தாய், கைத்தாய், முலைத்தாய்.

ஐவகைத்தெய்வமணி - ஐந்துவகையான தெய்வமணிகள். அவை சிந்தாமணி, சூடாமணி, சூளாமணி, சிமந்தகமணி, கௌத்துவமணி என்பன.

ஐவகைப்பாசம் - எழுவகைக் கூத்துக்களினிலக்கணத்தொன்று. அது சமயநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்பன.

ஐவகைப்பொழுது - சிறு பொழுதின் வகையைந்து. அவை காலை, நண்பகல், மாலை, யாமம், வைகறை.

ஐவகைப்பொன் - பஞ்சலோகம்.

ஐவகைமயிர்முடி - ஐவகைக்கூந்தல். அவை குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி.

ஐவகைமன்றம் - காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஐந்து வகையான மன்றம். அவை வெள்ளிடை, இலஞ்சி, கல், பூகதருக்கம், பாவை என்பன.

ஐவகையாகம் - ஐவகை வேள்வி.

ஐவகையுலோகம் - ஐவகைப் பொன்.

ஐவகைவேள்வி - ஐந்து வகையான யாகம். அவை தேவயாகம், பிரமயாகம், பூதயாகம், மானுடயாகம், பிதிர்யாகம் என்பன. பஞ்சமகாயாகம், ஐவகையாகம்.

ஐவணம்
ஐவணி } மருதோன்றி, ஐவண்ணம்.

ஐவண்ணமணி - சௌகந்திகப் பதுமராகமணி.

ஐவண்ணம - மருதோன்றி.

ஐவருக்கம் - வடமொழி நெடுங்கணக்கிற்ககரமுதன் மகரவிறுவாய்க்கிடந்த இருபத்தைந்து மெய்யெழுத்துகள்.

ஐவருக்குந்தேவி - துரோபதை.

ஐவர் - பஞ்சபொறி, பாண்டவர், ஐம்பொறி, ஐம்புலன்.

ஐவர்க்குந்தேவி - திரௌபதி.

ஐவர்ணம் - பரவமகளிர் கால்விரல்களிற் பூணும் அணி.

ஐவனம் - மலைநெல்.

ஐவாய்மான் - பசு, சிங்கம்.

ஐவாய்மிருகம் - கரடி, சிங்கம்.

ஐவிரலி - ஐவேலிக்கொடி, கொடிவகை.

ஐவிரல் - அத்தநாள், அத்தம்.

ஐவிரற்கொவ்வை - ஐவிரலி.

ஐவேசி - ஐவேசு, கையிருப்பு.

ஐவேஜி - ஐவேசு.

ஐவேசு - சொத்திருப்பு, ஐவேஜு, சொத்து, கையிருப்பு, வழிவகை, ஐவேசி, ஈடு.

ஐவேலி - ஒருகொவ்வை, ஒருசிவஸ்தலம், ஐவிரலி.

ஐவைந்து - ஐந்துவீதம், அவ்வைந்து.

ஒ

ஒ - தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் பத்தாம் எழுத்து, உயிர் முப்பற்சியாற் பிறக்கும் எழுத்துக் களுள் அங்காப்பாகிய அகரக்கூறும் இதழ்குவிவாகிய உகரக் கூறும் சந்தித்துப் பிறந்த ஒரு குற்றுயிர், ஒரு உயிரெழுத்து, நிகர், பொருந்து, தகுதியாயிரு, ஒற்றுமைப்படு, ஒழுக்கமுடையராகு.

ஒஃகல் - ஒதுங்கல்.

ஒஃகுதல் - பின்வாங்குதல், குறைதல், ஒதுங்குதல்.

ஒகரம் - ஒரெழுத்து, மயில்.

ஒக்க - ஒருமிக்க, கூட, சமமாயிருக்க, தகுதியாயிருக்க, நிகர்க்க, பொருந்த, மிகத்த, ஒருசேர, மிகுதியாக, சமமாக.

ஒக்கடித்தல் - தாளங்கொட்டுதல், செப்பனிடுதல், தாளமடித்தல்.

ஒக்கநோக்குதல் - சமமாய்ப்பார்த்தல்.

ஒக்கப்பண்ணுதல் - செப்பனிடுதல்.

ஒக்கப்பாடுதல் - பிறன்கூற்றுக்கு ஒத்துக்கூறுதல்.

ஒக்கம் - அசமதாகம், உயர்ச்சி, ஊர்ப் பொது, எழுதல், கரை, கிராமம், பட்டினம், ஓமம், ஊர்.

ஒக்கலி - ஒக்கலிடு.

ஒக்கலிடுதல், ஒக்கலித்தல் } இணங்கூட்டல், ஒப்புரவாகல், சுற்ற முறைமை நடப்பித்தல்.

ஒக்கலிடுதல் - ஒக்கலி.

ஒக்கலித்தல் - ஆவலங்கொட்டு, உறவினரோடு கலந்து பேசுதல், பந்துக்களைப் பரிபாலித்தல், சமாதானமாதல்.

ஒக்கலை - மருங்கின்பக்கம், இடுப்பு.

ஒக்கல் - இடைப்பக்கம், உறவு, ஒத்தல், குடி, மூட்டுதல், சுற்றத்தார், மூட்டுகை, ஒக்கலை, சுற்றம், குடும்பம்.

ஒக்கல்போற்றல் - வேளாண்மை மாந்தரியல்புளொன்று. அஃது சுற்றத்தைப்பேணல்.

ஒக்காதிக்கொடி - புலிநகக்கொன்றை.

ஒக்கிடுதல் - செப்பனிடுதல், பழுது பார்த்தல்.

ஒக்கிலியன் - தமிழ்நாட்டிற் குடியேறிய ஒரு கன்னடசாதியான்.

ஒக்கு - கொப்பளி, பிற்படவிடு.

ஒக்குதல் - கொப்பளித்தல், சமானித்தல், பிற்படவிடல், ஒத்தல், ஒத்திருக்கை.

ஒக்கை - பாண்டிநாட்டிலுள்ள ஒக்கூரெனுமொரு நகரம்.

ஒக்கொலை - அம்பர், கடல்படுதிரவியமைந்திலொன்று.

ஒக்கோலை - ஓர்க்கோலை.

ஒசி - முறி, ஒடி, அசை, முறுக்கு.

ஒசிதம் - கற்முழை.

ஒசிதல் - அசைதல், ஒடிதல், துவளல், முறிதல், முறுகல், நுடங்குதல், சாய்தல், நாணுதல், வருந்துதல், ஒய்தல்.

ஒசித்தல் - முறித்தல், அசைத்தல், ஒடித்தல், முறுக்கல்.

ஒசித்தோக்கு - ஒதுங்கிப்பார்க்கும் பார்வை.

ஒசிப்பு - முறிக்கை.

ஒசியல் - கிளை முறிக்கப்பட்ட மரம்.

ஒசிவு - அசைவு, முரிவு, முறிவு.

ஒச்சட்டை - ஒஞ்சட்டை.

ஒச்சந்தம் - உச்சந்தம், குறைந்திருக்கை.

ஒச்சம் - ஒச்சை, கவனித்தல், பழுது, வெட்கம், நாணம், குறைவு, கூச்சம்.

ஒச்சி - ஒஞ்சி.

ஒச்சித்தல் - வெட்கப்படுதல், ஒஞ்சி.

ஒச்சியஞ்சொல்தல், ஒச்சியஞ்சொல்லுதல் } காம விச்சையாய்ப்பேசுதல்.

ஒச்சியம் - நிந்தை, பரிகாசம், வெட்கம், கூச்சம், சரசமொழி, ஒச்சம்.

ஒச்சை - உற்றுக்கேட்டல், காந்தற் சோறு.

ஒச்சைகொடுத்துக்கேட்டல் } உற்றுக்கேட்டல்
ஒச்சைகொடுத்துக்கேள்தல் }

ஒஞ்சட்டை - ஒல்லி.

ஒஞ்சட்டையன் - ஒல்லிமனிதன்.

ஒஞ்சரி - சிறிது சாத்து, ஒருபக்கமாய்ப்போ, ஒருபக்கம் சார்.

ஒஞ்சரிதீர்ப்பு - ஓரவாரமானதீர்வை.

ஒஞ்சரித்தல் - ஒருச்சாய்த்தல், ஒருபக்கமாய்ப்போதல், கதவைச்சிறிது சாத்துதல், ஒருபக்கஞ்சார்தல்.

ஒஞ்சரிவழக்கு - ஒருதலைவழக்கு, ஒஞ்சரிதீர்ப்பு.

ஒஞ்சி - ஸ்தனம், மார்பு, மூலைக்காம்பு, மூலை, ஒஞ்சு, வெட்கப்படு, நாணு.

ஒஞ்சித்தல் } மனதையடக்கல், வெட்கப்படுதல், நாணுதல், ஒஞ்சி.
ஒஞ்சுதல் }

ஒடி - ஒடியென்னேவல், கவண், வலை, காட்டுப்புதல், மரத்துண்டு, சுருக்குவலை, முறி, ஒடிகை, ஒடியல், ஒடியற்கிழங்கு, அழி.

ஒடிசல் - முறிந்தது.

ஒடிசில் - கவண்.

ஒடிதல் - முரிதல், கெடுதல், இடையறுதல், அழிதல், இடிதல், இறுதல், ஒசிதல், ஞெமிர்தல், பரிதல், முறிதல்.

ஒடித்தல் - ஒளிசெய்தல், முறித்தல், அழித்தல்.

ஒடிபு - இடைமுறிகை, ஒடிதல்.

ஒடியல் - ஒடிபட்டது, பனங்கிழங்குப் பிளவு, பனங்கிழங்கின் மா, முறிகை, பனங்கிழங்கின் காய்ந்த பிளவு.

ஒடியல்மா - பனங்கிழங்கின்மா.

ஒடியல்வால் - காய்ந்த பனங்கிழங்கின் தினை.

ஒடியற்படவு - பக்கம் அல்லது விளிம்பு முறிந்த தோணி.

ஒடியெறிதல் - காட்டுப் புதல்களை வெட்டியெறிதல், மரக்கொம்பைப் பாதி குறைத்தல், குற்றுயிராக்குதல்.

ஒடிவு - முறிவு, முறிகை, குறைவு, கெடுகை, சங்காரம், தவிர்வு, கேடு.

ஒடு - இசைநிறையிடைச்சொல், ஒடுக்கட்டி, ஒருமரம், புண்ணிற்கள்ளம், கிலேப்பாலை, முதுபுண், உடுப்பை, புடைகொண்ட புண், ஒடுகு, பரவு புண், மூன்றுமுருபு.

ஒடுகு - ஒடு.

ஒடுக்கட்டி - கழலைக்கட்டி, அக்குட் புண், அக்குட்கட்டி.

ஒடுக்கத்தம்பிரான் - சைவமடாதிபதிக்கு உட்காரியம்பார்க்கும் தம்பிரான்.

ஒடுக்கநாள் - இடைஞ்சனுள்.

ஒடுக்கமரியாதை - உற்சவமுடிவில் கோயில் தர்மகர்த்தர்க்குச் செய்யும் மரியாதை.

ஒடுக்கம் - அடக்கம், அமைவு, சுருக்கம், நெருக்கமானவிடம், பதுங்கல், முடிவு, வழிபாடு, குறுக்கம், சுருங்குகை, பதுக்கம், ஏகாந்தமானஇடம், மறைவிடம், ஞான கிருத்தியங்களுக்காக ஒடுங்கியிருக்கை, ஒன்றிலடங்குகை, சிறிது சிறிதாகக்குறைந்தொடுங்குகை, இரகசியம், அடக்கல், ஒடுங்கு, நெருக்கம்.

ஒடுக்கல் - ஒடுக்குதல்.

ஒடுக்கவகக்கம் - கீழ்ப்படுகிற குணத்தோடுகூடிய வணக்கம், அடங்கி வழிபடுகை.

ஒடுக்கிக்கட்டுதல் - நெருக்கிக்கட்டுதல், ஓலைப்பெட்டி முதலியவற்றின் விளிம்புகட்டுதல், சிறுகக்கட்டுதல்.

ஒடுக்கிடம் - நெருக்கமான விடம், மறைவிடம், மூலை, சுருக்கமான இடம்.

ஒடுக்கு - அடக்கம், இடுக்கு, ஒடுக்கென்னேவல், ஒடுங்கினது, நெருக்கமானது, இடுக்குமூலை. ஒடுக்கமா

யிருப்பது, பாத்திரங்களின் அதுக்கு, அடக்கு, வருத்து, முடி, செறி, பூதங்களை லயிக்கச்செய், உடம்பையொடுக்கு, திருடு.

ஒடுக்குச்சீட்டு - வரிச்சீட்டு, செலுத்திய வரிக்குக்கொடுக்கும் ரசீது.

ஒடுக்குதல் - அடக்குதல், இறையிறுத்தல், குறைத்தல், சுருங்கப்பண்ணுதல், வருத்தப்படுத்துதல், வருத்துதல், லயிக்கச்செய்தல், செலவு முதலியன குறைத்தல், உடம்புசிறுகுதல், சுருக்குதல், பண்டாரத்துச் சேர்த்தல், கீழ்ப்படுத்துதல், திருடுதல், செறித்தல், சுருங்கச்செய்தல்.

ஒடுக்குத்துண்டு - பற்றுத்துண்டு, ஒடுக்குச்சீட்டு.

ஒடுக்குப்படி - ஒரு பழைய வரி.

ஒடுக்குமாடு - கொள்ளைப்பொருள்.

ஒடுக்குவாய்- ஒடுங்கினவாய், கோணல்வாய், சிறுகியவாய்.

ஒடுக்கெடுத்தல் - நெளிவெடுத்தல்.

ஒடுங்க - உவமவுருபு.

ஒடுங்கல் - அடங்கல், ஒதுங்கல், ஒளிமழுங்கல், கீழ்ப்படிதல், சுருங்கல், சோரல், பதுங்கல், பிரதிபந்தம், ஒடுங்குதல், கூம்பல், சாம்பல்.

ஒடுங்கி - ஆமை.

ஒடுங்கு - அடங்கு, புலனொடுங்கு, ஒதுங்கு, குறை, அமை, சோர், முடி, கீழ்ப்படி, பதுங்கு, செறி, சுருங்கு, கரை,ஒளிமழுங்கு, சோம்பு, லயி.

ஒடுங்குண்ணல் - ஒக்கப்படுதல்.

ஒடுங்குதல் - ஒடுங்கல், அடங்கல், முடிதல், அடங்குதல், குறைதல், சுருங்குதல், ஒதுங்குதல், மறைந்திருத்தல், கீழ்ப்படுதல், சோம்புதல், குவிதல், அமைதல், சோர்தல், லயித்தல், ஒளிமங்குதல், கீழ்ப்படிதல், சுருங்கல், பதுங்கல்.

ஒடுதடங்கல் - நெளிந்தது, நேரற்றது, வளைந்தது, நெளிவு.

ஒடுத்தங்கல் } பருவிற் சீத்தங்கல்.
ஒடுநிற்றல் }

ஒடுத்தங்குதல்-புண்ணிற் சீத்தங்குதல்

ஒடுப்பை - ஒடு.

ஒடுவங்காய் - ஒருகாய்.

ஒடுவடக்கி - குப்பைமேனி, திராய் மரம்.

ஒடுவன் - ஒடு.

ஒடுவெண்ணெய் - பருவிலுள்ள சீழ் வரப்போடும் ஒருதயிலம், புண்ணுக்கிடும் ஒருவகைத்தைலம்.

ஒடுவை - ஒடு.

ஒடை - ஒருமரம், உடை.

ஒடைச்சி - ஒடு.

ஒட்ட - அடியோடே, அணுக, இறுக, கிட்ட, சேர, நெருங்க, போல.

ஒட்டகக்காரப்பறையன் - பறையரில் ஒரு வகுப்பான்.

ஒட்டகப்பாரை - ஒட்டாம்பாரை யென்னுமீன்.

ஒட்டகம் - ஒரு மிருகம், **ஒருவிலங்கு**, ஒட்டை, ஒட்டகை, அத்திரி, இராவணம், கனகதம், தாசோகம், நெடுங்கழுத்தன். இதன் பெண்பிடி, பெட்டை. இதன் குட்டி-கன்று, குழவி.

ஒட்டகை - ஒட்டகம்.

ஒட்டக்கூத்தர் - குலோத்துங்க சோழன் சமஸ்தானத்தில் விளங்கிய தமிழ்ப்புலவர். இவர் ஜாதியில் செங்குந்தர்.

ஒட்டங்காய்ப்புல் - ஆடையிலொட்டும் ஒருவகைப்புல்.

ஒட்டங்கி - கன்னுர்கருவியிலொன்று, உலையாணிக்கோல்.

ஒட்டச்சி - பூவழலை, ஒட்டசாதிப் பெண்.

ஒட்டடஞ்சாகுபடி - ஒட்டடைப்பயிர் உண்டாக்கற்குரிய விவசாயமுறை.

ஒட்டடை - சிலம்பிக்கூடு, புகையறை, நூலாம்படை, சம்பாநெல் வகை, ஒட்டகை, புகையூசல், புகைப்பற்று

ஒட்டணி - உவமையால் **உவமேயத்**தைப்பெறவைக்கும் **அணி.**

ஒட்டத்தி - ஒட்டுத்துத்தி, ஒட்டச்சி.

ஒட்டப்போடுதல் - தன்னைத்தானே பட்டினிபோடுதல், பட்டினிகிடக் கச்செய்தல்.

ஒட்டமொட்டுதல் - பந்தயம்போடு தல்.

ஒட்டம் - இகலாட்டம், உடன்படி க்கை, ஓடு, ஓர் தேயம், சபதம், தோண்டலளவைத்திடர், பந்தயப் பொருள், பந்தயம், வெட்டளவு காட்டவைக்குந்திடர், ஒட்டரம், உடன்பாடு, ஒருதேசம்.

ஒட்டரம் - ஒருதேசம், ஒரிஸா மாகா ணத்தின் பண்டையப்பெயர்.

ஒட்டர் ஒட்டலர் } ஒட்டதேசத்தார், பகை வர், மண்வேலைக்காரர், ஒட்டார்.

ஒட்டலன் - ஓரலன், பகைவன், மெலி ந்தவன்.

ஒட்டல் - இடங்கொடுத்தல், உடன் படல், ஒட்டுதல், ஒளித்தல், குறு கல், சேர்த்தல், வற்றல், சேர்கை, உள்ளொடுங்குகை, உடன்பாடு.

ஒட்டவிடுதல் - சேரவிடுதல், பொர விடுதல்.

ஒட்டறை - புகையுறை, ஒட்டை, புகைப்பற்று.

ஒட்டற்காது - சுருங்கற் காது, குறு கிய காது, ஒட்டவைத்த காது.

ஒட்டன் - மண்வேலை முதலிய னசெய்யும் ஒரு சாதியான், நெல் வகை.

ஒட்டாக்காற்றி - கண்வனிடத்திலும் குழந்தைகளிடத்திலும் ஆசையில் லாதவள், கறக்கவிடாத பசு.

ஒட்டாம்பாரை - கடல்மீன் வகை.

ஒட்டாரக்காரன் - பிடிவாதமுள்ளவன்.

ஒட்டாரங்கட்டுதல் - பிடிவாதம் பண் ணுதல்.

ஒட்டாரம் - பிடிவாதம், சலஞ்சா திப்பு, மூரட்டுத்தனம்.

ஒட்டார் - பகைவர், ஒட்டலர்.

ஒட்டாவுருவம் - கருக்கற்சீலை.

ஒட்டி - ஒட்டிநிற்கும் பொருள், ஒட் டொட்டி, ஒருகடல்மீன், ஓர்பூடு, ஒட்டொட்டிப்பூடு.

ஒட்டிக்கிரட்டி - ஒன்றுக் கிரண்டு பங்கு.

ஒட்டிக்குவான் - ஒருபுல்.

ஒட்டிக்கொடுத்தல் - உறுதியண்ணித் தருதல்.

ஒட்டிடுதல் - பந்தயம் போடுதல், ஆணையிடுதல்.

ஒட்டிப்போதல் - கூடப்போதல், வற் றுதல்.

ஒட்டியக்கரு - ஒட்டிய வித்தைக்கு வேண்டுங் கரு.

ஒட்டியக்காளி - சூனியக்காரர் பூசிக் குங்காளித்தெய்வம், ஒட்டியாதேவி.

ஒட்டியத்தோட்டி - குப்பை வாரும் சாதியான்.

ஒட்டியபுண் - நெற்றுச்சிலந்தி.

ஒட்டியம் - அவிடகரும நூலி லொன்று, ஒரு பாஷை, தேயமைம் பற்காலில் ஒன்று, மாந்திரிக வித்தை, ஒருமதசம், ஒட்டரபா ஷை, மாந்திரகவித்தை யுணர்த் தும நூல், குசவம்.

ஒட்டியமேளம் - ஒட்டர் உபயோகிக் கும் வாத்தியம்.

ஒட்டியர் - ஒட்டிய தேசத்தார், ஒரு சாதியார்.

ஒட்டியல் - ஒட்டர தேசத்தான், ஒட்டரநாட்டரசன்.

ஒட்டியாக்குதல் - இணையாக்கல், சம மெய்க்கல்.

ஒட்டியாணம் - ஓராபரணம், மாதரி டையணி, யோகப்பட்டை.

ஒட்டியாதேவி - சூனியகாரர் பூசிக் குந் தேவதை, ஒட்டியக் காளி.

ஒட்டிரட்டி - ஒற்றைக்கிரட்டை.

ஒட்டினர் - சினேகிதர், ஒட்டுநர், சிநே கர், மித்திரர், நண்பர் முதலியோர்.

ஒட்டு - புட்படுக்குங்கருவி, சினேகம், அற்பம், சார்பு, சபதம், ஆணை, இக லாட்டம், ஒப்பு, ஓரம், மரப்

பட்டை, ஒட்டணி, புல்லுருவி, வேறுவகை மரக்கிளையுடன் ஒட்டவைத்துண்டாக்கிய செடி, நற்சமயம், விலைகூட்டுகை, பந்தயம், புட்படுக்குங் கண்ணி, பொருத்து, சாரு, கிட்டு, நட்பாகு, கூட்டு, பொருந்து, சார், அடைகொடு, பந்தயம்வை, இடங்கொடு, சேர், வற்று, சுருங்கு, ஒட்டிங்கில், ஒளித்துங்கில், அபிமானம், தகுதியாயிரு, பிரியம், படைவகுப்பு, அருகு, இணைக்கப் பட்டது, ஒட்டென் மேலால், ஒளிப்பிடம், ஒன்றிப்பு, ஓலங்காரம். கண்ணி, கதிர்கொய்தாள், சிறுகடுக்கன், திண்ணைக்குந்து, புல்லுரி, வாய்ப்பு.

ஒட்டுக்கடுக்கம் - சிறுகடுக்கன்.

ஒட்டுக்கணவாய் - மீன்வகை.

ஒட்டுக்கண் - இமைமேற்பாட்டுச் சதையுள்ள கண், கண்ணிழைநோய்.

ஒட்டுக்காய்ச்சல் - உடம்போடொத்த காய்ச்சல், நெருப்புக்காய்ச்சல், தொற்றுச்சுரம், உடம்போடொட்டிய காய்ச்சல்.

ஒட்டுக்கிரகணி - ஒருவகைக் கிரகணி நோகம்.

கத்தேற்றல், இளைப்பு, வயிற்றில திகநோவு, மார்பு, விலா. முதுகாகிய இடங்களில் வலித்தல் முதலிய குணங்களையுண்டாகுவது.

ஒட்டுக்கு - ஒருமிக்க.

ஒட்டுக்குஞ்சு - சிறுகுஞ்சு, மேற்குஞ்சு.

ஒட்டுக்குடி - பிறரிடத்திற் கூடிவாழுங்குடி, ஒதுக்குக்குடி.

ஒட்டுக்குடுமி - உச்சிச்சிறுகுடுமி.

ஒட்டுக்கும் - மூழ்தும்.

ஒட்டுக்கேட்டல் - பிறர்பேசுவதை ஒளித்துக் கேட்டல், ஒளித்து விசேஷங் கேட்டல், ஒட்டுக்கேள்தல், ஒற்றுக்கேள்.

ஒட்டுக்கை - துண்டுக்கைமரம்.

ஒட்டுக்கொடுத்தல் - கேட்டது கொடுத்தல், இடங்கொடுத்தல்.

ஒட்டுச்சல்லடம் - குறுங்காற்சட்டை.

ஒட்டுச்செடி - ஒட்டொட்டி.

ஒட்டுடன்தை - ஒட்டுப்பற்று, ஒட்டுரிமை, ஒட்டுடன்பாடு, உரித்து, சொற்ப சம்பந்தம், சிறுதொடர்பு, தூரவுறவு.

ஒட்டுதல் - ஒட்டவைத்தல், சார்தல், பந்தயம்வைத்தல், துணிதல், தாக்குதல், படைத்தல், கூட்டுதல், கிட்டுதல், சம்மதித்தல், அறுதியிடுதல், நட்பாக்குதல், ஒட்டிக்கொள்ளுதல், சபதஞ்செய்தல், உள்ளொடுங்குதல், பதுங்கிநிற்றல், வற்றுதல், உடன்படுதல், பந்தயமிடல், வஞ்சினங்கூறல், ஆணவல், இடங்கொடுத்தல், சுருங்கல், சேர்த்தல், பொருந்துதல், பொருத்துதல்.

ஒட்டுத்தரவு - சுற்றுத்தரவு.

ஒட்டுத்திண்ணை - திண்ணைக்குந்து, வீட்டைச்சார்ந்த சிறுதிண்ணை.

ஒட்டுத்தீட்டுக்கலப்பு - உதிரக்கலப்பான உறவு.

ஒட்டுத்துணி - ஒட்டிவைத்துத் தைக்கப்படுந்துணித்துண்டு.

ஒட்டுத்துத்தி - ஒரு துத்தி, செடிவகை, துத்திப்பூண்டுவகை, ஓர் பூடு.

ஒட்டுத்தையல் - ஒருதையல்.

ஒட்டுநர் - மித்திரர், சிநேகர், ஒட்டினர்.

ஒட்டுப்பழம் - ஒட்டுமரத்தின் பழம்.

ஒட்டுப்பற்று - ஆசாபாசம், ஒட்டுடன்தை, ஒட்டுடன்பாடு, ஒட்டுரிமை, சொற்ப சம்பந்தம்.

ஒட்டுப்பார்த்தல் - உளவுபார்த்தல்.

ஒட்டுப்பிசின் - பக்ஷிகளைப் பிடிப்பதற்கு வைக்கப்படும் பிசின்தடவிய கண்ணி.

ஒட்டுப்புதவம் - இரட்சதம், இரட்டைக்கதவு.

ஒட்டுப்புல் - ஒருபுல்.

ஒட்டுப்புழு - புரூமூட்டி.

ஒட்டுப்போடல் - சமயம்பார்த்தல்.

ஒட்டுப்போடுதல் - தண்டுவைத்து இணைத்தல், சமயம்பார்த்தல்.

ஒட்டுமயிர் - வெட்டி முளைத்தகுறள் மயிர், குடுமியுடன் கூடாதமயிர், வைத்துக்கட்டுமயிர்.

ஒட்டுமொத்தம் - முழுமொத்தம்.

ஒட்டுரிமை-ஒட்டுப்பற்று, சொற்ப சம்பந்தம், உடன்தை, ஒட்டுடன்தை.

ஒட்டுருவம் } மாலிக்கிரகம்.
ஒட்டுவிசேடம் }

ஒட்டுவட்டில் - ஆராதனை வட்டில்.

ஒட்டுவாரொட்டி - ஒட்டுவியாதி.

ஒட்டுவிசேஷம் - ஒட்டிநின்று கேட்கும் வார்த்தை, கட்டுக்கதை.

ஒட்டுவிடல் } பிரிந்து போதல், பொருத்து நீங்குதல், பற்றுவிடுதல்.
ஒட்டுவிடுதல் }

ஒட்டுவித்தை - இந்திர சாலத்திலோர்வித்தை, இடத்தைவிட்டுப் பிரியாதிருக்கச் செய்யும்வித்தை.

ஒட்டுவியாதி - தொத்துநோய், தொற்றுநோய்.

ஒட்டுவேலை - ஒட்டுவைக்கிறவேலை, இணைக்கும்வேலை, போலிவேலை, மச்சுப்பாவும்வேலை.

ஒட்டுவைத்தல் - ஆணையிடல், ஒளிவைத்தல், கண்ணிவைத்தல், பட்சிகளைப்பிடிக்க ஒட்டுப் பிசின் வைத்தல், ஆணையிடுதல், அகழ் தோண்டுதல்.

ஒட்டுறவு - உரித்துறவு, நெருங்கிய சம்பந்தம்.

ஒட்டை - ஒட்டகம், பத்துவிரற் கிடை, ஒட்டைச்சாண்.

ஒட்டைச்சாண் - சிறுசாண்.

ஒட்டொட்டி - ஒரு செடி, ஒட்டங் காய்ப்புல்.

ஒட்டோலகம் } ஆடம்பரம், சனத்
ஒட்டோலக்கம் } திரள், வெற்றி பெருங்கூட்டம், இடம்பம்.

ஒட்பம் - அழகு, நன்மை, முதுக்குறைவு, மேன்மை, அறிவு, ஒண்மை.

ஒண் - ஒண்ணு, பொருந்து.

ஒண்டன் - ஆணரி, நரி.

ஒண்டி - ஒன்றி, தனிமை, தனிமையானது, துணையில்லாதவன், துணையில்லாதவள், உற்றாணி.

ஒண்டிக்காரன் - தனிமையானவன்.

ஒண்டிக்குடி - ஒண்டுக்குடி.

ஒண்டியாள் - ஒண்டி.

ஒண்டு - ஒன்று.

ஒண்டுக்குடி - ஒட்டுக்குடித்தனம், ஒட்டுக்குடி.

ஒண்டுக்கேள்தல் - ஒண்டுக்கேட்டல், ஒற்றுக்கேட்டல்.

ஒண்டுதல் - சார்தல், ஆசிரயித்தல், பதுங்குதல்.

ஒண்டொடி - பிரகாசமான வளையலணிந்த பெண்.

ஒண்ணல் - கூடுதல், பொருந்துதல், தகுதல், பொருந்தல்.

ஒண்ணுதது - ஒவ்வாதது.

ஒண்ணுப்பு - இயலாப்பு.

ஒண்ணுமை - கூடாமை, தகாமை, இயலாமை, பொருந்தாமை.

ஒண்ணு - ஒன்று, ஒண்.

ஒண்ணுதல் - இயலுதல், பெண்.

ஒண்மை-அழகு, அறிவு, ஒழுங்கு, ஒளி, நன்மை, மிகுதி, இயற்கையழகு, விளக்கம், நல்லறிவு, மேன்மை.

ஒதளை - காசுக்கட்டி.

ஒதி - உதயமரம், உதிரமரம், ஓர்மரம், ஒதியமரம்.

ஒதுக்கம் - ஒதுங்கியிருக்கை, ஒழுக்கம், தாழ்மை, நீட்டு, நடை, பதுங்குகை, பின்னிடுகை, மறைவு, இடுக்கு, ஏகாந்தம், இருப்பிடம், மறைவிடம், மகளிர்பூப்பு, சாவடி, ஓர்அபசுரம், மறைப்பு, துச்சில், ஒதுக்கு, ஒதுக்கிடம்.

ஒதுக்கல் - ஒதுங்கச்செய்தல், நீர்த்தல், எழுச்சி, ஒதுக்குதல்.

ஒதுக்கிடம் - ஒதுங்குமிடம், தங்கும் விடுதி, அண்டிவசிக்குமிடம், துச்சில், புகலிடம், மறைவிடம்,

ஒதுக்கிப்போடுதல் - தீர்த்துவிடுதல், சாதியினின்று நீக்கிவிடுதல், விசாரணையைத் தள்ளிவைத்தல், சொத்தை மறைத்துவிடுதல்.

ஒதுக்கிருத்தல் - பிறர்வீட்டிற் குடியிருத்தல்.

ஒதுக்கு - விலகியிருப்பது, பிறர்வீட்டிற் குடியிருக்கை, புகலிடம், மறைப்பு, நடை, மறைவிடம், ஒதுங்கச்செய், வஸ்திரத்தையொதுக்கு, சேர்,கடந்தீர், சீர்ப்படுத்து, கொல்லு, வறுமைக்குள்ளாக்கு, ஒதுக்கென்னேவல், சார்பு,மறைவு.

ஒதுக்குக்குடி - இரவற்குடி, ஒட்டுக்குடி.

ஒதுக்குதல் - ஒதுங்கச் செய்தல், பிணக்கை விலக்குதல், அணைத்துக்காத்தல், ஒரு புறமாய்ச் சேர்த்தல், சொத்துக்களை மறைத்தல், விலக்குதல், கொல்லுதல், வறுமைக் குட்படுத்துதல், தீர்த்தல், புடவை முதலிய ஒதுக்குதல்.

ஒதுக்குப்பச்சை-புழுங்கலில் வேகாத நெல்.

ஒதுக்குப்படல் - காற்றைக்காக்கும் படல்.

ஒதுக்குப்பாடு - மறைவு, மரவேலியுள்ள செய்கால்நிலம்.

ஒதுக்குப்புறம் - ஒதுங்கும்புறவிடம், தனித்த இடம், மறைவு, ஒதுக்குப்பாடு.

ஒதுக்குமூலை - தேய்ந்த வெள்ளிக்காசு.

ஒதுக்குவயல் - வயலிற் கால்நடைகளைக் கட்டுமிடம்.

ஒதுங்கல் - நடத்தல், பதுங்கல், விலகல், ஒதுங்குதல், ஒடுங்கல்.

ஒதுங்கிடம் - கொல்லைப்புறம், புழக்கடை, ஒதுக்கியம்.

ஒதுங்கிநடத்தல் - தாழ்மையாய் நடத்தல், விலகிநடத்தல்.

ஒதுங்கு - பதுங்கு, நட, தீர், கரையிற் சாரு, சா, வறுமையுறு.

ஒதுங்குதல் - விலகுதல், கறையிற் சார்தல், சரணம்அடைதல், ஒடுங்குதல், நடத்தல், பின்னடைதல், தீர்தல், வறுமைப்படுதல், சாதல், ஒதுங்கல்.

ஒதுங்குபுறம் - புறம்போக்கு.

ஒதுப்புறம் - ஒதுக்கிடம், ஒதுக்குப்புறம்.

ஒத்த - சரிவந்த.

ஒத்தசனம் - கட்டுப்பாடுள்ளசாதி.

ஒத்தசாதி - ஒத்தசனம்.

ஒத்தடம் - ஒற்றடம்.

ஒத்தடிப்பாதை - ஒற்றையடிப்பாதை.

ஒத்தணம் - ஒற்றடம்.

ஒத்தது - தகுதியானது, உலகத்தார் அங்கீகரித்தது.

ஒத்தபடி - ஏற்றவாறு.

ஒத்தபண்புரைப்போர் - தூதர்.

ஒத்தமலங்கொட்டுதல் - இடக்குச் செய்தல்.

ஒத்தமொழி - ஒருசரி, ஒன்றுபோல.

ஒத்தல் - ஒத்துதல், ஒப்பு, சமானித்தல், தாளம்போடல், நடு, பொருந்தல், விலகல், கேள்வியால் தெளிந்தவற்றில் மனம் ஊன்றி நிற்கை, சமமாயிருத்தல்.

ஒத்தவழி - ஏற்றமார்க்கம்.

ஒத்தவாக்கியம்-ஒன்றுபோன்றவசனம்

ஒத்தறுத்தல் - தாளம்போடல், தட்டல், வட்டணை, வட்டித்தல்.

ஒத்தன் - ஒருவன், ஒருத்தன்.

ஒத்தாங்கு - ஒத்தபடி.

ஒத்தாசை - உதவி.

ஒத்தாப்பு - ஒதுக்கு, குடில், மறைவு.

ஒத்தாழிசை - கலிப்பாவின் வகை.

ஒத்தி - ஒருத்தி, ஒற்றி.

ஒத்திக்கை - ஒப்பு, நாடகத்தைமுன் ஆடிப்பார்க்கை, சரிபார்க்கை, உதவி, ஒத்திருக்கை.

ஒத்திசை - விட்டிசையாதிசைக்கும் பண், ஒத்த இசை.

ஒத்திடம் - ஒற்றடம், ஒற்றிடம், ஒத்தடம்.

ஒத்திடுதல் - ஒத்துப்பிடித்தல், தாளம் போடுதல், ஒப்பிடல்.

ஒத்திருத்தல் - இசைந் திருத்தல், போன்றிருத்தல்.

ஒத்து - ஒத்தென்னேவல், தாளவொற்று, நாகசுரத்துக்குச் சுருதி கூட்டும் ஓர் ஊதுகுழல், கையணி வகை, ஒத்திசை, ஒரிசைக்குழல், தாளம்போடு, விலகு, குழல், தாளவொத்து, ஒற்று, தாக்கு.

ஒத்துக்கொடுத்தல் - பொறுப்பேற்றல், ஒப்புவிக்கப்பட்ட கணக்குக்களுக்கு வகைசொல்லுதல்.

ஒத்துக்கொள்ளுதல் - ஒப்புவித்துக் கொள்ளுதல், சம்மதித்தல், ஒத்துக் கொள்தல், கணக்கி லேற்றுக் கொள்ளுதல், இணங்குதல், ஏற்றதாதல்.

ஒத்துதல் - ஒற்றிடுதல், தாளம்போடுதல், விலகுதல், தாக்குதல், ஒற்றுதல், மூட்டுதல்.

ஒத்துநடத்தல் - ஒரேமாதிரியாய் நடத்தல், இசைந்தொழுகுதல்.

ஒத்துப்பாடுதல் - இசையப்பாடுதல், பிறர்சொல்லுவன எல்லாவற்றையும் ஆமோதித்தல்.

ஒத்துப்பார்த்தல் - சரிபார்த்தல்.

ஒத்துப்பிடித்தல் - ஒத்தூதுதல்.

ஒத்துப்போடுதல் - தாளம்போடுதல்.

ஒத்துவருதல் - இணங்கிவருதல்

ஒத்துவாக்கியம் - ஒத்தவாக்கியம.

ஒத்துவாழ்தல் - இணங்கியிருத்தல்.

ஒத்துவிடுதல் - இணங்கிவிடுதல், ஒப்பித்து விடுதல்.

ஒத்தொழுக்கை - கூடி வினைசெய்கை.

ஒத்தொழைத்தல் - பலர்கூடி மனமொத்து வினைசெய்தல்.

ஒத்தொழைப்பு - ஒத்தொழைக்கை.

ஒத்தொழையாதார் - பிற கொள்கையாரோடு இணங்கி நடவாதவர்.

ஒத்தொழையாமை - பிற கொள்கையாரோடு இணங்கி நடவாமை.

ஒப்ப - உவமையுருபு, போல.

ஒப்பக - உவமையுருபு, வினையெச்சம்.

ஒப்பக்கதிர் - பணியை ஒப்பவே செய்யுங்கருவி, ஆபரணங்களை மெருகிடுங்கருவி.

ஒப்பங்கூறு - பாகபத்திரம்.

ஒப்பங்கூறுச்சீட்டு - ஒப்பங்கூறு.

ஒப்பங்கொடுத்தல் - அழுத்துதல், கட்டளை கொடுத்தல்.

ஒப்பசெப்பம் - சமம்.

ஒப்பச்செய்தல் - ஒத்துக் கொள்ளச் செய்தல்.

ஒப்பச்சொல்லல் - ஒத்துக் கொள்ளச் சொல்லல்.

ஒப்படி-அறுவடை, ஒருவகைக்கூட்டு நிதி.

ஒப்படிமிசுக்கு - நிலவிளைச்சற் கணக்கு.

ஒப்படியிருக்கை - யாழ்வாசிக்கு மிருப்பினுளொன்று.

ஒப்படை - ஒப்படைப்பு, ஒப்புக்கொடுக்கை.

ஒப்படை } ஒப்புவித்தல், ஈடு
ஒப்படைத்தல் } கொடுத்தல், சிபாரிசுபண்ணுதல், ஒப்புக்கொடுத்தல்.

ஒப்படைப்பு - நியாயஸ்தலக்கட்டளை நிறைவேற்றுகை.

ஒப்பணி - ஓரலங்காரம்.

ஒப்பந்தமானகாணி - வரியொழுங்கு செய்யப்பட்டநிலம்.

ஒப்பந்தம் - உடன்படிக்கை, ஒப்பரவு, சமன், கட்டுப்பாடு, மதநிமம், இசைவு, பரியாயம், சமம்.

ஒப்பமிடல் - கையெழுத்துப் போடுதல்.

ஒப்பமிடு - துலக்கு, சமனாக்கு, கையொப்பமிடு, அதிகாரப்பத்திரிகையி லொப்பம்வை.

ஒப்பமிடுதல் - சமமாக்குதல், மணிமுதலியன துலக்குதல், அலங்கரித்தல், அதிகாரபத்திரங்கொடுத்தல், உலோகங்களை யொப்பனையாக்கல், கையெழுத்துப் போடுதல்.

ஒப்பம் - ஒப்பு, ஒருதன்மை, மெருகு, அலங்காரம், கையொப்பம், கட்டளை, அதிகாரபத்திரம், கையெழுத்து, அதிகாரப் பத்திரிகை, அழைப்புப் பத்திரம், சமம், நிலமுதலியவற்றினெப்பம், மினுக்குதல், ஒற்றுமை, துலக்கம், அழைப்புப்பத்திரம, அதிகார பத்திரிகை.

ஒப்பம்பண்ணுதல் - ஒப்பனையாக்கல்.

ஒப்பரக்காரன் - ஒப்பாவுக் காரன்.

ஒப்பரவு - ஒப்பம், ஒழுங்கு, சமாதானம், ஒப்புரவு, ஒற்றுமை, சமம், முறைமை, லோகோபகாரம்.

ஒப்பராவி - தராசுசெய்வோன்.

ஒப்பராவுதல் - தராசு செய்தல்.

ஒப்பல் - ஒப்புதல்.

ஒப்பளவை - உபமானப்பிரமாணம், உவமையினு லுவமேயத்தை அறிவது.

ஒப்பனை - சாட்சியம், திருஷ்டாந்தம், அலங்கரிப்பு, அணிதல், கைசெய்தல், புனைதல், பூசல், மண்ணல், வனைதல், வேய்தல், அலங்கரித்தல், அலங்காரம், உவமை, ஒப்பரவு, சமம், சாட்சி, செவ்வை, திருட்டாந்தம், பாவனை.

ஒப்பனைகாட்டுதல் - ஒப்புக்காட்டுதல், திருட்டாந்தங் காட்டுதல்.

ஒப்பன் - மெருகிடப்பட்டது.

ஒப்பாகல் / ஒப்பாகுதல் } சமானமாகுதல், சரிவருதல், திருட்டாந்தமாதல்.

ஒப்பாக்குதல் - இணையாக்கல், சமமாக்கல்.

ஒப்பாசாரக்காரன் - மேலுக்கு ஆசாரத்தை அனுசரிப்பவன், மாயக்காரன்.

ஒப்பாசாரம் - கண்டுங்காணுததுபோலிருக்கை, கபடம், புறவொழுக்கம், உடன்படிக்கை, ஒத்த ஒழுக்கம், கண்சாடை, மாரீசம்.

ஒப்பாதல் - உவமையாதல், நேராதல்.

ஒப்பாரி - போலி, அழுகைப்பாட்டு, ஒத்தபாவனை, அழுகையினெப்பனையிடுகை, ஒப்பு, ஒப்புச்சொல்லியழுதல்.

ஒப்பாரிக்காரன் - இறந்தவனுக்கு ஒப்பாயிருத்தல்பற்றிச் சமீபபந்துவாக மதிக்கப்பட்டவன்.

ஒப்பாரித்தல் - ஒத்தல்.

ஒப்பாரியிடுதல் - செத்தாரை நினைத்துப் புலம்பியழுதல்.

ஒப்பாரிவைத்தல் - ஒப்பாரியிடு.

ஒப்பான் - ஒழுங்கான இயல்புடையவன்.

ஒப்பி - ஒப்பச்செய், ஒப்புவி, உவமி, உரூபி.

ஒப்பிடல் / ஒப்பிடுதல் } உவமித்தல், சமப்படுத்தல், ஒத்துப்பார்த்தல்.

ஒப்பிதம் - பொருத்தமாயிருக்கை, நியாயமாயிருக்கை, வழுவின்மை, இசைவு, ஒவ்வுதல், சமம், சம்மதம், சம்மதித்தல்.

ஒப்பித்தல் - உவமித்தல், விழுக்காடிடுதல், நிரூபித்தல், அலங்கரித்தல், ஒத்துகொள்ளச் செய்தல், ஏற்கும்படி சேர்ப்பித்தல், பாடத்தை மனனஞ்செய்து சொல்லுதல், ஒப்புவித்தல்.

ஒப்பித்துக்கொள்தல் / ஒப்பித்துக்கொள்ளுதல் } ஏற்றுக்கொள்ளுதல்.

ஒப்பிலாநாயகி - திருவெடுங்களத்திற் கோயில்கொண்டிருக்குந் தேவி.

ஒப்பிலாமுலையம்மை - திருவாவடுதுறையில் கோவில்கொண்டிருக்குந்தேவி.

ஒப்பிலுவமை - ஓரலங்காரம்.

ஒப்பில்போலி - ஒப்புமையைக்காட்டவாததபோலென்னுஞ்சொல்.

ஒப்பின்முடித்தல் - ஒருயுத்தி.

ஒப்பின்மை - நிகரின்மை, வேறுபாடு.

ஒப்பு - அழகு, உவமானம், ஒப்பாரி, ஒப்பென்னேவல், கூட்டு, சமன், சம்மதம், சாயல், பொருத்தல், சமம், உவமானப் பிரமாணம்,

உடன்படுகை, சம்மதி, நிகர், தகுந்தது போலுகை, கவனம், ஒருதன்மை, ஏற்புடையது, உவமையளவை, உடம்பாடு, பிராசாபத்தியம், உவமை, உடன்பாடு, ஒப்புமை, தகுதி, இசைவு.

ஒப்புக்கழுதல் - போலியாக அழுதல், மனமொவ்வாமற் செய்தல்.

ஒப்புக்கு - மனப்பூர்வமாகவல்லாமல்.

ஒப்புக்கொடுத்தல் - ஒப்புவித்தல், கையளித்தல், ஏற்பித்தல்.

ஒப்புக்கொப்பாரம் - விருந்து முதலிய உபசாரஞ் செய்தல்.

ஒப்புக்கொள்ளல் } ஏற்றுக் கொள்
ஒப்புக்கொள்ளுதல் } ளுதல், திருத்திப் பொருந்தல், மனத்துக்குப் பிடித்தல், ஒத்துக்கொள்ளுதல்.

ஒப்புடை - ஈடுகொடு, சிபார்சுசெய்.

ஒப்புதல் - ஒத்தல், சம்மதித்தல், பொருந்தல்.

ஒப்புதல் ரசீது - சொத்தைக் கோர்ட்டு ஏலத்தில் எடுத்தற்கு ரசீது, அனுப்பியதைப் பெற்றுக்கொண்டதற்குத் திரும்பிவரும் தபால் ரசீது.

ஒப்புப்பொருவு - உவமப்பொரு.

ஒப்புப்பொருள் - புகழ் பொருளினுந் தன்னிலுமிருக்கிற சாதாரண தருமத்தினாலுவமானமாகிற பொருள்.

ஒப்புமுத்து - நல்லுருவமைந்த முத்து.

ஒப்புமை - உவமானம், சமானம், உவமானம்.

ஒப்புமைக்கூட்டம் - ஓரலங்காரம்.

ஒப்புமைக்கூட்டவணி - ஓரலங்காரம்.

ஒப்புமொழி - உடம்படிக்கை.

ஒப்புரவறிதல் - உலகநடைக்கேற்ற உபகாரங்களைத் தெரிதல்.

ஒப்புரவாக்குதல் - சமாதானம் பண்ணிவைத்தல்.

ஒப்புரவாதல் - சமாதானமாதல்.

ஒப்புரவாயிருத்தல் - சிறிது சுகந்தோடிருத்தல்.

ஒப்புரவு - உபகாரம், ஒற்றுமை, கொடை, சமம், சமாதானம், மூறைமை, உலகாசாரம், லோகோபகாரம், சமாதானம் பண்ணுகை, உலகநடை, ஒப்பரவு, முறைமை, உபகாரம், சமம்.

ஒப்புரவுக்காரன் - குலஸ்தன், பங்காளி.

ஒப்புவமை - ஓரலங்காரம்.

ஒப்புவி - ஒப்புக்கொடு, மெய்ப்பி, திருட்டாந்தங்காட்டு, கடனைப் புவி, ஒப்பி.

ஒப்புவித்தல் - அத்தாட்சிபண்ணல், ஒப்புக்கொடுத்தல், ஏற்கும்படி சேர்த்தல், மெய்ப்பித்தல், திருஷ்டாந்தங் காட்டுதல், கடன் சாட்டுதல்.

ஒப்புறுத்தல் - உவமித்தல்.

ஒப்பூண் - பிறருடன் ஒத்த அனுபவம்.

ஒப்போலை - உடன்படிக்கைச்சீட்டு.

ஒமை - மாமரம், மா.

ஒம்மம் } ஒமல், ஊர்ப்பேச்சு.
ஒம்மல் }

ஒம்மெனல் - ஓர் ஒலிக்குறிப்பு.

ஒயிலமரம் -ஆக்கினைக்கென்று நிறுத்தியமரம்.

ஒயில் -அலங்காரம், ஒய்யாரம், சாயல், ஒருவகைக் கூத்து.

ஒயில் மரம் - ஆக்கினைக்கென நிறுத்திய மரம், தொழுமரம்.

ஒயில்வண்டி - சவாரிக்கேற்றவண்டி.

ஒயிற்கும்மி - ஒயிலாட்டத்துப்பாடும் பாட்டு, ஒயில்.

ஒயின் - திராட்சாரசம்.

ஒயின்மரம் - தொழுமரம்.

ஒய் - யானையைப் பாகர் வையும் ஆரியமொழி, ஒழி, தப்பு, கொடு, போக்கு, நீங்கு, செலுத்து.

ஒய்தல் - தவிர்தல், இழுத்தல், செலுத்துதல், கொடுத்தல், போக்குதல், விட்டொதுங்குதல், தப்புதல், செலுத்தல்.

ஒய்யல் - ஒழிதல், செலுத்தல், செலுத்துகை, கொடுக்கை, கொடுத்தல்.

ஒய்யாரக்காரன் - ஆடம்பரமுள்ளவன்.

ஒய்யாரக்கொண்டை - அலங்காரமாக முடிக்கும் மயிர்முடி.

ஒய்யாரநடை - அலங்காரநடை, பிலுக்குநடை.

ஒய்யாரம் - அலங்காரம், ஆடம்பரம், கெருவம், சாயல், உல்லாசநிலை, கர்வம், ஒயில், தளுக்கு.

ஒய்யென - மெல்ல.

ஒய்யெனல் - மந்தக்குறிப்பு, விரைதல்.

ஒரட்டுக்கை - இடக்கை, ஒரட்டாங்கை.

ஒரணை - இரட்டை.

ஒராஅல் - ஒருவுதல்.

ஒராங்கு - ஓராங்கு.

ஒரால் - ஈருகை.

ஒராஞரு - ஏதோ ஒன்று.

ஒரித்தல் - இட்டமாயிருத்தல், ஒற்றுமையாயிருத்தல்.

ஒரு - ஒன்று என்பதின் திரிபு, ஆடி, அழிஞ்சில், ஒற்றை, ஓர்.

ஒருகட்பகுவாய் - பறைவகை.

ஒருகட்பகுவாய்ப்பறை - பதலை.

ஒருகட்பறை - ஒருகட் பகுவாய், மொந்தை.

ஒருகணக்கு - ஓரேவிதம், நாட்டுக் கோட்டைச் செட்டிகள் செய்யும் மூன்று வருடத்துத் தூரதேச வியாபாரம்.

ஒருகண்டசீர் - எப்போதும்.

ஒருகண்ணன் - ஒற்றைக்கண்ணன்.

ஒருகண்ணுக்குறங்கல் - ஒருமுறை யுறங்கல், ஒரு சிறிது உறங்கல்.

ஒருகலை - திதி, அமா, பக்கம்.

ஒருகலைவருமதினாள் - சினிவாலி.

ஒருகாலிலி - குபேரன், சனி.

ஒருகாலில் நில்தல் } உறுதியா யிருத்
ஒருகாலில் நிற்றல் } தல்.

ஒருகாலும் - எந்தக்காலத்திலும்.

ஒருகால் - ஒருமுறை, ஒற்றைக்கால், ஒருவேளை, சிலவேளை.

ஒருகிடை - கிடந்தகிடை, ஒருபக்கமாய்ச் சாய்ந்து படுக்கை.

ஒருகுடி } தாயத்தார், உதிரப்
ஒருகுடித்தமர் } பிறவினர்.

ஒருகுடியிற்கொண்டோன் - சகலன்.

ஒருகூட்டு } ஒரு சேர்மானம், ஒரு
ஒருகை } பக்கம், ஒன்றிப்பு,
ஒருகு } கட்சியின் ஐக்கியம்,
ஒரு கட்சி, ஒரு சேர்க்கை.

ஒருகுலக்காய் - ஒரு குலத்தில் உதித்தவன்.

ஒருகுழையவன் - பலராமன்.

ஒருகுறி - ஒருமுறை.

ஒருகைபரிமாறுதல் - விருந்தினர் வரிசையில் ஒருபுறமாகப் பரிமாறுதல், ஒருமுறை பரிமாறுதல்.

ஒருகைபார்த்தல் - வெல்லமுயலுதல்.

ஒருகையாயிருத்தல் - எதிர்க்கட்சிக்கு விரோதமாக ஒற்றுமையாயிருத்தல்.

ஒருகைவிளையாடுதல் - எல்லாருக்கும் ஒரு முறைவர ஆடுதல்.

ஒருகொடி - ஒரு வமிசம்.

ஒருகொள்ளை - மிகுதி.

ஒருகோலுடையார் - ஏகதண்டி சந்நியாசிகள்.

ஒருக்க - எப்பொழுதும், ஒவ்வொன்றுக்கும், எப்போதும்.

ஒருக்கடுத்தல் - சமமாக நினைத்தல்.

ஒருக்கணி - ஒருக்கவி, ஒருக்கணித்துக்கிட, ஒஞ்சரி.

ஒருக்கணித்தல் - ஒருச்சாய்த்தல், ஒரு பக்கமாய்ச் சாய்தல், ஒருச்சரித்தல்.

ஒருக்கணிப்பு - ஒருபக்கமாய்ச் சாய்கை.

ஒருக்கம் - ஒருதன்மை, மனவொடுக்கம்.

ஒருக்கல் - அழித்தல், ஒருப்படுத்தல், ஓர் அபசுரம்.

ஒருக்களித்தல் - ஒருக்கணி.

ஒருக்கால் - ஒருமுறை, ஒருகால்.
ஒருக்கிடை - ஒரேகிடை, ஒருகிடை.
ஒருக்கு - ஒருப்படுத்து, அடக்கு.
ஒருக்குதல் - ஒருப்படுத்தல், ஒன்று சேர்த்தல், அடக்குதல், அழித்தல்.
ஒருங்கல் - அடங்கல், கேடு, ஒருங்குதல்.
ஒருங்கவிடுதல் - பலவற்றை ஒன்று சேர்த்தல்.
ஒருங்கு - அடக்கம், அழிவு, எல்லாம், ஒருங்கென்னேவல், ஒருதன்மை, ஒருமிக்கக்கூடி நிற்றல், முழுதும், ஏக காலத்தில், முழுமை, ஒரு சேர, எல்லாம் கூடி நிற்கை, உடங்கு, ஒருங்காய், ஒருங்கே.
ஒருங்குடன்றோற்றம் - ஓரலங்காரம்.
ஒருங்குதல் - அடங்குதல், அழிதல், ஒருவழிப்படல், ஒருபடியாதல், ஒன்று கூடுதல், ஒடுங்குதல், ஒதுங்குதல்.
ஒருங்கே - முழுதும், ஒருசேர.
ஒருசந்தி - ஒருநேரப்போசனம், விரதம, ஒரு நாளைக்கு ஒருமுறைமட்டும் உணவுகொள்ளுமை விரதம், ஒரு பொழுதுண்டல்.
ஒருசாயல் - அபூர்வம, ஒரேமாதிரி, உருவொப்பு.
ஒருசாய்வு இடைவிடாமை, ஒரு கண்டசீர், பட்சபாதம், இடைவிடாமல், ஒருபட்சம், ஒருமிக்க.
ஒருசாராசிரியர் - ஆசிரியருள் ஒரு கொள்கையினர்.
ஒருசாரார் - ஒருதூலாசிரியர், ஒரு புடையார், ஒருபக்கத்தவர்.
ஒருசார் - ஒருபக்கம, ஒருகட்சி, பட்சபாதம.
ஒருசார்பு - ஒருசார்.
ஒருசாவுழுதல் - ஒருமுறை உழுதல்.
ஒருசாலைமாணாக்கர் - ஒருபள்ளியிற் படித்த மாணாக்கர்.
ஒருசிம்புப்புகையிலை - புகையிலை நறுக்கு.
ஒருசிறிது - மிகக்கொஞ்சம், அற்பம்.
ஒருசிறை - ஒதுக்கிடம், ஒருபக்கம், வேறிடம், ஒருபகுதி.
ஒருசிறைநிலை - சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்கப்பாடலமைந்துள்ள முறை.
ஒரு சீரானவன் - ஒரே தன்மையாக இருப்பவன்.
ஒருசேர - ஒருமிக்க.
ஒருசொல் - உறுதிச்சொல், பலசொல்லாயிருந்தும் ஒரு சொன்னீர்மைப்பட்டது.
ஒருசொல்வாசகன் - சொற்பிறழாதவன்.
ஒருசொல்வழுவுகாடு - யாதொரு பொருளுமின்றி வாக்கியத்திடை வழுங்கும சொல்.
ஒருசொற்பல பொருள் - ஒருபதத்துக்குரிய பல பொருள்கள்.
ஒருசொன்னீர்மை - ஒரு சொற்றன்மை, சொற்கள் இணைந்து ஒரு பொருளே தருந்தன்மை.
ஒருச்சரிதல் - ஒருபுறத்துருகுச்சரிதல்.
ஒருச்சரிப்பு - ஒருபகுதியாய்ச் சாய்தல், ஒரு பகுதியாய்ச் சாய்த்தல்.
ஒருச்சரிவு - ஒருச்சரிதல்.
ஒருச்சாய்தல் - ஒருபுறத்துருகுச் சாய்தல்.
ஒருச்சாய்த்தல் - ஒருபகுதத்துக்குச் சாயப்பண்ணல், ஒருபக்கஞ் சாய்த்தல்.
ஒருசாய்பு - ஒருபுறத்துக்குச் சரிவு, ஒருபட்சம், ஒருமிக்க, இடைவிடாமை.
ஒருச்சாய்வு - ஒருபுறமாகச் சாய்கை.
ஒருஞாண் - பண்டைக்காலத்து வழங்கிய ஓர் அளவுப்பெயர்.
ஒருதடவை - ஒருமுறை, ஒருவிதம்.
ஒருதந்தன் - ஒற்றைக் கொம்பையுடைய விநாயகன்.
ஒருதரம் - ஒருதடவை, ஒரேவிதம், ஒருமுறை, ஒருவிசை.
ஒருதலை - உறுதி, ஒருபக்கம், நிசம், ஒரு சார்பு, நிச்சயம்.

ஒருதலைக்காமம் - ஆடவனும் பெண்ணு மங்கங்கிருந்து வருந்தல், ஒரு பக்கமான காதல், கைக்கிளை.

ஒருதலைதுணிதல் - ஒருயுத்தி.

ஒருதலைநியாயம் - ஒருதலைவழக்கு.

ஒருதலைநோவு - ஒருத்தலைவலி.

ஒருதலைப்படுதல் - ஒரு முடிவு பெறுதல்.

ஒருதலையுள்ளுதல் - ஒருதலைக் காமத்தோர் புணர்ச்சியை யிடைவிடாது நினைத்தல், அது பத்தவத்தையில் ஒன்று.

ஒருதலைவழக்கு - ஒருத்தலைநியாயம், பட்சபாதமான தீர்ப்பு, ஒரு பக்கத்தைப்பற்றிய நியாயம்.

ஒருதனி - ஒப்பில்லாததனி, சன்னக்கனி.

ஒருதன்மை - ஒருதலை, ஒரேவிதம், மாற்றுத்தன்மை, ஒப்பற்றதன்மை, மாறுதன்மை, ஒருவிதம், மாறுமை.

ஒருதாரை - ஒருமிக்க, ஒருநீதி, ஒரு பக்கக்கூர்மை, இடையீடில்லாத நீரொழுக்கு.

ஒருதாரைகசுதி - ஒருபுங்கூருள்ள கத்தி.

ஒருநி - ஒரேழுத்தசை.

ஒருநிறம் பற்றுதல் - ஒரு பட்சமாக இருத்தல்.

ஒருதுவலி - பண்டைக்காலத்துவழங்கிய ஓர் அளவுப்பெயர்.

ஒருத்தலை - ஒருபக்கம்.

ஒருத்தலைநியாயம் - ஒருபுற நியாயம்.

ஒருத்தலைநோவு - ஒருத்தலைவலி.

ஒருத்தலைப்பரம் } ஒருபுறத்துப் பா
ஒருத்தலைப்பாரம் } ரம்.

ஒருத்தலையிடி - ஒருத்தலை வலி.

ஒருத்தலைவலி - ஒருபுறத்துத் தலைவலி.

ஒருத்தல் - எருமை, கரடி, கவரி, பன்றி, புலி, புல்வாய், மரை, மான், யானை இவற்றினாண் விலங்கேற்றின் பொது, ஒரு சார் விலங்கின் ஆண்பெயர், விலங்கினாண்.

ஒருத்தன் - ஒருவன், ஒப்பற்றவன்.

ஒருத்தி - ஒருபெண்.

ஒருத்து - மனவொருமைப்பாடு.

ஒருநாயகம் - ஒரே ஆட்சி.

ஒருநாளைக்கொருநாள் - நாள் செல்லச் செல்ல.

ஒருநெல்லுப்பெருவெள்ளை - ஒரு வகை நெல்.

ஒருநெறிப்படுதல் - ஒருவழிப்படுதல்.

ஒருநேரம் - அகாலம், பாதிப்பகல்.

ஒருபடம் - இடுதிரை.

ஒருபடி - ஒருகொத்து, வகை, வருத்தத்தோடே, ஒருவகை, ஒரேவிதம், ஒருவாறு, ஒருமாதிரி, ஓர் அளவு.

ஒருபடித்தாய் - அவ்விதமாய், பிரயாசமாய், மட்டாய், ஒரேவிதமாய், இருக்கவேண்டிய நிலைக்குச்சிறிது மாறுதலாய்.

ஒருபது - பத்து.

ஒருபலம - கரடி, தொடி.

ஒருபடம் - ஒருபிறப்பு, ஒரு தரப்பு.

ஒருபனைவிரற்பம் - பீலி.

ஒருபாட்டம் - ஒருபாறல் மழை.

ஒருபாவொருபஃது - ஒரு பிரபந்தம்.

ஒருபான் - ஒருபது.

ஒருபிடி-உறுதி, ஒரே பற்று, பிடிவாதம், கைப்பிடியளவு, விடாப்பற்று.

ஒரு பிறப்பு - ஒருமை.

ஒருபுடை - ஒருபக்கம், ஏகதேசம், ஒரு பக்கமாய்.

ஒருபுடையுவமை - முழுவதும் ஒப்பாகாமல் சில தன்மையில் மாத்திரம் ஒத்திருக்கும் உவமை.

ஒருபுடையொப்புமை - ஏகதேசவுவமம், ஒருபுடையுவமை.

ஒருபூ - ஒருபோகம்.

ஒருபொருட்கிளவி - பரியாயச்சொல்.

ஒருபொருட்டீபகம் - ஒரு பொருடானே கவிமுற்றுந் தீபகமாய் நின்று முடிவது.

ஒருபொருட்பன்மொழி - ஒரு பொருளைக் குறித்து வரும் பலசொல், மீமிசைச் சொல்.
ஒருபொருள் - எதார்த்தம், கடவுள்.
ஒருபொழுது - ஒருகாலம், ஒருசந்தி.
ஒருபோகி - ஏக விஷயம்.
ஒருபோகு - கொச்சகக்கலிப் பாவினுள் ஒன்று, ஒரு படித்தானநிலம்.
ஒருபோக்கன் - வேறுபட்ட நடையுள்ளவன்.
ஒருபோக்காய்ப்போதல் - திரும்பி வராதுபோதல்.
ஒருபோக்கு - ஒருமுறை போகுதல், ஒருவிதம், ஒருமாதிரி, மாறுன நடை.
ஒருபோது - ஒருபொழுது.
ஒருப்பட - ஒருங்குபட, மனமொக்க, ஒரு நினைவாக, கருத்தொன்றுபட.
ஒருப்படல் - ஒருமனப்படல், ஒன்றித்தல், சம்மதித்தல், ஒருப்படுதல்.
ஒருப்படுதல் - ஒரு தன்மையாதல், சம்மதித்தல், ஒரு நினைவாதல், துணிதல், முயலுதல், ஒன்றுகூடுதல், தோன்றுதல்.
ஒருப்படுத்தல் - ஒருப்பட செய்தல்.
ஒருப்படுத்துதல் - ஒன்றுகூட்டுதல், வழி விடுதல், முடிவு செய்தல், சம்மதிக்கச் செய்தல்.
ஒருப்பாடு - சம்மதம், ஒரு தன்மையாகை, ஒன்றிநிற்கை, மனத்திண்மை, ஒருமைப்படுகை, மனமொன்றுபடுகை.
ஒருப்பார்வை - விடாதுபார்த்தல்.
ஒருப்பிடி - உறுதிப்பிடி, வலுபிடி.
ஒருமடைசெய்தல் - ஏகமுகமாக்குதல்.
ஒருமட்டம் - ஒசேசரி, ஒருமட்டு.
ஒருமட்டு - ஒத்த அளவு, ஒருவாறு.
ஒருமரம் - அழிஞ்சில், செம்மரம்.
ஒருமனப்படல் } ஐம்புலனடக்கல், ஒருமனப்படுதல் } ஒரு எண்ணமாதல், ஏகமனமாதல், மனத்தை ஒன்றிலே செலுத்துதல்.
ஒரு மனப்பாடு - மன விணக்கம், மனத்தை ஒன்றிற் செலுத்துகை, மனவடக்கம், இணக்கம்.
ஒருமா - இருபதில் ஒரு கூறுகிய பின்னவெண் (ப).
ஒருமாதிரி - ஒருவிதம், குணம் வேறுபட்ட, ஒருபடி.
ஒருமாரை - ஒருமாவும் அரைமாவுஞ் சேர்ந்த ஒரு கீழ்வாயிலக்கம்.
ஒருமி - ஒருமைப்படு.
ஒருமிக்க - ஏகமாய், ஒருசேர.
ஒருமிடறுதல் - ஏககண்டமாதல், ஏகசிந்தையாதல்.
ஒருமிடறு - ஒருவாய்க்குள் அடங்கும்படி பருகும் அளவு.
ஒருமித்தல் - ஒன்றுபடல், சம்மதித்தல், ஒன்றுசேர்தல்.
ஒருமிப்பு - இசைவு, ஒன்றிப்பு, ஒற்றுமைப்படுகை, மனத்தை ஒன்றிற் செலுத்துகை.
ஒருமு - ஓரசையாலாகியமொழி.
ஒருமுகமாய்ப்பேசுதல் - ஏகோபித்துப் பேசுதல்.
ஒருமுகம் - ஒருகூட்டம், ஒருபுறம், சேர்வழி, ஒற்றுமை, ஒரு கட்சி.
ஒருமுகவெழுனி - ஒருவகைத்திரை.
ஒருமுறை - ஒருதடவை.
ஒருமுற்றிரட்டை - ஓரடிமுற்றெதுகையாய் வருவது.
ஒருமை - இறையுணர்வு, ஒருதன்மை, ஒருபிறப்பு, ஒற்றுமை, ஓர்மரம், தனிமை, நிச்சயம், ஒரேதன்மை, ஒப்பற்றதன்மை, ஏகவசனம், மனமொன்றுகை, ஆலோசனை முடிவு, மோக்ஷம், மெய்ம்மை, பிளவுபடாதமனம், மனமொருமிக்கை.
ஒருமை பன்மைமயக்கம் - வாக்கியத்துள் ஒருமை பன்மைகள் மயங்கி வழங்குகை.
ஒருமைப்படல் } உடன்படல், ஒற்ஒருமைப்படுதல் } றுமைப்படல்,

ஒற்றுமைப்படுதல், மனம் ஒரு முகப்படுதல்.

ஒருமைப்பாடு - ஒன்றிப்பு, ஒற்றுமைப்படுகை.

ஒருமைமகளிர் - பிற ஆடவர் பாற் செல்லாத மன்முடைய மாதர், கற்புடைய மகளிர்.

ஒருமைமகள் - பதிவிரதை.

ஒருமையிற்பன்மை - ஒருமைப்பாலிற் பன்மைப்பால் கூறல்.

ஒருமொழி - ஒருபொருளையே விளக்கி நிற்குஞ்சொல், ஆணை, பல சொற்களாய்ப் பிரிக்க முடியாத பதம்.

ஒருலாகை - ஒருவகை.

ஒருவகை - ஒருபோக்கு, ஒருவிதம்.

ஒருவகைப்புல் - புதவு.

ஒருவண்ணம் - ஒருவாறு.

ஒருவந்தம் - உறுதி, ஒற்றுமை, சம்பந்தம், தனித்திருக்குமிடம், நிச்சயம், நிலைபேறு, தனியிடம்.

ஒருவயிற்போலியுவமை- ஓரலங்காரம்

ஒருவயிற்றோர் - சகோதரர்.

ஒருவர் - ஒருவன் அல்லது ஒருத்தியைச் சிறப்புப்பற்றிப் பன்மையில் வழங்கும்பெயர்.

ஒருவர்க்கொருவர் - பரஸ்பரம்.

ஒருவல் - ஒருபுதல்.

ஒருவழிச்சேறல் விலக்கு - ஓரலங்காரம்.

ஒருவழித்தணத்தல் - அகப்பொருட் கிளவிக்கொத்தினு ளொன்று.

ஒருவழிப்படல் } ஒன்றுய்ச் சேர்
ஒருவழிப்படுதல் } தல், நோக்படுதல், ஒருமுகப்படுதல், ஐக்கியப்படுதல், ஒன்று படுதல், மனம் ஒருநெறிப் படுதல்.

ஒருவழிமேவல் - ஓரவாரம்.

ஒருவழியுறுப்பு - ஏகதேசம்.

ஒருவழியொப்பிலொருபொருண் மொழிதல் - ஓரலங்காரம்.

ஒருவன் - ஒருத்தன், ஒப்பற்றவன், ஓர் ஆடவன்.

ஒருவாக்காக - ஒருமாதிரி, ஒரேபடியாக, ஒரேமுறையில், ஒருசேர.

ஒருவாக்கு - உறுதிமொழி, ஏகோபித்துக்கூறுஞ்சொல்.

ஒருவாமை - பிறழாமை, நீங்காமை.

ஒருவாய்க்கோதை - ஒருகட்பறை.

ஒருவாய்ப்படுதல் - ஏககண்டமாகப் பேசப்படுதல்.

ஒருவாறு - ஒருவிதமாக, ஓளவாக.

ஒருவாற்றான் - ஒருவாறு.

ஒருவிசை - ஒருமுறை.

ஒருவிதமாதல் - நூதன வகையாதல், வேறு படுதல், உபேட்சையாதல்.

ஒருவியாழவட்டம் - குரு சூரியனைச் சுற்றிவருகிற பன்னிரண்டு வருஷ காலம்.

ஒருவினைச்சிலேடை - ஓரலங்காரம்.

ஒருவு - ஆடு, செய்யுளுறுப்பிலோர் பேதம், நீங்குகை, நீங்கென்னேவல், நீக்கு, தவிர், விலகு, விலக்கு ஒத்திரு, தப்பு, தவிரு.

ஒருவுதல் - தவிர்தல், நீங்கல், விலகல், விடுதல், கடத்தல், ஒத்தல், தப்புதல், ஒழிதல்.

ஒருவேளை - ஒருபொழுது,ஒருமுறை, ஒருகால்.

ஒரூஉ - ஒருவு, ஒரூஉத் தொடை.

ஒரூஉதல் - ஒருபு.

ஒரூஉத்தொடை - செய்யுட்டொடையிலொன்று.

ஒரூஉமுரண் - முதலாஞ்சீரினு நான்காஞ்சீரினு முரண்டுவருவது.

ஒரூஉமோனை - ஒரூஉத்தொடை.

ஒரூஉவண்ணம் - ஓரீற்றொடுப்பது, யாற்றொழுக்காகப் பொருள்கொண்டு செல்லுஞ் சந்தம்.

ஒரூஉவளபெடை - முதற் சீர்க்கண்ணு நான்காஞ் சீர்க்கண்ணு மளபெடை பயிலுவது.

ஒரூஉவியையு - ஈற்றுச்சீரினு மீற்றயிருசீரிடை விட்டயற்சீரினுமியைபுவருவது.

ஒருஉவெதுகை - முதற்சீர்க்கண்ணு நான்காஞ்சீர்க்கண்ணு மெதுகை வருவது.

ஒரே - ஒன்று, ஒன்றேயான.

ஒரோவழி - சிறுபான்மையாய்.

ஒரோவென்று - ஒவ்வொன்று.

ஒரோவொருவர் - தனித்தனி ஒவ்வொருவர்.

ஒரோவொன்று - ஒவ்வொன்று.

ஒர்லோஸ்கட்டை - கெடியாரம்.

ஒலரி - சிறுமீன்வகை.

ஒலி - ஆரவாரம், இடி, ஒலியென்னேவல், ஓசை, காற்று, கொடிவேலி, கோஷ்டம், முழக்கம், அதிர்தல், அமலை, அரவம், ஆகுலம், ஆம்பி, ஆர்ப்பு, ஆர்வம், இசை, இமிழ், இயம், இரக்கம், இரட்டு, இரை, உரை, ஓதை, ஓலை, கம்பலை, கலி, கம்பை, களன், குரல், குரை, குளிறு, கோடணை, சிலை, சும்மை, சுருதி, ஞிமிர், தூவை, ஒளிர், தூழனி, தொனி, நாதம், நினைசம், பாடு, பிளிறு, புலம்பு, வருணி, வகுளி. அன்றியும் பறவை யாலெழுமொலியின் பெயர் - கலகலம், தூழனி, பயிர். விலங்கிலெழுமொலியின்பெயர் - கோலாகலம். அசையுஞ் சீலையானுமிலையாலுமெழு மொலியின்பெயர் - மருமராஞ்சம். அசையுமாபரணத்தாலெழுமாலியின் பெயர் - சிஞ்சிதம்.

ஒலிக்குறி - ஒலியைக்காட்டுங்குறி.

ஒலிக்குறிப்பு - அனுகரணவோசை.

ஒலிசை - மணவாளப்பிள்ளைக்குக் கொடுக்கு முபகாரம், மணமகனுக்கு மணமகள் சுற்றத்தார் கல்யாணத்தின் நான்காநாளிற் கொடுக்கும் வரிசை.

ஒலித்தல் - தழைத்தல்.

ஒலித்தல் - ஆடையழுக்கற்றல், ஆர்த்தல், தளைத்தல், மிகக்காய்தல், ஒலி, சந்தித்தல், ஆடைவெளுத்தல், வினக்குதல், ஆரவாரித்தல், தழைத்தல், அரற்றல், அரிம்பல், அலறல், அழுங்கல், ஆர்த்தல், ஆலல், இசைத்தல், இடித்தல், இமிர்தல், இமிழ்தல், இயம்பல், இரங்கல், இரட்டல், இரைத்தல், இணைத்தல், உரற்றல், உரைத்தல், உலம்பல், உழம்பல், ஊளைத்தல், எங்கல், கதித்தல், கரைதல், கவித்தல், கறங்கல், களைத்தல், குமுறல், குரைத்தல், குளிறல், சலித்தல், சிதைத்தல், சிம்பல், சிரத்துதல், சிலம்பல், சிலும்பல், சிலைத்தல், ஒளள்ளல், சுழங்கல், தூவைத்தல், தெவிட்டல், தெழித்தல், தொனித்தல், பிறங்கல், புலம்பல், முரவல், முரற்றல், நரலல், நரற்றல், பயிறல், பிளிறல், முழங்கல், விம்மல்.

ஒலிப்பண்பு - ஓசைப்பண்பு.

ஒலிப்பு - பெருஞ்சத்தம்.

ஒலிமுகம் / ஒலிமுகவாயில் } கோட்டையின் மூன்புறவாயில், ஒலிமுகவாசல்.

ஒலிமுகவாசல் - நகரம் அல்லது கோயிலின் முன்புறவாயில்.

ஒலியந்தாதி - ஒரு பிரபந்தம்.

ஒலியலந்தாதி - ஒருபிரபந்தம், ஒலியந்தாதி.

ஒலியல் - சோலை, தீ, தெருவு, சோல், பூமாலை, யாறு, தழைக்கை, தளிர், வேளையாலை, ராயோட்டுங்கருவி, ஆடை, நரி, பீலிக்குஞ்சம், ஒலித்தல், ஆறு.

ஒலியன் - ஆடை.

ஒலியின்காரியம் - எழுத்து.

ஒலியெழுத்து -ஒலிவடிவாமெழுத்து.

ஒலியொலியென்றெலித்தல் - மிக்க பயன் தருதல்.

ஒலிவடிவு - எழுத்துக்குள்ள சத்த ரூபமான வடிவம்.

ஒலிவு - ஒருவகைமரம்.

ஒலுகல் / ஒலுகுதல் } ஒலுங்குதல், ஒல்கல்.

ஒலுகு - திண்டு.

ஒலுங்கு - கொசுகு, பெருங்கொசுகு, கொசு.
ஒலோவு - குறைவாகு.
ஒலோவுதல் - குறைவாதல்.
ஒல் - ஒலிக்குறிப்பு, ஒல்லென்னேவல், முடிவிடம்.
ஒல்கல் - அருகல், குழைதல், குறைதல், துவளல், மெலிதல், ஒல்குதல், குறைவு.
ஒல்காமை - தளராமை.
ஒல்கு - தளர், கீழ்ப்படி, குழை, குறை, சுருங்கு, துவள்.
ஒல்குதல் - ஒல்கல், தளர்தல், மெலிதல், குழைதல், நடங்குதல், சுருங்குதல், அசைதல், ஒதுங்குதல், சாய்தல், நடத்தல், வளைதல், வறுமைப்படுதல், மேலே படுதல், மனமடங்குதல், கெடுதல், எதிர்கொள்ளுதல், தளருதல், துவளல்.
ஒல்லட்டை-ஒல்லியானவன், ஒல்லாடி.
ஒல்லல் - இசைதல், இயலல், பொத்துதல், பொருந்தல், இயலுகை, உடல்தீர்க்கை.
ஒல்லாங்கு - பொருந்தும் வழியால், பொருந்துமாறு.
ஒல்லாடி - ஒஞ்சட்டை, ஒல்லட்டை.
ஒல்லாதவர் - பகைவர்.
ஒல்லாமை - இகழ்தல், இசையாமை, இயலாமை, பொருந்தாமை, வெறுப்பு, அவாவின்மை, இகழ்ச்சி.
ஒல்லார் - பகைவர்.
ஒல்லி - ஒடுங்கின ஆள், ஒடுங்கினது, துளைப்பம், மெலிந்தவன், மேன்மை; வெறிதாய்ப்போன தேங்காய் முதலியன, மென்மை, ஒல்லித்தேங்காய், துடைப்பம்.
ஒல்லிக்காய்ச்சி - உள்ளீடில்லாத காயுள்ளதென்னை.
ஒல்லித்தேங்காய் - உள்ளீடில்லாத தேங்காய்.
ஒல்லிமேய்தல் - தேங்காய்ப்பருப்பிடையிடையே வெறிதாய்ப்போதல், தேங்காயில் உட்பசையறுதல்.
ஒல்லியன் - மெல்லியவன்.
ஒல்லு - கூடு, இணங்கு, இயல், நேரிடு, பொருந்து, இயலு, சம்பவி, சகி, பொறு.
ஒல்லுதல் - அடைதல், இணங்குதல், இயலுதல், சம்பவித்தல், நிந்தித்தல், நிறைவேற்றல், பொத்துதல், பொருந்தல், உடன்படுதல், தகுதல், பொருந்துதல், பொருத்தல், ஓலைப்பெட்டி முதலியன பொத்துதல்.
ஒல்லுநர் - நூலுரையுணர்வோர், மித்திரர், நண்பர்.
ஒல்லென - விரைய, வெளியாக.
ஒல்லெனல் - அணுகாணவோசை, ஒலிக் குறிப்பு.
ஒல்லே - விரைவாக.
ஒல்லை - கடுப்பு, காலவிரைவு, சிறுபொழுது, சீக்கிரம், பழமை, வேகமாய், காலதாமதமின்றி, சீக்கிரமாக, உடனே.
ஒல்லையூர்கிழான் - கொடித்தலை, விழுத்தண்டிளூராற் பாடப்பட்ட பெருஞ் சாத்தன் றந்தை.
ஒல்லொல்லி - மிக்க ஒல்லி.
ஒவ்வல் - ஒவ்வுதல், பொருந்தல்.
ஒல்வழி - பொருந்தியவிடத்து, பொருந்திய காலத்தில்.
ஒவ்வாப்பக்கம் - பொருந்தாதபக்கம், தர்க்கத்தில் பொருந்தாத பக்கம்.
ஒவ்வாமை - இயலாமை, தகுதியீனம், பொருந்தாமை, ஒப்பாகாமை, இசையரமை, தகாமை, ஒவ்வாத்தனம்.
ஒவ்வு - பொருந்து.
ஒவ்வுதல் - இசைதல், இணங்குதல், பொருந்துதல், ஒத்திருத்தல்.
ஒவ்வுறல் - பொருத்தமுறல்.
ஒவ்வுறுதல் - ஒப்பாதல்.
ஒவ்வொன்று - ஒன்றொன்று, வகைக்கொன்று, ஒன்றுவீதம்.
ஒவ்வோக்குழி - நிலத்திலே விரலால் பாலர் எழுதும் அரிக்குழி.
ஒவ்வோன் - ஒப்பில்லாதவன்.

ஒழி - ஒழியென்னேவல், முடி, தள்ளு, தவிர், தீர், அழி, கொல், துற, ஓய், நீங்கு, சா, தவிரு, தீரு, காலியாக்கு, முடித்துவிடு.

ஒழிகடை - ஈறு, பெரும்பான்மை முடிந்தநிலை.

ஒழிகை - ஒய்தல், விடுகை.

ஒழிச்சு - போக்கு, காலியாக்கு, அழி.

ஒழிச்சுதல் - போக்குதல், அழித்தல், காலி செய்தல்.

ஒழிதல் - அழிதல், சாதல், தவிர்தல், நீங்கல், முடிதல், விடுதல், தீர்தல், வெளிச் செல்லாது தங்குதல், தீர்மானமாதல், விட்டு நீங்குதல், வேலைசெய்யாது சும்மா விருத்தல், வெறுமையாதல், ஓர்தூணினை, ஒய்தல், ஓவல்.

ஒழித்தல் - அழித்தல், எழுச்சி, குறைத்தல், கொல்லல், துறத்தல், முடித்தல், நீக்குதல், தவிர்த்தல், ஒடுக்குதல்.

ஒழிந்தவேளை - வேலையில்லாத சமயம்.

ஒழிந்தார் - மற்றவர்.

ஒழிபணி - பலவற்றைச் சுருக்கிக் காட்டுவது.

ஒழிபியல் - பொதுவியல்.

ஒழிபு - மிச்சம், எச்சம், பாரிசேடம்.

ஒழிபொருள் - எச்சில்.

ஒழிப்பணி - அவந்தியுருபக வலங்காரம்.

ஒழிப்பு - தவிர்ப்பு, விலக்கு.

ஒழிப்புயர்வுநவிற்சியணி - ஓரலங்காரம்.

ஒழிய - தவிர.

ஒழியவைத்தல் - ஒழிவித்துவைத்தல், ஒழிவுபார்த்தல், முடித்தல்.

ஒழியாமை - ஒழிவில்லாமை, நீங்காமை, ஓவாமை.

ஒழியா விளக்கம் - ஒழியா விளக்கு.

ஒழியாவிளக்கு - விடிவிளக்கு.

ஒழியாவொழுக்கம் - பிறழாவொழுக்கம்.

ஒழியிசை } ஒழிந்து நிற்குஞ்
ஒழியிசையெச்சம் } சொற்களைக் கொண்டு முடிவது.

ஒழியிசையெஞ்சணி - ஒழியிசையெச்சம்.

ஒழியிசையோகாரம் - ஒழிபொருளைக் காட்டுமோகாரம்.

ஒழிவளவை - ஓரளவை. அது கீழ்ச் சேரிதோற்றதென்புழி, மேற்சேரி வென்ற தெனக்கோடல்.

ஒழிவித்தல் - அழிவித்தல், ஒழியவைத்தல், முடித்தல், ஒழியச்செய்தல்.

ஒழிவிலொடுக்கம் - கண்ணுடைய வள்ளலார் செய்த ஒரு சைவநூல்.

ஒழிவு - இன்மை, ஒழிகை, மறைவு, முடிவு, குறைவு, பரிசேடவளவை, மிச்சம், அவகாசம், பற்றின்மை, பரப்பாழ், சிவப்பாழ், மாயைப்பாழ்.

ஒழுக - மெதுவாக.

ஒழுகலாறு - ஒழுக்கநெறி.

ஒழுகலான் - ஒழுங்கில்லாதவன்.

ஒழுகல் - உயர்ச்சி, ஒழுக்கம், நடை, நீர் முதலிய வோடுதல், நீர் முதலியன வொழுகுதல், நீளப் போதல், முறையாக நடத்தல், ஒழுக்கு, நீர்பாய்கை, நீளம், உயரம், நடக்கை, ஒழுகுதல், துளியாய் வீழுதல், போதல், வளர்தல், இளகுதல்.

ஒழுகிசை - ஓரலங்காரம்.

ஒழுகிசைச்செப்பல் - வெண்சீரும் இயற் சீரும் விரவி வருவது.

ஒழுகிசைத்துள்ளல் - கலிப்பா வோசையினொன்று.

ஒழுகிசையகவல் - நேரொன்றுசிரியத்தளையும் நிரை யொன்றுசிரியத்தளையும் விரவி வருவது.

ஒழுகிப்போதல் - நீர்ப்பண்டஞ் சிந்திவிழுதல், மனங்கரைந்துருகுதல்.

ஒழுகு - உயரம், ஒழுகென்னேவல், ஒழுங்கு, நீளம், பண்டி, முறைமை

யாய் நடத்தல், நிலத்தின்வரலாறு குறிக்குங்கணக்கு, கோயிலின் வரலாறு கூறுவது, நீர் முதலிய வோடு, செல், நெறிப்படிநட, தொடர்ச்சி வழியாய் யொழுகு, பாய்.

ஒழுகுகொண்டை - ஒருவகை மயிர் முடி.

ஒழுகுதல் - நீர்முதலியவார்தல், நீர் பாய்தல், நீர்ப்பண்டம் சொட்டுதல், நடத்தல், முறைப்படி நடத்தல், நேர்மைப்படுதல், நெடுமையாதல், பரத்தல், வளர்தல், மிகுதல், அமிழ்தல், இளகுதல்.

ஒழுகுநீட்சி - நேராகநீண்டிருக்கை.

ஒழுகுமாடம் - உடம்பு.

ஒழுகுவண்ணம் - ஓசையினெழுகும் வண்ணம், ஒழுகியலோசையாற் செல்லுஞ் சந்தம்.

ஒழுகை - ஒழுகு, பண்டி, வண்டி, சகட ஒழுங்கு, ஒழுகல்.

ஒழுக்கமின்மை - கையறல், கையறை.

ஒழுக்கம் - அறப்பான் மூன்றனுளொன்று. அது நான்காச்சிரமத்தோர்க்கு விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலும், உயர்ச்சி, எழுச்சி, குலம், நடை, பண்பு, புண்ணியத்தோற்றம் நான்கினுளொன்று, மரியாதை, முறை, வழி, சீலம், விதித்த கடமைகளினின்று வழுவாது நடக்கை, உலகத்தோடொட்ட ஒழுகுகை, செல்லுகை, வழி, முறைமை, ஆசாரம், நன்னடக்கை, செல்லுகை, உயரம், மேன்மை, தன்மை, ஒழுகுதல் நெறி, மரியாதை, இயல்பு, கையாறு, சரிதை, சரித்திரம், சாரித்திரம், செயல், செய்கை, செய்தி, தினை, நசை, நடை, நன்னிலை, பத்தி, வாகை. அன்றியும் நல்லொழுக்கம்-சீலம், ஞானம், விருத்தி. ஒழியா வொழுக்கத்தின் பெயர்-கை தவாமை, கையொழியாமை.

ஒழுக்கல் - எழுச்சி, ஒழுகுவித்தல், ஒழுக்கு, பொருந்துகை, வரிசையாகவைக்கை, வார்க்கை, ஒழுக்குதல்.

ஒழுக்கவகை - இல்லறவொழுக்கம், துறவறவொழுக்கம்.

ஒழுக்கவண்ணம் - நல்லொழுக்கம்.

ஒழுக்கவழு - தாமதகுணத்தொன்று. அது முறைதவறுதல்.

ஒழுக்கவி - கோயிலில் நாடோறும் படைக்கும் சமைத்த உணவு.

ஒழுக்கு-ஒழுகல், ஒழுக்கேன்னேவல், நடை, முறைமை, பொன்னல் வழியாக நீர்சொட்டுகை, நீரோட்டம், ஒழுக்கம், ஒழுக்கல், ஒழுகுகை, நீர் முதலிய வோடுகை நன்னடை, ஆசாரம், ஒழுகச்செய், நடத்து, நீள இழு.

ஒழுக்குதல் - ஒழுகச்செய்தல், துளித்தல், நடத்துதல், வார்த்தல், நடப்பித்தல், நீள இழுத்தல்.

ஒழுக்குப்பிரமேகம்-ஒருவகைப்பிரமேகநோய்.

ஒழுக்குப்பீளை - பீளையைப் பெருக்கும் கண்ணோய் வகை.

ஒழுக்கு மாற்றுதல் - நீரொழுகும் ஓட்டையை அடைத்தல்.

ஒழுக்குவிழுதல் - பொன்னல்வழியால் நீர் சொட்டுதல், நீரொழுகும்படி பொள்ளல் உண்டாதல்.

ஒழுக்கெறும்பு - ஒரெறும்பு, ஒன்றன்பின் ஒன்றுய்த் தொடர்ந்து செல்லும் எறும்பு,

ஒழுங்கரம் - ஒருவகை அரம்.

ஒழுங்கல் - ஒழுங்குதவறுதல், நிரல் படல், ஒழுங்காயிருக்கை.

ஒழுங்கீனம்-சீர்கேடு, ஒழுங்கின்மை.

ஒழுங்கு - ஒழுங்கென்னேவல், கட்டளை, நன்னடை, நிரை, முறை, விதி, நேர்மை, அளவு முதலியன காட்டும் நில வரக்கணக்கு, நிலத்தீர்வைக்கணக்கு, ஒருவகை வரித்திட்டம், அணி, ஆவளி, ஆளி,

இராசி, ஒளி, கோதை, சிரேணி, தாமம், தாரை, நிரல், பக்தி, மாலை, வீதி, நியமம், நீளம், பண்டி, முறைமை, முறைமையாய் நடத்தல், வரிசை, நிரல்படு.

ஒழுங்குகட்டுதல் - விதியேற்படுத்துதல்.

ஒழுங்குதல் - ஒழுங்காதல், நேர்ப்படுத்துதல்.

ஒழுங்குபடுத்துதல் - நேராக்குதல்.

ஒழுங்கு வியாச்சியம் - முதன்முறை தொடங்கும் வழக்கு.

ஒழுங்கை-ஒடுங்கியவழி, இடுக்குவழி, கட்டடமுகப்பு.

ஒளறி - உலரி மீன்.

ஒளி - அறிவு, ஒளிப்பிடம், ஒளியென்னேவல், கடவுள், கண்மணி, சந்திரன், சுவாலை, சூரியன், நெருப்பு, பார்வைமிருகம், பிரபை, புகழ், விண் மீன், விளக்கு, வெயில், பிரகாசம், வேட்டைக்காரர் பதிவிருக்குமறைப்பு, மறை, மனதிலடக்கு, பதுங்கியிரு, காந்தி, நட்சத்திரம், கேட்டை, எரிக்குந்தன்மை, ஓமம், மின்னல், கட்புலன், பெருமை, செயற்கையழகு, அரசனது கடவுட்டன்மை, ஞானம், சொன்மாலை, மறைகை, மறைவிடம், சிவசக்தி, அரி, ஆதபம், இலக்கம், எல், கடி, கதிர், கரம், கானல், கிரணம், கிளர், கேழ், சவி, சுடர், செடி, சோதி, தாமம், துணி, துளக்கம், தேசிகம், தேசு, நகை, நிலவு, நிழல், நீமம், மின், வாமம், வாள், விரியல், வில், மிகுமொளி - சுப்பிரம். மறைத்துகொள், தவிர், வெய்யல்.

ஒளிக்கடல் - பல், பற்கள்.

ஒளிசெய்தல் - அலங்கல், அவிர்தல், இமைத்தல், இலகுதல், இலங்குதல், ஒடித்தல், ஒளிர்தல், சுடர்தல், தயங்கல், திகழ்தல், துலங்கல், துளங்கல், நகுதல், நிகழ்தல், நிலவல், பிறழ்தல், மிளிர்தல், மின்னல், வயங்கல், விரிதல், விளங்கல்.

ஒளிச்சித்திரப் படம் - புகைப்படம்.

ஒளிதல் - மறைதல், தவிர்தல்.

ஒளித்தல் - பதுங்கல், மறைதல், மறைத்தல், மனத்திலடக்குதல், பதுங்குதல், கரத்தல், கரப்பு, காவு, குவித்தல்.

ஒளித்துத்திரிதல் - மறைந்துதிரிதல்.

ஒளித்து விளையாடல் - கண்பொத்தி விளையாடல்.

ஒளித்து விளையாடுதல் - கண்பொத்திவிளையாடுதல்.

ஒளிநாடு - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று.

ஒளிப்படுதல் - கண்ணுகருத்தோன்றுதல்.

ஒளிப்பிடம் - மறைவிடம்.

ஒளிப்பிழம்பு - அக்கினிச்சுவாலை.

ஒளிப்பு - ஒளிக்குதல், பதுங்குகை, மறைவு, ஒளிக்கை, மனத்துள் அடக்குகை, ஒளித்தல்.

ஒளிமங்குதல் - பிரகாசங் குறைதல்.

ஒளிமரம் - சோதிவிருட்சம்.

ஒளிமழுங்கல் - பிரகாசமழுங்கல், அழுங்கல், புல்லெனல், மட்கல், மழுங்கல்.

ஒளிமழுங்குதல் - ஒளிமங்கு.

ஒளிமறைவு - ஒளித்துத்திரிகை, இரகசியம்.

ஒளியர் - ஒளிநாட்டிற் சிறந்து விளங்கிய வேளாளர்.

ஒளியவன் - சூரியன்.

ஒளியிருத்தல் - பதுங்கியிருத்தல்.

ஒளியிலுருவம் - சுவரிலெழுதுருவமுதலியன.

ஒளியிழை - ஆபரணம், பெண்.

ஒளியுருவியகல் - வைடூரியம்.

ஒளியுள்ளுருவம் - கண்ணுடியுளுருவம்.

ஒளியோன் - சூரியன், ஒளியவன், ஒளிசெய்வோன், சுக்கிரன்.

ஒளிர் - பிரகாசி.

ஒளிர்தல் - ஒளிசெய்தல்.
ஒளிர்ப்பு - பிரபை, பிரகாசம்.
ஒளிர்மருப்பு - யானைக்கொம்பு.
ஒளிர்முகம் - வயிரக்கல்.
ஒளிர்வருதல் } ஒளிர்.
ஒளிர்வாதல் }
ஒளிர்வு - பிரகாசம், ஒளிர்தல்.
ஒளிவட்டம் - கண்ணூடி, சக்கிரம், சக்கராயுதம், பிரபை, சந்திரன்.
ஒளிவட்டி - பச்சைக்கருப்பூரம்.
ஒளிவளவாய் - இரகசியமாய்.
ஒளிவாடுதல் - ஒளிவிடுதல், ஒளிர்.
ஒளிவிடுதல் - பிரகாசித்தல், ஒளிர்.
ஒளிவிளக்குமேன் - ஒரு பாஷாணம்.
ஒளிவிளங்குமேனி - பிறவிப்பாஷாண வகை.
ஒளிவீசுதல் = ஒளிவிடுதல், ஒளிர்.
ஒளிவு - ஒளி, மறைவிடம், ஒளிர்வு, பிரகாசம்.
கல்லி - ஆமை, ஊர்க்குருவி, பருவத் துக்கு மேற்பட்ட நுண்ணறிவு, பருவத்துக்கு மேற்பட்ட நுண் ணறிவுள்ள குழந்தை, கேலி, வேடிக்கை, மேலங்கியுறுப்பு, ஒரு கருவி.
கல்லிசைத்தல் - சரிந்து விழாதபடி கற்களை அமைத்தல்.
கல்லிச்சி } ஒருவகைமரம், இத்தி
கல்லித்தி } வகைகள், ஒருவகை யித்திமரம்.
கல்லியம் - கட்டை, கள், கால், சாரா யம், ஆயத்தமானது, கட்கடை, நோயின்மை.
கல்லியன் - தக்கன்.
கல்லியாணகோத்திரை - கங்கை.
கல்லியாணம் - வித்தியாதத்துவத்தி ருக்கு மாசாரிய தசகரிலொருவன்.
கல்லியாணன் - கல்யாணம், கலியா ணம்.
கல்லியை - கடிகவாளம், துவக்டர் கூட்டம்.
கல்லில்நாருரித்தல் - இல்லாத பொரு ளைப் பெற முயலுதல், ஒரு பொரு ளைப் பாடுபட்டு முயன்று பெறு தல்.
கல்லிவாதம் - ஒருவகை வாத நோய்.
கல்லிழைத்தல் - இரத்தினம் பதித்தல்.
கல்லிறல் - ஈர்க்கிறல்.
கல்லினியம் - நீலாஞ்சனம்.
கல்லின்காரம் - கல்நார்.
கல்லீயம் - நீலாஞ்சனம், வன்மை யான ஈயம், வெள்ளீயங் காரீயங் களின் கலப்பு.
கல்லீரம் - முருக்கு.
கல்லீரல் - ஓரீரல், பித்தாசயம், பற வை மீன்களுக்குள்ள இரண்டாம் இரைப்பை.
கல்லு - கல், மலை, செல்லு, திண்டு, அரி.
கல்லுகம் - பெருவாகை.
கல்லுகொம்பு-தரைதோண்டும் மூளை.
கல்லுக்கலைக்காத்தான் - பொன்னுங் காணி, கல்லுக்கலைத்தான்.
கல்லுக்காரர் - இரத்தினம் விற்போர்.
கல்லுக்குத்தல் - காரியத்தைத் தடை செய்யல்.
கல்லுக்குத்துதல் - மேற்றளம் முத லிய கற்றிற்குப் பாவுகல் குத்து தல், காரியத்தைத் தடை செய்தல்.
கல்லுக்கோழிமீன் - கடல்மீன்வகை.
கல்லுணி - குறுவிச்சை, புல்லூரி, புல்லுருவி.
கல்லுண்டை - ஒருநெல், கல்லுண் டைச்சம்பா, ஒரு வகை நெல்.
கல்லுண்டைச்சம்பா - ஆறுமாதப் பயிரான சம்பா நெல்வகை.
கல்லுதல் - திண்டல், தோண்டுதல், துருவுதல், நீர்அரித்தல், தின்னு தல், எழுத்தாணி கூர்கிழித்தல், ஒலித்தல்.
கல்லுதிரி - ஓரம்மை, ஒருநெல், ஒரு வகை மசூரிநோய்.
கல்லுத்தீரல் - கல்வெட்டல்.
கல்லுத்தீருதல் - இரத்தினஞ் செதுக் குதல்.
கல்லுத்தூக்குதல்-நங்கூரந் தூக்குதல்.
கல்லுநிலம் - கல்லுத்தரை.
கல்லுப்பிடித்தல் - அரிசி களையும் போது சிறுகற்கள் கீழே தங்குதல், தொலைக்க வழிசெய்தல்.
கல்லுப்பிரமேகம் - ஒருவகைப் பிர மேக நோய்.
கல்லுப்பு - ஒருப்பு, உப்புவகை.
கல்லுப்பொறுக்கி - தானுணும்புரு, கல்லை விழுங்கும் புருவகை, புளப் பறவை.

கல்லுப்போடல் - காரியத்தைத் தடை செய்யல், நங்கூரம்போடல்.

கல்லுப்போடுதல் - நங்கூரம் போடுதல், காரியத்தடை செய்தல், எதிர் பாராத ஆபத்தை உண்டாக்குதல்.

கல்லுரல் - கல்லினாலானவுரல், கல்லால் செய்த உரல்.

கல்லுருணி - குருவிச்சி, புல்லுருவி, புல்லூரி.

கல்லுருவி - ஒருபூடு, கல்லைக் கரைக்கும் குணமுள்ள ஒருவகைப்பூடு.

கல்லுவை - ஒருமீன்.

கல்லுவைத்தல் - காரியஞ் சொல்லாமற் பண்ணுதல், சிலைதாபித்தல், தோணி தரிக்கப்பண்ணுதல், மரணச் சடங்கினொன்று, வைராக்கியம் வைத்தல், நங்கூரம் விடுதல், கடிவாயில் மந்திரங் கூறி விழக்கல் வைத்தல், நெற்றியிற் கல்லைவைத்துத் தண்டித்தல், இறந்தோர் பொருட்டுச் சிலைவைத்தல், அணிகளில் அரதனக் கற்களைப் பதித்தல்.

கல்லுளி - ஒருவகையுருக்கு, கல்லுப் பொளிகிறவுளி, பேய்க்களா, கல்லில் வேலைசெய்யும் உளி, கல்வேலைக் குரிய உளி.

கல்லுளிச்சித்தன் - ஒருசித்தபுருஷர், கல்லுளி மங்கன்.

கல்லுளிச்சித்தர் - ஒருவகைச் சித்தர்.

கல்லுளித்தச்சன் - கல்வேலை செய்யும் தச்சன்.

கல்லுளிமங்கன் - அருவருப்பான செய்கையாற் பிடிவாதங் காட்டும் பிச்சைக்காரன்.

கல்லுளியுருட்டு - கல்லெவெட்டும் எஃகு, கல்லைச் செதுக்கும் எஃகு.

கல்லுளுவை - ஒருவகைச் சிறுகடல் மீன்.

கல்லூசி - ஒருமருந்து, ஒருவகை மருந்துக்கல்.

கல்லூடான் - சிறிய கடல்மீன்வகை.

கல்லூரி-கல்விபயிலிடம், பாடசாலை, கல்விபயிலும் இடம், கல்வியூரி.

கல்லூருணி - ஒரூர், பாரைக்கிணறு.

கல்லூற்று - கல்லில் ஊறும் நீர் ஊற்று.

கல்லூன்றுதல் - சாச்சடங்காகப் பாஷான ஸ்தாபனஞ் செய்தல்.

கல்லெடுப்பு - மரணச்சடங்கிற் ரூபித்த கல்லையெடுத்தல், பாஷாண த்துவாசனம் என்ற பிரேதக்கிரியை, கல்லெடுத்தல்.

கல்லெரிப்பு - நீரருகல், நீர்ச்சுருக்கு நோய், கல்லெரிப்பு மேகம்.

கல்லெரிப்புமேகம் - நீர்ச்சுருக்கு நோய்.

கல்லெழுத்துங்குழிவட்டம் - கேவணம்.

கல்லெறி - எறிபடத்தக்கதூரம், கல்லுவிட்டெறிதல், கவண், கல்லை வீசுகை, கல்லெறிதூரம், முழுவலிமையோடு கல்லை வீசியெறிய அது விழும் தூரவளவு.

கல்லெனல் - அணுகரணவோசை, ஓசைக்குறிப்பு, அழுதல், ஒரொலிக் குறிப்பு.

கல்லேறு - முத்துக்குற்றங்களு ளொன்று.

கல்லை - இலை, இலைக்கலம், பாதகுறட்டின் குமிழ், பிணக்கு, அவதூறு, தூறு, இலையினாலே ஆக்கப்பட்ட உண்கலம், பொய், இலையாற் செய்த உண்கலம், கலை.

கல்லைகுத்துதல்-இலைக்கலந் தைத்தல்.

கல்லைநீராக்கி
கல்லைநீரூக்கி } மாமிசபேதி.

கல்லொட்டர் - கற்சுவர் எடுக்கும் ஒட்டசாதியார்.

கல்லொட்டி - நத்தை.

கல்லோலம் - புனற்றிரை, அலை, நீர்த்திரை, மகிழ்ச்சி,கடற்பெருந்திரை.

கல்வம் - குழியம்மி, மருந்தரைக்கு மூரல், கலுவம்.

கல்வருக்கை-ஒரு பலா, காட்டுப்பலா.

கல்வழி - கல்லை வைத்தெண்ணும் ஒருவகைக் கணக்கு.

கல்வளை - மலைப்பிளப்பு, மலைமுழை.
கல்வாழை - பூவாழை, காட்டுவாழை.
கல்வி - அறிவு, கற்றல், நூல், புண்ணிய தோற்றம் நான்கிலொன்று, வித்தை, கல்வியறிவு, கற்கை, பயிற்சி, கற்கப்படுநூல், கற்றற்குரிய நூல்களைக் கற்றல், கற்கும் நூல், உறுதி, ஊதியம், ஒதி, காரணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை.
கல்விக்களஞ்சியம் - கல்விக்கிருப்பிடமாயுள்ளவன், கல்வி நிரம்பினவன், கல்வி நிரம்பினவள்.
கல்விச்சாலை - கல்வி பயிலும் இடம்.
கல்வித்திறம் - கல்விச்சாமர்த்தியம்.
கல்வித்துறை - கல்விநூல், கல்வி வகைகள், கல்விவகை.
கல்விநூல் - கலை.
கல்விபயிலிடம் - பள்ளிக்கூடம்.
கல்விபயிலுமிடம் - கல்லூரி, கல்வியூரி, கழகம், கலாசாலை, பாடசாலை, பள்ளிக்கூடம்.
கல்விபயில்களம் - கல்லூரி.
கல்விப்பரிட்சை - கலைநூற்பயிற்சி.
கல்விப்பொருள் - கல்விச்செல்வம், கல்வியாகிய செல்வம், கல்வியாகிய பொருள்.
கல்விமதம் - கல்விச் செருக்கு, வித்தியாகர்வம்.
கல்விமான் - அறிஞன், வித்துவான், படிப்பாளி.
கல்வியறிவு - கற்றறிவு, படிப்பாலுண்டாகும் ஞானம், கற்றதனாற்பெற்ற அறிவு.
கல்வியூரி - கழகம், வித்தியாசாலை, கல்லூரி.
கல்வியொழுக்கம் - ஔவையாரியற்றிய ஒரு நீதி நூல்.
கல்விவான் - அறிஞன், புலவன்.
கல்விளக்கு - மாக்கல்லாலாகியவிளக்கு.
கல்வினையர் - சிற்பாசாரியர்.
கல்வீடு - கல்லாற்கட்டிய வீடு, உறுதியான கட்டிடம்.

கல்வீரியம் - அன்னபேதி.
கல்வெட்டி - கல்வெட்டுபவன், இரத்தினக்கல் செதுக்குவோன், இரத்தினக்கல் செதுக்குவோள், பச்சை வெட்டுக்கல் அறுத்தற்குரிய கத்தி.
கல்வெட்டு - அழியாதசொல், ஒரு பிரபந்தம், சிலாசாசனம், புகழ்ச்சி செய்யுள், தவறுத வாக்கு, முன்னோர் இறந்த நாள் முதலியவற்றைக் குறிக்கும் சரமகவி கல்லிலெழுதப்பட்டது.
கல்வெள்ளி - இரும்பும் வெள்ளீயமுங் கலந்தது, முரண்வெள்ளி, கலப்பு வெள்ளி.
கல்வேகம் - அன்னபேதி, கல்வீரியம்.
கல்வேதி - ஒருமருந்து, சகஸ்திரபேதி.
கல்வேலை - கல்லிற் செய்யும்வேலை, இரத்தின வேலை.
கவகம் - கவளம், காளான்.
கவக்குன்று - மந்தரமலை, கவ்வக்குன்று, கடற்கடைந்த மத்தாகிய மந்தரமலை.
கவசகுண்டலன் - கவசத்தோடும் குண்டலத்தோடும் பிறந்த கன்னன்.
கவசங்கட்டுதல் - துஷ்டதேவதைகளால் தீங்கு நேராதபடி மந்திரத்தினாற் காப்புச் செய்தல், சீலை மண்ணால் சட்டியின் வாயைக் கட்டுதல்.
கவசம் - இரும்பு முதலியவற்றாலியற்றிய சட்டை, காவற்பண்ணு மந்திரம், சட்டை, சீலைமண், சுரிகை, தடை, தம்பம், பரணம், பரம், பருமம், பாசம், பாரம், மெய்யுறை, மெய்புகுகருவி, இரட்சை, இரட்சையை உண்டாக்குவதாய் சூலாகாருபமாயுள்ள மந்திர விசேடம், மருந் தெரிக்கும் பாண்டங்களை மூட இடும் சீலை மண், காயத்திற் கிடும்கட்டு, ஓர் மந்திரம், காப்பு, படகவாத்தியம், மருந்துக் கவசம், ஒருவகை ஸ்தோத்திரம், அந்தளம்,

அபரம், அரணம், அரணி, ஆசு, கசை, கச்சை, கண்டம், கந்தளம், கருவி, கடாறி, சாலி, சாலிகை, சுடாரி, மேழகம், வாரணம், கைப்புடை, கோதை, கவயம், கவணம்.

கவசனை - கவசம்.

கவசாக்கியன் - சூலியிடத்திற் புரோற்கீதாகமங் கேட்ட ஒருவன்.

கவசி - துரியோதனன் தம்பியருளொருவன்.

கவசித்தல் - சீலை மண் செய்தல்.

கவடம் - தந்திரம், வஞ்சனை, கபடம்.

கவடி - ஒரு விளையாட்டு, சோகி, வெள்வாகு, பலகறை, கபடமுள்ளவன், கபடமுள்ளவள்.

கவடிப்பாய்தல் - ஒரு விளையாட்டு.

கவடு - இடப்படி, கபடம், கப்பு, கவர் கழுத்திடு கயிறு, தொடைச்சந்து, மரக்கொம்பு, யானைகட்டுங் கயிறு, பகுத்தல், மரக்கிளை, கவருள்ள மரக்கிளை, தொடைச்சந்து, யானைக் கழுத்திடுகயிறு, பகுப்பு, அடிவைப்பு, ஓரளவை, மலை, கவர்க்கோடு, கப்புக்கவடு, கபடு.

கவடுதாக்கி - அடிவைப்பு.

கவடுபடுதல் - யாழ்ப்பத்தர் போல இருபுறமும் தாழ்ந்து நடுவுயர்தல், பிரிவுபடுதல்.

கவடுவட்டம் - மூத்துவகை.

கவடுவைத்தல் - எட்டி நடத்தல்.

கவட்டடி - ஓர் எட்டு, ஆண் குறி அல்லது பெண் குறி.

கவட்டல் - கவட்டுதல், மெல்லல்.

கவட்டி - கவட்டை.

கவட்டு - மெல்.

கவட்டுக்கால் - கடப்புக்கால், வளைந்த பாதம்.

கவட்டுதல் - சப்புதல், மெல்லுதல், வளைத்தல்.

கவட்டுநெஞ்சன் - வஞ்சகன், கபட மனம் உள்ளவன்.

கவட்டை - கவர், மரக்கிளையின் கவர்.

கவணங்கட்டுதல் - காயங்கட்டுதல்.

கவணம் - ஒருமருந்து, காயக்கட்டு, சரீரத்திலே வருங்காயங்களுக்கு கட்டுங்கட்டு.

கவணி - ஒருபுடவை, ஒரு வகை மெல்லிய சீலை.

கவணிச்சால்வை - மெல்லிய சால்வை வகை.

கவணை - கவண், மாட்டுக்குப்புல்லிடும் இடம்.

கவண் - கல்லெறிகயிறு, கவண்டி, கவண்டில், கவண்டு, குளிர், தட்டை, தழல், ஓடி, கல்லெறியுங் கருவி, கல்லெறி கருவி, கல்லெறி தற்குக் கருவியாகக் கயிற்றாற் செய்யப்பட்டது, ஓடில், கவணை, குணில்.

கவண்கல் - கவணில் வைத்து எறியும் கல்.

கவண்காரம் - கவண்கல் வீசுவோன்.

கவண்டர் - ஒரு சாதியார், சண்டாளர்.

கவண்டன் - கவுண்டன்.

கவண்டி, கவண்டு } கவண்.

கவதம் - பசுப்போலிருக்குமான்.

கவந்தம் - உடற்குறை, நீர், தலையற்ற உடல், தலைதறிந்த மரம், பேய், குறைத்தலை, தலைக்குறைப் பிணம், செக்கு, பிசாசம், வயிறு, கபந்தம்.

கவந்தன் - ஓரிராக்கதன், வாணசுரன் மந்திரி, ஓர் அரக்கன், ஸ்ரீராமனால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்.

கவந்தி - கந்தைகளா லாகிய மெத்தைப் போர்வை.

கவந்திகை - கவந்தி.

கவம் - கோழை, மத்து, கவ்வம், கபம்.

கவயமா - காட்டான், கவயம், காட்டுப்பசு.

கவயம் - கவசம், காட்டுப்பசு, காட்டா, கவயல், கவயமா.

கவயல் - காட்டான், கவயம்.

கவயன் - ஒரு குரங்குத் தலைவன்.

கவரம் - சாமரம், சினம், உப்பு, கோபம்.

கவரல் - வாரல்.

கவராசம் } தமரூசி, வட்டமிடுங்
கவராயம் } கருவி, கவராயுதம், வட்டமாகத் தூளக்குங் கருவி.

கவராயுதம் - வட்டம் வரையுங்கருவி.

கவரி - இராசசின்னத்தொன்று, எருமை, கவரிமா, சாமரை, தேர், கவரிமான், ஓர் மிருகம், இரதம்.

கவரிச்சம்பா - ஐந்துமாதங்களில் விளையும் சம்பா நெல் வகை.

கவரிமா } அன்னம், எகினம், ஒரு
கவரிமான் } மிருகம், மான்வகை, ஓதிமம், நானம், படகம், பட்டம், இதளுண்-எறு, ஒருத்தல். இதன் பெண் - பிடி, பிணை. இதன்குட்டி கன்று, மானமா.

கவரிமான் மயிர் - சாமரம், கூந்தலுடன் இணைத்துப் பின்னுஞ் சவரி,

கவரிறுக்கி - வேலி முதலியவற்றின் முகப்பில் விலங்குகள் உட்புகாதபடி இடப்படுந் தடைமரம்.

கவரிறுக்கு - கடவுமரம், தணக்கு, கவரிறுக்கி.

கவரொழுசங்கம் - முட்சங்கம், சங்கஞ்செடி.

கவர் - இரண்டாகப்பிரிகை, கவரென்னேவல், மரக்கப்பு, வாழை, பிரியுங்கிளை, பலவாகப் பிரிகை, சூலத்தின் கவர், மீண்ட திருமணக்கட்டி, உத்தரம் புகுத்துஞ் சுவர்ச்சந்து, வஞ்சகம், விருப்பு, பறி, கிரகித்துக்கொள், கொள்ளையிடு, திருடு, மிகச்சேர், இச்சி, கடை, கப்புக்கவடு, கவடுபடு, கவர்ப்பு, கவரு, பறி, கொள்ளையிடு, இச்சி, அழை, அணுபவி.

கவர்கோடல் - சந்தேகங்கொள்.

கவர்க்கால் - கவராயுள்ள மூட்டுக்கட்டை, கப்புள்ளமரம், கிளைவாய்க்கால்.

கவர்க்குளம்பு - பிளவுபட்ட குளம்பு.

கவர்ச்சி - கவருதல், வெள்ளாக்காக் கணம்.

கவர்ச்சுத்தியல் - சுத்தியற் கருவி வகை.

கவர்தல் - ஆசைப் பெருக்கம், இச்சித்தல், கடத்தல், கொள்ளையிடல், திருடல், பறித்தல், வாருதல், அகப்படுத்துதல், வசப்படுத்துதல், விரும்புதல், கொள்ளுதல், நுகர்தல், முயங்குதல், கடடதல், அழைத்தல், பலகாலாகப் பிரிதல், மாறுபடுதல், எடுத்தல், பிடித்தல், பிளவாதல், விருப்பம், வெளவுதல், கொள்ளை கொள்ளுதல், கவராதல்.

கவர்த்தடி - முள்ளிழுக்குந்தடி, முள்ளூத்தூக்கும் கவர்க்கோல், முள்ளிழுக்குங்கோல்.

கவர்த்தல் - கப்புவைத்தல், கவர்விடல், பிரிவுபடுதல், கவடுபடுதல்.

கவர்மரறி - கிளைவழி, கவர்வழி.

கவர்ந்தூண் - அடித்துணுமும் உணவு.

கவர்படல் } இரண்டுபடல், சிக்குப்
கவர்படுதல் } படல், பிரிவுபடுதல், பலபொருள் படுதல், கவராதல்.

கவர்படு - இரண்டு படு, சிக்குப்படு.

கவர்படுபொருண்மொழி - அலங்கார நூலிற் சொல்லப்பட்ட ஒன்பது வழுக்களுள் ஒன்று.

கவர்படுபொருள் - செய்யுள் வழுவிலொன்று.

கவர்படுமொழி - பல கருத்துக்கொள்ளுஞ்சொல், பல பொருள்தரும் வார்த்தை, பலபொருள் கொள்ளுதற் கியைந்த சொல்.

கவர்பரிப்புரவி - பகுத்துவிரையுஞ் செலவினையுடைய குதிரை.

கவர்பு - வேறுபாடு, வேறுபடல், கவர்த்து, கவர்ந்து.

கவர்ப்பு - கப்புவைத்தல், பலவாகப் பிரிகை.

கவர்வழி - பலகவராய்ப்போம் பாதை, கிளைவழி, கவராகச் செல்லும்வழி, பல கவராகச் செல்லும்பாதை, கவலை.

கவர்விடுதல் - ஒன்றிலிருந்து பல தோன்றல், கப்புவைத்தல், கிளைத்தல், சந்தேகமா யிருத்தல், பிரிவு படுதல், பலபொருள்படுதல், இரு பொருள்படல், கப்புவிடல்.

கவர்வு - கதுவுதல், கவர்விடுதல், கைப்பற்று, கவர்ச்சி, விருப்பம், துக்கம்.

கவலம் - எருமைக் கொம்பு.

கவலல் - கவலைப்படுதல், பேசலா லெழுமொலி, வருந்தல், விரும் பல், கவல், துன்பப்படுதல், வருந் தாதே கொள், விரும்பல், புலம்பல்.

கவலி - கவலை.

கவலித்தல் - கவலைப்படல், வருந்தல், கவல்.

கவலை - அக்கறை, அச்சம், ஒருகொடி, ஒருமீன், கவர்வழி, கிலேசம், சந்தி, செந்தினை, துன்பம், நீரிறைக்குந் தோற்கூடை, நோய், மரக்கொம்பு, விசாரம், மனச்சஞ்சலம், பல தினைவு, பலதெருக் கூடுமிடம், கவர்த்தவழி, மாக்கிளை, கிழங் குள்ள ஒருவகைக் கொடி, சிறு கடல்மீன்வகை, கபிலை.

கவலைகவற்றுதல்-வருத்தஞ் செய்தல்.

கவலைச்சால் - கபிலைவற்றத்தில் தூக் குஞ்சால்.

கவலைபாய்தல் - கவலைமிகுதல், மயங் குதல், வேதம் ஒதும்போது வரி சை தவறி ஒதுதல்.

கவலைமறுகு - கவர்த்ததெரு.

கவலையேற்றம் - கபிலை.

கவல் - துக்கம், வருத்தம், கவலை, கவலைப்படு, புலம்பு, துன்பப்படு, பேசலாலொலி யெழு, துக்கி.

கவல்தல் } மனம்வருந்துதல்.
கவலுதல் }

கவல்பு - கவல், கவலை.

கவல்வு - கவல்.

கவவல் - பொருந்தல், விரும்புதல்.

கவவி - விரும்பி.

கவவு - அகத்திடுதல், கவர், மரக் கொம்பு, உள்ளீடு, முயக்கம், தின் றல்.

கவவுக்கை - அகத்திட்டகை, அணைத் தகை.

கவவுதல் - அகத்திடுதல், விரும்புதல், கையால்தழுவுதல், முயங்குதல், நெருங்குதல், பொருந்துதல்.

கவழம் - கவளம்.

கவழிகை - திரைச்சீலை.

கவளமான் - யானை.

கவளம் - சோற்றுத்திரளை, வாயளவு கொண்டவுணவு, வெற்றிலைக் கட்டு, யானைக்களிக்கு முணவு, சோறு, ஒரு மீன், விழுங்கை.

கவளி - வெற்றிலைக்கட்டு, கவளிகை, நூல்வெற்றிலைமுதலியன அடங்கி ய ஒரு கட்டு, நூற்கட்டு.

கவளீகரி - கவளிகரி, விழுங்கு, அப கரி.

கவளீகரித்தல் - கவளமாயுண்ணல், முற்றும் மூடுதல், வி ழு ங் கல், மொத்தமாக விழுங்குதல், முழு தும் அபகரித்தல், கவளமாயுண் ணு தல், முற்றுமூடல், விழுங்குதல்.

கவள்ளலீசுவரம் - சிவத்தலங்களாயி ரத்தெட்டனுளொன்று.

கவறல் - தூக்கித்தல், வருந்தல், விசா ரங்கொள்கை, வருந்துகை, கவலல்.

கவறுடல் - சூதாடுகை, சூதாடல்.

கவறு - தாயக்கொட்டை, பணம்பட் டை, சூதாடுகருவி, சூது, பனை விட்டம், தாயக்கட்டை.

கவறுருட்டுதல் } தாயம் போடுதல்,
கவறெறிதல் } சூதாடுதல்.

கவறை - ஒருசாதி, வடுகர், பரதகண் டத்தின் தென்பாகத்திலுள்ள ஒரு வகை ஜாதி வடுகர்.

கவறைச்செட்டி - செட்டிகளில் ஒரு சாதி.

கவற்சி - வருத்தம், விருப்பம், மனோவிசாரம், மனவருத்தம்.
கவற்றல் - வருத்தல், வருத்துதல்.
கவற்றி - கவற்சி.
கவற்றிற்றூயம் - ஆயம்.
கவற்றுதல் - கவலையுறுத்துதல்.
கவற்றுமடி - பட்டாடைவகை.
கவனஞ்செலுத்துதல் - கருத்தாயிருத்தல்.
கவனம் - கடுப்பு, கருத்து, கலக்கம், காடு, குதிரைநடை, சீக்கிரம், படை, மிகுகவலை, போர், வெப்பம், கவிபாடுகை, வேகம்.
கவனன் - வேகமுள்ளோன், வேகமுடையோன்.
கவனி-கந்தகபாஷாணம், கருத்துவை.
கவனித்தல் - கருத்துவைத்தல், கருத்தூன்றி அறிதல், நினைவுகூறுதல், கருத்துவைத்தல்.
கவனிப்பு - கருத்து.
கவனேசுவரம் - சிவத்தலங் களாயிரத் தெட்டனு ளொன்று.
கவா - வெள்ளைக்காக்கணம், கவாச்சி.
கவாஅன் - கள்வன்.
கவாங்கல் - கவண்கல்.
கவாகூன் - சுக்கிரீவன் சேனையிலுள்ள ஒரு வானரன்.
கவாச்சி - வெள்ளைக்காக்கணம்.
கவாடகுளிகை - வயிற்றுப் போக்கைக் கட்டும் துவர்ப்பான மாத்திரை.
கவாடக்கட்டி - வசம்பு.
கவாடகாரன் - புல்லு வெட்டுவோன், பொதிமாட்டுக்காரன், யானைக்காக எருத்தின்மேல் புல் குழை முதலியவைகளை ஏற்றிக் கொண்டு செல்வோன்.
கவாடசூரணம் - அபினிகலவைச் சூரணம்.
கவாடம் - கதவு, புல்லுச்சுமை, ஓர் எருது சுமக்கக்கூடிய விறகு அல்லது புல் அல்லது கைக்கோலின் பொதி, கபாடம், பொதி.
கவாடலேகியம் - அபினிலேகியம்.
கவாடவடகம் - கட்டுவாங்க குளிகை.
கவாடி - கதவு.
கவாடிபந்தி - யானைக் கூடத்தைச் சுத்தம் பண்ணுவோன்.
கவாட்சம் } சாளரம், வட்டச்சாளரம்,
கவாட்சி } காற்றுப் போகும் பல கணி.
கவாட்சீ - பேய்க்கொம்மட்டி.
கவாட்டம் - கவாட்சி, வட்டசாளரம், கவாட்சம்.
கவாட்டி - சிப்பி.
கவாத்து - போர்வீரர் புரியுந்தேகப் பயிற்சி, ஆயுதபரிட்சை, கவாய்த்து.
கவாம்பேபதி-நாற்பத்து மூன்றுவது மேளகர்த்தா.
கவாய் - ஒருடை, கந்தை, கபாய், கவ்வி, துருக்கருடைய ஒருவகை யுடை, மெய்யுறை.
கவாரம் - தாமரை.
கவாராதனி - இலக்குமி.
கவாலி - சிவன்.
கவாளம் - குதிரைப் பேதிமருந்து, புண்ணுற்றுமருந்து மென்று, காயகட்டு, குதிரைக்குக் கொடுக்கும் விரோசனமருந்து.
கவானக்கவுட்டி - கிட்டிப்புள்ளுவிளையாட்டில் சயித்தவன் தடைகளின் வழியாய் எறியும் புள்ளைத் தோற்றவன் எறிந்த இடத்திற்கு ஒரே மூச்சில் எடுத்துவரும் தண்டனை.
கவான் - தொடை, மலைப்பக்கம், திரள், பக்கமலை.
கவான்செறி - தொடையில் அணியும் ஓர் ஆபரணம்.
கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவிகளைப் பாடுவோன், இக்ஷ்வாகுதம்பி, இருகூயன் மகன், கவியென்னேவல், குரங்கு, சுக்கிரன், சுக்கிரன்தக்கை, சூரியன், பாடல், பாடுவோன், பிரமா, புலவன், பூனைக்காலி, வான்

மீகி, ஓர் அசுரன், கடிவாளம், பாட்டு, வான்மீகி முனிவன், வியாழன், பா, பூனைக்காலிச்செடி, நாற்கவி, வேள, விரும்பு, ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி, கலிகம், மூடு, விருப்பமா யிரு, கவியப்பண்ணு, சூட்டு.

கவிகச்சு - பூனைக்காலி.

கவிகட்டுதல் - செய்யுளியற்றுதல்.

கவிகண்ணேக்கு - புருவத்திற்கு அருகாகக் கையைக்கவித்துக் கொண்டு பார்க்கும்பார்வை.

கவிகம் - குக்கில், குதிரைக்கடிவாளம், குக்கில்மரப்பிசின், கவி.

கவிகருத்து - பாடுவோன் குறிப்பு.

கவிகள் - மங்கலபாடகர், புலவர்கள்.

கவிகற்சேரர் - மங்கலப்பாடகர்.

கவிகாளமேகம் - ஒரு புலவன்.

கவிகுருந்தம் - கந்தகபாஷாணம்.

கவிகூற்று - நூலுள்தன் கருத்தாகக் கவிகூறும் கூர்த்தை.

கவிகை - ஈதல், கவித்தல், குடை, வேளவு, நன்மைதீமை, தியாகம், கொடுத்தல், கொடுத்துக் கவிந்தகை.

கவிக்கட்டை - பனிச்சை.

கவிக்கூற்று - கவிகூற்று.

கவிக்கை - வேளகை.

கவிசனை - உறை, சேணம், கவசனை, கபிசனை.

கவிசாகரப்பெருந்தேவனூர் - கடைச் சங்கப்புலவர்களு ளொருவர்.

கவிசினம் - கோவணம், கவசனம், கௌபீனம்.

கவிசை - ஒரு வயிற்றுநோய்.

கவிசொல்லுதல் - பாட்டுபாடுதல்.

கவிச்சக்கிரவர்த்தி - பெரியபுலவன், பாவலர்க்குத் தலைவர், புலவன்.

கவிச்சடித்தல் - அழுகியமீன் நாற்றம் வீசுதல்.

கவிச்சி - துற்கந்தம், கவிச்சு.

கவிச்சு - நிணநாற்றம், புலால், கவிச்சி.

கவிச்சுக்கடை - மீன்கடை.

கவிஞர் - கலைவல்லோர், புலவர்.

கவிஞன் - பாவலன், சுக்கிரன், புலவன், வெள்ளி, கவிவாணன், கவிராயன், கவிவல்லோன்.

கவிதல் - வேளதல், விருப்பமாயிருத்தல், மூடுதல், கருத்தூன்றுதல், இடித்தல், கவிவு, கவிகை.

கவிதை - பா, பாடல், கவிஞன்தன்மை, பாட்டு.

கவித்தம் - கடுகுரோகிணி, காமுட்டி செய்தல், விளாமரம், கைமுட்டி, அபிநயத்துக்குரிய அலிக்கைவகை, கடுரோகணி, கபித்தம், முஷ்டி.

கவித்தலம் - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்று.

கவித்தல் - கவியப்பண்ணுதல், மூடுதல், வேளந்துமூடுதல், சுட்டுதல், கவியச்செய்தல், முடி முதலிய அணிதல்.

கவித்துவம் - கவிபாடும் வல்லபம், பாட்டுத்தன்மை, புலமைத்தன்மை, கவிபாடும்திறமை.

கவிநாதன் - கவிசிரேஷ்டன்.

கவிநாயகன் - பாட்டுடைத் தலைவன், கவிநாதன்.

கவிப்பர் - செட்டிகள், பசுமறையர் தேடிய பொருளுள்ள வணிகவகையினர், ஒரு வகை வணிகர்.

கவிப்பு - ஆடுடத்துக்குச் சூரியனிற்கும் நிலை, உட்டுவேளை, குடை, மூடுதல், மனம்பற்றுகை, மூடுகை.

கவிமாலை - பாமாலை, பாட்டாகிய மாலை.

கவியங்கம் - வெட்பாலை.

கவியம் - கடிவாளம்.

கவியரங்கேறுதல் - புலவனைக் சங்கத்தாரால் கொள்ளப்படுதல், கழகத்தோரால் நூல் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

கவிரத்தினம் - கவிபாடுவதைக் குறித்த ஒரு நூல், கவிசிரேஷ்டன்.

கவிரம் - அலரிச்செடி, ஒரு தேவ விருட்சம், ஒரு மரம்.

கவிராசபண்டிதர் - சௌந்தரியலகரி இயற்றிய புலவர்.
கவிராசன் - கவிராயன், புலவன்.
கவிராயன் - புலவன், கவிசிரேட்டன், புலவர் வமிசத்தானுக்கு வழங்கும் பட்டப்பெயர்.
கவிரோமம - பூனைக்காலி.
கவிர் - முண்முருக்கு, முருக்கு.
கவிலாசிகை - ஒரு வீணை.
கவிவல்லோர் } புலவர்.
கவிவாணர் }
கவிவு - உள்வளைவு, குவிவு.
கவிழ் - கவிழு, தலைகீழாகு, குவி, கெடு, இற, முழுகிப்போ, கவிழச் செய், மூடு, வெளிப்படுத்து.
கவிழ்ச்சி - குவிவு, குனிவு.
கவிழ்தல் - அகம்புறமாதல், இறத்தல், குனிதல், கெடல், தலைகீழாதல், ஞாணமுதலியவற்றுல் தலையிறங்குதல், நிலைகுலைதல், அழிதல், முழுகிப்போதல், குடிஞைபார், விழுதல்.
கவிழ்தும்பை - ஒரு தும்பை.
கவிழ்த்தல் - அகம்புறமாக்கல், கவிழப்பண்ணல், மூடுதல், கவிழச் செய்தல், கெடுத்தல், ஒழுகவிடுதல், வெளிப்படுத்துதல், காலுதல், சொரிதல், தலைகீழாக்குதல், கவிழ்ப்பு.
கவிழ்ப்பு - கவிழ்த்தல்.
கவிழ்வு - கவிழ்கை.
கவினம் - கடிவாளம், வெண்ணெய்.
கவினல் - அழகாயிருத்தல், சிறத்தல்.
கவினிய - அழகுபெற்ற.
கவின் - அழகு, தக்கபண்பு, அழகுபெறுதல், கவின்றுதல், அழகாயிரு, கவினல்.
கவீசுவரம் - சிவத்தலங் களாயிரத் தெட்டனு ளொன்று.
கவீச்சுரர் - பெரியகவிவாணர், பிரபலமுள்ளவர்.
கவீச்சுரன் - கவிகட்குத் தலைவன்.
கவீதனம் - காட்டுவாகை.
கவீரம் } பசுமேய்ந்தவிடம், வெண்
கவீனம் } ணெய்.
கவீந்திரதீர்த்தர் - மத்வாச்சாரியர்களு ளொருவர்.
கவீந்துரேசுவரம் - சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
கவீரம் - அலரி.
கவுசனம் - கோவணம்.
கவுசனை - உறை, சேணம், கவிசனை.
கவுசி - சூழைவு, வருத்தம், ஒருவகை வரிக்கூத்து, ஒருவகைநோய்.
கவுசிகம் - கௌசிகம், விளக்குத் தண்டு.
கவுசிகன் - இந்திரன், விசுவாமித்திரன்.
கவுசுத்தி - சுத்தியல்வகை.
கவுஞ்சம் - கிரவுஞ்சம், அன்றில்.
கவுஞ்சயூகம் - அன்றில் போல் வகுக்கும் அணிவகுப்பு.
கவுஞ்சவியூகம் - கிரவுஞ்சமென்னும் பறவையின் வடிவாகச் செய்யும் படைவகுப்பு.
கவுஷ்ணம் - கௌபீனம்.
கவுடதம் - வெட்பாலை.
கவுடமாய் - பொருள் வெளிப்படையின்றி.
கவுடம் - கௌடம், வங்காளதேசத்திலுள்ள கௌடநாடு, வட இந்திய பாஷைகளில் ஒன்று, கொடிவகை, கௌடதேசம்.
கவுடி - ஒரு பெண், கவடி.
கவுடிப்பாய்வு - ஒரு விளையாட்டு.
கவுட்டி - தொடைச்சந்து.
கவுணப்பொருள்-கௌணப்பொருள்.
கவுணம் - கௌணம், ஆக்கினேயம் போலன்றிக் காட்டுத்தீ முதலியவற்றிலிருந்து கொள்ளும் ஒருவகைத் திருநீறு.
கவுணி - கவுணியன்.
கவுணியர்கோன் - கௌண்டினிய கோத்திரத்துப் பெரியோரான திருஞானசம்பந்தர்.

கவுணியனூர் - கடைச்சங்கப்புலவர்களுளொருவர்.
கவுணியன் - கவுண்டினிய கோத்திரத்தான்.
கவுண்டலிங்கி - ஒரு நதி.
கவுண்டன் - தமிழர் கன்னடர் சிலர்க்குள்வழங்கும் பட்டப்பெயர், சண்டாளன்.
கவுதகம் - கைப்பிடிச்சுவர்.
கவுதமேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கவுதம் - மீன்கொத்தி, சிச்சிலிக்குருவி.
கவுதாரி - ஒரு பட்சி, ஒரு பறவை, இதல், கோரசம், சிரவம், சிவல், பூழான்.
கவுதாரிபுடம் - கவுதாரியளவாக மூன்று எருவிட்டெரிக்கும் மருந்துப்புடம், மூன்றெருப்புடம்.
கவுதுகேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கவுத்துகம் - பதுமராகம், வஞ்சகம்.
கவுத்துகவாதம் - கலேஞான மறுபத்து நான்கிலொன்று.
கவுத்துவம் - வஞ்சகம், திருமால் மார்பிலணியும் மணி, கவுத்துவராத்திரம், கௌத்துவம்.
கவுந்தம் - கோளக பாஷாணம், கர்க்கடகபாஷாணம்.
கவுந்தி - பெண்களிற் சிறந்த ஒருத்தி, சைனதவப்பெண், குந்திதேவி, குந்திதேசத்து அரசன்மகள்.
கவுபதம் - வெட்பாலை.
கவுமாதசி - திருமாலின் தெண்டாயுதம்.
கவுமாரம் - இளமை, குமாரம், கௌமாரம், இளமைப்பருவம்.
கவுமாரி - பார்வதி.
கவுமோதகி - விட்டுணுவுடைய தண்டு, கௌமோதகி.
கவுரகாசு - அக்குமணி.
கவுரம் - வெண்மை, கௌரம்.
கவுரவம் - கௌரவம்.
கவுரவர் - குருகுலத்தவர்.
கவுரி - கௌரி.
கவுரிசங்கம் - கௌரிசங்கரம்.
கவுரிசங்கரம் - கௌரிசங்கரர்களது உருவினதாய் இருபிளவுபட்ட ஒற்றை உருத்திராக்கம்.
கவுரிபாஷாணம் - வைப்புப்பாஷாண வகை, வெள்ளைப்பாஷாணம்.
கவுரியம்மை - திருக்கேதாரத்திற் கோயில்கொண்டிருக்குந்தேவியார்
கவுரீசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கவுலவம் - பன்றிக்கரணம்.
கவுல் - உடன்படிக்கை, துர்க்கந்தம், தீநாற்றம், நிலக்குத்தகை, உடம்படிக்கை, நாற்றம்.
கவுல்தார் - நிலக்குத்தகை எடுத்தவன்.
கவுல்நாமா - நிலக்குத்தகைப் பத்திரம்.
கவுல்வாங்குதல் - வருஷத்தவணைக்குத் தர்க்காஸ்துக் குத்தகை எடுத்துக்கொள்ளுதல்.
கவுளகன் - பிராணனேயான்மா என்பவன்.
கவுளி - ஒரு வித்தெங்கு, பல்லி, கவளி.
கவுள்-கதுப்பு, யானைக்கதுப்பு, யானைமதம் பாயுமிடம், கன்னம், யானையின்கன்னம், யானையின் உள்வாய், யானைமதம் பாயிடம்.
கவுனன் - மிருதபாஷாணம்.
கவுனி - குதிரைபற்பாஷாணம், கோட்டைவாசல், கெவுனி.
கவேஷணை - சிரார்த்தாதிகளிற் பிராமணரைத்தேடுதல்.
கவேஷிதம் - தேடப்பட்டது.
கவேது
கவேதுகை } காட்டுக்கோதுமை.
கவேரகந்நியை - காவேரிநதி.
கவேரகன்னி - கவேரன் மகளானகாவேரிநதி.
கவேரர் - யோகிகளிற் சிறந்தவராகிய ஓர் இராஜரிஷி, காவேரியின் தந்தை.

கவேரவலம் - காவிரிப்பூம் பட்டினத்தருகில் கவேரமுனிவ சித்தவனம்.
கவேரன் - ஓர் இராசரிஷி.
கவேலம் - குவளை.
கவை - அகில், ஆயிலியம், எள்ளிளங்காய், கவர், கவர்வழி, காடு, கோட்டை, தேவை, மரக்கப்பு, வேலை, மரக்கிளை, பிளப்பு, கவைக்கோல், மூனைகவரான இரும்பாயுதம், கரிசனை, எலும்புக்கவை, காரியம், கப்பு, ஆயில்யம்.
கவைக்காக்காமை-உபயோகமின்மை.
கவைக்கால் - பிளவுபட்டுத் தோன்றுங் கால்.
கவைக்குளம்பு - விலங்கின் பிளவுள்ள பாதம்.
கவைக்கொம்பு - பிரிவுபட்ட மரக்கிளை, கலைமான்.
கவைக்கோல் - கவரானகழி, குத்துக்கோல், கொடிற்றுக்கோல்.
கவைஇ - அனைத்து, சூழ்ந்து,
கவைஇஅ - அகத்திட்ட, சூழ்ந்த.
கவைதல் - மூடல், மொய்த்தல்.
கவைத்தடி - கவர்த்தடி.
கவைத்தல் - கவடுபடுதல், உளதாதல், அகத்திடுதல், அணைத்தல், பிளவுபடுதல்.
கவைத்தாம்பு - தாமணியையுடைய நெடுந்தாம்பு.
கவைத்தாள் - நண்டு, பிளவுபட்ட கால்.
கவைநா - பாம்பு, பிளவுபட்ட நா.
கவைமுட்கருவி - யானையை அடக்கும் குத்துக்கோல், கவைத்த முட்களையுடைய பறிக்கோல்.
கவைமுள் - வேலன்முள்.
கவையடி - கவர்க்குறை, பிளவடி, பிளவுள்ளஅடி, கவைக்குளம்பு.
கவையமா - கவயம்.
கவையம் - கவயம்.
கவையாயிருத்தல் - வேலையாயிருத்தல், அக்கரையாயிருத்தல்.
கவோஷ்ணம் - மிதமானசூடு.
கவ்டா - கிராமத்தலைவன்.
கவ்வம் - மத்து.
கவ்வல் - கவ்வுதல், யாப்புறக்கோடல்.
கவ்வா - நீண்டஅங்கி.
கவ்வாணம் - ஒரு பண், குறிஞ்சியாழ்த் திறங்களுள் ஒன்று, குறிஞ்சியாழ்த்திற வகையிலொன்று, படுமலை.
கவ்வியம் - கௌவியம், பிதிரர்களை உத்தேசித்துக் கொடுக்கும் பிண்டம், பசுவினின்று கொள்ளப்படும் தூயவஸ்துக்கள் ஐந்தனுள் ஏதேதனும் ஒன்று.
கவ்வியை - பசுமந்தை, பசுக்கூட்டம்.
கவ்வு - கவர், கவ்வென்னேவல், பெருமை, காயாற்கவ்வுகை, தின்கை, கவட்டை, கவ்வு.
கவ்வுதல் - கடித்துப் பிடித்தல், கவர்தல், வாயிலுறக் கொள்ளல், கௌவுதல், சுமத்தல், வாயிலுறப் பற்றுதல்.
கவ்வை - பழிச்சொல், கவலை, பொறுமை, ஆயிலியம், கௌவை, எள்ளிளங்காய், ஓவி, கள், காரியம், துன்பம், பழிமொழி, வேலை.
கவ்வைபார்த்தல் - வேலைபார்த்தல்.
கழகண்டு - தீம்பு.
கழகம் } ஓலக்கம், புலவர்கூடியசபை,
கழகு } படை,மல்முதலியன பயிலுமிடம், படை பயிலுமிடம், மல்லுமுதலிய பயிலுமிடம், கல்விச்சங்கம், மல்பயில்சாலை, கலாசாலை, கல்விபயில்சாலை, ஆயுதம் பயிலிடம், கல்விமுதலிய பயிலிடம், சூதாடுமிடம், சூது, போர்க்களம்.
கழங்கம் - சூதாடுகருவி.
கழங்காடல் - பெண்கள் ஆடும் கழற்சிக்காய் ஆட்டம்.
கழங்கால் - அளவிடுதல்.
கழங்கிட்டுரைத்தல் - கழற்சிக்காயால் குறியறிந்து சொல்லுதல்.

கழங்கு - கழல், ஓராடல், கழற்சிக் கொடி, வெறியாட்டாளருடல், கழற்சிக்காய், கழற்சி விளையாட்டு, கழங்குப் பருவம், சூது, கழற்காய், கழற்கொடி, வெறியாட்டு.

கழங்குபடுத்தல் - கழங்குகொண்டு குறியறிதல்.

கழங்குப்பருவம் - பெண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்களுள் கழற்சிக்காய் கொண்டு ஆடுவதை வருணித்துக் கூறும் பருவம்.

கழங்குமெய்ப்படுத்தல் - பயிர்களை விலங்குகள் அழிக்காதபடி புலி போற் செய்துவைக்கும் உருவுக்குக் கழற்சிக்காயைக் கண்ணாக அமைத்தல், கழற்காய்மூலங் குறியறிதல்.

கழஞ்சு - பன்னிரண்டு பணவெடை கொண்ட நிறை, ஓர் எடுத்தலளவை, கழஞ்சு.

கழணி - கழுநீர், கழணீர்.

கழத்துக்கோல் - கபிற்றுக்கோல்.

கழப்பன் } வேலைக்கள்ளன், கழப்
கழப்பாளி } புணி, கழப்பான் கொள்ளி, கழப்பாடி.

கழப்பாடி - கழப்பாளி.

கழப்பாளி - வேலையைச் செய்யாமல் வீண்பொழுது போக்குபவன், வேலையைச் செய்யாமல் வீண் பொழுது போக்குபவள்.

கழப்பு-கள்ளத்தனம், சோம்பல், வேலை செய்யாது காலம்போக்கு, சோம்பு.

கழப்புகை - கழப்புதல்.

கழப்புணி - கழப்பன், கழப்பாளி, வேலைக்கள்ளன்.

கழப்புதல் - சோம்பாயிருத்தல், வேலை செயயாது காலம்போக்குதல், கழப்புகை.

கழலக்குத்துதல் - குற்றஞ்சொல்லிக் காரியத்தைத் தடுத்தல்.

கழலடி - கழற்சிக்கொடி வேர்.

கழலல் - நெகிழ்தல், விலகல், உழலுதல், பிதுங்கல்.

கழலவிடுதல் - பட்சபாதம் முதலியவற்றால் வேண்டுமென்று நெகிழவிடுதல்.

கழலாபு - பீர்க்கு.

கழலி - பிரண்டை.

கழலிச்சிட்டு - ஒருசிட்டு.

கழலுதல் - நெகிழ்தல், விலகல், கழல்தல், நெகிழ்ந்து போதல், உடற் பொருத்து விலகுதல், வெளியேறுதல், ஓடுதல், நீங்குதல், பிதுங்குதல், விழுதல், செலவாதல், கழற்சி.

கழலை - கழலைக்கட்டி, புரைகுழல், அரலை.

கழலைகரப்பான் - ஒருவகைச் சொறி நோய்.

கழலைக்கட்டி - கழுத்து முதலியவற்றிலுள்ள மாமிசகிரந்தி பெருத்துத் தோன்றும் நோய், விரணகட்டி, அரலை.

கழல் - ஆடவர் கொடையாலும் வீரத்தாலுமணியும் பூண், கழலென்னேவல், கழல்மரம், கழற்கொடி, கால், செருப்பு, பொன்வண்டு, காற்றடி, ஓடு, செலவு, கழற்சி, ஆடவர் கொடை வீரத்தணிவது, கழங்கு, வீரக்கழல், சிலம்பு, கால்மோதிரம், பாதம், அணியுமோர் ஆபரணம், கழங்காடல், கழற்காய், கொடையாலாவது வீரத்தாலாவது ஆடவர்கள் காலில் அணியும் ஓர் ஆபரணம், கழலு, நெகிழ்ந்துபோ, பொருத்து, விலகு.

கழல்வித்தல் - கழலச்செய்தல், பூட்டு விடுத்தல்.

கழல்வு - கழலுதல்.

கழறல் - உறுதிச்சொல், கழலுதல், சொல்லல், நெருங்கல், சொல்லுகை, உறுதிமொழி, கழித்துரைத்தல், சொல்லுதல், நெருக்கல், கழறுதல்.

கழறியுரைத்தல் - இடித்துரைத்தல், பாங்கன் தலைவனுக்கு இடித்துரைத்து உறுதிமொழி கூறுதல்.

கழறிற்றறிவார் - சேரமான் பெருமாணயனார், சிவனடியார்களுளொருவர்.

கழறு - உறுதிசொல், சொல், நெருக்கு, பிரதிஞ்ஞை செய்.

கழறுதல் - சொல்லுதல், இடித்தல், பிரதிஞ்ஞை செய்தல், உறுதி சொல்லுதல், கோபித்தல், அவமதித்தல், இடித்துரைத்தல்.

கழற்காய்-கழங்கு, கழற்சிக்காய், முரல்.

கழற்கொடி - கர்ச்சூரம், கழற்சி, ஒருகொடி, கிழங்கு, கழல், முழல், கற்சூரம்.

கழற்சி - கழலுதல், கெச்சக்காய்ச்செடி, ஒருவகைக் கொடி, கழற்சிக்காய், ஒருகொடி, கழற்கொடி.

கழற்சிக்கொட்டை - கழற்சி.

கழற்சிங்கநாயனார் - சிவனடியார்களுளொருவர், அறுபத்துமூவர் நாயன்மாருள் ஒருவர்.

கழற்சுபதம் - அதிவிடையம்.

கழற்பதி - பெருங்குமிழ்.

கழற்றல் - கழலப்பண்ணல், விலக்கல், உடைகளைப் பூட்டினின்றும் விடுவித்தல்.

கழற்றி - கழலுதல், கழலப் பண்ணுவது.

கழற்று - உறுதிமொழி, உறுதிச் சொல், கழலச்செய், ஆடைமுதலியன கழற்று, நீக்கு.

கழற்றுதல் - கழலப்பண்ணல், நீக்கிக் கொள்ளல், விலக்கல், நெகிழச்செய்தல், ஆடையணி முதலியன நீக்குதல்.

கழற்றுரை - கடிந்துபேசுஞ்சொல், உறுதிமொழி.

கழற்றெதிர்மறுத்தல் - பாங்கனுடைய உறுதிமொழியைத் தலைவன் கேளாது மறுத்தல்.

கழற்றெதிர்மறை - தலைவன் பாங்கனுடைய உறுதிமொழியைக் கேளாது மறுத்துச் சொல்லுஞ் சொல்.

கழனி - சேறு, திரைச்சீலை, மருதநிலம், கழினி, கழுநீர், வயல், இடுதரை, கழனீர்.

கழனிக்கடைத்தவர் - மருதநில மாக்கள்.

கழனிநண்டு - வயல்நண்டு வகை.

கழனிப்பயிர் - செல்.

கழனியடுத்தவர் - உழவர், வேளாளர்.

கழனிலை - பொதுவியற் றிணைத்துறை பன்னிரண்டனு ளொன்று, இளைஞனொருவன் போரிற் புறங்கொடாமை கண்டுவியந்த வீரர் அவனுக்கு வீரகழலணிவித்துப் புகழ்ந்தாடும் புறத்துறை, ஒரு கூத்து.

கழனீர் - கழனி, கழுநீர்.

கழாஅர் - ஒளூர்.

கழாஅல - கழற்ற.

கழாஅல் - கழுவுகை.

கழாத்தலை - கழத்தலையார் என்னும் சங்கப்புலவர்.

கழாத்தலையார் - பரணர் காலத்திருந்த ஒரு சங்கப்புலவர்.

கழாநிலம் - கழிநிலம், கழாலை.

கழாயர் - கம்பங்கூத்தர், கழைக்கூத்தர், கழைக்கூத்தாடிகள், வேழம்பர்.

கழாயினர் - கழாயர், கழைக்கூத்தர்.

கழாய் - கழுகு, கழைக்கூத்தன் எறிநின்று ஆடுதற்கு நாட்டும் மூங்கிற் கம்பம், மூங்கில், கழை.

கழாய்க்கூத்தர் - சிறுகீரை, கழாயர்.

கழாய்க்கூத்து - கழைக்கூத்து.

கழாய்வம் } சிறுகீரை.
கழாய்வகம் }

கழாலுதல் - நெகிழ்தல்.

கழாலை - உவர்நிலம், கழிநிலம்.

கழால் - கலைகை, கழுவுதல், கலைதல், கழலுதல்.

கழாற்றூக்கு - ஆறுசீரளவுள்ள தாளவுறுப்பு, இசைத்தமிழிற் கூறப்பட்டுள்ள எழுவகைத் தூக்கினு ளொன்று.

கழி - உப்பளம், உப்பாறு, கயிறு, கழியென்னேவல், கொம்பு, கோல், செம்மெழுகு, நூற்சுருள், மிகுதி, மெழுகுவர்த்தி, யாழினரம்பு, மலங்கழி, சா, விலக்கப்படு, மிகு, ஒத்திரு, அகற்று, போக்கு, தறி, நீக்கு, குறை, தள்ளிக்கொடு, கடலேயடுத்த உப்புநீர்ப் பரப்பு, நுகத்துளையில் இடுங்கழி, ஆயுதக்காம்பு, யாழின் இசையெழுப்புங் கருவி, மாமிசம், மிகுந்த, ஊன், கடல், காம்பு, நுகத்தொளைக்கழி, மரக்கொம்பு, யாழினை இயக்குங்கருவி, காயல், கானல், முரம்பு, மிகுதியான, செல்லு, கட, வரிச்சல்.

கழிகடை - அறக்கெட்டது, மிக இழிந்தவன், மிக இழிந்தவன், மிக இழிந்தது, மிக இழிந்தவை, கழிசிறை.

கழிகணம் - ஒருவகைக் கணநோய், வயிற்றுப்போக்கை உண்டாக்கும் குழந்தை நோய்வகை.

கழிகண்ணேட்டம் - அளவிறந்த உவகை.

கழிகலமகடூஉ - கைம்பெண்.

கழிகாலம் - சென்றகாலம்.

கழிகெட்டவன் - மிகக் கெட்டவன்.

கழிகோல் - மிருகங்களைப் பிடிக்குங் கோல், எளிதில் கறவாத பசுவை அசையாமல் நிறுத்திக் கறப்பதற்கு உபயோகிக்கும் இணைப்புக்கழி, கன்று பாலுண்ணுமலிருக்க முகத்தில் கட்டும் வாய்ப்பூட்டு.

கழிக்கரை - நதிமுகம், கடற்கரை.

கழிக்கரைப்புலம்பல் - ஒரு பிரபந்தம், பிரிந்த தலைவனை நினைந்து தலைவி கடற்கரையிலிருந்துகொண்டு தனியே இரங்குகை, சமுத்திர விலாசம் என்னும் பிரபந்தம்.

கழிக்காரை - ஒருசெடி, ஒருவகை முட்செடி, ஒருவகைப் பூண்டு.

கழிக்காறல் - கடல்மீன் வகை.

கழிக்கானல் - கடற்கரைச் சோலை.

கழிக்கோல் - கழிகோல்.

கழிசடை - கழிக்கப்பட்ட மயிர்ச்சடைபோல இழிந்தவன், கழிக்கப்பட்ட மயிர்ச்சடைபோல இழிந்தவள், கழிக்கப்பட்ட மயிர்ச்சடைபோல இழிந்தது.

கழிசல் - கழிக்கப்பட்டது.

கழிசறை - சழிசடை.

கழிசிறை - உறுப்புக்கேடி, நாடோடி, கழிசடை.

கழிச்சல் - பெருக்கம், வயிறு பேதியாதல், பேதி, பெரும்பீதி, வயிறு பேதித்தல், கழிதல்.

கழிச்சியர் - நெய்தனிலத்து மகளிர், நெய்தனிலத்துப் பெண்கள்.

கழிதல் - கடத்தல், சாதல், செல்லல், தீர்தல், நடத்தல், பிரிதல், போதல், மிகுதல், வயிறு பேதித்தல், கடந்துபோதல், குறைபடுதல், அழிதல், ஒழிதல், முடிவடைதல், வருந்துதல், உடம்பினின்று மலமுதலியன வெளிப்படுதல், வயிற்றுப் போக்காதல், அச்சங் கொள்ளுதல், ஒத்தல், இறத்தல், நீங்கல், மலங்கழிதல்.

கழித்த - மிக்க.

கழித்தல் - தீர்த்தல், நீக்குதல், போக்குதல், விலக்கல், ஒதுக்குதல், பெரிய எண்ணினின்று சிறிய எண்ணைக் குறைத்தல், குறைத்தல், வெட்டுதல், வரிமுதலியவை தள்ளிக் கொடுத்தல், மலம் முதலியவற்றை வெளிப்படுத்துதல், எண்ணின் கழிப்பு, அகற்றல், நீக்கல், ஒழித்தல், கணக்குக் கழித்தல், கழற்றல், காலம்போக்கல்.

கழித்துக்கட்டுதல் - பேசாக்குச் சொல்லி யெகிழவிடுதல், இகழ்ந்து ஒதுக்குதல்.

கழிநிலம்-உப்பளம், உவர்நிலம், உவர்த்தரை, உவளகம், அளக்கர், காயல்.

கழிநெடிலடி - செய்யுளடிகளி லொன்று.

கழிநெடில் - ஒருகவி, கழிநெடிலடி.
கழிந்த - மேன்மைபட்ட.
கழிந்தகாலம் - இறந்தகாலம்.
கழிந்தார் - இறந்தவர், பொருளில்லாதவர், தாழ்ந்தவர்.
கழிந்தோர் - வலிமிக்கோர்.
கழிபடர் - மிக்கதுயர்.
கழிபிறப்பு - முற்பிறப்பு.
கழிபோம்யாமம் - கடையாமம், கழிந்துபோம் யாமம், கழிந்துபோகின்ற யாமம், கழிந்தயாமம்.
கழிப்பணம் - கலிபணம்.
கழிப்பாம்பு - ஆறுகாலுடைய ஒரு பிராணி.
கழிப்பி - முடித்து, போக்கி.
கழிப்பிய - போக்கிய.
கழிப்பு - கணக்குவகை ஈரான்கி ஞென்று, கழித்தல், குற்றம், தோஷந் தீர்க்குமோர் சடங்கு, ஒழிக்கை, சாந்தி கழிக்கை, தள்ளுண்டபொருள், கழித்தற் கணக்கு, பேய் முதலியவைகளுக்குச் செய்யும் ஒருவகைச் சாந்தி.
கழிப்புக்கழித்தல் - நோயாளி தலையைச்சுற்றி சோறு முதலியவற்றைத் திருஷ்டியாகக் கழித்து எறிந்துவிடுதல், தோஷந் தீர்க்குமோர் சாந்தி.
கழிப்புதல் - செய்துமுடித்தல்.
கழிப்புல் - ஒருபுல், புல்வகை.
கழிப்பெடுத்தல் - கழிப்புக்கழி.
கழிமாந்தம் - ஒருவகை மாந்தநோய், குழந்தைகட்குப் பேதியோடவரும் ஒரு மாந்தநோய்.
கழிமுகம் - ஆற்று நீர்க்கழிவு, ஆறு கடலோடு கலக்கும் சங்கமுகம், அருவி, அழோமுகம், கயவாய், கயவு, கூடல், புகார்.
கழிமூட்டான் - ஒருபுல், புல்வகை, ஒருவகைப்புல்.
கழிமுள்ளி - முள்ளி, ஓர்வகைச் செடி.
கழிமை - தள்ளுதல், விலக்குகை.
கழிய - மிகவும்.
கழியர் - உப்பளவர், நெய்தனிலமாக்கள், உப்பமைப்போர்.
கழியல் - கழிக்கப்பட்டது, பிரிதல், கழிகை, கழிச்சல், கழிதல்.
கழீயவர் - நெய்தனிலமாக்கள், பரதவர்.
கழியிருக்கை - நதிசூழ்ந்தவிடம்.
கழியுடல் - தசைகிழிந்தவுடல்.
கழியுப்பு - கடலுப்பு.
கழியூணன் - பெருந்தீனியன், பெருந்தீனியுண்பவன்.
கழிவாயருஞ்சன் - ஒருபாம்பு.
கழிவிரக்கம் - பச்சாத்தாபம்.
கழிவு - இழிவு, உள்ளது சிறத்தல், கழிதல், தோஷம், தள்ளுபடியானது, நீங்குகை, பூரணம், மிகுதி, கழிந்தபோகை, இறந்தகாலம், நிகழ்காலம், கழிகடை, தள்ளுபடியான பதார்தை, பிழைச்சம், பிராயச்சித்தம், அழிவு, சாவு, பாரிசேடம், கழிவுநாள், கழிப்புக் கணக்கு, கழிகை, தள்ளுபடி.
கழிவுகணக்கு - ஒருவகைக் கணக்கு.
கழிவுசரக்கு - தள்ளுபடியான பொருள்.
கழிவுநாள் - காலி, வைகல்.
கழிவெண்பிறப்பு - அறுவகைப் பிறப்பையுங் கடந்து ஆன்மா அடையும் நிருவாணநிலை.
கழிவெளி - கடற்கழியுள்ள இடம்.
கழினி - இடுதிரை.
கழு - கழுகு, கழுமரம், கழுவென்னேவல், சூலம், புற்பற்றை, கறவாத பசுவைக் கறப்பதற்கு அதன் கழுத்தில் இரண்டு தலையுஞ்சீவி மாலைபோற் கட்டியிடுங்கழி, கழுக்கோல், காசம்.
கழுகண்டு - வணங்காத் தலையன்.
கழுகி - சீந்தில்.
கழுகு - ஒருபறவை, பிணந்தின்னிக் கழுகு, பறவைவகை, பொன்னிறக் கழுகு, உவணம், எருவை, சகுந்

தம், பவணை, புண்டரம், புண்ட ரீகம், கூளிப்பட்சி, கழு.

கழுகுக்கோல் - கழுமரம், கழு.

கழுகுப்பொறி - கோட்டை மதிலில் வைக்கப்படும் கழுகின் உருவ முள்ள யந்திரம்.

கழுகுழுத்தல் - தொதுதொதுத்தல்.

கழுக்கடை - ஈட்டி, சூலம், கழுவாயு தம், சிறியஈட்டி, கழுமுள், சிற் றீட்டி.

கழுக்களம் - கொலைக்களம், கழுவேற் றும் இடம்.

கழுக்காணி - குறளன், சோம்பேறி, தழுக்குணி, பயிரக்கட்டை, அறி வற்றகடியன், உலக்கை, வேங்கை, தாமரை, கழுவாணி.

கழுக்குமொழுக்கெனல் - உடல் மிகப் பருத்திருத்தற் குறிப்பு.

கழுக்குன்றம் - செங்கற்பட்டுக் கருகி லுள்ள திருக்கழுக்குன்றம் என் னும் மஹாக்ஷேத்திரம், ஒருமலை.

கழுசி - சீந்தில்.

கழுச்சிறையன் - கழுவேற்றப்பட வேண்டியவன்.

கழுதாழி - கழுதிரதம்.

கழுதிரதம் - பேய்த்தேர், கழுதாழி.

கழுது - காவல், பரண், பிசாசம், வண்டு, காவற்பரண், பேய்வகை, பேயிலொருசாதி.

கழுதுக்குத்தி - கடிச்சை.

கழுதும்பை - கவிழ்தும்பை.

கழுதை - மூடன், வடமேற்றிசைப் பாலன்குறி, வாலேயம், வாலேபம், வேசரி, ஒருவிலங்கு, மிருகவகையு ளொன்று, கத்தபம், அத்திரி, இரா டம், கத்தை, கரம், கழ்ராடிகை, கர்த்தபம், கார்த்தபம், காளவாய், கோகு. இதன்பெண் - பெட்டை.

கழுதைகடி - ஒருமூலை குறைந்தவீடு, ஒருமூலை இடிந்தவீடு.

கழுதைக்காணம் - பதினேர் காணத் தொன்று, தைதலம்.

கழுதைக்குடத்தி - கழுதைப்புலி.

கழுதைத்திசை - வடமேற்றிசை.

கழுதைத்தும்பை - ஒருதும்பை, தும் பைச் செடிவகை, ஒருவகைத் தும்பை.

கழுதைப்பாலை - நச்சுறுப்பான் கொடி.

கழுதைப்புலி - கடுவாய் விலங்கு.

கழுதைமறி - கழுதைக்குட்டி.

கழுதைமுள்ளி - ஒருசெடி.

கழுதையாட்டம் - தழைவாரி.

கழுதையூர்தி - மூதேவி, கழுதை வாகினி.

கழுதைவண்டு - ஒரு வண்டு.

கழுதைவாகநி, கழுதைவாகனி } மூதேவி.

கழுதைவாகினி - மூதேவி, கழுதை யூர்தி.

கழுதைவிட்டை - கழுதைச்சாணி, கழுதைமலம்.

கழுதைவிரியன் - ஒரு பாம்பு, விரி யன் பாம்புவகை.

கழுத்தடி - தோண்மேல்.

கழுத்தணி - கயில், கடை.

கழுத்தல் - பொய்.

கழுத்தறுத்தல் - பெருந் துன்பத் துக்கு உள்ளாக்குதல்.

கழுத்தறுப்பு - பெருந்துன்பம்.

கழுத்திருத்தல் - பாரத்தாற் கழுத்து அமுங்குதல்.

கழுத்திற்கட்டுதல் - ஒருவனை நிர்ப் பந்தித்துப் பொறுப்பாளியாக்கு தல்.

கழுத்தின்பின்குழி-சூறை, பனிச்சை.

கழுத்து - கண்டம், பூமியிற் பாணை முதலியன வைத்தற்கேற்ற இடம், கந்தரம், களம், களரி, கிரீவம், கில்லம், மிடறு. கழுத்தடியின் பெயர்-கந்து, கந்தரம்.

கழுத்துக்கட்டி - கழுத்துக் கழலை, இடையூறு, கழுத்துக் குட்டை வகை.

கழுத்துக்குக் கத்தி - நாசத்தை உண் டாக்கக்கூடியவன், நாசத்தை உண்

டாக்கக் கூடியவன், நாசத்தை உண்டாக்கக் கூடியது.

கழுத்துக்குட்டை - கழுத்திற் கட்டுகிற சீலை, அங்கிக்கு மேலே கழுத்தைச் சுற்றிக் கட்டுந்துணி.

கழுத்துக்கொடுத்தல் - ஒரு வரிக்கட்டில் முன்னிற்றல், தன் வருத்தம் பாராமல் பிறர் காரியத்தைத்தான் ஏற்று நிற்றல், உயிர்க்கு இறுதி தரக்கூடிய குற்றத்தைப் புரிதல், வாழ்க்கைப் படுதல்.

கழுத்துக்கோல் - கயிற்றுக்கோல்.

கழுத்துச்சட்டை - பெண்களின் அங்கிவகை.

கழுத்துச்சந்து - கழுத்தின் முட்டு.

கழுத்துத்திருகுதல் - கழுத்தை முறித்தல், நிர்ப்பந்தித்தல்.

கழுத்துப்பட்டிகை - கழுத்துப் பட்டை.

கழுத்துப்பட்டை - சட்டையின் கழுத்தைச் சுறறித் தைத்திருக்கும் பட்டைத்துணி, கழுத்துக்கட்டி, சட்டையிலேருறுப்பு, அங்கியிலேருறுப்பு.

கழுத்துப்பிடிப்பு - கழுத்துச் சுளுக்கு.

கழுத்துப்பொருத்தம் - மணப்பொருத்தம் பத்தினுளொன்றாகிய இரகசுப் பொருத்தத்துள் சொல்லப்படும் கண்டாரச்சுப் பொருத்தம், மணப்பொருத்தம் பத்திலொன்று.

கழுத்துமணி - கழுத்தணி வகை.

கழுத்துமுடிச்சு - சுருல்வளை.

கழுத்து முறித்தல் - ஒருவரைக் கெடுத்தி யாதொன்றடைதல், ஒன்றைச் செய்ய வேண்டுமென்று தொந்தரை பண்ணுதல், அசம்மதக் குறியாகக் கழுத்தைத் திருப்பிக் கொள்ளுதல்.

கழுத்துரு - திருமங்கலியத் தேதாடு கோக்கும் பலவகையான தங்க உருக்கள்.

கழுத்துவெட்டி - கொலைகாரன்.

கழுத்தாட்டி - தொண்டை.

கழுத்தேறுதண்டம் - சிரசாக்கினை.

கழுத்தைக்கட்டுதல் - விடாது நிர்ப்பந்தித்தல்.

கழுநர் - அழுக்கு பாவம் முதலியவை கழுவுவோர்.

கழுநீர் - அரிசிகளைந்த நீர், ஆம்பல், செங்குவளை, நீலோற்பலம், அரிசி கழுவியநீர், தீவினையைக் கழுவுதற்குக் காரணமான தீர்த்தநீர், உற்பலம், குவளை, செங்கழுநீர், செங்கழுநீர்க் கிழங்கு, கழுவு.

கழுந்தன் - கழுந்துபோற் பருத்து அறிவு மழுங்கினவன்.

கழுந்தா - கழுத்து.

கழுந்தாக்குதல் - பலகையின் பொருத்துவாய் உண்டாக்குதல்.

கழுந்து - குடம் முதலியவற்றின் கழுத்து, தேய்ந்து மழுங்கித் திரண்டவடிவம், பொருத்து, மரவைரம், உலக்கை, வில் முதலியவற்றின் திரண்ட நுனி, முருட்டுத்தனம், பொருத்துக்கூர், வைரம்.

கழுப்பற்றை - புற்றக்கை, புற்கரடு.

கழுமணி - கடைந்து சுத்தஞ்செய்யப்பட்ட இரத்தினம், கழுவிய மாணிக்கம்.

கழுமம் - குற்றம்.

கழுமரம் - கழு, கழுவேற்றுதற்கு நடப்பட்ட மரம், கழுமுள்.

கழுமலம் - சீகாழி, சேர நாட்டுள்ள தோர் ஊர், சீகாழி என்னுந்தலம்.

கழுமல் - இணைத்தல், செழுமல், நிறைதல், பற்றுதல், மயக்கம், மிகுதி, துன்பம், திரளுதல், மசக்கம்.

கழுமு - இணை, மயங்கு, நிறை, மிகு, திரளு, கலப்பு.

கழுமுதல் - இணைத்தல், கீலக்குதல், நிறைந்திருத்தல், மயங்குதல், சேர்தல், பொருந்தியதாதல், திரளுதல், கலத்தல், நிறைதல், மிகுதல்.

கழுமுள் - ஆயுதப்பொது, ஈட்டி, கீழ்மரம், சூலம், மாதூள, மாது ளை, கழுக்கடை.

கழுமோதுதல் - தரையிற் புற்பற் றை அடித்தல்.

கழுவடிக்கறுப்பன் - கழுவடியான்.

கழுவடியான் - கழுவடியில் மனித னுயரமான கழியில் தாபிக்கப்பட் டுள்ள ஒரு சிறு தேவதை.

கழுவல் - கழுவுதல்.

கழுவறைதல் - கழுமோதுதல்.

கழுவன் - பொய்யில் நிலைப்பவன், மிகுதுட்டன், பெருந் துஷ்டன், பெருந்துட்டன்.

கழுவாடுநெஞ்சன் - நெஞ்சுரமுள்ளவன்.

கழுவாணி - கழுவிலுள்ள இருப்புமுள்.

கழுவாய் - பிராயச்சித்தம்.

கழுவாய்நிலம் - புற்பற்றை எடுக்கக் கூடிய நிலம், புற்றரை.

கழுவிக்குளிப்பாட்டுதல் - பிணத்தை நீராற் கழுவுதல்.

கழுவிதல் - பண்ணல்.

கழுவிநெய்யுருக்கி - கடியவள், கழுவி லேற்றிய பிணத்தில் நெய்யுருக்கு வாள், பிடித்த பிடிவிடாது சோலி பண்ணுகிறவன்.

கழுவிமுங்கி - சோம்பேறி.

கழுவு - நீராற்கழுவு, மனவழுக்குக் கழுவு, அலம்பு, சுத்திகரி, நீக்கு, உருக்கு.

கழுவுணி - கழுவிமுங்கி.

கழுவுதல் - சுத்திபண்ணல், நீராற் சுத்தஞ் செய்தல், வட்டாக உருக் குதல், நீக்குதல், சுத்தி செய்தல், பிராயச்சித்தஞ் செய்தல்.

கழுவுநீர் - புண்கழுவும் மருந்துநீர்.

கழுவுப்பற்றை - கழுப்பற்றை.

கழுவுள் - இடையர்கட்குத் தலைவ னை சிற்றரசன்.

கழுவெளி - புற்றரை, கழுவாய்நிலம்.

கழுவேறி - தழுக்குணி, கழுவேறின வன், கழுவன், ஒரு தேவதை, கழுவிலேறினவன்.

கழுவேறுதல் - கழுவி லேறிச்சாதல், பிறனது வருத்தக் தாங்குதல்.

கழுவேற்ற - கழுவில் போட.

கழுவேற்றம் - கழுவில் ஏற்றுகை.

கழுவேற்றல் } கழுவினில் ஏற்றிக்
கழுவேற்றுதல் } கொ ல் லு தல், கழுவில் வைத்தல்.

கழை - கரும்பு, புரர்பூசம், மூங்கில், கோல், மூங்கிற்குழாய், வேய்ங் குழல், ஓடக்கோல், குத்துக்கோல், தண்டு, புனர்பூசம்.

கழைக்கூத்தர் - கம்பங்கூத்தர்.

கழைக்கூத்தன் - கழைக்கூத்தாடி.

கழைக்கூத்தாடி - கழையில் நின்று கூத்தாடுவோன், தொம்பரவின்.

கழைக்கூத்தாடிகள் - கழாயர், கோ ரம்பர், வேழம்பர்.

கழைக்கூத்தி - கூத்தாடினவள்.

கழைக்கூத்து - கம்பங்கூத்து, கழை யினின்றாடுங் கூத்து.

கழைதின்யானையார் - வல் லி லே ரியைப்பாடிய ஒரு புலவர்.

கழைநெல் - மூங்கிலரிசி.

கழைந்து - கழைஞ்சு.

கழைமுத்தம் - மூங்கிலிற் பிறந்த புகைநிறமுத்து.

கழைவளர்தூம்பு - மூ ங் கி ல ா கி ய இசைவளரும் பெருவங்கியம்.

கள - களாச்செடி, களா, களவொ ழுக்கம்.

களகண்டமாலை - ஒருவகைச்சிலந்தி.

களகண்டம் - குயில், அன்னப்பற வை, குயிற்பறவை, ஒருவகை நோய், புறுப்பறவை, காளகண்டம்.

களகதுரோகம் - புரைக்குழல்.

களகம் - பெருச்சாளி, நெற்கதிர், சுண்ணும்புச் சாந்து, அன்னம்.

களகம்பளம் - ஆட்டின் கழுத்தாரம், எருத்தின் அலைதாடி, அலைதாடி.

களகள - களகளனல், ஓரொலிக் குறிப்பு, உபயவோசை.

களகளத்தல் - ஈரடுக்காயொலித்தல், ஒலியெழுதல், களகளப்பு.

களகளப்பு - ஈரடுக்கொலிக்குறிப்பு, பேரொலி.

களகளம் - பேரொலி, களகளப்பு.

களகளெனல்
களகுளெனல்
களகொளெனல் } ஈரடுக் கொலிக் குறிப்பு.

களக்கடை - களவாய்.

களக்கட்டை - நெற்களத் தினடுங் கட்டை.

களக்கம் - குற்றம்.

களக்கர் - புலையர், வேடர், ஈனர், வேட்டுவர்.

களக்குக்கொளக்கெனல் - ஒலிக்குறிப்பு.

களக்குறிப்பு - களத்துத் தானியக் கணக்கு.

களக்கொட்டு - நெற்களங்காத்தற்குக் கொட்டும் பறையொலி.

களங்கச்சத்துரு - ஈயமணல், மேல.

களங்கட்டி - ஒருமீன், மீன்வகை.

களங்கம் - அடையாளம், களிம்பு, கறுப்பு, குற்றம், சீதரங்க பாஷாணம், நீலம், மாசு, இரசகுளிகை, மறு, தூரு, கறுப்புப் புள்ளியாகிய ஒருவகை வயிரக்குற்றம், அபவாதம, ஆணவமலம், செம்பு முதலியவைகளிலுள்ள அழுக்கு, பாஷாணம்.

களங்கன் - சந்திரன், மாசுள்ளோன், குற்றமுள்ளவன், குற்றமுள்ளோன்.

களங்கு - களங்கம, பாதரசம் முதலிய உலோகங்களால் உண்டாக்கிய குளிகை, பல லோகங்களிலுண்டாக்கியிரசகுளிகை, அடையாளம்.

களங்குமுறை - களங்கு.

களங்கொளல் - போர்க்களத்தைத் தமதாக்கிக்கொள்ளுதல்.

களங்கொள்தல்
களங்கொள்ளுதல் } வெல்லுதல்.

களங்கொள்ளல் - போர்க்களத் திற் கலத்தல்.

களசுவேதம் - அதிவிடையம், அதிவிடயம்.

களஞ்சம் - கஞ்சா முதலிய லாகிரிப் பண்டங்கள்.

களஞ்சி - சூதபாஷாணம்.

களஞ்சியம் - பண்டகசாலை, பொக்கசசாலை, தானியஞ் சேர்க்கும் இடம், பண்டசாலை, தானியமிருக்கு மிடம்.

களஞ்செதுக்குதல் - களத்தைச் சுத்தப்படுத்துதல்.

களதபுதம் - கண்ணுடி, வெள்ளி.

களதம் - பெருச்சாளி.

களதவுதம்
களதூதம்
களதௌதம் } வெள்ளி.

களதௌதேசுவரம் - சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.

களத்திரகாரகன் - சுக்கிரன்.

களத்திரஸ்தானம் - இலக்கினத்திற்கு ஏழாமிடம்.

களத்திரத்தானம் - ஏழாமிடம்.

களத்திரம் - குடும்பம், சென்மத்துக் கேழாமிடம், மனைவி.

களத்துமேடு - நெற்களமாக அமைந்த மேடு.

களத்தூர் - செங்கல்பட்டுக் கருகில் ஒரூர், களந்தை.

களத்தூர்கிழார் - கடைச்சங்கப் புலவர்களு ளொருவர், இவர் வேளாளராயிருக்கலாம்.

களநடை - கண்டுமுதல்.

களநடைக்கணக்கு - களத்துத் தானியக் கணக்கு.

களந்தூரி - தான்றி.

களந்தூரி
களந்தூன்றி } தான்றிக்காய், களந்தூரி.

களந்தை - களத்தூர்.

களபகத்தூரி-ஒரு வாசனைப்பண்டம்.

களபம் - கலப்பு, கலவைச் சாந்து, சுட்டசாந்து, யானை, யானைக் கன்று, கலவை, சுண்ணச்சாந்து, களவம், கலவைச் சேறு.

களபிருந்தம் - ஒருவகைநோய்.

களப்படி-வேலையாட்களுக்குக் களத்திற் பகிர்ந்து கொடுக்கும் மானியம்.

களப்பலி - யுத்தவீரர் செலுத்தும் பலி, யுத்தகளத்தில் போர்தொடங்குமுன் கொற்றவைக்குக் கொடுக்கும் பலி.

களப்பன்றி - பெருங்குமிழ்.

களப்பன்னை - ஒரு செடி.

களப்பாட்டு - போரடிக்கும்போது சொல்லுகிற பாட்டு.

களப்பாய் - கதிர்ப்பாய், களத்தில் விரிக்கும் பாய்.

களப்பிச்சை - விலைகளத்திற் கொடுக்கும் பிச்சை,விலகும்பிச்சை,களத்திற் கொடுகும் தானிய தருமம்.

களப்பித்தம் - ஒருவகைப் பித்த நோய்.

களப்பு - கடலிடைப்பறவைத் திடர், கள்ளம், கடலில் ஆழமில்லாத இடம், கடலிலே ஆழமில்லாத திடரிடம், களவு.

களப்புதல் - வேலைக்கள்ளம் பண்ணுதல்.

களப்பூசை - நெற்களத்திற் கொடுக்கும் பலி.

களப்பேச்சு - களரிபாஷை, சூடுமிதி களத்திற் பயிலல், களத்தில் வழங்கும் பரிபாஷை.

களப்பேறு - குடிமக்கள்படி, நெற்களத்தில் குடிமக்கள் முதலியோர் பெறுஞ்சுதந்திரம், நெற்களத்திலே வண்ணான், அம்பட்டன் முதலிய குடிமைகள் பெறும்பாகம்.

களமதி - களமதிப்பு.

களமதிப்பு - களத்திற் குவிந்த நெல்லின் மதிப்பளவு.

களமம் - நெல்.

களமர் - அடியார், உழுநர், சூத்திரர், மருதநிலமாக்கள், வீரர், அடிமைகள், உழவர், கீழ்க்குடிமக்கள், பூவைசியர்.

களமளத்தல் - ஒலிக்குறிப்பு, களத்தில் தானியத்தை அளத்தல்.

களமாலை - கண்டமாலை நோய்.

களமூர் - ஒரூர்.

களமேடு - களத்துமேடு.

களம் - இடம், இருள், உள்ளம், ஒரூர், கடலுண் மிதப்புத்தரை, கழுத்து, களா, களர்நிலம், கறுப்பு, நெற்களம், போர்க்களம், மனைவி, மிடறு, விடம், கடலுள்ளே மிதப்பான தரை, களாச்செடி, நஞ்சு,மதுரத்தொனி, யாகசாலை, கடலின்மேடு, களத்திரம், சபை, கண்டம், விஷம், கருமை, மேகம், போர்க்களம், மனம.

களம்பழம் - களாவின் கரியகனி.

களம்பாடுதல் - போர்க்களத்தை வன்னித்தல், போர்க்களத்தை வர்ணித்தல்.

களம்விடுதல் - நெற்கதிரடிக்க உத்தரவு செய்தல், அம்பாரம் அளந்தபின் களத்தில் சிதறின தானியத்தை உழுதவனுக்கு விடுதல்.

களம்வேட்டல் } போரிற் பகைப்
களம்வேள்தல் } படையைக் கொன்று பேய்கட்கு விருந்தாட்டுதல், களவேள்வி.

களரம் - காட்டுப்புரூ, புரூ.

களரவம் - புரூ, குயிற் பறவை.

களரி - அரங்கம், ஆயுதம் சூது கூத்துப்பயிலிடம், கருமை, களர்நிலம், காடு, கூட்டம், பாழ்நிலம், போர்க்களம், மிடறு, வில் மல் நாடகம் கல்வி முதலியன பயிலும் அரங்கு, சபை, விசாரணைத்தலம், தொழில் செய்யுமிடம், நாடகசாலை, களர், தொழிற்சாலை.

களரிகட்டுதல் - அவையடக்கஞ் செய்தல், கூத்தரை மந்திரத்தினாற் கட்டல், நாடகசாலை கட்டல், நியாயசபை உத்தியோகஸ்தரை வசப்படுத்துதல், நாடகசாலை கட்டு

தல், ஆடல் பாடல் செய்யவொட்டாமல் மந்திரத்தினால் கட்டுதல்.

களரிகூட்டுதல் - நாடகவரங்கிற் கூத்து நடிப்பதற்கான ஏற்பாடுகள் தொடங்குதல்.

களரிக்கட்டு, களரித்தட்டு } ஒரு வித்தை.

களரிக்கோழை - கவைக்குப் பயப்படுதல், சபைக்கு அஞ்சுபவன், சபைக்கு அஞ்சுபவள்.

களரியாவிரை - ஒருநூல். இது தலைச் சங்க காலத்திருந்தது.

களரியேறல், களரியேறுதல் } அரங்கிலேறுதல்.

களரிவிடல், களரிவிடுதல் } அரங்கில் முதன் முறையாக நாடக பாத்திரத்தை ஆட விடுதல்.

களரிளமூலேயீசர் - திருக்களரிற்கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.

களரோகம் - ஒருநோய்.

களர் - களர்நிலம், களாமரம், உவர்நிலம், சேற்றுநிலம், கூட்டம், கறுப்பு, கழுத்து, களம், களரி, காரி, முதுநிலம்.

களர்நிலம் - உப்புநிலம், உவர்நிலம், உவர்த்தரை.

களர்பூமி - களர்நிலம்.

களர்மண் - உவர்மண்.

களர்வா - உகா.

களவகத்தினை - அகப்பொருட்டுறையில் ஒன்று.

களவடித்தல் - திருட்டுத்தனஞ் செய்தல்.

களவம் - கலப்பு, கலவைச்சேறு, களா, களபம்.

களவர் - கள்வர்.

களவழி நாற்பது - ஒரு பிரபந்தம்.

களவன் - கர்க்கடகவிராசி, கள்வன், நண்டு, சோரபாஷாணம்.

களவாசம் - வாரப்பிரிவுக்கு மூன்உழவர் முதலிய குடிமக்களுக்குக் களத்தில் கொடுக்கும் மானியம், நெற்களத்திற் வேலையாட்களுக்குக் கொடுக்குஞ் சுதந்திரம்.

களவாடல், களவாடுதல் } களவெடுத்தல், திருடல், திருடுதல்.

களவாணி - களவாளி, திருடன்.

களவாணுதல், களவாண்தல் } களவு காண்.

களவாளல் - களவாடுதல், திருடுதல், களவெடுத்தல், திருடல்.

களவாளி - கள்வன், திருடன், களவாணி.

களவித்திரதி - ஒருவகைப்பிணி.

களவியல் - கள்ளப்புணர்ச்சி, அகப்பொருளுறுப்புக்களுள் ஒன்று, இறையனாரகப் பொருள்.

களவிற்கூட்டம் - களவுப்புணர்ச்சி.

களவு - உன்மத்தம், களாச்செடி, திருட்டு. இஃது பஞ்சபாதகத் தொன்று. வஞ்சனை, திருடியபொருள், களா, பிறர்பொருளை அநுமதியின்றி மறைவாகக் கவருதல், கடுதல், கயவு, கரப்பு, கரவடம், கரவு, கள், கள்ளம், சோரம், தேயம், சோர்வு, படிறு, பட்டிமை, கள்ளல்.

களவுச்சொத்து - திருட்டுப்பொருள்.

களவுகாணுதல், களவுகாணுதல் } திருடுதல்.

களவுதம் - வெள்ளி.

களவுபண்ணுதல் - களவடித்தல், அபகரித்தல்.

களவுபிடித்தல் - மந்திரதந்திரங்களால் திருடனைக் கண்டுபிடித்தல்.

களவுப்புணர்ச்சி - கரவுக்கூட்டம், காந்தருவமணம், தலைவனும் தலைவியும் பிறரறியாது தனியிடத்தில் எதிர்ப்பட்டுக் கூடுகை, கள்ளமாகக் கூடும் புணர்ச்சி.

களவேர்வாழ்க்கை - திருட்டுத் தொழில்.

களவேள்வி - வாகைத்திணைத் துறை மூப்பத்திரண்டனுள் ஒன்று, யுத்தகளத்திற் பேய்க்கு உணவூட்டுவது.

களவொழுக்கம் - களவாய்ப்புணர்ந்து திரிதல், களவு, களவுப்புணர்ச்சி, களவிற் கூட்டம்.

களன் - இடம், உக்கிரம், உன்மத்தம், ஒலி, கழுத்து, கூட்டம், சபை, சிநேகம், போர்க்களம், மருதநிலம், பொய்கை, தொடர்பு, மயக்கம், களம், சம்பந்தம்.

களா - ஒரு செடி, களாநிலம், கருப்பு, சிறுகளா, பெருங்களா, களாவகை, மலைக்களா, முண்முருங்கை, தணக்கு, கள.

களாகஸ்தீசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

களாக்காய் - களாக்காயுருவாகச் செய்யும் ஒருவகைக் கழுத்தணி.

களாசம் - பிரம்பு.

களாசாத்திரம் - காமநூலி லொன்று, கொக்கோகம், மதனநூல்.

களாசாஸ்திரம் - களாசாத்திரம், களாநூல்.

களாசி - படிக்கம், களாஞ்சி.

களாசுக்காரன்-கப்பல் வேலைக்காரன்.

களாச்செடி - கள, களவு.

களாஞ்சி - களாஞ்சு.

களாநிலம் - உப்புநிலம்.

களாபடனம்-தயாவிருத்தி பதினெண்கி ளொன்று. அஃது கற்பித்தல், களாபடனம். தயாவிருத்தி பதினெண்கனுள்கல்வி பயிற்றுகை, கல்விபயிற்றல், கற்பித்தல்.

களாபதி - சந்திரன்.

களாப்பூ - மகளிற்காதணிவகை.

களாப்பூக்கோரை - ஒருவகைப்புல், கோரைவகை.

களாயகஞ்சவாதம் - ஒருவகை வாதநோய்.

களாய் - களாயி.

களாவகம் - சிறுகீரை.

களாவதி - பாரனென்னு மிருடிக்குப் புஞ்சிகஸ்தலையென்னும் அப்சரசிடத்துப்பிறந்த புத்திரி, வீணைவகை, தும்புருவினது வீணையின் பெயர், பதுமினி, வித்தைவிரும்பியதைக் கொடுக்குமொரு மந்திரம்.

களாவம் - இடையணி.

களாவர்த்தவாதம் - கழுத்து நரம்புச்சுளுக்கு, ஒருவாதம், கழுத்து நரம்பின் உளுக்கு.

களாற்புதம் - ஒருவகை நோய்.

களி-இறுகியபழச்சாறு, களிப்பு, களிப்புள்ளவன், களியென்னேவல், கள், குரூரம், குழம்பு, சீதம், தெருக்கு, செறிவு, பெருமை, மகிழ்ச்சி, மதம், மயக்கம், மாவாற்கிண்டியகளி, வெப்பு, வெறி, மிகுமகிழ்ச்சியடை, களிப்படை, செருக்குறு, கள்ளுண்டுகளிக்கை, தேன், கட்குடியன், கட்குடியன் கூற்றுகவரும் கலம்பகவுறுப்பு, உள்ளச்செருக்கு, உன்மத்தம், யானைமதம், குழைவு, மாமுதலிய வற்றூல் ஆக்கியகளி, கஞ்சி, வண்டல், உருகின உலோகநீர், களிமண், இன்பம் கண்டுகளித்தல், களிப்பாக்கு, சிற்றின்பம், செருக்கு, வெப்பம், மமதை, கட்குடிபோதையன், இன்புறு, சந்தோஷி, வெறிகொள், களியாடு.

களிகம் - வாலுளுவை.

களிகிண்டுதல் - களியுணவாக்குதல்.

களிகூருதல் - அகங்களித்தல், களிப்பு மிகுதல்.

களிகூர்தல் - மகிழ்ச்சி மிகுதல்.

களிகூறல் } அகங்களித்தல், களி
களிகூறுதல் } ப்பு மிகுத்தல்.

களிகை - கலிகை, மொட்டு, ஒருவகைக் கழுத்தணி, இளம் பூவரும்பு.

களிக்கண்-தட்டார்கருவியிலொன்று, கம்பியிழுக்கும் கருவி, பொன் முதலியவற்றூல் கம்பியிழுக்கும் அச்சு.

களிக்கவைக்கோல் - களிகிண்டும்போது பாத்திரம் அசையாவகை தாங்கும் கவர்க்கோல்.

களிக்காய் - தசைக்காய், சதைப்பற்றுள்ளகாய்.

களிக்குளம் - மலையாளக்கரையில் ஒரு பட்டினம், மலையாளக்கரை யில் உள்ள ஒரு பட்டணம்.

களிங்கன்-குடுமிக்கடுவன், இவன் பெயரால் களிங்கதேசமுண்டாயிற்று.

களிச்சக்காய் - கெச்சக்காய்.

களிதம் - பெருங்கல், வழுக்கல்.

களிதல் - வழுக்கல்.

களிதின்னல் - இலஞ்சம் வாங்குகை.

களிதூங்கல் - களிமிகுதல்.

களிதூங்குதல் - மகிழ்ச்சி மிகுதல்.

களித்தரை - களிமண்பூமி.

களித்தல்-இன்புறல்,செருக்கடைதல், மதத்தல், மிகவுவத்தல்,மகிழ்வடைதல், கள்ளைப்பருகி வெறிகொள்ளுதல், மதமுடையதாதல், செருக்குறுதல், இன்புறுத்தல், கள்ளுண்ணல், மகிழ்தல், உவத்தல், செருக்குதல், மதர்த்தல்.

களித்துடுப்பு - களிகிண்டுந்துடுப்பு.

களித்துயில் - இன்பத்துயில்.

களித்தூவு - களியாகத்தூவியிட்ட கூழ்.

களித்தூவை - களியாகத்தூவிச் சமைத்த கூழ்.

களித்துறை - இலங்கைத்தீவில் ஒரூர்.

களித்தேனவிநயக்குணம் - இரகசியத்தை மறையாமை, சொல்லுதவின்மை, கவிழ்தல், சோர்தல், தாழ்தல், தளர்தல், வீண்சொற்களுடைமை, களிகவர்ந்த கண்ணோக்குடைமை.

களிநெஞ்சன்-கொடுமன், செருக்கன்.

களிந்தை - யமுனை.

களிப்பாக்கு - அவித்துக்காய்ந்த பாக்கு, அவித்துச்சாய மூட்டிய பாக்கு.

களிப்பிரண்டை - பிரண்டை வகை.

களிப்பு - இன்பம், உள்ளக்களிப்பு, செருக்கு, மகிழ்ச்சி, மதர்ப்பு, மயக்கம், மனமகிழ்ச்சி, மதுவெறி, சிற்றின்பம், களித்தல், மண்ணின் பசை, அதிக சந்தோஷம், உள்ளக் குறிப்பு, அபிமானம், ஆமோதம், உவகை, உவப்பு, ஏமம், கடி, களி, தருக்கு, மதர், நகை, ஆனந்தம், நயன், ஏமாப்பு, செம்மாப்பு, பூரிப்பு, இறுமாப்பு, எக்களிப்பு, எக்களுத்தம், ஒளவணம், மிகுகளிப்பு, மதர்வு, மத்தம், மலர்ச்சி, பாடவம், பெருமிதம்.

களிமகன் - கட்குடியன்.

களிமண் - பசைமண், களிப்புடையமண்.

களிமம் - எலி.

களிமுத்தை - கிண்டிய களியுருண்டை.

களிம்பற்றவன் - குற்றமற்றவன்.

களிம்பு - குற்றம், தூரு, மலினம், சிம்பின் மலப்பற்று, மாசு, பூச்சு மருந்து, அழுக்கு, கலினம்.

களிம்பூறல் - களிம்பேறல்.

களிம்பூறுதல் - களிம்பு பிடித்தல், தயிர் முதலியன களிம்பாற்கெடுதல்.

களிம்பேறுதல் - களிம்பூறு.

களியடைக்காய் - களிப்பாக்கு.

களியம் - தேசிக்கூத்துக்குரிய கால்வகை.

களியர் - நெய்தனிலமாக்கள், வெறியர்.

களியர்வண்ணம் - குடியர் உண்டு குடித்து மகிழ்வதைச் சிறப்பித்துப் பாடும் வண்ணப்பாட்டு, ஒருவகை வண்ணம்.

களியன் - குடியன்.

களியாட்டு - மதுவெறியாட்டு, கள்ளுண்டு ஆடும் ஆட்டம்.

களிவாதல் - களிவருதல், மகிழ்வடைதல்.

களிவாய்நஞ்சன் - ஒருபாம்பு, கொடிய நஞ்சுடைய பாம்புவகை.

களிவாய்நெஞ்சன்-களிவாய் நஞ்சன்.

களிறினம்பு - யானைத்திப்பிலி.

களிறு - அத்தநாள், ஆண்சுறா, ஆண்பன்றி, ஆண்யானை, யானை, விலங்

குங்கிலியம் - குங்குலியம், ஒருவகை மரம், சாலமரம், சாலவகை, வெள்ளைக் குங்கிலியம், ஒருவகைப் பெருமரம், ஒரு சிறுமரம், கருங்குங்கிலியம், ஆஸ்திரேலியாவிலுள்ள மரவகை, மலைக்கிளுவை, ஒருவாசனைச் சரக்கு, குக்குலு, குங்குலு, குங்கிலிகம்.
குங்கு - குறைந்துபோ.
குங்குதல் - குறைதல், குன்றுதல், நிலைகெடல்.
குங்குமக்காவி - செங்காவி.
குங்குமச்சம்பா - ஒருவகை நெல், மஞ்சள் நிறமுள்ள சம்பாநெல் வகை.
குங்குமச்செப்பு - குங்குமம் வைக்குஞ் சிமிழ்.
குங்குமச்செவ்வந்தி-செவ்வந்தி வகை.
குங்குமச்சோரன் - குதிரையில் ஓர் சாதி.
குங்குமபாஷாணம் - அஞ்சற்குளச்சி, பைப்புப் பாஷாணவகை, குங்குமபாடாணம்.
குங்குமபாண்டியன் - சுரதமார பாண்டியனுக்குப் பின் அரசுசெய்த பாண்டியன்.

குங்குமப்பாணி - குங்குமச்செப்பு.
குங்குமப்பூ - ஒருசரக்கு, குங்கும மரத்தின்பூ, ஓர் மருந்து.
குங்குமப்பொட்டு - குங்குமப்பொடி யால் நெற்றியிலிடும் திலகம்.
குங்குமமரம் - கொங்காரம், ஞாழல், துருக்கம், நறவம், மரவம், மாலம்.
குங்குமம் - ஒருமரம், குங்குமநிறம், குங்குமப்பூ, செஞ்சாந்து, ஒரு வகைச்செடி, சாப்பிராவிரை, குராங்கு மஞ்சணறி, நெற்றியிலிடுங் குங்குமப்பொடி.
குங்குமவர்ணக்கல் - மஞ்சட்கல்.
குங்குமவர்ணி - அரிதாரம், மஞ்சட் கல்.
குங்குமவர்ணிச்சி - தாளகம்.
குங்குமவலரி - செவ்வலரி, அலரி வகை.
குங்குமவாணிச்சி - தாளகம்.
குங்குலியக்கலையநாயனார் } அறுபான்
குங்குலியக்கலையர் } மும்மை நாயன்மாருள் ஒருவர்.
குங்குலியம் - குக்குலு.
குங்குலு - குங்கிலியம், குங்கிலிய மரம், ஒருவகை நீண்ட மரம்.
குசக்கணக்கு - வழுவான கணக்கு, குசவரில் கணக்குப் பார்க்கும் ஒரு வகையினர், பிசகான கணக்கு.
குசக்கருவி - குயவர் உபயோகிக்கும் கருவி.
குசக்கலம் - ஓடு, மட்கலம், கப்பரை, மட்பாண்டம்.
குசக்காணம் - குயவர் செலுத்திவந்த பழையவரி.
குசக்கிரந்தி - தருப்பை முடிச்சு.
குசக்குழாய் - சுடுமண்ணாலான குழாய்.
குசதீர்த்தம் - ஒரு புண்ணிய தீர்த் தம்.
குசஸ்தலி - மைவத துருக்கத்தி லுள்ள ஒரு பட்டணம்.
குசத்தனம் - மூடத்தனம், அறிவற்ற செய்கை, அறிவீனம்.
குசத்தி - ஓடு, குசப்பெண், பூதேவி, பூவழலை, குயத்தி, ஒரு மருந்து.
குசத்திகிரி - குலாலசக்கரம்.
குசத்தீவு - குசைத்தீவு.
குசத்துவஜன் - ஜனகன் தம்பி, தச ரதன் சம்பந்தி, பரதசத்துருக்கன ரின் மாமன்.
குசத்துவீபம் - குசைத்தீவு.
குசநாபன் - குசன் மகன்.
குசந்தனம் - செஞ்சந்தனம், குசந்த நம், செஞ்சந்தகம்.
குசபலம் - மாதுளைமரம்.
குசப்பிரியம் - பவளம்.
குசப்புத்தி - மடமை, அறிவீனம்.
குசமசக்கு - பொய், வீண்மயக்கு, குழப்பம், காரியச்சிக்கல், சிக்கல், குயமயக்கு.
குசமுஷ்டி - தண்டசக்கிரம்.
குசாயலிங்கம் - ஒரு சிவலிங்கம்.
குசம் - தருப்பைப்புல், நீர், மரப் பொது, மூலை, வெறும்புறங்கூறல், தருப்பை, மரம், ஸ்தனம், குயவற் குரிய குயம், புறங்கூறல்.
குஜம்பன் - ஓர் இராக்கதன், ஓர் அர சன்.
குசரம் - பிறருடைய தோஷத்தைச் சொல்லுவோன்.
குசர் - பிசிர், கொசறு.
குசலங்காரன் - தந்திரக்காரன், மந்திர வித்தைக்காரன், வஞ்சகன், பொய் யன், மந்திரக்காரன், குசலமுள்ள வன்.
குசலப்பிரசினம் - க்ஷேமவிசாரணை.
குசலப்புத்தி - தந்திரப்புத்தி, கூர்மை யானபுத்தி.
குசலம் - சாமர்த்தியம், சுகம், தந்தி ரம், மந்திரவித்தை, மிக்ககல்வி, க்ஷேமம், நற்குணம், மாட்சிமை, மாந்திரிகம், மிகுந்தகல்வி, கல்வி, மந்திரவாதம், மாந்திர வித்தை.
குசலம்பண்ணுதல் - மந்திரவாதஞ் செய்தல்.
குசலர் - அறிஞர், மிகவல்லோர்.

குசலவர் - ராமன் மக்கள், இராமபிரானது இரட்டை மைந்தரான குசனும் லவனும்.

குசலவித்தை - மந்திரவித்தை, மகளிர்க்குரிய விநோதக் கைத்தொழில்கள். எண்ணல், எழுதல், இலேகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

குசலவேதனை - இன்பமான உணர்ச்சி.

குசலன் - மிகவல்லோன், விதிமாந்தனின் ஏழு குமாரருளொருவன்.

குசலாகுசலவேதனை - இன்பமும் துன்பமுமான உணர்ச்சி.

குசலை - தடை, கட்டு, சுவர்த்தலையிற்கட்டும் ஆரல்.

குசவம் - கொய்சகம், கொய்சவர்.

குசவர் - குயவர்.

குசவன் - குயவன், குலாலன்.

குசவாரம் - செவ்வாய்க்கிழமை.

குசவோடு - குசவன்செய்த ஓடு.

குசலை - தடை, கட்டு, குசலை.

குசன் } இராமன்மக்களிலொருவன்,
குஜன் } செவ்வாய்.

குசாக்கிரபுத்தி - நுட்பமான அறிவு, அதிநுண்ணிய புத்தி, தருப்பை நுனிபோற் கூரியஅறிவு.

குசாக்கிரம் - தருப்பைநுனி.

குசாக்கிரன் - பிருகத்திரதன் மகன், ஜராசந்தன் தம்பி.

குசாங்குலியம் - பௌத்திரம்.

குசாட்சம் - குரங்கு.

குசாண்டு - அற்பத்தன்மை.

குசாமத்தி - மூகஸ்துதி, இச்சகம்.

குசாம்பன் - குசன்மகன்.

குசாலிங்கநம் - ஒருவகை ஆலிங்கனம்.

குசால் - சந்தோஷம், சமாளம், மனோற்சாகம், வேடிக்கை, மனோச்சாகம், மனக்களிப்பு, நடையுடைகளின் மினுக்கு, உல்லாசம், களிப்பு.

குசால்புருஷன் - குசாற்காரன்.

குசாவதி - குசன் ராஜதானி.

குசாற்காரன் - மனக்களிப்புள்ளவன், ஆடம்பரக்காரன்.

குசிகர் - விசுவாமித்திரன் குலத்தவர்.

குசிகன் - விசுவாமித்திரன பாட்டன் தந்தை, பலாகாசுவன் மகன்.

குசிருதம் - பொல்லாங்கு.

குசினி - சிறியது, சிறுபயிர், சமையலறை, குசினிக்காரன், அடுக்களை, சமையல்வீடு.

குசினிக்காரன் - சமையற்காரன், குதிரைக்காரன்.

குசினிப்பயிர் - இளம்பயிர்.

குசினிமேட்டி - சமையற்காரனுடைய உதவியாள்.

குசீதம் - வட்டிக்கு வாங்குதல்.

குசீலவன் - மைத்திரேயன் தந்தை.

குசீலன் - துட்டன், போக்கிரி, துராசாரி.

குசு - அதோவாயு, அபானவாயு.

குசுகுசுத்தல் - இரகசியம் பேசுதல், காதுக்குள் முணுமுணென்று ஒதுதல், குசுகுசெனல், குசுகுசுப்பு.

குசுகுசுப்பு - இரகசியம், காதுக்குள் ஒதுகை.

குசுகுசெனல் - இரகசிய ஒலிக்குறிப்பு, காதுக்குள் ஒதுதற்குறிப்பு, குசுகுசுப்பு.

குசுமபுரம் - பாடலிபுரம்.

குசுமம் - காயா, பூ, புட்பம்.

குசுமாகரம் - பூந்தோட்டம், வேனிற்காலம்.

குசுமாசவம் - பொல்லாங்கு, தேன்.

குசுமேஷன் - மன்மதன், அநங்கன்.

குசும்பம் - ஒருபூ, ஒருமரம், செந்துருக்கம்.

குசும்பன் - உபரிசரவசு மகன்.

குசும்பா - ஒருபானம், ஒருபுடவை, செந்திருக்கம்பூ, வெண்மைகலந்த சிவப்பு, செந்துருக்கம், செந்துருக்கம்பூ மரம், மிகுசிவப்பு, குசும்பை, பொன்.

குசும்பாச்சேலை - குசும்பாச்சாயம் ஏற்றியசேலை.

குசும்பாவெண்ணெய் - குசும்பா விதையினின்று வடிக்கும் எண்ணெய்.
குசும்பு - குறும்புத்தனம், குறும்பு.
குசும்பை - ஒருவித மரம், குசும்பா.
குசும்பைமலர்மணி - கோவாங்கப் பதுமராகம்.
குசலம் - அஸ்வம், குதிரை.
குசூர் - அசாக்கிரதை, குறை.
குசூலம் - தானியக்கிருகம்.
குசேசயகரன் - சூரியன்.
குசேசயம் - தாமரைப்பூ, தாமரை.
குசேலன் - கிருஷ்ணன் சிநேகனாகிய ஓர்ந்தணன்.
குசை - கடிவாளம், குதிரைகட்டுங் கயிறு, குதிரையின் பிடர்மயிர், தருப்பை, குதிரையின் வாய்க்கருவியிற் கோத்துமுடியுங் கயிறு, மகிழ்ச்சி, தருப்பைப்புல், குதிரைமயிர், குசம், சத்தசீவிலொன்று.
குசைக்கயிறு - குதிரையின் டாய்டம்.
குசைக்கிரந்தி - தருப்பைப் பவித்திர முடிச்சு.
குசைத்தீவு - சத்தத்தீவிலொன்று.
குசைப்புல் - தருப்பைப்புல்.
குசையன் - வீரவேகி.
குசோதகம் - தருப்பைநீர்.
குசோத்தியம் - தந்திரம், பரிகாசம், நேர்மையற்ற கேள்வி, பரிஹாசம், தகாதகேள்வி.
குச்சத்தின்பாதி - சிறுபுள்ளடி, சிறுபுள்ளடிப்பூடு.
குச்சம் - ஒருவகை யலங்காரத்தூசு, குன்றி, கொத்து, நாணற்புல், நூபுரங்கூறல், பூங்கொத்து முதலியவற்றின் கொத்து, நெற்குஞ்சம், பற்பாடகம், வெறும்புறங்கூறல், அலங்காரக்குஞ்சம், பற்படகம், குன்றிமணி, நாணல், புறந்தூற்றுமொழி, பூங்கொத்து, புறங்கூறுகை, குன்றிக்கொடி, கஞ்சம், நெற்குச்சம், தூற்றுமொழி.
குச்சரம் - ஒருதேயம், கூர்ச்சரம்.
குச்சரர் - குச்சலியல், கூர்ச்சரதேசத்தார், குச்சிலியர்.
குச்சரி - ஒரு பெண், ஓர் இராகம், முற்காலத்து வழங்கியதூசில் வகை, அருவருப்புகொள்.
குச்சரித்தல் - அருவருப்புக்கொள்ளுதல்.
குச்சரியர் } குச்சரர்.
குச்சலியர் }
குச்சி - கூர்ச்சு, மயிர்ச்சிகைப்பூட்டு, மயிர்க்குச்சு, குச்சு, குற்றி, அருவரு, மரக்குச்சி, கொண்டையூசி, ஒருவகைச்செடி, மூகடு, சிறுகம்பு.
குச்சிகை - வீணைவகை.
குச்சிதம் - குற்சிதம், இழிவு, அரோசிகம.
குச்சிதல் - அருவருத்தல், குர்ச்சித்தல்.
குச்சிப்பதக்கம் - பதக்கவணிவகை.
குச்சிப்புல் - குச்சுப்புல், ஒருவகைப்புல்.
குச்சிலி - அந்திக்கடை.
குச்சிலியப்பொட்டு - தலைக்குப்பொட்டு.
குச்சிலியர் - குச்சரர், கூர்ச்சரதேசத்தவர்.
குச்சில் - சிறுகூறைவீடு, சிறுகுடில், குச்சுப்புல்.
குச்சு - அடைப்பு, குஞ்சம், குடில், குற்றி, கூர், சிறுகம்பு, சிற்றில், நுதி, பாவாற்றி, மயிர் வேய் முதலிய மூடிச்சு, கொய்சகம், புற்குச்சு, மரக்குச்சு, கடாவுமூளை, கொண்டையூசி, சிறுகுடில், சிற்றறை, குச்சுப்புல், ஒருகாதணி, கழுத்தணிவகை, சீலையின் மூன்மடி, குச்சில், குச்சம், மயிர்க்குச்சு.
குச்சுக்கட்டுதல் - மயிர் முடித்தல்.
குச்சுக்காரி - வேசி, விபசாரி, இழிந்தவியபிசாரி.
குச்சுக்கெம்பு - புறவிடம் மேடான சிவப்பு ரத்தினம்.

குச்சுச்சார்த்துதல் - விக்கிரகங்களினழுக்கெடுத்தல்.

குச்சுப்பிடித்தல் - ஆடையைக் கொய்து வைத்தல், குஞ்சம் வைத்தல்.

குச்சுப்புல் - அழுக்கெடுக்கக் கட்டிய புல், ஒருவகைப்புல், கொத்தாயுள்ள புல்.

குச்சுப்புற்சாத்துதல் - விக்கிரகத்தைக் குச்சுப்புல்லாற் சுத்தஞ் செய்தல்.

குச்சுமட்டை-சித்திரக்காரரின் கருவிவகை, சுண்ணாம்பு வெள்ளையடித்தற்குரியமட்டை.

குச்சுமணி - மகளிர் கழுத்தணிவகை.

குச்சுவாங்குதல் - இரத்தினங்களையொப்பஞ் செய்தல்.

குச்சுவீடு - குச்சில்.

குச்செறிதல் - மயிர் சிலிர்த்தல்.

குச்சை - கொய்யகம், கொய்சகம், நிந்தை.

குஞ்சங்கட்டுதல் - அலங்காரக் தூக்குத் தொங்கவிடுதல்.

குஞ்சட்டி - சிறுசட்டி.

குஞ்சகம் - ஒடுங்குதல், சுருங்குதல், வளைவு.

குஞ்சம் - ஈயோட்டி, குச்சு, குக்குப்புல், குறள், குடுமணியிலெட்டிலோர் பங்கு, குன்றிக்கொடி, கூன், கொத்து, கோட்சொல்லல், சீகாங்கபாஷாணம், தந்தம், நாழியென்னுமளவை, நூற்றிருபதிழை தொடுத்திருக்கப்பட்டது, புளிநறளை, பூங்கொத்து, மருள், வீசுங்குஞ்சம், குறளை, புல்லின் குச்சு, புடைவையகலத்தின் அரைக்காற்பாகம், கொய்சகம், பாவாற்றி, குன்றி, நாழி, குறுமை, கோட்சொல், கோள், குன்றிமணி, கதிர்க்கொத்து.

குஞ்சம்வீசுதல் - ஈயோட்டியாற்பணிமாறுதல்.

குஞ்சரக்கன்று - யானைக்குட்டி, குட்டியானை.

குஞ்சரக்கோடு - யானைக்கொம்பு.

குஞ்சரத்தீ - யானைத்தீ.

குஞ்சரமணி - கழுத்தணிவகை.

குஞ்சரம் - உற்சிதம், கருங்குவளை, மருள், யானை, ஒரு சொல்லெச்சார்ந்து உயர்வு குறிக்கும் மொழி.

குஞ்சரவொழுகை - யானைகட்டிய சகடம், யானைகட்டிய வண்டி.

குஞ்சரன் - ஒரு வானரன், அஞ்சனை தந்தை, அனுமான் பாட்டன்.

குஞ்சராசனம் - அரசமரம், அரசு, குஞ்சராசகம்.

குஞ்சராராதி - சரபம், சிங்கம்.

குஞ்சரி - பெண்யானை, முருக்கக்கடவுளின் தேவியான தெய்வயானை.

குஞ்சனம் - வளைவு.

குஞ்சன் - குள்ளன், கட்டையன், குறளன்.

குஞ்சாமணி - ஆண் குழந்தைகளின் அரையிற் கட்டும் மணி விசேடம்.

குஞ்சாயி - குஞ்சியாயி.

குஞ்சாலாடு - தின்பண்டவகை.

குஞ்சான் - குழந்தையின் ஆண்குறி.

குஞ்சி - ஆண்மயிர், குஞ்சியென்னேல், குடுமி, குன்றிக்கொடி, சிறியதாய், சிற்றப்பன், பறவைக்குஞ்சு, மயிர்ப்பொதி, சிறுமையானது, தாயின் தங்கை, ஆண்குறி, கோடிநாட்டுங்குழி, கொடிக்கழை, யானை மயில் முதலியவற்றின் உச்சிமயிர், தலை, சிற்றணுக்கனென்னும் விருது, குன்றி, எட்டுக்கைப்பிடிகொண்ட ஓளவு, சிரம், சிற்றணுக்கள், மயிர், குந்திகில்.

குஞ்சிகாள்தலை - சூரியன் மூன்னடிக்கும் பன்னிரண்டு அப்சரஸ்திரீகளிலொருத்தி.

குஞ்சிகை - சிகை.

குஞ்சிக்கடகம் - சிறுகடகம்.

குஞ்சிக்கூடை - சிறுகூடை.

குஞ்சிச்சடை - சிறு சடை.

குஞ்சிதநடம் - ஒரு காலைத் தூக்கி வளைத்து ஆடும் நடராசர் கூத்து.

குஞ்சிதநிருத்தம் - ஒரு காலூக்கியாடல்.

குஞ்சிதபாதம் - நடனத்தில் வளையத் தூக்கின நடராசர் தாள்.

குஞ்சிதம் - ஒரு காற்றூக்கி நிற்றல், படங்குந்தி நிற்றல், வளைவு, வளைந்தது, குந்தி நிற்கை.

குஞ்சிதாதனம் - கால் பெருவிரலை யூன்றி நிற்பது.

குஞ்சித்தல் - படங்குந்திநிற்றல், கால் தூக்கி வளைத்தல், காற்படங்குந்தி நிற்றல், குந்துதல், தூக்குதல்.

குஞ்சிப்பட்டி - சிறு கடகம்.

குஞ்சிமணி - குஞ்சாமணி, ஆண் குழந்தையினரையிற் கட்டுப்படுவ தோரணி.

குஞ்சியப்பன் - சிறிய பிதா, சிற்றப்பன், தாயின் தங்கை கணவன், தாயின் இரண்டாம் கணவன், தந்தையின் தம்பி.

குஞ்சியப்பு - குஞ்சியப்பன்.

குஞ்சியன் - குஞ்சியப்பன்.

குஞ்சியாச்சி, குஞ்சியாயி } சிறியதாய், குஞ்சியாய்.

குஞ்சியாத்தை - குஞ்சியாய்ச்சி.

குஞ்சியாய்ச்சி - தாயின் தங்கை, தந்தையின் தம்பி மனைவி, தந்தையின் இராண்டாம்தாரம்.

குஞ்சிரிப்பு - குறுநகை, புன்னகை.

குஞ்சு - அணில் முதலியவற்றின் பிள்ளை, ஆண்குறி, எலி, பறவைக் குஞ்சு, சிறினம், குஞ்சி.

குஞ்சுகுழந்தைகள் - சிறியவும் பெரியவுமான குழந்தைகள்.

குஞ்சுக்கடகம்-குஞ்சிக்கடகம், சிறிய ஓலைப்பெட்டி.

குஞ்சுக்குவைத்தல் - மூட்டையைக் குஞ்சு பொறிக்கும்படி செய்தல்.

குஞ்சுங்குழுமானும் - பல வயசிலுள்ள குழந்தைகளின் கூட்டம்.

குஞ்சுங்குழுவானும் - குஞ்சுங்குழுமானும்.

குஞ்சுங்குழுவும்-குஞ்சுங் குழுமானும்.

குஞ்சுச்சிப்பி-முற்றாத முத்துச்சிப்பி.

குஞ்சுருக்குதல் - சுன்னத்துச் செய்தல்.

குஞ்சுபொறித்தல் - குஞ்சு பிறப்பித்தல்.

குஞ்சுப்பெட்டி - சிறிய வேலைப் பெட்டி.

குஞ்சுமணி - குஞ்சிமணி.

குஞ்சுரம் - குன்றி, குன்றிக்கொடி, குன்றிமணி.

குஞ்சுறை - பறவைக்கூடு.

குஞ்சை - நெய்வோர் பாவில் தேய்க்கும் குஞ்சம்.

குட - வளைந்த.

குடகச்செலவு - யாழில் இசைபட வாசிக்கும் வகையுள் ஒன்று.

குடகம் - ஒருமலை, தேசமைம்பத்தாறில் ஒன்று, மேற்கு, தமிழ் நாட்டின் மேல்பாலுள்ள ஒருநாடு, குடகுமலை, கோளகபாஷாணம், குடகு.

குடகரம் - உத்தாமணி, வேலிப்பருத்தி, உத்தாமணிச்செடி.

குடகவரை - காவிரிதோன்றுமலை.

குடகன் - சேரன்.

குடகாற்று - மேல்காற்று.

குடகு - ஒரு தேசம், குடகம், ஒரு மலை.

குடகோளார்த்தம் - பச்சிமகண்டம், பூகோளத்தின் மேற்குப்பாதி.

குடக்கடம், குடக்கம் } வளைவு.

குடக்கனி - பலாப்பழம்.

குடக்கால் - குடத்தண்டு, குடம் போன்ற விளக்குத்தண்டு.

குடக்கி - வளைவானது.

குடக்கியன்-வளைவானவன், ஊனன், கூனன்.

குடக்கினி - கருங்காலி, காசிக்கட்டி, கருங்காலிமரம்.

குடக்கு - மேற்கு.

குடக்குழி - நீர்க்குண்டு.

குடக்கூத்து - விநோதக்கூத்தாறினுள் ஒன்று.

குடக்கூலி - குடிக்கூலி, வாடகை.
குடக்கோ - சேரன், குடக்கோன்.
குடக்கோடுவான் - சூரியன்.
குடக்கோன் - சேரன், குடக்கோ.
குடங்கசம் - கூரை, குடிசை, சிற்றில்.
குடங்கட்டுதல் - குடம்போற்றிரட்டி விடுதல்.
குடங்கரை-தண்ணீர்க்குடம் வைக்குமிடம்.
குடங்கர் - குடம், குடிசை, கும்பவிராசி, கும்பராசி, குடில்.
குடங்கல் } வளைவு, வளைதல்.
குடங்குதல் }
குடங்கவிழ்த்தல் - வண்டி குடஞ்சாய்ந்து விழுதல்.
குடங்கால் - மடி.
குடங்கு - வளை.
குடங்கை - உள்ளங்கை, எல்லா விரலும் கூட்டி உட்குழிக்கும் இணையாவினைக்கை, நாடகவுறுப்புளொன்று, அங்கை.
குடசப்பாலை - கறிப்பாலை, கொடிப்பாலை, வெட்பாலை, கசப்பு வெட்பாலை, ஒரு மரம்.
குடசம் - மலைமல்லிகை, வெட்பாலை, குடசப்பாலை.
குடச்சிப்பி - வளைவுள்ள இப்பி.
குடச்சூல் - பாதச்சிலம்புவகை.
குடச்செவி - கும்பகன்னம்.
குடஞ்சாய்தல் - குடங்கவிழ்.
குடஞ்சுட்டவர் - பசு நிரைமேய்க்கும் இடையர்.
குடஞ்சுட்டு - பசுப்பொதி, பசு.
குடதாடி - தாணின்மேல் வைக்கும் குடவடிவமான உறுப்பு.
குடதிசை - மேற்குத்திசை.
குடதேவர் - குடமுனி, அகஸ்தியர்.
குடத்தண்டு - குடக்கால்.
குடத்தி - ஒரு மிருகம், முல்லைநிலப் பெண், இடைச்சி, கழுதைப்புலி, கழுதைக்குடத்தி.
குடத்திமர் - இடைச்சியர்.
குடநாடன் - சேரன்.
குடநாடு - மேல்நாடு, கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் ஒன்று, மேநாடு.
குடநாதன் - சேரன்.
குடந்தம் - குடம், கும்பகோணம், திரட்சி, கைகூப்பி மெய்வளைத்துச் செய்யும் வழிபாடு, குடந்தை, வளைவு.
குடந்தம்படுதல் - வழிபடுதல்.
குடந்தம்பட்டு - வழிபட்டு, வணக்கம்பட்டு.
குடந்தை - கும்பகோணம்.
குடபம்-கூட்டுகை நாலுகொண்டது.
குடபலை - மணத்தக்காளி, மணித்தக்காளி.
குடபன் - ஒரு மஹரிஷி.
குடபுலம் - மேல்நாடு.
குடப்பம்-இருப்பை, இருப்பைமரம்.
குடப்பறை - குடவடிவான பன்றிப்பறை.
குடப்பாம்பிற்கையிடுதல் - பாம்பை அடைத்த குடத்திற் கையிட்டுச் சபதம் செய்தல்.
குடப்பாப்பு - மதிற்பொறி வகை.
குடப்பாலை - ஒருமரம், குடசப்பாலை.
குடப்பாழ் - ஒரு குடம்.
குடப்பிழுக்கை - வரிக்கூத்துவகை.
குடப்பெட்டி - மேல்வகை.
குடமணம் - கருஞ்சீரகம்.
குடமண் - வெண்மணல்.
குடமலை - குடகுமலை, மேற்றிசைக் கண்ணுள்ள ஓர் மலை. அது சையகிரி யெனவும் படும்.
குடமலைநாடு - குடகநாடு.
குடமல்லிகை - ஒருவகை மல்லிகை.
குடமாடல் - மாயோனுடல், குடக்கூத்து, மாயோன் கூத்து.
குடமாலை-உருட்சியான மாலைவகை.
குடமிளகாய் - மிளகாய்வகை.
குடமுடைத்தல் - கொள்ளிவைப்பவன் பிணத்தைச்சுற்றிவந்து நீர்க்குடமுடைக்கும் மரணச்சடங்கு.
குடமுருட்டி-காவிரிநதியின்ஒருகிளை.

குடமுருட்டிநதி - ஒரு நதி. இது நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய உறையூரிலுள்ளது.

குடமுழ - குடமுழா.

குடமுழவம் - குடமுழா, ஒரு முழவு.

குடமுழவு - குடமுழா.

குடமுழா - ஒரு வாத்தியம், ஒரு முழவு, முழவு வாத்திய வகை, மண்கணை, முழவம்.

குடமூக்கில் - குடமூக்கு.

குடமூக்கு - கும்பகோணம்.

குடமூதுதல்-குடத்திலுள்ளநதி ஒலி பிறப்பித்தல்.

குடம் - ஊர்ப்பொது, கும்பம், கும்ப விராசி, கைகொட்டிக் குவித்தல், கொடுங்கமழ் நாட்டிலொன்று, சதுரக்கள்ளி, சருக்கரை, திரட்சி, பசு, பட்டினம், பூசம், மருதநிலத்தூர், மாயோடை, நீவைக்கும் குடம், குடநாடு, குடதாடி, கும்பராசி, குடக்கூத்து, வண்டிக்குடம், நகரம், கருப்புக்கட்டி, கோளவடிவம், பதிலொரு ருத்திராடலிலொன்று, மாயனுடைய கூத்து, இடக்கர், இடங்கர், இரும்பை, இறங்கர், கடம், கலசம், குடங்கர், குணம், நசும்பு, தாழி, வெல்லம், விட்டுணுக்கூத்து, கைகொட்டிக் குவிக்கை, குடந்தம்.

குடம்பை - உடம்பு, நீர்நிலை, பறவைக்கூடு, முட்டை, கூடு, ஓரூர், உடல்.

குடம்விட்டுக்கட்டுதல் - கலியாணத்திற்கு நடுங்காலை அடுக்குக் குடம் போலச் சீலையால் அலங்கரித்தல்.

குடம்வைத்தல் - ஒரு விளையாட்டு.

குடரம் - மத்துத்தறி.

குடராசம் - பூரான்வகை.

குடராஜம் - ஒருவகைப்பூரான்.

குடாரி - குடாரி, கோடாலி, யானைத் தோட்டி.

குடர் - குடல்.

குடலண்டம் - ஒருவகை அண்டவியாதி, குடல்வாயு, குடலிறக்கம், குடல்வாதம்.

குடலண்டவிருத்தி-ஒருவகை அண்டவியாதி, குடல்வாயு.

குடலரிச்சல் - பெருங்குடலில் தோன்றும் நோய்வகை.

குடலிரைச்சல் - வயிற்றிரைவு.

குடலிறக்கம் - குடல்வாயு.

குடலெடுத்தல் - குடல்தட்டு.

குடலெரிச்சல் - வயிறு காந்துகை, வயிற்றெரிச்சல்.

குடலேறுதல் - குடல் பிசகி மேலிடுதல்.

குடலேற்றம் - குடலேறுதல்.

குடலை - தொக்கட்டி, பூக்கூடை முதலியன, பொத்தி, பூக்குடலை, கதிர்க்குடலை, கிணற்றுக்குடலை, பழக்கூடு, கீற்றுக்கூடு, குடல், ஓலைக்கூடை, ஓலைக்கூடு.

குடலைக்கிணறு - ஒருவகை உறைகிணறு.

குடலைக்குழப்புதல் - வாந்தி செய்யும்படி வயிற்றைப் புரட்டுதல்.

குடலைப்பிடுங்குதல் - பசியால் வயிறு கிண்டப்படுதல், வாந்தியெடுக்க வருதல், அசங்கியமாகுதல்.

குடலைப்பூச்சி - ஒருவகைப்பூச்சி.

குடலையாகுதல் - கதிரீனுதல்.

குடலையுங்கதிரும் - கருக்கொண்டதும் கொள்ளும் நிலையிலுள்ளதுமான கதிர்.

குடலைவயிறு - குழைந்த வயிறு.

குடல் - குடர், வயிற்றுள் இரைப்பையைத் தொடர்ந்துள்ள குழாய், காயின் குடல், மரக்குடல், பழக்குடல்.

குடல்காய்கை - பசியால் வயிறு ஒட்டிக் கொள்ளுகை.

குடல்தட்டுதல்- குடலின் பிறழ்வைத் தட்டி ஒழுங்கு படுத்துதல்.

குடல்திருகுதல் - குடர்ப்பிசகுதல்.

குடல்பதறுதல் - தூக்க மிகுதி முதலியவற்றால் வயிறு கலங்குதல்.
குடல்வலி - ஒருவித நோய், உணவு மிகுதி முதலியவற்றாற் குடலிற் காணும் நோவு.
குடல்வாதம்-ஒருவகை நோய், குடல் வாயு, குடலண்டம்.
குடல்வாயு - அண்டவாதம்.
குடல்விருக்தி - ஒருவகை நோய்.
குடல்விளக்கஞ்செய்தல்-பிறந்த வயிற்றைப் பெருமை பெறச் செய்தல்.
குடவண்டிபோடுதல் - குடங் கவிழ்த்தல், தலைகீழாய்க் கவிழ்த்தல்.
குடவண்டியடித்தல் - குடவண்டி போடுதல்.
குடவண்டிவைத்தல் - தொந்தி தள்ளுதல்.
குடவப்பருவதம் - ஒருமலை.
குடவப்புரசு - முதிரை.
குடவம் - பித்தளை.
குடவரை - அஸ்தகிரி, அத்தகிரி.
குடவரைவாசல் - கோபுரவாயில்.
குடவர் - கோக்குவர், இடையர், மேற்கிலுள்ள குடநாட்டினர், குடநாட்டிலுள்ளோர்.
குடவல் - வளைதல்.
குடவளப்பம் - இருப்பை, இருப்பை மரம்.
குடவறை-குகை, சிற்றறை, நிலவறை.
குடவன் - ஒரு கொட்டையுள்ளது, கோட்டம், கோணலான உருவுள்ளது, பித்தளை, ஒருகோட்டைக் காய், இடையன், குடவம், பனங்காய் முதலிய ஒற்றைக்கொட்டைக்காய், கணிகை, குடவுண்ணி, கோவ்டம், ஒரு நதி.
குடவன்பனங்காய் - குடவன்.
குடவாயில் - ஓரூர்.
குடவியிடுதல் - வளைத்து அகப்படுத்துதல்.
குடவிளக்கு - திருமணத்தீபம், மணவறையில் அக்கினிமூலையில் குடத்தின்மேல் வைக்கும் விளக்கு.
குடவு - குகை, குடவென்னேவல், குமரளுடல், வளைவு, குடவறை, வளை.
குடவுண்ணி - ஒரு உண்ணி.
குடவுதல் - வளைதல், வளைவாதல்.
குடவுழுந்தர் - ஒரு புலவர்.
குடவுளுந்தன் - ஒரு புலவன்.
குடவெழுத்தாணி - குடங்கட்டிய வெழுத்தாணி.
குடவோலை - சபையோரைத் தேர்ந்தெடுக்கக் குடத்திலிடும் சீட்டு.
குடற்கிருமி - ஒருவகைக்கிருமி.
குடற்கொழுப்பு - நெய்ப்பு.
குடற்சவ்வு - வயிற்றின் உறுப்பை மூடியிருக்குஞ்சவ்வு.
குடற்படுவன் - குழந்தையின் குடற் நோய் வகை.
குடற்பற்றுப்பிஞ்சு - இளம்பிஞ்சு.
குடற்பிடுங்கி - துருசி, வாந்தி எடுக்கச் செய்வதாகிய துரிசு, துரிசி.
குடற்பிரிவு - குடற்பிசகு, குடல் பிறழுகை.
குடற்புறை - குடற்றுவாரம்.
குடற்பை - குடற்போர்வை.
குடற்போர்வை - கருப்பப்பை.
குடற்றுடக்கு - இரத்தக்கலப்பான உறவு.
குடலேறவு - கொலைமூட்டி யென்னும் கால்நடை நோய்.
குடா - குடைவு, கோணம், மூலை, வளைவு, குடாவு, குடற்குடா, கடற்குடா.
குடாகாயம் - குடத்தால் அளவு படுத்தப்பட்ட ஆகாயம்.
குடாக்கடல் - மூலைவிழுந்த கடல், மூன்று பக்கம் தரை சூழ்ந்த கடல்.
குடாக்கு - உக்கா, புகையிலை பாகு பழம் சந்தனம் இவற்றைச் சேர்த்துத் திரட்டிய உக்கா மருந்து.
குடாக்கை - வயலின் மூலை.
குடாசகம் - ஏமாற்று, தூர்ப்போதனை, கபடம், கோள், வெய்ப்பு, மாயம்.

குடாசகன் - கோட்காரன், வஞ்சகன்.
குடாசம் - எய்ப்பு, கபடம், கோள், தூர்ப்போதனை.
குடாசல்-தந்திரஞ்செய்யல், தந்திரம்.
குடாசுதல் - தந்திரம, தந்திரம் பண்ணுதல், தந்திரஞ்செய்தல்.
குடாது - மேற்கிலுள்ளது, குடகருள்ளது, மேற்கு.
குடாந்நம் - சர்க்கரைப் பொங்கல், குடான்னம், சருக்கரைப் பொங்கல்.
குடாபாகம - சங்கீதத்திலுர்சுவை, செய்புட் சுவையிலொன்று.
குடாப்பு - கூடு.
குடாரம் - கோடாலி, தயிர்கடைதறி, தயிர்கடை தாழி.
குடாரி - கோடாலி, திப்பிலி,யானைத் தோட்டி, திப்பலி.
குடாரு - தயிர்கடைதாழி.
குடார்த்தகோளம் - பூமியின்மேற்குப் பாதியுண்டை.
குடாவடி - கரடி.
குடாவு - குடா.
குடான் - செம்முள்ளி, செம்முள்ளிச் செடி.
குடி - உடம்பு, ஊர்ப்பொது, குடியானவன், குடியென்னேவல், குலம், கோத்திரம், சமுசாரம், நெற்றிப் புருவம், பட்டினம், மருத நிலத்தூர், மனைவி, வீடு, மூலையுண்ணு, பருகுகை, மதுபானம், மதுவுண்டமயக்கம், புருவம், குடியிருப்போர், ஆட்சிக்குட்பட்ட பிரசைகள்,குடும்பம், ஊர், வாழ்விடம், குடிமக்கள், குடியிருப்பு, தினை, பருகு, உறிஞ்சு, மதுவுண், மூலையுண், உட்கொள்.
குடிகாரன் - குடியன், சுராபானி, கள் முதலிய குடிப்பவன்.
குடிகெடுதல் - குடும்பம் அடியோடு அழிதல்.
குடிகெடுத்தல் - குடிகளை கட்டப்படுத்தல்.
குடிகேடன் - துட்டன, தீ யொழுக்கத்தால் குலத்தை அழிப்போன், துஷ்டன்.
குடிகேடி - விபசாரி, துட்டை, குலத்தை அழிப்பவன், குலத்தை அழிப்பவள், துஷ்டை.
குடிகேடு - குடியழிவு, குடும்பநாசம்.
குடிகை - ஏலரிசி, பர்ணசாலை, கோயில், ஏலவரிசி, கமண்டலம், குண்டிகை.
குடிகொள் - வாசமாயிரு.
குடிகொள்ளல் } வாசமாயிருத்தல்,
குடிகொள்ளுதல் } நிலையாகத்தங்கியிருத்தல், குடிகொள்தல்.
குடிக்கொள் - உபாயஞ்சூழ்ந்து குடியைக் கெடுக்கை.
குடிக்காசு - குடிவரி.
குடிக்காடு - ஊர்ப்பொது, மருத நிலத்தூர், ஊர்.
குடிக்காணம் - குடிவரி.
குடிக்காவல் - ஊர்க்காவல்.
குடிக்குச்சகுனி - குடியோட்டிப் பூண்டு.
குடிக்கூலி - வாடகை, வீட்டு வாடகை.
குடிக்கூலிக்கொடுத்தல் - வாடகைக்கு வாங்குதல்.
குடிங்கு - பறவை.
குடிசமம் - நீர்ப்பன்றி.
குடிசல் - குடிசை, குடில், குச்சுவீடு.
குடிசனம் - அரசாட்சிக்குள்ளடங்கிய சனம, பிரசைகள்.
குடிசாய்தல் - குடியின் அழிவு.
குடிசெயல் - தான்பிறந்த குடியை யுயரச்செய்தல்.
குடிசெயல்வகை - தன் குடும்பத்தை யுயர்த்தும் வகை.
குடிசெய்தல் - பிறந்த குடியையுயர்த்துதல், வசித்தல்.
குடிசை - சிறுவீடு, குடில், சிறுகுடில், சிற்றில்.
குடிசைதூக்குதல் - குடிசையெடு, இருப்பிடம் மாற்றுதல்.

குடிசையெடுத்தல் - குடிசையை வேற்றிடம் மாற்றுதல்.

குடிச்செருக்கு - குடிப்பிறப்பால்உண்டான கருவம், குடிவளம்.

குடிஞை - ஆறு, கூகை, சிற்றில், பதி, பறவைப்பொது, மருதநிலத்தூர், வீடு, பேராந்தை, குடிசை, கோட்டான், பறவை.

குடிஞைக்கல் - சோழர்காலத்து வழங்கிய ஒருவகை எடைக்கல்.

குடிதாங்கி - குலத்தைத்தாங்குபவன்.

குடிதாங்கிக்கோல் - ஒருபழையஅளவுகோல்.

குடிதிருத்துதல் - ஆட்சிக்குட்பட்ட குடிகளை நன்னிலையில்நிறுத்துதல், பிறந்த குலத்தை மேம்படுத்துதல்.

குடித்தரம் - தனித்தனியான குடித்தீர்வை.

குடித்தல் - பருகுதல், உட்கொள்ளுதல், பருகல், பானம், மாந்தல்.

குடித்தனக்காரன் - இல்லாச்சிரமி, பயிரிடுவோன், ஊரில் செல்வாக்குள்ளவன், வீட்டுத்தலைவன், கிருகஸ்தன்.

குடித்தனப்படுதல் - விவாகம் பண்ணல், இல்வாழ்க்கை நிலையை அடைதல்.

குடித்தனப்பாங்கு - இல்வாழ்க்கையொழுங்கு.

குடித்தனம் - இல்வாழ்க்கை, வாடகைக்குடி, வாழ்க்கையின் ஒழுங்கு, குடித்தனப் பாங்கு.

குடித்தனவுறுப்பு - குடும்பத்திற்கு அங்கங்களான இடம்பொருள்ஏவல் முதலியன.

குடித்தெய்வம் - குலதெய்வம்.

குடிநற்கல் - குடிஞைக்கல்.

குடிநாசம் - குடியழிவு.

குடிநாட்டுதல் - குடியேற்றுதல்.

குடிநிலம் - குடியிருக்கத்தக்க நிலம், குடியிருக்கும் மனைநிலம், சீதனமாகக் கொடுத்தமனை.

குடிநிலையுரைத்தல் - குடிநிலை.

குடிநீர் - ஒருவகைக்கஷாயம், குடித்தற்குரியநீர்.

குடிநீர்த்திரவியம்-கஷாயச்சரக்குகள்.

குடிபடை - குடிசனம், குடிசனங்கள், குடிசநம்.

குடிபுகல் } கிரகப்பிரவேசம், புது
குடிபுகுதல் } வீட்டிற் சேர்தல், கிரகப்பிரவேசம் செய்தல், நிலைத்த இடமாகக் கொள்ளல்.

குடிபோதல் - குடிபுகுதல், குடியெழும்பல், வேறுவீட்டிற்கு வசிக்கச் செல்லுதல், குடிபுகு, இருப்பிடத்தைவிட்டு வெளியேறுதல்,வலசைபோதல், காற்றுகவேனும் ஆவியாகவேனும் பண்டங்களைதல்.

குடிப்படை - குடிகளாலானசேனை.

குடிப்பழி - குலத்திற் கேற்பட்ட நிந்தை.

குடிப்பழுது - வசை, குடிப்பழி.

குடிப்பறையன் - பறையர்க்குச் சவரஞ் செய்யும் அம்பட்டன்.

குடிப்பாங்கு - குடித்தனப்பாங்கு,குடியானவன் முன்பற்றுதற் குரிய ஒழுங்கு, குடிகளின் ஏற்பாடு.

குடிப்பாழ் - குடிகள் விட்டு நீங்குதலால் ஊருக்கு உண்டாகும் அழிவு, குடிகளற்றுப்போன ஊர்.

குடிப்பிள்ளை - பறையருள் அம்பட்ட வேலைசெய்யும் ஒரு சாரார்.

குடிப்பிறப்பாளர் - உயர் குடியிற் பிறந்தோர்.

குடிப்பிறப்பு - ஒழுக்கமுடைய குடியிற் பிறத்தல்.

குடிப்பு - பானம், பாநம்.

குடிப்பெண் - மேற்குலப்பெண், குலஸ்திரீ.

குடிப்பெயர் - குலத்தால் வந்தபெயர்.

குடிமகன் - அம்பட்டன், மூக்குலத்தோர்க்கு மேவல் செய்வோன், நற்குடிப்பிறந்தவன், பரம்பரையடிமை, படியாள்.

குடிமக்கள் - பணிசெய்யும் பதினெண் வகைச் சாதியார். அவர் இலை

வாணிகன், உப்புவாணிகன், எண்ணெய் வாணிகன், ஒச்சன், கற்றச்சன், கன்னுன், குயவன், கொல்லன், கோவிற்குடியான், தச்சன், தட்டான், நாவிதன், பள்ளி, பாணன், பூமாலைக்காரன், வண்ணுன், வலையன், பறையன் என்பவர். அடிமைகள்.

குடிமதிப்பு - குடிக்கணக்கு, குடியிறை, கிராமவரித் திட்டம்.

குடிமார்க்கம் - முறைப்படி விவாகம் முடித்திருத்தல், இல்வாழ்க்கை, குடித்தனக்கடமை, குடிமை, குடிமுறைமை.

குடிமிராசி - குடிமிராசு.

குடிமிராசு - பரம்பரை நிலவுரிமை.

குடிமுழுகிப்போதல் - குடும்ப நிலை முதலாயின முழுதும் அழிதல்.

குடிமை - உயர்குலத்தாரது ஒழுக்கம், பிறந்த குடியை உயரச் செய்யுந்தன்மை, குடிப்பிறப்பு, அரசரது குடியாயிருக்குந் தன்மை, குடித்தனப்பாங்கு, அடிமை, குடிகளிடமிருந்து பெறும் ஒருவகைவரி, குடிமக்கள் செய்யுமேவற்றொழில், குலனுடைமை, குடியியல்பு.

குடிமைப்பாடு - ஊழியம்.

குடியரசு - குடியாட்சி, பிரசைகளால் நடத்தப்பெறும் அரசாங்கம், குடிகளாணியமிக்கப்பட்ட வரசன்.

குடியர் - கள்முதலிய குடிப்போர்.

குடியழிதல் } குடிகெடுத்தல்.
குடியழித்தல் }

குடியழிவு - குடிநாசம், குடும்பக்கேடு, பெருங்கேடு.

குடியன் - குடிகாரன்.

குடியாட்சி - தன்குடும்பத்தை நடத்தல்.

குடியாட்டம் - குடிவாழ்க்கை.

குடியாயக்கட்டு - கிராமக் குடும்பங்களின் மொத்தக்கணக்கு.

குடியாள் - தாளகம்.

குடியானகவுண்டர் - கொங்குவேளாளர்.

குடியானவர் - பள்ளிகள், குடிசனம், குடிசநங்கள்.

குடியானவன் - பயிரிடுவோன், சூத்திரக்குடி.

குடியான் - குடியானவன்.

குடியியல்பு - குடிமுறை.

குடியிருக்கை - குடியாகத்தங்கியிருக்கை, கிராமத்தில் குடிகள் வாழும் இடம்.

குடியிருத்தல் - குடியாயிருத்தல், குடிவைத்தல், வசித்தல், குடக்கூலிக்கிருத்தல்.

குடியிருத்துதல் - குடிவைத்தல்.

குடியிருப்பு - குடிநிலம், குறிச்சி, குடியிருக்கை, வாழ்வு, கிராமம், சில இனத்தார்கள் தனியாக வாழ்ந்துவரும் இடம், குடியிருத்தல்.

குடியிருப்புநத்தம் - கிராம வாசிகள் வாழும் இடம்.

குடியிலார் - குடிகள்.

குடியிறங்கல் } மறுதேசத்திற் சன
குடியிறங்குதல் } ங்கள் வந்து குடியேறுதல், நிலைக்குடியாகத் தங்குதல்:

குடியிறை - குடிவீதம் வைத்தவரி, இறுப்பு, கடன், கரம், கறை, வரி. பகைவரிடு மிறையின் பெயர்- கர்ப்பம், குறை, திறை, பாருடம், குடிகள் செலுத்தும் வரி, அரசனுக்குக் குடிகள் கொடுக்கும் வரி.

குடியுடம்படிக்கை - பட்டா, குத்தகைச்சீட்டு.

குடியுத்தடியும் - வீடும் நிலமும்.

குடியெழுப்புதல் - குடிகூலித்தல்.

குடியெழும்புதல் - இருந்தவீட்டை விட்டுப் போகுதல், கலகம் முதலிய நிகழ்ச்சிகளால் குடி நீங்கிப் போய்விடுதல்.

குடியேறல் } சனங்கள் குடியாய்
குடியேறுதல் } வந்து சேர்ந்திருத்தல், தம் நாடுவிட்டு வேற்று நாடு

சென்று வசித்தல், நிலத்து விடுதல்.

குடியேற்றநாடு - சனங்கள் புதிதாகக் குடியேறிய தேசம்.

குடியேற்றம் - ஓரூர், குடியேறுந்தன்மை, புதிதாக ஒரு நாட்டிற் குடியேறுகை, குடியேறுதல், ஏற்றிடுகுடி.

குடியேற்றல் } குடியிருக்கச் செய்
குடியேற்றுதல் } தல், குடியேறச் செய்தல்.

குடியோட்டி - குடியோட்டுப்பூண்டு.

குடியோட்டிப்பூண்டு - குருக்கு.

குடியோட்டுப்பூண்டு - பூடுவகை.

குடிரம் - காரை, குடிசை.

குடிலகதி - வளைந்துபோதல்.

குடிலச்சி - கருவண்டு, இந்திரபாஷாணம்.

குடிலப்பாட்டு - இசை.

குடிலம் - ஆகாயம், குராமரம், சடை, வஞ்சகம், வட்டம், வளைவு, ஆகாசம், மோசம், பிரணவம், உள்வாங்கிப்பாடும் இசைத்தொழில், நாகபாஷாணம், ஈயமணல், வெள்ளீயம், ஒருவகை நாகம், நாகபாஷாணம், வங்கமணல், கொடுமை, மாயை.

குடிலை - பிரணவம், சுத்தமாயை, மாயை.

குடிலைப்பொருள் - பிரணவத்தினுட் பொருள்.

குடில் - ஆகாயம், சிற்றில், ஆகாசம், உடம்பு, மழைகாற்று முதலியன படாதிருக்கும் குடிசை, குச்சு.

குடிவரல் } குடிபுகுதல்.
குடிவருதல் }

குடிவாங்கல் } குடியெழும்பிப்போ
குடிவாங்குதல் } தல், இருப்பிடம் விட்டுப் பெயர்தல்.

குடிவாதல் - குடிவருதல், குடியேறுதல்.

குடிவாரநிலம் - குடிகட்குப் பயிரிடும் பாத்தியதையுள்ள நிலம்.

குடிவாரம் - நிலத்தை உழுது பயிரிடுவதற்குக் குடிகளுக்குரிய உரிமை, குடிவாரத்தில் குடியானவன் பங்குக்குரிய மாசூல்.

குடிவாழ்க்கை - இல்வாழ்க்கை, மருத நிலத்தூர், குடும்பநிருவாகம், வாழ்வின் ஒழுங்கு.

குடிவிளங்குதல் - குலம் முதலியன செழிக்கை, சந்ததி விருத்தியாகுகை.

குடிவெறி - மதுபானவஸ்து, மதுபானமயக்கம், குடித்ததால்வந்த மயக்கம்.

குடிவைத்தல் - குடியிருத்தல், வாழ்வித்தல், வீட்டைக் குடிக்கூலிக்கு விடுதல், குடியை நிலைபெறச்செய்தல், குடியிருக்கச் செய்தல்.

குடீசகம் - கழுதை, ஒருவகைச் சந்நியாசம்.

குடீசகன் - ஒருபதி, துன்மார்க்கன், ஒருவகைச் சந்நியாசி.

குடீரகம் - குடீரம், குடிசை, பன்னசாலை, பர்ணசாலை.

குடீரம் - குடிசை, பர்ணசாலை, குடில், குடீரகம், ஆச்சிரமம்.

குடு - கள்.

குடுகு - குடுக்கை.

குடுகுடா } கஞ்சாக்குடுக்கை, உக்
குடுகுடி } கா, குடாக்கு.

குடுகுடு - ஓலிக்குறிப்பு, குலுகுலு.

குடுகுடுகிழவன் - கூனற்கிழவன், தளர்ந்த வயதோன், தடுமாறி நடக்கும் கிழவன்.

குடுகுடுக்கை - காய்ந்தொலிக்கும் தேங்காய், கொப்பரைத் தேங்காய்.

குடுகுடுத்தல் - துரிதமாயோடித்திரிதல், ஒலித்தல், அவசரப்படுதல்.

குடுகுடுத்தான் - சுறுக்கான், பரபரப்பாயோடித் திரிவோன், அவசரக்காரன்.

குடுகுடுப்பாண்டி - குடுகுடுப்பை அடித்துக்கொண்டு குறிகூறும் பிச்சைக்காரன்.

குடுகுடுப்பு - தூரிதச்செலவு, பர பரப்பு.

குடுதுடுப்பை - அறக்காப்த்து வற்றலா னது, கஞ்சாக்குடுகு, சிற்றுடுககை, மரமணி, குடுகுடு என்று ஒலிகுமு பொருள், குடுகுடுப்பாண்டி, குடு குடு என்று ஆட்டி ஒலிக்கும் சிறிய உடுக்கை, பறகையோட்டும் மரத் தட்டை, எப்பொழுதும் அவசரப் படுபவன், கஞ்சாக குடுக்கை, வறட்சி.

குடுகுடுப்பைக்காரன் - குடுகுடுப் பாண்டி, சிற்றுடுகைகாரன்.

குடுகுடெனல் - விரைவின் குறிப்பு, ஓர் ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு, தூரிதச்செலவு.

குடுக்கம் - தாளம ஐந்தனுள் ஒன்று.

குடுக்கை - கமண்டலம, மீதங்காய் முதலியவறறின் குடுக்கை, இடக் கையென்னும் தோற்கருவி, வீணை யின் உறுப்பு, ஒரு வாத்திபம்.

குடுத்தா - குடுத்துணி.

குடுத்துணி - அரைக்கைச்சட்டை.

குடுப்பம் - நான்கு பலம்.

குடுப்புக்கார் - கார்நெல்வகை.

குடுமி - ஆண்மயிர், உச்சி, கதவிற் குடுமி, சிகை, நுதி, பாம்புபிடிப் பவன், மயிர் முடி, மலையுச்சி, வில்லு, வெற்றி, வில், சிகரம், சிமி, சிமிலி, முடி, சுழி, யாணி, முடிவு, மேழிக்குடுமி, ஆண்மக்களதுமயிர், மாடத்தின் உச்சி, உச்சிக்கொண் டை, நுனி, கிரீடம், கதவின்குடுமி, முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியன், முடிபு, பாம் பாட்டி, தலையுச்சி.

குடுமிகளைதல் - சௌளச் சடங்கில் தலைமயிர் நீக்குதல்.

குடுமிகொள்தல் - வெல்லுதல், குடுமி கொள்ளுதல்.

குடுமிக்கதவு - சுழியாணிக் கதவு.

குடுமிக்கலியாணம் - குடுமி வைக்குஞ் சௌளச் சடங்கு.

குடுமிக்காரன் - குடுமி மயிர் மிகுதியு முள்ளவன்.

குடுமிக்குயவன் - குயவர் தலைவன்.

குடுமிக்கூந்தல் - உச்சிக் கூந்தல்.

குடுமிதட்டு - சானிய அளவிற் றலை வழி.

குடுமிதட்டுதல் - சானிய அளவிற் றலைவழித்தல், சண்டைக்குச் சித்த மாதல்.

குடுமித்து - முடிப்பை யுடைத்து.

குடுமிப்பருந்து } ஒரு பருந்து, உச்
குடுமியன் } சிச் சூட்டுடைய ஒருவகைப் பருந்து.

குடுமியைப்பிடித்தல்-சண்டையிடுதல்

குடுமியைமுடிந்துவிடுதல் - சண்டை மூட்டுதல்.

குடுமிவாங்குதல் - பிரார்த்தனையாக சிகையை எடுத்தல், அவமதித்தல்.

குடுமிவைத்தல் - வேதத்திற்குரிய வருணத்தாரின் பிள்ளைகட்குச் செய்யுமோர் சடங்கு, சௌளச் சடங்கு செய்தல்.

குடும்பக்கோடாலி - குடிகளை யழிவு பண்ணுகிறவன்.

குடும்பத்தானம் - களத்திரத்தானம், களத்திரத்தானம், இலக்கினத் திற்கு இரண்டாந்தானம்.

குடும்பத்தியாச்சியம் - இல்லறத்தை முற்றும் துறக்குந் துறவு.

குடும்பபாரம்-குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு.

குடும்பப்பிரதிட்டை - குடிவைத்தல்.

குடும்பப்பிரதிஷ்டை - நிலையழிந்த குடும்பத்தைத் தாபிக்கை.

குடும்பம் - உறவு, ஒரு குடியிலுள் ளார், மனைவி, வீடு, சமுசாரம், உறவினர், குலம், ஒரு குடிசையி லுள்ளோர், உறவின்முறையார், குடி, இனத்தார்.

குடும்பன் - பள்ளரிற் றலைவன், குடும் பத் தலைவன், பள்ளர் தலைவன்.

குடும்பாண்டி-பிச்சையெடுத்துச் சீவி ப்பவன்.

குடும்பி - சமூசாரி, பள்ளிகளிற் றலைவி, குறும்பி, குடும்பஸ்தன், குடும்பத்தலைவன், குடும்பன்.

குடும்பினி - மனைவி, குடும்பிநி, குடும்பஸ்தி.

குடும்பு - சுற்றம், காய் முதலியவற்றின் கொத்து, காய்க்குலை, கொத்து, பூங்கொத்து.

குடுவம் - நிகுஞ்சம் நாலு கூடியது.

குடுவை - கமண்டலம், குண்டான், சிறு பானை, வாய்க்குறுகிய குண்டுப் பாத்திரம், கள்ளிறக்கும் சிறு கலசம், ஒருவகைச்சீட்டாட்டம், கலசம், குண்டம்.

குடுவையாறு - ஒரு நதி.

குடோரம் - அக்கினி, துளசி.

குடோரஜம் - வெண்டுளசி.

குடை - இராச சின்னத்தொன்று, உடைவேல், உட்டுளைப் பொருள், கவிகை, குடையென்னேவல், குமரனுடல், மிதியடி முதலியவற்றின் சுமிழ், அரசாட்சி, குடைக்கூத்து, பாதக் குறட்டின் சுமிழ், நீர் முதலியன வுண்ணும் ஓலைப்பட்டை, கவிப்பு, குடைவேல், உள்ளிடம் குடைவுபட்ட பொருள், பனையோலையாற் செய்யப்படு மொரு வகை யுண்கலம், வேல், குமரனுடிய கூத்து, ஆதபத்திரம், சத்தி, சக்கிரம், தொங்கல், பிச்சம். செங்குடை- சிங்காரம். வெண்குடை- சுசி, சுமிழ். கடை, தூளை, வதை, அரி, மனதை வருத்து, தூருவு, உட்புகு, உளவுநோவெடு, வேல மரம், சூளி, நோவுபடு.

குடைகரி - பஞ்சலோகங்களை யுருக்கும்படி குடையப்பட்ட கரி, பொன்னுருக்கும் கரிக்குகை.

குடைகவித்தல் - குடை நிழற்றல்.

குடைகவிழ்தல்-வண்டி குடங் கவிழ்தல்.

குடைக்கல் - கல்லறையின் மூடு கல்.

குடைக்காம்பு - குடையின் கைப்பிடி, தண்டம்.

குடைக்காரன் - குடை பிடிப்போன்.

குடைக்காளான் - ஒரு காளான், நாய்க்குடை.

குடைக்கிழங்கு - சிற்றரத்தை, சிற்றரத்தைச் செடி.

குடைக்கூத்து - குமரனுடல், புறநாடகம் பதினென்றனுள் ஒன்று.

குடைக்கொள்ளுதல் - குடைகோலெழும்புதல், குமிழி கொள்ளுதல், குடைக்கொள்தல், மேலெழுதல், குடஞ்சாய்தல்.

குடைச்சல் - குடைவு, வருத்தம், வாயுவால் உண்டாகும் குடைச்சல் நோவு, குடைதல், நோவு.

குடைச்சூல் - சிலம்பு, உள்ளிடம் குடைவுபடுகை.

குடைச்செலவு - ஒரு தினைத்துறை.

குடைச்செவி - உள்வளைந்த செவி, கோபம் முதலிய காரணங்களால் வேலைவுபட்ட விலங்குகளின் செவி.

குடைச்செவிக்கொள்ளல், குடைச்செவியிடுதல், குடைச்செவியெடுத்தல் } மிகுங் கோபத்தினாலே செவியை நிமிர்த்தல்.

குடைதல் - அரித்தல், கடைதல், கலித்தல், தூளைத்தல், தோண்டல், நீராடுதல், நோவு படுத்தல், மனதை வருத்தல், கிண்டுதல், மிக வருத்துதல், வேண்டாதவற்றில் தலையிடுதல், தூருவுதல், நீரில் மூழ்குதல், உட்புகுதல், உளவு நோவெடுத்தல், ஞெலித்தல், குளித்தல்.

குடைநாட்கோள் - ஓர் உழிஞைத் தினைத்துறை.

குடைநிலை - ஓர்வஞ்சித் தினைத் துறை.

குடைநிழற்றல் - உலகத்தைப் பாதுகாத்தல், குடையாணிழல் செய்தல்.

குடைந்தாடுதல் - அமிழ்ந்து நீராடுதல்.

குடைப்பனை - தாலபத்திரப் பனை, தாளிப்பனை.

குடைப்புல் - ஒருவகைப் புல், மயிற் கொண்டைப்புல்.

குடைமங்கலம் - ஓர்பாடாண்டிணைத் துறை.

குடைமிளகாய் - காப்பிரி மிளகாய்.

குடைமுல்லை - ஓர் வாகைத் திணைத் துறை.

குடையடித்தல் - குடங்கவிழ்.

குடையல் - குடைதல்.

குடையன்பருவதம் - பித்தளை.

குடையாணி - குடைபோல் தலையுள்ள ஆணி, தலையிடம் உருண்டையான ஆணி, கோயிற் குடையிற் செருகும் ஆணி.

குடையோலை - இழிந்த சாதியார் உண்டற்குரிய கலமான ஓலைப் பட்டை.

குடைவண்டு - ஒரு வண்டு, தூளைக் கும் வண்டு வகை.

குடைவிருத்தி - திருவிழாக் காலங்களில் சுவாமிக்குக குடை பிடிப்பதற்காக ஏற்பட்ட மானியம்.

குடைவு - குகை, குவிதல், வளைவு, பொத்து, குடைதல்.

குடைவேல் - ஒருவகை மரம், உடை, நீருண்டமரம், உடைமரம்.

குடோரம - கடூரம்.

குடோரி - கீறி மருந்து பதித்தல், கீறுதல், குடாசகம், சுதைமண், வங்கமணல், வெண்காரம், வெள்ளோப் பாஷாணம், கீறுகை, வெங்காரம், கீற்று, மருந்துக்குடோரி.

குடோரிபண்ணல்
குடோரியாடல்
குடோரியிடுதல்
} சன்னிக்கு விஷத்துக்குக் குடோரி வைத்தல்.

குடோரியாடுதல் - குடோரி வை.

குடோரிவைத்தல் - கீறி மருந்து வைத்தல், மண்டையைக் கீறி மருந்து பதித்தல்.

குட்சி - வயிறு, உருட்டியாடுங் கருவியில் விழும் ஒற்றைத்தாயம்.

குட்டக்கரப்பன் - ஒரு கரப்பன், படர்நோய்வகை.

குட்டக்குறடு - சிறு குறடு.

குட்டகம் - அரைத்தல், இடித்தல், பிரித்தல், வெட்டல்.

குட்டநாசனம் - வெண்கடுகு, குட்டநாசகம்.

குட்டநாடு - ஒருகொடுந் தமிழ்நாடு.

குட்டநி - மலை.

குட்டமிடல் - தோண்டியெடுத்தல்.

குட்டமிடுதல் - பள்ளந் தோண்டுதல்.

குட்டம் } ஆழம், குட்டநோய்,
குஷ்டம் } குளம், கொடுந்தமிழ் நாட்டில் ஒன்று, கோஷ்டம், குரங்குக்குட்டி, குறைந்த சீருள்ள அடி, தரவு, பள்ளம், கோட்டம், தொழுநோய், பரப்புள்ள இடம், குட்டநாடு, மடு, திரள், சபை, சிறுமை.

குட்டரி - மலை.

குட்டல் - அபகரித்தல், குட்டுதல், தகர்த்தல்.

குட்டனம் - தட்டல்.

குட்டனி - வேசிகளும் விடனுக்குங் கூட்டுறவு பண்ணுவோன்.

குட்டன் - ஆட்டுக்குட்டி, குட்டரோகி, குழந்தை, சிறுபிள்ளை, மகன்.

குட்டாரம் - கம்பளம், பர்வதம், பருவதம்.

குட்டாரி - கந்தகம்.

குட்டான் - சிறு ஓலைப்பெட்டி.

குட்டான்கட்டுதல் - பறவை முதலியன கொத்தாதபடி காய்களின் மீது முடி கட்டுதல்.

குட்டி - ஆடு கழுதை கீரி குதிரை நரி நாய் பன்றி பாம்பு புலி பூனை மான் முதலை முயல் யானை இவற்றின் குட்டி, ஆகாயம், குரங்கு முதல் மரக்கோட்டின் வாழ்விலங்கின பிள்ளை, குழந்தை,

சிறு பெண், வாழைக் கன்று, விலங்கின் பிள்ளைப் பொது, சிறுமை, கடைசி மகன், கடைசி மகள், கோவ்டம், பல்லாங்குழி முதலிய விளையாட்டில் அதிகமாகக் கூடுங் காய், காக்கைப்பலா, கடிச்சை, சிறு பெண்பிள்ளை, சிறியது.

குட்டிக்கரணம் - தலைகீழாக மறிந்து விழும் ஒரு வித்தை, பெருமுயற்சி.

குட்டிக்கலகம் - சிறு கலகம், கோட் சொல்லால் விளையுங் கலகம்.

குட்டிக்காய் - அடித்திருக்குஞ் சிறு காய், கண்பிடிக்காய்.

குட்டிக்கிழங்கு - ஒரு கிழங்கின் பக்கத்தில் அதனை யொட்டி யுண்டாகும் கிழங்கு.

குட்டிக்கும்பிடுதல் - தலையிற் குட்டிக்கொண்டு விநாயகரை வணங்குதல்.

குட்டிக்கொக்கான் - கொக்காளி லோர் வகை, சிறு கற்களைக் கொண்டு ஆடும் விளையாட்டுவகை.

குட்டிச்சாத்தன் - குறளித் தேவதை.

குட்டிச்சாத்தான் - ஒரு பேய்.

குட்டிச்சாத்திக்காரன் - பேயோட்டும் மந்திரவாதி.

குட்டிச்சுவராய்ப் போதல் - கெட்டுப் போதல்.

குட்டிச்சுவர் - சிறு சுவர், மடையன், இடிந்த சிறு சுவர், பாழ்மனை, பழுது.

குட்டித்தக்காளி - சிறு தக்காளி, ஒரு பூடு, மணித்தக்காளி.

குட்டித்தாய்ச்சி - குட்டி யுண்டாயிருக்கும் விலங்கின் பெண், சினையான விலங்கு.

குட்டித்திருவாசகம் - மூன்று அந்தாதிகள்.

குட்டித்தொல்காப்பியம் - ஓர் இலக்கண விளக்கம்.

குட்டிபடல் - சினைப்படுகை, விளையாட்டில் தவறியடிக்கை.

குட்டிபடுதல் - ஆடு முதலிய சினை கொள்ளல், ஆடு முதலியன சூல் கொள்ளல்.

குட்டிபோடல் } ஒன்றுகூடப் போ
குட்டிபோடுதல் } டல், குட்டியீனுதல், விலங்கு குட்டியீனுதல், விளையாட்டில் அதிகப் பந்தயம் இறுத்தல்.

குட்டிப்பலா - ஒரு செடி, பிராய் மரம்.

குட்டிப்பல் - பல்லோடடுத்து முளைக்கும் பல், ஒட்டி முளைக்கும் சிறு பல்.

குட்டிப்பாடம் - பொருளுணராது பாராமல் ஒப்பிக்கும்படி பண்ணும் கெட்டுரு.

குட்டிப்பாடவம் - ஒரு கொடி.

குட்டிப்பிடவம் - ஒருவகை மரம்.

குட்டிப்பை - சிறு பை.

குட்டிமணியம் - உதவி மணியக்காரன்.

குட்டிமம் - கற்படுத்த இடம், கற்பாவின தரை, இரத்திரிகம் விளையுமிடம், திண்ணை.

குட்டியடித்தல் - குட்டி வை.

குட்டியப்பன் - சிறிய தகப்பன், சித்தப்பன்.

குட்டியம் - சுவர்.

குட்டியழித்தல் - சோரக் கருவை மருந்திட்டுக் கரைத்தல்.

குட்டியாண்டவன் - பட்டினவர் வழங்குந் தெய்வம்.

குட்டியாத்தாள் - சிறிய தாய்.

குட்டியிடுக்கி - கோடைக்கிழங்கு, கோட்டம், சிற்றாத்தை, பயிருடன் முளைக்கு மோர் புல், கோவ்டம்.

குட்டியிடுதல் - பாம்பு முதலிய குட்டியீனுதல், விலங்கு முதலியன கருவுயிர்த்தல்.

குட்டிவிரல்-விரலோடடுத்து முளைக்குஞ் சிறு விரல்.

குட்டிவிளா - ஒரு விளாமரம், விளா, நாய்விளா, ஒரு செடி.

குட்டிவைத்தல் - கொக்கானிலோர் செய்கை, விளையாட்டில் தவறுன காயை அடித்தல், சூதிற் பந்தய மிழத்தல்.

குட்டினம் - கருஞ்சீரகம்.

குட்டினி-சங்கம் வாங்குபவள், வசவி, கற்பழிந்தவள், கூட்டிக்கொடுப் பவள்.

குட்டீரம் - பர்வதம், பருவதம்.

குட்டு - குட்டுதல், குட்டென்னே வல், மானம், கைமுட்டியால் தலை யில் இடிக்கை, இரகசியம், குஷ் டம், கோஷ்டம், குட்டரோகம், கோட்டம், தலையில் குட்டு, தலை யிற் குட்டு.

குட்டுணி - குட்டுப்படுகிறவன், சுணை கெட்டவன், பிறரால் குட்டுண்ப வள்.

குட்டுண்ணல் - குட்டுப்படல்.

குட்டுதல் - அணுப்புதல், தலையிலே சொட்டுதல், தகர்த்தல், புடைத் தல்.

குட்டுப்படுதல் - அடிக்கடி இடருறு கல்.

குட்டுப்பட்டவன் - ஒரு தொழிலில் இடர்ப்பட்டு அனுபவம் பெற்ற வன்.

குட்டுமம்
குட்டுமலம் } பூவரும்பு.

குட்டுவர் - குட்டநாட்டார்.

குட்டுவன் - சேரன், குட்ட நாட்டி லுள்ளவன்.

குட்டுவன்சேரல் - செங்குட்டுவன் மகன்.

குட்டேறு - சிறிய காளை, எருச்சின் திமில், இமில்.

குட்டை - ஒரு வியாதி, கடையா யிருப்பது, குள்ளம், கைத்துண்டு, சிறு குளம், தொழுமரம், குறுகிய உருவம், குட்டேறு, சிறு துணி, குட்டை மரம், குறுணி, வெள் ளாக் குவட்டம்.

குட்டைச்சி - குள்ளமானவள்.

குட்டைப்புடல் - கொம்புப் புடல்.

குட்டைமரம் - தொழுமரம்.

குட்டையன் - கட்டையன், குட்டை நோயுள்ளோன், குள்ளன்.

குட்டையாடு - பள்ளையாடு.

குட்டையிலடித்தல் - தொழுமரத்திற் கட்டியடித்தல்.

குணகண்டி - சிவதை.

குணகம் - பெருக்குந் தொகை, பெருக்குமெண்.

குணகர் - கணக்கர்.

குணகல் - வளைதல்.

குணகாங்கி - குணகாங்கியம்.

குணகாங்கியம் - ஒரு ஆரிய நூல், பழையதொரு கன்னடயாப்பு நூல்.

குணகாரம் - பெருக்குக் கணக்கு, பெருக்கல், குணனம்.

குணகி - குணமுள்ளவன்.

குணகு - குணகென்னேவல், பிசா சம், குணங்கு, பூதபிசாசம், குணங் கர், வளை, சோரு, மனந்தளரு.

குணகுணி - குணமுங் குணமுடைய பொருளுமம்.

குணகுணிபாவம்-பண்பும் பண்பியும் போலப் பிரியாமலிருக்கும் நிலை.

குணகுதல் - சோம்புதல், தளருதல், வளைதல், சோர்தல், மனந்தளர்தல், மனந்தடுமாறல்.

குணகோளார்த்தம் - பூமியின் கிழக் குப் பாதிக் கோளம், பூருவ கோளார்த்தம்.

குணக்கல் - வளைத்தல்.

குணக்காய்ப் பேசுதல் - விதண்டா வாதஞ் செய்தல்.

குணக்கிராகி-நற்குணத்தையேகொள் பவன்.

குணக்கு - எதிரிடை, கிழக்கு, கோ ணல், வியாதி சிக்கலாய்முற் றுகை, மாறுபாடு, வளை.

குணக்குதல்-பின்னிற்றல்,வளைத்தல்.

குணக்குறைவிசேடம் - குணக்குறை யிலுல் மேன்மைதோன்றநிற்பது, விசேட அணிவகையிலொன்று.

குணக்குன்று - கடவுள், பெருங் குணம், குணமுள்ளவன், நற்குணம் மிக்கவன்.

குணக்கெடுத்தல் - குணத்தைக் கெடுத்தல், வேலைவெடுத்தல்.

குணக்கேடன் - நற்குணமற்றவன்.

குணக்கேடு - குணமின்மை, கெட்ட குணம், நோய் அசாத்தியமாக மாறும் நிலை.

குணக்ஞன் - சற்குணமுள்ளவன்.

குணங்கர் - பிசாசம், பூதபிசாசம்.

குணங்கல் - சுணங்கல், வளைதல், குணங்குதல்.

குணங்காட்டுதல் - இயற்கைக் குணத்தை வெளிப்படுத்துதல், வியாதியில் சொஸ்தக்குறி காட்டுதல்.

குணங்கு - குணங்கென்னேவல், பிசாசம், பூதபிசாசம், குணகு, வேள, சோர், மனந்தளர்.

குணங்குதல் - வளைதல், குணகு.

குணங்குறி - அடையாளமுஞ் சுபாவமும், தன்மையும் வடிவும்.

குணசாகரர் - யாப்பருங்கலக்காரிகையின் உரையாசிரியர்.

குணசாலி - நற்குணமுள்ளவன்.

குணசீலன் - நற்குண நற்செயலுடையவன்.

குணசுபாவம் - சுபாவகுணம், குணப் பிரகிருதி.

குணசைவம் - ஒரு சைவம்.

குணஞ்ஞன் - பிறர்குணங்களே அறிந்து மகிழ்பவன், இனிய குண முள்ளவன், குணவான்.

குணட்டல் - குணட்டுதல், செல்ல மாய்ப்பேசுதல், துள்ளிவிளையாடுதல், பயக்கிப் பேசல்.

குணட்டு - கதிரின் குலை, கதிர் முதலியவற்றின் சிறுகொத்து, மயக்கிப்பேசு, செல்லங் கொஞ்சு, துள்ளிவிளையாடு.

குணட்டுதல் - செல்லங் கொஞ்சுதல், துள்ளி விளையாடுதல், மயக்கிப் பேசுதல், பகட்டுப் பண்ணுதல்.

குணஷ்டை - குணதோஷம், தொந்தரை.

குணதத்துவம் - இருபத்துநான்காம் தத்துவம்.

குணதரன்-நற்குணமுள்ளவன், முனிவன், முநிவன், அருகன்.

குணதிசை - கிழக்கு, கிழக்குத்திசை.

குணதோஷம் - நன்மை தீமைகள்.

குணத்தன்மை - குணங்களின் பல விதமான தன்மை.

குணத்தன்மையலங்காரம் - ஓர் அலங்காரம்.

குணத்தாலேணையும் பெயர் - அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி குடி சாதி சிறப்பு முதலியவற்றால் வரும் பெயர், குணத்தால் வரும் பெயர்.

குணத்திரயம் - முக்குணம். அஃது இராசதம், சாத்துவிகம், தாமதம்.

குணத்துக்குவாதல் - குணத்துக்கு வருதல், சீர்ப்படுதல், நோயினின்று சுகப்படுதல், இணங்குதல்.

குணத்தொகை - பண்புத்தொகை.

குணத்தொனி - நாணின் சத்தம்.

குணநாற்பது - நாற்பது பாடலாகிய இறந்துபட்ட ஒரு பழைய நூல்.

குணநிதி-கடவுள், குணமுள்ளோன், நற்குணம் நிறைந்தவன்.

குணநீயம் - பெருக்கப்படும் எண்.

குணநூல் - ஓர் நாடகத் தமிழ்நூல்.

குணபத்திரன் - அருகன், கடவுள், நிகண்டு செய்த மண்டலவனின் குரு, ஒரு சமணத்தலைவர்.

குணபம் - பிசாசம், பிணம், சுடுகாட்டிலுள்ள பிசாசு.

குணபலம் - அதிவிடயம், அதிவிடையம்.

குணபவுணர் - இராக்கதர்.

குணபாகம் - அனுகூலமானநிலை, ஏற்றபக்குவம்.

குணபாகி
குணபாசி } பிசாசம், பேய்.

குணபாடல் - குணவாகடம்.

குணபிரதி - குணம்.

குணபேதம் - ஆங்காரம், குணமாறுதல், குணம்கேடுறுகை, வியாதி அசாத்தியமாகமாறும் நிலை.

குணப்படல் } சுகமடைதல், நற்
குணப்படுதல் } குணமடைதல், சீர்ப்படுதல், வியாதியினின்றுசுகமடைதல், செழிப்படைதல், கழிவிரக்கங் கொள்ளுதல்.

குணப்படுத்தல் - சீர்திருத்தல், மனந்திரும்பச் செய்யல்.

குணப்படுத்துதல் - சீர்ப்படுத்துதல், வியாதியை சௌக்கியப்படுத்துதல்.

குணப்பண்பு - குணத்தாலாய பண்பு, தன்மை குறிக்கும் பண்புச்சொல்.

குணப்பிழை-தீற்குணம், குணக்கேடு

குணப்பெயர் - பண்புப் பெயர், பண்பு குறிக்கும் பெயர்ச்சொல், பண்பினடியாகப் பிறந்த பெயர்ச்சொல், சிறப்பியல்புபற்றி மக்கட்குப் புலவரால் கொடுக்கப்பட்டு வழங்கும் பெயர்.

குணமணி - நற்குணமுள்ளவன்.

குணமாக்குதல் - சொஸ்தப்படுத்துதல், சீர்திருத்துதல்.

குணமாதல் - சீர்ப்படுதல், சுகமாதல், சௌக்கியமாதல்.

குணமுள்ளவன் - நற்குணம் உடையவன்.

குணம் - இயல், இயல்பு, உரிமை, உழுவல், ஊழ்,கிழமை, கொள்கை, கோள், சால்பு, சீலம், தகவு, தகுதி, தகை, தகைமை, திறன், நிலை, நிறம், நீர், நீர்மை, நுனித்தல், படி, பண்பு, பரிசு, பாடு, பால், பான்மை,பிரகிருதி, பெற்றி, மரபு, மாலை, முறை, வண்ணம், விதி. இவற்றுட்டீய குணத்தின் பெயர் - காளம், கராளி. இராசத முதலிய குணம், இலட்சணம், கயிறு, குடம், சத்து, சுகம், சீர்மை, தத்துவம், தன்மை, நாணி,மேன்மை, பொருளின் தன்மை, ஒழுக்கத் தன்மை, காப்பியத்தைச்சிறப்பிக்கும் செறிவு தெளிவு முதலிய தன்மை, அனுகூலம், சொஸ்தம், புத்தித்தெளிவு, வில்லின் நாண், திரவியத்தன்மை, நற்குணம், நூல், ஒருபூச்சி, முறைமை, வின்ஞாணி, வின்ஞாண், சொஸ்தபுத்தி, வியாதியின்குறி, உடற்குணம். அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, இவற்றுள் முன்னைய நான்கும் ஆடூஉக்குணம், பின்னைய நான்கும் மகடூஉக் குணமென்றறிக.

குணயிதர் - மாநதத்துவத்திலிருக்குமோர் புவநபதி.

குணருத்திரர் - குணதத்துவ நிலையராய் அவந்தர சங்காரத்தொழிலைச் செய்யும் உருத்திரர்.

குணவி - சீந்தில், சீந்திற்கொடி.

குணவிங்கம் - அடை.

குணலை - ஒருகூத்து, வீராவேசத்தாற் கொக்கரித்தல், நாணத்தால் உடல் வியர்கை.

குணலையிடுதல் - கைதட்டிக்கூவுதல், கொக்கரித்தல், இரைந்து கூத்தாடுதல்.

குணவதம் - குணவிரதம், நற்குணம்.

குணவதன் - நற்குணமுடையவன், குணவிரதத்தை அனுட்டிப்பவன், குணவந்தன்.

குணவதி - நற்குணமுள்ளவள்.

குணவதிசயம் - அதிசயவணிவகையிலொன்று.

குணவந்தன் - குணமுள்ளவன், குணவான்.

குணவவதுதி - ஓரலங்காரம்.

குணவாகடம் - குணங்களறிவிக்கும் வைத்திய சாஸ்திரம்.

குணவாகுபெயர் - பண்புப் பெயரைப் பண்பிக்குரைத்தல்.

குணவாக்கு - விசேஷமா யமைந்த குணம், சொந்தப்பழக்கம்.

குணவாயில் - திருக்குணவாயி லெ ன்னுமோரூர்.

குணவான் - நற்குணன்.

குணவிசேடம் - குணமேன்மை.

குணவியது - மேன்மையானது.

குணவிரதம் - மகாவிரதத்திற்கு அடுத்தபடியாகக்கொள்ளும் ஒருசைன நோன்பு.

குணவிலக்கு - ஓரலங்காரம். அது குணத்தை மறுத்துச்சொல்வது.

குணவீரபண்டிதன் - தமிழிலே நிகண்டு செய்த ஒரு சமணவித்துவான்.

குணவீனம் - குணக்கேடு.

குணவுவமம் - பண்புவமம்.

குணனம் - கணக்குப்பெருக்கல், விவரம், குணநம், குணகாரம்.

குணனீயம் - பெருக்கப்படுந்தொகை, குணநீயம்.

குணன் - சற்குணன், குணமுள்ளவன், குணம்,நற்குணமுடையவன்.

குணகுணம் - சாதகியாசாத்தியம, குணமுங் குணவீனமும்,நன்மையுந் தீமையும், குணமுங் குணமின்மையும்.

குணக்காரனியாயம்-குணட்சர நியாயம், சகஸ்ரநியாயங்களுளொன்று.

குணட்டம் - ஒருவகைவரிக்கூத்து.

குணட்டன் - உருத்திரன் சாபத்தாலே பூலோகத்தில் உற்பத்தியான மால்யவந்தன்.

குணதிசயம - குணவிசேடம.

குணதீதம் - குணங்கடந்தது.

குணதீதன்-கடவுள், சீவன் முத்தன்.

குணது - கிழக்கிலுள்ளது, குணக்குள்ளது.

குணத்மகம் - குணவடிவு.

குணந்தரம் - வேறுகுணம்.

குணம்பி - கோமாளி.

குணும்பு - கோமாளம், பகடி, பகடி பேசு.

குணும்புதல் - களினம் பண்ணுதல், பகிடிபேசல், பகடி பேசுதல்.

குணர்க்தகோளம் - கிழக்குப் பாதியுண்டை.

குணலங்கிருதன் - நற்குணமே அலங்காரமாக வுடையவன்.

குணலம் - ஒருதேசம், ஓர்புள், ஒரு வகை மகிழ்ச்சிக்கூத்து, வீராவேசத்தாற் கொக்கரிக்கை, ஒரு பறவை.

குணலயன் - கடவுள், குணங்களுக்கு இருப்பிடமானவன்.

குணலை - குணலைக்கூத்து, குணலை, வீராவேசத்தாற் கொக்கரித்தல்.

குணவணுகி - குணத்திலுயர்வு தோன்றக்கூறு மலங்காரம், குணவணுகி.

குணவான் - நற்குணமிக்கவன்.

குணி - ஊமை, குணியென்னேவல், பண்பி, மூடவன், யுகந்தரன் தந்தை, வில், எண்பெருக்கு, நற்குணமுடையவன், சொத்தைக்கையன், குணத்தையுடையது, சொத்திக்கையன், மூடம், பெருகு, கணி, உத்தேசி.

குணிக்கரித்தல் - கணக்குப் பெருக்குதல்.

குணிக்காரம் - கணக்குப் பெருக்குந்தன்மை.

குணிகம் - பெருக்கிக் கண்டபேறு, மடங்கு, பெருக்கிகண்டபலன்.

குணித்தல் - எண்பெருக்கல், மதித்தல், கணித்தல், ஆலோசித்தல், வரையறுத்தல், பெருக்குதல், கருதுதல்.

குணிப்பானவன் - நன்குமதிக்கற்பாடுடையான்.

குணிப்பு - மதிப்பு, அளவு, ஆராய்ச்சி, நினைப்பு, விசாரம்.

குணிப்பெயர் - குணத்தையுடைய பொருட்பெயர், பண்புப்பெயர்.

குணில் - ஒருவகைப்பறை, கவண், குறுந்தடி, பறையடிக்குந்தடி,

பறையடிகடிப்பு, பறையடிக்குங் குறுந்தடி.

குணிவிருத்தி - ஓர்ஸம்ஸ்கிருத வியாகரணம்.

குணு - புழு.

குணுகல் - சிணுங்குதல்.

குணுகு - கொஞ்சு.

குணுகுணுத்தல் } சிணுங்குதல், மூக்
குணுகுதல் } காற் சத்தம்வரப் பேசல், கொஞ்சுதல்.

குணுகுணுத்தல் - மூக்காற் பேசுதல், முணுமுணுத்தல், குணுகுணுத்துப் பேசல்.

குணுகுணுப்பு - மூக்காலொளியெழப் பேசுதல்.

குணுகுணென - குணுகுணுக்க, ஒலிக்குறிப்பு, முணுமுணென.

குணுகுணெனல் - குணுகுணுத்தல், முணுமுணுத்தற் குறிப்பு, குணுகுதல்.

குணுக்கம் - அணுக்கம், வருத்தம்.

குணுக்கல் - நுணுக்கல், வளைத்தல்.

குணுக்கன் - மூக்காற் சத்தம்வரப் பேசுகிறவன்.

குணுக்கு - குதம்பை, மாதர்காதணியில் ஒன்று, வலையின் முடிந்திருக்கும் ஈயம், வெள்ளி, கடிப்பிணை, பணியாரவகை, வளை, நுணுக்கு, வலையில் தொடுத்திருக்கு மீயக் குண்டு, ஓர் காதணி.

குணுக்குதல்-வளைத்தல், நுணுக்குதல்.

குணுக்குத்தடி - இருப்புப்பூணி ட்ட தண்டு, கனத்தகழி.

குணுங்கர் - குயிலுவர், சண்டாளர், தோற்கருவியாளர், பிசாசர், இழிந்தோர், புலையர், தோல்வினைஞர்.

குணுங்கு - பிசாசம், பேய், கொச்சை நாற்றம், வருந்தி.

குணுங்குதல் - அணுங்குதல், வருந்துதல்.

குணுவண்டு - வண்டுவகை.

குண்டகம் - மண்பறிக்குங் கருவி வகை.

குண்டகன் - தலைவனைப் பிழைத்தின்ற சோரபுத்திரன், சோரபுருஷனுக்குப் பிறந்தவன்.

குண்டகீடன் - சார்வாகன், பிராமணத்தி வியபிசாரமாய்ப் பெற்ற புத்திரன்.

குண்டக்கணிகை - கற்பழிந்த வேசையானவள்.

குண்டக்கமண்டக்கம் - சுருண்டுகிடக்கும் நிலை.

குண்டக்கம் - குடாசகம், கோன், வஞ்சனை.

குண்டக்கிரியம் } ஓரிராகம், ஒரு
குண்டக்கிரியை } பண்.

குண்டக்கிரியா - குண்டக்கிரியை.

குண்டசன் - துரியோதனன் தம்பியருள் ஒருவன்.

குண்டஞ்சு - கரைக்கோடு அமைந்த ஆடவருடுக்கும் ஆடைவகை.

குண்டடிக்க - பங்கியடிக்க.

குண்டடித்தல் - கோலி இரும்புக் குண்டு முதலியவற்றால் விளையாடுதல், பங்கியடித்தல், பரீக்ஷைமுதலியவற்றில் தவறுதல்.

குண்டடியன் - ஆண்சிவிங்கி.

குண்டடுப்பு - ஒருவகைக்குழியடுப்பு.

குண்டணி - குறளைச்சொல், பின்புறணி, குறளை.

குண்டத்தானம் - நாபி.

குண்டநம் - வளைதல்.

குண்டனி - ஒருதேவதை.

குண்டபேதி - துரியோதனன் தம்பியருளொருவன்.

குண்டப்பணிவிடை - கீழ்த்தரமான ஊழியம்.

குண்டம் - ஓமக்கிடங்கு, கிடங்கு, கிணறு, குடுவை, குண்டான், குழி, குளம், குட்டை, பானை, ஓமகுண்டம், வாவி, கற்பழிந்த வேசையானவள், ஓரளவு, குளம் முதலிய நீரூற்று, நீர்நிலை, கற்பழிந்தவள்.

குண்டம்பாய்தல் - பிரார்த்தனையாகத் தீக்குழியில் நடத்தல்.

குண்டரம் - திரட்சியுள்ள அரம்.
குண்டர் - அருகர்.
குண்டலகேசி - பஞ்சகாவியத் தொன்று, ஓரிலக்கியநூல், பிறமதத்தவரை வாதில் வென்று தன்மதத்தை நிலைநாட்டிய ஒரு பவுத்தப் பெண் துறவி.
குண்டலகேசி விருத்தம் - விருத்தயாப்பிலுல் இயன்ற குண்டலகேசி என்னும் நூல்.
குண்டலக்கடுக்கன் - வட்டக்கடுக்கன் வகை, ஒருவகைக்காதணி.
குண்டலதீக்ஷிதர் - சோமயாகம் புரிந்ததற்கு அடையாளமாகக் குண்டலக்கடுக்கன் அணிந்தவேதியர்.
குண்டலப்புழு-குண்டலப்பூச்சி, ஒரு வகைப்புழு.
குண்டலப்பூச்சி - வளைந்து சுருண்டு கொள்ளும் புழுவகை.
குண்டலமண்டலம் - சுருண்டு வளைகை.
குண்டலம் - ஆகாயம், காதணியிலுல்லு, தவத்தோர்காதணி, வட்டம், வானம், ஆடவர் காதணி வகை, சுன்னம், குழை, தோடு, மஞ்சிகை, குண்டலக்கடுக்கன், ஆகாசம்.
குண்டலவுழுவை - நன்னீரிலும் கழியிலும் வாழும் மஞ்சள் நிற முள்ள மீன்வகை.
குண்டலன் - பலராமன், குண்டலந் தரிப்போன், பலபத்திரன்.
குண்டலி - இசங்கு, ஒருவாயு, காளி, சீந்தில், தாளகம், பாம்பு, மயில், மான், மூலாதாரம், நாபித்தானம், குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவிலிருப்பதாகக்கருதும் மூலாதாரம், சங்கஞ்செடி, சுத்தமாயை, நாபித்தானத்திலிருக்கும் நாடி, ஒருநாடி, ஓம், சீந்திற்கொடி, இசங்குச்செடி.
குண்டலிசத்தி - வல்லபசத்தி, குண்டலி, ஒருசத்தி.
குண்டலினி - சுத்தமாயை.
குண்டலினிசத்தி - சுத்தமாயை.
குண்டலினி - மகாமாயை, மூலாதாரத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஒருசத்தி, குண்டலிநி.
குண்டலை - விந்தியவந்தன் பாரி.
குண்டவண்டன் } குண்டலவண்டி
குண்டவண்டியன் } யுள்ளது, குள்ளமாய்த்தடித்தவன்.
குண்டற்கச்சி - தென்னைவகை.
குண்டனம் - வளைதல்.
குண்டனி - குறளை, வசவி.
குண்டன் - அடிமை, குண்டகன், குண்டனி சொல்லோன், துரியோதனன் தம்பி, வளைந்தது, வியபிசாரத்திற் பிறந்த மகன், பருத்து வலுத்தவன், இழிந்தோன், காரியமந்தன்.
குண்டா - குண்டான்சட்டி, அகலமானவாயுள்ளசட்டி, பானை, சட்டி, குண்டான்.
குண்டாக்கன் - தலைவன்.
குண்டாசட்டி - குண்டாஞ்சட்டி, குண்டான்சட்டி.
குண்டாச்சட்டி - குண்டான்சட்டி.
குண்டாணி - குடையாணி.
குண்டாணிக்கொடி - ஒருகொடி, குந்தாணிக்கொடி.
குண்டாந்தடி - பருத்துக் குறுகிய கைத்தடி.
குண்டாமண்டி - குறும்பு.
குண்டாலரோகம் - குழந்தைகளுக்கு உடம்பெங்கும் காணுகிற சிவந்த கட்டிகள், தலையிலுண்டாகும் செவ்வாப்புக்கட்டி.
கேளிக்கை - கிரீடை, மகளிர் நடனம், மகளிர் விளையாட்டு, விநோதாடம்பரம், சதிர்.
கேளிதம் - பெருங்கல்.
கேளிர் - கணவர், சிநேகிதர், சுற்றம், நண்பர், சுற்றத்தார், நட்டார், தோழர், உறவினர், தலைவர்.
கேளிவிலாசம் -விளையாடிப்பொழுது கழித்தல், விளோதம், விநோதம்.
கேள் - அன்பு, உறவு, கேளென்னே வல், சிநேகம், சுற்றம், மதிப்பு, நட்பு, நண்பன், கணவன், இனகதார், செவியாற்கேள், புத்திகேள், விளவு, இர, ஆராய், கொடுக்கச் சொல், கண்டி, விலகேள், உருத்து, சினேகம், செவிகொடு, கீழ்ப்படி, தண்டி, சகி, பொரு.
கேள்ணை - தொட்டிலில் தாங்க விடும் பொம்மை.
கேள்தல் } செவிக்குப் புலனுக்குதல்,
கேட்டல் } பாடங்கேட்டல், விளுதல், விசாரித்தல், வேண்டுதல், கேள்விப்படுதல், உரிமைகாண்டாடிக் கொடுக்கச் சொல்லுதல், தண்டித்தல், நோய் முதலியன நீக்குதல், விலகேட்டல், ஏற்றுக்கொள்ளுதல், பொறுத்தல, தணிதல், கீழ்ப்படிதல், ஒலி எட்டுதல், செவிப்புலனுணர்வைப் பெறுதல், அனுமதிபெறுதல்.
கேள்மை - கேண்மை.
கேள்வன் - தலைவன், நாயகன், தோழன், அன்பன், ஐயன், கணவன.
கேள்வி - கல்வி, இராசத குணத்தொன்று, காது, பாரம்பரியம், பேச்சு, கேட்கை, விளு, நூற் பொருள் முதலிய கேட்கை, சத்தம், வேதம், நூல், கொல், பிரஸ்தாபம், விசாரணை, எலம் முதலியன கேட்கை, இசைச்சுருதி, யாழ், கேள்விப்பயிற்சி, வார்த்தை, கற்கை, கீழ்ப்படிவு, வழக்குக் கேட்கை, கேட்டல், தோணிக் கூலி, கேழ்வி, கேட்கை, எலம்.
கேள்விகேட்பாடு - நியாய விசாரணை.
கேள்விகொடுத்தல் - செவிகொடுத்தல்.
கேள்விகொடுவை - குடுவை.
கேள்விகொள்தல் - கேள்வி கொள்ளுதல், ஐயங்கொண்டு கேட்டல்.
கேள்விக்கடுதாசி - அபேகைப்பத்திரம்.
கேள்விக்காரர் - எலங் கேட்போர், விலை கேட்போர், உத்தியோகத்துக்கு விண்ணப்பஞ் செய்வோர்.
கேள்விக்காரன் - வழக்கில் மன்றடிக் கேட்போன், விலை கேட்பவன்.
கேள்விச்செவியன் - கேட்டதை நம்புவோன், கேள்வியுற்றதையெல்லாம் நம்புவோன்.
கேள்விப்படுதல் - கேள்வியாதல், பிறர் வாய் மூலமாகச் செய்தி தெரிந்து கொள்ளுதல.
கேள்விப்பத்திரம் - மன்றாட்டுக் கடுதாசி, எழுத்து மூலமான விண்ணப்பம்.
கேள்விப்பந்தர் - பலர் கூடி நூல்கள் கேட்டற்குரிய இடனும்படி அமைத்த பந்தர்.
கேளவிமுறை - கேள்வி கேட்பாடு.
கேள்விமூலம் - காதடி, செவி.
கேள்வியாதல் - கேள்வியால் தெரிய வருதல்.
கேள்வியாட்டம் - சீட்டாட்ட வகை.
கேள்விவிரி - அரசன் கட்டளைகளைப் பதியும் புத்தகம்.
கேள்வு - கூலி, தோணிக்கூலி, கேவு, கேழ்வு, கப்பல் கூலி.
கேள்வுத்தோணி-கூலிக்குப் பொருத்தின தோணி.
கேற்று - சிறு நங்கூரம்.
கேனம் - கேளுபகிடதம், பைத்தியம்.

கேனவாயன் - பேதை, மூட்டாள்.
கேனிபாதகம்-ஒடந்தள்ளுந் தடுப்பு.
கேளேபநிடதம் - தசோபநிடதத் தொன்று.
கேனன் - பைத்தியக்காரன்.

கை

கை - இடம், உடனே, ஒப்பனை, ஒழுக்கம், ஒருழுத்து, ஒரு விகுதி, சட்டையின் கை, காம்பு, இரணம், செங்கல் முதலியவற்றை எண்ணும் ஓளவு, அபிநயக்கை, கட்சி, கைமரம், ரயிலின் கைகாட்டி, கைப்பிடி, விசிறிக் காம்பு, படையுறுப்பு, சேனை, செய்யத்தக்கது, கைப்பொருள், ஆற்றல், ஆள், உலகவொழுக்கம், ஒழுங்கு, ஓர் தமிழுபசருக்கம், அரோசிகம், உடன், காந்தட்பூ, கைத்தொழில், கைம்மரம், கையாந்தகரை, சந்திரன், செய்கை, செயல், சேனை, தொங்கி, நரிப்பயற்றங்கொடி, பகுதி, பிடிப்பு, மரவட்டை, முறை, வரிசை, அத்தம், கரம், கைத்தலம், சயம், தோள், பாணி, வழக்கம், தங்கை, கச, வெறு, ஊட்டு, அலங்காரி, பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், மூட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, சூடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதமுகம், மகரமுகம், வலம்புரி, அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுபத்திகம், கயகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம்.
கைஇ - கோலஞ்செய்து.
கைகசி - சுமாலி மகள், வீச்சிரவசுவின் இரண்டாம் பாரி. இவள் ராவணன் கும்பகர்ணன் சூர்ப்பநகையென்னு மூவரையும் பெற்றவள்.
கைகடத்தல் - வசப்படாமல் மீறுதல், கைக்கு எட்டாமற் போதல், நீங்கல், கையை விட்டுப் போதல்.
கைகடன் - ஈடுறுதியில்லாக் கடன்.
கைகட்டிநில்தல் - கைகட்டி நிற்றல், கைகளைக் கட்டிக்கொண்டு வணங்கி நிற்றல்.
கைகட்டுதல் - மரியாதையாகக் கைகட்டி நிற்றல்.
கைகண்ட - அனுபவ சித்தமான.
கைகண்டசாரம் - கைகண்ட பலன், நவசாரம், நவச்சாரம்.
கைகண்டது - சித்தியுள்ளது, தேறினது.
கைகண்டயோகம் - அனுபவ சித்தமான ஔஷதம்.
கைகயன் - கேகய நாட்டரசன், கேகய தேசத்தான், கேகயன்.
கைகரத்தல் - ஒளித்தல்.
கைகல - ஒன்றுய்க்கூடு, யுத்தங்கல.
கைகலத்தல் - ஒன்றுய்க் கூடுதல், யுத்தங் கலத்தல், கூடுதல், நெருங்கிப் பொருதல், ஒன்றுய்க் கலத்தல்.
கைகழிதல் - எல்லே கடத்தல்.
கைகழுவுதல் - குற்றத்துக்கு விலகும் ஒரு குறிப்பு, தீர்த்துத் தள்ளல், கையலம்புதல், விட்டுவிடுதல்.
கைகாட்டி - கைகாட்டி மரம், கணக்க சாதியார்.
கைகாட்டிமரம் - அடையாளங் குறிக்கும் மரம்.
கைகாட்டு-கையிலுலபிநயங் காட்டல், சைகை காட்டல், கைச்சைகை.
கைகாட்டுதல் - அபிநயங் காட்டல், கையாற் குறிப்புக் காட்டல்,

சைகை காட்டுதல், அபிநயம் பிடித்தல், சிறிது கொடுத்தல், நிவேதனஞ் செய்தல், திறமை காட்டுதல், சீவனோபாயங் காட்டுதல், கொடியசைத்து அடையாளங் காட்டுதல், லஞ்சங் கொடுத்தல்.

கைகாணல் - புலப்படக் காணல்.

கைகாணுதல் - அத்தாட்சிப்படுதல், நம்பிக்கையாயறிதல், நிறைவேறுதல், கைகாண்தல், அனுபவத்தில் அறிதல்.

கைகாய்த்துதல் - எளியச் செய்தல்.

கைகாரர் - கைக்காரர்.

கைகாரன் - கைக்காரன்.

கைகாவல் - கையுதவி, சமயத்திற்கு உதவுவது.

கைகாற்பிடிப்பு - வாதநோய்.

கைகீழ் - கையமைச்சல்.

கைகுவி - கும்பிடு.

கைகுவித்தல் - கும்பிடல், கொம்மை கொட்டல், வணங்கல், கைகூப்பு, கொப்பிகொட்டல்.

கைகுளிர - தாராளமாய்.

கைகுளிர்தல் - திருத்தியாதல்.

கைகுறண்டுதல்- கைமுடங்கல், வலிப்பால் கை மடங்குதல், உலோபஞ் செய்தல்.

கைகூசுதல் - பயத்தால் அல்லது வெட்கத்தால் பின்னடைதல், உலோபத்தனங்கொள்ளுதல்.

கைகூடு - சித்தியாகு.

கைகூடுதல் - சித்தியாதல்.

கைகூட்டுதல் - கைகூப்பு.

கைகூப்பல் - கும்பிடல், கொம்மை கொட்டல், வணங்கல், கொப்பி கொட்டல்.

கைகூப்பு - ஐந்து முழங் கொண்ட வளவை, கைகுவிப்பு, கைகுவித்து வணங்குகை, அடிமுதல் கூப்பிய கைவரையுள்ள அளவு, கும்பிடல்.

கைகூப்புதல் - கும்பிடல், கையைக் குவித்துக் கும்பிடுதல்.

கைகூம்புதல் - கைகுவித்தல்.

கைகேசி - தசரதன் மனைவியிலொருத்தி, பரதன்றாய்.

கைகேயன் - கேகயநாட்டரசன், கேகயன்.

கைகேயி - கைகேசி. இவள் கேகய தேச ராஜபுத்திரி. பரதன்றாய், தசரதன் மனைவிகளிலொருத்தி.

கைகொடு - உதவி செய்.

கைகொடுத்தல் - உதவி செய்தல், எதிர்கொண்டுபோய்க் கைபிடித்தழைத்தல், கைகூடுதல், வாக்குப் பண்ணல், கைலாகு கொடு, வாக்குக் கொடுத்தல்.

கைகொட்டல் - கொம்மை கொட்டல், கொப்பி கொட்டல்.

கைகொட்டிக்குவித்தல் - சூடந்தம்.

கைகொட்டுதல் - கைகளைத் தட்டுதல்.

கைகோத்தல் - கூடிக்கொள்ளுதல், கையாடு கைபிடித்தல், தோளோடு தோள் பின்னுதல், கைபிணைதல், நட்புச் செய்தல், சண்டை பிடித்தல்.

கைகோத்தாடல் - சுரவையாடல், சுரவை.

கைகோத்தாடு - சுரவையாடு.

கைகோலுதல் - முயலுதல், ஆரம்பஞ் செய்தல், சங்கற்பஞ் செய்தல், கைகூப்பு.

கைகோவை - பொற்கொல்லர் தொழிலிலொன்று.

கைகோளன் - செங்குந்த சாதியான்.

கைகோள் - ஒழுக்கத்தின்றன்மை, தலைவன் தலைவியரின் களவு கற்பொழுக்கங்கள், ஒழுக்கம்.

கைக்கடனுற்றல் - உறுதியின்றி நம்பிக்கைக்குக் கொடுத்தல். அதிவேளாண்மை மாந்தரியல்புளொன்று.

கைக்கடன்-கைமாற்றுக்கடன், கடப்பாடு.

கைக்கடியாரம் - கையிலெடுத்தாளும் சிறு கடியாரம்.

கைக்கட்டி-ஓராபரணம், கைக்கவசம், அக்குட்புண், கைப்புடை, கோதை.

கைக்கட்டு - ஓராபரணம், கைகளைக் கட்டிக்கொள்கை, மகளிர் கையணிவகை.

கைக்கட்டுதல் - கையை மடக்கிக் கொண்டு வணக்கங் காட்டுதல்.

கைக்கட்டுபவளம் - பவளத்தாலான ஒருவகைக் கையணி.

கைக்கணக்கு - ஒருமுதி, கணக்குக் குறிப்புப் புத்தகம்.

கைக்கட்டி - கோதை.

கைக்கணிசம் - கைமதியம், கையால் மதிக்கும் மதிப்பு.

கைக்கத்தி - ஓராயுதம், சிறு கத்தி.

கைக்கத்திரிகை - மயிர் வெட்டுங் கருவி.

கைக்கரடு - மணிக்கட்டு.

கைக்கரணை - ஒரு சிலந்தி.

கைக்கரண்டி - சிறு கரண்டி.

கைக்கவசம்-கைச்சட்டை, கையுறை, ஆசு, கைக்கட்டி, கைப்புடை.

கைக்காணி - காணிக்கை.

கைக்காணிக்கை - வெளிப்பாடு.

கைக்காப்பு - கையிலணியுங் காப்பு.

கைக்காய்ச்சல் - கைக்காந்தி.

கைக்காரன் - உதவியுள்ளவன், பணக்காரன், சமர்த்தன், செல்வன், சாமர்த்தியன்.

கைக்காரியம் - கைவேலை.

கைக்காறை - ஒருவகைக் கையணி.

கைக்கிரியை - கையினாற் செய்யுங் கிரியை.

கைக்கிளவர் - செங்குத்தர், கைக்கோளர், கைக்குளர்.

கைக்கிளவன் - கைக்கோளன்.

கைக்கிளன் - கைக்கிளவன், கைக்கோளன்.

கைக்கிளை - வழிசையியைந்து, ஒருதலைக்காமம், ஒரு பிரபந்தம், மருட்பா, யாழினோர் நரம்பு.

கைக்கிளைத்திணை - கைக்கிளையைப் பற்றிக் கூறும் திணை.

கைக்கிளைமணம் - ஆசுரம் இராக்கதம் பைசாசம் மூன்றும்.

கைக்கீறல் } தற்குறிக்கீற்று, கையெ
கைக்கீறு } ழுத்தின் குறிப்பு.

கைக்குடை - சிறு குடை.

கைக்குட்டை - கையிற்பிடிக்கும் புடைவைத் துண்டு, சிறு துண்டு, கைவிலங்கு.

கைக்குதவுதல் - சமயத்துக்கு உதவுதல்.

கைக்குத்து - கை பொத்திக் குத்தல், கைமுட்டியால் தாக்குகை.

கைக்குநீர்க்கொள்ளுதல் - சிறு நீர் விடுதல்.

கைக்குவாதல் - கைக்கு வருதல், கையிற் கிட்டுதல்.

கைக்குழந்தை - இடுக்குப் பிள்ளை, சிறு குழந்தை.

கைக்குழலூதல் - கையிலே குழலூதல்.

கைக்குழவி - கைக்குழந்தை, சிறிய அம்மிக்குழவி.

கைக்குழி - கமுக்கட்டு, அக்குள்.

கைக்குழித்தாமரை - ஒரு வியாதி.

கைக்குழைச்சு - மணிக்கட்டு.

கைக்குளசு - கைக்குழைச்சு.

கைக்குளர் - செங்குந்தர்.

கைக்குள் - உட்னே, சடுதி.

கைக்குறி - கைவரை பார்க்குஞ் சாத்திரம், வாழ்வின் போக்கினைக் குறிப்பதாகக்கருதும் கையிரேகை, கையாவு.

கைக்குறிப்பு - ஞாபகக் குறிப்பு.

கைக்குற்றம் - கைமோசம், கைத்தவறு, சிறு பிழை.

கைக்குன்று - யானை.

கைக்கூச்சம் - கை கூசுதல்.

கைக்கூட்டம் - அணிவகுப்புக் கூட்டம்.

கைக்கூட்டன் - காவற்காரன்.

கைக்கூலி - பரிதானம், அற்றைக் கூலி, லஞ்சம், கையிலே கொடுக்கும் விலைப்பொருள், மணமக

னுக்குப் பெண் வீட்டார் கொடுக்கும் தொகை, பரிதாநம், கைக் கிணிக்கை.

கைக்கெளியது - இலேசானது, கீழ்மைச்சலானது.

கைக்கை - கசப்பு.

கைக்கொடுத்தல் - வந்துதவி செய்தல், கைகொடு.

கைக்கொட்டை - கையணை, கைத்திண்டு.

கைக்கொளவர் - செங்குந்தர், கைகோளர்.

கைக்கொள்வன் - கைக்கோளன்.

கைக்கொள் - ஒப்புக்கொள், பேணிக்கொள், அங்கீகரி.

கைக்கொள்ளல் - வளைந்துகொள்ளல்.

கைக்கொள்ளுதல் - அங்கீகரித்தல், ஒப்புக்கொள்ளுதல், பேணிக்கொள்ளுதல், கையில் எடுத்துக்கொள்ளுதல், கவர்தல், வளைந்துகொள்ளுதல், கைக்கொளல், கையிற் கொள்ளல்.

கைக்கோடாலி - சிறு கோடாலி.

கைக்கோரணி - கைச்சித்திரம், கைச்சாடை.

கைக்கோலியர் - கையில் தண்டம் பிடித்து காவற்றொழில் புரிவோர்.

கைக்கோல் - ஊன்றுகோல், பற்றுக்கொடியு.

கைக்கோளன் - செங்குந்தன், உபசுப் பிரமணியர் மரபினன், கௌரி கோத்திரன், சிவ சூத்திரன், நெசவுத் தொழில் செய்யும் ஒரு சாதியான்.

கைக்கோள்முதலி - கைகோளச் சாதியாரின் தலைவன்.

கைங்கரன் - அடிமை.

கைங்கரியம் } தருமப் பணிவிடை,
கைங்கிரியம் } தொண்டு, பணிவிடை.

கைசருவு - எதிர்.

கைசருவுதல் - எதிர்த்தல், கைகலத்தல், கைச்சரசம், திருடுதல், தூர்த்தத்தனமாய்ப் பெண்களிடம் சேட்டை செய்தல்.

கைசலி - கைதளர்.

கைசலித்தல்-கைதளர்தல், தொய்ந்து போதல், கையோய்தல், வறுமையுறுதல்.

கைசளைத்தல் - கைசலி.

கைசா - இருகழஞ்சு கொண்ட நிறை.

கைசிகநிஷாதம் - பன்னிரு சுரங்களுள் சட்சுருதி தைவதமென்னும் ஓர் சுரம், சோடச சுரங்களுள் ஒன்று.

கைசிகம் - இச்சை, ஓரிராகம், மயிர்க்கனம், விகாரம், காம இச்சை, மந வேறுபாடு, மயிர்த்தொகுதி.

கைசிகர் - பார்ப்பார்.

கைசிகி - கைசிகிவிருத்தி.

கைசிபவீணை - வீணைகளினிருபத்திரண்டு பேதத்துளொன்று.

கைசியம் - கேசம், மயிர்க்கூட்டம்.

கைசு - காற்பலம்.

கைசெய் - அலங்கரி.

கைசெய்தல்-அலங்கரித்தல்,கைவேலை செய்தல், பயிர் செய்தல், உதவி செய்தல், நடத்துதல், புனைதல்.

கைசோரம் - பாலியம்.

கைசோர்தல் - கைசலி.

கைச்சங்கம் - நாகரவண்டு.

கைச்சங்கிலி - கைவிலங்கு.

கைச்சட்டம் - கம்பலை, கைவிட்டம், கூரையின் குறுக்குச்சட்டம், கையிலிடுங் கவசம்.

கைச்சட்டை - அரைச்சட்டை.

கைச்சரக்கு - கற்பித்துக் கூறும் வார்த்தை.

கைச்சரசம் - இலீலை விளையாட்டு, கைச்சேட்டை, சரச விளையாட்டு, இன்ப விளையாட்டு.

கைச்சரடு - கைச்சாடு.

கைச்சரி - கைவளை, மகளிரது கையணிவகை, பரியகம்.

கைச்சல் - கைப்பானது, கைப்பு, வெறுப்பு, கைத்தல்.

கைச்சவளம் - கையீட்டி.
கைச்சற்றிராய் - திராய்வகை.
கைச்சற்றேரை - கைச்சனரத்தை, புளிநாரத்தை.
கைச்சனரத்தை - புளிநாரத்தை.
கைச்சாடு - கைக்கவசம்.
கைச்சாத்து - கையெழுத்துத்துண்டு, நிலவிறையிறுத்த துண்டு, கையெழுத்து, சாமான்பட்டி, ரசீது.
கைச்சாம்பிரதாயம் - கைச்சித்திரம்.
கைச்சார்த்து - கைச்சித்திரம்.
கைச்சார்பு - சார்மானம்.
கைச்சால் - நீரிறைக்குங் கைவாளி.
கைச்சி-ஊமற்பாதி, கழுகு, சிரட்டை.
கைச்சிட்டா - தினசரிக் குறிப்பு புத்தகம்.
கைச்சித்தி - கைவாசி, வைத்தியத்தில் கைராசி.
கைச்சித்திரம் - கைவிற்பன்னம், தொழிற் கைலாவகம்.
கைச்சிமிட்டு - கைச்சித்திரம், செப்படி வித்தை, தந்திரம், இரகசியமாகக் கைகாட்டுங் குறிப்பு, கைலாவகம்.
கைச்சிறை-கைவசமானது, கைவசம்.
கைச்சீட்டு - கைநூலுக்கு, கையாலெழுதிய குறிப்புச்சீட்டு.
கைச்சீப்பு - தோல்பட்டை, தோட்பட்டை எலும்பு.
கைச்சுத்தம் - திருடாமை, லஞ்சம் வாங்காமை, திருத்தமான கைத்தொழில்.
கைச்சுத்தி - கைச்சுத்தியல்.
கைச்சுத்தியல் - தட்டார் உபயோகிக்குஞ் சுத்தியல் வகை.
கைச்சுரிகை - உடைவாள்.
கைச்சுருக்கு - கைலாவகம், கையிறுக்கம்.
கைச்சுருள் - வெற்றிலைச்சுருள், தாம்பூலத்தோடு கொடுக்கும் பணம்.
கைச்சுழி - விதைக்கிறவிதை கூடி விழுதல்.
கைச்சுழியாதல் - கைச்சுழிப்படு.
கைச்சுறுக்கு - கைவிரைவு.
கைச்சூடு - கைநிறைந்த அரிக்கட்டு, கைதெய்த்தல் முதலியவற்றில் உண்டாகும் சூடு, வயலழிப்பவர்களுக்குக் கொடுக்கும் அரிக்கட்டு.
கைச்செட்டு - அன்றன்று கொண்டு விற்றல், சிக்கனம், சில்லறை வியாபாரம்.
கைச்செட்டை-கைமூட்டு, கைச்சீப்பு, தோட்பட்டை.
கைச்செய்கை - வயல் முதலியவற்றில் செய்யுங் கைவேலை.
கைச்செலவு - சொந்தச்செலவு.
கைச்சேட்டை - கைச்சரசம், கையாற் செய்யுங் குறும்புச் செயல்.
கைச்சைகை-கைச்சாடை, கையொப்பம்.
கைச்சோரம் - கச்சோரம்.
கைச்சோலம் - ஒருவகைப்பாத்திரம்.
கைஞ்ஞானம் - அற்ப அறிவு.
கைடபி, கைடபை, கைடவை } தூர்க்கை, காளி.
கைடவசிதன் - விட்டுணு.
கைடவன் - ஓரரக்கன், ஓர் அசுரன்.
கைடவாரி - விட்டுணு.
கைடிகம் - மலையெலுமிச்சை.
கைதகம் - தாழம்பூ.
கைதட்டல் - கையொடு கைதட்டல், கைவிடுதல், தப்புதல்.
கைதப்புதல் - தவறுதல், நீங்கல், கையினின்று தவறிப்போதல், இலக்குத்தவறுதல்.
கைதர - உதவ, கைகொட.
கைதரல் - கைதருதல்.
கைதருதல் - இடங்கொடுத்தல், உதவுதல், கைகூடுதல், கைதரல், மணஞ் செய்தல்.
கைதலைவைத்தல் - பெருந்துக்கமடைதல்.
கைதல் - தாழை.
கைதவம் - சூது, தன்பம், பந்தயம், பொய், வஞ்சனை, கபடம்.

கைதவர் - பொய்யர்.

கைதவறுதல் - கைதப்பு, கைப்பிழை தல், தொலைந்துபோதல், இறத் தல்.

கைதவன் - பாண்டியன், வஞ்சகன்.

கைதழுவுதல் - கைகோத்தல்.

கைதளர் - சோர்.

கைதளர்தல் - கைநெகிழ்தல், சோர் தல், தொய்தல், வறுமையுறுதல்.

கைதாங்கி - கைபிடி, நாற்காலியினே ருறுப்பு.

கைதாதல் - கைதருதல், வறுமை இடுக்கண் முதலியவற்றில் உதவி புரிதல், உறுதி செய்தல், மணம் புரிதல், மிகுதல்.

கைதாரகம் } கையல்வெளி.
கைதாரிகம் }

கைதாரம் - செந்நெல், வயல்களின் கூட்டம்.

கைதி - சிறைபட்ட குற்றவாளி, மற்றி யற்காரண்

கைதிட்டம் - திருந்திய அலங்காரம், கைத்திட்டம்.

கைதிருந்துதல் - எழுத்து முதலியன நேர்மையாதல்.

கைதீண்டுதல் - அடித்தல், தூர்த்தத் தனமாய்ப் பெண்டிரை அணுகு தல்.

கைது - சிறைக்காவல்.

கைதுசெய்தல் - சிறைப்படுத்துதல்.

கைதுடைத்தல் - விட்டொழிதல்.

கைதூக்க - கைதூக்கிவிட.

கைதூக்கல் - இரட்சித்தல், விடுதலே யாக்கல்.

கைதூக்கு - இரட்சி.

கைதூக்குதல் - வறுமையால் வருந் துவோர் நீரில் அழுந்துவோர் முத லியோரைக் காத்தல், ஆமோதித் தற்குறியாகக்கையை உயர்த்துதல்.

கைதூவல் - கையொழிதல், கை மொழிதல்.

கைதூவாமை - கையொழியாமை, ஒழியாவொழுக்கம்.

கைதூவு - செயலற்றிருக்கை.

கைதூவுதல் - கையொழிதல்.

கைதேர்தல் - திறமையடைதல்.

கைதை - தாழை, வயல், தாழை மரம், கைதல்.

கைதைச்சுரிகையன் - மன்மதன்.

கைதொடல்-உண்ணல், கலியாணம், தொடங்கல், உண்கை, ஆகாரம்.

கைதொடன் - உதவி செய்வோன், புத்திபூர்வமாக ஒன் றை ச் செய் வோன்.

கைதொடு-உண், தொடங்கு, மணஞ் செய்.

கைதொடுதல் - பரிசித்தல், சபதஞ் செய்தல், உண்ணுதல், தொடங் குதல், மணஞ்செய்தல்.

கைதொடுத்தல் - விவாகஞ் செய்து வைத்தல்.

கைதொடுமானம் - உதவி.

கைதொழல் - கையிஞல் கும்பிடல்.

கைதொழுதல் - வணங்குதல், கும்பி டுவதற்காகக் கையைத் தலைமேல் உயர்த்துதல்.

கைத்தகோடரம் - எட்டி.

கைத்தடி - ஊன்றுகோல், சிறுதடி, பாகபத்திரம், தற்குறிக்கீற்று.

கைத்தண்டம் - கைநஷ்டம், ஊன்று கோல்.

கைத்தப்பு - கைக்குற்றம்.

கைத்தராசு - சிறு தராசு.

கைத்தலம் - கை, கரதலம், சாண் நா லுகொண்டது.

கைத்தல் - அலங்கரித்தல், அலைத்தல், கசத்தல், கோபித்தல், வெறுத்தல், கசப்பு.

கைத்தலை - காட்டாமணக்கு.

கைத்தாக்கு - கைக்குக்கனம், கைக் குத்து வேகம்.

கைத்தாங்கல் - கையால் தாங்கிநிற்கை.

கைத்தாய் - வளர்க்குந்தாய், வளர்ப் புத்தாய், செவிலித்தாய்.

கைத்தாளம் - கைமணி, தாளக்கருவி, கையாற்போடுந்தாளம், ஒருவகைக்

கருவி, கஞ்சம், கிட்டி, கிணி, பாண்டில்.

கைத்தாள் - திறவுகோல், கையாலிடுந் தாழ்ப்பாள்.

கைத்திட்டம் - கைமதியம், கை மதிப்பு, அறுதியிட்ட கையிருப்புத் தொகை.

கைத்திரி - இடைக்கை யென்னுந் தோற்கருவி.

கைத்தீட்டு - பத்திரம்.

கைத்தீபம் - கைத்தீவட்டி.

கைத்தீவட்டி - சிறுதீவட்டி.

கைத்தீவத்தி - கையிற்பிடிக்கும் தீவட்டி.

கைத்தீவர்த்தி-கைத்தீவட்டி, கையிற் பிடிக்கும் தீவட்டி.

கைத்தீன் - கையில் வைத்துக்கொடுக் குந்தீன், கையில் வைத்து ஊட்டு முறை.

கைத்து-பொன், செல்வம், செலுத்தி, வெறுத்து, திரவியம், வெறுப்பு.

கைத்துடுக்கு-கையால் அடித்தல் முத லியன செய்யுந் தீய சுபாவம்.

கைத்துடுப்பு-கூழ்முதலியன துழாவுங் கருவி,படகுவலிக்குஞ்சிறியதண்டு

கைத்துண்டு-கைக்குட்டை, கைமரம்.

கைத்துணிகரம் - கைத்துணிச்சல்.

கைத்துணிச்சல்-துணிகரமானசெயல்.

கைத்துப்பாக்கி - கைத்துவக்கு, சிறு துப்பாக்கி.

கைத்துவக்கு - சிறு துவக்கு, சிறு துப்பாக்கி.

கைத்தூக்கு - கைப்பற்றம், கையாற் றூக்கத்தக்க பாரம், கையிலுல் எடுக்கக்கூடிய ஒரு தூக்களவு.

கைத்தூண்-பிறர் கையால் உண்கை, சிறுதூண்.

கைத்தேங்காய் - போரடிக்குந் தேங் காய், தேங்காயை உருட்டி விளை யாடும் விளையாட்டு வகை.

கைத்தொண்டு - குற்றேவல், கையி னாற் செய்யும் கோயிற்பணிவிடை, குற்றேவற்பணி.

கைத்தொழில் - கைவேலை, கையாற் செய்யும் வேலை, எழுதுதல் முத லியனவாகக் கைத்திறங் காட்டுந் தொழில், எண்ணல், எழுதல், இலேகிள்ளல், பூத் தொடுத்தல், யாழ்வாசித்தல், கைத்தொண்டு.

கைநடுக்கம் - மூப்பு அச்சம் முதலிய வற்றால் கைநடுங்குகை.

கைநம்பிக்கை - கையடித்து உறுதி மொழி கூறுகை, கைக்கடன்.

கைநலப்பால் - கன்றின் உதவியின்றி கையாற்கறக்கும் பால்.

கைநலம் - கைராசி, கைநலப்பால்.

கைநறுக்கு - கைச்சீட்டு.

கைநனைத்தல் - பிறர்வீட்டில் உணவு கொள்ளுதல்.

கைநஷ்டம் - கையிலுள்ளதை இழக் கை, கைம்முதலுக்கு நேரும் நஷ்ட டம்.

கைநாட்டு-கைக்கீறல், தற்குறிக்கீறல்.

கைநாட்டுதல் - கையெழுத்திடல்.

கைநிரை - நிரைச்சல்.

கைநிலை - வீரர்கள் தங்குவதற்குப் பாசறையில் தனித்தனியே அமைக் கப்பட்ட குடிசை.

கைநிறை - கையால்தூக்கி மதிக்கும் நிறை.

கைநீட்டம் - கொடை முதலாக விற் கும் பண்டத்திற்குவாங்கும் ரொக் கத்தொகை.

கைநீட்டுதல் - இரத்தல், திருடுதல், அடிக்கக் கையோங்குதல், இழவு விசாரித்தல்.

கைநீளம் - தாராளம், திருடுங்குணம், அடிக்குங்குணம்.

கைநுணுக்கம் - அழகான வேலைப் பாடு, உலோபத்தனம்.

கைநெரித்தல் - துக்கம் அச்சம் முத லியவற்றால் கையை நெரித்தல்.

கைநெல்லி-உள்ளங்கை நெல்லிக்கனி.

கைநொடித்தல் - கைவிரலால் ஒலி யுண்டாக்குதல், செல்வ நிலைமை கெடுதல்.

கைநோட்டம் - கையினுற் குறிப்பிக் குஞ்சாடை, கைவேலைத்திறம், [illegible]ால் நிர்ணயிக்கும் மதிப்பு.

கைந்நடுக்கம் - ஒரு வியாதி, கையி றுங்காமை.

கைந்நட்டம் - முதல்கூட நட்டப் படுதல்.

கைந்நலப்பால் - கன்றின்றிக் கைவல் லபத்தாற் கறக்கும்பால்.

கைந்நலம்-கைப்பயன், கைவிசேஷம்.

கைந்நவிலாளர் - கையால் தொழில் செய்யப் பழகியவர்.

கைந்நறுக்கு - கையுறுதி.

கைந்நனைத்தல் - கைகழுவல்.

கைந்நன்றி - செய்ந்நன்றி.

கைந்நாகம் - யானை.

கைந்நாடிபார்த்தல் - நாடியோட் டம் பார்த்தல்.

கைந்நிதானம் - கையால் நிறை முத லியவற்றை மதிப்பிடுகை.

கைந்நிலை - புல்லங்காடர் என்ற புல வர் இயற்றிய நூல்.

கைந்நிறுத்துதல் - நிலைநிறுத்துதல், அடக்குதல்.

கைந்நீட்டு - கைப்பிடி, அடிக்க முந்து, களவிடு.

கைந்நீட்டுதல் - அடிக்க முந்துதல், இழவு வினவுதல், களவெடுத்தல்.

கைந்நீவுதல் - அவமதித்துக்கடத்தல்.

கைந்நீளுதல் - அதிகமாய்க்கொடுத் தல், ஒன்றைச்செய்ய முந்துதல்.

கைந்நூல் - கையிற்கட்டும் கா ப் பு நாண்.

கைந்நெகிழ் - விட்டுவிடு.

கைந்நெகிழ்தல் - விட்டுவிடுதல்.

கைந்நொடி - மாத்திரைப்பொழுது.

கைந்நொடித்தல்-விரலை நொடிக்கும் நேரளவு.

கைபடிதல் - கைதிருந்துதல்.

கைபதறுதல் - கைந்நடுங்குதல், அவ சரப்படுதல்.

கைபதில் - கைமாற்றுக்கடன்.

கைபத்து - ஆசாராகாமை.

கைபரிதல் - ஒழுங்கு குலைதல்.

கைபரிமாறுதல் - அடிபிடிப்படுதல், அசுத்தமாகும்படி தொடுதல், கற் பையழித்தல், அபகரித்தல், அடி பிடி சண்டை யிடுதல்.

கைபழகுதல் - கைப்பழக்கம், பழகு தல்.

கைபறிதல் - கைவிட்டுப்போதல், கை தவறுதல், ஒழுங்கு குலைதல்.

கைபாகம் - கைப்பழக்கம்.

கைபார் - கைக்குறிபார், சோதி, நா டிபார், மட்டறி.

கைபார்த்தல் - கைக்குறி பார்த்தல், சோதித்தல், நாடிபார்த்தல், கைத் தாதுவை அறிதல், இரேகைபார்த் தல், உதவிநாடுதல், பழுதுபார்த் தல், வியாபாரச் சரக்குகளைச் சோ தித்தல், மட்டறிதல்.

கைபிசைதல் - செய்வதறியாது திகை த்தல்.

கைபிடி - இரம்மியம், உறுதி, கைபி டிக்க வைத்திருப்பது, கைப்பொ ருள், கைவிடாமை, நம்பிக்கை, நா டியோட்டமறிதல், கைப்பிடி, கை பெற்றுக்கொண்ட பொருள், கலி யாணமுடி, நாடியறி.

கைபிடித்தல் - கலியாண முடித்தல், நாடி யறிதல், கைக்கொள்ளுதல், மணம் புரிதல், கையிற் பிடித்தல், மணத்தல்.

கைபிடிபத்திரம் - உற்ற சிநேகம், கைவிடாமற் பத்திரமாயிருத்தல், சேமப்பொருள், அந்தரங்கமான ஆள்.

கைபியத்து - கைபீது.

கைபிழைபாடு - மோசம்.

கைபுகுதல் - வசப்படுதல், ஒருவன் பேரிலிருந்த பத்திரம் பிறனொரு வன் பேருக்கு மாற்றுதல்.

கைபுனை } அலங்கரித்தல், பூத்
கைபுனைத்தல் } தொடுத்தல், அலங் கரிக்கை, பூத்தொடுக்கை, அலங் கரி, பூத்தொடு.

கைபூசுதல்-உண்டகையை கழுவுதல்.
கைபோடு - பிரமாணிக்கஞ் செய்.
கைபோடுதல் - கையிடுதல், வாக்குப் பண்ணல், கைகொடுத்து உறுதி தருதல், தொழிலேற்கத் தொடங்குதல், பிறரறியாமல் கைகளை வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டு கைக்குறிப்பால் விலைபேசுதல், காமவிச்சையோடு தொடுதல்.
கைபோதல் - முற்றும் வல்லவனுதல், கடந்து செல்லுதல், சிறுமைபோதல்.
கைப்பகர்ப்பு-அனுமதியின்றிப் பெற்றுக்கொண்ட நகல்.
கைப்பக்கம் - அருகில்.
கைப்பட - சொந்தக் கையெழுத்தாக.
கைப்படுதல் - கைவசமாதல், பார்த்தல், கைக்கொள்ளல்.
கைப்படுதி - காண்பாய்.
கைப்படுத்தல் - கைப்பற்றுதல், தெளிதல், கைக்கொள்ளல்.
கைப்படை - ஆயுதம், மணியாசுப் பலகை.
கைப்பட்டை - கைப்பலகை, சிறுபட்டை, தோட்படை, கைமரம் தாங்கும் சட்டம், நீர் முகக்கும் சிறுபட்டை.
கைப்பணம் - கைம்மேற்பணம், கையில் இருக்கும்பணம், கையிலுள்ள தொகை, சொந்தப்பணம், கடனின்றி கைமேற் கொடுக்கும் பணம், கைரொக்கம்.
கைப்பணி - கற்சிற்பர் கருவியிலுன்று, கைத்தொண்டு, மணியாசிப்பலகை, குற்றேவல்.
கைப்பண்டம் - கைப்பொருள்.
கைப்பதட்டம் - கள்ளம், விரைவு, அவசரத்தில் கைப்பதறுகை, திருடுங்குணம், திருட்டு.
கைப்பத்தி - கைபீதி.
கைப்பந்தம் - பந்தவிளக்கு, கைத்தீவட்டி.
கைப்பயிர் - இளம்பயிர்.
கைப்பயில் - கைச்சயிக்கினை, இரேகை சாஸ்திரம்.
கைப்பரிசு - சிறுதெப்பம், லஞ்சம்.
கைப்பழக்கம் - கைப்பிடி, கைவாறு, கைப்பயிற்சி, கைபரிட்சை.
கைப்பள்ளம் - உள்ளங்கைக்குழி.
கைப்பற்றம் - கைத்தாங்கல்.
கைப்பற்றல் - கலியாணம், கைவசத்திலொடுக்கல், வாங்குதல், கைக்கொள்ளல், கலியாணம் புரிதல்.
கைப்பற்று - கைத்தூக்கு, வாங்குதல், கைத்தாங்கல், கையிற் பெற்றுக்கொண்ட தொகை, சாதனம், உரிமை மானியம், கலியாணம் செய், பெற்றுக்கொள்.
கைப்பற்றுதல் - கையிற்கொள்ளுதல், அபகரித்தல், மணம்புரிதல்.
கைப்பாகம் - பதமறிந்து மருந்துமுதலிய பக்குவஞ்செய்யுந் திறம்.
கைப்பாடு - கைநஷ்டம், கைவசம், கைவேலை, கையால் உழைத்துச் செய்யும் வேலை.
கைப்பாணி - மணியாசனப்பலகை, முடவன் தவழ்தற்குக் கொள்ளுங்கைப்பிடி.
கைப்பாதி - இரண்டாய்ப் பிளப்பதில் சிறுபாதி.
கைப்பாத்திரம் - கரபாத்திரம்.
கைப்பிசகு - கைமோசம், கைக்குற்றம்.
கைப்பிடி - உலக்கை, கலியாணம், கைபிடித்தபிடி, கையாற் பிடிக்கை, பிடியளவு, ஆயுதம் முதலியவற்றின் பிடி, படிக்கட்டு முதலியவற்றின் பக்கங்களில் கையாற் பிடித்துச்செல்ல அமைக்கும் சுவர் சட்டம் முதலியன, பாணிக்கிரகணம், கைபிடி.
கைப்பிடித்தல் - கலியாண முடித்தல், உறுதியாகப்பிடித்தல், மணம் புரிதல், உறுதியாகக் கொள்ளல், கலியாணம்.

கைப்பிடி மோதிரம் - மாப்பிள்ளைக்கு பெண்வீட்டார் கொடுக்கும் மோதிரம்.

கைப்பிடிவாள்-கைவாள், கைரம்பம், கண்டம்.

கைப்பிணை - பாதுகாக்கும்படி கையில் ஒப்பிக்கப்பட்ட பொருள், கோர்ட்டார் நியமிக்கும் ஜாமீன்.

கைப்பிரட்டு - அள்தலாகவி த்தை.

கைப்பிழை - கைக்குற்றம்.

கைப்பிள்ளை - கைக்குழந்தை.

கைப்பீது - கைபீது.

கைப்பு - அறுசுவையிலொன்று. அது கசப்பு. ஆடுதின்னுப்பாலை, ஒருசரக்கு, வெறுப்பு, ஆடுதின்னுப்பாலை, குடிவெறி, கசப்புப்பண்டம், வாசம், கைப்பான பதார்த்தம், கைத்தல், திக்தம்.

கைப்புடை - கைக்கவசம், கைப்புட்டில், வாயில் காவலர் தங்குமிடம், அருகு, கோதை.

கைப்புட்டில் - விரலுறை.

கைப்புண்ணியம்-தயாளம், கைராசி.

கைப்புலி - யானை.

கைப்பூட்டு - கைப்பொறுத்துகையிலேற் பூட்டும் பூட்டு, மல்லரின் கைப்பிடிவகை, தோட்பொருத்து.

கைப்பெட்டகம் } சிறு பெட்டகம்,
கைப்பெட்டி }

கைப்பொட்டு - ஓர் அணி.

கைப்பொருள் - கைவசத்திலிருக்கும் பொருள், கையிலுள்ளபொருள்.

கைப்பொலி - கையாலள்ளும் பொலி.

கைப்பொல்லம் - சிறுதுண்டு.

கைப்பொறுப்பு - தன்பொறுப்பு, நஷ்டம்.

கைமகவு - கைப்பிள்ளை.

கைமடிப்பு - அணுப்பு, வஞ்சகச் செயல்.

கைமட்டம் - கைமதிப்பு, கையனுபவம், கொத்தன் மட்டம் பார்ப்ப தற்கு உதவுங்கருவி, பூமி மட்டத் திலிருந்து தாழ விட்டகை வரையிலுள்ள உயரம்.

கைமட்டு - மதிப்பு, கைமட்டம், உத்தேசம். கையளவு, கைக்குமட்டம்.

கைமண்டை - நீர் முதலியன ஏற்படுதற்குப் பாத்திரம்போல் குவித்துக் கொள்ளும் கை.

கைமதிப்பு - கையால் தூக்கி மதிக்கும் மதிப்பு.

கைமதியம் - கைமதிப்பு.

கைமயக்கு - வசியமருந்து.

கைமரம் - வீட்டுக்கூறையின் கை.

கைமலிவு - விலையம்.

கைமறிதல் - கைமாறுதல்.

கைமறுத்தல் - கொடுக்கமறுத்தல்.

கைமா - கொத்தின இறைச்சி.

கைமாயம் - கையிஞற் செய்யும் மாயவித்தை, சாமர்த்தியத்திருட்டு.

கைமாறு - கைம்மாறு, கைமாற்று.

கைமாற்றம் - கைமாற்று.

கைமாற்றுதல்-ஒருவர் கையினின்றும் மற்றொருவர் கைக்குச் செல்லுதல், வேலையாட்கள் முறை மாறுதல், ஒழுக்கத்தைக் கைவிடுதல், கட்சி மாறுதல், பண்டம் மாற்றுதல்.

கைமிஞ்சுதல் - வரம்பு மீறுதல், பிறரோடு சண்டை செய்ய முற்படுதல்

கைமுடக்கம்-செய்கைக்குக் கை உபயோகப்படாமை, பண முட்டுப்பாடு.

கைமுடிப்பு - கைப்பொருள், கட்டுச் சோறு.

கைமுடை - கைமுடக்கம்.

கைமுடைஞ்சல் - கைமுடக்கம்.

கைமுட்டி - விரல்மடக்கியுள்ளகை. முட்டியுத்தம், அஸ்தப்பிரயோகம்,

கைமுட்டு - கைமுடக்கம், விரற்கணு.

கைமுதல் - கைம்முதல்.

கைமுதிர்தல்-இளமைப்பருவம் நிரம்புதல்.

கைமுந்துதல் - கைமிஞ்சுதல், திருடுதல்.

கைமுழம் - முழங்கை நீளம் உள்ள அளவு.
கைமுளி-மணிக்கட்டிலுள்ள எலும்பு, மணிக்கட்டு.
கைமுறி - ஓலைத்துண்டு, ஓலைச்சீட்டு.
கைமுறை - விளையாட்டு முதலிய வற்றில் மாறி மாறி வரும்முறை, மருந்துசெய்யும் அனுபவமுறை.
கைமூட்டு - தோட்பொருத்து.
கைமூலம் - கழுக்கட்டு, கைராசி, கமலம்.
கைமெய்யாய் - கையுங்களவுமாய்.
கைமேசு - கைவிரலுரை.
கைமேலே - உடன்கையில்.
கைமேல் - கைமேலே.
கைமை } அமங்கலி, விதவை,
கைம்பெண் } அமங்கலை, கலன் கழி மடந்தை, கைமை, கைம்மை, கைனி, திருவிலி, விதவை.
கைமோசம் - சதி, எதிர்பாராது நேர்ந்த கேடு.
கைம்பெண்டாட்டி - விதவை.
கைம்பெண்பிள்ளை - கோளகன்.
கைம்பெண் வஸ்திரம் - அமங்கலியுடுக்கத்தக்க புடவை.
கைம்மகவு - கைக்குழந்தை.
கைம்மடல் - கைச்சீப்பு, தோட்பட்டை.
கைம்மட்டம் } கைமதியம்.
கைம்மட்டு }
கைம்மணி - கைத்தாளம், கையாலசைக்குஞ் சிறுமணி, சேமக்கலம், பூசையில்வழங்கும் சிறுமணி, வட்டம், எல்லரி, படலிகை, பரந்த வட்டம்.
கைம்மண்டை - கையாகிய பாத்திரம்
கைம்மதம் - யானையின் துதிக்கையினின்றும் வெளியேறும் மதநீர்.
கைம்மதியம் - கைம்மட்டு.
கைம்மயக்கம் - மோகமயக்கம்.
கைம்மயக்கு - ஒரு வகியமருந்து, கைம்மயக்கம்.
கைம்மரம் - வீட்டின் பாய்ச்சுரமரம்.
கைம்மருந்து - வைத்தியனின்றித் தாமே செய்துகொடுக்கு மருந்து, கையிலுள்ள வகியமருந்து, அனுபவப்பட்ட மருந்து, புருஷனைத் தன்வசமாக்கப் பெண்டிர் உபயோகிக்கும் மருந்து, கை மருந்து.
கைம்மலை - யானை, கைவரை.
கைம்மறதி - அயர்த்தி, ஞாபகத்தவறு.
கைம்மறி - தடு.
கைம்மறித்தல்-தடுத்தல், கைகவித்து விலக்குதல்.
கைம்மறுத்தல் - கொடுப் போருங் கொடாதுவிடல்.
கைம்மறை - உடன்மறை.
கைம்மா - யானை.
கைம்மாயம் - கைம்மயக்கு.
கைம்மாய்ச்சி - கைவிலங்கு.
கைம்மாறு - பிரதியுபகாரம், பிரதி, ஒழுக்கம் மாறுபடுதல், கைமாறு, பிரத்தியுபகாரம்.
கைம்மாறுதல் - விற்றல், மேற்கொள்ளுதல்.
கைம்மாற்று - உடன்மாற்று.
கைம்மான் - யானை.
கைம்மிகல் } அதிகப்படல், கைகடத்தல், அளவு
கைம்மிகுதல் } கடத்தல், சாதி தருமத்திற்கு மாறுபட்டு ஒழுகுதல், அதிகப்படுதல், ஒழுக்கக்கேடு.
கைம்மிகு - அதிகப்படு, கைகடத்து.
கைம்மிடிப்பு - கையிலொன்று மில்லாமை.
கைம்மீறுதல் - அளவுக்கு மிஞ்சுதல்.
கைம்மீன் - அத்தகாள்.
கைம்முடக்கம் - பொருள்முட்டு, வினைக்கேடு.
கைம்மூடிப்பு - முடிப்புப்பணம்.
கைம்மூட்டி செய்தல் - கையைப் பொத்துதல்.
கைம்மூட்டு - கைம்மிடிப்பு.
கைம்முதல் - வியாபாரம் முதலிய வற்றிற்குவைத்த கைப்பொருள், திரவியம், சாதனம்.

கைம்முறை - கைம்மாறும் முறை, அனுபவம்.
கைம்முற்றுதல் - முடிவு பெறுதல்.
கைம்மூலம் - அக்குள், கன்றுசெத்த பின் கறக்கும்பால், கையினடி, முகாந்திரம், கையேதுவான விசேஷம்.
கைம்மெய்க்காட்டல் - அபிநயங்காட்டல்.
கைம்மேலே - உடனே.
கைம்மேற்பணம் - உடனே கையிற் கொடுக்கும் பணம்.
கைம்மை - அமங்கலி, கைம்பெண், காதலனைப் பிரிந்திருக்குந்தனிமை, கணவனை இழந்த நிலைமை, விதவை, சிறுமை, அறிவின்மை, பொய், கைம்மை நோன்பு.
கைம்மைபெற்றோன் - விதவையிடம் பிறந்தவன், கோளகன்.
கைம்மை வினை - கையால் வேலை செய்யுந்திறம்.
கைம்மோசம் - செய்கைப்பிழை.
கையகப்படுதல் - கைக்குட்சேருதல்.
கையகப்படுத்தல் - ஒப்புக்கொடுத்தல், சிக்கப்பண்ணுதல், பிடித்தல்.
கையடக்கம் - கைக்கு இலேசானது.
கையடம் - ஒருநூல்.
கையடர் - ஒரு நூலாசிரியர்.
கையடி - களத்தில் கையாலடித்த தானியம்.
கையடிப்படுதல் - கைக்குட்படுதல்.
கையடிப்படுத்துதல் - ஆட்சிக் குட்படுத்துதல்.
கையடுத்தல் - கையடை, அடைக்கலம் புகுதல்.
கையடுப்பு - கையால் எடுத்துச் செல்லத்தகும் சிற்றடுப்பு.
கையடை - அடைக்கலம், பிறர் கையில் ஒப்புவிக்கை, பாதுகாக்குமாறு ஒப்பித்த பொருள், லஞ்சம்.
கையடைத்தல் - பிறர் கையில் ஒப்புவித்தல், கடனைத் தீர்த்தல்.
கையடைப்பு - கைவசமான பொருள்.
கையட்சரம் - கையெழுத்து.
கையமர்தல் - கையமைத்தருளல்.
கையமர்த்தல் } அபயார்த்தஞ் செய்
கையமைத்தல் } தல், அமைந்திருக்கக் குறிப்புக்காட்டல், கையமைத்தருளல், அபயங்கொடுத்தல்.
கையம் - நீர், கடல்.
கையம்பாய் - கிடைத்தற்கு எளிதாய், நிச்சயமாய்.
கையம்பு - உறுதி, நம்பிக்கை.
கையயர் - கைசோர்.
கையயர்தல் - கைசோர்தல், சோர்வடைதல், நிலைமை தாழ்தல்.
கையரி - தேடல்.
கையரிக்கொளல் - சேர்த்துக் கொள்ளல், தேடல், சேர்த்துக்கொளல்.
கையரித்தல் - சேர்த்துக்கொள்ளல்.
கையரியம் - இரும்பு.
கையரிவாள் - சிற்றரிவாள்.
கையர் - கீழ்மக்கள், சண்டாளர், திருடர், கள்ளர், வஞ்சகர், மூடர், அஞ்ஞானிகள், கையை யுடையவர்.
கையலகு - கைமரம்.
கையலுத்தல்-கைசலித்தல், கையயர்.
கையலைத்தல் - துன்புறுத்துதல்.
கையல்லது - தகாதது, ஆகாத செய்கை.
கையளித்தல் - ஒப்புக் கொடுத்தல், கொடுத்தல், கையடி.
கையறம் - கெடும்படி பாடும்பாட்டு, வசைக்கவி, இரங்கற்பா.
கையறல் - ஒழுக்கமின்மை, செயலறல், கையறவு, கைப்பொருளறல், கையறை, செயலின்மை, கையறுதல்.
கையறல்விலக்கு - ஓரலங்காரம். அது கைதவுதலைக்காட்டி விலக்குவது.
கையறவு - செயலற்ற நிலை, மரணம், துன்பம், ஊடல், தரித்திரம், ஒழுக்கமின்மை, உதவியின்மை, செயலறுதல், வறுமை, வருத்தம்.
கையறிதல் - பழகுதல், பழக்கமாதல்.
கையறியாமை - செய்வதறியாமை.

கையறுதல் - அந்தரிக்குதல், சாதல், செயலறல், செயலற்றுப்போதல், அளவுகடத்தல், மனமழிதல், மீட்சியரிதாதல், இறத்தல், ஒழுக்கம் நீங்குதல், செயலறுதல், கைப்பொருளறல்.

கையறுநி - கையுறுதியிலே விற்கப்பட்டவறுதி, அறுதியாகவிற்கை, முற்றும் கைவிட்டு நீங்குகை, கையுறுதி, முற்றுக நீங்குகை.

கையறுநிலை - ஒரு பிரபந்தம்.

கையறை - ஒழுக்கமின்மை, செயலின்மை, கையாறு, சிறிய உக்கிராண அறை, உதவியின்மை, ஒழுக்கம்.

கையன் - கயவன்.

கையாக்கம் - கைராசி.

கையாடல் - நம்பிக்கைக்கு மாறுய்ப் பிறர்பொருளை அபகரிக்கை.

கையாடு - பறி, ஆழ், பெண்டாழ், களவாடு, கற்பழி.

கையாடுதல் - எடுத்து வழங்குதல், கைகண்டது, கையாள்.

கையாட்சி - கைப்பழக்கம், தொழில், ஒருவன் வசமானது, அனுபவத்தால் நன்மையெனத் தெளிந்தது, எப்போதுமுள்ள ஆட்சி.

கையாணி - கைமரத்திற் சட்டத்தை யிறக்கும் ஆணி.

கையாந்தகரை - ஒருபூடு, கரிசலாங் கண்ணி, கரிசாலைப்பூடி, அறுபதம், கோதணம், ப்ருங்கராஜம்.

கையாப்புடை - மரவகை.

கையாயிரத்தன் - வாணாசுரன்.

கையார - கைக்குத்திருப்தியாக.

கையாலாகாதவன் - எவ்வேலையும் செய்யத்திறமையற்றவன்.

கையாலாதல் - செய்யும் ஆற்றல் பெறுதல்.

கையாளி - துட்டன், மாய்மாலன், சமர்த்தன், துஷ்டன், பாசாங்கு செய்பவன்.

கையாளித்தல் - ஒப்படைத்தல்.

கையாளுதல் - எடுத்து வழங்குதல், கையாள்தல், கையால் எடுத்து ஆளுதல், வழக்கத்துக்குக்கொண்டு வருதல், அபகரித்தல், கற்பழித்தல்.

கையாள் - குற்றேவலாள்.

கையாறு - ஒழுக்கம், சரித்திரம், துன்பம், செயலறுகை, ஒழுக்க நெறி, செயலறுதல், செயலொழிந்தயர்தல்.

கையாறுதல் - இளைப்பாறுதல், கையிளைப்பாறுதல்.

கையாற்றி - ஆறுதல், உதவி, தொழிலுக்கு உதவுகை, இளைப்பாறல்.

கையாற்றுதல் - அடையல், மாற்றுதல், இளைப்பாற்றுதல், உதவி செய்து இளைப்பாறச் செய்தல்.

கையான் - கையாந்தகரை.

கையிகத்தல் - அகன்றுநிற்றல், இழத்தல், ஒழுங்குதப்புதல், கடத்தல், அளவுக்கு மேற்படுதல், மீறுதல், மிகுதல்.

கையிசைதல் - மனம் இணங்குதல்.

கையிடுதல் - தலையிட்டுக் கொள்ளுதல், நேர்ப்படுதல், கையைத் தோய்த்தல், காரியத்திற் பிரவேசித்தல், ஒரு தொழிலில் வேண்டாது தலையிடுதல்.

கையிடை - லஞ்சம், கைக்காணிக்கை.

கையிணக்கம் - கூத்திவைக்குதல், போர் செய்கை, பொருத்தம், கையடக்கம், கைகலத்து போர்செய்கை, வைப்பாட்டிவைக்கை.

கையிருப்பு - கையொக்கம், இருப்புத்திட்டம், கைரொக்கம்.

கையிலாகாதவன் - கையாலாகாதவன்.

கையிலாதம் - கைலாசம்.

கையில் - தேங்காய்ப்பாதி, கயில்.

கையிழ - காணமற்போ.

கையிழத்தல் - காணமற்போதல்.

கையிளகுதல் - கைநெகிழ்தல், கொடுக்கச் சம்மதித்தல், கைப்பிடிப்பு நெகிழ்தல், தாராளமாதல்.

கையிளைத்தல் - கைசலித்தல், செல்வ நிலை குன்றுதல்.

கையிறக்கம் - கையைவிட்டிறங்குதல், கொடை, சீட்டு விளையாட்டில் முதலில் சீட்டை இறக்குகை, செல்வ நிலைகுன்றுதல்.

கையிறக்குதல் - கையிலிருந் திறங்கச் செய்தல்.

கையிறங்காமை - உலோபத்தன்மை, பிசுனித்தனம்.

கையிறங்குதல் - கொடுக்க விணங்குதல்.

கையிறுக்கம் - கையிறங்காமை, சிக்கனம், உலோபம், உலோபத்தன்மை.

கையிறை - கைரேகை, கைவிரலின் இடுக்கு.

கையுங்கணக்கும் - இருந்ததுஞ் சென்றதும்.

கையுடனே - உடனே.

கையுடன் - கையோடு.

கையுடை - கைக்கவசம்.

கையுண்ணுதல் } பிறர் கைபார்த்து
கையுண்தல் } உண்டுவாழ்தல்.

கையுதவி - ஆளுதவி, சமயத்தில் உதவும் உதவி, துணையான உதவிப் பொருள், சிற்றுதவி, லஞ்சம்.

கையுபகாரம் - ஒத்தாசை, கைக்கூலி, கையுதவி.

கையுமெய்யுமாய் - கைமெய்யாய்.

கையும்மெய்யும் - அத்தாட்சி, உறுதி.

கையுயர்தல் - கையோங்கு.

கையுரொக்கம் - கைவசத்திலிருக்கும் பணம்.

கையுழற்றி - கைநடுக்கம்.

கையுழைப்பு - வேலை.

கையுறல் - அகப்படல், கைவசப்படல்.

கையுறுதல் - கைவசமாகக் கிடைத்தல், தீண்டுதல்.

கையுறுதி - அட்டவணை, சேர்க்கப்படாதவுறுதி, கடனுக்கு வைக்கப்படும் ஈடு, கையடித்து விலையுறுதி செய்கை.

கையுறை - கைக்கவசம், தலைமகன் தலைவிக்குத் தரும் பொருள், காணிக்கைப் பொருள், மொய்ப்பணம், கையுடை, லஞ்சம், அரசன் குரு முதலியோர்களைக் காண்பதற்காகிய காட்சிப் பொருள், கைப்பொருள்.

கையூக்கம் } கையூற்றம்.
கையூக்கு }

கையூட்டு - லஞ்சம்.

கையூழ் - இசைக்கரண மெட்டனுள் ஒன்று, ஒரு கலைத்தொழில்.

கையூற்றம் - வல்லமை.

கையெடுத்தல் - கும்பிடல், சத்தியம் பண்ணல், சம்மதித்தற் குறியாய்க் கையுயர்த்தல், யாசித்தல்.

கையெடுப்பு - கையையுயர்த்தி நிற்கும் ஒருவனது உயரத்தினளவு.

கையெழுத்து - கையாலெழுது மெழுத்து, கைரேகை, தன் பேரெழுத்து, கையொப்பம்.

கையெறிகாலெறி - கை கால்களை உதைந்து கொள்ளுகை.

கையெறிதல் - கைகொட்டுதல், உறுதிகூறிக் கையடித்தல், கோபத்தாற் கைவீசுதல்.

கையேடு - சிறிய எட்டுப்புத்தகம், நாள் வழிக்கணக்கு.

கையேந்தல் } இரந்து வாங்குதல்,
கையேந்துதல் } யாசித்தல், இரத்தற் குறிப்பு.

கையேந்தி - இரப்போன்.

கையேந்து - இரந்துவாங்கு.

கையேல்தல் } கையேந்துதல், காரி
கையேற்றல் } யத்தை ஏற்று நடத்துதல்.

கையேறல் - நடுத்தரமான முத்து.

கையேறுதல் - ஜெயமெடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல், கையிற் கிடைத்தல், கைமாறுதல்.

கையேற்பு - கைப்பிச்சை, பெறுகை, யாசிக்கை, பிச்சை வாங்குகை, ஒரு தொழிலை ஏற்றுக்கொள்ளுகை.

கையேற்றம் - செல்வப் பெருக்கான நிலை.
கையை - தங்கை.
கையொடுகாவலாய் - சமயத்துக் குதவியாய்.
கையொட்டி - கைக்குழந்தை.
கையொட்டுக்கால் - கருப்பூரவகை.
கையொத்துதல் - அஞ்சலி செய்தல்.
கையொப்பம் - கையெழுத்து, கீறற் கையெழுத்து, கையெழுத்துச் செய்யப்பட்ட தொகை.
கையொலி, கையொலியல் } ஐந்து முழப்புடை வை, பெரும்பாலும் ஐந்து முழமுள்ளதும் விக்கிரகங்களுக்குச்சாத்துவதுமான சிறிய ஆடை, ஆடை, கையிலி.
கையொழிதல் - கைதவறு, கைமேலை நீங்குதல்.
கையொழியாமை - ஒழியா வொழுக்கம், முயற்சி நீங்காமை, அவகாசமின்மை, கைதவறாமை, ஒழுக்கம்.
கையொழுக்கம் - கைதவறாமை.
கையொறுப்பு - குறைத்துச் செலவழித்தல், சிக்கனச் செலவு, இச்சை யடக்குகை.
கையொற்றி - கையுறுதியில் வைக்கப்பட்ட காணியீடு, நியமனம் பெற்ற பத்திரலேகைகளில் எழுதப் பெறுமல் வைக்கப்படும் ஒற்றி, ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒற்றி.
கையோங்கு - கைநீட்டு, செழித்தோங்கு.
கையோங்குதல் - கைநீட்டுதல், செழித்தோங்குதல், அடித்தல், மேன்மைப்படுதல்.
கையோடு - உடன், சித்தமாய், தாமதமினறி.
கையோடுகையாய் - காரியத்துடன் காரியமாக, கையோடு.
கையோடுதல் - வேகமாக எழுதுதல், ஒரு தொழிலில் மனஞ்செல்லுதல்.
கையோடே - உடனே, கைவிடாமல், கையோடு.
கையோட்டம் - எழுதுதல் முதலிய வேலைகளில் கைவிரைவு, செல்வ நிலை.
கையோலை - கையுறுதி, கைமுறி.
கையோலை செய்தல் - தீர்மானித்தல்.
கைரம் - மலை.
கைரவம் - குமுதம், வஞ்சகம், வெள்ளாம்பல், ஆம்பல்.
கைரவி - சந்திரன், நிலவு, வெந்தயம்.
கைராசி - கைபடுவதனால் உண்டாவதாகக்கருதும் நன்மை, கைங்கலம்.
கைராட்டு - கையால் நூல் நூற்கும் எந்திரம்.
கைராதம் - நிலவேம்பு, வேடரூர், வேடுவ சம்பந்தம்.
கைராத்தாசாமி - பிச்சைக்காரன், ஒன்றுக்கும் உதவாதவன்.
கைராத்திலும் - தருமக்கொடை.
கைராத்து - தருமம், உபயோகமற்றது.
கைரிகம் - காவிக்கல், பொன்.
கைரியம் - நரி, பொன்.
கைரேகை - கையில் அமைந்திருக்கும் வரை.
கைரேது - சலாசத்து.
கைரேயம் - மலை, காவிக்கல், சிலாசத்து.
கைலஞ்சம் - கைக்கூலி, கைக்காணிக்கை.
கைலம்-கேடி, பரிகாசம், விளையாட்டு.
கைலாகு, கைலாகை } கைகொடுத்தல், கைதாங்கல்.
கைலாசநாதன் - குபேரன், சிவன்.
கைலாசநிகேதனன் - சிவன்.
கைலாசபதி - கைலாசநாதன், சிவன்.
கைலாச பர்வதம் - இமயத்தின் பின் பாகத்துள்ள வெள்ளி மயமான மலை.
கைலாசமந்திரன் - சிவன்.
கைலாசம், கைலாயம், கைலை } கயிலைமலை, அஷ்டகுல பர்வதங்களில் ஒன்றும் சிவபிரான் வாழ்விடமுமான ஒருமலை, கைலா

ஸம், கையிலாதம், கயிலாயம், கயிலை.

கைவி - கையொலி, கையிலி.

கைலேசு - கைக்குட்டை.

கைலையாளி - சிவன், கைலாசவாசி.

கைவசம் - கைக்குட்படல், வசமாதல், சுவாதீனம்.

கைவட்டகை - பாத்திர வகை.

கைவட்டணை - கையாற் செய்யும் அபிநயம், கையாலாகும் வட்டணை.

கைவட்டி - சிறிய ஓலைப்பெட்டி.

கைவண்டி - கையால் இழுக்கும் வண்டி.

கைவண்டில் - சிறுவண்டில்.

கைவந்தவன் - பழகித் தேர்ந்தவன்.

கைவந்தி - தோளின் கீழாகக் கையில் அணியப்படும் ஓராணி.

கைவரல் - கைப்பழக்கம், கைவருதல்.

கைவரிசை - திறமை, கொடை, சீட்டாட்டத்தில் முதலில் சீட்டை இறக்கும் உரிமை.

கைவருதல் - கை கூடுதல், பழக்கம்.

கைவரை - கையிறை.

கைவரைச்சம்பா - சம்பா நெல் வகை.

கைவர்த்தம் - பிரமவைவர்த்தம்.

கைவர்த்தன் - வலைஞன்.

கைவலச்செல்வன் - அருகன்.

கைவலம் - கைங்கலம், மோக்கம், மோட்சம்.

கைவலித்தல் - கை கடந்து போதல்.

கைவலிப்பு - கைக்கடிப்பு.

கைவலை - சிறுவலை.

கைவலோர் - கைவல்லோர்.

கைவல்யம் - கைவல்லியம்.

கைவல்லபம் - கைச்சாமர்த்தியம், புயவலிமை, தொழில்செய் கைத்திறம்.

கைவல்லியம் - உபநிடத முப்பத்திரண்டிலொன்று, சித்தி, மோட்சம், ஏகமான தன்மை, அனுகூலம், தனிமை, வெறுக்கத்தக்க புலி.

கைவல்லியன் - கைமிசத்திருந்த ஓரிருஷி, கைவல்யம், மோக்கம், தனிமை.

கைவல்லோர்-கைப்பழக்க முள்ளோர்.

கைவழக்கம் - இழவுக்குக் கொடுக்கும் பணம், கைவழங்குதல், கையின் கொடைக்குணம், கை விளக்கம், கோயிலில் பூசகர் முதலியோருக்கு உரிய உரிமை, ஈமக் கடனுற்றியபின்பு குடிமக்கள் ஐவர்க்குக் கொடுக்கும் பண முதலியன.

கைவழங்குதல் - இழவுக்குக் கொடுத்தல், கையேவுதல், கொடுத்தல், கையடி.

கைவழம் - வழங்குங் கைப்பக்கம்.

கைவழி - யாழ், ஒருவன் கைவசமாக அனுப்பிய பொருள், ஆள், கைராசி, ஒற்றையடிப் பாதை, சிறுகிளை நதி, கைலி.

கைவளச்சம்பா - ஒருவகை நெல், நிறமும் இனிமையுமுள்ள சம்பா நெல் வகை.

கைவளம் - கைப்பொருள், கைவிசேஷம், செழிப்பு, கைத்தொழிலின் திறம்.

கைவளர்தல் - போற்றப்பட்டு வளர்தல், பழக்கமுறுதல்.

கைவளை - கடகம், சிறுவளை, மருதணி, கைத்தொடி, மேற்கூரையைத் தாங்குமாறு சுவர் முதலிய வற்றிலமைக்குஞ் சட்டம், தொடி, கன்று, குருகு, சங்கு, சரி, சூடகம், வண்டு, வள்ளி. அன்றியும் பிள்ளைக் கைவளையின் பெயர்-பிடிகம்.

கைவறளுதல் } கைவற்று,
கைவறள்தல் }

கைவற்றுதல் - பொருளின்றி நிலைமை தாழ்தல், கையிற் பொருளறுதல்.

கைவன்மை - கைவல்லபம்.

கைவாகு - கைராசி, கையால் ஆகுதற்கு உரிய நிலை.

கைவாக்கு - கைவழக்கம், கைவாகு.
கைவாங்குதல் - நீங்குதல், கையை வெட்டுதல், உறவாக்குதல்.
கைவாசி - கைசித்தி, கைராசி.
கைவாட்சம்பா - ஒருவித நெல்.
கைவாதல் } தேர்ச்சி பெறுதல்,
கைவருதல் } ஒருங்கே நிகழ்தல், கூடுதல், ஒன்றைச் செய்யக் கை யெழுதல்.
கைவாய்க்கால் - சிறு வாய்க்கால்.
கைவாய்ச்சி - சிறுவாய்ச்சி.
கைவாய்ப்பு - கைமாற்று.
கைவாரம் - செய்கைப் பங்கு, வாழ்த்து, கைதூக்கிக் கூறும் வாழ்த்து, பனங் கிழங்கு உண் டாக்குதல் முதலியவற்றுக்குக் கொடுக்குங் கூலி, சரிவாரம், வயிர முதலியவற்றின் மூலை.
கைவாரிகள் - நின்றேத்துவார்.
கைவாளப்பை } கைவாளை.
கைவாளம் }
கைவாளரம் - சிறிய அரவகை.
கைவாளை - ஒரு புடவை வ, அடைப்பை.
கைவாள் - சிறுவாள், கைரம்பம், கண்டம்.
கைவாறு - கைக்கும்வாய்ப்பு, கை தூக்கு, கைலாகு, தக்க சமயம்.
கைவிசேடம் - கைராசி, பரிசு.
கைவிசேஷம் - கைவாசி.
கைவிசை - கைக்கதி, கைம்முறை.
கைவிஞ்சுதல் - அளவுகடத்தல்.
கைவிடலீயான் - கைவிடான்.
கைவிடல் - நீங்கல்.
கைவிடாப்படை - சத்திரம், சஸ் திரம்.
கைவிடுதல் - கைவிட்டு விடுதல், தள் ளிப் போடுதல், விட்டொழிதல்.
கைவிடுபடை - அத்திரம், அஸ்தி ரம்.
கைவிட்டம் - குறுக்குவிட்டம்.
கைவிதை - வெந்தயச்செடி, வெந்த யம், நாற்றைப் பெயர்த்து நடுகை யின்றி விதைத்தபடியே பயிர் செய்கை.
கைவிதைப்பு - புழுதி விதைப்பு.
கைவிஸ்தாரம் - கைவிற்பன்னம்.
கைவியளம் - கைவிசேடம்.
கைவிரசு - கைவிரவு.
கைவிரி - மறு.
கைவிரிச்சம்பா - ஒரு நெல்.
கைவிரித்தல் - கொடுத்தல் மறுத் தல், யாசித்தற்காகக் கைநீட்டுதல், தன்னுல் இயலாமை குறிப்பித்தல்.
கைவிரைவு - கையினுல் விரைந்து தொழில்செய்யுந் தன்மை.
கைவிலக்கம் - மாதவிடாய், மகளிர் சூதகம்.
கைவிலக்கு - கைம்மறைப்பு, களப் பிச்சை கொடுத்து யாசகர்களை அனுப்புகை, சூரிய கிரணம் கண்ணிற் படாதபடி கையால் மறைக்கை.
கைவிலங்கு - கைக்கிடும் விலங்கு, யானை.
கைவிலை - கைப்பணத்துக்கு விற்றல், ரொக்க விலை.
கைவிளக்கம் - கைராசி, தொழிலின் திறமை.
கைவிளக்கு - ஒரு விளக்கு, சிறு விளக்கு.
கைவிளங்கம் - வாய் விளங்கம்.
கைவிறிசு - ஒருவகை வாணம்.
கைவினை - கைத்தொழில், கைவேலை.
கைவினைசெய்த - ஆராய்ந்த.
கைவினைஞர் - கம்மாளர், செய்கை வல்லோர்.
கைவினைஞன் - தொழிலாளி.
கைவிஸ்தாரம் - அலங்காரம்.
கைவீச்சன் - ஒரு பணிகாரம்.
கைவீச்சு - அடி, கையின்வீச்சு, மிகு கொடை, கைவீசுகை, கையிருப் புத் தொகை, கைத்திரம்.
கைவீணை - ஒருவகை நரம்புக் கருவி.
கைவீது - கைபீது.
கைவேகம் - கைவிசை, கைவிரைவு.

கைவேலை - கைச்செய்கை, கைத்தொழில், கைத்தொழிற்றிறம், கையாற் செய்தது.
கைவேல் - கைவிடாவேல், வேல், கப்பணம், தோமரம்.
கைவைத்தல் - ஏற்படுதல், தொடுதல், பிரவேசித்தல், திருடுதல், கைவைத்துக் குரு புனிதமாக்குதல், அடித்தல், கற்பழித்தல், தொடல்.
கைனி - அத்தநாள், கைம்பெண், விதவை, அத்தம், அஸ்த நக்ஷத்திரம், கைமை.

கொ

கொ - ஒலிக்குறிப்பு.
கொகுடி - முல்லைக்கொடி வகை.
கொக்கட்டி - ஒருவிதச்செடி, குறுங்வளைந்த பனங்கிழங்கு.
கொக்கரி - கர்ச்சனை, பரணி, கோழி முதலியன கூவு, ஆரவாரஞ் செய், கொக்கரித்தல், கேரு, ஆர்ப்பரி.
கொக்கரித்தல் - கெற்சித்தல், கோழி முதலிய பறவை கத்தல், விளித்தல், கர்ச்சித்தல், குணலையிடல், விசேடம்.
கொக்கரிப்பு - கெற்சிப்பு, பறவை கொக்கொக்கென வொலித்தல், கொக்கரி.
கொக்கரை - கொக்கறை, சங்கு, பாம்பு, வலம்புரி சங்கு, வலை, வில், வளைவு, வைக்கோலெடுக்குங் கருவி, வாத்திய வகை, தாளம், வலம்புரி, பனை, தெங்கு முதலிய வற்றின் பிள்ளை மடல்.
கொக்கலகு - கொக்குமூக்கு.
கொக்கறை - பனை தெங்கு முதலிய வற்றின் பிள்ளைமடல், கொக்கரை.
கொக்கறையுடும்பு - ஒருடும்பு.
கொக்காட்டல் - சீராட்டுகை.
கொக்காட்டால் - கோதாட்டு.
கொக்காம்பாளை - ஒருவகைச் செடி.
கொக்கான் - ஒருமரம், ஒரு விளையாட்டு, ஏழாங்காய்.
கொக்கான்வெட்டுத்தல் - கொக்கான் விளையாடுதல்.
கொக்கி } கொழுவி, கொளுவி,
கொக்கில் } துறட்டி நுனியிற் செருகும் இருப்புக் கருவி, ஆபரணக் கொக்குவாய், ஆபரணங்களினுறுப்பு விசேடம், கொக்கை, கொளுக்கி, கொடுக்கி.
கொக்கிப்புழு - கிருமிவகை.
கொக்கிப்பூட்டு - ஆபரணத்திலுள்ள பூட்டு.
கொக்கிமுள்ளு - காட்டுக் கத்தரி.
கொக்கிவாய் - கொக்குவாய்.
கொக்கிறகுமந்தாரை - ஒரு பூமரம்.
கொக்கு - ஒரு புள், குதிரை, செந்நாய், மாமரம், மூலநாள், பறவை வகை, கொக்குவகை, மூலம், மூல நக்ஷத்திரம், குரண்டம், பகம், பலாகம், புதா, மஞ்சுகம்.
கொக்குக்கல் - மாந்தளிர்க்கல், சிலமான்கல்.
கொக்குநோவு - நெல் நோய்வகை, ஆடுகட்குக் காணும் எரிநோவு.
கொக்குமட்டி - ஒரு இப்பி, சிப்பி வகை.
கொக்குமந்தாரை - காட்டாத்திமரம், வெள்ளை மந்தாரை, புடைவை வகை, கொக்கிறக மந்தாரை, ஒரு பூமரம்.
கொக்குமீன்-ஒருமீன், ஊசிக்கழுத்தி.
கொக்குமுத்து - கொக்கிறப்பி றக்த வெள்ளைநிற முத்து.
கொக்குவம் - கொக்கோகம், காமசாததிரம்.
கொக்குவாய்-ஆபரணத்திற் படுகண்ணியிற் செருகும் பூட்டு, கொக்கி.
கொக்கேறி - ஒரு பூண்டு, நெட்டிப்புல், நெட்டி.
கொக்கை - கொழுவி, கொழுவுதடி, கொக்கி, ஓர்வகைத் தோட்டி, கொக்கி.

கொக்கைக்கல் - ஆட்டுக் காற்கல்.
கொக்கைச்சத்தகம் - ஒரு சிறு கத்தி.
கொக்கைச்சால் - வளைந்த உழவு சால், உழவுச்சால் படாத் தரை.
கொக்கோகம் - ஒரு காம நூல், கொக்குவம்.
கொங்கணம் - தேச மைம்பத்தாறில் ஒன்று, தமிழ் நூல்களில் கூறப் படும் பதினெட்டு பாஷைகளுள் ஒன்று, ஒரு பாடை.
கொங்கணர் - கொங்கண தேசத்தார், பண்டைத் தமிழ்ச் சித்தருளொரு வர்.
கொங்கணவர் - கொங்கணர்.
கொங்கணன் - ஒரு சித்தன்.
கொங்கணி - ஒரு தென்னிலைக்கூடு, சம்பங்கூடு, கொங்கண தேசத் தான், கொங்காணி, குடலை.
கொங்கணியர் - கொங்கண தேசத் தார்.
கொங்கணியான் - ஒரு மீன்.
கொங்கம் - ஒருநாடு, கோளகபாஷா ணம், கொங்கு.
கொங்கரி } எலரிசி.
கொங்கரிசி }
கொங்கர் - கொங்க தேசத்தார்.
கொங்கன்-சேரன், கொங்கநாட்டான்.
கொங்காணி - கொங்கணி, மழை யைத் தாங்க உடலிற் கவிக்கும் சம் பங்கூடை.
கொங்காரம் - குங்கும மரம்.
கொங்காளம் - பதினெண் பாடையில் ஒன்று.
கொங்காளன் - குதிரைவகை.
கொங்கு - கருஞ்சுரை, கள், சருக் கரை, தேன், பூந்தாது, மலையாளக் கரையில் சேராசனுண்ட தேசம், வாசனை, புறத்தோல், கருஞ் சுரைக்கொடி.
கொங்குவெள்ளாளர் - கொங்குதேச வெள்ளாளர்.
கொங்குவேளாளர் - கொங்குநாட்டு வேளாளர்.
கொங்குவேள் - பெருங்கதை யென் னுங் தமிழ்க்காவியம் இயற்றிய ஆசிரியர்.
கொங்கை - கம்புமி, மரக்கனு, மூலை, மரத்தின் முருடு, கம்புத்தானியத் தின் உமி, ஸ்தனம், தனம்.
கொசகம் - கொய்சகம், கொசுகம், கொய், கொசமசக்கு, குழப்பம்.
கொச்சக்காரன் - பட்டாதார்.
கொசமசக்கு - குழப்பம், குசமசக்கு.
கொசர் - குசர், கொசுறு.
கொசலை - குசலை.
கொசவம் } கொய்சகம்.
கொசாம் }
கொசுகம் }
கொசறு - குசர்.
கொசான் - கொய்சகம், கொசகம.
கொசிகம் - ஆடை.
கொசு - கொசுகு, கொடுக்கு, தாறு, கச்சம், பெருங்கோதுகு, சிறு கொசுகு, கொதுகு.
கொசுகாந்தேன் - கொசுகள் வைக் குந் தேன், கொசுத்தேன்.
கொசுகு - ஈ, தேனிலையான், நுளம்பு, கொசு, கொதுகு, அசவல், அஞ் லம், அஞல், உலங்கு, சகல், தும்மு, துள்ளல், நிலம்பி, நொள்ளல், மசகம், முஞல், வலு.
கொசுகுதலை - நெல்வகை.
கொசுக்கட்டை - நுண்ணிச்சிறை, நுண்ணிச்சிறை என்னுங் கருவி.
கொசுத்தேனீ - சிறுதேனீ வகை.
கொசுத்தேன் - சிறுகொசுகினங்கள் சேர்த்துவைக்குந் தேன்.
கொசுமிளகாய் - ஊசிமிளகாய்.
கொசுமூட்டம் - கொசுக்களைப் போக்குதற்கு மூட்டும் புகை.
கொசுவம் - கொய்சுவனம், கொய் சகம், கொசகம்.
கொசுவலை - கொசுவராமல் தடுக்கும் வலை.
கொசுவுதல் - ஆடையைக் கொய்து அடுக்குதல்.